அன்பளிப்பு
....

தனிப்பாடல் திரட்டு

முதற் பகுதி

வளர்தமிழ் நூலகம்
அழகப்பா பல்கலைக்கழகம்
Acession No. 1678

உரையாசிரியர்
புலவர் அ. மாணிக்கம், எம்.ஏ.,
துணைப் பேராசிரியர்,
அ. மா. ஜெயின் கல்லூரி, சென்னை.

அழகப்பா பல்கலைக்கழகம்
வளர் தமிழ் நூலகம்
காரைக்குடி.

செல்வி
பதிப்பகம்
காரைக்குடி

VTN030

பூம்புகார் பிரசுரம் பிரஸ்
63, பிராட்வே
சென்னை - 600 108

விலை ரூ. 14-50

பூம்புகார் வெளியீட்டு எண் : 40
முதற் பதிப்பு : மே, 1977
இரண்டாம் பதிப்பு : ஏப்ரல், 1984
உரிமை : பூம்புகார் பிரசுரத்தாருடையது.

அச்சிட்டோர் : காக்ஸ்டன் பிரஸ், சென்னை-600 001.

முன்னுரை

மேனாட்டு இலக்கிய ஆராய்ச்சியாளர் ஒரு மொழியில் முதன்முதலில் தனிப்பாடல்களே தோன்றியிருக்கக் கூடும் என எண்ணுகின்றனர்.

நம் சங்க இலக்கியங்களை நோக்கும்போது அஃது உண்மையே எனத் தோன்றுகின்றது. ஏனென்றால் சங்க இலக்கியங்கள் எல்லாம் பெரும்பாலும் தனிப்பாடல்களே!

அக்காலப் புலவர் பாடல்களைத் தொகுத்து வைத்தாற் போன்று பிற்காலப் புலவர் பாக்களை, அவை மறைந்து போகாமல் தொகுத்தவர் இல்லை. அதனால் எண்ணற்ற பாக்களை நாம் இழந்துவிட்டோம்.

பிற்காலப் புலவர்கள் நூல்கள் பல யாத்தாலும் தனித்தனியாகப் பாக்கள் பலவற்றையும் இயற்றினர். அவை அவர்களால் இயற்றப் பெற்ற நூலைவிடத் தனிச்சுவை வாய்ந்தவை!

ஏனென்றால், அவை அவர்களின் தனிப்பட்ட உள்ளப் போக்குகளை, விருப்பு வெறுப்புகளைத் தெளிவுபடுத்துவன. கவிஞர்களின் உண்மையான உள்ளப் போக்கை அறிந்து கொள்வது என்பது எவ்வளவு சுவையானது! அந்தச் சுவையைத் தான் இந்நூல் நமக்குத் தருகின்றது!

இந் நூலில்தான் எத்தனை எத்தனைச் சுவைகள்! அவலம், பெருமிதம், இகழ்ச்சி, புகழ்ச்சி,

வசை, கடுகிலே ஏழ்கடலைப் புகட்டும் ஆற்றல், ஓசை விளையாட்டு, சொல் விளையாட்டு, விடு கவி ஆகியவை நம்மை மெய்மறக்கச் செய் கின்றன!

சென்ற நூற்றாண்டு வரையிலும் இந் நூற் றாண்டிலும் இந்நூலை மட்டும் பயின்று, தாம் பெரும்புலவர் எனத் திகழ்ந்தவர் பலர்!

இந்நூலின் பாக்களைக் கொண்டே எண்ணற்ற புலவர் வரலாறுகளையும் பலர் புனைந்து விட் டனர்! அவை உள்ளத்தைக் கவருவனவாக உள் ளன.

பலப்பல சுவைச் சாறுகளை ஒருங்கே வார்த்து வைக்கப் பெற்ற கலமே இந்நூல்.

இதற்கு முன்னரே 'புறத்திரட்டு' என்ற பெய ரில் ஒரு நூல் உண்டு. இது 17ஆம் நூற்றாண் டின் தொடக்கத்தில் தோன்றியிருக்கலாம் என் பது பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களின் கருத்து. இதில் சுவையான பாடல் கள் பலவுள்ளன. பெயர் அறியப்படாமல் உள்ள பல பாடல்களை இயற்றிய ஆசிரியர் பெயரும் நூற்பெயரும் இதனால் அறிய முடி கின்றது. 'புறத்திரட்டுச் சுருக்கம்' என்ற சுருக்கநூல் ஒன்றும் தோன்றியது.

இதன் பின் தோன்றிய திரட்டு 'தமிழ் நாவலர் சரிதை' என்பதாகும். இது முந்நூறு ஆண்டுக ளுக்கு முற்பட்டது. இதில் காளமேகம், ஒட்டக் கூத்தர், ஔவையார் முதலிய புலவர் பாடல் களைக் காணலாம்.

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தில் 'தனிப்பாடல் திரட்டு' என்ற பெயரில் வெவ்வேறு

எட்டு நூல்கள் உள்ளனவாம். இவற்றில் அமைந்த பாக்கள் பெரும்பாலும் இந்தத் தனிப்பாடல் திரட்டின் வேறாக உள்ளனவாம்.

'பன்னூல் திரட்டு' என்ற பெயரில் வந்துள்ள நூலையும் இங்குக் குறித்தல் வேண்டும். இதை வெளியிட்டவர் பாண்டித்துரைத் தேவர் ஆவார். தமிழ் நாட்டு அரசுக் கையெழுத்துச் சுவடி நூல் நிலையத்தில் 'பன்னூற்பா', 'சின்னூல் திரட்டு' என்னும் நூல்கள் உள்ளன. இதே நூல் நிலையத்தார் 'தனிப் பாடல் திரட்டு' என்ற பெயரில் ஒரு நூலையும் வெளியிட்டுள்ளனர்.

பேராசிரியர் மு. இராகவையங்கார் அவர்கள் 'பெருந்தொகை' என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டார். இந்நூல் முதற்பகுதி, இரண்டாம் பகுதி என இரு பகுதிகளைக் கொண்டது.

முதன் முதலாக இத் தனிப்பாடல் திரட்டை இராமநாதபுரம் பொன்னுசாமித் தேவர் அவர்கள் தொகுக்க எண்ணினார். சந்திரசேகர கவிராச பண்டிதரை இப்பணியை மேற்கொள்ளச் செய்தார். பண்டிதர் அவர்களின் அருமுயற்சியால் இந்தத் 'தனிப்பாடல் திரட்டு' வெளியாயிற்று. இதற்கு உரை ஒன்றும் அவரால் எழுதப்பட்டது என்பர். இஃது இரண்டு பகுதிகளாக அமைந்திருந்தது.

அடுத்ததாக முறையூர் வள்ளல் சண்முகம் செட்டியார் தனிப்பாடல்களைத் தொகுக்க எண்ணினார். அவர் ஆணைக்கேற்பக் கொட்டாம்பட்டி கருப்பையா பாவலர் மேலும் பல பாடல்களைத் திரட்டி முன் வெளியான தனிப்பாடல் திரட்டுப் பாக்களுடன் சேர்த்துத் 'தனிச் செய்யுட் சிந்தாமணி' என்ற பெயரைக் கொண்ட நூலை வெளியிட்டார்.

பின் மு. ரா. கந்தசாமிக் கவிராயரும் 'தனிச் செய்யுட் சிந்தாமணி' என்ற பெயரில், முன்வந்த தனிச் செய்யுட் சிந்தாமணியில் உள்ள பாடல் களுடன் பிற பாடல்களையும் சேர்த்து ஒரு நூலை வெளியிட்டார்.

காஞ்சிபுரம் பெரும்புலவர் கா. இராமசாமி நாயுடு அவர்கள் 'தனிப்பாடல் திரட்டு' இரண்டு பகுதிகளுக்கும் உரையெழுதி வெளியிட்டார். பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர் கள் உரையும் பின்னால் வெளிவந்தது! இவை அனைத்தும் தமிழக மக்களுக்கு இன்று கிடைப் பனவாக இல்லை!

எனவே, அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும் என்ற எண்ணத்நால் தனிப்பாடல் திரட்டு இப்போது குறைந்த விலையில் வெளியா கின்றது.

படிப்பவர், பாடல்களைப் பொருளறிந்து சுவைத்து இன்புறும் வகையில் உரையமைத்து இந்நூலை அமைத்துள்ளேன்.

இதனை அழகுற வெளியிட்டுதவிய பூம்புகார் பிரசுரத்தார்க்கு என் நன்றி.

இங்ஙனம்,

சென்னை
11–5–77

அ. மாணிக்கம்

உள்ளுறை

எண்	புலவர்கள்		பக்கம்
1.	ஔவையார்	—	10
2.	ஔவையார் முதலிய எழுவர்	—	38
3.	திருவள்ளுவர்	—	41
4.	இடைக்காடர்	—	45
5.	மதுரைச் சொக்கநாதர்	—	47
6.	திருஞான சம்பந்த நாயனார்	—	49
7.	திருமங்கை ஆழ்வார்	—	50
8.	சங்கத்தார்	—	50
9.	திருமழிசை ஆழ்வார்	—	52
10.	ஒட்டக் கூத்தர்	—	53
11.	கம்பர்	—	74
12.	ஏகம்பவாணர்	—	103
13.	காளமேகப் புலவர்	—	106
14.	பொய்யாமொழிப் புலவர்	—	190
15.	ஒப்பிலாமணிப் புலவர்	—	194
16.	இரட்டையர்	—	205
17.	சத்தி முத்தப் புலவர்	—	210
18.	வரதுங்க ராம பாண்டியன்	—	212
19.	பட்டினத்தடிகள்	—	214
20.	சிவப்பிரகாச சுவாமிகள்	—	215

எண்	புலவர்கள்		பக்கம்
21.	பொன் விளைந்த களத்தூர் அந்தகக்கவி வீரராகவர்	—	226
22.	பொற்களந்தைப் படிகாசுத் தம்பிரான்	—	237
23.	சொக்கநாதப் புலவர்	—	247
24.	பலபட்டடைச் சொக்கநாதப்புலவர்	—	267
25.	காளிமுத்துப் புலவர்	—	293
26.	நமச்சிவாயப் புலவர்	—	302
27.	மதுரகவிராயர்	—	313
28.	சவ்வாதுப் புலவர்	—	320
29.	இராம கவிராயர்	—	321
30.	நையாண்டிப் புலவர்	—	323
31.	சுப்பிரமணியப் புலவர்	—	324
32.	கடிகை முத்துப் புலவர்	—	326
33.	நாகூர் முத்துப் புலவர்	—	383
34.	இராமச்சந்திரக் கவிராயர்	—	411
35.	எல்லீசு	—	432

தனிப்பாடல் திரட்டு

முதல் பகுதி

விநாயகர் வணக்கம்

ஏர்ஆனைக் காவில்உறை என்ஆனைக் கன்றளித்த
போர்ஆனைக் கன்றுதனைப் போற்றினல்—வாராத
புத்திவரும்; பத்திவரும்; புத்திஉற் பத்திவரும்;
சத்திவரும்; சித்திவருந் தான்.

அழகுடைய திருவானைக்காவில் என் தாயாகிய பெண்யானை வடிவுடைய உமையம்மையாருக்கு மகனாகத் தோன்றிய விநாயகப் பெருமானை வணங்கினால் அறிவு உண்டாகும்; அன்பு உண்டாகும்; நன்மக்கட்பேறு உண்டாகும்; எண்ணிய செயல்களை முடிக்கும் ஆற்றல் உண்டாகும்; எடுத்த செயல்களில் வெற்றியுண்டாகும்.

1. ஔவையார் பாடல்கள்

1. விநாயகரை வணங்குவார்க்கு அனைத்தும் எளிது

(சுந்தரமூர்த்தி நாயனரும் சேரமான்பெருமாள் நாயனரும் கைலாயத்துக்குச் செல்லும்போது ஔவையாரையும் அழைத்தனர். அவர் அப்போது தாம் செய்து கொண்டிருந்த விநாயகர் பூசையை முடித்துவிட்டுக் கைலாயம் வருவதாகக் கூறிப் பூசையை விரைவாகச் செய்யத் தொடங்கினர். அதை அறிந்த விநாயகர் ஔவையாரை நிதானமாகப் பூசை செய்யும்படியும், அவ்விருவருக்கும் முன்னர் தாம் அவரைக் கைலாயத்தில் சேர் ப்பதாகவும் மொழிந்தார். ஔவையார் 'சீதக்களப' என்று தொடங்கும் அகவலைப் பாடிப் பூசித்தார். விநாயகர் தம் துதிக்கையால் தூக்கி அவரைக் கைலாயத்தில் சேர்த்தார். தங்கட்கு முன் கைலாயத்தில் ஔவையார் வந்திருத்தலைப் பார்த்துச் சேரமான்பெருமாள் நாயனர் 'அஃது எப்படி?' என்று வினவியபோது பாடியது.)

மதுரமொழி நல்உமையாள் சிறுவன் மலரடியை
முதிரநினைய வல்லார்க்கு அரிதோ? முகில்போல் முழங்கி
அதிரவருகின்ற யானையும் தேருமதன் பின்சென்ற
குதிரையும் காதம் கிழவியும் காதம் குலமன்னனே.

உயர்ந்த சேரர் குடியில் பிறந்த மன்னனே! இனிய சொற்களைப் பேசும் உமையம்மையாரின் மகனகிய விநாயகப்பெருமானின் திருவடிகளை வணங்குபவர்க்கு எந்தச் செயலும் செய்வதற்கு அரியதாகாது; ஆதலால் நான் இங்கு வந்திருப்பது அரியதன்று; நிலம் அதிரச் செல்லும் யானையும் தேரும் அதற்குப் பின்னர்ப் புறப்பட்டு வந்த குதிரையும் நாழிகை ஒன்றுக்குக் காதவழி நடக்கும்; நடக்க இயலாத கிழவியாகிய யானும் நடந்து வந்தது காத வழியே ஆகும். 1

2. எனக்கு ஏது இடம்?

(சோழன் ஔவையாரை நோக்கி ''நீவிர் எந்த வூர்?'' எனக் கேட்டபோது பாடியது.)

கால்நொந்தேன்; நொந்தேன்; கடுகி வழிநடந்தேன்;
யான்வந்த தூரம் எளிதுஅன்று;—கூனல்
கருந்தேனுக்கு அண்ணாந்த காவிரிசூழ் நாடா!
இருந்தேனுக்கு எங்கே இடம்?

சங்கானது மிகுந்த தேனைப் பருகுவதற்கு வாய் திறந்த காவிரி பாயும் நாடனே! யான் பாதையில் விரைந்து நடந்து வந்தேன்; யான் வந்த வழியின் தொலைவு அதிகம்; ஆதலால் கால் வலியினாலே மிக வருந்தினேன்; நடக்க இயலாமல் உட்கார்ந்த எனக்கு எந்த இடத்தை என்னுடைய ஊர் எனச் சொல்வேன் ? 2

3. கவிதை பாராட்டப்பட வேண்டுமானால்......

(சோழ மன்னன் கம்பரின் பாட்டை வியந்தான்; அப்போது ஔவை பாடியது.)

விரகர் இருவர் புகழ்ந்திடவே வேண்டும்;
விரல்நிறைய மோதிரங்கள் வேண்டும்;—அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும்;—அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று.

பரிசைப் பெற எண்ணும் கவிஞரைத் தந்திரக்காரர் இரண்டு பேர் புகழ்ந்து பேச வேண்டும்; விரல்கள் நிறைய மோதிரங்கள் அணிந்திருக்கவேண்டும்; இடுப்பில் நல்ல பஞ்சாடை அல்லது பட்டாடை அணிந்திருக்க வேண்டும்; அப்படியானால் அவருடைய கவிதை நஞ்சைப் போலக் கொடியதாக இருந்தாலும் வேம்பு போலக் கசப்பானதாக இருந்தாலும் நல்லது என ஏற்றுக் கொள்ளப்படும் 3

4, ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொன்று எளிது

(சோழன் 'கம்பரைப் போலப் பெரிய காப்பியம் பாடுபவரில்லை' என்றபோது ஔவையார் பாடியது)

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கரையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால்;—யாம்பெரிதும்
வல்லோமே என்று வலிமைசொல வேண்டாம்காண் !
எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது.

தூக்கணாங் குருவியின் கூடும், வன்மையான அரக்கும் கரையான் புற்றும் தேன் கூடும் சிலந்திக் கூடும் ஆகியவை எல்லாராலும் செய்யக்கூடியவை அல்ல; ஆதலால் யாம் மிக்க திறமையுள்ளவர் என்று ஒருவர் தம் பெருமையைக் கூறக் கூடாது. ஏனெனில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு செயலைச் செய்தல் எளிதாகும். 4

வளர்தமிழ் நூலகம்
அழகப்பா பல்கலைக்கழகம்
Acession No....1678............

5, பழக்கங்களால் வருவன

சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்;
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்;—நித்தம்
நடையும் நடைப்பழக்கம்; நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்.

ஓவியம் எழுதுவது கைப்பழக்கத்தால் சிறப்பை அடையும். சிறந்த தமிழின் தேர்ச்சி நாவின் பழக்கத்தால் உண்டாவதாகும். நல்ல கல்வித்தேர்ச்சி மனப்பயிற்சியால் ஏற்படுவதாகும். நாள்தோறும் அதிக தொலைவு நடப்பது நடந்து பழகும் பழக்கத்தால் ஏற்படுவதாகும். நட்பும், இரக்கமும் கொடைக் குணமும் பிறவிக் குணங்களாகும். 5

6, கற்றூர்முன் வாய் திறக்கக்கூடாது:

‘கம்பரை யார் வெல்ல இயலும்?’ எனச் சோழன் வினவிய போது ஔவை பாடியது.)

காணுமல் வேணதெல்லாம் கத்தலாம்; கற்றோர்முன்
கோணுமல் வாய்திறக்கக் கூடாதே;—நாணுமல்
பேச்சுப்பேச்சு என்னும் பெரும்பூனை வந்தக்கால்
கீச்சுக்கீச்சு என்னும் கிளி.

கற்றவரைக் காணுத போது ஒருவர் தாம் விரும்பியவற்றையெல்லாம் உரத்துப் பேசலாம். ஆனுல் கற்றவர் முன்னர் நாணுமல் வாய் திறக்க இயலாது. கிளி தனக்குக் கற்பித்தவற்றை அஞ்சாமல் பேசும். ஆனுல் தனக்குப் பகையான பூனையொன்று வருமானுல் அச்சத்தால் அது ‘கீச்சு கீச்சு’ என்று கதறும். 6

7, அழகியவை:

(‘மனிதர்களுக்கு அழகு யாது’? என்று சோழன் வினவிய போது பாடியது.)

சுரதந் தனில்இளைத்த தோகை, சுவிர்த
விரதம் தனில்இளைத்த மேனி,—நிரதம்
கொடுத்து இளைத்த தாதா, கொடும்சமரில் பட்ட
வடுத்துளைத்த கல்அபிரா மம்:

இன்பம் அனுபவித்ததால் உடல் மெலிந்த பெண், நல்கு விரதங்களால் மெலிந்த உடல், எப்போதும் கொடுத்து வாடிய வள்ளல், கொடிய போரில் உடலிடத்துப் பொருந்திய புண்ணின் சிறப்புப் பொறிக்கப்பட்ட கல் ஆகியவை அழகியவை எனக் கருதப்படும். 7

8. *நல்வழியில் பயன்படாத செல்வம்!*

நம்பன் அடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம்; பேய்க்காம்; பரத்தையர்க்காம்;—வம்புக்காம்;
கொள்ளைக்காம்; கள்ளுக்காம்; கோவுக்காம்; சாவுக்காம்;
கள்ளர்க்காம்; தீக்காகும் காண்.

சிவபெருமானுடைய அடியவர்க்குப் பயன்படாத செல்வங்கள் சூனியத்துக்குச் செலவிடப்படும். பேய் வழிபாட்டுக்குப் பயன்படும். பொது மாதர்க்குக் கொடுக்கப்படும். வீண் செயலுக்கு ஆகும். கள்வர் கொள்ளையிடுவதற்குரியதாகும். கள் உண்பதற்கு உதவும். வேந்தனுக்காக வசூலிக்கப்படும். இறந்த பின்னர்ச் செய்யும் செயல்களுக்கு உரிதாகும். தீயினுக்கு இரையாகி அழிக்கப்படும். 8

9. *பலாவே, நீ பழையபடி தழைப்பாயாக.*

(குறவன் ஒருவனுக்கு மனைவியர் இருவர். அவன் இளையாள் மேல் மிக்க ஆசை கொண்டிருந்தான். ஒரு நாள் குறவன் தான் ஊருக்குச் செல்வதாகவும் தான் வளர்க்கும் பலா மரத்தைக் கண் போலக் காக்க வேண்டும் எனவும் சொல்லிச் சென்றான். அப்போது இளையாள் அந்தப் பலா மரத்தை வெட்டி விட்டு மூத்தாளின் மேல் பழியைச் சுமத்தினாள். அதை யறிந்த ஔவையார் அந்தப் பலாமரம் தழைக்குமாறு இப்பாடலைப் பாடினார்.)

கூரிய வாளால் குறைத்திட்ட கூன்பலா
ஓரிதழாய்க் கன்றாய் உயர்மரமாய்ச்—சீரியதோர்
வண்டுபோல் கொட்டையாய் வண்காயாய்த் தின்பழமாய்ப்
பண்டுபோல் நிற்கப் பலா.

கூர்மையான வாளால் வெட்டப்பட்ட வளைந்த பலா மரம் ஓர் இதழை யுடையதாகி, சிறு செடியாகி, வளர்ந்து மரமாகி, பின்னர் வண்டுபோன்ற விதையை யுடையதாகி, செழித்த

காய்கள் காய்த்துத் தின்னத் தக்க பழங்களைப் பெற்று முன் நின்றதைப் போல முழுமரமாக வளர்வதாகுக. 9

10. உப்புக்கும் புளிக்கும் கவி பாடுவேன்

(ஔவையாரின் கையிலிருந்த மூட்டையை என்ன என்று சோழன் வினவினான். அப்போது பாடியது.)

கூழைப் பலாத்தழைக்கப் பாடக் குறமகளும்
மூழக் குழக்குத் தினைத்தந்தாள்—சோழா, கேள்,
உப்புக்கும் பாடிப் புளிக்குங் ஒருகவிதை
ஒப்பிக்கும் என்றன் உளம்.

சோழனே, கேள்! நான் ஒரு குறமகளின் பலா மரம் தழைக்குமாறு பாடினேன். அதற்காக அவள் ஒரு படி தினையை எனக்குத் தந்தாள். என் மனம் உப்புக்காகவும் கவி சொல்லும். புளி வேண்டுமானால் அதற்கும் ஒரு பாடல் பாடித்தரும்

குறிப்பு : மூழக்கு—மூவுழக்கு என்பதன் மரூஉ. மூன்றுழக்கும் ஓர் உழக்கும் சேர்ந்தால் ஒரு படி. நான்கு உழக்கு ஒரு படியாகும். 10

11. விருந்திட வேண்டுமென்ற கணவன் பட்டபாடு

இருந்து முகம் திருந்தி ஈரொடுபேன் வாங்கி
விருந்து வந்தது என்று விளம்ப—வருந்திமிக
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்
சாடினாள் ஓடோடத் தான்.

ஒருவன் தன் மனைவியின் அருகில் அமர்ந்தான். அவளது முகத்தைத் துடைத்து திருத்தினான். அவளுடைய தலையினின்று சிறிய பேனையும் பெரிய பேனையும் நீக்கினான். அதன் பின்னர் மெல்ல விருந்தினர் வந்துள்ளனர் என்று உரைத்தான். அவள் மிக வருந்திக் கூத்தாடினாள். கோபப்பட்டுப் பாடினாள். பின்னர்க் கணவனைப் பலமுறை அவன் ஓட்டமெடுக்குமாறு பழைய முறத்தால் அடித்தாள். 11

12. அன்பு இல்லாதவர் இட்ட உணவின் இயல்பு.

காணக்கண் கூசுதே; கையெடுக்க நாணுதே;
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே;—வீணுக்கென்

என்பெல்லாம் பற்றி யெரிகின்ற தையையோ
அன்பில்லாள் இட்ட அமுது.

ஐயையோ! விருப்பம் இல்லாமல் அவள் இட்ட உணவினைக் காண்பதற்கும் என் கண்கள் கூசுகின்றன. எடுத்து உண்பதற்குக் கை கூசுகின்றது. வாயானது அதை ஏற்றுக் கொள்வதற்குத் திறவாமல் இருக்கின்றது. வீணாக என் எலும்புகள் எல்லாம் கொதிக்கின்றன. 12

13. நான்முகனை நிந்தித்துப் பாடியது

அற்றதலை போக, அருததலை நான்கினையும்
பற்றித் திருகிப் பறியேனோ?—வற்றும்
மரம் அனையாட்கு அந்த மகனை வகுத்த
பிரமனையான் காணப் பெறின்!

பட்ட மரம் போன்ற இவளுக்கு இந்த ஆண் மகனைக் கணவனாகத் தலையில் எழுதிய நான்முகனை நான் இப்போது கண்டால், சிவபெருமானால் முன்னர்க் கிள்ளி எறியப்பட்ட அவனது ஒரு தலை போக எஞ்சியிருக்கும் நான்கு தலைகளையும் நான் திருகி எறிய மாட்டேனோ? 13

14. சொல்லாமல் துறவறத்தை மேற்கொள்!

பத்தாவுக்கு ஏற்ற பதிவிரதை உண்டானால்
எத்தாலும் கூடி யிருக்கலாம்;—சற்றேனும்
ஏறுமா றாக இருப்பாளே ஆமாயின்
கூறாமல் சந்நியாசம் கொள்.

ஓர் ஆடவனுக்கு ஏற்றவாறு கற்புடைய மனைவி இருந்தால் எந்த வகையிலும் கூடி வாழலாம். அவள் சிறிதேனும் முறைகேடாக நடந்தால் ஒருவரிடமும் சொல்லாமலே துறவை மேற்கொள்வாயாக. 14

15. நல்ல மனைவி இல்லையேல் நெருப்பில் விழுந்துஇறக்கலாம்!

சண்டாளி சூர்ப்பநகை தாடகையைப் போல்வடிவு
கொண்டாளைப் பெண்டுஎன்று கொண்டாயே;—தொண்டர்
செருப்படிதான் செல்லாஉன் செல்வமென்ன செல்வம்?
நெருப்பிலே வீழ்ந்திடுதல் நேர்.

நீ இழிந்த செய்கையுடையவளும் சூர்ப்பநகையும் தாடகையும் போன்ற வடிவம் கொண்டவளுமான ஒருத்தியை மனைவி என்று பெற்றாயே, இறைவனுடைய அடியார்களின் செருப்பினது அடிக்கும் ஈடாகாத உன் செல்வமும் ஒரு செல்வமா? தீயில் விழுந்து இறத்தலே தக்கதாகும். 15

16. 'சிலம்பி' என்ற தாசி ஐந்நூறு பொன்னைக் கம்பருக்குக் கொடுக்க அவர் பாதி பாடல் பாடினார். அதன் பிற்பகுதியை ஔவை கூழுக்குப் பாடி முடித்தார்.

தண்ணீரும் காவிரியே, தார்வேந்தன் சோழனே;
மண்ணாவ தும்சோழ மண்டலமே; பெண்ணாவாள்
அம்பர்ச் சிலம்பி; அரவிந்தத் தாள்அணியும்
செம்பொன் சிலம்பே சிலம்பு.

சிறந்த நீர் என்று போற்றப்படுவது காவிரியின் நீரே; அரசருள் சிறந்தவன் சோழ மன்னனே; சிறந்த நாடு எனப் போற்றப்படுவது சோழ நாடே; சிறந்த மாது போற்றப்படுபவள் அம்பர் என்ற ஊரில் வாழும் சிலம்பி என்னும் பெயரை உடையவளே; சிறந்த காலில் அணியும் சிலம்பாவது அவள் தன் தாமரை போன்ற அடிகளில் அணியும் பொன் சிலம்பே ஆகும். 16

17. யாரையடா சொன்னாய்?

(கம்பர் ஔவையாரை அவமதிக்க வேண்டி 'ஒரு காலில் நாலிலைப்பந்தலடி' என்று இரு பொருள்படச் சொல்லி அதற்குப் பொருளைக் கேட்டபோது பாடியது.)

எட்டேகால் லட்சணமே, எமன்ஏ றும்பரியே,
மட்டில் பெரியம்மை வாகனமே,—முட்டமேல்
கூரையில்லா வீடே, குலராமன் தூதுவனே,
யாரையடா சொன்னாய் அது?

'அவலட்சணமாக உள்ளவனே! எமன் ஏறி வருகின்ற வாகனமாகிய எருமைக் கடாவே! அளவு கடந்த சீர்கேடான மூதேவியைத் தாங்கி வரும் கழுதையே! முழுவதும் கூரையில்லாத வீடான குட்டிச் சுவரே! இராமனின் தூதுவனான அனுமானே! (குரங்கே) அடே! நீ கூறியது ஆரைக் கீரையைக் குறிக்குமடா (நீ யாரைப் பார்த்து இவ்வாறு கூறினாயடா?) என ஔவையார் கம்பரை நோக்கிக் கூறினார். 17

18. களி தந்த களிப்பு

(ஔவையார் பாரி என்னும் இடையன் வீட்டிற்கு மழையில் நனைந்த வண்ணம் சென்றபோது அங்கிருந்த 'அங்கவை' 'சங்கவை' என்னும் மகளிர் தங்கள் நீலச் சிற்றுடையைக் கொடுத்தனர். அதனுடன் முருங்கைக்கீரையுடன் சமைத்த களியையும் தந்தனர். அதை வியந்து ஔவை பாடினார்.)

வெய்தாய் நறுவிதாய் வேண்டளவும் தின்பதாய்
நெய்தான் அளாவி நிறம்பசந்த—பொய்யா
அடகுஎன்று சொல்லி அமுதத்தை இட்டார்
கடகம் செறிந்தகை யார்.

வளையல் அணிந்த அங்கவை, சங்கவை என்னும் பெண்கள் வெப்பமுடையதாகவும், நல்ல மணமுடையதாகவும், விரும்பிய வரையில் தின்றாலும் கெடுதியை உண்டாக்காததாகவும், நெய்யுடன் கலந்து செய்யப்பட்ட கீரைக் கறி எனச்சொல்லி அமுதத்தை இலையில் இட்டார்கள். 18

19- பாரிமகளிர் தந்த நீல ஆடையை வியந்தது

பாரி பறித்த பறியும் பழையனூர்க்
காரி கொடுத்த களைக்கொட்டும்,—சேரமான்
வாராய் என அழைத்த வாய்மையும் இம்மூன்றும்
நீலச்சிற் றுடைக்கு நேர்.

'பாரி' என்பவன் தன்னை விட்டுப் பிரியக்கூடாது என்று தடுப்பதற்காக ஆடையைப் பிடித்து இழுத்ததும், பழைய னூரில் வாழ்ந்த 'காரி' என்னும் உழவன் உரிமை பாராட் டித் தன்னைப் போலவே பயிரின் களையைப் பறிக்குமாறு கொடுத்த களைக்கொட்டும், சேர மன்னன் 'வருக' என்று அழைத்த உண்மையான அன்புச் செயலும் என்ற இந்த மூன்றும் அங்கவை சங்கவை என்னும் பெண்கள் தந்த நீல நிறச் சிறிய ஆடைக்குச் சமமாகும். 19

20. திருமண ஓலை எழுத விநாயகரை அழைத்தது!

ஒருகொம்பு இருசெவி மும்மதத்து நால்வாய்க்
கரிஉரிவைக் கங்காளன் காளாய்—பரிவுடனே
கண்ணால் ஓலை கடிதுஎழுத வாராயேல்
தன்ஆண்மை தீர்ப்பன் சபித்து.

ஒரு கொம்பையும், இரண்டு காதுகளையும், மூன்றிடங்களில் னின்று சொரியும் மதங்களையும், தொங்கும் வாயையும் உடைய யானைத்தோல் போர்வையையும் எலும்பையும் உடைய சிவபெருமானின் மகனே! அன்புடன் திருமண ஓலையை எழுத விரைவாக வாராது போனால் சாபத்தால் உன் வீரத்தை அழிப்பேன். 20

21. சோழ மன்னனைத் திருமணத்துக்கு வருமாறு அழைத்தது!

புகார்மன்னன் பொன்னிப் புனலுடன் சோழன்
தகாதுஎன்று தான்அங்கு இருந்து—நகாதே
கடிதின் வருக கடிக்கோவ லூர்க்கு
விடியப் பதினெட்டாம் நாள்.

காவிரிப்பூம்பட்டினத்துக்குத் தலைவனும் காவிரி நீர் வளத்தையுடையவனும் ஆகிய சோழ மன்னனே! திருமணம்செய்து கொள்வது தகாது என்று எண்ணி அவ்விடத்திலேயே இருந்து சிரித்துக் கொண்டிராமல் திருக்கோவலூர்க்கு இன்றைய பதினெட்டாம் நாள் காலையில் விரைந்து வருவாயாக. 21

22. பாண்டிய மன்னனைத் திருமணத்துக்கு அழைத்தது

வையத் துறைவன் மதுரா புரித்தென்னன்
செய்யத் தகாதுஎன்று தேம்பாதே—தையலர்க்கு
வேண்டுவன கொண்டு விடியாஉர் ஒன்பான்நாள்
ஈண்டு வருக இசைந்து.

வையை யாற்றுத் துறைக்குத் தலைவனாகிய மதுரையில் உள்ள பாண்டியனே! திருமணம் செய்து கொள்வது தக்கது அன்று என்று எண்ணி மனம் வருந்தாமல் திருமணப் பெண்டிருக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு பதினெட்டாம் நாள் காலையில் மனம் இசைந்து இங்கு வருவாயாக. 22

23. சேரனை வருமாறு அழைத்தது!

சேரலர்கோன் சோன் செழும்பூந் திருக்கோவல்
ஊரளவும் தான்வருக உட்காதே—பாரிமகள்
அங்கவையைக் கொள்ள அரசர் மனம்இசைந்தார்
சங்கவையை யுங்கூடத் தான்,

சேர நாட்டவருக்கு மன்னனுன சேரனே! பாரியினுடைய மகளிர்களாகிய அங்கவையையும் சங்கவையையும் மணம் செய்து கொள்ளச் சோழ மன்னனும் பாண்டிய மன்னனும் மனம் இசைந்துள்ளனர். ஆதலால் திருக்கோவலூர்க்கு வருவாயாக. 23

24 பொன்மழை பெய்யுமாறு வருணனை வேண்டுதல்.

கருணையால் இந்தக் கடல்உலகம் காக்கும்
வருணனே, மாமலையன் கோவல்—திருமணத்தில்
முன்மாரி பெய்யும் முதுவாரி யைமாற்றிப்
பொன்மாரி யாகப் பொழி.

கடல் சூழ்ந்த இந்த உலகத்தைக் கருணையுடன் காக்கும் வருணனே! மலையமான் திருமுடிக்காரியினது திருக்கோவலூரில் நடைபெறும் திருமணத்தின் போது, கடல் நீரை முதலில் நீ கொண்டு பின் மழையாகப் பொழிவதை மாற்றிப் பொன் மழை பெய்யச் செய்வாயாக. 24

25. பெண்ணையாற்றில் பால் நெய்யாகப் பெருகிவருமாறு வேண்டல்

முத்துஎறியும் பெண்ணை முதுநீர் அதுதவிர்ந்து
தத்திய நெய்பால் தலைப்பெய்து—குத்திச்
செருமலைத்தெய் வீகன் திருக்கோவ லூர்க்கு
வரும்அளவும் கொண்டோடி வா.

முத்துக்களை வீசிவரும் பெண்ணையாறே! நெடுங்காலமாக நின்னிடம் தருகின்ற நீரை மாற்றி நெய்பால் ஆகியவை குதித்து வரும்படி கொண்டு கரைகளைத் தாக்கிச் செருமலைத் தெய்வீகனின் திருக்கோவலூர் வரும்வரையில் ஓடி வருக. 25

26. திருக்கோவலூரின் சிறப்பு

பொன்மாரி பெய்யும்ஊர் பூம்பருத்தி ஆடையாம்
அந்நாள் வயல் அரிசி யாகும்ஊர்—எந்நாளும்
தேங்குக ழேபடைத்த சேதிமா நாடதனில்
ஓங்கும் திருக்கோவ லூர்.

எல்லாக் காலத்திலும் மிகுந்த புகழைப் படைத்த சேதி நாட்டில் வளர்ந்தோங்கும் திருக்கோவலூர் பொன் மழை பெய்யும்

ஊராகும். அங்குப் பருத்திச் செடியே புடவையாக விளைகின்றது. நெல் வயலே அரிசியை அளிக்கும் ஊராகும். 26

27. பனை மரத்துண்டு தளிர்க்குமாறு பாடுதல்

திங்கள் குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும்
மங்கைக்கு அறுகிட வந்துநின் றூர்மணப் பத்தலிலே
சங்குஒக்க வெண்குருத்து ஈனறுபச் சோலை சலசலத்து
நுங்குக்கண் முற்றி அடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழம்தர வேண்டும் பனந்துண்டமே.

முழுமதியைப் போன்ற குடையுடைய சேரமன்னனும் பாண்டிய மன்னனும் சோழமன்னனும் திருமணப் பந்தலிலே மணமகளிர்களாகிய அங்கவை சங்கவையர்க்கு அட்சதை இட்டு வாழ்த்துவதற்காக வந்துள்ளனர். ஆதலால் பனை மரத் துண்டே, நீ சங்கைப் போன்று வெண்மையான குருத்தை விட்டுச் 'சலசல' என்று ஓசையிடும் பச்சை ஓலை தழைக்கப் பெற்று நுங்குகள் முதிர்ந்த கண்களையுடையவனவாய் அடிப் பகுதியில் கருநிறம் கொண்டு நுனியில் சிவப்பு நிறம் பெற்ற பழங்கள் ஒவ்வொருக்கும் மூன்று தருவாயாக. 27

28. சேர மன்னன் தந்த பொன் ஆட்டைச் சிறப்பித்துப் பாடியது.

(ஔவை, அங்கவை சங்கவை ஆகிய இருவர்க்கும் இடையனின் வழக்கப்படி ஆட்டைச் சீதனமாகத்தரச் சேர மன்னனை வேண்டினர். அவன் பொன் ஆட்டைத் தந்தான். அப்போது இது பாடப்பட்டது.)

சிரப்பால் மணிமவுலிச் சேரமான் தன்னைச்
சுரப்புஆடு யான்கேட்கப் பொன்ஆடு ஒன்றுஈந்தான்
இரப்பவர் என்பெறினும் கொள்வர் கொடுப்பவர்
தாமறிவார் தங்கொடையின் சீர்.

தலையில் முடியணிந்த சேர மன்னனிடம் பால் தரும் ஆடு ஒன்றைக் கேட்டேன். அவன் பொன் ஆட்டை அளித்தான். ஏற்பவர் எதைத் தந்தாலும் ஏற்றுக்கொள்வர். ஆனால் கொடுப்பவரோ, தாம் கொடுக்கும் பொருளின் சிறப்பினைத் தாமே நன்றாக அறிவார். 28

29. இன்று போல என்றும் வாழ்க!

ஆயன் பதியில் அரன்பதிவந்து உற்றுஅளகம்
மாயன்ஊ தும்கருவி யானாலும்—தூயமணிக்
குன்றுபோல் வீறு குவிமுலையாள் தன்னுடன்நீர்
இன்றுபோல் என்றும் இரும்.

மன்னர்களே! கண்ணபிரானின் இருப்பிடமான ஆலிலை போன்ற வயிற்றின்மேல் சிவனின் இருப்பிடமாகிய மலை போன்ற முலைகள் பொருந்தி, திருமாலின் சங்குபோல கூந்தல் நரைக்கும் முதுமைப் பருவம் வந்தாலும் அழகிய மலை போன்ற முலைகளையுடைய இம்மகளிருடன் இன்றைக்கிருப்பதைப் போல என்றும் இன்புடன் வாழ்வீராக. 29

30. தலையாயவர், இடையாயவர், கடையாயவர்

சொல்லாம லேபெரியர் சொல்லிச் சிறியர்செல்வர்
சொல்லியும் செய்யார் கயவரே—நல்ல
குலமாலை வேல்கண்ணாய்! கூறுஉவமை நாடின்
பலாமாவைப் பாதிரியைப் பார்

மாலையை அணிந்த வேலைப் போன்ற கண்களை யுடையவளே! பெரியோர் தாம் செய்ய இருக்கும் உதவியை மற்றவர்க்குச் சொல்லாமே செய்வர். அவரைவிடத் தாழ்ந்த இடைப்பட்டவர் தாம் செய்ய இருக்கும் உதவியை மற்றவர்க்குச் சொல்லி விட்டுச் செய்வர். உதவி செய்வதாகச் சொல்லியும் பின் அதைச் செய்யாமல் இருப்பவர் கீழ் மக்கள். இவர்களுக்கு சொல்லக் கூடிய உவமையை ஆராய்ந்தால் பூக்காமலே பழுக்கும் பலா மரத்தையும், பூத்த பின்னர்க் கனியைத் தரும் மாமரத்தையும், பூத்தும் கனியைத் தாராத பாதிரி மரத்தையும் கூற வேண்டும். 30

31. கவிஞர் செயலும் கீழானவர் செயலும்

இலக்கணக் கவிஞர்சொல் இன்பம் தேடுவர்;
மலக்குசொல் தேடுவர்வன்க ணாளர்கள்;
நிலத்துறும் கமலத்தை நேடும் வண்டதீ
தலைக்குறை கமலத்தைச் சாரும் தன்மைபோல்.

வண்டு உலகத்தில் உள்ள தாமரைப் பூவை நாடிச்சேருவதைப் போன்று, பாட்டினது இலக்கணம் கற்ற கவிஞர்கள் அதிலே

அமைந்துள்ள சொல் நயம் பொருள் நயம் ஆகியவற்றைத் தேடுவர். ஈயானது மலத்தை நாடி அடையும் இயல்பைப் போன்று கொடியவர்கள் கலக்கம் தரக்கூடிய சொற்களை நாடி அடைவர்.

விளக்கம் : தலைக்குறைக்கமலம் முதல் எழுத்து குறைந்த கமலம்; அதாவது மலம். 31

32. *அழிவை அடைவோர்*

பட்டுர மாக நிதிதேடு மன்னவனும்
இட்டதனை மெச்சா இரவலனும்—முட்டவே
கூசிநிலை நில்லாக் குலக்கொடியும் கூசிய
வேசியும் கெட்டு விடும்,

கொடிய வழியில் பொருளைத் தேடும் மன்னன், கொடுத்ததைப் பாராட்டாத இரவலன், முற்றும் நாணத்துடன் கற்பு நிலையில் நில்லாத இல்லறப் பெண்டிர், வெட்கமுடைய தாசி ஆகியவர் அழிவை அடைவர். 32

33. *பாட்டின் அழியாத இயல்பு!*

நூற்றுப்பத்து ஆயிரம் பொன்பெறினும் நூல்சீலை
நால்திங்கள் நாளுக்குள் நைந்துவிடும்—மாற்றலரைப்
பொன்றப் பொருதடக்கைப் போர்வேல் அகளங்கா,
என்றும் கிழியாதுஎன் பாட்டு

பகைவர்கள் அழியப் போர் செய்யும் வேலையுடையவனே! நூலால் நெய்யப்பட்ட புடைவை பத்து லட்சம் பொன்விலை பெறுவதாயினும், நான்கு மாதங்களுக்குள் நைந்து கிழிந்து போகும். ஆனல் எனது பாட்டோ எக்காலத்திலும் அழியாமல் நிலையாக நிற்கும். 33

34. *வேளூர்ப் பூதன் இட்ட விருந்தின் இயல்பு*

வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரென வேபுளித்த மோரும்—திரமுடனே
புல்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந் திட்டசோறு
எல்லா வுலகும் பெறும்.

சிறிய வேளூரில் வாழும் பூதன் என்பான் விருப்பத்தோடு வரகரிசிச் சோறும், கத்தரிக்காய்த் துவட்டலும், புளிப்

புடைய மோரும் விருந்தினர்க்குத் தந்தான். இந்த உண வுக்கு ஈடாக உலகம் முழுவதையும் தந்தாலும் தகும். 34

35. நல்லவை நான்கு

ஏசி இடலின் இடாமையே நன்று; எதிரில்
பேசுமனையாளில் பேய்நன்று;—நேசம்இலா
வங்கணத்தில் நன்று வலியபகை; வாழ்வில்லாச்
சங்கடத்தில் சாதலே நன்று.

யாசிப்பவரைக் கடுஞ்சொல் சொல்லி அவருக்கு ஒரு பொருளைக் கொடுப்பதைவிடக் கொடுக்காமல் இருத்தலே நல்லதாகும். கணவனை மறுத்து உரைக்கும் மனைவியை விடப் பேய் சிறந்ததாகும். அன்பு இல்லாத நட்பைவிடப் பகைமையே சிறந்ததாகும். உயிர் வாழ்வதற்குரிய பொருள் இல்லாமல் துன்பத்தை அடைவதைக் காட்டிலும் உயிரை விட்டுவிடுவதே சிறந்ததாகும். 35

36. கோரைக்கால் ஆழ்வானின் கொடை

கரியாய்ப் பரியாகிக் கார்எருமை தானாய்
எருதாய் முழப்புடவை யாகித்—திரிதிரியாய்த்
தேரைக்கால் பெற்றுமிகத் தேய்ந்துகால் ஓய்ந்ததே
கோரைக்கால் ஆழ்வான் கொடை.

கோரைக்கால் என்னும் ஊரில் வாழும் ஆழ்வான் என்பவனது கொடையானது யானைபோலப் பெரியதாக இருந்தது; பின் குதிரையாகியது; எருமையானது; காளைமாடாகியது; ஒரு முழத் துணியாகியது; நூல்நூலாகப் பிரிந்த துணியாகியது; தேரையின்காலைப் போன்று மிகவும் குறைந்தது.

குறிப்பு : யானை முதலியவை தருவேன் என்று கூறி முடிவில் ஆழ்வான் ஒன்றும் தரவில்லை. ஆதலால் இங்ஙனம் பாடினர். 36

37. கொடைத் தன்மையற்றவனது வாழ்வின் இழிவு

பாடல் பெறானே; பலர்மெச்ச வாழானே;
நாடறிய நன்மணங்கள் நாடானே;—சேடன்
இவன்வாழும் வாழ்க்கை இருங்கடல்சூழ் பாரில்
கவிழ்ந்தென் மலர்ந்தென்னக் காண்,

சேடன் என்னும் பெயரையுடையவன் செல்வம் பெற்றிருந் தும் ஈகைத் தன்மை இல்லாததால் புலவர்களால் பாடப்பட வில்லே. எல்லாரும் புகழுமாறு வாழ்க்கையை நடத்துவதில்லே. பலர்க்குத் தெரியுமாறு நல்ல மங்கலச் செயல்களேச் செய்வ தில்லே. எனவே கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில் இவன் வாழும் பாழ்க்கை அழிந்தாலும் கெடுவதில்லே; நிலேத்தாலும் வயனில்லே. 37

38. முல்லானின் சிறப்பு

காலேயில்ஒன்று ஆவர், கடும்பகலில் ஒன்றுஆவர்;
மாலேயில் ஒன்று ஆவர் மனிதரெலாம்—சாலவே
முல்லானேப் போல முகமும்அக மும்மலர்ந்த
நல்லானேக் கண்டறியோம் நாம்.

மக்கள் அனைவரும் விடியற்காலத்தில் ஓர் இயல்பை உடைய வராக இருப்பர். நண்பகலில் வேறு ஓர் இயல்பை உடைய வராக இருப்பர். மாலேயில் அதற்கு மாருன ஓர் இயல்பைப் பெற்றிருப்பர். அவ்வாறில்லாமல் 'முல்லான்' என்ற வள் ளலேப் போல எப்போதும் முகமும், அகமும் ஒரு தன்மை யான மகிழ்ச்சியைப் புலப்படுத்தும் நல்லவன் ஒருவனே நாம் கண்டதில்லே. 38

39. எறும்பும் தன் கையால் எண்சாண்

(ஒரு புலவன் தன் கையில் மண்ணே வைத்துக்கொண்டு 'இஃ தென்ன?' என்று வினவினுன். அப்போது ஔவையார் பாடி யது இது.)

கற்றதுகைம் மண்அளவு; கல்லாதது உலகுஅளவுஎன்று
கற்ற கலேமடந்தை ஓதுகிருள்—மெத்த
வெறும்பந் தயம்கூற வேண்டாம் புலவீர்,
எறும்பும்தன் கையால்எண் சாண்.

புலவர்களே, நான்முகன் நாவில்பொருந்திய கலேமகள், தான் கற்றது ஒரு கைம் மண் அளவே ஆகும் எனவும், கற்கவேண் டியது எஞ்சியுள்ள உலகத்தின் அளவாகும் எனவும் எண்ணி இன்னும் கற்றுக் கொண்டிருக்கிருள். ஆதலால், யாம் அதிக மாகக் கற்றவர் என்று வீண் பந்தயம் கூற வேண்டியதில்லே. ஏனென்ருல் சிறிய எறும்பின் உடல் அளவுகூட அதன் கை அளவுக்கு எட்டுச்சாண் நீளம் உள்ளதாகும். 39

40. அமைச்சராவதற்குத் தக்கவர்

(அமைச்சராக யாரை வைக்கலாம் என ஓர் அரசன் வினவினன்; அதற்கு ஔவை உரைத்தது.)

நூல்எனிலோ கோல்சாயும்; நும்தமரேல் வெஞ்சமராம்;
கோல்எனிலோ ஆங்கே குடிசாயும்;—நாலாவான்
மந்திரியும் ஆவான்; வழிக்குத் துணையாவான்;
அந்த அரசே அரசு.

பூணூல் அணிந்த அந்தணன் அமைச்சனானால் நீதி முறை மாறும்; உன் அரச இனத்தவர் அமைச்சராக இருந்தால் கொடிய போர் உண்டாகும்; தராசு கோலை ஏந்திய வாணிகன் அமைச்சன் ஆனால் அப்போதே குடிமக்களுக்குத் துன்பம் உண்டாகும்; ஆதலால், வேளாளனே அமைச்சன் ஆவதற்குத் தக்கவன்; அரசர் பின்பற்றும் முறைக்கு உறு துணையாவான்; அவனை அமைச்சனாகப் பெற்றுள்ள அரசே சிறந்த அரசாகும். *40*

41. வேளே! இவளை அணைவாயாக!

செம்மான் கரத்தன்அருள் சேயா, நெடியோனை
அம்மான் எனப்பெற் றருள்வேலா,—இம்மான்
கரும்புஇறைக்கும் வெண்பிறைக்கும் கண்அம்பு இறைக்கும்
அரும்புஇறைக்கும் கூந்தல் அணை.

செம்மையான மானைக் கையில் கொண்ட சிவபெருமான் அருளிய செவ்வேளே! பெருமாளை மாமனாகக் கொண்ட கருணைமிக்க வேலையுடைய முருகனே! மானைப் போன்ற இந்த மங்கை, கரும்பை வில்லாகப் பெற்ற மன்மதன் காரணமாகவும், வெண்மையான நிலவைப் பார்த்தும் கண்ணீர் சொரிகின்ற, மலர்களைச் சிந்தும் கூந்தலை யுடைய இவளை நீ அணைதல் வேண்டும். *41*

42. கோடி பெறுவன

மதியாதார் முற்றம் மதித்தொரு கால்சென்று
மிதியாமை கோடி பெறும்;
உண்ணீர்உண்ணீர் என்று உபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்.

கோடி கொடுத்தும் குடிபிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்;
கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும்.

தம்மை மதிக்காதவர்களுடைய முற்றத்தை மதித்து ஒருமுறை சென்று மிதிக்காதிருத்தல் கோடி பொன் பெறத் தக்கதாகும். 'உண்ணுங்கள் உண்ணுங்கள்' என்று பல முறையும் சொல்லி அழைக்காதவரின் வீட்டில் உண்ணுமலிருத்தல் கோடி பொன் பெறக் கூடியதாகும்; கோடி பொன்னை அளித்தேனும் சிறந்த குடியில் பிறந்தவருடன் சேர்தல் கோடி பொன் பெறத் தக்க தாகும். கோடிக் கணக்கான பொன்னைத் தந்தாலும் தன் நாவானது தவருதிருத்தல் கோடி பொன் பெறத் தக்கதாகும். 42

43. இல்லை யென்பதே இனிது

வாதக்கோன் நாளையென்றுன்; மற்றைக்கோன் பின்னையென்றுன்
ஏதக்கோன் யாதேனும் இல்லையென்றுன்;—ஓதக்கேள்,
வாதக்கோன் சொல்லதிலும் மற்றைக்கோன் சொல்லதிலும்
ஏதக்கோன் சொல்லே இனிது.

நான் கூறுவதைக் கேட்பாயாக! உடலில் உள்ள வாதத்தின் தலைநாடி நாளை வரை நிலைத்திருக்கும் எனக் காட்டியது; அதற்கு மாறுன பித்தத்தின் தலைநாடி சற்று நேரம் கழித்த பிறகு உயிர் போகும் எனக்காட்டியது; சிலேட்டும நாடியோ உடலில் சத்து எதுவும் இல்லை எனக் காட்டியது; எனவே, வாத நாடியைப் போன்று நாளை என்று சொல்வதைவிடச் சிலேட்டும நாடி போலக் கொடுக்க ஒன்று மில்லாதிருந்தால், இல்லை எனக் கூறுவதே நல்லதாகும்.

விளக்கம் : 'நாளைக்குத் தருவேன், பின்னர்த் தருவேன்' என்பதைவிட இல்லை எனக் கூறி விடுதலே நல்லதாகும் என்பது கருத்து. 43

44. உலோபியின் செல்வம்!

சுற்றுங் கழிங்குளவி சூரைத்தூறு ஆரியப்பேய்
எற்றும் சுடுகாடு இடிகரையின்—புற்றில்
வளர்ந்த மடல்பனைக்குள் வைத்ததேன் ஒக்கும்
தளர்ந்தோர்க்குஒன்று ஈயார் தனம்.

வறுமையால் வாடுபவர்களுக்கு அளிக்காதவரது செல்வம், கொடிய குளவி சூழ்ந்துள்ளதாகவும், நெட்டிப்புல்லின் புதரில் உள்ளதாகவும், பிசாசு காத்திருக்கும் சுடுகாட்டில் உள்ளதாகவும், பாம்பு புற்றுள் வைத்துள்ளதாகவும், மிக்க ஓலை செறிந்த மடற்பனையினுள் இருப்பதாகவும் உள்ள தேனை ஒத்ததாகும்.

விளக்கம்: மடற்பனை-மடலை நீக்கப் பெறுத பனை. அதில் எளிதில் ஏற இயலாது; ஆதலால், அதில் கட்டப்பட்ட தேன் கூடு ஒருவருக்கும் பயன்படாது ஒழியும். 44

45. மேலே கட்டப்பட்ட ஒரு பொன் முடிப்பு அறும்படி பாடியது

ஆர்த்தசபை நூற்றெருவர்; ஆயிரத்துஒன் ரும்புலவர்;
வார்த்தை பதினு யிரத்தொருவர்;—பூத்தமலர்த்
தண்தா மரைத்திருவே, தாதா,கோ டிக்கொருவர்
உண்டாயின் உண்டுஎன்று அறு.

தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளே! நூற்றுவருள் ஒருவர்தான் கற்றோர் அவையில் இருப்பதற்கு உரியவர்; ஆயிரவருள் ஒருவர்தான் கல்வியறிவை உடையவராக விளங்குவர்; அவர்களுள்ளும் சொல்லும் வகையறிந்து சொல்ல வேண்டிய சொல்லைச் சொல்லும் ஆற்றல் உடையவர் பதினுயிரத்தில் ஒருவர் ஆவர்; கோடி பேருள் ஒருவரே வள்ளலாக இருப்பர். இவை உண்மை என்றால் உண்மை என்று காட்டுமாறு மேலே கட்டிய இந்தப்பொன் முடிப்பு அறுந்து விழுமாறு செய்க. 45

46. ஈயாதவனின் செல்வம் நீங்கும்

தண்டாமல் ஈவது தாளாண்மை; தண்டி
அடுத்தக்கால் ஈவது வண்மை;—அடுத்தடுத்துப்
பின்சென்றால் ஈவது காற்கூலி; பின்சென்றும்
ஈயான்எச் சம்போல் அறு.

ஒருவன் ஒரு பொருளைக் கேட்பதற்கு முன்னரே குறிப்பறிந்து தருவது சிறந்த ஈகை முயற்சியாம்; ஒருவன் நெருங்கிக் கேட்ட பின்னர்த் தருவது கொடை ஆகும்; திரும்பத்திரும்பச் சென்று கேட்ட பின்னர்த் தருவது கால்நடைக்குத் தரும் கூலியாகும். அவ்வாறு தொடர்ந்து கேட்ட பின்னும் ஒன்றையும்

தராதவனின் மக்களைப் போன்று தொடர்பு நீங்கும்படி, இந்தப் பொன் முடிப்பை அறுந்து விழுமாறு செய்க. 46

47. இச்செய்யுளும் முன் கண்ட சூழ்நிலையிலேயே பாடப் பட்டது.

உள்ள வழக்கிருக்க, ஊரார் பொதுவிருக்கத்,
தள்ளி வழக்கதனைத் தான்பேசி,—எள்ளளவும்
கைக்கூலி தான்வாங்கும் காலறுவான் தன்கிளையும்
எச்சம்அறும் என்றால் அறு.

உண்மையுடைய வழக்கானது ஒரு பக்க மிருக்கவும், ஊரில் உள்ளவர்களின் சபை அதற்குத் துணையாக இருக்கவும், அந்த வழக்கை நிறைவேறாதபடி அதை ஒழிக்கும் வகையைக் கூறி, அவ்வாறு செய்வதற்காக லஞ்சம் சிறிதாக இருப்பினும் அதைப் பெற்றுக் கொள்பவரின் பரம்பரை இல்லாது ஒழிவது உண்மையானால் இந்தப் பொன் முடிப்பை அறுந்து விழுமாறு செய்க. 47

48. *அழுத கண்ணீர் சுற்றத்தை அழிக்கும்!*

வழக்குடையான் நிற்ப வலியானைக் கூடி
வழக்கை அழிவழக்குச் செய்தோன்—வழக்கிழந்தோன்
சுற்றமும் தானும் தொடர்ந்தழுத கண்ணீரால்
எச்சம்அறும் என்றால் அறு.

உண்மையான வழக்குடையவன் இருக்க, அவனை வேண்டு மென்றே தவறாக எதிர்ப்பவனைச் சேர்ந்து, அந்த உண்மை வழக்குத் தோற்குமாறு செய்தவன், உண்மை வழக்குடைய வனும் அவனுடைய சுற்றத்தாரும் இடைவிடாமல் அழுத கண்ணீரின் பொருட்டால் பரம்பரை அற்றுப் போவான். இது உண்மை என்றால், இந்தப் பொன் முடிப்பு அறுந்து கீழே விழு மாறு செய்க. 48

49. பெண் பாவி பெற்றதேன்?

(ஓர் அரசிளங்குமரி கல்லாத அரசிளங் குமரனை, ஒரு சத்தி ரத்தில் வந்திருக்குமாறு ஒரு முடங்கல் எழுதினாள். அரசிளங் குமரன் கல்லாதவன்; ஆதலால் அம் முடங்கலைப் படித்துக் காட்டுமாறு ஒருவனிடம் காட்டினான். அம் முடங்கலைப்

படித்தவன், தான் அரச குமரன் போலக் கோலம் கொண்டு சத்திரத்துக்குச் சென்று அரசிளங் குமரியைக் கூடினான். கூடிய பின் உண்மை யுணர்ந்த அரசிளங்குமரி உயிர் துறந்தாள்; பிசாசானாள்; அந்தச் சத்திரத்தில் வருபவர்களைத் துன்புறுத்தினாள். அங்கு ஔவை வந்தார். அவரைச் சாமந்தோறும் அந்தப் பேய் துன்புறுத்த வந்தபோது அவர் பாடியவை பின் வரும் நான்கு பாடல்கள்.)

வெண்பா இருகாலில் கல்லானை வெள்ளோலை
கண்பார்க்கக் கையால் எழுதானைப்—பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளே
எற்றோமற்று எற்றோமற்று எற்று.

வெண்பாவை இருமுறை கற்பித்த அளவில் கல்லாதவன், வெண்மையான பனை ஏட்டில் எழுத்துத் தெரியுமாறு கையால் எழுதாதவன் என்னும் இருவரையும் பாவம் செய்த ஒருத்தியே பெற்றிருக்க வேண்டும். அவள் பெற்றெடுத்தது மற்றவர் பார்த்து நகைப்பதற்கே ஆகும். பேயே! அத்தகைய ஒருத்தியை மூன்று முறை அறைவாயாக.

50. ஈயாதவன் பொருளைத் தாயத்தார் கொள்வர்

கருங்குளவி சூரைத்தூறு ஈச்சங் கனிபோல்
வருந்தினர்க்குஒன்று ஈயாதான் வாழ்க்கை—அரும்பகலே
இச்சித் திருந்தபொருள் தாயத்தார் கொள்வரே
எற்றோமற்று எற்றோமற்று எற்று.

வண்டுகளால் சூழப்பட்ட எட்டிப் புதரில் இருக்கும் ஈச்சம் பழம் போன்று வறுமை அடைந்தவர்களுக்கு ஒரு பொருளையும் தராத உலோபியினது வாழ்வில், அவன் சேர்த்து வைத்திருக்கும் செல்வத்தைப் பட்ட பகலில் அவனுடைய சுற்றத்தார் கவர்ந்து கொள்வார்கள் என்று பேயே, அவனை அடிப்பாயாக! 50

51. சோம்பேறிகளை எற்று!

வானம் உளதால்; மழையுளதால்; மண்உலகில்
தானம் உளதால்; தயையுளதால்;—ஆனபொழுது
எய்த்தோம் இளைத்தோம்என்று ஏமாந்து இருப்பாரை
எற்றோமற்று எற்றோமற்று எற்று.

பேயே, வானம் உள்ளது; வானத்தினின்று பெய்யும் மழையும் உள்ளது; இவ்வுலகத்தில் வாழ இடமும் உள்ளது; கொடைத் தன்மையுடையவரின் கருணையும் உள்ளது; இங்ஙனம் இருக்கவும், அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதற்கு அறியாத சோம்பேறிகளாக இருந்து மிகவும் துன்பம் அடைந்தோம் என்று ஏமாந்திருப்பவரை, நீ அடிப்பாயாக! அடிப்பாயாக. 51

52. *கற்புக்கரசியோடு கலந்து வாழாதவரை அடி*

எண்ணு யிரத்தாண்டு நீரில் கிடந்தாலும்
உள்ஈரம் பற்ருக் கிடையேபோல்—பெண்ணுவாய்
பொற்ருெடி மாதர் புணர்முலைமேல் சாராரை
எற்ருேமற்று எற்ருேமற்று எற்று.

பேயே! எட்டாயிரம் ஆண்டுகள் நீரில் இருப்பினும் உள்ளே ஈரம் ஊறப்பெருத இடையைப் போன்று, சேரத்தக்க தம் கற்புடைப் பெண்களின் தனங்களில் உள்ளன்போடு கலந்து வாழாதவர்களை அடிப்பாயாக! அடிப்பாயாக! அடிப்பாயாக. 52

53. *இரண்டு இரவு என் கண் தூங்கா!*

(முருகப் பெருமான் ஒரு நாவல் மரத்தின் மீது இருக்க, ஔவையார் அவனைப் பார்த்து நாவல்பழம் பறித்துத் தருமாறு கேட்டார். முருகப் பெருமான் 'சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?' என வினவ, ஔவையார் சுடுகின்ற பழத்தைத் தருக என, முருகப்பெருமான் கனிந்த பழத்தைப் பறித்துப் போட்டான். பழத்தில் ஒட்டிய மணலை ஔவை ஊத, முருகப் பெருமான், சுடப்போகின்றது என்ருன். அப்போது இச்செய்யுள் பாடப்பட்டது.)

கருங்காலிக் கட்டைக்கு நாணுக்கோ டாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்—பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்தோற்றது
ஈர்இரவும் துஞ்சாதுஎன் கண்.

கருங்காலி என்னும் மரத்தை வெட்டுவதற்கு முடியாத கோடாரி, துருப்பிடித்தால் வாழைத் தண்டினை வெட்டுவதற்கும் இயலாது; அதுபோலக் காட்டில் கரிய எருமையை மேய்க்கும் சிறுவனுக்கு நான் தோற்றேன்; இச் செயலை என் மனம்

எண்ணிக் கொண்டிருப்பதால் இரண்டு இரவுகளாக என் கண்கள் உறக்கம் கொள்ளவில்லை. 53

54. கொடியது

கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்,
கொடிது கொடிது வறுமை கொடிது;
அதனினும் கொடிது இளமையில் வறுமை;
அதனினும் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்;
அதனினும் கொடிது அன்புஇலாப் பெண்டிர்;
அதனினும் கொடிது
இன்புற அவர்கையில் உண்பது தானே.

வேலையுடையவனே! இவ்வுலகத்தில் கொடியது எது என்று வினவினால், ஏழ்மையே கொடுமையான அனைத்தினும் கொடிய தாகும்; அதைவிடக் கொடியது இளமைப் பருவத்தில் வரும் ஏழ்மையாகும். அதைவிடக் கொடியது தாங்கிக் கொள்ள இயலாத கொடிய நோயாம்; அதைவிடக் கொடியது அன்பு இல்லாத பெண்டிரை மனைவியாகப் பெற்றிருத்தலாகும்; அதைவிடக் கொடியது அந்தப் பெண்டிர் இடும் உணவை உண்பதாகும். 54

55. இனியது

இனியது கேட்கின் தனிநெடு வேலோய்!
இனிது இனிது ஏகாந்தம் இனிது;
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்;
அதனினும் இனிது அறிவினர்ச் சேர்தல்;
அதனினும் இனிது அறிவுள் ளாரைக்
கனவினும் நனவினும் காண்பதுதானே.

ஒப்பில்லாத வேலை யுடையவனே! இனியது யாது எனக் கேட்பின், இனியவற்றுள் இனியது மற்றவர் தொல்லை இல்லாமல் தனியே இருப்பதாகும்; அதைவிட இனியது இறைவனைத் தொழுவதாகும்; அதைவிட இனியது அறிவுள்ளவரைச் சேர்தலாகும். அதைவிட இனியது அறிஞரைக் கனவிலும் நனவிலும் காண்பதாகும். 55

56. பெரியது

பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரிது பெரிது புவனம் பெரிது;
புவனமோ நான்முகன் படைப்பு;
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்;
கரிய மாலோ அலைகடல் துயின்றோன்;
அலைகடல், குறுமுனி அங்கையில் அடக்கம்;
குறுமுனி யோகலசத்தில் பிறந்தோன்;
கலசமோ புவியில் சிறுமண்;
புவியோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்;
உமையோ இறைவர் பாகத்து ஒடுக்கம்;
இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்;
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே.

வேலையுடையவனே! 'எது பெரியது?' என்று வினவினால், இவ்வுலகமே பெரியதாகும்; இந்த வுலகமோ நான்முகனால் படைக்கப்பட்டதாகும்; நான்முகனோ திருமாலின் கொப்பூழில் தோன்றியவன்; கரிய திருமாலோ, அலைகளையுடைய கடலில் பள்ளி கொண்டவன்; அந்தக் கடலோ அகத்தியரின் உள்ளங் கையில் அடங்குவதாகும்; குறுகிய வடிவம் உடைய அகத்திய முனிவரோ குடத்தில் தோன்றியவர்; குடமோ, சிறிய அளவுள்ள இவ்வுலக மண்ணால் செய்யப் பெற்றதாகும்; இவ்வுலகமோ, ஆதிசேடனாகிய பாம்புக்குச் சுமையாவதாகும்; அப் பாம்போ, உமையம்மையாரின் விரலில் அணிந்துள்ள கணையாழியாகும்; உமையம்மையோ, சிவபெருமானின் இடப் பக்கத்தில் அடங்கியவள்; சிவபெருமானோ, தொண்டரது உள்ளத்தில் அடங்கி இருப்பவராவார். எனவே சிவத் தொண்டரது பெருமை சொல்லுவதற்கு அடங்காத பெருமை உடையதாகும். 56

57. அரியது

அரியது கேட்கின் வரிவடி வேலோய்!
அரிதுஅரிது மானிடர் ஆதல் அரிது;
மானிடர் ஆயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது;

பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது;
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செயல் அரிது;
தானமும் தவமும் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே.

நீண்ட வேலை யுடையவனே! இவ்வுலகத்தில் அரியது எது என்று வினவினால், மக்கட் பிறவி எடுப்பது அரியது, அரியது, அரியது; மக்கட்பிறவியை எடுத்தாலும் உடலில் கூனல்,குருட்டுத்தன்மை, செவிட்டுத்தன்மை, பேட்டுத்தன்மை ஆகியவை நீங்கப் பிறப்பது அரியதாகும்; கூன், குருடு, செவிடு, பேடு ஆகியவை நீங்க ஒருவன் பிறந்தாலும் ஞானத்தையும் கல்வியையும் விரும்புதல் அரியதாகும்; மேற்கண்ட இரண்டையும் விரும்பிய போதும் ஈகை இயல்பும், நோன்பையும் மேற்கொள்ளுதல் அரிதாகும். அவ்விரண்டையும் மக்கள் செய்வார் எனின், அவர்களை ஏற்றுக் கொள்ள விண்ணுலகம் வழிவிடும். 57

58. *பயனற்றவை*

மாடுஇல்லான் வாழ்வும் மதிஇல்லான் வாணிபம்நல்
நாடுஇல்லான் செங்கோல் நடாத்துவதும்—கூடும்
குருஇல்லா வித்தை குணம்இல்லாப் பெண்டு
விருந்துஇல்லான் வீடும் விழல்.

செல்வம் அற்றவனின் வாழ்வும், அறிவு அற்றவன் செய்யும் வாணிகமும், நல்ல நாட்டைப் பெறாதவன் செங்கோல் ஆட்சியை நடத்துவதும், அறிவு கூடுவதற்குக் காரணமான ஆசிரியனைப் பெறாத கல்வியும், நற்பண்பு இல்லாத மனைவியும், விருந்தினரை உபசரியாத இல்லறமும் பயனற்றவையாகும். 58

59. *நண்பர் முதலியரைப் பாராட்டுமிடம்*

நேசனைக்கா ணுஇடத்தில் நெஞ்சார வேதுதித்தல்;
ஆசானை எவ்விடத்தும் அப்படியே;—வாச
மனையாளைப் பஞ்சணையில்; மைந்தர்தமை நெஞ்சில்;
வினையாளை வேலைமுடி வில்.

நண்பனைக் காணாத இடத்தில் மனமாரப் புகழ்ந்து கூறுக; ஆசிரியரையும் எல்லா விடங்களிலும் அவ்வாறே புகழ்ந்து

கூறுக; மனைவியைப் பஞ்சணையில் புகழ்ந்து கூறுக; மக்களைத் தம் நெஞ்சில் போற்றுக; வேலை செய்யும் ஆட்களை அவர்கள் செயலைச் செய்து முடித்த பிறகு புகழ்க. 59

60. இயலாத செயல்கள்

ஆலைப் பலாஆக்க லாமோ? அருஞ்சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ?—நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்க லாமோ? கருணைஇலா
மூர்க்கனைச்சீர் ஆக்கலா மோ?

ஆலமரத்தைப் பலா மரமாக மாற்ற முடியுமோ? நேராக ஆக்க இயலாத நாயின் வளைந்த வாலை நேராக்க முடியுமோ? கரிய நிறத்தையுடைய காக்கையைக் கிளிபோலப் பேசச் செய்யமுடியுமோ? கருணை இல்லாத மூடனை நற்குணம் உடைய வனாக்க முடியுமோ? முடியாது. 0

61. சோமன் கொடைச் சிறப்பு

நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின்; ஈசன்
கழலருமை வெவ்வினையில் காண்மின்;—பழகுதமிழ்ச்
சொல்லருமை நாலிரண்டில்; சோமன் கொடையருமை
புல்லரிடத் தேயறிமின் போய்.

நிழலின் அரிய பயனை அறிய வேண்டுமானால் வெயிலில் செல்வதால் அறிந்து கொள்க; கடவுளின் திருவடியை வணங்குவதால் உண்டாகும் அரிய பயனைக் கொடிய கர்மத்தின் வசமாக இருக்கும்போது அறிவீர்களாக; கற்றார் பயிலும் நல்ல தமிழின் நயத்தை நான்கு அடிகளை யுடைய நாலடியாரிலும் இரண்டடிகளையுடைய திருக்குறளிலும் அறிந்து கொள்க; சோமன் என்ற கொடையாளனின் சிறப்பைக் கீழ் மக்களிடத்தில் சென்று அறிந்து கொள்க. 61

92. புலி

காசினியில் பிள்ளைக் கவிக்குஅம் புலிபுலியாம்;
பேசும்உலா வில்பெதும்பை புலி;—ஆசு
வலவர்க்கு வண்ணம் புலியாம்; மற்றுஎல்லாப்
புலவர்க்கும் வெண்பாப் புலி.

இவ்வுலகில் 'பிள்ளைத் தமிழ்' என்னும் இலக்கியத்தில் 'அம்புலிப் பருவம்' பாடுவது அரியதாகும். சிறப்பாகக் கூறப் படும் 'உலா' என்ற நூலில் 'பெதும்பைப் பருவம்' பாடுவது அரியதாகும்; நினைத்ததை உடனே பாடும் 'ஆசு கவி'களுக்கு 'வண்ணக்கவி'களைப் பாடுவது அரியதாகும்; பிற பாவலர் எல்லார்க்கும் வெண்பாப் பாடுவது மிக்க அரிய செயலாகும். 62

63. *அறம் பொருள் இன்பம் வீடு*

ஈதல்அறம்; தீவினைவிட்டு ஈட்டல்பொருள்; எஞ்ஞான்றும்
காதல் இருவர் கருத்துஒருமித்து—ஆதரவு
பட்டதே இன்பம்; பரனைநினைந்து இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

வறுமையால் வந்து யாசித்தவர்க்கு இல்லை என்னுமல் ஒரு பொருளைக் கொடுப்பது அறச் செயலாகும்; தீயவழியை விலக்கி நல்ல நெறியில் சேர்ப்பதே நல்ல பொருளாகும்; எப்போதும் அன்பால் இணைந்த கணவனும் மனைவியும் ஒரு மித்த உள்ளம் கொண்டு ஒருவருக்கொருவர் ஆதரவாக இருப் பதே இன்பமாகும்! இறைவனை எண்ணி, மேற் கூறப்பட்ட மூன்றிலும் பற்றை விடுவதே பேரின்பத்தை அளிக்கும் மோட் சத்தை அடைவதற்கு வழியாகும். 63

64 *விலகிச் செல்வன!*

தாயோடு அறுசுவைபோம்;—தந்தையொடு கல்விபோம்;
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்;—ஆயவாழ்வு
உற்ற ருடன்போம்; உடன்பிறப்பால் தோள்வலிபோம்;
பொன்தாலி யோடுஎவையும் போம்.

அன்புடன் உணவை ஊட்டும் தாய் மறைந்ததும் அறுசுவை யுடன் கூடிய உணவு கிடைப்பது இல்லையாகும்; தந்தை மறைந்த பின்னர் மக்கட்குக் கல்விப் பயிற்சி இல்லையாகும்; மக்கள் மறைந்த பின் ஒருவன் பெற்ற செல்வம் நிலைபெறுமல் அழியும்; சிறப்பாக வாழும் வாழ்க்கை சுற்றத்தார் மறைந்த போது நீங்கிவிடும்: உடன் பிறந்தவர் இல்லாத போது பக்கத் துணையாலே வருகின்ற தோள் வன்மை இல்லையாகும்; பொன்னல் ஆன தாலி அணிந்த மனைவி இறந்தால் எல்லா நன்மைகளும் இல்லையாம். (தாய் முதலியவர் நீங்கின் ஒவ்

வொரு நன்மைதான் நீங்கும்; ஆனுல் மனைவி இறப்பின் எல்லா நலங்களும் நீங்கும் எனக் கொள்க.) 64

65. துரும்பு

போந்த உதாரனுக்குப் பொன்துரும்பு; சூரனுக்குச்
சேர்ந்த மரணம் சிறுதுரும்பு; ஆய்ந்த
அறிவோர்க்கு நாரி அருந்துரும்பாம் இல்லத்
துறவோர்க்கு வேந்தன் துரும்பு.

கொடைத் தன்மையுடன் பிறந்தவனுக்குப் பொன் துரும்பைப் போன்று அற்பமான பொருளாகும்; தன் உயிரை ஒரு பொருளாக மதிக்காதவனுக்கு இறப்பு ஒரு துரும்பாகும்; நூல்களை நுட்பத்துடன் ஆராய்ந்து கற்ற புலவர்க்குப் பெண்மேல் உண்டாகும் ஆசை துரும்பு போல அற்பமாகும்; மனைவியைத் துறந்த துறவிகளுக்கு அரசன் ஒரு துரும்பைப் போன்றவன் ஆவான். 65

66. சிவனே! நீர் ஏன் பிச்சை எடுத்தீர்?

மேற்பார்க் கமைந்தரும் மூவாளருதும் விளங்குகங்கை
நீர்ப்பாய்ச் சலும்நன் னிலமுமுண் டாகியும் நின்னிடத்தில்
பாற்பாக் கியவதி நீங்கா திருந்தும் பலிக்குழன்றீர்
ஏற்பார்க் கிடாமலன் ரேுபெருங் கோயில் இறையவனே.

பெருங்கோயிலில் வீற்றிருக்கும் இறைவனே! செல்வத்தை மேற்பார்க்கப் பிள்ளைகளும் வாகனமாக இளங்காளையும் நீர் வளமுள்ள கங்கை நீர்ப் பாய்ச்சலும், நல்ல நிலமும் ஆகியவற்றை நீவிர் பெற்றுள்ளீர். இருந்தும், உம் இடப்பக்கத்தில் அன்பர்களுக்குப் பாலாகிய உணவை அளிக்கும் உமையம்மையார் பிரியாமல் இருந்தும் உம்மிடம் வந்து ஏற்றவர்க்குக் கொடுக்காத காரணத்தினுல் அன்ரோ, பிச்சை ஏற்றுத் திரியலானீர்? 66

67. உன்னை எங்ஙனம் பாடுவேன்?

(வீரம் அற்றவன் ஒருவன் தன்னைப் பாட வேண்டும் என ஔவையாரை வேண்டினுன்; அப்போது அவர் பாடிய பாடல்)

மூவர் கோவையும் மூவிளங் கோவையும்
பாடிய என்தன் பனுவல் வாயால்

என்னையும் பாடுக என்றனை; எங்ஙனம்
பாடுதும் யாம்? களிறுபடு செங்களம்
கண்ணில் காணீர்; வெளிறுபடு நல்யாழ்
விருப்பமாய்க் கேளீர்;
இலவ வாய்ச்சியர் இளமுலை புல்லீர்;
புலவர் வாய்ச்சொல் புலம்பலுக்கு இரங்கிலீர்;
ஊடீர்; உண்ணீர்; கோடீர்; கொள்ளீர்;
ஓவாக் கானத்து உயர்மரம் போலத்
தாவாக் கனியில் தோன்றி னீரே.

நான்முகன் திருமால் சிவன் என்ற மூவருக்கும் தலைவரான கடவுளையும், தமிழ் நாட்டு மூவேந்தரையும் புகழ்ந்து பாடிய பாவின் மணம் கமழும் என் வாயினால் உம்மையும் நான் பாட வேண்டும் என வேண்டினீர்; உம்மை நான் எங்ஙனம் பாட முடியும்? ஆண் யானைகள் போரிட்டு இறக்கும் குருதியால் சிவந்த போர்க்களத்தை நீர் கண்ணாலும் பார்த்திருக்க மாட்டீர்; நல்ல யாழிசையை விரும்பிக் கேட்டிருக்க மாட்டீர்; சிவந்த வாயையுடைய பெண்டிரை நீர் சேர்ந்திருக்க மாட்டீர்; பாடிவரும் புலவர்களுக்கு இரங்கியிருக்க மாட்டீர்; பெண்களுடன் நீவிர் ஊடல் கொண்டதில்லை; நல்ல உணவுகளை உண்டிருக்க மாட்டீர்; வறியவர்க்கு அவர் வேண்டிய தொன்றைத் தந்திருக்க மாட்டீர்; நல்ல பொருளை ஏற்றுக் கொள்வதில்லை. காட்டில் உள்ள மரங்களைப்போலவும், பறிக்க இயலாத அதன் பழத்தைப் போலவும், பிறந்துள்ளீர். இத்தகைய உன்னை எவ்வாறு நான் பாடுவேன்? 67

68. பொய் வழக்காளன் சுற்றம் பற்றறும்

கல்வி யுடையீர், கருங்கா னகத்திடையே
நெல்லி இலைஉதிர்ந்து நிற்பதெவன்?—வல்லாய்கேள்,
வெல்லா வழக்கை விலைவாங்கி வெல்விக்கும்
வல்லாளன் சுற்றம்போல் மாண்டு.

அரிய ஆராய்ச்சியும் கேள்வியும் உடையவர்களே! வெற்றி பெறக் கூடாத வழக்கினை லஞ்சத்தைப் பெற்று வெற்றி பெறச் செய்யும் வன்கண்மை யுடையவரது சுற்றத்தாரைப் போலப் பெரிய காட்டில், நெல்லி மரமானது இலையுதிர்ந்து மொட்டை மரமாகி நிற்கக் காரணம் யாது? (பொய்யான வழக்கை லஞ்சத்தைப் பெற்று வெல்லச்செய்ததே காரணம்!) 68

69. பாண்டியனது திருமண விருந்தின் இயல்பு

வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்து
உண்ட பெருக்கம் உரைக்கக்கேள், —அண்டி
நெருக்குண்டேன்; தள்ளுண்டேன்; நீள்பசியி னாலே
சுருக்குண்டேன் சோறுகண்டி லேன்.

வளமை மிக்க தமிழை ஆராய்ந்த பாண்டியனின் திருமணத்தில் விருந்து உண்ட சிறப்பை உரைப்பேன், கேட்பாயாக! விருந்துண்ண எண்ணிக் கூட்டத்தின் அருகில் சென்று கசங்கினேன்; இடித்துத் தள்ளப்பட்டேன்; நீண்ட நேரம் பசியுடன் இருந்த காரணத்தாலே வயிறு சுருங்கப் பெற்றேன்; உணவை உண்ணப் பெறவில்லை. 69

70. சேரநாடு முதலியவற்றின் இயல்பு!

வேழ முடைத்து மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து; பூமியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத்; தெண்ணீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து.

சேரநாடு யானைகள் மிகுந்திருப்பதாகும்; மேன்மையுடைய செழிப்பான சோழ வளநாடு நெல்வளத்தை யுடையதாகும்; பாண்டியனது தென்நாடு முத்து விளையும் சிறப்பைப் பெற்றுள்ளதாகும்; நீர்வளம் மிக்க வயல் சூழ்ந்த தொண்டை நாடு சான்றோரை உடையதாகும்; 70

ஔவையார் முதலிய எழுவர் பாடல்கள்

(ஔவையாரின் தாய் ஆதி, தான் பெற்ற குழந்தைகளைப் பிறந்தவுடன் பிரிந்து செல்ல வேண்டுமே என மயங்கிய போது ஔவையார் முதலியோர் பாடியவை இவை)

71. ஔவையார்

இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்று எழுதி
விட்டசிவ னும்செத்து விட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமே ஆனாலும் பாரம்அவனுக்கு! அன்னாய்!
நெஞ்சமே அஞ்சாதே நீ.

தாயே! நான் வினைப் பயன்களை இன்னவாறு அனுபவிக்கவேண்டும்என்று என் தலையில் விருப்பத்துடனே எழுதிய சிவன் இறந்துவிட வில்லையே! மிகப் பெரிய பஞ்சம் உண்டானாலும் நம்மைக் காக்க வேண்டிய பொறுப்பு அவனுடையதாகும். ஆதலால், நீ உள்ளத்தில் என்னைப் பிரிந்து போவதற்காக அச்சம் கொள்ள வேண்டா. 1

72. உப்பை

அத்தி முதல்எறும்பூ ஈறானவுயிர் அத்தனைக்கும்
சித்த மகிழ்ந்தளிக்கும் தேசிகன்—முற்றவே
கற்பித்தான் போனானோ காக்கக் கடன்இலையோ
அற்பனோ அன்னாய் அரன்.

யானை முதல் எறும்பு ஈறான எல்லா உயிர்களுக்கும் மனம் மகிழ்ந்து உணவு முதலியவற்றைத் தருபவன் கடவுள். அவன் உண்மை அனைத்தையும் எனக்குக் கற்பித்தவன்; அவன் இப்போது இல்லாமல் மறைந்தானோ? அவனது கடமை அன்றோ? அவன் ஆற்றல் இல்லாத எளியவனோ? 2

73. அதிகமான்

கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும்
விருப்புற்று அமுதுஅளிக்கும் மெய்யன்—உருப்பெற்றால்
ஊட்டி வளர்க்கானோ? ஓகெடுவாய் அன்னாய்கேள்,
வாட்டம் உனக்கேன்? மகிழ்.

தாயே, கேள்! கர்ப்பப் பையில் உள்ள உயிருக்கும் முட்டைக்குள் பொருந்தியுள்ள உயிருக்கும், கல்லுள் இருக்கும் தேரைக்கும் கருணையுடன் உணவைத் தந்து காக்கும் இறைவன், ஓர் உடம்பு இவ்வுலகத்தில் தோன்றினால் அதை உணவு தந்து காப்பாற்ற மாட்டானோ? மனம் வருந்தும் தாயே, நீ எதற்காக கவலைப்படுகின்றாய்? மகிழ்ச்சி யடைவாயாக! 3

74. உறுவை

சண்டைப்பைக் குள்உயிர்தன் தாயருந்தத் தான்அருந்தும்
அண்டத்து உயிர்பிழைப்பது ஆச்சரியம்!—மண்டி
அலைகின்ற அன்னாய், அரனுடைய உண்மை
லை கண்டு நீயறிந்து நில்.

என்னைப் பிரிந்து செல்ல வேண்டுமே என்பதால் மனம் வருந்தும் தாயே! கரு தோன்றும் பையில் உள்ள உயிரானது, அதன் தாய் உணவை உண்ணத் தானும் உணவை உண்டு உயிர் வாழ்கின்றது; இது வியப்பாய் உள்ளது! கடவுளின் உண்மையான தன்மையைக் கண்டு நீ வருந்தாமல் இருப்பாயாக! 4

75. கபிலர்

கண்ணுழையாக் காட்டில் கருங்கல் தவளைக்கும்
உண்ணும் படிஅறிந்து ஊட்டுமவர்—நண்ணும்
நமக்கும் படியளப்பார் நாரியோர் பாகர்
தமக்கும் தொழில்என்ன தான்?

உமையம்மையை ஒரு பாகத்தில் கொண்ட சிவபெருமான், கண்ணின் பார்வையும் நுழைந்து பார்க்கமுடியாத அளவுக்கு மரம் அடர்ந்த காட்டில், கரிய கல்லினுள் இருக்கும் தேரைக்கும் உண்கின்ற வகையினை அறிந்து உணவை அளிக்கும் இயல்பை உடையவர் ஆவார்; அத்தகையவர் தம்மை விரும்பி அடையும் நமக்கும் உணவைத் தருவார், இதுவன்றி அவருக்கு வேறு கடமைதான் யாதுள்ளது? 5

76 வள்ளியம்மை

அன்னை வயிற்றில் அருத்தி வளர்த்தவன்தான்
இன்னும் வளர்க்கானோ?என்தாயே,—மின்அரவம்
சூடும் பெருமான் சுடுகாட்டில் இன்றுவிளை
யாடும் பெருமான் அவன்.

என்னைப் பெற்ற தாயே! மின்னும் பாம்பை அணியாகப் பூண்ட சிவபெருமானும் எல்லாம் ஒடுங்கிய சுடுகாட்டில் விளையாடுபவனுமான சிவன், பெற்றவளின் வயிற்றுள் இருக்கும்போது உணவைத் தந்து காப்பாற்றினான். அவன் இனி மேலும் என்னைக் காப்பாற்ற மாட்டானோ? (ஆகையால் நீ வருந்துவதேன்?) 6

77. திருவள்ளுவர்

எவ்வுயிரும் காக்கஒரு ஈசன்உண்டோ இல்லையோ
அவ்வுயிரில் யான்ஒருவன் அல்லனோ—வவ்வி

அருகுவது கொண்டிங்கு அலேவதேன்? அன்னே,
வருகுவது தானே வரும்.

தாயே! எல்லாவுயிர்களேயும் காப்பதற்கு ஓர் இறைவன் இருக்கின்ருர் அல்லரோ? அங்ஙனம் அவரால் காக்கப்படும் உயிர்களுள் நான் ஒருவன் அல்லனே? அழியும் பொருளேக் கையில் எடுத்து அலேவதால் வரும் பயன் யாது? விதிப்படி நடக்கக் கூடியது நாம் அதை எண்ணுமலேயே நடைபெற்று விடும். 7

3. திருவள்ளுவர் பாடல்கள்

78. *சிவன் கூத்தை நான் அறிவனே?*

(சிவபெருமானின் கூத்தைப் பற்றிச் சங்கத்தவர் கேட்ட போது பாடியது)

பூவில் அயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி அளந்தோனும் தாம்இருக்க,—நாவில்
இழைநக்கி நூல்நெருடும் ஏழை அறிவேனே
குழைநக்கும் பிஞ்ஞகன்தன் கூத்து.

தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகனும், தேவர்க்குத் தலேவனுகிய இந்திரனும், இம்மண் உலகத்தைக் கடந்து மேல் உலகங்களேயும் அளந்த திருமாலும் சிவனின் கூத்தை அறியக் கூடியவர்களாவார்கள்; அங்ஙனம் இருக்க, நாவால் நூல் இழையை நனைத்து அதை உருட்டித் தடவும் இயல்பையுடைய எளியவனுன நான், குண்டலத்தை அணிந்த செவியையுடைய சிவபெருமானின் கூத்தின் நுட்பத்தை அறிவேனே? அறியேன்.

விளக்கம் : சிவபெருமான் ஊர்த்துவக் கூத்தை நிகழ்த்திய போது அவரது காதில் இருந்த குண்டலம் கீழே விழ, அதை அவர் தம் காலால் எடுத்து மற்றவர் அறியாதபடி அணிந்து கொண்டார். அது பற்றி வள்ளுவர் இதில் குறிப்பாகக் குறிப்பிட்டுள்ளார் என்பர். 1

79. *ஐயர் யார்?*

ஐயர்என்று உரைத்தீர் நாயேற்குஅடுக்குமோ அருள்இலேனே
பொய்யொடு களவும் மற்றுப் புலன்களே ஒடுக்கிக் கொண்டு

உய்யவே புலன்கள் ஐந்தும் உயர்பர வெளியுள் ளாக்கி
வெய்யவன் மதியம் போல விரவுவர் ஐயர் ஆவர்.

அருள் குணம் இல்லாத என்னை 'ஐயர்' என்று சொன்னீர்கள். நாய் போன்ற எளியவனான எனக்கு அது பொருந்துமோ? பொய், களவு ஆகியவை நீங்கி ஐம்பொறிகளையும் அடக்கியவர்களாய் மேலான கதியை அடைவதற்காக ஐம்பொறி அறிவை மேலான அருளாகிய வெளியுள் அடங்குமாறு செய்து, கதிரவனின் ஒளியில் சந்திரனின் ஒளி அடங்கிவிடுதலைப் போன்று, இறைவரின் அருள் ஒளியுள் தம் அறிவு அடங்குமாறு கலந்து நிற்பவரே ஐயர் என்ற சொல்லுக்கு உரியவர் ஆவார். 2

80. *யார் ஞானி?*

ஞானவான் என்று சொன்னீர் நாதவிந் துவும்க டந்து
கானல்ஐ வரையும் சுட்டுக் கடுவெளி பரமா னந்தம்
தான்எனும் அவைஇரண்டும் தவிர்ந்துதன் வசமும் கெட்டு
மோனமும் கடந்தே அப்பால் முடிந்தவர் ஞானி யாவர்.

நீவிர் என்னை ஞானி எனக் கூறினீர்; ஞானம், விந்து என்று சொல்லப்படும் மூல தத்துவங்களுக்கு அப்பாற்பட்டு, கானலைப் போன்ற நிலையற்ற ஐம்பொறிகளுக்குரிய ஆசைகளை முழுவதும் விலக்கி, காவலாய் அமைந்துள்ள அருள் வெளியில் பெறக்கூடிய பேரின்பமும் தானும் வேறு வேறு என்ற வேறுபாடு நீங்கப் பெற்று, தன் உணர்ச்சியும் ஒழிந்து, பேசாத நிலையினைக்கடந்து உயர்வான நிலையைஅடைந்தவரே 'ஞானி' என்று அழைக்கப்படுவதற்குரியவர் ஆவார். 3

81. *திருவள்ளுவர் தன் சாதி முதலியவற்றை விளக்குதல்,*

சாதியிலே தொண்ணூற்றுஒன் பானும் சாதி;
சமயத்தில் பதின்மூன்றும் சமய மாகும்;
நீதியிலே சிவனுடைய நீதி யாகும்;
நிலைமையிலே வேதாந்த நிலைமை யாகும்;
ஆதியிலே எங்களூர் கருவூ ராகும்;
அந்தத்தில் போயடைவோம் பேரூர் தன்னில்;
சோதியிலே பரஞ்சோதிக் கூட்ட மாகும்;
சொல்லுதற்கும் எங்கள்குலம் சுக்கிலம தாமே.

குலத்தில், தொண்ணூற்ருறு தத்துவங்களும் நாத விந்து என்னும் இரண்டும் ஆகிய தொண்ணூற்றெட்டையும் கடந்த தொண்ணூற்றென்பதாம் குலம் ஆகும்; சமயங்களுள் அகச் சமயம் ஆறு, புறச்சமயம் ஆறு ஆகிய பன்னிரண்டையும் கடந்து பதின்மூன்ரும் சமயமாகும்; நியாயமுறையில் விருப்பு வெறுப்பு அற்ற கடவுளின் நடுநிலே நெறியாகும்; நிற்கின்ற நிலைமையைச் சொன்னல் ஞான நூல்களில் முடிவாகக் கூறப் பட்ட அறிவு நிலையாம்; முதலிலே நாங்கள் இருந்த இடம் தாயினது கருப்பையாகிய ஊராகும்; இறுதியில் நாங்கள் போய்ச் சேரும் இடம் பேரின்பத்தைத் தரும் வீடாகும்; ஒளி யளவில் கதிரவன் சந்திரன் அக்கினி ஆகியவற்றைக் கடந்த மேலான ஒளியில் விளங்குகின்ற கூட்டத்தினர் ஆவோம்; எங்கள் குடியாவது களங்கம் இல்லாத சுக்கிலமாகும். 4

82 பாழிடமே எங்கள் ஊர்

எந்தவூர் என்றீர்; இருந்தஊர் நீர்கேளீர்,
அந்தஊர் செய்தி அறியீரோ!—அந்தஊர்
முப்பாழும் பாழாய் முடிவில்ஒரு சூனியமாய்
அப்பாலும் பாழ்என்று அறி.

என் ஊர் எது என்று வினவினீர்! நான் முன் தங்கியிருந்த ஊரைக் கேட்பீர்களாக! அந்த ஊரின் தன்மையை நீங்கள் அறிய மாட்டீர்களோ! அந்த ஊரானது ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றும் இல்லாத இடமாய் அதைக் கடந்து யாதொரு பற்றும் இல்லாத இயல்பை உடையதாகும் என அறிவீராக! 5

83. நிற்பதற்குரிய இடம்

நில்லுநில் என்று சொன்னீர் நேசபா சங்கள் ஐந்தும்
யுல்லறி வோடும் வாங்காப் புலேகொலே களவு மற்றுச்
சொல்லுதற் கரிய ஞானச் சுழிமுனே முடியின் மீதில்
எல்லேயும் கடந்தே அப்பால் ஏகமா னவர்கள் நிற்பார்.

நீங்கள் என்னே 'நில்' என்று சொன்னீர்கள். பற்றுக்குக் காரணமான ஐந்து மலங்களேயும் கீழான அறிவையும் போக்கி ஊன் உண்ணல், கொலே செய்தல், களவு செய்தல் என்பன வற்றைப் போக்கி, சொல்லினுல் சொல்வதற்கரிய உயர்ந்த ஞானத்துக் காரணமான சுழிமுனே நாடியின் உச்சியில்

இருக்கும் துவாத சாந்தத்திற்கும் அப்பால் சென்று, அங்குள்ள ஒரு பொருளுடன் கலந்தவர் உயர்ந்த பொருளுடன் நிற்பர். 6

84. *இருப்பவர்*

இரும்இரும் என்று சொன்னீர் ஏற்குமோ ஏழை யேற்குத்
தருபொருள் உணர்ந்து சைவ சமயமும் அனைத்தும் நீங்கி
மருள்தரு வினையும் நீங்கி மாசிலா உண்மை ஞானம்
பொருந்தினர் இருப்பர் பின்பு பொருதவர் இறப்பர்தானே.

என்னை அமர்ந்திருக்குமாறு நீவிர் சொன்னீர்; எளியவனாகிய எனக்கு அது பொருத்தமாகுமோ? மேலான நல்ல கதியை அடையும் தன்மை அறிந்து சைவம் முதலான சமயங்கள் அனைத்தையும் கடந்து மயக்கத்தைத் தரும் மலங்கள் அனைத்தையும் விலக்கிக் குற்றம் இல்லாத உண்மை ஞானம் பெற்றவர்கள் நிலையான இடத்தில் அழிவின்றி இருப்பர்; உண்மையான ஞானத்தை அடைந்தும் அது நன்கு கைவரப்பெருதவர் மரணத்தை அடைவர். 7

85. *போவதற் குரியவர்*

போம்என உரைத்தீர் என்னைப் பொறியொடு புலன்கள் ஐந்தும்
ஆம்எனும் அவிச்சை யோடும் அங்ஙனே மதித்துக் கொண்டே
ஏமமும் சாமம் அற்றே இரவொடு பகலும் அற்றுச்
சோமனுர் பதியை விட்டுத் துறந்தவர் போவர் அன்றே.

என்னைப் 'போ' என்று சொன்னீர்; ஐந்து பொறிகளும் அவற்றிற்கு விடயமான ஐந்து வகைப் பொருள்களும் அவற்றை ஏற்கக் கூடிய அறிவையும், அவற்றைப் பொருட்படுத்தி அனுசரித்தகாவலும் உபாயமும் நீங்கி, கருவிகளுடன் சேர்ந்த நிலையும் சேராத நிலையும் போய், யோக நிலையினைச் சந்திர மண்டலத்துக்கு அப்பாற்பட்டு, பற்றில்லாதவர் மேலான கதிக்குப் போவார்.

86. திருவள்ளுவர் தம் மனைவி இறந்தபோது பாடியது.

அடிசிற்கு இனியானே; அன்புடை யாளே!
படிசொல் தவருத பாவாய்! அடிவருடிப்

பின்தூங்கி முன்எழுந்த பேதையே, போதியோ,
என்தூங்கும் என்கண் இரா.

சிறந்த உணவை அளிப்பதில் வல்லவளே! என்னிடம் அன்புடையவளே, நான் கட்டளையிட்டவண்ணம் அனைத்தையும் செய்து முடிப்பவளே, நான் தூங்கும்போது என் அடியைத் தடவிக்கொண்டிருந்து, நான் தூங்கிய பின் உறங்கி, எனக்கு முன் உறக்கத்தினின்று எழும் இயல்பை உடையவளே! என்னை நீங்கிச் செல்கின்றாயோ! இனிமேல் இரவில் என் கண்கள் எங்ஙனம் உறங்கும்? 9

87. *திருக்குறளும் அகத்தியமும் பெறும் சிறப்பு*

குறுமுனிவன் முத்தமிழும் என்குறளும் நங்கை
சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்.

அகத்திய முனிவரின் இயல் இசை கூத்து என்னும் மூன்று தமிழ் இலக்கணமும், என் திருக்குறளும், உமையம்மையின் மகனான முருகப் பெருமானின் உபதேசத்தின் பயனாகிய மக்களாகும்.

விளக்கம் : ஒரு சமயம் இடைக்காடர், ஒளவையார், திருவள்ளுவர்ஆகியவர் சந்தித்தனர். அப்போதுஇடைக்காடரும் ஒளவையாரும் திருவள்ளுவரை 'உம்நூல் எத்தகையது' என வினவ, அப்போது திருவள்ளுவர் இவ்வாறு கூறினார் எனவும் உரைப்பர்.

'நங்கை சிறு முனிவன்' என்பது உடைய நங்கையின் மகனான சடகோபரைக் குறிக்கும் எனவும், 'வாய்மொழி' என்பது அவரது திருவாய் மொழி எனவும் உரைப்பதுண்டு. 10

4. இடைக்காடர் பாடல்கள்

88. *சடகோபரின் வாய்மொழி வேதமே!*

ஐம்பொருளும் நாற்பொருளும் முப்பொருளும் பெய்தமைத்த
செம்பொருளை எம்மறைக்கும் சேண்பொருளைத்—தண்குருகூர்ச்
சேய்மொழியது என்பர் சிலர்யான் இவ்வுலகில்
தாய்மொழியது என்பேன் தகைந்து

கடவுளின் ஐந்து வடிவத்தையும், நான்கு வகைப்பட்ட உறுதிப்பொருளையும், இறைவன் உயிர் உலகம் என்ற மூன்று

பொருளையும் அமைத்துப் பாடப்பட்ட இறைவரைப் பற்றிக் கூறும் பாடலை, எல்லா வேதங்களுக்கும் அப்பாற்பட்ட பொருளைக் கூறும் நூலை, குருகூரில் அவதரித்த குழந்தையின் திருவாக்கு என்று சிலர் கூறுவர்; நான் அவர்கள் சொல்லைமறுத்து அது இந்த உலகத்தின் அன்னை சொல்லாகிய வேதம் என உரைப்பேன்.

விளக்கம் : இறைவனின் ஐந்து வடிவங்கள்: திருமாலின் பரமபத இருக்கை, பாற்கடலில் இருத்தல், அவதாரங்கள், வியாபகங்கள், உருவத் திருமேனி என்பன. நாற்பொருள்-அறம், பொருள், இன்பம், வீடு. முப்பொருள் - சித்து, அசித்து ஈச்வரன். 1

89. திருவாய் மொழியின் சிறப்பு

சேய்மொழியோ தாய்மொழியோ செப்பில் இரண்டும் ஒன்றே;
வாய்மொழியை யாரும் மறைஎன்பர்—வாய்மொழிபோல்
ஆய்மொழிகள் சாலஉள எனினும் அம்மொழியும்
சாய்மொழிய என்பேன் தகைந்து.

சேய்மொழி என்று கூறினாலும் தாய்மொழி என்று கூறினாலும் இரண்டும் ஒன்றையே குறிப்பதாகும். திருவாய் மொழியை எவரும் வேதம் என வுரைப்பர்; திருவாய் மொழியைப்போல ஆராயத் தக்க நூல்கள் பல உள்ளன; என்றாலும் அதனை மறுத்து, அந்த நூல்கள் அனைத்தும் திருவாய்மொழியின் சார்பான மொழிகளை உடையன என்று நான் சொல்லுவேன். 2

90, வையக்கோனாரின் தொல்லை

ஆற்றங் கரையின் அருகுஇருக்கும் மாமரத்தில்
காக்கை இருந்து ககக௭னக்—காக்கைதனை
எய்யக்கோல் இல்லாமல்.........என்றானே
வய்யக்கோ னாரின் மகன்.

ஓர் ஆற்றங்கரைக்கு அருகில் இருக்கும் மாமரத்தில் காக்கை இருந்து 'கா, கா, கா' என்று கரைந்தது; அதைக் கேட்ட வையைக் கோன் என்பவனுடைய மகன், காக்கையின் மேல் எய்வதற்கு அம்பு இல்லாமல் ஆயுத ஓசையுடன் கூடிய நகர ஒலியினை உண்டாக்கினான்.

5. மதுரைச் சொக்கநாதர் பாடல்கள்

91. வண்டே! உண்மையைச் சொல்

கொங்குதேர் வாழ்க்கை அம்சிறைத் தும்பி!
காமம் செப்பாது கண்டது மொழிமோ!
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறிஎயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே.

தேனை ஆராய்ந்து சேர்க்கும் வாழ்கையை யுடைய அழகிய சிறகை உடைய தும்பியே! நீ, பழகிய காரணத்தால் பட்ச பாதம்இல்லாமல், நேரே தெரிந்ததை உள்ளவாறு சொல்வாயாக! மயில் போன்ற சாயலும் பொருந்திய பற்களும் கொண்ட கற்புடை மங்கையின் கூந்தலைவிட நறுமணம் கொண்ட மலர்கள் நீ அறிந்தவைகளுள் உள்ளனவோ?

விளக்கம் : சண்பக பாண்டியன் என்பான் தன் மனைவியின் கூந்தலில் மணம் இருப்பதை அறிந்தான். அறிந்தவன், கூந்தலுக்கு இயற்கையான மணம் உண்டோ என ஐயம் கொண்டான். அதைத் தெளிந்து கொள்ள வேண்டி, தன் மனத்திலிருப்பதை அறிந்து பாடுபவர்க்கு ஆயிரம் பொன் அளிப்பதாகச் சங்கப் புலவர்க்கு அறிவித்தான். இச்செய்தியை அறிந்த 'தருமி' என்ற அந்தணன், தான் அப்பொன்னைப் பெற விரும்பி இறைவனிடம் பாடல் இயற்றித் தருமாறு வேண்டினான். இறைவனும் இப்பாடலை இயற்றித் தந்தான். இப்பாடலில் நக்கீரன் குறை கூறினான். அவரைக் கண்டிப்பதற்காக இறைவனே அந்தணர் வடிவில் வந்தனன் என்பது வரலாறு. 1

92. சேரமான் பெருமாள் நாயனாருக்கு எழுதிய முடங்கல்

மதிமலி யுரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவும் பானிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிந்திடும் மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு;
ஒருமையின் உரிமையின் உதவி அணிதிகழ்
குருமா மணிதிகழ் குலவிய குடைக்கீழ்ச்

செருமா உகைக்கும் சேரலன் காண்க;
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன்; தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்;
மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே.

சந்திரன் தவழும் மதிலையும் மாடங்களையும் உடைய கூடலில் தங்கிய பால் போன்ற வெண்மை நிறங்கொண்ட சிறகுகளை உடைய அன்னங்கள் பொருந்திய சோலை சூழ்ந்த திருவால வாய்ப் பதியில் எப்போதும் இருக்கும் சிவனுகிய நான் தெரி விக்கும் செய்தி; பருவ காலத்து மேகத்தைப் போன்று தன் னிடம் வரும் புலவர்களுக்கு மனம் இசைந்து பொருள்களைத் தந்து, கொற்றக் குடையின் கீழ் இருந்து போரில் யானையை நடத்தும் சேரமன்னனே! நீ இம் முடங்கலைக் காண்பாயாக! பண்ணமைந்த யாழை வாசிக்கும் பாணபத்திரன் என்ற பெயரை யுடையவன் உன்னைப் போலவே என்னிடம் அன் புடையவன் ஆவான்; அவன் நின்னைக் காண வருகின்ருன்; அவனுக்குச் சிறந்த பொருளைத் தந்து இங்கே வருமாறு அனுப்புவாயாக! 2

93. என் பாடலில் கீரனோ குறை காண்பவன்?

அங்கம் வளர்க்க அரிவாளின் நெய்தடவிப்
பங்கப் படஇரண்டு கால்பரப்பிச்—சங்கதனைக்
கீருகீர் என்றுஅறுக்கும் கீரனோ என்கவியைப்
பாரில் பழுதுஎன் பவன்?

தன் உடலை வளர்ப்பதற்காக வாளில் நெய்யைத் தடவி இரண்டு கால்களையும் விரித்து அமர்ந்து, சங்கை அறுக்கும் கீரனோ (நக்கீரனோ) என் பாட்டில் குறை இருக்கின்றது என்று சொல்லக் கூடியவன்? 3

94. சங்கரர்க்குக் குலம் ஏது?

சங்கறுப்பது எங்கள்குலம், சங்கரர்க்கு அங்கு ஏதுகுலம்
பங்கமுறச் சொன்னுல் பழுதாமோ;—சங்கை
அரிந்துண்டு வாழ்வோம்; அரனுரைப் போல
இரந்துண்டு வாழ்வோம் இனி.

சங்கை அறுத்து வாழ்வது எங்கள் குலத்துக்குரிய தாகும்; ஆனுல், சிவனுக்குக் குலம் ஏது? உள்ள குறையைப்

பொருத்தமாகச் சொன்னல் அது தவருகுமோ? சங்கை அறுத்து அதனல் உண்டு வாழ்கின்ருேம்? ஆனல், இனிச் சிவபெருமானைப் போல யாசித்து உண்டு வாழமாட்டோம். 4

6. திருஞானசம்பந்த நாயனுர் பாடல்

95. உயிர் மட்டும் கொண்டு வந்தாள்!

கடியுண்ட நெடுவாளை கராவில் தப்பிக்
கயத்துக்குள் அடங்காமல் விசும்பில் பாய
அடியுண்ட உயர்தெங்கின் பழத்தால் பூகம்
அலையுண்டு குலைசிதறும் ஆலி நாடா!
படியுண்ட பெருமானைப் பறித்துப் பாடிப்
பதம்பெற்ற பெருமானே, தமியேன் பெற்ற
கொடிஒன்று நின்பவனிக்கு எதிரே சென்று
கும்பிட்டாள் உயிர்ஒன் றும்கொடு வந்தாளே.

தன்னைக் காத்துக் கொள்ள எண்ணிய வாளைமீன் முதலை வாயினின்று தப்பி ஓடிக் குளத்தில் தங்காமல் வானத்தில் பாய்ந்தது; அம் மீன்கள் பாய்ந்ததால் தாக்கப்பட்ட தென்ன மரத்தின் நெற்றுக்கள் கீழே விழ, அவற்ருல் அசைவுற்றுக் கமுகு மரங்கள் குலைகளைச் சிந்தின; இத்தகைய இயல்புடைய திருவாலி நாட்டவனே! இந்த வுலகத்தை விழுங்கிய திருமாலை, அவர் அந்தண கோலத்தில் வந்தபோது வழிப்பறி செய்து, பின் அவர் இன்னர் அறிந்ததும் அவரைப புகழ்ந்து பாடிய அவரது திருவடியை அடைந்தவனே! நின் ஊர்கோலம் வரும்போது அதற்கு எதிராகச் சென்று என்னுடைய கொடியைப் போன்ற பெண் வணங்கினுள்; அப்போது அவளுடைய உள்ளமும் உடலும் உன் வசமாகி விட்டன; ஆதலால் உயிரை மட்டும் என்னிடம் கொண்டு வந்தாள்.

விளக்கம் : திருமங்கையாழ்வார் வழிச் செல்பவரை எல்லாம் மறித்துப் பொருளைப் பறித்துத் திருமால் அடியவர்க்குத் தருவது வழக்கம். ஒருகால் திருமாலே அந்தணர் வடிவத்தில் வந்தார். அவரையும் வழிப்பறி செய்தார். பின் அவர் மந்திரம் சபிப்பதைக் கண்டு தமக்கும் அதை உபதேசிக்குமாறு ஆழ்வார் வேண்டினுர். அவரும் அவ்வாறே உபதேசம் செய்த போது ஆழ்வார் உண்மை யுணர்ந்து திருமாலைப் பாடி உய்வு பெற்ருர் என்பர்.

7. திருமங்கையாழ்வார் பாடல்

96. இப்பெண்ணை மகிழச் செய்வதும் நும் கடனே

வருக்கை நறுங்கனி சிதறிச் செநதேன் பொங்கி
மடுக்கரையில் குளக்கரையில் மதகில் ஓடப்
பெருக்கெடுத்து வண்டோலம் செய்யும் காழிப்
பிள்ளையார் சம்பந்தப் பெருமாள் கேளீர்!
அருள்குலவு மயிலைதனில் அனலால் வெந்த
அங்கத்தைப் பூம்பாவை ஆக்கி னோம்என்று
இருக்குமது தகவன்று நிலவால் வெந்த
இவளையும்ஓர் பெண்ணுக்கல் இயல்பு தானே.

பலாமரம் தன் பழங்களைச் சிதறுவதால் ஒழுகிய தேன் மிகுதிப் பட்டுச் சிறு குளக்கரைகளிலும் பெரிய குளக்கரை களிலும் ஓடுமாறு வெள்ளமாகப் பெருகிப் பரவுகின்றது; வண் டுகள் ஒலிக்கின்றன: இத்தகைய இயல்புடைய சீகாழியில் வாழும் திருஞான சம்பந்தப் பெருமானே, கேட்பீராக! சிவ பெருமானின் அருள் விளங்கும் மயிலாப்பூரில் தீயால் சுடப் பட்ட எலும்பைப் பூம்பாவை என்ற பெண்ணாக மாற்றி விட் டோம் என்று நினைத்திருப்பது போதுமானதன்று; உம்மைக் கண்டு உம் அழகாகிய நிலவொளியாம் வெப்பத்தால் வாட் டம் அடைந்த இப்பெண்ணையும் மகிழ்ச்சியுடைய மங்கையாக ஆக்குதல் உம் கடமையே யாகும். *1*

8. சங்கத்தார் பாடல்கள்

97. சங்கப் புலவர் நம்மாழ்வாரைப் புகழ்ந்து பாடியது.

சேமம் குருகையோ செய்யதிருப் பாற்கடலோ
நாமம் பராங்குசனோ நாரணனோ—தாமம்
துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கோ
உளவோ பெருமான் உனக்கு.

பெருமானே! உனக்குப் பாதுகாவலாக உள்ள இடம் திருக்குருகூரோ? சிறந்த பாற்கடலோ? நின் திருப்

பெயர் பராங்குசன் என்பதோ? நாராயணன் என்பதோ? நினக்கு விருப்பமான மாலை துளசி மாலையோ? மகிழம்பூ மாலையோ? நினக்கு இருப்பன கைகள் இரண்டோ? நான்கோ? 1

98. சங்கப் புலவரை நோக்கிப் பாண்டியன் 'பஞ்ச காலத்தில் எங்கிருந்தீர்' என வினவினன்! அப்போது அவர்கள் உரைத்தது.

காலை ஞாயிறு கடுங்கதிர் பரப்பி
வேலையும் குளனும் வெடிபடச் சுவறித்
தந்தைதாய் மக்கள் முகம்பா ராமல்
வெந்த சாகமும் வெவ்வே றருந்திக்
குணமுடன் நாளும் கொடுத்துற வாண்ட
கணவனை மகளிர் கண்பா ராமல்
பழுத்த வுடலம் பசையற வற்றி
விழித்த விழியெலாம் வேற்றது விழியா
அறவுரை அன்றி மறவுரை பெருகி
உறவற அன்றி வூழி காலத்தில்
தாயி லார்க்குத் தாயே ஆகியும்
தந்தை யிலார்க்குத் தந்தையேயாகியும்
இந்த மாநிலத்து இடுக்கண் தீர
வந்து தோன்றிய மாநிதிக் கிழவன்
நீலஞ் சேரி நெடுமா லானுன்
ஆலஞ் சேரியின் ஆன்ற சடையன்
மறந்தும் பிறர் கேடு நினையான்
பிறர்பொருள் வவ்வான் வாய்மையும் குன்றான்
இறந்து போகாது எம்மையும் காத்தான்
வருந்தல் வேண்டாம் வழுதி
இருந்தனம் இருந்தனம் இடர்கெடுத் தனனே.

பாண்டியனே! நாங்கள் பஞ்சம் வந்த காலத்தில் என்ன செய்தோம் என எண்ணி வருந்த வேண்டா; கோடைக் காலத்தில் கதிரவன் வெப்பமாக ஒளியை வீசுவதால், கடலும் குளமும் அடி நிலம் பிளவுபடும் வகையில் வற்றிடவும், பெற்றோர் தம் மக்களைப் பாராமல் வெந்த கீரையைத் தனித்தனியே உண்ணவும், நாள்தோறும் நற்குணத்துடன் உணவை ஆக்கி நட்புக்

காட்டிய பெண்டிரை ஆடவர் கண்ணுல் பார்க்காமல் இருக்கவும், வயதால் முதிர்ந்த வுடல் சத்தின்றி உலர்ந்து; பார்க்கும் திறமையுடைய கண்கள் பார்வையை யிழந்திடவும், அறச் சிந்தனையுடைய சொல் நீங்கிப் பகைச் சொற்கள் மிகுந்து உறவு என்பது நீங்கிடும்படியாகக் கடுஞ்சொற்களைப் பேசவும் காரணமான உலக இறுதிக் காலம் போன்ற பஞ்ச காலத்தில், ஆலஞ்சேரி சடையன் என்பவன் தாய் இல்லாதவர்களுக்குத் தாயாகியும், தந்தை இல்லாதவர்களுக்குத் தந்தையாகியும் இவ்வுலகத்தில் வறுமைத் துன்பம் நீங்குமாறு நிலஞ்சேரியில் வீற்றிருக்கும் திருமாலைப் போன்று காக்கும் தன்மையனுக விளங்கினுன்; அவன் மறந்துங்கூட மற்றவர்க்குத் தீது செய்ய நினைக்காதவன்; பிறர் பொருளைக் கவராதவன்; வாய்மையினின்று தவருதவன்; பஞ்ச காலத்தில் இறந்து போகாத வண்ணம் உணவு முதலியவற்றை அளித்து எங்களைக் காப்பாற்றினுன். ஆதலால், அங்கு நீண்ட காலம் இருந்தோம்; அவன் அக்காலம் முழுவதும் எங்கள் துன்பத்தைக் கெடுத்தான். 2

9. திருமழிசை ஆழ்வார் பாடல்கள்

99. மணிவண்ணு, நீ கிடக்க வேண்டா!

(பல்லவ மன்னன் திருமழிசை ஆழ்வாரின் மாணவனுகிய கணிகண்ணனை நோக்கித் தன்னைக் குறித்துப் பாடல் பாட வேண்டும் என்ருன். கணிகண்ணன் மறுத்தான். ஆதலால் மன்னன் அவனைத் தன் நாட்டை விட்டு வெளியேறுமாறு கட்டளையிட்டான். அப்போது திருமழிசை ஆழ்வார் பாடிய பாடல்.)

கணிகண்ணன் போஎன்ருன்; காமருபூங் கச்சி
மணிவண்ணு நீஇங்கு இராதே;—துணிவுடனே
செந்நாப் புலவன்யான் செல்கின்றேன்; நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்.

என் மாணவனுன கணிகண்ணன் என்பவனைப் பல்லவ மன்னன் வெளியே செல்லப் பணித்தான்; அதை என்னை வெளியே செல்லுமாறு சொன்னதாகவே எண்ணுகின்றேன்; யாவரும் விரும்பும் அழகிய காஞ்சியில் வீற்றிருக்கும் நீலமணியைப் போன்ற கரிய திருமாலே, இனி, நீ இங்கு இருத்தல் வேண்டா; மனவுறுதியுடன் செந்நாப் புலவனுன நானும் போகின்றேன்.

நீயும், படத்தையுடைய பாம்பாகிய பாயைச் சுருட்டிக் கொண்டு என்பின் வருவாயாக! 1

100. மணிவண்ணா நீ கிடக்க வேண்டும்!

(பல்லவ மன்னன் திருமால் வெளியே செல்வதை உணர்ந்து திடுக்கிட்டு ஆழ்வாரைப் பொறுத்தருளுமாறு வேண்ட, அவ்வளவில் அவரும் காஞ்சிக்குத் திரும்பும்போது இதனைப் பாடினார்.

கணிகண்ணன் போக்கொழிந்தான்; காமருபூங் கச்சி
மணிவண்ணா, நீகிடக்க வேண்டும்;—துணிவுடைய
செந்நாப் புலவனும் பேர்க்கொழிந்தேன்; நீயும்முன் றன்
பைந்நாகப் பாய்படுத்துக் கொள்.

என் மாணவனான கணிகண்ணன் என்பவன் இங்கிருந்து நீங்கிச் செல்வதைக் கைவிட்டான்; அதனால் யானும் செல்வதைக் கைவிட்டேன்; எனவே, காஞ்சியில் வீற்றிருக்கும் திருமாலே, நீயும் உன் பாம்பாகிய படுக்கையை விரித்துப் படுத்துக் கொள்வாயாக.

விளக்கம்: இங்ஙனம் ஆழ்வார் பாடியதும் திருமாலும் திரும்பக் கோயில் கொண்டருளினர். ஆழ்வார் சொன்னபடியே செய்த காரணத்தால், திருமாலுக்குச் 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' எனப்பெயர் வழங்குகிறது.

10. ஒட்டக்கூத்தர் பாடல்கள்

101. செங்குந்தர் உயிர் பெறச் செய்வாய்!

கலைவாணிநீ உலகில் இருப்பதுவும் கல்வியுணர் கவிவல்
லோரைத்
தலையாகக் காப்பதுவும் அவர்நாவில் வாழ்வதுவும் சத்தியமே
அன்றோ!
சிலைவாணன் நாவிருந்து ஆயிரம் புயங்கள் துணிந்தும் உயர்
சீவன் உற்றான்
தலையாவி கொடுத்திடும் செங்குந்தர் உயிர் பெற்றிடநீ தயை
செய்வாயே.

கலைமகளே! நீ அன்பர்க்கு அருள் செய்வதற்காக இவ்வுலகில் தங்கியுள்ளதும், கற்றுவல்ல புலவரைக் காப்பதும்,-

அவரது சொல்லில் வீற்றிருப்பதும் உண்மை யன்றோ! வில்லாற்றலில் வல்ல வாணாசுரனின் நாவில் வீற்றிருந்ததால் அவனுடைய ஆயிரம் தோள்கள் வெட்டப்பட்ட பின்னரும் உயிர் நீங்கப் பெறாமல் பிழைத்திருந்தான். எனவே, பாட்டுக்காகத் தலையையும் உயிரையும் பரிசாகத் தந்த செங்குந்தர் மீண்டும் உயிர் பெற அருள் செய்ய வேண்டும். 1

விளக்கம்: செங்குந்தர், தம் குலத்தின் மேல் நூல் ஒன்று பாட வேண்டும் என்பதற்காகத் தம் தலைகளைப் பரிசாகத் தந்தனர். அத்தலைகளின் மீது அமர்ந்து ஒட்டக் கூத்தர் இப்பாடலைப் பாடினார்.

102. செங்குந்தரைப் புகழ்ந்து பாடியது

நிலைதந்தார் உலகினுக்கும் யாவருக்கும் மானமதை
நிலைக்கத் தந்தார்;
கலைதந்தார் வணிகருக்குச் சீவனம்செய் திடஎன்றே
கையில் தந்தார்;
விலைதந்தார் தமிழனுக்குச்; செங்குந்தர் என்கவிக்கே
விலையா கத்தம்
தலைதந்தார்; எனக்கும் ஒட்டக் கூத்தன்எனப் பெயரினையும்
தாம்தந்தாரே.

செங்குந்தர்கள் இவ்வுலகத்தில் வாழும் மக்கள் அனைவருக்கும் ஆடை தருவதால் மானத்தைத் தந்தார்கள்; வணிகர்கள் விற்பதற்காக ஆடையைத் தந்தார்கள்; அவ்வாணிகர் பொருள் தேடிப் பிழைப்பதற்காகத் துணியாகிய வாணிகப் பொருளைத் தந்தார்கள்; புலவர்களுக்கு அவர்கள் பாடிய பாடல்களுக்கு ஏற்பப் பொருளைத் தந்தார்கள்; என் பாடலுக்குப் பரிசாகத் தம் தலைகளைத் தந்தார்கள்; நான் தலைகள் ஒட்டுமாறு பாடியதால் எனக்கு 'ஒட்டக் கூத்தன்' என்ற பெயரையும் அளித்தார்கள்.

(புலவருக்கு முதலில் இருந்த பெயர் கூத்தர். தலைகள் ஒட்டுமாறு பாடியதால் 'ஒட்டக் கூத்தர்' எனப்பட்டார்.) 2

103. இவனுக்கேன் கொடியும் காளமும்?

(புலவன் ஒருவனுக்குக் கொடி முதலியவற்றைச் சோழன் தந்த போது பாடியது.)

பத்துக் கொண்டன் திக்கும் பதறிப் போய்உலையப்
பைம்பொன் தாரகை சிந்தப் பகிரண் டத்திடைநீள்

மத்துக் கொண்டு மதிக்கும் திரையாழி நெடுமால்
வடிவாகிப் புவிகைக்கொண் டருள்மாறு பரனு;
முத்துப் பந்தரின் நிற்கும் குருளைக் கும்சினவேல்
முருகற் கும்பொதி யைக்கோ முனிவற் குஞ்சடிலக்
கொத்தற் கும்பது மக்கொந்து அயனுக் கும்அலதுஇக்
கூழைத் தண்தமி ழுக்கேன் கொடியும் காளமுமே?

பத்துத் திக்குகளும் அஞ்சி நடுங்கவும், நட்சத்திரங்கள் விழுந்திடவும், மேலே உள்ளே பெரிய அண்டத்தின் உச்சிவரை உயர்ந்த மந்தரமலை என்ற மத்தை நாட்டிக் கடையப்படும் பாற்கடலில் பள்ளி கொள்ளும் திருமாலின் அவதாரமாகி உலக முழுவதையும் ஆள்கின்ற சோழனே! முத்துப் பைந்தரைக் கொண்ட திருஞான சம்பந்தருக்கும் வேற்படையை யுடைய முருகப் பெருமானுக்கும், பொதியமலை அகத்திய முனிவனுக்கும், சடையையுடைய சிவபெருமானுக்கும், தாமரையில் வீற்றிருக்கும் நான்முகனுக்கும் உரியதே அல்லாமல், குளிர்ந்த தமிழைப் பாடும் இந்தச் சிறு புலவனுக்குக் கொடியும் எக்காளமும் எதற்காக வீணே தருதல் வேண்டும்? 3

104. நாமடந்தை நூல் வாங்கும் நாள்

(ஒட்டக்கூத்தர் கம்பரைப் பற்றிப் பாடிய சரமகவி)

இன்றல்லோ கம்பன் இறந்தநாள்? என்கவிதை
இன்றல்லோ ராசசபைக்கு ஏற்கும்நாள்?—இன்றல்லோ
பூமடந்தை வாழப் பூவிமடந்தை வீற்றிருக்க
நாமடந்தை நூல்வாங்கும் நாள்?

கம்பன் இறந்த நாள் இன்று அன்றோ? என் கவியும் அரசசபையில் ஏற்றுக் கொள்ளப்படும் நாள் இன்றன்றோ? இலக்குமி வாழவும் புவி மடந்தை சிறப்பாக விளங்கவும் கலைமகள் மங்கல நாணை இழக்கவும் உரிய நாள் இன்றன்றோ? 4

105. ஒட்டக்கூத்தர் கம்பரைப் புகழ்தல்

இன்றல்லோ கம்பன் எழுந்தநாள்? என்கவிதை
இன்றல்லோ ராசசபைக்கு ஏறுநாள்?—இன்றல்லோ
பூமடந்தை வாழப் புவிமடந்தை வீற்றிருக்க
நாமடந்தை நூல்பூட்டும் நாள்?

கம்பன் புகழுடன் வெளிப்பட்ட நாள் இன்றன்றே? என் கவி அரசனுடைய அவைக்களத்தில் ஏற்காத நாள் இன்றன்றே! தாமரையில் விற்றிருக்கும் இலக்குமி வாழவும் பூமடந்தை மகிழ்ந்து இருக்கவும் கலைமகள் மங்கல நாணை அணியும் நாள் இன்றன்றே? 5

106. கம்பைக் காவலன்மேல் பாடிய பாடல்

மாங்குயி லால்வில்லி தன் அம்பி னால்கம்ப வாரிதியால்
ஓங்கிய பூமெல் அணைஒன்றி னாலும்பர் ஊர்மதியால்
தீங்குறு மேநல் எழில்குன்று மேகொம்பு சீர்கெடுமே
காங்கைய னேசொல்அ களங்கனே கம்பைக் காவலனே

கம்பை என்னும் நாட்டின் மன்னனே, கங்கையின் மகனான வேளாளனே! மாமரத்திலிருந்து குயில் கூவும் ஓசையைக் கேட்டும், மன்மதன் எய்த அம்பாலும் கடல் ஒலியைக் கேட்டும், பூக்கள் சேர்ந்த மெல்லிய படுக்கையைச் சேர்வதாலும், சந்திரனின் ஒளியாலும், என் மகள் துன்பத்தை அடைகின்றாள்; அவளுடைய அழகு குன்றுகின்றதே; சிறப்புக் கெடுகின்றதே; அவள் உயிர் பிழைக்கும் வழியைச் சொல் வாயாக! 6

107. கண்ட சுக்கி

கரண்ட கண்டத்தொனிக்கு அஞ்சிய மான்கருங் கங்குலிலே.
திரண்ட வெள்ளத்தில் பிணம்மீது சென்றனள் சேர்ந்தவனை
அரண்ட இன்பம் கொடுமீளக் கராப்பற் றஅம்கொலுசால்
குரண்ட கன்னத்தில் உதைத்தனள் காணங் குலோத்துங்கனே.

குலோத்துங்க மன்னனே! நீர்க்காக்கையின் குரலால் விடியற் காலம் வந்தது என்று அஞ்சிய மங்கை, இருள மிக்க இரவில் ஆற்று வெள்ளத்தில் பிணத்தையே தோணியாகக் கொண்டு கடந்து கள்ளக் காதலனைக் கூடி அச்சத்துடன் கூடிய இன்பத்தைப் பெற்றாள்; திரும்ப வரும்போது முதலை அவள் காலைப் பற்றிக் கொள்ளத் தான் கால் சதங்கையால் முதலையின் கன்னத்தில் உதைத்தாள். 7

108. சோழனின் பெருமை

கோரத்துக்கு ஒப்போ கனவட்டம் அம்மானை?
கூறுவதும் காவிரிக்கு வையையோ அம்மானை?

ஆருக்கு வேம்புநிகர் ஆகுமோ அம்மானே?
    ஆதித்த னுக்குநிகர் அம்புலியோ அம்மானே?
வீரர்க்குள் வீரன்ஒரு மீனவனே அம்மானே?
    வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ அம்மானே?
ஊருக்கு உறந்தைநிகர் கொற்கையோ அம்மானே?
    ஒக்குமோ சோணாட் டுக்குப்பாண்டிநாடு அம்மானே?

(ஒட்டக்கூத்தர் சோழனுக்குப் பெண் தருமாறு பாண்டியனிடம் கேட்டார். பாண்டியன் 'சோழனின் பெருமை என்ன?' என்றான். அப்போது கூத்தர் உரைத்தது)

சோழரின் 'கோரம்' என்ற பெயருடைய குதிரைக்குக் 'கனவட்டம்' என்ற பெயருடைய பாண்டியரின் குதிரை நிகராகுமோ? நீர் மிகுந்த காவிரி ஆற்றுக்கு நீர் இல்லாத வையை ஆற்றை ஒப்பாகச் சொல்லலாமோ? பாண்டியரின் கசப்புள்ள வேப்பமாலை குளிர்ச்சியுடைய ஆத்தி மாலைக்கு நிகராகுமோ? பாண்டியரின் குல முதலாகிய சந்திரனைச் சோழரது குல முதலாகிய சூரியனுக்கு ஒப்பாகச் சொல்லலாமோ? வீரர்களுள் வீரம் உடையவன் சோழனே, பாண்டியனே? வெற்றியுடைய சோழனின் புலிக் கொடிக்குப் பாண்டியரின் மீன் கொடியோ இணையாவது? சோழரின் உறையூருக்குப் பாண்டியரின் கொற்கையை ஒப்பாக உரைக்கலாமோ? இத்தகைய சிறப்புகளால் சோழநாட்டுக்குப் பாண்டிய நாடு ஒப்பாகுமோ? 8

109. பாண்டியர் பெருமை

(மேற்கண்டவாறு ஒட்டக்கூத்தர் பாடிய பாடலைக் கேட்ட புகழேந்திப் புலவர் பாடிய பாடல்)

திருநெடுமால் அவதாரம் சிறுபுலியோ அம்மானே?
    சிவன்முடியில் ஏறுவதும் செங்கதிரோ அம்மானே?
ஒருமுனிவன் நேரியிலோ உரைதெளிந்தது அம்மானே?
    ஒப்பரிய திருவிளையாட்டு உறந்தையிலோ அம்மானே?
கரைஎதிர்ஏடு ஏறியது காவிரியோ அம்மானே?
    கடிப்பகைக்குத் தாகதிஅம் கண்ணியோ அம்மானே?
பரவைபடிந் ததும்சோழன் பதந்தனிலோ அம்மானே?
    பாண்டியனார் பராக்கிரமம் பகர்எளிதோ அம்மானே?

திருமால் எடுத்த அவதாரம் சிறுபுலி அவதாரமோ, மச்ச அவதாரமோ? சிவபெருமானின் முடியில் அணியப்பட்டிருப்பது சூரியனோ, சந்திரனோ? அகத்திய முனிவன் தமிழ் ஆய்ந்தது பொதிய மலையிலோ, அல்லது நேரி என்ற சோழ நாட்டு மலையிலோ? சிவபெருமான் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைச் செய்தது மதுரையிலா, அன்றி உறையூரிலா? ஞானசம்பந்தப் பெருமான் விட்ட ஏடு நீருக்கு எதிராகச் சென்றது வையை ஆற்றிலோ? காவிரி ஆற்றிலோ? பேய் முதலியவற்றை விலக்கிக் காவல்செய்வதற்கு உதவுவது வேம்போ, ஆத்தியோ? கடலானது வந்து அடியில் வணங்கியது பாண்டியனின் காலிலோ சோழனின் காலிலோ? இத்தகைய சிறப்புகளால், பாண்டியரின் வன்மை அளவிட்டுச் சொல்ல இயலுமோ? இயலாது. 9

110. ஒட்டக்கூத்தரின் அடியைச் சூடுபவன் சோழன்

(சோழன் உலா வந்தபோது, அவனைப் புகழ்ந்து ஒட்டக்கூத்தர் இரண்டடி வரை பாட, அதை முடிக்க விடாமல் பின் இரண்டடியைச் சோழனே பாடி முடித்தான்.)

ஆடும் கடைமணி நாவசை யாமல் அகில மெங்கும்
நீடும் குடையைத் தரித்தபிரான் இந்த நீணி லத்தில்
பாடும் புலவர் புகழொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடும் குலோத்துங்க சோழன்என்றே என்னைச் சொல்லுவரே.

(ஒட்டக்கூத்தர்) இயல்பாக அசையும் அரண்மனை வாயிலில் கட்டப்பட்ட மணி, குறை வேண்டி வந்து அதனை அடிக்கச் செய்யாமல் உலகம் எல்லாம் பரவியுள்ள குடையைக் கொண்டுள்ள வள்ளல் (எனப்பாட, உடனே சோழன்) இந்த வுலகத்தில் புலவர் அனைவரும் பாராட்டும் ஒட்டக் கூத்தரின் திருவடிகளைத் தலையில் சூடிய சோழன் என்றே என்னை அனைவரும் சொல்லுவர் (எனப்பாடி முடித்தான்.) 10

111. சோழ மன்னனின் களிற்றினது கால்களில் இருந்த தளை யவிழ்த்ததன் காரணம்

இன்னம் கலிங்கத்தில் வேந்தர்உண்டு என்றோ
தென்னன் தமிழ்நாட்டைச் சீறியோ—சென்னி
அகளங்கா! உன்தன் அயிரா வதத்தின்
நிகளங்கால் விட்ட நினைவு.

குற்றமற்ற சோழனே! உன் பட்டத்து யானையின் காலில் இட்ட சங்கிலியானது எடுக்கப்பட்டதன் காரணம், இன்னும் கலிங்க நாட்டில் பகை இருக்கின்றது என்பதுதானோ? அல்லது பாண்டிய மன்னனின் நாட்டின்மீது படையெடுக்கும் எண்ணம் ஏற்பட்டதால் உண்டாண சினம் காரணமோ? 11

112. தளை அவிழ்ப்பதன் விளைவு

தென்னவன் தென்னர் பெருமான் திறல்மதுரை
மன்னவன் கோக்களிற்றின் வல்லிக்கும்—பொன்னிநாடு
ஆலிக்கும் வேந்தாம் அபய குலன்மகளிர்
தாலிக்கும் ஒன்றே தளை.

தெற்கில் வாழும் மக்களுக்குத் தலைவனான பாண்டியனது மதுரையில் வீற்றிருக்கும் மன்னனின் பட்ட யானையினது காலில் உள்ள தளைக்கும், காவிரி நாட்டில் மகிழ்வுடன் வீற்றிருக்கும் சோழனுடைய கற்புடை மகளிரின் தாலிக்கும் முடிப்பு ஒன்றே ஆகும்.

விளக்கம்: பாண்டியனது யானையின் கால்தளை அவிழ்த்து விட்டால் சோழனைத் தாக்கும். ஆதலால் சோழனின் குல மகளிர் தாலி அறுந்து போகும் என்பது கருத்து. 12

113 யானோ பித்தன்?

(ஒட்டக் கூத்தர் புகழேந்தியைப் 'பித்தன்' என்ற போது புகழேந்தி பாடியது.)

சத்தம் பயிலும் புலவோர் கதலித்தண் தோட்டம்புகும்
பித்தன் இவன்என்பர் என்னைக்கண்டால் பெருத்துப் பணைத்துத்
தத்தம் பிறகிடும்பார் வேந்தர் தங்கள் தடமகுட
சத்தம் அபசத்தங்காண் கங்குல் யானைச் சயதுங்கனே.

கரிய யானைகட்குத் தலைவனான வெற்றியுடைய சோழனே! மிகவும் பெரியவர்களாக இருந்தும், இவ்வுலக மன்னர்கள் உன்னைப் பார்த்து ஒருவருக்குப் பின்னர் ஒருவராகப் பின் வாங்குதலால் பெரிய முடிகள் ஒன்றுடன் ஒன்று தாக்குதலால் ஏற்படும் ஒலி இழிந்ததாகும். நல்ல ஒலியினது இலக்கணத்தை அறிந்தவர்கள் என்னைப் பார்த்தால் வாழைத் தோட்டத்துக்குள் செல்லும் பித்தன் இவன் எனக் கூறுவார்கள்.

விளக்கம்: பித்தம் கொண்டவர் வாழைத் தோட்டத்து நிழலில் இருத்தல், பித்தம் தெளிவதற்கு மருந்தாகும். 13

114. புகழேந்தி என் முன் நிற்பாரோ?

(ஒட்டக்கூத்தரால் புகழேந்தி சிறையில் வைக்கப்பட்டிருந்தார். அப்போது ஒருநாள் அரசன் பவனிவர, அவனைப் புகழேந்தி சிறைக்கூடத் தளத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்தார். மன்னன் புகழேந்தியைச் சுட்டி 'இவர் புலவரன்றோ?' என வினவிய போது, ஒட்டக்கூத்தர் பாடியது.)

மானிற்கு மோஇந்த வாளரி வேங்கைமுன் வற்றிச் செத்த
கானிற்கு மோஇவ் எரியும் தணல்முன் கனைகடலின்
மீனிற்கு மோஇந்த வெங்கண் சுருமுனம் வீசுபனி
தானிற்கு மோஇக் கதிரவன் தோற்றத்தில் தார்மன்னனே.

ஆத்தி மாலையை அணிந்த மன்னவனே! வரிகளையுடைய புலி போன்ற என் முன்னர் மானைப் போன்றவன் நிற்க இயலுமோ? கொழுந்து விட்டெரியும் தீயின் முன்னர் ஈரம் இல்லாமல் காய்ந்த அந்தக் காடு அழியாமல் இருக்குமோ? கொடிய சுருமீனான எனக்கு முன்னர், ஒலிக்கின்ற கடலில் உள்ள மீன்கள் தலைகாட்ட முடியுமோ? இந்தச் சூரியனான எனக்கு முன் பனித்துளி நிலைபெறுவது உண்டோ? (எனவே புகழேந்தி எனக்கு நிகரராகமாட்டான்.) 14

115. எனக்கு நிகராகான் ஒட்டக்கூத்தன்

(இதைக் கேட்ட புகழேந்தி அரசனை நோக்கி 'நான் வெட்டிப் பாடவோ! ஒட்டிப் பாடவோ' என, அரசன் 'ஒட்டிப் பாடு' என அங்ஙனமே பாடியது.)

மான்அவன் நான் அந்த வாளரி வேங்கைமுன் வற்றிச் செத்த
கான்அவன் நான்அவ் எரியும் தணல்முன் கனைகடலின்
மீன்அவன் நான்அந்த வெங்கண் சுருமுனம் வீசுபனி
தான்அவன் நான்அக் கதிரவன் தோற்றம் நற்றுார் மன்னனே.

மாலையை அணிந்த சோழ மன்னனே! அந்தப் புலவன் மானைப் போன்றவன், நான் அந்த மானைத் தாக்கும் வரிப் புலியாவேன். அவன் வற்றிக் காய்ந்த காடு, நான் அந்தக் காட்டை எரிக்கும் தீயாவேன். அவன் ஒலியுடைய கடலில் உள்ள சிறுமீன்; நான் அந்த மீனை விழுங்கும் சுரு மீன்

ஆவேன். அவன் விடியற் காலத்தில் பெய்யும் பனி: நான் அந்தப் பனியை ஓட்டுகின்ற கதிரவனின் உதயம் ஆவேன். 15

116. கதவைத் தானே திறக்கும் நின் கைகள்.

(புகழேந்தி சிறையில் அடைக்கப்பட்டிருந்ததால், அரசி சோழனிடம் ஊடல் கொண்டு, அவன் தன் பள்ளியறையை நாடி வந்தபோது கதவைத் தாளிட்டுக் கொண்டாள். ஆகவே, ஒட்டக் கூத்தரை அனுப்பி ஊடலைத் தீர்க்குமாறு சொன்னான். அப்போது ஒட்டக்கூத்தர் இக்கவியைப் பாடினார்.)

நானே இனிஉனை வேண்டுவது இல்லை; நளினமலர்த்
தேனே கபாடம் திறந்திடுவாய்; திறவா விடிலோ
வானேறு அனைய இரவிகு லாதிபன் வாயில் வந்தால்
தானே திறக்கும்நின் கையி தழாகிய தாமரையே.

தாமரையில் வீற்றிருக்கும் திருமகளைப் போன்றவளே! கதவைத் திறப்பாயாக! அவ்வாறு திறவாது போயினும், இனிமேலும் உன்னை வேண்டிக் கொள்வது தேவையற்றது. பகைவர்க்கு இடியைப் போன்ற சூரிய குல மன்னன் சோழன் நின் கதவின் முன் வந்தால் தாமரை இதழ் போன்ற நின் கையிதழ்கள், ஒருவரும் சொல்லாமல் தானே திறக்கும்.

விளக்கம்: இதைக் கேட்டதும் அரசி கதவில் இன்னொரு தாழையும் இட்டாள். எனவே 'ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' எனப் பழமொழியும் வழங்கலாகியது. 16

117. குடியில் பிறந்தவர் குற்றத்தைப் பொறுக்க மாட்டாரோ?

(புகழேந்திப் புலவரைச் சிறையில் வைத்திருப்பதே அரசியின் சினத்துக்குக் காரணம் என்பதை அறிந்த அவன், புகழேந்திப் புலவரைச் சிறையினின்று விடுவித்து, ஊடலைத் தீர்க்க அனுப்பினான். அச் சமயத்தில் புகழேந்தி இதனைப் பாடினார்.)

இழைஒன்று இரண்டு வகிர்செய்த நுண்ணிடை, ஏந்துவள்ளைக்
குழைஒன்று இரண்டு விழி அணங்கே கொண்ட கோபம்தணி;
மழைஒன்று இரண்டு கைமான பரணன்நின் வாயில் வந்தால்
பிழைஒன்று இரண்டு பொறாரோ குடியில் பிறந்தவரே.

நூலிழை ஒன்றை இரண்டு பகுதியாகப் பிரித்தால் அதன் ஒரு பகுதியைப் போன்ற மிகச் சிறிய இடையை யுடைய வளே! குழை அணிந்த காதுகளைத் தொடுமாறு நீண்ட இரு கண்களையுடையவளே! நீ கொண்ட சினம் தணியப் பெறுவாயாக! மேகத்தைப் போன்று வரையாமல் கொடுக்கும் இயல்புடைய, மானத்தை அணியாகக் கொண்ட நின் கணவன், நின் வாயிலில் வரின், உயர்ந்த குலத்தில் தோன்றிய உன்னைப் போன்ற பெண்டிர், ஒரு பிழை அல்லது இரு பிழைகளைப் பொறுத்துக் கொள்ள மாட்டார்களோ? 17

118. பிள்ளை மதியால் பேதை மதியிழந்தாள்!

(பாடலில் 'மூன்று பிறை' அமையுமாறு ஔவை பாடச் சொல்ல, இதை ஒட்டக் கூத்தர் பாடினுர்.)

வெள்ளத்து அடங்காச் சினவாளை வேலிக்கமுகின் மீதேறித்
துள்ளி முகிலைக்கிழித்து மழைத்துளி யோடுஇறங்கும்சோணுடா
கள்ளக் குறும்பர் குலம்அறுத்தகண்டா, அண்டர்கோபாலா;
பிள்ளை மதிகண்டு எம்பேதை பெரியமதி யும்இழந்தாளே.

பெருகி வரும் வெள்ளத்துக்கு அடங்காமல் எழும் சினங் கொண்ட வாளை மீன்கள், வேலியில் உள்ள பாக்கு மரத்தில் தாவி அங்கிருந்து மேலே குதித்து, மேகத்தைப் பிளந்து உள் புகுந்து பின் அம்மேகத்தின் மழை நீருடன் கீழே வரும் இயல் புடைய சோழ நாட்டவனே! நினக்குப் பணியாத சிறு மன்னரின் கூட்டத்தை அழித்த வாளையுடையவனே! இடை யரின் பசுக் கூட்டத்தைக் காத்த திருமாலைப் போன்றவனே! எனது பேதைப் பெண்ணுனவள் இளம் பிறையைக் கண்டு பேரறிவையும் இழந்து விட்டாள்.

விளக்கம் : மூன்று பிறை அமைவதற்குப் பதிலாக இரண்டு பிறையே இதில் உள்ளன. மன்னரைத் திருமாலின் அம்சமாகச் சொல்வது மரபு. 18

119. புகழேந்தியார் மூன்று பிறை அமையப் பாடுதல்

(ஒட்டக் கூத்தர் பாடிய பாடலில் ஔவையார் சொல்லியபடி மூன்று பிறை அமையவில்லை. ஆதலால் ஔவையார், 'ஒட்டா ஒருமதி (பிறை) கெட்டாய் எனப் பழித்துரைத்து விட்டு, புகழேந்தியாரை மூன்று பிறையமையப் பாடச் சொன்னுர். அவர் பாடிய பாடல் இது.)

பங்கப்பழனத்து உழுமுழவர் பலவின்கனியைப் பறித்ததென்று
சங்கிட்டுஎறியக் குரங்குஇளநீர் தனேக்கொண்டு எறியும்
தமிழ்நாடா;
கொங்கைக்கு அமரா பதியளித்த கோவே ராஜ குலதிலகா
வெங்கண்பிறைக்கும் கரும்பிறைக்கும் மெலிந்தபிறைக்கும்
விழிவேலே

சோறுடைய வயலில் உழும் உழவர், குரங்கு பலாப் பழத்தைப் பறித்து எறிந்ததற்காக, சங்குகளே எடுத்து அதன்மீது வீசவும், குரங்கு அதற்குப் பதிலாக இளநீர்க் கால்களை வீசும் இயல்புடைய நீர்வளம் மிக்க நாடனே! கொங்கு நாட்டு மன்னனை வென்று அவனுக்கு விண்ணுலகத்தைத்தந்தவனே! மன்னர்களுக்குத் தலைவனே! வெம்மையுடைய பிறைச் சந்திரனின் ஒளியாலும், கரும்பை வில்லாகக் கொண்ட மன்மதனாலும் உடல் தளர்ந்து வேல் போன்ற கண்களையுடைய இப்பெண் கண்ணீரைச் சிந்துகின்ருள்.

விளக்கம்: அம்பிறைக்கும் - அம்பு-'அப்பு' என்பதன் மெலித்தல் விகாரம். வெங்கண்பிறை, கரும்பிறை, மெலிந்த பிறைக்கும்—மூன்று பிறைகள் இதில் அமைந்துள்ளன. மெலிந்த பிறைக்கும்-மெலிந்து + அம்பு + இறைக்கும் எனப் பிரிக்க. 19.

120. வாலி திரௌபதியை மூக்கரிந்ததே பாரதம்!

(களி, என்ற கலம்பத்தின் உறுப்பு அமைய ஒரு பாடலைப் பாடுமாறு சோழன் கூற, ஒட்டக்கூத்தர் இதனைப் பாடினுர்.)

புள்ளிருக்கும் தார்மார்பன் பூம்புகார் வாழ்களியேம்
சுள்ளிருக்கும் கள்ளையுண்டு சோர்விலேம்—உள்ளபடி
சொல்லவா வாலிது ரோபதையை மூக்கரிந்தது
அல்லவா மாபா ரதம்.

யாங்கள் வண்டுகள் மொய்க்கின்ற மாலையை அணிந்த மார்பை யுடைய சோழனின் காவிரிப்பூம் பட்டினத்தில் வாழும் மகிழ்ச்சியை யுடையவர்கள். மகிழ்ச்சியாகிய கள்ளை யுண்பதன்றி மயக்கம் தரும் கள்ளை உண்டு மறதியை அடைவதில்லை. உண்மையைக் கூறலாமோ? மகாபாரதக் கதை என்ருல், வாலுடைய பாம்புக் கொடியினனுன துரியோதனன் திரௌபதியை அவமானம் செய்த வரலாறு அன்ருே!

விளக்கம்: வாலி—வாலை உடைய பாம்புக் கொடியைக் கொண்ட துரியோதனன். மூக்கரிதல் அவமானப் படுத்துதல்.

வாலி திரௌபதியை மூக்கரிந்தது அல்லவா மாபாரதம்' என்பது நகைச்சுவைபடக் கூறியதாகும். 20

121. ஒரு தலைவி திங்களை நோக்கி இரங்கி உரைத்தது

என்று பெறுவேன் யான்ஈசன் திருமுடிமேல்
சென்று விளையாடு கின்றதீபமே—என்றும்
செருப்புக்குத் தோல்வாங்கும் சென்னிய களங்கள்
பொருப்புக்குத் தோலாப் புயம்.

சிவபெருமான் முடியின் மீது வீற்றிருக்கும் பிறைத் திங்களே! எக்காலத்தும், போர்க்களத்துக்குச் சென்று பகைவரின் யானைகளைத் தன் வயப்படுத்தும் சோழனது, வன்மையால் மலைக்கும் தோல்வியடையாத தோள்களை நான் எப்போது அணையப் பெறுவேன்?

விளக்கம்: செருப்புக்குத் தோல் வாங்கும்-செருப்பைத் தைப்பதற்காகத் தோலை வாங்கும் எனப் பொருள் பட்டாலும், இவ்விடத்தே போரில் புகுந்து பகைவரின் யானையை வயப்படுத்தும் என்ற பொருளில் கூறப்பட்டது. செருப்புக்கு- செரு+புக்கு. தோல்-யானை 21

122. வேளாளனின் பாடல்

(பெருங் கவிஞராகிய என் முன் கவிஞர் என்று வந்த யார் என ஒட்டக்கூத்தர் வினவ, முதலில் வேளாளன் இதைப் பாடினன். ஒட்டக்கூத்தரால் புகழேந்தி சிறையில் அடைக்கப் பட்டார். அங்கிருந்தவர்களுள் வேளாளன், கருமான், அம்பட்டன், குயவன், தச்சன், தட்டான் ஆகியவர்க்கும் புகழேந்திப் புலவர் கல்வி கற்பித்துப் புலவராக்கினர். அவர் களுள் வேளாளன் இப்பாடலைப் பாடினன்.

கோக்கண்டு மன்னர் குரைகடல்
புக்கிலர் கோநகப்
பூக்கண்டு கொட்டியும் பூவாது
ஒழிந்தில பூமுழுதும்
காக்கின்ற மன்னன் கவிஒட்டக்
கூத்தநின் கட்டுரையாம்
பாக்கண்டு ஒளிப்பர்களோதமிழ்
பாடிய பாவலரே.

உலகம் முழுவதையும் காப்பாற்றும் சோழனது அவைக் களப் புலவராகிய ஒட்டக்கூத்தரே! பெருமன்னர்களைக் கண்ட சிறு மன்னர்கள் கடலில் புகுந்து மறைந்து கொள்ள வில்லை; தாமரைப் பூவைக் கண்டு கிழங்குப் பூண்டு மலர்கள் மலராமல் இருப்பதில்லை. ஆதலால், அவ்வாறே நின் வன்மையான சொல் அமைந்த பாக்களைக் கண்டு, தமிழ்ப் பாடல் பாடும் மற்றப் புலவர் மறைந்து விடுவார்களோ? மறைந்து விடமாட்டார்கள். 22

123. கருமானின் பாடல்

செல்வன் புதல்வன் திருவேங்
　　கடவன் செகத்குருவாம்
கொல்லன் கவியை குறைசொல்லு
　　வோரைக் குறடுகொண்டு
பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்டம்
　　ஆட்டிப் பகைவர்முன்னே
அல்லும் பகலும் அடிப்பேன்
　　கவியிருப் பாணிகொண்டே.

செல்லப்பன் என்பவனின் மகனாகிய திருவேங்கட ஆசாரி யாகிய யான், கொல்லத் தொழிலில் உலகத்துக்குக் குருவாக இருப்பவன். என்னுடைய செய்யுளில் குற்றம் சொல் பவர்களை, இடுக்கியினால் அவர்களுடைய பல்லைப் பிடுங்கி எடுத்து, துன்பத்தால் பருந்து போல அலையச் செய்து, எதிரி களின் முன்பு என் பாட்டு என்ற இரும்பாணியினால் இரவும் பகலும் தாக்குவேன். 23

124. அரைப் பாடலை ஒட்டக்கூத்தர் பாடுதலும் அரைப் பாடலை அம்பட்ட புலவன் பாடுதலும்.

விண்பட்ட கொக்கென வெல்லும்
　　வல்லூறின் விலவிலத்துப்
புண்பட்ட நெஞ்சொடும் இங்குநின்றாய்
　　பொட்டையாய் புகலாய்;
கண்பொட்டை யாயினும் அம்பட்டன்
　　நான்கவி வாணர்முன்னே
பண்பட்ட செந்தமிழ் நீயும்
　　திடுக்கிடப் பாடுவனே.

'பொட்டைக் கண்ணனே! வானத்தில் பறக்கும் கொக்கானது வல்லூறு என்ற பறவையைக் கண்டு அஞ்சியது போல நடுநடுங்கி, துன்பம் கொண்ட உள்ளத்துடன் இங்கு நிற்பவனே! நீ யார்? எனச் சொல்வாயாக!' (என ஒட்டக்கூத்தர் வினவினர். அதற்கு அந்த அம்பட்டனாகிய புலவன்) நான் கண் குருடனாயினும் மிக்க கல்வியுடையவன் (நாவிதன்); புலவர்க்கு முன்னிலையில் சிறந்த தமிழ்க் கவிகளை நீயும் அச்சம் அடையப் பாடுவேன் (என்றுஉரைத்தான்.) 24

125. குயவன் பாடல்

(முதல் இரண்டடியை ஒட்டக் கூத்தர் பாடப் பின்னிரண்டடியைக் குயவன் பாடி முடித்தல்.)

மோனை முத்தமிழ் மும்மத மும்மொழி
யானை முன்வந்து எதிர்த்தவன் ஆரடா?
கூனை யும்குட மும்குண்டு சட்டியும்
பானை யும்வனை அங்குசப் பையல்நான்

மோனை முதலிய பாட்டின் உறுப்புகள் அமைந்த முத்தமிழாகிய மூன்று மதங்களைப் பொழியும் யானையாகிய என் முன் வந்து, 'கவிஞன்' என்று சொல்லிக் கொண்டு அச்சமின்றி நின்றவன் யார் (என்று ஒட்டக்கூத்தர் இயம்ப, அதற்கு விடையாக) வளைந்த பாண்டமும் குடமும் ஆழமுடைய சட்டியும் பானையும் ஆகியவற்றை மண்ணால் செய்யும் அழகிய குயவர் குலத்தில் தோன்றியவன் (யானையை அடக்கும் அங்குசம் என்ற ஆயுதத்தைப் போன்றவன்) என்று மொழிந்தான்.

விளக்கம்: அங்குசப் பயல்-அம்+குசப் பயல்; அங்குசம்-யானைப் பாகன். யானையை அடக்குவதற்குப் பயன் கருவி. 25

126. தச்சனின் பாடல்

சொன்ன சந்தக்கவி யாவரும்
சொல்லுவர் சொற்சுவைசேர்
இன்ன சந்தக்கவி ஏதென்ற
போதில் எதிர்த்தவரை.

வன்ன சந்தம்கெட வாயைக்
கிழித்திந்த வாய்ச்சியினல்
கன்ன சந்தங் களினில்
கவிஆப்பைக் கடாவுவனே.

(தச்சுப் புலவன் ஒட்டக்கூத்தரை நோக்கி) நீ பாடிய வண்ணம் பாடலை எல்லாரும் இயற்ற முடியும்; சொற்சுவை, பொருட்சுவை அமைந்த என்பாடலை 'இது என்ன பாடல்' என்று இகழ்ந்தால், அவர்களுடைய நிறமும் அழகும் கெடுமாறு மரம்வெட்டும் கருவியாகிய வாய்ச்சியினல், வாயைப் பிளந்து செவித்துளைகளில் என் பாட்டாகிய ஆப்பினைச் செலுத்திடுவேன் என்றுன். 26

127. தட்டானின் பாடல்

திகிரி வட்டக் குடைச்செங்கோல்
அபயன் செழுஞ்சிலம்பில்
பகுதி ஒட்டக் கூத்தபட்டனை
நான்அப் பணைக்கவியில்
மிகுத ஒட்டத் தட்டிவிட்ட
கைஒட்டில் உருக்கிக்குத்திப்
புகுத ஒட்டித் தட்டிமேல்
அணுகாவண்ணம் போர்செய்வனே.

ஆணையாகிய சக்கரத்தையும் வெண்குடையையும் செங்கோலாட்சியையும் உடைய சோழனின் மலை போன்ற சபையில் இடம் பெற்ற ஒட்டக் கூத்தனுகிய புலவனை, அந்தப் பாட்டாகிய பணையில் வைத்து நன்கு தட்டி, ஒட்டில் வைத்து உருக்கி, குத்தி நகையாவதற்கு ஏற்றபடி சேர்த்துப் பின்னர் எப்போதும் என்மேல் வந்து தாக்காதபடி போர் செய்வேன். 27

128. ஒட்டக்கூத்தரும் புகழேந்தியும் பாடுதல்

வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்
என்றும் முதுகுக்கு இடான்கவசம்—துன்றும்
வெறியார் தொடைகமழும் மீனவர்கோன் கைவேல்
எறியான் புறங்கொடுக்கின் என்று.

தேன் மணம் மிகுந்த மாலையை அணிந்த பாண்டியன், பகைவர் புறங்காட்டி ஓடினால் அவர்மீது படைக்கலத்தை எறியமாட்டான் என்று எண்ணி, வெற்றியுடைய சோழ மன்னன், எக்காலத்தும் தன் முதுகில் கவசத்தை அணிவதில்லை.

விளக்கம் : முதல் இரண்டடியை ஒட்டக் கூத்தர் பாடினார். பின் இரண்டடியைப் புகழேந்தி பாடினார். 28

129. விழியும் புருவமும் உன்னை வெல்கின்றன.

பழியும் புகழும் எவர்க்கும்உண்
டாம் இந்தப் பாரில்உனக்கு
அழியும் சிலையும் கயலும் என்
ருல்அக ளங்கதுங்கா
மொழியும் பொழுதுளங்கள் பெண்சக்ர
வர்த்தி முகத்திரண்டு
விழியும் புருவமும் ஆகிஅந்
தோஉனை வெல்கின்றவே.

சோழ மன்னனே! இவ்வுலகத்தில் நினக்குப் பாண்டியனின் மீன் கொடியும், சேரனின் விற்கொடியும் தோற்கும் என்றாலும் ஆராயும்போது, அவை எங்கள் பாண்டிய நாட்டு அரசியும் நின்மனைவியுமான அவளுடைய முகத்தில் இரு கண்களும் புருவங்களுமாகி உன்னை வெல்கின்றன; இதற்குக் காரணம் என்ன என்றால், உலகத்தில் எல்லாருக்கும் பழியும் பாவமும் உள்ளன என்பதே ஆகும், 29

130. தொண்டை மண்டலத்தார் பொய் சொல்லார்
(புகழேந்தியின் பாடல்)

(கார்காலத்தைக் கண்டு மயங்கிய தலைவியைத் தோழி தேற்றுதல்.)

நையும் படியே நாம்கொற்ற
நம்கோன் செஞ்சி வரைமீதே
ஐயம் பெறுநுண் இடைமடவாய்!
அகிலின் தூப முகிலன்று;

பெய்யும் துளியோ மழையன்று;
பிரசத் துளியே; பிழையாது
வையம் பெறினும் பொய்யுரைக்க
மாட்டார் தொண்டை நாட்டாரே.

உண்டோ இல்லையோ என்று ஐயம் கொள்ளுமாறு சிறிய இடையை யுடையவளே! நம் வெற்றி கெடுமாறு நம் தலைவனின் செஞ்சி மலை மீது இங்குத் தோன்றுவது கார் காலத்தின் மேகம் அன்று; பின் எதுவெனின் அகிலின் புகை யாகும்; இப்போது பெய்வது மழைத் துளி யன்று தேன் துளி யாகும். தொண்டை நாட்டவராகிய நின் தலைவர் உலகம் முழுவதையும் பெறுவதானாலும் தவறியுங் கூடப் பொய் சொல்லமாட்டார். (ஆதலால் கார்காலத்தில் வருவதாகச் சொன்ன தலைவர் அக் காலம் வந்ததும் தவறாமல் வருவர். நீ மனம் தெளிவாயாக!) 30

131. செங்கலங்கை வடுகநாத முதலியாரின் சிறப்பு

தன்னுடன் கூடப் பிறந்த சகோதரத் தம்பியுயிர்
அந்நிலை மாண்டது தோன்றாமல் மூடிவைத்து அன்னமிட்டான்;
மன்னவர் போற்றிட வாழ்செங் கலங்கை வடுகனுக்குக்
கன்னனும் சோமனு மோஇணை யாகக் கழறுவதே.

வடுகநாத முதலியார் தம்முடன் பிறந்த தம்பி உயிர் விட்ட அந்த நிலைமை வெளிப்படாமல், அவனது பிணத்தை மூடி மறைத்துவிட்டு, உணவை அளித்தார்; மன்னரும் புகழுமாறு வாழ்கின்ற அத்தகைய வடுகநாத முதலியாருக்குக் கர்ணனை யும் சேரமானையுமோ உவமையாகக் கூறுவது? கூற இயலாது.

குறிப்பு: சோமன் அக்காலத்தில் வாழ்ந்த ஒரு பெருவள்ளல். 31

132. செங்கலங்கை வடுகரின் மகனை மணத்துக்கு அழைத்தது.

முந்தஇனி யோன்மாள முத்தமிழோர்க்கு அன்னம்இட்ட
அந்தவடு கன்மக னுயின்—வந்தென்
தலைக்கலியா ணத்துக்கே தான்பிணத்தை மூடி
இலக்கணமாச் செய்குவைநீ யே.

உணவை இடுவதற்கு முன்னர்த் தம் தம்பி இறந்து போகவும், அதை மறைத்துவிட்டு முத்தமிழ் வல்ல புலவர்க்கு விருந்திட்ட வடுகநாதரின் மகனாக நீயிருப்பின், நின் வீட்டில் எவரேனும் இறந்திருந்தாலும் அவரது உடலை மூடி மறைத்து விட்டு என் மனத்துக்கு வந்து முறைப்படி அனைத்தையும் செய்வாயாக. 32

133. வெண்ணாற்றின் வெள்ளம் அடங்கப் பாடியது.

பள்ளமாம் செய்யில் பயிரைஎலாம் கொள்ளைகொள்ளும்
வெள்ளமே உன்தனைநாம் வென்றோமே—புள்அலம்பு
பொற்காவி வாவிவல்லைப் பூபதிகா ளத்திஎனும்
நற்கார் எனும்கரையை நட்டு.

ஆழமான வயலில் விளைந்த பயிர்களை அடித்துக் கொண்டு செல்லும் ஆற்று நீரே, பறவைகள் ஒலிக்கும் இயல்பையும் நீலமலரயும் உடைய நீர் நிலையுடைய 'வல்லை' என்ற நகரில வாழும் காலத்தியப்ப முதலியார் என்ற நலல கொடைமேக மாகிய கரையை நிலைநிறுத்தி உன்னை நாம் அடக்கி விட்டோம். 33

134. கவி பெற்ற கூவம் தியாகசமுத்திரம்

ஓங்கிய செந்தமிழ்த் தாதற்கு
அடிமைஅவ் வூஅதனல்
நாம்கவி சொல்வதும் இல்லைஎன்
றேகம்ப நாடன்சொல்ல
ஆங்கவன் ஏறும் சிவிகை
சுமந்து அடப்பையிட்டும்
தாம்கவி கொண்டது கூவந்
தியாக சமுத்திரமே.

தமிழ்ப் புலவருக்குக் கொடையாளியாகிய தாதனுக்கு அந்த ஊரார் அடிமை என்பதால், 'நான் புகழ்ந்து பாடுவதில்லை' என்ற கம்பனுக்கு, பல்லக்கைச் சுமந்தும், தாம்பூலப் பாத்திரத்தை ஏந்தியும் பணி செய்து பாடல் பெற்றது 'கூவம் தியாகசமுத்திரம்' என்ற ஊராகும். 34

135. பரிசைத் தவறாமல் தரும் கூவம்!

நட்டாரும் செங்கழு நீர்மணி
மார்பரை வாழ்த்து மந்தக
கிட்டாத யாசகர் கிட்டிவந்
தால்அதைக் கேட்டு முன்னாள்
பட்டோலை வாசித்து அவரவர்க்கு
உள்ள பரிசி லெல்லாம்
தட்டாது அளிப்பதும் கூவம்
தியாக சமுத்திரமே.

கூவம் தியாகம் சமுத்திர ஊரில் உள்ளவர்கள், செங்கழு நீர் மாலையைச் சூடிய திருமார்பினை உடைய இறைவனை வழிபடுகின்ற இரவலர்கள் யாசிப்பதற்காக வந்தால்; அவர்கள் பெயர் எழுதிய ஓலையை முன்னாளில் தயார் செய்த முறையை நோக்கி அவரவர்க்குரிய பரிசைத்தவறாமல் தருவார்கள். 35

136. அயன்றைச் சடையனுக்குத் தூது

மாகுன்று அனைய பொன்தோளான்
வழுதிமன் வான்கரும்பின்
பாகுஒன்று சொல்லியைப் பார்த்துஎனைப்
பார்க்கிலன், பையப்பையப்
போகின்ற புள்ளினங் காள்! புழல்
கோட்டம் புகுதுவிரேல்
சாகின்றனள் என்று சொல்வீர்
அயன்றைச் சடையனுக்கே.

மெல்லச் செல்கின்ற பறவைக் கூட்டங்களே! பெரியமலை போன்ற தோள்களையுடைய பாண்டிய மன்னன் கரும்பின் இனிமை போன்ற சொல்லையுடைய பெண்ணொருத்தியைப் பார்த்த பிறகு என்னைப் பார்க்கவில்லை. எனவே, நீவிர்; புழற் கோட்டம்' என்னும் ஊருக்குச் சென்றால் அங்கிருக்கும் அயன்றைச் சடையனாகிய வள்ளலிடம் யான் இறக்கும் நிலையில் உள்ளேன் என்பதைத் தெரிவிப்பீர்களாக. 36

137. சடையனின் கொடை

இரவ லாளரே; பெருந்திரு உறுக;
அரவுஉமிழ் மணியும் அலைகடல் அமிர்தும்

திங்கள் குழவியும் சிங்கப் பறழும்
குதிரை மருப்பும் முதிர்சுவைச் சுரபியும்
ஈகஎன மொழியினும் இல்என மொழியான்;
சடையனை அயன்றைத் தலைவனை நீர்போய்
உடையது கேண்மின், உறுதியுள் ளோரே.

இரவலரே! அயன்றைப்பதி சடையன் பாம்பு உமிழும் மணியையும், கடலில் தோன்றும் அமிழ்தையும், பிறைச் சந்திரனையும், சிங்கக் குட்டியையும், குதிரைக் கொம்பையும், காமதேனுவின் பாலையும் ஈவாய் என நீங்கள் கேட்டாலும் அவை என்னிடம் இல்லை எனக் கூறமாட்டான்; அத்தகைய வள்ளலை நீங்கள் அடைந்து உங்கட்கு வேண்டியதைக் கேளுங்கள். அவ்வாறு கேட்டபின், நீங்கள் மிகப் பெரிய செல்வத்தைப் பெறலாம். 37

138. வல்லோசை மிகப் பாடிய பாடல்

திக்குள்எட் டுக்கயந் துக்கமுற்றுத்
திடுக்கிட்டு அலற
மைக்க டற்குள் சரம்தைக்க விட்டோர்க்கு
இடமாமதுர
இக்கு முற்றிக் கணிச்சற்றுவிட்டுத் தெறித்திட்ட
முத்தைக்
கொக்கு மொக்கிக் கக்கிவிக்கும் அச்சோலை
குறுங்குடியே.

(திருக் குறுங்குடியில் உள்ள இறைவனின் மீது வல்லோசை மிகுமாறு கட்டளைக் மலித்துறை பாட வேண்டும் என ஒட்டக்கூத்தருக்கும் புகழேந்திக்கும் சோழன் கூறினன். அப்போது ஒட்டக்கூத்தர் பாடியது;)

எட்டுத் திக்குகளிலும் உள்ள யானைகள் துன்பம் அடைந்து கதறுமாறு கருங்கடலில் அம்பை விட்டவராகிய இராமாவதாரம் எடுத்த திருமாலுக்கு இருப்பிடம், மிக்க இனிமையுடைய கரும்புகழ் நன்கு விளைந்து அதன் கணுக்கள் விரிய அதன் உள்ளிருந்து வெளியே தெறித்த முத்துக்களைக் கொக்கு உண்டு, பின் உமிழ்ந்து விக்குகின்ற இயல்புடைய சோலைகள் சூழ்ந்த திருக்குறுங்குடியே ஆகும். 38

139. புகழேந்தி வல்லோசை மிகப் பாடல்

எட்டெழுத் தைக்கருத் திற்குறித்
திட்டுநித் தம்பரவும்
சிட்டர்கட் குத்திருப் பொற்பதத்
தைச்சிறக் கத்தரும்அவ்
வட்டநெட் டைப்பணி மெத்தையத்
தற்கிடம் வாரிசப்பொ
குட்டினத் துக்குலம் தத்திமுத்
தீனும்குறுங் குடியே.

எட்டு எழுத்து மந்திரத்தை மனத்தில் பொருத்தி, நாளும் வழிபடும் அடியார்களுக்குத் தம் திருப்பாதங்களை அளித்தருளும் அழகிய வட்டமாகச் சுற்றும் ஆதிசேடனாகிய பாயையுடைய திருமாலுக்குரிய தலமாவது, தாமரை மலரில் உள்ள கொட்டையில் சங்குக் கூட்டங்கள் தங்கி முத்தை ஈனும் இயல்பையுடைய திருக்குறுங்குடியே. 39

140. நெய்த்தானத்து இறைவனை ஒட்டக்கூத்தர் பாடுதல்

விக்கா உக்கா வித்தா விப்போய்
விட்டால் நட்டார் சுட்டூர் புக்கார்
இக்கா யத்தா சைப்பா டுற்றே
இல்தே டிப்போய் வைப்பீர் நிற்பீர்
அக்கா டப்பேய் தொக்கா டச்சூழ்
அப்பா டத்தீ வெப்பா டப்பூண்
நெக்கா டக்கா னத்தா டப்பேர்
நெய்த்தா னத்தா னைச்சே வித்தே.

விக்கல் உண்டாகித் தளர்ந்து உயிரானது உடலைவிட்டு நீங்கி விட்டால் சுற்றத்தார் பிணத்தைச் சுடுகாட்டில் இட்டுச் சுட்ட பின் ஊருக்குச் சென்று விடுவர். இத்தகைய இயல்புடைய உடலின் மீது ஆசை கொண்டு செல்வத்தைத் தேடி வீட்டுக்குள் எடுத்துச் சென்று வைப்பவர்களே! எலும்பு மாலையானது அசையவும், பேய்கள் கூடிக் கூத்தாடவும், சடையில் கூடியிருக்கும் கங்கை அசையவும், கையில் உள்ள தீயானது ஆடவும், காதணிகள் அசையவும், சுடுகாட்டில் நடனம் செய்யும் பெருமை பொருந்திய 'நெய்த்தானம்' என்

னும் தலத்திலே வீற்றிருக்கும் சிவபெருமானை வழிபட்டு நிலையான பேற்றை அடைவீராக! 40

141. நெய்த்தானத்து இறைவனைப் புகழேந்தி பாடல்

தற்கோ லிப்பூ சற்பா சத்தே தப்பா
மல்சா கைக்கே நிற்பீர்;
முற்கோ லிக்கோ லிப்பூ சித்தே
முட்டா மற்சே வித்தே நிற்பீர்;
வற்று நெட்டோ டைப்பா ரைச்சேல்
மைப்பூ கத்தே றித்தா விப்போய்
நெற்று ளூற்று லைப்பா கிற்சேர் நெய்த்தா
னத்தா னைத்தியா னித்தே.

தன்னைச் சுற்றியுள்ள பாசங்களிடையிலே சிக்கி அவைகளினின்று விலகி நீங்காமல் சாவதற்குத் தகுதியாக நிற்பீர்கள்! நீவிர் முன்பே ஆயத்தமாய் வற்றிப் போகாத நீண்ட நீர் வாய்க்காலில் உள்ளபெரிய சேல் மீன்கள் உயர்ந்த பாக்கு மரத்தில் பாய்ந்து போய் பாக்குக் குலைகளை வீழ்த்திப் பின் நெல் கதிரின் அடியில் போய் அதனைச் சிதறச் செய்து, பின் ஆலையிலிருந்து எடுத்துக் காய்ச்சும் கருப்பஞ் சாற்றிலே பாயும் இயல்புடைய நெய்த்தானத்து இறைவனை உள்ளத்தில் எண்ணிப் பூசைக்கு வேண்டியனகொண்டு பூசையைச் செய்து தவறாமல் வழிபட்டு நிலையான பேற்றை அடைவீர்களாக! 41

11. கம்பர் பாடல்கள்

142. சோழ நாட்டின் எல்லைகள்

கடல்கிழக்குத்; தெற்குக் கரைபொருவெள் ளாறு;
குடதிசையில் கோட்டைக் கரையாம்;—வடதிசையில்
ஏணாட்டுப் பண்ணை யிருப்பத்து நாற்காதம்;
சோணாட்டுக்கு எல்லைஎனச் சொல்.

சோழ நாட்டின் கிழக்குத் திசையின் எல்லை கடல்; அதனது தென் எல்லை கரை மோதிச் செல்லும் வெள்ளாறு; மேற்கு எல்லை கோட்டைக் கரை; வடக்கு எல்லை ஏண் என்னும்

பெயருடைய நாட்டின் வயல்கள். இந்த எல்லைகளுக்கு உட்பட்ட பகுதி இருபத்து நான்கு காதம் எனச் சொல்வாயாக. 1

143. பாண்டிய நாட்டின் எல்லை

வெள்ளா றதுவடக்காம்; மேற்குப் பெருவழியாம்;
தொள்ளர் புனல்கன்னி தெற்காகும்;—உள்ளார
ஆண்ட கடல்கிழக்காம்; ஐம்பத்து அறுகாதம்
பாண்டிநாட்டு எல்லைப் பதி.

பாண்டிய நாட்டின் எல்லைகள். வடக்கு எல்லை வெள்ளாறு; மேற்குத்திக்கின் எல்லை அத்திக்கில் உள்ள பெருவழி; தெற்குத் திக்கின் எல்லை தெளிந்த நீரோடும் கன்னி நதி; கிழக்கின் எல்லை ஒரு காலத்தில் உள்ளே பொருந்தித் துறைமுகமாகப் பயன்பட்டகடல். இந்த நான்கு திக்குகளுக்கு இடைப் பட்ட ஐம்பத்தாறு காதம் பாண்டிய நாடு 2

144 சேரநாட்டு எல்லை

வடக்குத் திசைபழனி; வான்கீழ் தென்காசி;
குடக்குத் திசைகோழிக் கோடாம்;—கடற்கரையின்
ஓரமோ தெற்காகும்; உள்எண் பதின்காதம்
சேரனாட்டு எல்லையெனச் செப்பு.

சேரநாட்டுக்கு எல்லைகளாவன: வடக்கில் பழனி எல்லை அடையாளமாக இருப்பது; கிழக்கு எல்லை தென்காசி; மேற்குத் திக்கு கோழிக்கோடு அல்லது கள்ளிக்கோட்டை; தெற்கு எல்லை கடலின் விளிம்பு: இந்த எல்லைகளுக்கு உட்பட்ட எண்பது காத தூரம் சேர நாட்டின் பரப்பு எனக் கூறுவாயாக. 3

145. தொண்டை நாட்டின் எல்லை

மேற்குப் பவளமலை; வேங்கடம் நேர்வடக்காம்;
ஆர்க்கும் உவரி அணிகிழக்கு;—பார்க்குள்உயர்
தெற்குப் பினாகி திகழ்இருப தின்காதம்
நல்தொண்டை நாடெனவே நாட்டு.

மேற்குத் திக்கில் எல்லை பவளமலை; வடக்குத் திக்கில் எல்லை வேங்கடமலை; அழகிய கிழக்குத் திக்கில் எல்லை ஒலிக்கும்

கடல்;தெற்குத் திக்கில் தென் பெண்ணையாறு, இவற்றின் இடைமயில் விளங்குவது இருபது காத தொலைவு. இதுவே தொண்டை மண்டலம் என உறுதியாகக் கூறுக. 4

146. விடம் நீங்கப் பாடியது

(கம்பர் இராமாயணத்தைப் பாடித் தில்லையில் வாழும் அந்தணரிடம் அந்நூலைக் கேட்டு அவர்களது இசைவைக் கேட்டார். அவர்கள் கேளாமல் இருந்தனர். அவ்வந்தணருள் ஒருவரது குழந்தையைப் பாம்பு தீண்டியது. அப்போது கம்பர் தம் இராமாயணத்தைக் கேட்டு அங்கீகரித்தால், இறந்த குழந்தையை எழுப்பித் தருவதாகக் கூறினார். அவர்களும் இசைந்தனர். அப்போது கம்பர் இதனைப் பாடினார்.)

ஆழியான் பள்ளி யணையே, அவன்கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே,—பூழியான்
பூணே, புரம்எரித்த பொற்சிலையில் பூட்டுகின்ற
நாணே அகல நட.

சக்கரத்தை யுடைய திருமாலின் படுக்கையே! அவன் அமுதத்தைக் கடைவதற்காகப் பாற்கடலில் நாட்டிய மந்தர மலையைச் சுற்றிக் கட்டிய கயிறே! திருநீறு அணிந்த சிவ பெருமான் அணியும் அணியே! திரிபுரத்தை எரித்தற்காக வளைக்கப்பட்ட மேருவாகிய வில்லில் கட்டப்பட்ட கயிறே! நீ விலகிச் செல்வாயாக! 5

147. ஏறிய முறையிலே இறங்கு!

மங்கைஒரு பங்கர் மணிமார்பில் ஆரமே;
பொங்கு கடல்கடைந்த பொன்கயிறே;—திங்களையும்
சீறியதன் மேலூரும் தெய்வத் திருக்கோளே,
ஏறிய பண்பே இறங்கு.

உமையம்மையை ஒரு பக்கத்தே கொண்ட சிவபெருமான் தன் மார்பில் அணிகின்ற மாலையே! திருப்பாற்கடலில் அமுதம் கடைவதற்கு உதவிய அழகிய கயிறே! சந்திரனைச் சினந்து அதன் மேல் பாய்ந்து மறைக்கும் கிரகமே! முன் விடம் ஏறிய படியே இறங்குவாயாக! இக்குழந்தையை விட்டு விலகிச் செல்வாயாக! 6

148. தொலைவில் செல்வாய்!

பாரைச் சுமந்த படவரவே, பங்கயக்கண்
வீரன் கிடந்துஉறங்கும் மெல்லணையே,—ஈரமதிச்
செஞ்சடையான் பூணும் திருஆ பரணமே!
நஞ்சுடையாய், தூர நட.

மண் உலகத்தைத் தலையின் மீது கொண்ட ஆதிசேடனே தாமரை போன்ற கண்ணையுடைய திருமால் படுத்து உறங்கும் மெல்லிய படுக்கையே! குளிர்ந்த சந்திரனைச் சூடிய சடையை உடைய சிவபெருமான் அணியும் அணியே! விடத்தை உடையவனே! இக்குழந்தையிடமிருந்து விலகிச் செல்க.

விளக்கம்: இதன்பின் அக்குழந்தை உயிர் பெற்றெழுந்தது. அதனால் மகிழ்ந்த தில்லையில் வாழும் அந்தணர் கம்பரது இராமாயணத்துக்கு இசைவைத் தந்தனர். 7

149. 'சீராமன்' துணியை வெளுத்த சிறப்பு

சிரம்பார்த்தான் ஈசன்; அயன் தேவிதனைப் பார்த்தான்;
கரம்பார்த்தான் செங்கமலக் கண்ணன்;—உரம்சேர்
மலைவெளுத்த திண்புயத்து வண்ணான் சீராமன்
கலைவெளுத்த நேர்த்திதனைக் கண்டு.

வன்மையுடைய கயிலைமலையும் வெளுத்துப் போவதற்குக் காரணமான உறுதி வாய்ந்த கைகளையுடைய 'சீராமன்' என்ற வண்ணான், துணிகளை வெளுத்த இயல்பைப் பார்த்து, சிவபெருமான் தம் முடியில் இருந்த வெண்ணிறக் கங்கை விலகிச் சென்றுவிட்டதோ என்று தலையைத் தொட்டுப் பார்த்தான்; நான்முகன் கலைமகளின் வெண்மையான நிறம் வண்ணான் வெளுத்த துணிகளுக்குச் சென்று விட்டதோ எனக் கவனித்தான்; தாமரை போன்ற கண்களையுடைய திருமால் தன் கையிலிருந்த சங்குதான் நீங்கிச் சென்று விட்டதோ எனத் தன் கையைப் பார்த்தான். 8

150. நாவிதனின் இயல்பு

ஆர்ஆர் தலைவணங்கார்? ஆர்ஆர்தாம் கைஎடார்?
ஆர்ஆர்தாம் சத்திரத்தில் ஆருதார்?—சீர்ஆரும்
தென்புலியூர் மேவும் சிவன்அருள்சேர் அம்பட்டத்
தம்பிபுகான் வாசலிலே தான்.

சிறப்புடைய சிதம்பரத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானின் அருளைப் பெற்ற 'தம்பி புகான்' என்னும் பெயருடையவனின் வீட்டு வாயிலில் சென்று மயிரைக் கழிப்பதற்காக எவர் தலை வணங்காதவர்? கைகளைத் தூக்காதவர் யார்? அவனது கத்தியினால் மயிர் நீங்கப் பெற்று இன்பம் பெறாதவர் யார்? ஒருவருமில்லை. 9

151. தென்றலே, நீ ஏன் வந்தாய்?

(கம்பரும் அவர் மனைவியும் பள்ளியறையில் இருந்தனர். அப்போது காற்று கதவை மோதியது. கதவை யாரோ தட்டுகின்றார் என்று எண்ணிக் கதவைத் திறந்து உண்மையை உணர்ந்த போது இதனைப் பாடினார்.)

கொற்கையான் மாறன் குலசேகரப் பெருமான்
பொற்கையான் ஆனகதை போதாதோ—நற்கமல
மன்றலே வாரிமணி வாசலை அசைக்கத்
தென்றலே ஏன்வந்தாய் செப்பு?

தென்றலே! கொற்கை நகரத்தில் ஆண்ட குலசேகர பாண்டியன், ஒருவரது வீட்டுக் கதவை இரவில் தட்டிப் பின் அச்செய்கைக்காகத் தன் கையை வெட்டிக் கொண்டு பொற்கையுடையவனாக ஆனது போதாதோ? தாமரை மலரின் மணத்தைத் தாங்கிக் கொண்டு வாசல் கதவைத் தட்டுவதற்கு நீ ஏன் வந்தாய்? கூறுக. 10

152. 'காட்டில் கழுகோட்டும் கை' என்று மன்னன் கூறியதைச் சேர்த்துப் பாடிய 'கண்டசுத்தி'

கண்டாயோ பார்வேந்தா, கானகத்துக் கள்ளியின்கீழ்
வெண்தாழை பூத்து விளக்குளரிய—பெண்தாலி
பூட்டுதற்கு முன்னமொரு புத்திரனைப் பெற்றெடுத்தாள்;
காட்டில் கழுகோட்டும் கை.

மன்னனே! நாட்டில் உள்ள கள்ளிச் செடியின் அடியில் வெண்மையான தாழம்பூ விளக்குப் போல நிமிர்ந்து தோன்ற, ஒரு பெண் மணமாவதற்கு முன்பே தவறான ஒழுக்கத்தை மேற்கொண்டு ஒரு மகனைப் பெற்றாள். அதனால் அவளைக் கொன்று ஆற்றில் இட்டனர். அவள் பிணத்தின்

கை அசைந்தது. அது தன்னைக் குத்த வரும் கழுகை ஓட்டுவது போன்று விளங்கியது.

விளக்கம்: 'கண்டசுத்தி' என்பது ஒருவர் மனத்தில் எண்ணியதை மற்றவர் உணர்ந்து பாடுதல். 11

153. மாசில்லா மங்கையர்க்கரசி

உமையவளும் நீயும் ஒருங்குஒப்பே ஒப்பே;
உமையவளுக்கு உண்டுஅங்குஓர் ஊனம்—உமையவள்தன்
பாகம்தோய்ந்து ஆண்டான் பலிக்குஉழன்றான், பாண்டியன்நின்
ஆகம்தோய்ந்து ஆண்டான் அரசு.

பாண்டிமாதேவியே! பார்வதியும் நீயும் ஒப்பாவீர்கள். என்றாலும், உமையம்மைக்கு ஒரு குறை உண்டு: அது என்னவென்றால், உமையம்மையை ஒரு பாகத்தில் கொண்ட சிவபெருமான் பிச்சை எடுத்து அலைந்தான்; பாண்டியன் உன்னுடைய உடம்பில் பொருந்தி அரசாண்டான். 12

154. சடையப்ப வள்ளலின் சிறப்பு

மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் கன்றுஎன்று
வீட்டளவும் பால்சொரியும் வெண்ணெயே—நாட்டில்
அடையா நெடுங்கதவும் அஞ்சல் என்ற சொல்லும்
உடையான் சடையப்பன் ஊர்.

இந்நாட்டில் இரவலர்க்கு மூடப்படாத பெரிய கதவையும், இரவலரைப் பார்த்து 'அஞ்சாதே' எனக் கூறும் இனிய சொல்லையும் உடைய சடையப்ப வள்ளலின் ஊர், வலிய எருமைகள் நீர்நிலையில் சென்றபோது அங்குத் தாக்கிய வரால் மீன்களைத் தம் கன்றுக்குட்டி என்று எண்ணி வீடு போய்ச் சேரும் வரையில் பாலைச் சிந்தும் இயல்புடைய திருவெண்ணெய் நல்லூராகும். 13

155 தொண்டை மன்னனின் இயல்பு

வெற்றிபுனை தாதகிக்கும் வேம்புக்கும் பெண்ணைக்கும்
சுற்றும் பெருநிழலாய்த் தோன்றுமே—கற்றோர்
திறம்தாங்கும் தாங்கு செகமுழுதும் தாங்கும்
அறம்தாங்கும் தொண்டை அரசு.

தொண்டை மண்டலத் தலைவனான மன்னன், வெற்றியைக் குறிக்கும் ஆத்தி மாலையை அணிந்த சோழனுக்கும், வேம்பு மாலையை அணிந்த பாண்டியனுக்கும், பனம்பூ மாலையை அணிந்த சேரனுக்கும் அவர்களைச் சூழ்ந்து நிழலைத் தரும் குடை போன்றவன்; கற்றவரைப் போற்றுபவன்; நம்மைத் தாங்கும் உலகம் முழுவதையும் தன் தோளில் சுமக்கும் ஆற்றல் உடையவன்; அறத்தை நிலைபெறச் செய்பவன்.

விளக்கம்: தொண்டை நாட்டின்கண் உள்ள அரச மரம், சோழ நாட்டின் ஆத்தி மரம், பாண்டியநாட்டு வேப்ப மரம், சேரநாட்டு பனை மரம் ஆகியவற்றுக்கு நிழலைச் செய்யும் என்பதும் பொருள். 14

156. தாசி 'வல்லி'யை இகழ்ந்தது

கந்த மலர்ப்பிரமன் கன்னிமட வார்க்குஎல்லாம்
அந்த இளநீரை முலையாக்கினான்;—சுந்தரம்சேர்
தோற்றமிகு வல்லிக்குத் தோப்பை முலையாக்கினான்;
ஏற்றம்இதில் யார்தாம் இயம்பு.

மணம் உள்ள தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகன், மணம் ஆகாத பெண்களுக்குத் தென்னையின் இளநீர்க் காய்களை முலைகளாக அமைத்தான்; ஆனால் அழகிய 'வல்லி' என்னும் தாசிக்கு இளநீர்த்தோப்பை அல்லது தோற்பையை முலைகளாக அமைத்தான். இவ்விருவகையினருள் உயர்ந்தவர் யார்? சொல்வாய்! 15

157. தோட்டக்காரன் இயல்பு

இருந்தவளை போனவளை என்னை அவளைப்
பொருந்தவளை பறித்துப் போனான்;—பெருந்தவளை
பூத்தத்தத் தேன்சொரியும் பொன்னிவள நன்னாட்டில்
மாத்தத்தன் வீதியினில் வந்து.

பெரிய தவளைகள் தாமரை மீது தாவ, அதனால் மலர் மலர்ந்து தேனைச் சிந்தும் காவிரி பாயும் வளமுடைய நாட்டில் மாதத்தன் என்பவன் தெருவில் சென்று, அவ்விடத்தில் இருந்தவள் சென்றவள் யான் என் பக்கத்தில் இருந்தவள் ஆகிய அனைவரின் வளைகளும் கழலுமாறு செய்து அவற்றைக் கொண்டு சென்றான். 16

158. கருமாரச் சிங்கனின் சிறப்பு

ஆழியான் ஆழி அயன்எழுத்து ஆணி என்பார்
கோழியான் குன்றுஎறிய வேல்என்பான்—பூழியான்
அங்கை மழுஎன்பான் அருள்பெரிய மாவண்டூர்ச்
சிங்கன் உலைக்களத்தில் சென்று.

மாவண்டூரில் வாழும் 'சிங்கன்' என்ற கருமானின் உலைக் கூடத்திற்குச் சென்று திருமால் தமக்குச் சக்கரம் செய்து தர வேண்டும் எனச் சொல்வார்; நான்முகன் தமக்கு எழுதுவதற்காக எழுத்தாணி செய்து தரவேண்டும் என்று வேண்டுவார்; சேவல் கொடியையுடைய முருகன் மலையைத் தாக்குவதற்கு வேலைச் செய்து தரவேண்டும் என்று கூறுவார்; திருநீற்றை அணிந்த சிவபெருமான் தாம் உள்ளங் கையில் வைத்துக் கொள்வதற்காக மழுப்படையை அமைத்துத் தரவேண்டும் என்று மொழிவார். 17

159. 'அச்சுதன்' என்பவனின் வாயில் முரசு

குடகர் குணகடல் என்பர்; குடகுக்கு
இடகர் வடகடல் என்பர்;—வடகடலோர்
தென்கடல் என்பர்; திருந்துதார் அச்சுதனின்
முன்கடை நின்றூர்க்கு முரசு.

அச்சுத வள்ளலே! நின் முற்றத்தில் ஒலிக்கும் முரசை, மேற்குத்திசையில் உள்ளவர் கிழக்குக் கடலின் ஒலி என்பார்; மேற்குக்குத் தென்திசையில் இருப்பவர் வடக்குத் திசையில் உள்ள கடலின் ஒலி என்பார்; வடகடற் பகுதியில் உள்ளவர்கள் தென்கடலின் ஒலி என மொழிவார். 18

160. அச்சுதன் முற்றத்தில் கிடப்பன

தினைவிளைத்தார் முற்றம் தினைஉணங்கும்; செந்நெல்
தனைவிளைத்தார் முற்றமது தானும்;—கனையும்
முரசுஉணங்கச் சங்குணங்கு மூரித்தேர்த் தானை
அரசுஉணங்கும் அச்சுதன் முற்றம்,

தினை என்னும் பயிரை விளைவித்தவரின் வாயிலில் அந்தத் தினையே உலர்த்தப் பெற்றிருக்கும். நெல்லை விளைவித்தவரின் வாயிலில் நெல்லே உலர்த்தப் பெற்றிருக்கும். தேரும்

படையும் உடைய மன்னர்கள் வந்து வாடி நிற்கும் அச்சு தன் முற்றத்தின்கண் பேரிகையும் சங்குகளும் உலர்ந்து கிடக்கும். 19

161. அரசர்கள் காத்திருக்கும் அச்சுதன் வாயில்

குறையுளார் எங்குஇரார்? கூர்வேலி ராம
இறைஆறு திங்கள் இருந்தான்;—முறைமையால்
ஆலிக்கும் தார்மார்பா, அச்சுதா, அந்நாளில்
வாலிக்கு இளையான் கடை.

மாலையை அணிந்தவனே! அச்சுதனே, முன் காலத்தில் வாலியின் தம்பியான சுக்கிரீவனின் வாயிலில் இராமபிரானை அரசன், விதி காரணமாக ஆறு மாதங்கள் காத்துக் கொண்டிருந்தான். எனவே குறைபாடு உடையவர்கள் எவ்விடத்தில்தான் இல்லாமல் இருப்பர் எங்கும் இருப்பர். (அச்சுதன் வாயிலில் மன்னர்கள் காத்திருப்பர் என்பது உட்பொருள்.) 20

162. கால் விலங்கை வெட்டும் ஓசை

அரசன் அகளங்கன் அச்சுதன் முற்றத்து
அரசர் அவதரித்த அந்நாள்—முரசு அதிரக்
கொட்டிவிடும் ஓசையினும் கோவேந்தர் கால்தளையை
வெட்டிவிடும் ஓசை மிகும்.

அரசர்கள் பிறந்த நாளில் மிக்க ஓசை எழுமாறு அடிக்கும் முரசு ஓசையை விட, அச்சுதன் என்னும் பெயருடைய மன்னனின் வாசலில் மன்னர்க்கு மன்னரின் காலில் உள்ள விலங்கைத்தறிப்பதால் எழும் ஓசையே மிக்குக் கேட்கும். 21

163. என் கண்ணில் புகுந்தான்!

தளைஅவிழ் நாள்மாலைத் தாயரே, ஆவி
களையினும்என் கண்திறந்து காட்டேன்;—வளைகொடுபோம்
வன்கண்ணன் மாவிசயன் மால்யானை தன்னெடும்வந்து
என்கண் புகுந்தான் இனி.

மலர் மாலையை அணிந்த தாய்மாரே! என் உடலை மெலியச் செய்து என் கையில் இருந்த வளையலைக் கழலுமாறு செய்த கொடிய 'மாவிசயன்' என்ற பெயரை உடையவன் மயக்கம் மிக்க யானையின்மேல் ஏறி வந்து என் கண்களில் புகுந்தான்.

என் உயிரைப் போக்குவதாக இருந்தாலும் என் கண்களைத் திறந்து அவனைக் காட்ட மாட்டேன். 22

164. வாணனின் வீரம்!

வாள்தானைத் தென்னவர்கோன் மாகதற்குத் தோற்றசெய்தி
கேட்டான்அத் திங்குரலும் கேட்டதன்பின்—நாட்டம்
பொருந்துஆ யிரவிழியான் பொன்முடியைச் சாய்த்தங்கு
இருந்தான்இங்கு என்ஆகும் என்று.

வாட்படையை யுடைய பாண்டிய நாட்டின் மன்னன் மகத நாட்டு மன்னனை ஏகம்பவாணனுக்குத் தோற்றுப் போன செய்தியை ஆயிரம் கண்களையுடைய இந்திரன் செவி யேற்றான். அங்ஙனம் கேட்ட பின், தன் அழகிய தலையை அசைத்து, 'மண்ணுலகத்தில் வந்தால் என்ன நிகழுமோ' என்று விண் உலகத்திலேயே இருந்து விட்டான். 23

165. திருவிடை மருதூர்க் கணிகை எழுபது பேரின் இயல்பு

வாச மலர்மடந்தை போல்வார் மருதவனத்து
ஈசன் அடியார் எழுபதின்மர்—நேசத்து
இரவலர்மேல் நீட்டுவர் கையீண்டு உலகைஆளும்
புரவலர்மேல் நீட்டுவர்பொன் தாள்.

திருவிடை மருதூரில் வாழும் இலக்குமியைப் போன்ற சிவ பெருமானின் அடியவராகிய கணிகையர் எழுபது பேரும் தம்மிடம் வந்து பிச்சை எடுப்பவர்களுக்கு உணவை அளிப் பதற்காகத் தங்கள் கைகளை நீட்டுவார்கள். இந்த வுலகததை ஆளும் அரசர்கள் முடியின் மேலே தங்கள் அழகிய கால்களை நீட்டுவார்கள். 24

166. பெண்ணின் கண்கள் உறங்கவில்லை!

மாவுறங்கின புள்ளுறங்கின வண்டுறங்கின தண்டலைக்
காவுறங்கின வெங்கண்மான்இரு கண்உறங்கிலள் ஐயகோ,
கோவுறங்கு கடைத்தலைக்குல தீபவள்ளைகு தட்டிவாய்
ஆவுறங்கு புகாரஞ்சல அஞ்சலென்ன அடுக்குமே.

தாம் கொணர்ந்த கப்பத்தைச் செலுத்துவதற்காகச் சமயம் கிடைக்கப் பெறுமல் வெளியில் மன்னர்கள் உறங்கும் மன்னர்க்கு ஒளி போன்றவனே! வள்ளைக் கொடியை வாயில் அசை போட்டபடி பசுக்கள் உறங்கும் காவிரிப் பூம்பட்டினத்தையுடையவனே! விலங்குகள்எல்லாம் உறங்கின. பறவைகள் உறங்கின. வண்டுகள் உறங்கின, குளிர்ந்த சோலைகளும் உறங்கின. ஆனல் எங்கள் மகளோ இரு கண்களும் உறங்காமல் உள்ளாள்! அவளை 'அஞ்சாதே' என்று நீ சொல்வது எவ்வாறு பொருந்தும்? 25

167. இராட்டினமே துணை!

நில்லாத பல்லும் பறிபட்ட கூந்தலும் நீண்டகரிப்
பொல்லா அழுக்குப் புடவையு மாய்வெகு பூச்சியம்போய்ச்
செல்லாப் பணத்துக்குத் தேட்டுணு மற்றுத் தியங்கிஒன்றும்
இல்லாத பாவி தனக்கு ஆர் துணைபொன்னி ராட்டினமே.

வாயில் நிற்கக் கூடாத நிலையில் உள்ள பல்லும், மயிர் பறிக்கப் பட்ட மொட்டைத் தலையும், கரிய அழுக்குப் புடவையும் கொண்டவளாக மதிப்பற்றவளாகிச் செல்லாத காசினை மாற்றுவதற்குத் தேடி உணவற்றவளாகிக் கையில் ஒன்றும் இல்லாத எனக்குத் துணை யார்? அழகிய இராட்டினமே! 26

168. சோழனின் யானை சென்ற வழியில் பருந்து முதலியன செல்லும்!

படுபருந்தும் சூர்ப்பேயும் பல்மிருகம் செந்நாய்
கொடிகழுகும் இத்தனையும் கூடி—வடிவுடைய
கோமான் களப்பாளன் கொல்யானை போமாறு
போமாறு போமாறு போம்.

அழகிய தோற்றத்தை யுடைய பகைவரின் உயிர்களைப் போக்கும் சோழனின் யானை சென்ற வழியில் எல்லாம் கொல்லப் பட்டவரின் உடலைத் தின்பதற்காகப்பெரிய பருந்துகளும் பேய்களும் செந்நாய் முதலிய விலங்குகளும் காக்கை கழுகுகளும் ஆகிய இவ்வளவும் ஒன்று சேர்ந்து செல்லும்! 27

169. நாலாறடி நடந்தேன்?

(கம்பர் சோழனிடம் சென்ற போது அவன் முன் வந்து வரவேற்ற போது இப்பாடலைப் பாடினார்.)

அன்றையிலும் வையம் அகன்றதோ, அல்லவென்று
குன்றெடுத்து நீதிருத்திக் கொண்டாயோ,—என்றும்
அடைந்தாரைக் காக்கும் அகளங்கா, துங்கா,
நடந்தாயே நாலாறு அடி.

அடைக்கலமாக அடைந்தவர்களைக் காக்கும் சோழனே! முற்காலத்தைவிட இந்த வுலகம் இப்போது பெரியதாகி விட்டதோ, அல்லது, உலகம் பெரியதாக இல்லை என்பதால், மலைகளை எடுத்தெறிந்து விட்டுப் பெரியதாகச் செய்து கொண்டாயோ! பத்தடி அல்லது இருபத்து நான்கடித் தொலைவு நடந்து முன் வந்தாயே! 28

170. வாணனின் பெயர் எழுதுமிடம்

பேரரசர் தேவிமார் பெற்ற மதலையர்தம்
மார்புஅகலம் கண்டு மகிழ்வரே;—போர்புரிய
வல்லான் அகளங்கன் வாணன் திருநாமம்
எல்லாம் எழுதலாம் என்று.

பேரரசர்களுடைய மனைவியர் தங்கள் பிள்ளைகளின் மார்பின் அகலத்தைப் பார்த்து, போர்த்திறம் வாய்ந்த ஏகம்ப வாணனுடைய பெயர்கள் அனைத்தையும் அவர்களின் மார்பில் எழுதலாம் என்று கருதி மகிழ்வார்கள். 29

171. வாணனுக்குப் பாணனிடம் என்ன பகை?

உலைக்குரிய பண்டம் உவந்திரக்கச் சென்றால்,
கொலைக்குரிய வேழம் கொடுத்தான்;—தலைக்குரிய
வாணர்கோன் ஆறை மகதேவ னுக்குஇந்தப்
பாணனோடு என்ன பகை?

பாடலில் வல்ல பாணன் சமைப்பதற்குரிய அரிசியை விரும்பிக் கேட்டுப் பெறுவதற்குச் சென்றால் ஏகம்பவாணன், பகைவரைக் கொல்வதற்கு ஏற்ற யானைகளைப் பரிசிலாகத் தந்தான். 'ஆறை' என்னும் நகரத்தில் வாழும் அவ்வாணனுக்கு இந்தப் பாணனிடத்தில் உள்ள பகைமை யாதோ? 30

172. வாணனின் சிறப்பு

வாணன் பெயர்எழுதா மாரியுண்டோ? மாகதர்கோன்
வாணன் புகழுரையா வாய்உண்டோ?—வாணன்
கொடிதாங்கி நில்லாத கொம்புண்டோ? உண்டோ,
அடிதாங்கி நில்லா அரசு?

மகதம் என்னும் நாட்டுக்குத் தலைவனாகிய ஏகப்பவாணனின் பெயரை எழுதாத மார்பு இருக்கின்றதோ? அவனது புகழைப் பேசாத வாயுண்டோ! அவனது வெற்றிக் கொடி கட்டப் பெறாத கொம்புகள்தாம் உண்டோ? அவனது அடிகளைத் தாங்கிச் சுமக்காத மன்னரும் இருக்கின்றாரோ? இல்லை. 31

173. நின் பெயரை மாற்றுவது எளிதோ?

பாண்டியனைப் பேர்மாற்றிப் பாணர்க்கு அரசளித்த
ஆண்டகை என்றுஉன்னை அறியேனோ?—மூண்டெழுந்த
கார்மாற்றும் செங்கைக் கடகரிவாணா, உனது
பேர்மாற் றுவதுஅரிதோ பேசு?

நன்றாகக் கூடி எழும் மேகத்தின் இயல்பைத் தோற்கச் செய்யும் கையையும் யானையையும் உடைய ஏகம்ப வாணனே! பாண்டிய மன்னனின் புகழை மாற்றும்படி செய்யப் பாணர்கட்கு மன்னர்க்குரிய விருதுகளைத் தந்த வீரன் என்பதை அறிய மாட்டேனோ! இத்தகைய நின் பேரை மாற்றுவது எளியதோ? சொல்வாயாக!

விளக்கம் : வாணன் ஒருவனுக்கு அரசைக் கொடுத்ததாகக் கூறுவதுண்டு. தனக்கு நன்மை செய்த 'ஏகன்' என்பவனின் பெயரை முதலிலும், தந்தையின் பெயரான 'வாணன்' என்பதை இறுதியிலும், தன் ஆசிரியர் கம்பரின் பெயரை இடையிலும் வைத்து 'ஏகம்பவாணன்' எனத் தன் பெயரை அமைத்துக் கொண்டான். 32

174. யானையே, நின் கால் பணிவேன்.

(ஏகம்பவாணன் மேல் காதல் கொண்ட ஒருத்தியின் கூற்று இது.)

பாணன் மதுரைப் பதியாள வைத்தபிரான்
வாணன் புகழவரு மேகம்ப—வாணன்

கரும்போ தகமேநின் கால்பணிவேன் மீண்டு
வரும்போ தகமே வரின்.

ஒரு பாணனை மதுரையில் ஆட்சியைச் செய்யுமாறு செய்த, பாணர் எப்போதும் இகழாமல் புகழும் ஏகம்ப வாணரின் பெரிய யானையே! நீ திரும்பி வரும்போது என் வீட்டிற்கு வந்தால், உன் அடிகளை வணங்குவேன்! 33

175. பரிசு பெற்ற பாவேந்தர்

என்சிவிகை, என்கவிகை, என்துவசம், என்கவசம்,
என்பரிஈது, என்கரி யீது என்பரே;—மன்கவன
மாவேந்தன் வாணன் வரிசைப் பரிசுபெற்ற
பாவேந்த ரைவேந்தர் பார்த்து.

விரைந்தோடும் குதிரைகளையுடைய ஏகம்ப வாணனாகிய மன்னனின் பரிசைப் பெற்று வருபவர் புலவர்; அவரைப் பார்த்து, மன்னர் சிலர், 'இது என்னுடைய பல்லக்கு, இது என் கவசம், இது என் கொடி, இது என் யானை, இது எனது குதிரை' என்று உரைப்பர்.

விளக்கம்: ஏகம்பவாணன் பல மன்னர்களை வென்று அவர்களிடமிருந்து பெற்ற பொருள்களைப் புலவர்களுக்குத்தந்தான். ஆதலால், புலவர்கள் பெற்ற பரிசில்களைக் கண்டு மேற்கண்டவாறு மன்னர் உரைத்தனர். 34

176. கற்றவர்க்குச் செம்பொன் தருபவனோ இவன்?

சேற்றுக் கமலவயல் தென்ஆறை வாணனையான்
சோற்றுக்கு அரிசிதரச் சொன்னக்கால்—வேற்றுக்
களிக்குமா வைத்தந்தான் கற்றவர்க்குச் செம்பொன்
அளிக்குமாறு எவ்வாறு அவன்.

வயலில் உள்ள சேற்றிலே தாமரை மலர்கள் மலரும் ஆறைப் பதியில் (ஆற்றூரில்) உள்ள ஏகம்ப வாணனை நான் சோற்றுக்கு அரிசிதரவேண்டும் என வேண்டினேன்; அவன் அதற்கு மாறாகக் களியைச் செய்ய மாவை (களிப்பை யுடைய யானையை) எனக்குத் தந்தான்; இவன் கற்றவர்க்குச் செம்பொன்னை அளிப்பது எப்படியோ? 35

177. ஏகம்ப வாணனின் கொடை

தேரு ளைப்புரவி வார ணத்தொகுதி
திறைகொ ணர்ந்துவரும் மன்னநின்
தேச மேதுனது நாம மேதுபுகல்!
செங்கை யாழ்தடவு பாணகேள்!
வாரு மொத்தகுடி நீரு நாமுமக
தேவ ஞறைநகர் காவலன்
வாண பூபதி மகிழ்ந்த ளிக்கவெகு
வரிசை பெற்றுவரு புலவன்யான்;
நீரும் இப்பரிசு பெற்று மீளவரல்
ஆகும் ஏகுமவன் முன்றில்வாய்,
நித்தி லச்சிகர மாட மாளிகை
நெருங்கு கோபுரம் மருங்கெலாம்
ஆரும் நிற்கும்உயர் வேம்பு நிற்கும்வளர்
பனையும் நிற்கும்அதன் அருகிலே
அரசு நிற்கும்அர சைச்சு மந்தசில
அத்தி நிற்கும்அடை யாளமே.

“தேர்கள், குதிரைகள், யானைக் கூட்டம் ஆகியவற்றைத் திறைப் பொருளாகப் பெற்று வரும் மன்னனே! உன் நாடு எது? உன் பெயர் யாது? சொல்!” என ஒரு பாணன் வினவினான். அதற்குப் பரிசைப் பெற்றுவரும் புலவன், “சிவந்த கையால் யாழை வாசிக்கும் பாணனே! வருக. நீயும் நானும் ஒரே குலத்தவர்; நான் ஆற்றூர்க்குத் தலைவ னான ஏகம்பவாணன் என்ற மன்னன் விரும்பித் தந்த பரிசில்களைப் பெற்று வரும் புலவன். நீயும் இத்தகைய பரிசில்களைப் பெற்றுக் கொண்டு வரலாம்; அந்த ஏகம்ப வாணனின் முன்றிலுக்குச் சென்று திரும்புக. அவன் இருப் பிடத்துக்குச் செல்ல அடையாளம் என்னவென்றால்; முத்தால் ஆன முடிகளை யுடையதான மாடங்களையுடைய பெரிய வீடு களின் கோபுரங்களின் பக்கங்களில் எல்லாம் ஆத்தி மரம் வளர்ந்திருக்கும்; உயர்ந்த வேம்பு மரங்கள் இருக்கும்; பெரிய பனைமரமும் பொருந்தியிருக்கும்; அதன் பக்கத்தில் அரச மரமும் உண்டு; அதனைச் சுமக்கும் சில அத்தி மரங்களும் உண்டு” எனக் கூறினான்.

விளக்கம் : ஆத்தி, வேம்பு, பனை ஆகியவை முறையே சோழனையும் பாண்டியனையும், சேரனையும் குறிக்கும். அரச மரம் என்பது மற்ற மன்னர்களை உணர்த்தும். அத்தி என்பது யானையை உணர்த்தும். 36

178. விலங்கு யாருக்கு?

அலங்கல்அணி மார்பன்ஆறையர்கோன் வாணன்
'விலங்கு கொடுவருக' என்றான்;—இலங்கிழையீர்!
சேரற்கோ, சோழற்கோ, தென்பாண்டி நாடாளும்
வீரற்கோ, யார்க்கோ விலங்கு?

விளங்கும் அணியை அணிந்த தோழியரே! மாலை அணிந்த மார்பையுடைய ஆற்றூரில் வாழ்பவர்க்குத் தலைவனான ஏகம்பவாணன் 'விலங்கு கொண்டு வருவாயாக' என்றான்; அது சேரனுக்கோ, சோழனுக்கோ, பாண்டியனுக்கோ, அன்றி வேறு எவருக்கோ, அறியோம்! 37

179. வாணனின் புகழ், வெற்றி, படை, கொடை

வாணன் புகழ்க்குஎல்லை வாழ்த்துவோர் நாஎல்லை;
வாணன் செயத்துஎல்லை மண்எல்லை;—வாணன்
படைக்குஎல்லை திக்குஎல்லை; பைந்தமிழ்தேர் வாணன்
கொடைக்குஎல்லை ஏற்பவர்தம் கோள்.

ஏகம்ப வாணனின் புகழின் அளவு எது வென்றால் புகழ்ந்துரைப்பாரின் நாவினது ஆற்றலே; அவனது வெற்றியின் அளவு நிலத்தின் அளவே; அவனது படையின் அளவு திக்குகளின் எல்லையே; தமிழில் வல்ல வாணனின் கொடையினது அளவு ஏற்பவரின் ஆற்றலே! 38

180. மன்னனே! பொங் புகலேன்!

[கம்பர் 'தாசி பொன்னிக்கு அடிமை' என்றதோர் ஓலையை எழுதித் தந்தார். சோழ மன்னன் அதைக் கம்பருக்குக் காட்டினான். அப்போது கம்பர் தாம் எழுதியது 'பொன்னிக் கன்று; இலக்குமிக்கு எழுதியதாகும்' என உரைத்தது.]

கன்னிக் கலச முலையாள்தன்
காமக் குரோத பஞ்சத்தில்
என்னுக்கு எழுதிக் கொடுத்தேன்என்று
இயம்பக் கேளாய்! இகல்வேந்தே,
மின்னுக்கு எழுதி இடைக்குஎழுதி
வேண்டும் பொருட்கும் எழுதிஅருள்
பொன்னுக்கு எழுதிக் கொடுத்தேன்யான்;
பொய்யும் உரையேன், புகழ்வேந்தே!

பகைவரை வெல்லும் மன்னனே! குடத்தைப் போன்ற மார்பினையுடைய பொன்னியின்பால் விருப்பும் வெறுப்பும் இல்லாத நிலையில், இந்த ஓலையை ஏன் எழுதிக் கொடுத்தேன் என்றால், சொல்வேன்; அருளையுடைய திருமகளின் ஒளியைப் பற்றி எழுதியும், இடையினைப் பற்றி எழுதியும், விரும்பும் பொருள் கேட்டு எழுதியும் தந்தேன். புகழையுடையவனே! நான் பொய் சொல்ல மாட்டேன். 39

181. இயமனைவிடப் புலவர் கொடியவர்

போற்றினும் போற்றுவர்; பொருள்கொ டாவிடில்
தூற்றினும் தூற்றுவர்; சொன்ன சொற்களை
மாற்றினும் மாற்றுவர்; வன்க ணாளர்கள்
கூற்றினும் பாவலர் கொடியர் ஆவரே.

புலவர், ஒருவரைப் புகழ எண்ணினால் புகழ்வர்; பொருளைத் தராவிட்டால் இகழ்ச்சியாகச் சொல்ல எண்ணினால் இகழ்வர்; தாம் சொன்ன சொல்லின் கருத்தை மாற்றிச் சொன்னாலும் சொல்வர். எனவே, அவர்கள் கொடுமை யுடையவர்கள் இயமனைவிடக் கொடியவர்கள் ஆவார்கள் 40

182. புலவனை ஏற்காத அரசும் உண்டோ?

மன்னவனும் நீயோ? வளநாடும் உன்னதோ?
உன்னைஅறிந் தோதமிழை ஓதினேன்?—என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துஉண்டோ? உண்டோ
குரங்குஏற்றுக் கொள்ளாத கொம்பு?

இவ்வுலகத்தில் அரசன் என்பவன் நீ ஒருவன் மட்டுமோ? வளத்தை யுடைய நாடு என்பது உன் நாடு மட்டுமோ? உன்னை அறிந்த பின்னர்தான் தமிழை நான் கற்றேனோ?

குரங்கானது தாவி வரும்போது அதனைத் தாங்கிக் கொள்ளாத மரக்கிளை உண்டோ? அதைப் போன்றே என்னை விரைவிலே ஏற்றுக்கொண்டு பாராட்டாத மன்னனும் இருக்கின்றானோ? இல்லை. 41

183. எங்கட்கு இடம் இல்லையோ!

காதம் இருபத்து நான்குஒழியக் காசினியை
ஓதக் கடல்கொண்டு ஒளித்ததோ?—மேதினியில்
கொல்லிமலைத் தேன்சொரியும் கொற்றவா, நீமுனிந்தால்
இல்லையோ எங்கட்கு இடம்?

தேனைச் சிந்தும் கொல்லிமலை மன்னனே! இருபத்து நான்கு காதம் பரப்பளவுள்ள சோழ நாட்டைத் தவிர, மற்ற நிலப் பகுதியை ஒலிக்கும் கடலானது கவர்ந்து போய் விட்டதோ? நீ சினம் கொண்டால், இவ்வுலகத்தில் நாங்கள் போய்த் தங்குவதற்கு இடம் வேறு இல்லையோ?

184. கொங்கு நாட்டை இழித்துப் பாடியது

(கம்பர் கொங்கு நாட்டுக்குச் சென்ற போழ்து, அந்நாட்டவர் இவரை மதியாததால் இதனைப் பாடினர்.)

நீரெலாம் சேற்று நாற்றம்; நிலமெலாம் கல்லும் முள்ளும்;
ஊரெலாம் பட்டி தொட்டி; உண்பதோ கம்பஞ் சோறு;
பேரெலாம் பொம்மன் திம்மன்; பெண்களோ நாயும் பேயும்;
கார்உலாம் கொங்கு நாட்டைக் கனவிலும் நினைக்கொணாதே.

கொங்கு நாட்டில் நீரில் எல்லாம் சேற்றின் தீய வாசனை வீசும்; நிலத்தில் எங்கும் கல்லும் முள்ளும் நிரம்பி இருக்கும்; அங்கு இருக்கும் ஊர்கள் எல்லாம் 'பட்டி, தொட்டி' என்ற பெயரை உடையன; மக்கள் அருந்துவது கம்பஞ்சோறு; அங்கிருக்கும் மக்களின் பெயரெல்லாம் அநாகரிகமாகப் 'பொம்மன்' திம்மன்,' எனக் காணப்படும்: பெண்கள் எல்லாம் நாய் குரைப்பது போலக் கூக்குரல் இட்டுப் பேய் போன்று அலைவார்கள். ஆதலால், மேகம் தவழும் கொங்கு நாட்டைக் கனவிலும் நினைக்கக் கூடாது. 43

185. பள்ளிகள் அனைவரும் நல்லவர்கள்!

குமிண்டியும் பண்ணையும்கூட முளைக்கின்ற கொல்லைக்கம்பை
நிமிண்டியும் ஊதியும் தின்ன வல்லோர்இந்த நீள்நி லத்தில்
துமிண்டியங் காய்தன்னை மொட்டையம் பாலெய்யும் சூரர் கண்டீர்;
நமிண்டியில் பள்ளிகள் அத்தனை பேர்களும் நல்லவரே.

பள்ளியர்கள் குமிட்டித் தழை, வயற்கீரை ஆகியவை சேர்ந்து விளையும் தோட்டங்களில் உள்ள கம்பங்கதிரைக் கையால் கசக்கியும் வாயால் ஊதியும் தின்பார்கள். இந்தப் பெரிய வுலகத்தில், துமிண்டிக்காயை அம்பால் வீசிப்பறிக்கும் தைரியம் உடையவர் வாழும் 'நமிண்டி' என்ற ஊரில் உள்ள பள்ளியர்கள் எல்லாரும் நல்லவர்களே! 44

186. காப்பவர் வேளாளரே!

செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லோமே, செக்காரப்
பொட்டிமக்கள் வாசல்வழிப் போகோமே,—முட்டிபுகும்
பார்ப்பார் அகத்தைஎட்டிப் பாரோமே; எந்நாளும்
காப்பாரே வேளாளர் காண்.

யாம் வாணிகர் வாழும் தெரு வழியே செல்ல மாட்டோம்; செக்கை ஆட்டிப் பிழைக்கும் எண்ணெய் வாணிகர் தெருவில் செல்ல மாட்டோம்; பிச்சை ஏற்று உண்ணும் பார்ப்பாரின் வீட்டை ஒரு சிறிதும் பார்க்கப் போவதில்லை; எக்காலத்திலும் எம்மைக் காப்பவர் வேளாளர்களே ஆவார்கள். 45

187. 'செல்ல'னின் மனைவி இட்ட கம்பஞ் சோற்றின் சிறப்பு

கல்லங்காடு தனில்விளையாக் கடுகநிலத்தில் தான்முளையா;
அல்லங்கிருந்த கருங்கூந்தல் அணங்குக்கணங்கு போலாவாள்
செல்லன்தேவி மனைகள்தொறும் தேடித்திரிந்தும் காணுத
நெல்லஞ்சோறே கம்பஞ்சோற்றினை நீசுமந்து திரிவாயே.

பாறை நிலத்திலே விளையாததும், இறுகிய நிலத்தில் பயிராகாததும், கருநிறக் கூந்தலையுடைய தெய்வப் பெண்ணைப் போன்ற 'செல்லன்' என்பவனின் மனைவி பக்கத்தில் உள்ள விடுகளில் சென்று கேட்ட போதும் கிடைக்கப் பெறுததும்.

ஆகிய நெற்சோறே! நீ அவளது வீட்டில் உள்ள கம்புச் சோற்றுக்குத் தோற்றுயாதலால், அதை நீ சுமந்து திரிவாயாக.

விளக்கம்: செல்லனின் மனைவி கம்பரைக் கண்டதும் கம்புச் சோற்றை அவருக்களிக்க நாணம் கொண்டு பக்கத்து வீடுகளில் சென்று நெற்சோறு கேட்டாள்; ஆனால், கிடைக்கவில்லை. திரும்ப வந்து அவருக்குக் கம்புச் சோற்றையே பரிமாறினாள். ஆதலால் கம்பர் இங்ஙனம் பாடினார். 46

188. வேளாளரின் கையே காக்கும் கை!

மேழி பிடிக்கும்கை; வேல்வேந்தர் நோக்கும்கை;
ஆழி தரித்தே அருளும்கை;—சூழ்வினையை
நீக்கும்கை; என்றும் நிலைக்கும்கை; நீடூழி
காக்கும்கை காராளர் கை.

வேளாளரின் கையானது ஏரைப் பிடிக்கும் கையாகும்; வேற்படை கொண்ட மன்னர் எதிர்பார்க்கும் கையாகும்; மோதிரத்தை அணிந்து கொண்டு உதவியைச் செய்யும் கையாகும்; தீவினையால் வரும் தரித்திரத்தைப் போக்கும் கையாகும்; எப்போதும் நிலைபெற்றிருக்கின்ற கையாகும்; நீண்ட காலம் இவ்வுலகத்து உயிர்களைக் காப்பாற்றும் கையாகும். 47

189. நெடுஞ்சுவரே! நில்லாய்!

(வேலி என்பவள் ஒரு சுவர் கட்ட எண்ணினாள். அதைக் கட்டி முடிப்பவர்க்குக் குறுணி நெல் தருவதாக உரைத்தாள். ஆனால் கட்டி முடித்துத் திரும்பியதும் அது பிரம்ம ராட்சசியால் வீழ்த்தப்படும். எனவே, சுவரைக் கட்டுபவர் கூலி இல்லாமல் செல்வர். இங்ஙனம் அவள் வஞ்சகச் செயலை செய்து வந்தாள். கம்பர் இதை அறியாமல் சுவரை எழுப்பித் திரும்பிய போது அது விழுந்தது. அதன் காரணத்தை உணர்ந்து கம்பர் இப்பாடலைப் பாடினார். இவர் பெரும் புலவர் என்பதால் பிரம்ம ராட்சசி விலகியது. சுவர் நின்றது.

மற்கொண்ட திண்புயத்தான் மாநகர்விட்டு இங்குவந்தேன்;
சொற்கொண்ட பாவின் சுவையறிவார் இங்கிலையே;
விற்கொண்ட வாள்நுதலாள் வேலி தரும்கூலி
நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே.

மல்போர் செய்வதில் வல்லவனான திண்ணிய தோளையுடைய சோழ மன்னனின் நகரத்தை விட்டு இங்கு வந்தேன்; நல்ல சொற்கள் அமைந்த கவிச்சுவையை அறிபவர் இங்கு இல்லையே வில் போன்று வடிவம் உடைய புருவமும் ஒளி கொண்ட நெற்றியும் உடைய வேலி என்பாள் தரும் கூலியாகிய நெல்லை எடுத்துச் செல்லும் வரையில், பெரிய சுவரே, விழாமல் இருப்பாயாக. 48

190. ஊர் வாயை மூட இயலாது.

(கம்பர் சேர மன்னனிடம் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார். ஒருநாள் அவர் சேர மன்னரின் போர்வையைப் போர்த்தியபடி உறங்கினார். அப்போது அவரைச் சேர மன்னன் என எண்ணிச் சேரனின் மனைவியும் உடன் படுத்துக் கொண்டாள். அப்போது கம்பர் பாடியது)

தேரையார் செவ்விளநீர் உண்ணுப் பழிசுமப்பர்;
நாரியார் தாம்அறிவார் நாமவரை நத்தாமை;
கோரைவாய்ப் பொன்சொரியும் கொல்லிமலை நன்னுடா,
ஊரைவாய் மூடஉலை மூடிதான் இலையே.

கோரைப் புல்லின் அடியிலே ஆறு பொன்னைக் கொணர்ந்து சேர்க்கும் கொல்லி மலைக்கு மன்னனே! தேரைகள் இளநீர்க் காய்களைக் குடிக்காமலேயே பழியைச் சுமக்கும்; சேரனின் மனைவி அருகில் இருந்தும் நாம் அவரிடம் ஆசை கொள்ளாமையை அவர் நன்கு அறிவார்; என்றுலும் ஊரில் உள்ளவர் கூறும் பழியைத் தடைசெய்ய, உலை வாயை மூடுவதற்கு ஏற்ற தட்டுப் போன்ற ஒரு கருவி இல்லையே! என்செய்வது?

விளக்கம்: இளநீரைக் குடிக்காமல் தேரை பழி சுமப்பது போன்று, அரசனின் மனைவியை விரும்பாமலேயே பழி உண்டாகி விட்டதே எனக் கம்பர் இரங்கினர். 49

191 கிழங்கு விற்பவளின் நாவோசை வையத்தை விலையாகக் கொள்ளும்!

(கம்பரின் மகன் அம்பிகாபதி சோழரின் மகளைப் புகழ்ந்து பாதிப்பாட்டைப் பாட, கம்பர் எஞ்சிய பாதிப்பாட்டைப் பாடி முடித்தார்.)

இட்டடி நோவ, எடுத்தடி கொப்புளிக்க
வட்டில் சுமந்து மருங்கு அசையக்—கொட்டிக்

கிழங்கோ கிழங்குஎன்று கூறுவாள் நாவில்
வழங்குஓசை வையம் பெறும்.

(அம்பிகாபதி) நிலத்தில் வைத்த அடி வருந்தவும், நிலத்தினின்று எடுத்த அடியானது வெம்மையால் கொப்புளம் கொள்ளவும் உணவுக் கலத்தை இடையானது சுமந்து வருந்தவும்(எனப்பாட,கம்பர்)'கொட்டிக் கிழங்கு வேண்டுமா' என விலை கூறி விற்பவளது நாவினின்று எழும் இனிய ஒலியானது உலகம் முற்றும் விலையாகப் பெறத் தக்கதாகும் (என்று பாடி முடித்தார்.)

விளக்கம் : சோழனின் மகளைக் குறித்து அம்பிகாபதி பாடியதால், மன்னன் அம்பிகாபதி தன் மகளை விரும்புவதை 'அறிவான். சினம் கொள்வான்' என அஞ்சியதால், கம்பர் பின்னிரண்டடியைப் பாடி அதன் மூலம் அவன் பாடியது கிழங்கு விற்பவளைக் குறிப்பதாகும் என்ற பொருள் தோன்றச் செய்தார். 50

192 தலையலங்காரம் புறப்பட்டது!

(சோழன், அம்பிகாபதி தன்மகளை விரும்புவதை அறிந்தான். சிற்றின்பம் கலவாமல் இறைவனைப் பற்றி நூறு பாடல் பாடினால் அம்பிகாபதியை மன்னிப்பதாகக் கூறினான். அம்பிகாபதி காப்புச் செய்யுள் ஒன்றும் தொண்ணூற்றென்பது பாடலும் பாட, அவன் நூறு செய்யுட்களைப் பாடிவிட்டதாகச் சோழன் மகள் எண்ணி, அவள் தான் மறைந்திருந்த இடத்தினின்று எட்டிப் பார்க்க, உடனே அவன் இறைவனைக் குறித்து நூறும் செய்யுளைப் பாடுவதற்குப் பதில் அவளைப் பற்றிப் பாடத் தொடங்கினான். அதுவே இச்செய்யுள்.)

சற்றே பருத்த தனமே குலுங்கத் தரளவடம்
துற்றே அசையக் குழையூசல் ஆடத்துவர் கொள்செவ்வாய்
நற்றேன் ஒழுக நடன சிங்கார நடைஅழகின்
பொற்றேர் இருக்கத் தலையலங் காரம் புறப்பட்டதே.

சிறிது பருத்த மார்புகள் அசையவும், முத்து மாலை நெருங்கி ஆடவும், காதணி அசையவும், பவழம் போன்ற வாயினின்று தேன் சிந்தவும், நடனம் போன்ற நல்ல அழகினையுடையவளின் பொன் தேரின் தட்டுப் போன்ற அல்குல் உள்ளே மறைந்திருக்கவும், தலையழகானது வெளியே தோன்றியது. 51

193. என்ன பாவத்தை யான் செய்தேன்!

(சோழன் அம்பிகாபதிக்குத் தண்டனை அளித்தபோது பாடியது.)

வீரமுண்டோ மதன்கை அம்பினுல் வெந்து வீழுகைக்கு
நேரமுண்டோ வஞ்சி நேர்பட்ட காலையில் நெஞ்சைவிடப்
பேரமுண்டோ சொல ஒண்ணுத காமப் பெருநெருப்புக்கு
ஈரம்உண்டோ, ஐயனே, என்னபாவம் இனிச்சொல்வதே.

ஐயனே! மன்மதன் கையம்பால் வீழ்வார்க்கு வீரம் நிலைக்குமோ? பெண்ணின் காட்சியானது எதிர்ப்படுமானுல், அப்போது பின்பு வர இருக்கும் தண்டனையைப் பற்றி நினைப்பதற்கு நேரம் இருக்குமோ? உளளத்தை நெகிழ விடாமல் என்ன செய்ய முடியும்? அளவிட்டுச் சொல்ல இயலாத காமமாகிய மிகுந்த தீயில் ஈரம் நிலைபெற்றிருக்குமோ? இதில் குற்றம் யாதிருக்கிறது? இதன்மேல் கூறக் கூடியது யாது? 52

194. நெஞ்சிலே இட்ட நெருப்பு

உருகி உடல்கருகி உள்ளீரல் பற்றி
எரிவது அவியாது என்செய்கேன்?—வரியரவ
நஞ்சிலே தோய்ந்த நளினவிழிப் பெண்பெருமாள்
நெஞ்சிலே இட்ட நெருப்பு.

பாம்பின் நஞ்சில் மூழ்கிய, தாமரை போன்ற விழிகளையுடையவள் தோற்றுவித்த காதல் தீயால் உள்ளம் உருகி உடல் வெப்பதால் துன்புற்று உள்ளே இருக்கும் ஈரலிலேயும் அது பற்றியுள்ளது. அது ஆறுது. அதைத் தீர்க்க என்ன செய்வேன்? 53

195. இலக்குமியைப் படைத்த பின் இவளைப் படைத்தானே!

மய்வடிவக் குழலியர்தம் வதனத்தை
நிகரொவ்வா மதியே, மானே,
செய்வடிவைச் சிற்றிடையைத் திருநகையை
வேய்த்தோளைத் தெய்வ மாக

இவ்வடிவைப் படைத்தவடிவு எவ்வடிவோ?
யானறியேன் உண்மை யாகக்
கய்படியத் திருமகளைப் படைத்திவளைப்
படைத்தனன்நல் கமலத் தோனே.

மானைப் போன்ற விழியை யுடையவளே! சந்திரன் கரிய மை போன்ற கூந்தலையுடைய பெண்களின் முத்துக்கு ஒப்பாகாமல் அவர்களின் சிவந்த உடலையும், சிறிய இடையையும், அழகிய பற்களையும், மூங்கில் போன்ற தோள்களையும் நன்கு அமையுமாறு இவ்வடிவத்தைப் படைத்த தெய்வம் எத்தகைய வடிவத்தை யுடையதோ! நான் அறியேன்! தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகன், உண்மையில், கை பழகுவதற்காக இலக்குமியைப் படைத்துப் பழகிய பின் இவளைப் படைத் திருக்க வேண்டும்! 54

196. *கூத்தா! என் செய்யலாம்? கூறு!*

கண்டீரோ காணம்பி காபதி செயும்பிழையைக்;
கண்டீரோ நம்மீதில் கள்ளம்இல்லை;—உண்டோகாண்
ஆற்ருது கோபம் அடங்கஇவ ஊைஒட்டக்
கூத்தா,என் செய்திடலாம் கூறு.

ஒட்டக்கூத்தரே! அம்பிகாபதி இழைத்த குற்றத்தைப் பார்த்தீரா? என்னிடத்தில் குற்றம் இல்லை; குற்றம் இருப்பின் கூறுக! என் சினம் தணியவில்லை. அது தணிவதற்கு, இந்த அம்பிகாபதிக்கு என்ன தண்டனை தரலாம்? தெரிவிப்பீராக! 55

197. *கழுவில் ஏற்று!*

பனிப்பகையோன் மாமரபின் பார்த்திபனே, சோழா,
உனக்கினியான் சொல்லுவது ஒன்றுண்டோ?—கனத்த
பிழைசெய்தான் அன்னைக்குப்; பின்பார்க்க வேண்டா
கழுவினிலே ஏற்றிவிடல் காண்.

கதிரவனின் மரபில் தோன்றியவனே! உனக்குத் தெரியாதது ஒன்று உண்டா? அம்பிகாபதி நம் தாய் போன்றவளுக்குப் பெருங்குற்றத்தைச் செய்தான். இனிப் பொறுக்க வேண்டா. இவனைக் கழுவில் ஏற்றுவதே தகுந்த தண்டனையாம். 56

198. கெடுவாய் நீ!

(சோழன் அம்பிகாபதியைக் கொல்ல யானையை ஏவினான்- அப்போது பாடப் பெற்றது.)

வெங்கண் சிவந்து வெடிவால் முறுக்கி வெகுண்டு எழுந்தென்
அங்கம் பிளக்க வரும்களிறே,அன்றிர ணியனைப்
பங்கம் படஉரம் கீண்டே உதிரம் பருகுநர
சிங்கம் இருக்குதுகாண் கெடுவாய் என்றன் சிந்தையிலே.

கண்கள் சிவந்து வாலை முறுக்கிக்கொண்டு சீற்றத்துடன் எழுந்து எனது உடலைப் பிளவு செய்ய வருகின்ற யானையே! முன்காலத்தில் இரணியன் என்ற அசுரனது மார்பைக் கீறி, உதிரத்தை உட்கொண்ட நரசிங்கப் பெருமான் என் நெஞ்சில் உள்ளார்; எனவே, என்னிடத்தில் வந்தால் நீ இறந்து போவாய்! 57

199 மகனே! உன்னால் விளைந்தது!

இந்நாள் இதுவிளையும் என்றெழுத்துத் தானிருக்க
என்னாலே ஆவதொன்று மில்லையே;—உன்னாலே
வந்ததுதான் அப்பா, மகனே, தவிர்ப்பவர்ஆர்
முந்தையில்நீ செய்தவினை யே.

இன்று இது நடைபெறும் என்று நான்முகன் எழுதிய எழுத்திருத்தலால் அதற்கு மாறாக நான் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. இப்போது உண்டான இத்தீமை உன்னாலே நீயே உண்டாக்கிக் கொண்டதாகும். முற்பிறவியில் நீ செய்த வினையின் பயனை விலக்கக் கூடியவர் யார்? ஒருவரும் இல்லை. 58

200. அம்பிகாபதியின் விடை

இந்நாள் இதுவிளையும் என்றெழுத்துத் தானிருக்க,
என்னாலே ஆவதொன்றும் இல்லையே;—என்னாலே
வந்ததுகாண் ஐயா, வரும்விதியை யார்தடுப்பார்?
எந்தைமக தேவர்செய லே.

தந்தையே! 'இந்நாளில் இந்தச் செயல் நிகழ வேண்டும்' என்று நான்முகன் எழுதிய எழுத்திருக்க, அதைத் தடுப்பதற்கு என்னால் செய்யக் கூடியது ஒன்றுமில்லையே! இந்தத்

தீமை என்றாலே நிகழ்ந்ததாகும்; விளையக் கூடிய விளைவை எவர் தடை செய்ய முடியும்? அது எம் தந்தையாகிய மகா தேவனது செயலால் உண்டானதாகும். 59

201. *விதிப்படி வெட்டுப்பட்டாய்!*

(அம்பிகாபதியை மன்னன் வெட்டிய போது பாடியது)

மட்டுப்ப டாக்கொங்கை மானார் கலவி மயக்கத்திலே
கட்டுப்பட் டாய்என்ன காதல்பெற் றாய்மதன் கை அம்பினால்
பட்டுப்பட் டாயினும் தேறுவை யேஎன்று பார்த்திருந்தேன்
வெட்டுப்பட் டாய்மக னேதலை நாளின் விதிப்படியே.

மகனே! மான் போன்ற பெண்டிரின் சேர்க்கையால் வரும் எல்லையில்லாத மயக்கத்தில் அகப்பட்டாய்! விரும்பிய எதைப் பெற்றாய்? மன்மதன் அம்பால் பலமுறையும் துன்புற்றபின் தெளிவடைவாய் என எண்ணினேன். முன்னைய விதிப்படி நீ வெட்டுண்டு மாண்டாய். 60

202. *மகன் இறந்தும் நான் மாயவில்லையே!*

பரப்போத ஞாலம் ஒருதம்பி ஆளப் பனிம தியம்
துரப்போன் ஒருதம்பி பின்வரத் தானும் துணைவியுடன்
வரப்போன மைந்தர்க்குத் தாதைபொ ருதுஉயிர் மாய்ந்தனன்
நெஞ்சு
உரப்போ எனக்குஇங்கு இனியார் உவமை உரைப்பதற்கே.

கடல் சூழ்ந்த இந்த வுலகத்தை, ஒப்பில்லாத தன் தம்பி ஆளவும், சந்திரனின் வெண்மை நிறத்தை வென்ற இலக்குவன் பின்னால் வரவும், தன் மனைவியான சீதையுடன் பதினான்கு ஆண்டுகள் வனம் சென்று திரும்ப எண்ணிய மைந்தனான இராமனுக்காகத் தந்தையான தசரதன், தன் மகன் காட்டுக்குப் போய்த் திரும்பும் வரையும் பொறுத்திருக்காமல் உயிரை விட்டான்! நான் என் மகன் இறந்ததும் இறவாமல் இருப்பது மன உறுதியினாலோ! இனி எனக்கு உவமையாகச் சொல்லக் கூடியவர் யார்?

203. *பேயின் கையை வெட்டினான்!*

(ஒருநாள் சேரன் நகர் சோதனை வந்தான். அப்போது காளி கோயிலில் ஒருவன் சந்தனத்தை அரைக்க அது வழிந்து சிந்தியது. அதைப் பேய் ஒன்று தொட்டது. சந்தனம்

அரைத்தவன் அப்பேயின் கையை, அது, தான் பேய் என உரைத்தும் கூட, அஞ்சாமல் வெட்டினுன். அதைப் பார்த்த பின்பு மன்னன் கம்பர் வீட்டுக்கு வந்து கதவை தட்டினுன். கம்பரும் அம்பிகாபதியும் அந்நிகழ்ச்சியை நேரில் கண்டது போலப் பாடினர். இங்ஙனம் ஒருவர் மனத்தில் இருப்பதை மற்றவர் பாடுவது கண்ட சுத்தி.)

கரைக்கு வடக்கிருக்கும் காளிகாள் அம்மைக்கு
அரைத்து வழிசாந்தைத் தொட்டப்பேய் உரைத்தும்
மறைக்க அறியா தவன்பேயின் கையைக்
குறைக்குமாம் கூன்கத்தி கொண்டு.

ஆற்றின் கரையில் உள்ள கோயிலில் வீற்றிருக்கும் காளியாகிய காளம்மனுக்குச் சந்தனத்தை அரைத்தபோது மிகுந்து வழிந்ததைக் கையால் தொட்ட பேய், தான் பேய் என்பதைக் கூறிய பிறகும், வளைந்த கத்தியால் சந்தனத்தை அரைத்தவன் அப்பேயின் கையை வெட்டினுன்.
(இதில் இரண்டடியைக் கம்பர் பாட, பின்னிரண்டடியை அம்பிகாபதி பாடி முடித்தான்.) 63

204. வேளாளர் பிறந்ததால் திருமாலுக்கும் சிவனுக்கும் உண்டான மகிழ்ச்சி

காலப் புயல்நிகர் காராளர் தம்மைக் கடல்உடுத்த
தாலக் குலமங்கை பெற்றதனுல் சதாகா லமுமால்
கோலத் திருமுகத் தாலே முகந்தனன் கூடலிலே
சூலக் கரப்படை யான்தலை மீது சுமந்தனனே.

கடலாகிய ஆடையை உடுத்த நிலமகள், தக்க காலத்தில் மழை பொழியும் மேகத்தைப்போன்ற வேளாளரைத் தோற்றுவித்ததால், முற்காலத்தில் திருமால் தன் வராக அவதார மேனியில் உள்ள கொம்பினுல் கடலினின்று உலகத்தைத் தூக்கி யெடுத்தார்; மதுரைப்பதியில் உள்ள சிவபெருமான் மாணிக்க வாசகரின் பொருட்டாகப் பிட்டுக்கு மண் சுமந்த போது தன் தலையில் உலகத்தைச் சுமந்தான். 64

205. நின் தாரம் என் தங்கை!

(கைக்கோளன் ஒருவனின் மனைவி தன் மீது பாடல் பாட வேண்டும் என்பதற்காக கணவனை மறைத்துவிட்டுக்

கம்பரைத் தன் விட்டுக்கு வரச் செய்தாள். கம்பர் அவள் வீட்டுக்கு வந்ததும், அந்தக் கைக்கோளன் ஒரு தடியால் அடிக்க வந்தான். அப்போது கம்பர் இதனைப் பாடினார்.)

மய்க்கிணை யான விழிக்கணை
கொண்டு மருட்டி இருட்டறையில்
பொய்க்கள வாகப் புகுந்ததும்
உண்டு; புணர்ந்ததும் இல்லையடா;
கய்க்கிசை வான குறுந்தடி
கொண்டு கழுத்தைநெ ரிக்கவரும்
கய்க்கள வா, என் தங்கைய
டா,நின் தாரமடா, விடடா.

மைபோன்ற கரிய கண்களாகிய அம்பைக்கொண்டு உன் மனைவி என் மனத்தை மருளச்செய்து பொய்யான களவுப் புணர்ச்சிக்காக அழைத்ததால், நான் இருள் மிகுந்த நின் வீட்டில் வந்த துண்டு; உண்மையே! ஆனால், நான் அவளைக் கூடியதில்லை. உன் கைக்கு ஏற்ற சிறிய தடியை எடுத்துக் கொண்டு கழுத்தை நெரிக்கவரும் கைக்கோளனே! அவள் என் தங்கையாவாள்; நினக்கு எப்போதும் பேர்ல் மனைவி யாவாள். ஆதலால் என்னை விட்டுவிடு. 65

206. அவள் நின் மனைவியே!

(வலையன் ஒருவன் வீட்டிலும் மேற்கண்டவாறே நிகழ அப்போது பாடியது)

இருளை இருள்விழுங்கி எவ்விடமும் தோன்றுது
இருவிழியும் கோல்வழியே செல்ல—வரும்எல்லை
வந்ததுண்டு சேர்ந்ததில்லை மாலேஅல் லாமலே
அந்தமனை உந்தன்மனை யே

மிக்க இருளானது நிறைந்து எந்தத் திக்கும் கண்ணுக்குப் புலப்படாமல் இருக்க, இருவிழியும் வழிகாட்டும் கோலையே பின் பற்றவுமான இரவில் நின் வீட்டுக்கு யான் சென்றேன்; விரும்பியது உண்மை. ஆனால் உன் மனைவியை யான் சேர வில்லை. அவள் இப்போதும் நின் மனைவியாகவே (கற்புடை யவளாகவே) உள்ளாள். 66

207. உன் குலத்தை என் வாய்ச்சொல் சுட்டது!

(கம்பர் தம் மகனைச் சோழன் கொன்றுன் என்று வருத்தத்துடன் இருந்தார். அப்போது ஒரு நாள் சோழனின் மகனை யானை துரத்த, அவன் அஞ்சிக் கம்பரது வீட்டுக்குள் புகுந்தான். கம்பர் அவனை எழுத்தாணியால் குத்திக் கொன்ருர். இதனை அறிந்த சோழன் கம்பர்மீது அம்பெய்தான். அப்போது கம்பர் இதனைப் பாடினுர்.)

வில்லம்பு சொல்லம்பு மேதினியில் இரண்டுண்டு;
வில்அம்பில் சொல்லம்பே மேல்அதிகம்;—வில்அம்பு
பட்டதடா என்மார்பில்! பார்வேந்தா, நின்குலத்தைச்
சுட்டதடா என்வாயில் சொல்.

மன்னனே! இவ்வுலகத்தில் வில்லினின்று விடும் அம்பு, சொல்லாகிய அம்பு என இரண்டு அம்புகள் உண்டு; வில்லம்பை விடச் சொல்லம்பே கொடியதாகும்; நின் வில்லினின்று விட்ட அம்பு என் மார்பில் பாய்ந்தது; ஆனல் என் வாயினின்று வெளிப்படும் சொல்லம்பு நின் குலத்தை அழித்தது. 67

208. கம்பர் வீட்டு வேலைக்காரியின் பாடல்

நெற்படிவிளைக்ழனி புடைசூழ் நென்மலிவாழ் தச்சன்;
கற்படி பனைதோளான் பெயரோ கங்கண கணகணவன்;
விற்படி வாணுதலாள் மனைவி மின்மினி மினிமினிமி;
சொற்படி வேலைசெயும் அவளோ துந்துமி துரிதுரிதி.

நெல்பயிர் வகை வகையாக விளைகின்ற வயல்கள் பக்கங்களில் சூழ்ந்திருக்கும் 'நென்மலி' என்னும் ஊரில் வாழ்கின்ற தச்சன் கல்போன்ற தோள்களையுடையவன்; அவனது பெயர் கங்கண கணகணவன்; ஒளிபொருந்திய நெறியையுடைய அவன் மனைவியின் பெயர் மின்மினிமினி மினிமி; அவளுக்குக் கீழ்ப் படிந்து வேலை செய்யும் பணிப்பெண்ணின் பெயர் துந்து மிதுரிதுரிதி ஆகும். 68

209. அப்பணிப் பெண் கம்பரிடத்தில் தன் ஆற்றலைக் காட்ட வந்த 'சோமாசி' என்ற புலவனைப் பார்த்துப் பாடியது.

வட்டமதி போலிருக்கும்; வன்னிக் கொடிதாவும்;
கொட்டுவார் கையினின்று கூத்தாடும்;—சுட்டால்

அரகரா என்னுமே, அம்பலசோ மாசி,
ஒருநாள்விட் டேன்ஈது உரை.

'அம்பல சோமாசி' என்ற பெயருடைய புலவனே! வட்டமான திங்களைப் போலிருக்கும்; நெருப்பின் உச்சியைத் தாவிச் செல்லும்; அதைத் தட்டுபவரின் கைகளில் கூத்தாடும்; தீயில் இட்டுச் சுட்டால் 'அரகரா' என்று சொல்லி அணிவதற்குரியதாகும்; நீ இதனை இன்னது என்று சொல்வாயாக! இதைச் சிந்தித்துச் சொல்வதற்கு ஒரு நாள் நேரம் தருகிறேன்!

(இது அவள் புலவருக்கு இடும் புதிர். இதற்கு விடை வரட்டி. இதைச் சொல்ல அறியாமல் 'சோமாசி' என்ற புலவர் வெட்கினர்.) 69

12. ஏகம்பவாணர் பாடல்கள்

210. மூவேந்தரின் முடியை நட்டார்!

(சேர, சோழ, பாண்டியர் ஏகம்பவாணரின் வீட்டுக்கு வந்து 'ஏகம்பவாணர் எங்கே?' என்றனர். அதற்கு ஏகம்பவாணரின் மனைவியார் 'வயலுக்குச் சென்றார்' என்றனள். அவர்களோ இகழ்ச்சியாக 'முடிநடுவதற்காகச் சென்றாரோ?' என வினவ, அவ்வம்மையார் இதனைப் பாடினர்.)

சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி
ஆனை மிதித்த அருஞ்சேற்றில்—மானபரன்
மாவேந்தர் வேந்தன் பறித்துநட்டா னேகம்பன்
மூவேந்தர் தங்கள் முடி.

பெருமையுடைய மன்னர்க்கு மன்னரான ஏகம்பவாணர் போர்ப் படைகளை எல்லாம் நிலத்துக்குரிய இலையுரம் போல ஆக்கி, இரத்தமாகிய நீரைக் களத்தில் தேங்குமாறு செய்து, யானைக் காலால் மிதித்து உண்டான சேற்றில், சேர சோழ பாண்டியரின் முடிகளைப் பறித்து நாற்றாக நட்டார். 1

211. வேப்ப மாலையைத் தா!

(சேர, சோழ, பாண்டியர், 'ஏகம்பவாணர் முடிநடப் போனாரோ?' என்று வினவியதை அவருடைய மனைவியார் ஏகம்பவாணருக்கு உரைத்தாள். அதைக் கேட்ட ஏகம்ப வாணர் சினங்கொண்டு பூதத்தை அனுப்பிச் சோழனையும் சேரனை

யும் பிடித்துவரச் செய்து சிறையில் அடைத்து விட்டார். ஆனால் பூதம், பாண்டியன் வேப்ப மாலையுடையவனாக இருந்ததால் அவனை அணுகவில்லை. எனவே, அவனைத் தந்திரத்தால் வெல்ல எண்ணிய ஏகம்பவாணர் நான்கு பெண்களை அனுப்பினார். அவர்கள் ஆடல் பாடலால் மகிழ் வித்த போது பாண்டியன் பரிசாக அணி முதலியவற்றைத் தர முன் வந்தான். அவர்கள் அதை மறுத்துவிட்டுத் தங்களுக்கு அவனது வேப்பமாலையைத் தரவேண்டும் என்று பாடினர்.)

தென்னவா, மீனவா, சீவிலிமா ரு, மதுரை
மன்னவா, பாண்டி வரராமா,—துன்னும்
சுரும்புக்குத் தார்அளித்த துய்யதமிழ் நாடா;
கரும்புக்கு:வேம்பிலே கண்.

தெற்கில் உள்ளவர்க்குத் தலைவனே! மீன்கொடி உடைய வனே! திருவில்லிபுத்தூரையுடைய வில்வீரனே! பாண்டிய நாட்டை யுடையவனே! வண்டுகளுக்குத் தன் மாலையைத் தந்தவனே! கரும்பைப் போன்ற என் பெண்ணுக்கு நீ அணிந்திருக்கும் வேப்பமாலையிலேதான் விருப்பம் உள்ளது! ஆகவே அதனைத் தருக. உ

212. வேப்பந்தார்க்கு ஆசை கொண்டாள்!

மாப்பைந்தார்க்கு அல்ல,முத்து வண்ணத்தார்க் குஅல்ல;வஞ்சி
வேப்பந்தார்க்கு ஆசைகொண்டு விட்டாளே—பூப்பைந்தார்
சேர்ந்திருக்கும் நெல்வேலிச் சீவிலிமாரு, தமிழை
ஆய்ந்திருக்கும் வீரமா ரு.

பசுமையான மலர்மாலையை அணிந்த திருநெல்வேலிப் போரில் வென்ற பாண்டியனே! தமிழை ஆராய்ந்த வீரபாண்டியனே! என் மகள் வேறு எந்தப் புதிய மாலைக்கும் ஆசைப்பட வில்லை! நின் வேம்பு மாலையைப் பெற வேண்டு மென்றே விரும்பினாள்.

213. மாலையிலே மாலை வைத்தாள் மான்!

வேம்பா கிலும்இனிய சொல்லுக்கு நீபுனைந்த
வேம்பா கிலும்உதவ வேண்டாவோ?—மீன்பாயும்
வேலையிலே வேலைவைத்த மீனவா, நின்புயத்து
மாலையிலே மாலைவைத்தாள் மான்

மீன்கள் உலவும் கடலானது வற்றிப் போகுமாறு வேற்படையை எறிந்தவனே! என் மகள் நின் தோளில் அணிந்த மாலையிலே ஆசை கொண்டுள்ளாள். காய்ச்சும் வெல்லப் பாகைவிட இனிய சொல்லையுடையவளுக்கு நீ சூடியிருக்கும் வேப்ப மாலையையாவது தர வேண்டாவோ? 4

214. வேம்பு மாலையை விலக்க மாட்டான்

இலகு புகழ்ஆறை ஏகம்ப வாணன்
அலகை வரும்என்று அஞ்சி—உலகுஅறிய
வானவர்கோன் சென்னிமிசை வண்கை வளையெறிந்த
மீனவர்கோன் கைவிடான் வேம்பு.

இவ்வுலகத்தில் உள்ளவர் அறியுமாறு இந்திரனின் முடியின் மீது தன் கையில் உள்ள 'வளை' என்ற ஆயுதத்தை எறிந்த பாண்டியன், ஏகம்பவாணன அனுப்பிய பூதம் வரும் என்று கருதித் தனது வேப்ப மாலையை உடலினின்று விலக்க மாட்டான்.

(பேய் வேப்ப மாலையைக் கண்டால் அஞ்சும்.) 5

215. பரத்தையைத் தீண்டிய கையால் என்னைத் தொடாதே!

(விலைமகளிடம் சென்று வந்த பாண்டியனை நோக்கி அவன் மனைவி உரைத்தது)

வேண்டியபோது இன்பம் விளைக்கும் மடந்தையரைத்
தீண்டியகை யால்என்னைத் தீண்டாதே!—பாண்டியா,
முல்லைக்கு அதிபா, முகம்பார்த்து அகலநின்று
சொல்லக் கடவஎல்லாம் சொல்.

பாண்டியனே! முல்லை நகர்க்குத் தலைவனே! விரும்பிய நேரத்தில் இன்பத்தைத் தரும் விலைமகளைத் தீண்டிய கையால் என்னைத் தொடாதே! விலகி நின்று தலையைக் குனியாமல், சொல்ல எண்ணியவற்றை யெல்லாம் சொல்வாயாக! 6

216. சிவகங்கையிலே நீராடி வா!

(மேற்கண்ட சமயத்திலேயே இதுவும் பாடப்பெற்றது)

கலையால் முலைமூடிக் கண்வலைக்குள் ளாக்கும்
விலைமாதர் தாம்வர விட்டாரோ—விலைமாதர்

கொங்கையிலே தோய்ந்த குறைதீரத் துய்யசிவ
கங்கையிலே நீராடி வா.

சேலையால் மார்பை மூடுவதுபோலக் காட்டி,கண்கள் என்ற வலைக்குள் ஆடவரைச் சிக்குமாறு செய்கின்ற விலைமகளிர் உன்னை என்னிடம் வருவதற்கு இடம் தந்தனரோ? அந்த விலைமாதரின் மார்பைச் சேர்ந்த குற்றம் நீங்குமாறு, தூய்மையான சிவகங்கையில் நீராடி விட்டு என்னிடம் வருவாயாக!

13. காளமேகப் புலவர் பாடல்கள்

217. அரியாசனத்தில் வைத்த தாய்

(புலவர் காளமேகம் திருமலைராயன் அவைக் களத்துக்குச் சென்றார். அப்போது அவையில் இருந்த புலவர்கள் அவருக்கு அமர, இருக்கையைத் தரவில்லை. அப்போது, புலவர் இப்பாடலைப் பாட, திருமலைராயனின் அரியாசனம் நீண்டு இவருக்கு அமர 'இடம் தந்தது.)

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தில் அரசரோடு என்னைச்
சரியா சனம்வைத்த தாய்.

வெண்ணிற ஆடையை அணிந்து, வெண்ணிற அணிகளைப் பூண்டு, வெண்டாமரை மலரில் வீற்றிருப்பவளாகிய கலைமகள் குற்றம் இல்லாத சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் மன்னர்களுடன் என்னையும் சமமாக வீற்றிருக்கக் கூடிய இருப்பிடத்தை ஏற்படுத்தியவள் தாய் ஆவாள் என அறிவீராக. 1

218. ஆமணக்குக்கும் யானைக்கும் சிலேடை

முத்திருக்கும்; கொம்பசைக்கும்; மூரித்தண்டு ஏந்திவரும்;
கொத்திருக்கும்; நேரே குலைசாய்க்கும்;—எத்திசைக்கும்
தேமணக்கும் சோலைத் திருமலைரா யன்வரையில்
ஆமணக்கு மால்யானை யாம்.

எல்லாத் திசையிலும் மணம் வீசும் சோலைகளையுடைய திருமலைராயனது மலையிலே,

ஆமணக்கு,

முத்தைப் போன்ற விதைகளைப் பெற்றிருக்கும்; கிளைகளை அசைக்கும்; அது வன்மையான மரக்கிளைகளைத் தாங்கி வளரும்; பூங்கொத்துகளை உடையதாயிருக்கும்; அவை காயுடன் கூடிய குலைகளை நேராகத் தொங்க விட்டிருக்கும்; பெரிய யானையானது,

முத்துப் பொருந்திய கொம்புகளை அசைக்கும்; வன்மையான கட்டைகளைத் தூக்கி வரும்; அதன் மத்தகத்திலே பாகன் அங்குசத்தால் குத்திய குத்துகளைப் பெற்றிருக்கும்; பகைவர்களாகிய கூட்டத்தைச் சாய்க்கும்;

எனவே, இக்காரணங்களால் ஆமணக்கு பெரிய யானைக்கு ஒப்பாகும். 2

219. வைக்கோல், யானை

வாரிக் களத்தடிக்கும்; வந்துபின்பு கோட்டைபுகும்;
போரில் சிறந்து பொலிவாகும்;—சீர்உற்ற
செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலும் மால்யானை யாம்.

புகழ் பொருந்திய சிவந்த உடலையுடைய திருமலை ராயனின் மலைமீது,

வைக்கோலானது,

வயலிலிருந்து கொண்டு வரப்பட்டு நெற்களத்தில் இட்டு அடிக்கப்படும்; பின்னர் அது புரியாகத் திரிக்கப்பட்டு நெற்கோட்டையைச் சூழ்ந்திருக்கும்; மிகுந்த குவியலாகக் குவிக்கப்பட்டு மலைபோன்று உயரமாக விளங்கும்;

பெரிய யானையானது,

போர்க்களத்தில் பகைவரின் படைகளை நிலத்தில் தாக்கிக் கொல்லும்; போர் முடிந்தபின் அரண்மனைக் கோட்டைக்குள் வந்து புகும்; போர் செய்வதில் ஏனைய தேர், குதிரை முதலிய படைகளைவிட மேன்மையாக விளங்கும்.

எனவே, இந்த ஒப்புமைகளால் வைக்கோல்கூட யானைக்கு ஒப்பாகும். 3

220. பாம்பு, வாழைப்பழம்

**நஞ்சிருக்கும்; தோல்உரிக்கும்; நாதர்முடி மேலிருக்கும்;
வெஞ்சினத்தில் பட்டால் மீளாது;—விஞ்சுமலர்த்
தேம்பாயும் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பாகும் வாழைப் பழம்.**

மலர்களிலிருந்து தேன் பொழியும் சோலையை யுடைய திருமலைராயன் மலையில்,

பாம்பு,

நஞ்சை யுடையதாக விளங்கும்; தன் மேல்தோலைத் தக்க காலத்தில் உரிக்கும்; சிவபெருமானின் முடியின்மீது அணியாக இருக்கும்; மிக்க சினத்துடன் இருக்கும்போது எவர் உடலின் மேலாவது அதன் பல் பதியுமானால் விடம் ஏறி இறந்தவரின் உயிர் திரும்பாது;

வாழைப்பழம்,

நைந்து கனிவாக இருக்கும்; உண்பவரால் தோல் உரிக்கப்படும்; பஞ்சாமிர்தத்தில் கலக்கப்பெற்றுச் சிவபெருமான்மீது அபிடேகம் செய்யப்படும்; மிக்க சினத்தை உண்டாக்கும் பசி நேரத்தில் மனிதரின் பல்லில் படுமானால் அவர்களுடைய வயிற்றில் போவதன்றித் திரும்ப வெளியே மீளாது.

எனவே, இக்காரணங்களால் பாம்பு வாழைப்பழத்தைப் போன்றதாகும். 4

221. பாம்பு, எள்

**ஆடிக் குடத்தடையும்; ஆடும்போ தேஇரையும்;
மூடித் திறக்கின் முகம்காட்டும்;—ஓடிமண்டை
பற்றில் பரபரெனும் பாரில்பிண் ணாக்கும்உண்டாம்;
உற்றிடுபாம்பு எள்ளனவே ஓது.**

பாம்பு, படமெடுத்து ஆடிக் குடத்தினுள் போய்ச் சேரும்; ஆடும்போது 'சீத்து சீத்து' என்ற ஓசையை உண்டாக்கும்; குடத்தில இட்டபின் மூடியைத் திறந்து பார்த்தால் அது தன் தலையை எடுத்துக் காட்டும்; கடித்தால் அதன் நஞ்சு தலையில் ஓடிச் சென்று பற்றிப் 'பரபர' என்ற உணர்ச்சியை எழுப்பும்; பிளவுபட்ட நாக்கும் அதற்கு உண்டு.

எள்ளானது,

செக்கில் இட்டு ஆட்டப்பெற்று எண்ணெயாகிக் குடத்தில் வார்க்கப்படும்; செக்கிலே ஆட்டுகின்றபோது இரைச்சலை எழுப்பும்; அதன் எண்ணெய் குடத்தில் வார்த்து மூடித் திறந்து பார்க்கின், பார்ப்பவரின் முகத்தைக் கண்ணுடியைப் போன்று காட்டும்; எண்ணெய் ஒருவரது தலையில் ஊற்றித் தேய்க்கப் பட்டால் தலையில் ஓடிப் 'பர பர' எனக் குளிர்ச் சியைத் தரும்; அதனை ஆட்டி எண்ணெய் எடுத்தபின் பிண் ணுக்கும் பெறலாம்; ஆதலால்,இவ்வுலகத்தில் உள்ள பாம்பை எள்ளுக்கு நிகராகும் என்றே சொல்வாயாக! 5

222. பாம்பு, எலுமிச்சம்பழம்

பெரியவிட மேசேரும்; பித்தர்முடி ஏறும்;
அரியுண்ணும்; உப்புமே லாடும்;—எரிகுணமாம்;
தேம்பொழியும் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பும்எலு மிச்சம் பழம்.

தேன் பாயும் சோலைகள் சூழ்ந்த திருமலைராயனின் மலை மீது, பாம்பு,

உயிரைக் கொல்லக் கூடிய மிக்க நஞ்சை யுடையதா யிருக்கும்; பித்தராகிய சிவபெருமானின் முடிமீது அணியப் பெற்றிருக்கும்; காற்றினை உணவாகக் கொள்ளும்; அங்ஙனம் காற்றை உட்கொண்டதால் உடல் பெருக்கும்; தலையைத் தூக்கி ஆடும்; கோபக் குணமுடையதாகும்;

எலுமிச்சம்பழம்,

காணிக்கைப் பொருளாகத் தருவதால் பெரியோரிடத்தில் போய்ச் சேரும்; பித்து உடையவரின் தலையில் பித்தம் தெளிவதற்காகத் தேய்க்கப்படும்; ஊறுகாய்க்காக அது துண்டு துண்டாக நறுக்கப்படும்; ஊறுகாய் போடும்போது அதன் மேல் உப்புத் தூவப்படும்; அதனது சாறு புண்ணில் பட்டால் எரிச்சல் தோன்றும்;

ஆதலால்,

பாம்பு எலுமிச்சம் பழத்துக்கு ஒப்பாகும். 6

223. திருமால், முறம்

வல்லரியா யுற்றிடலான், மாதர்கையில் பற்றிடலான்,
சொல்லரிய மாப்புடைக்கத் தோன்றுதலால்—வல்லோர்

அகந்தனிலே வாழ்தலால் அன்றுஉலகு அளந்த
முகுந்தனுமே ஆகும் முறம்.

முற்காலத்தில் வாமனுவதாரம் கொண்டபோது, தன் ஈரடிகளால் உலகத்தை அளந்த திருமால்,

வன்மையுடைய நரசிம்ம வடிவமாகத் தோன்றினுர்; ஆயர் குலப் பெண்கள் கையால் பிணிக்கப் பட்டார்; சொல்ல இயலாத வலிய குவலயாபீடம் என்ற யானையைக் கொல்ல அவதாரம் செய்தார்; பெரியவர் உள்ளங்களில் வீற்றிருப் பார்;

முறமானது,

புடைப்பதற்குரிய கருவியாக உள்ளது; பெண்கள் கையில் பற்றிப் பயன்படுத்துவர்; சொல்லுவதற்கரிய மாவைப் புடைப்பதற்குப் பயன் படும்; பலருடைய வீட்டில் இருக்கும்; இக்காரணங்களால் திருமால் முறத்தைப் போன்றவர் ஆவார். 7

224. சந்திரன், மலை

நிலவாய் விளங்குதலால், நீள்வான் படிந்து
சிலபோது உலாவுதலால், சென்று—தலைமேல்
உதித்து வரலால், உயர்மா மலையை
மதிக்கு நிகராக வழுத்து.

பெரிய மலையானது, நிலத்தின் மீது உயர்வாகத் தோன்றி விளங்குகிறது; மேகமண்டலத்தை அளாவி நிற்கின்றது; குறிஞ்சி நிலத்துக்குரிய சில மலர்களைப் பெற்றுள்ளது; நிலத்தின் மீது தொடர்ச்சியாகப் பரவி அழகாக உள்ளது.

சந்திரன், நிலவொளியைத் தருகின்றது; நீண்ட வானத்தில் பொருந்திச் சில நேரங்களில் உலவுகின்றது; நிலத்திற்கு மேல் உதயம் செய்து தலைக்கு மேல் வானத்தில் வருகின்றது;

எனவே, இக்காரணங்களால், உயர்ந்த மலையைச் சந்திர னுக்கு ஒப்பாகச் சொல்லுக. 8

225. தேங்காய் நாய் போன்றதே!

ஓடும் இருக்கும்; அதன் உள்வாய் வெளுத்திருக்கும்;
நாடுங் குலைதனக்கு நாணுது;—சேடியே,

தீங்கானது இல்லாத் திருமலைரா யன்வரையில்
தேங்காயும் நாயும்எனச் செப்பு.

தோழியே, தீமையில்லாத திருமலைராயன் 'மலையின்மீது, தேங்காய் ஓட்டைப் பெற்றிருக்கும்; அதன் உட்பக்கம் வெண்மையான பருப்பைக் கொண்டிருக்கும்; விரும்பப்படும் தேங்காய்க் குலையில் கோணாமல் இருக்கும்;

நாயானது, விரைவாக ஓடும்; தளர்ச்சி யடைந்தால் ஓர் இடத்தில் இருக்கும்; அதன் வாயின் உட்பக்கம் வெண்மை நிறமாக இருக்கும்; இரையைத் தேடிச் செல்லும்; மக்க ளிடத்தில் துள்ளி விளையாடுதலையும் விரும்பும்; குரைப்பதில் நாணம் அடையாது;

எனவே, அக்காரணங்களால் தேங்காய் நாய் போன்றதே எனச் சொல்லுக. 9

226. மீன், பேன்

மன்னீரி லேபிறக்கும்; மற்றலையி லேமேயும்;
பின்னீச்சில் குத்தும் பெருமையால்—சொன்னேன்கேள்,
தேனுந்து சோலைத் திருமலைரா யன்வரையில்
மீனும்பே னுஞ்சரியா மே.

தேன் சிந்தும் திருமலைராயன் வரையில்,

மீன் நீர் நிலையிலே தோன்றும்; நீர் அலையின் மீது அங்கும் இங்கும் திரியும்; நீந்தும்போது பின்னால் வந்து கொத்தும் தன்மையுடையது.

பேன், தலையில் உள்ள பேன் முட்டையிலே தோன்றும்; தலை யின் உள்ளே திரியும்; பின்னர்த் தலையினின்று எடுக்கப்பட்டு 'ஈச்சு' என்ற ஒலியுடன் குத்தப்படும் தன்மையுடையது.

ஆதலால், மீனும் பேனும் நிகர் என்று சொல்வாயாக 10

227. பனைமரம், வேசி

கட்டித் தழுவுதலால், கால்சேர ஏறுதலால்,
எட்டிப் பன்னாடை இழுத்தலால், —முட்டப்போய்
ஆசைவாய்க் கள்ளை அருந்துதலால் அப்பனையும்
வேசைஎன லாமே விரைந்து.

பனைமரம், அதன் மேல் ஏறுபவரால் கட்டிடத் தழுவப் படுகிறது; ஏறுபவரால் இரு கால்களும் சேர்த்துக் கொண்டு

ஏறப்படுகிறது; ஏறுபவரால் பன்னாடையானது எட்டி இழுத்து எடுக்கப்படுகிறது; அதனிடம் மக்கள் நெருங்கிச் சென்று ஆசையுடன் கள் குடிக்கப்படுகிறது.

வேசியானவள்,

தன்னை அடைந்தவரால் கட்டித் தழுவப்படுகிறாள்; கால்களுடன் கால்கள் பொருந்த அனுபவிக்கப்படுகின்றாள்; காமுகரின் ஆடை அவளால் எட்டி இழுக்கப்படுகிறது; அவளை விரும்புவர் நெருங்கிச் சென்று ஆசையுடன் அவளுடைய வாயின் நீரைப் பருகுகின்றனர். எனவே, இக் காரணங்களால் பனையையும் வேசி என்று கூறலாம். 11

228. தென்னைமரம், வேசி

பாரத் தலைவிரிக்கும்; பன்னாடை மேல்சுற்றும்;
சோர இளநீர் சுமந்திருக்கும்;—நேரேமேல்
ஏறி இறங்கவே இன்பமாம்; தென்னமரம்
கூறும் கணிகைஎன்றே கொள்.

தென்னைமரம், நான்கு பக்கமும் பரவும்படியாக உச்சியில் ஓலையை விரிக்கும்; அதன் மீது பன்னாடை சூழ்ந்திருக்கும்; ஓலையால் மறைபட்டுள்ள இளநீரைக் கொண்டு விளங்கும்; அடிப்பாகத்திலிருந்து உச்சிவரை ஏறி இறங்குவதில் இடர்ப்பாடு இருக்காது.

வேசியானவள்,

கீழே தொங்குமாறு கூந்தலை விடுவாள்; சிறந்ததாகக் கூறப்படும் சேலையை உடல்மீது உடுத்தியிருப்பாள்; இடையானது தளருமாறு இளநீர்க்காய்களைப் போன்ற முலைகளைப் பெற்றிருப்பாள்; அவளை நேரே அணைத்துச் சேர்வதால் இன்பம் உண்டாகும்.

ஆதலால், தென்னை மரமானது சிறப்பாகப் பேசப்படும் கணிகை என்று கொள்க. 12

229. வெற்றிலை, வேசி

கொள்ளுகையால், நீரில் குளிக்கையால், மேல்ஏறிக்
கிள்ளுகையால், கட்டிக் கிடக்கையால்—தெள்ளுபுகழ்ச்
செற்றலரை வென்ற திருமலைரா யன்வரையில்
வெற்றிலையும் வேசையா மே.

தெளிந்த புகழையுடைய திருமலைராயன் மலையில்,

வெற்றிலை, நீர் பாய்ச்சப்பட்டு வளர்க்கப்படுகிறது; நீரில் கழுவப்படுகிறது; மேலாக எடுத்துக் கிள்ளித் தின்னப் படுகிறது; விலையின் பொருட்டாகக் கட்டாகக் கட்டி வைக்கப் படுகிறது.

வேசி, தன்னிடம் வந்தவரை ஏற்கும் கையைப் பெற்றுள்ளாள்; நீரில் மூழ்கி விளையாடுகிறாள்; காம மிகுதியில் காதலரைக் கிள்ளுகிறாள்; படுக்கையில் கட்டித் தழுவப் படுகிறாள்.

இக்காரணங்களால் வெற்றிலை வேசி போன்றதாகும். 13

230. கண்ணாடி, அரசன்

யாவருக்கும் ரஞ்சனைசெய்து யாவருக்கும் அவ்வவராய்ப்
பாவனையாய்த் தீதகலப் பார்த்தலால்—மேவும்
எதிரியைத்தன் னுள்ளாக்கி ஏற்ற ரசத்தால்
சதிர்உறலால் ஆடிஅர சாம்.

முகம் பார்க்கும் கண்ணாடி எல்லாருக்கும் மகிழ்ச்சியை உண்டாக்குகிறது; பார்ப்பவர் அனைவரின் வடிவத்தையும் காட்டுகிறது; மங்கலப் பொருளாக விளங்குகிறது; தன்னிடம் எதிர்ப்பட்டவரைத் தன்னுள் அடக்கிக் காட்டுகிறது; அதன் பின்பக்கம் பாதரசம் பூசப்பட்டுள்ளது; சிறப்பை யுடையது. மன்னன்,

அனைவருக்கும் மகிழ்ச்சியை உண்டாக்குகிறான்; தன்னிடம் வரும் எல்லாருக்கும் அவரவர்க்கு ஏற்றவாறு மகிழ்ச்சியைத் தருகின்றான்; குற்றம் நீங்கக் குடிகளைக் காக்கின்றான்; தன்னை எதிர்க்கும் பகைவர்களைத் தனக்குக் கீழ்ப்படியுமாறு செய்கின்றான்; நவரசப் பொருள்களை அனுபவித்தலால் சிறப்பை அடைகிறான். ஆதலால் கண்ணாடி மன்னனுக்கு ஒப்பாகும். 14

231. கூத்தாடும் பெண்கள், குரங்கு

ஓட்டம் கடியதால்; உள்ளவரை மேவுதலால்;
சேட்டை எவரிடத்தும் செய்தலால்,—நாட்டமுடன்
காத்திரத்திற் குட்டியுறக் கட்டுதலால், தெட்டுதலால்
கூத்தியர்க்கு நேராம் குரங்கு.

கூத்தாடும் பெண்கள் (வேசியர்) அவர்களை விரும்பியவர்களால் உதட்டில் கடிக்கப்படுகின்றனர்; பொருள் உள்ள

வரை அடைகின்றனர்; எல்லாரிடத்திலும் வேடிக்கையாக விளையாடுகின்றனர்; தன்னை அடைந்த காமுகர் உடலில் தாக்கியுடல் பொருந்தத் தழுவுகின்றனர்; சூழ்ச்சி செய்கின்றனர்.

குரங்கானது,

விரைவாக ஓடுகின்றது; மலைமேல் ஏறுகின்றது; எவரிடத்தும் குறும்பைச் செய்கின்றது; தன் உடலில் குட்டியால் விருப்பத்துடன் கட்டித் தழுவப்படுகிறது; தந்திரமாகப் பொருள்களைக் கவர்கின்றது.

எனவே, இவற்றால் கூத்தாடுபவர்க்குக் குரங்கு ஒப்பாகும். 15

232. குதிரை, காவிரியாறு

ஓடும்; சுழிசுத்தம் உண்டாகும்; துன்னலரைச்
சாடும்; பரிவாய்த் தலைசாய்க்கும்;—நாடறியத்
தேடு புகழான் திருமலைரா யன்வரையில்
ஆடுபரி காவிரியா மே.

குதிரை ஓடும்; குற்றம் இல்லாத சுழிகளை உடையதாக விளங்கும்; பகைவரைத் தாக்கும்; தலையைச் சாய்த்து நிற்கும்.

காவிரியாறு

ஓடுகின்ற இயல்புடையதாகும்; நீர்ச் சுழிகளைப் பெற்றிருக்கும்; தன் மேல் பொருந்தும் மலர்களை இழுத்துச் செல்லும்; நிலத்தைக் குழியாக்கி இடங்களைப் பெயர்க்கும்.

ஆதலால், எல்லாரும் அறிந்த புகழை உடைய திருமலைராயன் மலையில் ஆடும் குதிரை காவிரிக்கு நிகரானதாகும். 16

233. கீரைப் பாத்தி, குதிரை

கட்டி அடிக்கையால், கால்மாறிப் பாய்கையால்,
வெட்டி மறிக்கின்ற மேன்மையால்,—முட்டப்போய்
மாறத் திரும்புகையால் வண்கீரைப் பாத்தியுடன்
ஏறப் பரியாகு மே.

வளம் உடைய கீரைப் பாத்தியில் வளரும் கீரைத் தண்டுகள் கட்டுக்களாகக் கட்டப்பட்டு வேரில் இருக்கும் சேறு போகுமாறு அடிக்கப்படும்; நீர்க்கால்வாய் பாத்தியில் மாறி மாறிப் பாயும்; ஓடையானது வெட்டப்பட்டு நீர் மறிக்கப்படும்; கால்வாயில் நீர் ஒரு பக்கத்தினின்று மற்றொரு பக்கம் திரும்பும்.

குதிரை, தேரிலே பூட்டி ஓட்டப்படும்; கால்களால் குதித்துப் பாயும்; எதிரிகளை மடியச் செய்யும்; நேரே போய் முட்டிய இடத்தில் மீளவும் திரும்பும்.

எனவே, இவற்றால் கீரைப் பாத்தியுடன் குதிரை ஒப்பானதாகும். 17

234 கதவு, ஆடு

செய்யுட் கிடைமறிக்கும்; சேர்பலகை இட்டுமுட்டும்;
ஐயமற மேற்று ளடர்க்குமே;—துய்யநிலை
தேடும் புகழ்சேர் திருமலைரா யன்வரையில்
ஆடும் கதவுநிக ராம்.

தூய்மையான புகழையுடைய திருமலைராயன் மலையில், ஆடு, வயலில் மந்தையாக மறிக்கப்படும்; பலருடைய கைகளாலே தடுக்கப்பட்டால் தலையால் முட்டும்; தன் மேல் வந்த ஆள்களைத் தாக்கும்.

கதவானது,

வீட்டின் உள்ளிடத்தில் தடுக்கப்பட்டு மூடியிருக்கும்; பலகைகளால் சேர்க்கப்பட்டுச் செய்யப்படும் இயல்பை யுடையது; இறுக்கமாக மூடுவதற்கு அதன்மேல் உள்ள தாழ் உறுதியாகத் தடுக்கும்.

ஆதலால். ஆடும் கதவும் ஒப்பானவையே! 18

235. குதிரை, ஆடு

கொம்பிலையே தீனிதின்னும் கொண்டதன்மேல் வெட்டுதலால்
அம்புவியி னன்னடைய தாதலால்—உம்பர்களும்
தேடுநல் சோலைத் திருமலைரா யன்வரையில்
ஆடும் குதிரையும்நே ராம்.

தேவர்களும் விரும்பும் சோலைகளையுடைய திருமலைராயன் மலையில், ஆடானது மரக்கொம்பில் உள்ள இலைகளை உணவாகக் கொள்ளும்; உண்ட உணவை வாயில் வைத்து அசைபோடும்; உலகில் ஒன்றைப் பின்பற்றி மற்றொன்று செல்லும்.

குதிரையானது,

கொம்பு இல்லாதது; தனக்கு வைக்கும் கொள் முதலியவற்றை உணவாகக் கொள்ளும்; வாயில் கொண்ட கடிவாளத்தைக்

கடிக்கும்; அழகிய உலகில் விரைவாக ஓடும் ஓட்டத்தையுடையது. 19

ஆதலால், ஆடும் குதிரையும் சமமானவையே!

236. துப்பாக்கி, ஓலைச்சுருள்

ஆணி வரையுறலால், ஆனகுறிப் பேதரலால்,
தோணக் கருமருந்தைத் தோய்ந்திடலால்—நீணிலத்தில்
செப்பார்க்கு உதவாத் திருமலைரா யன்வரையில்
துப்பாக்கி ஓலைச் சுருள்.

துப்பாக்கியானது,

ஆணியால் செப்பம் செய்யப்படுகிறது; குறிப்பிட்ட இலக்கின் மீது குண்டு செலுத்துகிறது; தன் தொழில் தோன்றுமாறு கரிய வெடிமருந்தை இடப்படுகின்றது.

ஓலைச்சுருள்,

எழுத்தாணியால் எழுதப்படுகின்றது; குறித்த கருத்தையே விளக்குகிறது; எழுத்துகள் நன்கு புலப்படுவதற்காகக் கரிய மை பூசப்படுகிறது.

எனவே, திருமலைராயன் வரையில் துப்பாக்கி ஓலைச்சுருளை ஒத்ததே ஆகும். 20

237. வானவில், திருமால், வெற்றிலை

நீரில் உளவால், நிறம்பச்சை யால், திருவால்,
பாரில் பகைதீர்க்கும் பான்மையால்,—சாருமனுப்
பல்வினையை மாற்றுதலால், பாரீர் பெருவான
வில்விண்டு நேர்வெற் றிலை.

பெரிய வானவில் மேகத்தில் உள்ள நீரில் தோன்றுகிறது; பச்சை நிறத்தைப் பெற்றுள்ளது; மழை பெய்வதற்கு மங்கல அடையாளமாக உள்ளது; மழை பெய்யச் செய்து உலகின் பகையான வறுமையை ஒழிக்கிறது. மக்கள் தொடர்பாகச் செய்யப்படும் பல முயற்சிகளையும் நிகழ்த்துகிறது.

திருமாலானவர், பாற்கடலில் பள்ளி கொண்டுள்ளார்; பச்சை நிறம் உடையவர்; திருமகளை மனைவியாகப் பெற்றுள்ளார்; உலகத்தில் அசுரர்களை அழித்துப் பகையை அழிக்கும் தன்மையுடையவர்; மக்கட்கு உண்டாகும் பல வினைகளையும் விலக்குகிறவர்.

வெற்றிலையானது, நீரில் நனைத்துப் பயன் படுத்தப்படுகிறது; பச்சை நிறத்தைப் பெற்றிருக்கிறது; மங்கலப் பொருளாக உள்ளது; உலகத்தில் பகைமையைத் தீர்க்கும் அடையாள மாக விளங்குகிறது; மக்களுக்கு உண்டாகும் பல நோய்களை ஒழிக்கிறது.

ஆகவே, வானவில்லும் திருமாலும் வெற்றிலையும் நிகராகும் என்று உணர்க. 21

238. பூசுணிக்காய், பரமசிவன்

அடிநந்தி சேர்தலால் ஆகம் வெளுத்துக்
கொடியும் ஒரு பக்கத்தில் கொண்டு – வடிவுடைய
மாசுணத்தைப் பூண்டு வளைத்தழும்பு பெற்றதனால்
பூசுணிக்காய் ஈசனெனப் போற்று.

பூசுணிக்காய் தன் அடியில் காம்பினைப் பெற்றிருக்கிறது; மேற்பகுதி முழுவதும் வெண்மை நிறம் பெற்றுள்ளது; ஒரு பக்கத்தில் கொடி படர்ந்திருக்கப் பெற்றுள்ளது; காயைக் கெடாமல் பாதுகாக்கும் பளபளப்பான சாம்பல் கொண்டுள்ளது; தான் கிடக்கும் பொந்தினது அடையாளத்தை அடைந்திருக்கிறது.

சிவபெருமான், தன் திருவடியைக் காளை வாகனத்தில் மேல் வைத்துள்ளவர்; பூசிய திருநீற்ருல் உடல் வெளுத்துள்ளவர்; கொடி போன்ற உமையம்மையை ஒரு பக்கத்தில் பெற்றவர்; பருத்த பாம்பை அணிந்திருக்கின்றவர்; உமையம்மையாரின் வளையல் அடையாளத்தை மேனியில் பெற்றுள்ளவர்.

ஆதலால். பூசுணிக்காய் சிவபெருமானைப் போன்றதென்று எண்ணுக. 22

239. ஓடம், அல்குல்

பலகை யிடுமுள்ளே பருமா ணிதைக்கும்
சலம்இறைக்கும் ஆள்ஏறித் தள்ளும்—உலகுஅறிய
ஓடமும் ஒன்றே உலகநாதன் பெண்டிர்
மாடமும் ஒன்று என்றே மதி.

பெண்களின் அல்குல், கைகளால் பலமுறை தீண்டப்படும்; உள் பக்கத்தில் எதிர்க்குறியால் பொருந்தப்படும்: நீர் ஊறப் பெறும்; ஆளால் சேர்ந்து அனுபவிக்கப்படும்.

தோணியானது, உள்பக்கத்தில் மரப்பலகை இட்டுச் செய்யப்படும் பெரிய ஆணிகள் இட்டு மூடப்பட்டிருக்கும்; செல்லும் போது நீரை வாரி இறைக்கும்; ஆட்கள் ஏறித் தள்ளப்படும். எனவே, அனைவருக்கும் அறிந்து முறையில் மன்னனின் ஓடமும் பெண்களின் அல்குலும் ஒரு தன்மையுடையன என்று நினைக்க. 23

240. கரண்டகம், பெண்குறி

இட்டுஇட்டு வாங்குதலால், இன்பவெள்ளை தோன்றுதலால்;
மட்டுஇட்டு மூடி மறைத்தலால்,—முட்டத்
தெருண்டோர்கள் போற்றும் திருமலைரா யன்சீர்க்
கரண்டகமும் பெண்குறியுங் காண்.

சுண்ணாம்பு வைக்கும் சிமிழில் அடிக்கடி சுண்ணாம்பை எடுத்துத் திரும்பவும் வைக்கப்படுகிறது. வெற்றிலைக்கு இனிய சுவையைத் தரும் வெண்மையான சுண்ணாம்பு உள்ளது. ஓரளவு சுண்ணாம்பு இட்டு அது மூடி வைக்கப்படுகிறது.

பெண்குறியானது, புணர்ச்சிக்கு உட்படுகிறது. இன்பத்துக்குக் காரணமான வெண்மையான நீர் தோன்றுகிறது. அரை முடி இட்டு மூடி வைக்கப்படுகின்றது.

எனவே, இக்காரணங்களால் திருமலை ராயனின் கரண்டகமும் பெண் குறியும் சமமாகும் என்று அறிவாயாக! 24

241. சிவபெருமான் மேல் பாடல்

அரகர திருச்சிற் றம்பலவா ணுவங்
தரரு பமகே சசிதம்—பரதே
வசிதம் பரதே வசிதம் பரதே
வசிதம் பரதேவ னே.

பாவத்தை அழிப்பவனே! பாசத்தை ஒழிப்பவனே! வீடு பேற்றைத் தரும் ஞான சபையில் நடனமாடுபவனே! அந்தரத்தில் விளங்குபவனே! முதல்வனே! சிதம்பரத்தில் வாழும் இறைவனே! ஞான வனத்தில் நடனஞ் செய்பவனே! சிதம்பரன் என்ற பெயரை யுடையவனே! நின்னை வணங்குகிறேன். 25

242. புங்கங் கொம்பு அங்கு இங்கு ஒன்பது

(திருத்துருத்தி என்னும் ஊரில் வாழும் குருக்கள் 'புங்கங் கொம்பு அங்கு இங்கு ஒன்பது' 'புளியங் கொம்பு அங்கு இங்கு ஒன்பது' 'வெள்வேலங் கொம்பு அங்கு இங்கு ஒன்பது' என்ப

வற்றை வெண்பாவில் வைத்துப்பாட வேண்டும் என அப்போது பாடியது.)

எங்கள் மடத்துக்கு எரிகரும்பு வெட்டுதற்குப்
புங்கங்கொம் பங்கிங்கொன் பதுபுளி—யங்கொம்பங்
கிங்கொன் பதுவெட்டி நறுக்கிய வெள்வேலம்
கொம்பங் கின்கொன் பது.

எங்கள் மடத்துக்கு விறகு அங்கும் இங்குமாய் வெட்டப்பட்ட புங்க மரத்தின் கிளைகள் ஒன்பது; இரு முனைகளிலும் வெட்டப்பட்ட புளிய மரத்தின் கட்டைகள் ஒன்பது; இரு முனைகளிலும் வெட்டித் தறிக்கப்பட்ட வெண்வேல மரத்தின் கொம்பு ஒன்பது ஆகும் 26

243. 'எழுத்தாணி' எனத் தொடங்கிச் 'சூரிக்கத்தி' முடித்த செய்யுள்

எழுத்தாண் இதுபெண் இதனைமுனி காதில்
வழுத்தா ரணக்குகனை வாதுக்கு—அழைத்ததுவும்
மாரன்கை வில்மான்முன் காத்ததுவும் நன்றாகும்
தீரமுள்ள சூரிக் கத்தி.

எழுத்துக்களுள் இது ஆண் எழுத்து, இது பெண் எழுத்து என்று தமிழுக்குத் தாய் போன்ற அகத்திய முனிவனின் செவிகளில் உபதேசம் செய்த முருகப் பெருமானைப் போருக்கு அழைத்தது நன்மை மிக்க சூரபன்மனே! மன்மதனின் கையில் கரும்பாகும்; திருமால் முற்காலத்தில் காப்பாற்றியது யானை கையாகும்.

குறிப்பு: எழுத்தாணிது பெண் — எழுத்து + ஆண் + இது
சூரிக்கத்தி—சூர் + இக்கு + அத்தி. 27

244. ராமா ராமா, கோவிந்தா, வேங்கடவா, ஆநாராயணா!

இந்தோ திலகநுதல் ராமரா மாவனசக்
கொந்தோ களபமுலை கோவிந்தா—சந்ததமும்
வேலோ இணைவிழிகள் வேங்கடவா நல்லவயிறு
ஆலோகாண் நாரா யணா.

இராமனே! இராமனே! பொட்டு இட்ட நெற்றி பிறைச் சந்திரனோ? கோவிந்தனே! கலவைச் சாந்தை அணிந்த

முலைகள் தாமரைப்பூங்கொத்தோ? திருவேங்கடவனே! ஒத்த தன்மையுள்ள இரண்டு கண்கள் வேல் படைகளோ? நாராயணனே! அழகிய வயிறுனது ஆலமரத்து இலையோ? 29

245. ஒன்று முதல் பதினெட்டு எண் வரை அமையுமாறு பாடியது

ஒன்றிரண்டு மூன்றுநான் கைந்தாறு ஏழெட்டு
ஒன்பது பத்துப் பதினென் றுபன்னி
ரண்டுபதின் மூன்றுபதி னான்குபதி னைந்துபதி
னாறுபதி னேழ்பதி னெட்டு.

(பொருள்—வெளிப்படை)

246. ஐந்து 'டு' என்ற எழுபது அமையப் பாடியது

ஓ கா மா வீ தோ உரைப்பன் டு டு டு டு டு
நாகார் குடந்தை நகர்க்கதிபர்—வாகாய்
எடுப்பர் நடமிடுவர் ஏறுவர் அன்பர்க்குக்
கொடுப்பர் அணிவர்]]குழைக்கு.

கும்பகோணம் என்னும் நகரத்துக்குத் தலைவனான சிவபெருமான் அழகிய ஓட்டை எடுத்துப் பிச்சை எடுப்பார்; சுடுகாட்டிலே நடனம் செய்வார்; காளை வாகனத்தின்மேல் ஏறிச் செல்வார்; அடியார்களுக்கு வீட்டின்பத்தை அளிப்பார்; ஒரு காதில் அணிந்த குண்டலத்துக்கு நேராக மற்ற காதில் தோடு அணிந்து கொள்வார் என்று நான் உரைப்பேன்.

விளக்கம் : 'ஓ கா மா வீ தோ; வுரைப்பன் டு டு டு டு டு ஓ கா மா வீ தோ என்ற எழுத்துக்களுடன் 'டு' ஐந்தையும் கூட்டின் ஓடு காடு மாடு விடு தோடு என ஆகும். 30

247 'குடத்திலே கங்கை அடங்கும்'

விண்ணுக்கு அடங்காமல் வெற்புக்கு அடங்காமல்
மண்ணுக்கு அடங்காமல் வந்தாலும்—பெண்ணை
இடத்திலே வைத்த இறைவர் சடாம
குடத்திலே கங்கை அடங்கும்.

கங்கை நீரானது, வானத்தில் அடங்காமலும், இமயமலையில் அடங்கியிராமலும், நிலம் தாங்காத படியும் பெருகி ஓடி

வந்தாலும் உமையம்மையை ஒரு பக்கத்தில் கொண்ட சிவ பெருமானின் சடையாகிய முடியில் அது சென்று அடங்கி விடும். 31

248. பச்சை வடம், பாகு, சேலை, சோமன் என்பன வற்றை அமைத்துப் பாடியது

மாயன் துயின்றதுவும், மாமலராள் சொல்லதுவும்,
ஏய குருந்தின்கொண்டு ஏறியதும்,—தூயை,
இடப்பாகன் சென்னியின்மேல் ஏறியதும், பச்சை
வடப்பாகு சேலைசோ மன்.

திருமால் பள்ளி கொண்டிருப்பது பச்சை நிற ஆல் இலை, திருமகளின் சொல் வெல்லப் பாகினைப் போன்ற இனிமை யுடையது, குளக்கரையில் உள்ள குருந்த மரத்தின் மீது எடுத்துக் கொண்டு ஏறியது கோபிகையரின் சேலைகள், உமையம்மையை ஒரு பக்கத்தில் கொண்ட சிவபெருமானின் முடியில் தங்கியிருப்பது சந்திரனாகும். 32

249. கின்னரி வாசிக்கும் கிளி!

ஆடல் புரிந்தான்என்றும் அந்நாளிலே மூவர்
பாடல்உகந் தான்என்றும் பான்மையினால்—கூடலிலே
நன்னரி வாசிக்கும் நடைபயிற்றி னான்என்றும்
கின்னரி வாசிக்கும் கிளி.

சிவன் நடனம் செய்தார் எனவும், சமய குரவர்கள் அருளிய தேவாரப் பாடல்களை விரும்பினார் எனவும், அடியவர்க்கு அருளும் தகுதி பற்றி மதுரையில் நரியாக ஆன குதிரை களுக்குக் கதிகள் பழக்குவித்தார் எனவும் கிளி போன்ற மொழியை யுடையவள் வீணையை வாசிப்பாள். 33

250. பொன், ஆ, வரை, இலை, காய், பூ

உடுத்ததுவும் மேய்த்ததுவும் உம்பர்கோன் தன்னால்
எடுத்ததுவும் பள்ளிக்கு இயையப்—படுத்ததுவும்
அந்நாள் எறிந்ததுவும் அன்பின் இரந்ததுவும்
பொன்ஆ வரை இலைகாய் பூ.

திருமால் தன் அரையில் உடுத்தது பீதாம்பரம்; இடையனாசி மேய்த்தது பசுக்கள்; இந்திரன் மழை பெய்வித்த காரணத்

தால குடையாக எடுத்துப் பிடித்தது கோவர்த்தனமலை; படுத்தற்கு ஏற்றவாறு வைத்துக் கொண்டது ஆல் இலை; முன்னாளில் ஓர் அசுரனைக் கொல்வதற்காக எடுத்து எறிந்தது விளங்காய் மரம்; அன்பர் பொருட்டாக மாவலிச் சக்கர வர்த்தியிடம் சென்று யாசித்தது ஈரடி மண் நிலமாகும். 34

251. இதுவும் அது

தோய்ந்தான்மேய்த் தான்குடையாத் தூக்கினன் மேன்மேலாச்
சாய்ந்தான் எறிந்தான்பின் சாப்பிட்டான்—ஆய்ந்துசொலும்
மன்னு வரத்தில்வரு மால்சாமி நாதா,கேள்,
பொன்ஆ வரை இலை காய் பூ.

எதையும் ஆராய்ச்சி செய்து கூறும் அரசனே! தவத்தால் பிறந்த சாமி நாதனே! கேட்பாயாக! திருமால் இலக்குமியைக் கலந்தார்; ஆயராகப் பசுக்களை மேய்த்தார்; கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தார்; ஆல இலையின் மீது உடல் படுமாறு படுத்திருந்தார்; விளங்காயை எறிந்து அசுரனைக் கொன்றார்; மண்ணுலகத்தை வயிற்றில் அடக்கினர். 35

252. செங்கழு நீர்க் கிழங்கு

வாதமணர் ஏறியதும், மாயன் துயின்றதுவும்,
ஆதிதடுத்து ஆட்கொண்ட அவ்வுருவும்—சீதரனர்
தாள்கொண்டுஅ ளந்ததுவும், தண்கச்சிக் காவலா,
கேள், செங் கழுநீர்க் கிழங்கு.

திருஞான சம்பந்தருடன் சமயப் போரிட்ட சமணர் தாமே தண்டனை பெறுவதற்காக ஏறியது நேராக நடப்பட்ட கழு மரமாகும்; திருமால் பள்ளி கொண்டது பாற்கடலாகும்; சிவபெருமான் சுந்தர மூர்த்தியைத் தடுத்தாள்வதற்காக எடுத்து வந்த வடிவம் வயோதிக வடிவமாகும்; திருமால் வாமனவதாரத்தில் தன் அடியைக் கொண்டு அளந்து காட்டியது பூமியாகும். 36

253. ந,ா நீ, நூ, நே

அரையில் முடியில் அணிமார்பில் நெஞ்சில்
தெரிவைஇடத்து அமர்ந்தான் சேவை—புரைஅறவே

மானுர் விழியீர் ம,ல,ர,ண வொற்றிற்கும்
ஆனுலா நா,நீ,நூ,நே.

மான் போன்ற விழியினை யுடையவரே! சிவன் மனத்தில் அடியார் தம்மிடம் காட்டும் அன்பை விரும்புபவர்; அழகிய மார்பில் பூணூலை அணிந்தவர்; தலையில் கங்கையை வைத்தவர்; பாம்பினை அரைஞாணுகக் கொண்டவர்; உமையம்மையை இடப்பக்கத்தில் வைத்தவர்; குற்றம் நீங்கக் காளை மீது அமர்பவர்.

விளக்கம் : மலரண ஒற்று ஈருகும். ஆனுலா நா,நீ,நூ, நே—ம், ல், ர், ண் என்பனவற்றை நா, நீ, நூ, நே என்பன வற்றுடன் எதிர்த்திசையில் கூட்ட வேண்டும். கூட்டின், நாண், நீர், நூல், நேம் என்ருகும். நேம்—விடம், கண்டத்துக்கு ஆனது. 37

254. ஈயேற மலை குலுங்கியது!

வாரணங்கள் எட்டும் மகமேரு வும்கடலும்
தாரணியும் எல்லாம் சலித்தனவால்—நாரணனைப்
பண்வாய் இடைச்சி பருமத்தி ஞல்அடித்த
புண்வாயில் ஈமொய்த்த போது.

கண்ணனை, பண்போன்ற சொற்களைப்பேசும் ஆயப் பெண்டிர் பெரிய மத்தால் அடித்தபோது உண்டாகிய புண்ணில் ஈக்கள் நெருங்கி மொய்த்தபோது எட்டுத்திக்கு யானைகளும், பெரிய மேரு மலையும், கடலும், பூமியும் ஆகிய எல்லாம் குலுங்கி வருந்தின. 38

255. கடுங்காற்று மழை காட்டும்! கடுநட்புப் பகை காட்டும்!

(பிறவா நெறி காட்டியார் என்பவர், 'கடுங்காற்று மழை காட்டும், கடுநட்புப் பகை காட்டும்' என அமைத்து வெண்பா பாடச் சொன்னதற் கேற்பப் பாடியது.)

நீரோ பிறவா நெறிகாட்டி யார்எமக்கு
நீரோ சமுசை நிலையிட்டீர்—நீரேஇவ்
விங்களமேன் செய்தீர் விடுங்கடுங்காற் றும்மழைகாட்
டுங்கடுநட் புப்பகைகாட் டும்.

நீங்களோ எனக்குப் பிறவாத வீட்டு நெறியைச் சாட்டக் கூடியவர்? நீங்களோ, எனக்குச் சோதனைக் கேள்வியை

அமைத்து ஒழுங்குறச் செய்தவர்? நீங்களே இந்த வேறு பாட்டைச் செய்தவர்? வீசும் கடிய காற்றானது வரும் மழைக்கு அறிகுறியாகும்; அளவுக்கு மேற்பட்ட நெருங்கிய நட்பு பகை வருவதற்கு முன் தோன்றும் அறிகுறியாகும். 39

256. விநாயகர், முருகன், சிவபெருமான்

சென்னிமுகம் ஆறுஉளதால் சேர்கரம்முன் னாலுகையால்
இந்நிலத்தில் கோடுஒன்று இருக்கையால்—மன்னுகுளக்
கண்ணுறுத லானும் கணபதியும் செவ்வேளும்
எண்ணஅரனும் நேரவா ரே.

இவ்வுலகத்தில் விநாயகருக்குத் தலையும் திருமுகமும் மாறுக இருக்கின்றன; முன்னே உள்ள கை தொங்குகின்றது; ஒரு கொம்பு உள்ளது; வெல்லம் நிலைத்த நிவேதனமாக உள்ளது; முருகப் பெருமானுக்கு, தலையில் ஆறுமுகம் உள்ளது; கைகள் பன்னிரண்டு இருக்கின்றன; கொம்பு போன்ற வள்ளி மனைவியாக உள்ளாள்; நிலையான சரவணப் பொய்கையில் தோன்றியவர்; சிவபெருமான், தலையில் கங்கையாறு பொருந்தியிருக்கின்றது; முன் பக்கத்தில் நான்கு கைகள் உள்ளன; கொம்பையுடைய காளை வாகனமாக அமைந்திருக்கின்றது; நெற்றியில் நிலைபெற்ற கண் உள்ளது.

எனவே, இக்காரணங்களால் விநாயகர் முருகப்பெருமான் ஆகியோர் இருவரும் சிவபெருமானும் சமமாவார்கள் 40

257. மும்மூர்த்திகளின் உணவு முதலாயின

சிறுவன் அளைபயறு செந்நெல் கடுகு
மறிதிகிரி தண்டு மணிநூல்—பொறிஅரவம்
வெற்றேறு புள்அன்னம் வேதன்அரன் மாலுக்குக்
கற்றாழம் பூவே கறி.

நான்முகன், திருமால், சிவபெருமான் என்பவர்களுக்குச் சிறு பயற்றின் சுண்டல், வெண்ணெய், சிறுத்தொண்டர் இட்ட பிள்ளை ஆகியவை கறிகளாகும்; செந்நெல்லும் பூமியும் நஞ்சும் உணவுகளாகும்; தண்டாயுதமும் சக்கரமும் மானும் கைகளில் கொள்ளும் ஆயுதங்களாகும்; பூணூல், கவுத்துவ மணி, பாம்பு ஆகியவை அவர்கள் மார்பில் அணிவன;

அன்னப்பறவை, கருடன், புனிதமான காளை என்பன வாகனங்களாகும்; தாமரைப் பூவும் ஆழமான நீர்க்கடல், மலை என்பன அவர்கள் வாழ் இடங்களாகும். 41

258. இராசிகளைச் செய்யுளில் அமைத்தல்

பகருங்கால் மேடம்இட பம்மிதுனம் கர்க்க
டகம்சிங்கம் கன்னி துலாம்விர்ச் சிகம்த
நுசுமகரம் கும்பம்மீ னம்பன் னிரண்டும்
வசையறும்இ ராசி வளம்.

சொல்லுமிடத்து, மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்ற பன்னிரண்டும் குற்றம் இல்லாத இராசிகளாகும். 42

259. தை மாசி பங்குனி மாதம்

பாணர்க்குச் சொல்லுவதும் பைம்புனலை மூடுவதும்
தாணு உரித்ததுவும் சக்கரத்தோன்—ஊணதுவும்
எம்மானை ஏத்துவதும் ஈசனிடத் தும்சிரத்தும்
தைமாசி பங்குனிமா தம்.

தையற்காரர்க்குச் சொல்வது துணியைத் 'தை' என்பதே; பசுமையான நீரினை மூடி மறைப்பது பாசியாகிய அழுக்கு; சிவபெருமான் உரித்துப் போர்த்துக் கொண்டது யாகத்தில் வெளிப்பட்ட யானை; திருமாலுக்கு உணவாக விளங்குவது பூமி; எம் இறைவனை வழிபடுவது மனத்தில் துதித்தே; இறைவனின் இடப்பாகத்தில் இருப்பது உமையம்மை; சிவபெருமானின் தலைமேல் இருப்பது கங்கை.

விளக்கம்: பாணர்க்குச் சொல்வது 'தை'; பைம்புனலை மூடுவது 'மாசு'; தாணு உரித்தது 'இபம்'; சக்கரத்தோன் ஊண் 'கு'; எம்மானை ஏத்துவது 'உனி'; ஈசனிடத்து 'மாது'; ஈசன் சிரத்து 'அம்'. இங்ஙனம் கூட்டிப் பொருள்கொள்க. தை மாசி பங்குனி மாதம் தை, மாசு, இபம், உனி, மாது, அம் எனப் பிரிக்கப்பட்டது. 43

260. தில்லையில் உள்ள சின்னங்கள்

ஞான சபைக னகசபைசிற் றம்பலம்பே
ரானந்தக் கூடம் திருமூலட்—டானம்பே

ரம்பலம்பஞ் சாவரண நாற்கோபு ரம்பொற்செய்
கம்பமண்ட பம்சிவகங் கை.

நடராசன் வீற்றிருக்கும் சிற்சபை, அதற்கு முன்னுள்ள கனக சபை, அவர் நுட்பமாக வீற்றிருக்கும் சிற்றம்பலம், அவர் ஊர்த்துவ தாண்டவம் செய்யும் பேரின்ப சபை, சிவலிங்கம் உள்ள திருமூலத்தானம், தேவர்கள் அவரைத் துதிக்கும் தேவ சபை, ஐந்து பிரகாரம், நான்கு திக்கிலும் உள்ள பெரிய கோபுரம், அழகுடைய ஆயிரக்கால் மண்டபம், சிவகங்கை என்னும் நீர்நிலை ஆகியவை சிதம்பரத்தில் உள்ளவை 44

261. *திருவாரூர் சின்னங்கள்*

சங்குதீர்த் தம்திருச் சாளரவா யில்வீர
சிங்காச னந்திருவந் திக்காப்பு—பங்குனிமா
தத்திருநாள் தீர்த்தம் திருவிழு தன்கோயில்
உத்தாபா கந்திருவா ரூர்.

சங்கு தீர்த்தம், தியாகராசர் முன் உள்ள பலகணி வாயில், அவர் வீற்றிருக்கும் அரசிருக்கை, அந்தி மாலையில் வணங்கப் படும் திருகாப்பு வடிவம், பங்குனி மாதத்தில் நடக்கும் உத்தர விழா, கமலாலயம் என்னும் திருக்குளம், அதற்கு வடக்குத் திக்கில் உள்ள திருக்கோயில் என்பவை திருவாரூரில் உள்ளவையாகும். 45

262. *'அப்பா' எனத் தொடங்கி 'இனிது' என முடியப் பாடுதல்*

அப்பா குமரகோட் டக்கீரை செவ்விலிமேட்
டுப்பாகற் காய்பருத் திக்குளநீர்—செப்புவா
சற்காற்றுக் கம்பத்து அடியில் தவம்கருமா
றிப்பாய்ச்சல் யார்க்கும் இனிது.

அப்பனே! குமர கோட்டத்தின் பக்கத்தே பயிர் செய்யும் கீரையும், அதற்கு அப்பால் உள்ள 'செவிலி மேடு' என்ற ஊரில் பயிர் செய்யும் பாகற்காயும், 'திருப்பருத்திக் குன்றத்' தின் அண்மையில் உள்ள ஆற்று நீரும், காஞ்சியின் தென் கோபுர வாசற் காற்றும், மாமரத்தடியில் தவம் செய்தலும், 'கருமாறி' என்பதன் நீர்ப்பாய்ச்சலும் அனைவருக்கும் இனிமை அளிப்பனவாம். 46

263. திருமால் அவதாரம் பத்தையும் அரை வெண்பாவில் அமைத்துப் பாடல்

மெச்சுபுகழ் வேங்கடவா, வெண்பாவில் பாதியில்என்
இச்சையில்உன் சன்மம் எடுக்கவா?—மச்சா,கூர்
மா,கோலா, சிங்கா, வா மா,ராமா, ராமா, ரா
மா,கோபா லா,மாஆ வாய்.

புகழுடைய திருவேங்கட மலையில் வீற்றிருப்பவனே! நான் பாடும் இந்த வெண்பாவின் பின் அரைப் பகுதியில் உன் பிறப்புகளை உரைக்கலாமா? மீன் அவதாரம் எடுத்தவனே! ஆமையாக அவதரித்தவனே! பன்றிக்கோலம் கொண்டவனே! நரசிங்க அவதாரம் எடுத்தவனே! வாம அவதாரம் கொண்டவனே! பரசு ராமனே! தசரத ராமனே! பலராமனே! கண்ணனே! இனி நீ இந்தக் கலியுகத்தில் குதிரையாய் அவதரிப்பாய்! இவையே நின் பத்து அவதாரங்கள் ஆகும். 47

264. கும்பகோணத்தில் உள்ளவை

திருகுடந் தைஆ திகும்பேசர், செந்தா
மரைக்குளம், கங்கைமகம், கா—விரிக்கரையின்
ஓரங்கீழ்க் கோட்டம்,கா ரோணம்,மங்கை நாயகியார்,
சாரங்க பாணி தலம்.

கும்பேசர் கோயில், தாமரை மலர் மலரும் குளம், கங்கை வந்து கலக்கும் மகாமகக் குளம், காவிரிக்கரையில் உள்ள குடந்தைக் கீழ்க் கோட்டம் என்னும் திருப்பதி, கீழ்க் காரோணம் என்னும் தலம், மங்கை நாயகியார் கோயில், சாரங்கபாணி என்னும் பெருமாள் கோயில், ஆகியவை கும்பகோணத்தில் முக்கியமானவை. 48

265. 'மன்' எனத் தொடங்கி 'மலுக்கு' என முடித்தல்

மன்னுதிரு வண்ணு மலைச்சம்பந் தாண்டாற்குப்
பன்னும் தலைச்சவரம் பண்ணுவதேன்?—மின்னின்
இளைத்தஇடை மாதர் இவன்குடுமி பற்றி
வளைத்துஇழுத்துக் குட்டா மலுக்கு.

நிலைபேறுள்ள திருவண்ணுமலையில் உள்ள 'சம்பந்தாண்டான்' என்பவனுக்குச் சிறப்பாகச் சொல்லப்படும் தலைச்சவரம் செய்வது எதற்காக என்றால்,

மின்னற் கொடியைவிட மிகவும் மெல்லிய இடையை யுடைய பெண்டிர் இவனது குடுமியைப் பிடித்து இழுத்துக் குட்டாமல் இருப்பதற்கே.
(தலையில் குட்டுவது பெண்கள் ஊடல் கொண்ட காலத்தில் நிகழ்வது.) 49

266. 'சோ கா மா ஏ வா தா'

சோ கா மா ஏ வா தா சொல்லின்மனைக் கூட்டியுமை
பாகார்ந்த தில்லைப் பரமேசர்—வாகாய்த்
தரித்தார், எரித்தார், தறித்தார், உதைத்தார்,
உரித்தார், கணைபடைத்தார் ஊர்க்கு.

உமையம்மையை ஒரு பக்கத்தில் கொண்ட தில்லைப் பெருமான், சந்திரனைத் தலையில் அணிந்து கொண்டார்; மன்மதனை நெற்றிக் கண்ணால் எரித்தார்; மாமனான தக்கனை யாகசாலையில் வெட்டினார்; எமனைத் திருவடியினால் உதைத் தார்; யானையைத் தோலுரித்துப் போர்த்துக் கொண்டார். நாராயணனைத் திரிபுரம் எரிப்பதற்காக அம்பாகக் கொண் டார்.

விளக்கம்: சோ, கா, மா, ஏ, வா, தா என்பனவற்றின் இறுதி யில் 'மன்' என்ற சொல்லைச்சேர்த்து அவற்றுடன் பின்னிரண் டடிகளில் உள்ள தரித்தார், எரித்தார், தரித்தார், உதைத் தார், உரித்தார், கணைபடைத்தார் என்பனவற்றைக் கூட்ட வேண்டும். சோ + மன்—சோமன், கா + மன்—காமன்; மற்ற வற்றையும் இங்ஙனமே கூட்டுக. 50

257. 'கொட்டைப் பாக்கு' என்பது தொடக்கம்; 'களிப்பாக்கு' என்பது இறுதி

கொட்டைப்பாக் கும்; ஒருகண் கூடையைப்பாக் கும்;மடியில்
பிட்டைப்பாக் கும்;பாகம் பெண்பாக்கும்;—முட்டநெஞ்சே,
ஆரணனும் நாரணனும் ஆதிமறை யும்தேடும்
காரணனைக் கண்டுகளிப் பாக்கு.

மனமே, நான்முகனும் திருமாலும் வேதமும் தேடும் இயல்புடைய சிவபெருமான் மதுரையில் வந்தியின் பொருட் டாக மண் சுமக்கச் சென்ற போது அவரது ஒரு கண் வேலை செய்பவரின் மண்வெட்டியைப் பார்க்கும். ஒரு கண்,

மண்ணைச் சுமப்பவரின் கூடையைப் பார்க்கும். ஒரு கண் தம் மடியில் வைத்துள்ள பிட்டைப் பார்க்கும். ஒரு கண் தன் பக்கத்து உமையம்மையைப் பார்க்கும். இத்தகைய இயல்புடைய இவ்வுலகத்தின் மூல காரணனைக் கண்டு மகிழ்வாய்.

விளக்கம்: களிப்பாக்கு—களிப்பு + ஆக்கு; களிப்பு—மகிழ்ச்சி ஆக்கு—செய். 51

268. 'செருப்பு' என்று தொடங்கி 'விளக்குமாறு' என முடித்தது.

செருப்புக்கு வீரரைச் சென்றுஉழக்கும் வேலன்
பொருப்புக்கு நாயகனைப் புல்ல—மருப்புக்குத்
தண்டேன் பொழிந்ததிருத் தாமரைமேல் வீற்றிருக்கும்
வண்டே விளக்குமா றே.

போர்க்களத்தில் சென்று வீரரைத் துன்பப்படுத்தும் வேல் படையையுடைய, மலைக்குத் தலைவனான முருகனை நான் தழுவுவதற்கு, வாசனை பொருந்தித் தேனைச் சொரிந்த தாமரைமேல் வீற்றிருக்கும் வண்டுகளே, அவனிருக்கும் இடத்துக்குச் செல்லும் வழியை விளக்கமாகக் காட்டுவீராக.

விளக்கம்: செருப்புக்கு—செரு · புக்கு: போர்க்களத்தில் புகுந்து; விளக்குமாறு விளக்கும் + ஆறு; விளக்குமாறு என்பதை 'ஆறு விளக்கும்' என மாற்றித் தழுவுவதற்குரிய வழி விளங்கச் சென்று என் காதலை அவனுக்கு விளங்கக் கூறுக. ஆறு கால்களால் விரைவாகச் சென்று விளக்குக, எனவும் பொருள் கொள்ளலாம். 52

269. 'கரி' எனத் தொடங்கி 'உமி' என முடித்தல்.

கரியதனை யேஉரித்த கையா! வளைஏந்து
அரிஅயற்கும் எட்டாத ஐயா!—பரிவாக
அண்டர்எல் லாம்கூடி அமுதம் கடைந்தபொழுது
உண்டநஞ் சைஇங்கே உமி.

யாகத்தில் வெளிப்பட்ட யானையை உரித்துப் போர்த்துக் கொண்ட கையையுடையவனே! சங்கையுடைய திருமாலுக்கும் நான்முகனுக்கும் அடியும் முடியும் காண இயலாதவனே! தேவர்கள் அனைவரும் ஒன்றுகூடித் திருப்பாற் கடலில்

அமுதத்தைக் கடைந்த போதில், நீ உயிர்களிடத்தில் கொண்ட இரக்கத்தால், உண்ட விடத்தை இங்கே துப்புவாயாக. 53

270. அத்தை மகள் சமைத்த உணவு.

கரிக்காய் பொரித்தாள்;கன் னிக்காயைத் தீய்த்தாள்;
பரிக்காயைப் பச்சடியாப் பண்ணுள்;—உருக்கமுள்ள
அப்பைக்காய் நெய்துவட்டல் ஆக்கிறள்; அத்தைமகள்
உப்புக்காண் சீச்சீ உமி.

என்னிடம் அன்புள்ள அத்தையின் மகள் அத்திக்காயைப் பொரியல் பண்ணினுள்; வாழைக் காயைச் சுட்டு வைத்தாள்; மாங்காயினைப் பச்சடி செய்து வைத்தாள்; அழகிய கத்தரிக் காயை நெய்யுடன் கூடிய துவட்டல் செய்தாள்; ஆனல் எல்லாவற்றிலும் உப்பு அதிகமாக உள்ளது; ஆதலால், அவை துப்பும் தன்மை யுடையவையே யாகும். 54

271. சிவபெருமானின் பெருமை

கூதிக்குளட்டு ஏழும் குலைந்து நடுநடுங்கிப்
பூதிக்குஒப் பாகஅன்றே போய்விடுமே—ஆதி
நரக்காட் டகஅரியை நல்சரப மாகிச்
சுருக்கா விடின்நஞ் சுணி.

பாற்கடலைக் கடைந்தபோது வந்த விடத்தை உண்ட சிவபெருமான் தேவர்கள் அனைவரும் காணுமாறு, திருமால் எடுத்த நரசிங்க அவதாரத்தைச் ‘சிம்புள்’ என்னும் பறவை வடிவாகிச் சுருக்காவிடின்‘ உலகத்தின் எட்டுத் திக்குகளும், ஏழு உலகங்களும், தடுமாறி அசைவின்றிப் புழுதிக்கு ஒப்பாக அக்காலத்திலேயே நொறுங்கி அழிந்து போயிருக்கும். 55

272. சிவபெருமான் அணிந்திருக்கும் பாம்பின் இயல்பு.

அப்புஊரும் செஞ்சடைமேல் அம்புலியைப் பார்த்துப்பார்த்து
எப்போதும் சீத்துப்பூத்து என்னவே –முப்போதும்
வாலங்காட் டாநிற்கும்; வாய்அங் காநிற்கும்;
ஆலம்காட் டான்பூண் அரா.

திருவாலங்காடு என்ற தலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானின், உடலில் அணிந்திருக்கும் பாம்பானது, கங்கை பொருந்திய சடையில் இருக்கும் சந்திரனைப் பார்த்து எப்போதும் 'சீத்து' 'பூத்து' என்று இரையும்; அதனுடன் தன்னுடைய வாலை எப்போதும் ஆட்டியபடியே இருக்கும்; விழுங்குவதற்கு வாயைத் திறந்தபடி இருக்கும். 56

273. *பாற்கடலில் செந்தூள் எழுந்தது!*

சுத்தபால் கடலின் நடுவினில் தூளி
தோன்றிய அதிசய மதுகேள்,
மத்தகக் கரியை உரித்தவன் மீது
மதன்பொருது அழிந்திடும் மாற்றம்
வித்தகக் கமலை செவியுறக் கேட்டாள்;
விழுந்துநொந்து அயர்ந்துஅழுது ஏங்கிக்
கைத்தல மலரால் மார்புறப் புடைத்தாள்;
எழுந்தது கலவையின் செந்தூள்.

தூய பாற்கடலின் நடுவில் செந்தூள் தோன்றிய வியப்பான செய்தியைக் கேட்பாயாக. யானையின் தோலை உரித்துப் போர்த்துக்கொண்ட சிவபெருமான் மேல், மன்மதன் மலர் அம்பை எய்து தானே அழிந்த செய்தியை அவனுடைய தாயான திருமகள் காதாரக் கேட்டாள்; கீழே விழுந்து வருத்தமடைந்து தளர்ந்து அழுது, மலர் போன்ற தன் கைகளால் மார்பில் படுமாறு ஓங்கி அடித்துக் கொண்டாள். ஆகையால் அவளது மார்பில் பூசப்பட்டிருந்த செந்நிறச் சந்தனத் துகள்கள் புழுதியைப் போல எழுந்தன. 57

274. *என்னை இடுக்கடி, பாயைச் சுருட்டடி, ஏகடி அம்பலத்தே!*

தடக்கட லில்பள்ளி கொள்வோன் அதனைநல் சங்கரனூர்
அடல்புலிக் குட்டிக்கு அளித்தன ராம்அது கேட்டுநெஞ்சில்
நடுக்கம் வந்து உற்றது; கைகால் எழா; நளி னத்திஎன்னை
இடுக்கடி; பாயைச் சுருட்டடி யேகடி அம்பலத்தே.

பெரிய பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள திருமால், அப்பாற்கடலை, வியாக்கிரபாத முனிவரின் மகனாகிய உபமந்யு முனிவனுக்குச் சிவபெருமான் கொடுத்துவிட்டார் என்ற செய்தி

-யைக் கேட்டு, ''தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமியே! என் மனதில் கவலை ஏற்பட்டது. ஆகவே, என் கையும் காலும் இயங்க இயலவில்லை. என்னைத் தாங்கிப் பிடித்துக் கொள்; பாயைச் சுருட்டிக் கொள்; சிற்றம்பலத்துக்குச் செல்லுவாயாக'' என்று கூறினார். 58

275. *போவாள் வருவாள் புகுவாள் புறப்படுவாள் ஆவாள் இவள் அவளாம்*

செற்றலரை வென்ற திருமலைரா யன்கரத்தில்
வெற்றிபுரி யும்வாளே வீரவாள்; மற்றையவாள்
போவாள், வருவாள், புகுவாள், புறப்படுவாள்;
ஆவாள் இவள்அவ ளாம்.

பகைவரை வென்ற திருமலைராயனின் கையில் உள்ள வெற்றி தரும் வாளே வீரத்துக்கு அறிகுறியான வாளாகும்; மற்ற வாள்கள் எல்லாம் 'போவாள் வருவாள் புகுவாள் புறப்படு வாள் ஆவாள்' என்பவற்றில் உள்ள 'வாள்' என்பன வற்றைப் போலப் பயனில்லாத சொல்லளவில் உள்ள கருவி களாகும். இந்தப் பெண்ணும் அத்தகைய இயல்பை யுடையவளாவாள். 59

276. *பன்றிக்கு மார்பிலே கொம்பு!*

தெருமுட்டப் பாளை சிதறவளர் பூகத்
தருமுட்டச் செவ்வாளை தாவும்—திருமுட்டத்து
ஊரிலே கண்டேன் ஒருபுதுமை, பன்றிக்கு
மாரிலே கொம்பான வாறு.

தெரு நிறைய மடல்களைச் சிந்தி வளரும் பாக்கு மரத்தைத் தாக்குவதற்கு, பக்கத்தில் உள்ள நீர்நிலையில் உள்ள வாளை மீன் பாயும் வளமுடைய ஸ்ரீமுஷ்ணம் என்னும் தலத்தில் ஒரு வியப்பைக் கண்டேன்; அதாவது, பன்றிக்கு மார்பில் கொம் பிருப்பதாகும். (பன்றி அவதாரம் கொண்ட திருமாலின் மார்பில் கொம்பைப் போன்ற இலக்குமி தங்கியிருப்பதாகும்). 60

277. *மதுரைச் சொக்கரின் இயல்பு*

நூலாநா லாயிரநா நூற்றுநாற் பத்துஒன்பான்
ஈலாநா னூற்றுநாற் பத்துஒன்பான்—மேலாநாற்

பத்தொன்பான் சங்கமறு பத்துநால் ஆடலுக்கும்
கர்த்தன் மதுரையிற் சொக்கன்.

நான்காயிரத்து நானூற்று நாற்பத்தொன்பது நூல்களையும் அந்நூல்களைச் செய்த நான்காயிரத்து நானூற்று நாற்பத்தொன்பது கடைச்சங்கப் புலவர்களையும் உடைய மூன்று சங்கங்களுக்கும் அறுபத்து நான்கு திருவிளையாடல்களுக்கும் தலைவராவார் மதுரையில் வீற்றிருக்கும் சொக்கநாதர் ஆகும். 61

278. பெருங்காளமேகம்! பிள்ளாய்!

(அதிமதுர கவிராயர் என்பவர், உன்பெயர் யாது? நினக்கும் பாடல் இயற்றத் தெரியுமா?' என்றபோது பாடியது)

இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றால் ஆயிரம்பாட் டாகாதோ—சும்மா
இருந்தால் இருந்தேன் எழுந்தேனே யாயின்
பெருங்காள மேகம் பிளாய்.

பிள்ளையே! 'இம்' என்ற ஓசையை உண்டாக்குவதற்கு முன் எழுநூறு அல்லது எண்ணூறு செய்யுட்களும், 'அம்' என்று சொல்வதற்குள் ஆயிரம் பாடல்களும் நான் பாடி முடித்து விடுவேன்; நான் சும்மா இருந்தால் இருப்பேன்; செய்யுள் இயற்றத் தொடங்கி விட்டால் நீர் மிகுந்த கரிய மேகத்தைப் போன்று செய்யுள் மழை பெய்வேன். (என் பெயர் 'காள மேகம்' ஆகும் என்பது கருத்து.) 62

279. சோழியா! உன்னைப் பெற்றாளே ஒருத்தி!

(காளமேகம் கும்பகோணத்தில் ஒரு பந்தியில் உணவு உண்டு கொண்டிருந்தார்; அப்போது அவருக்கு எதிரில் அமர்ந்திருந்த பிராமணனின் குடுமி அவிழ்ந்து இலையில் விழ, அவன் அதை எடுத்து உதறினான். அதனால் எச்சிற் சாதம் காள மேகத்தின் இலையில் விழ, அப்போது அவர் இதனைப் பாடினார்.)

சுருக்குஅவிழ்ந்த முன்குடுமிச் சோழியா, சோற்றுப்
பொருக்குஉலர்ந்த வாயா, புலையா,—திருக்குடந்தைக்
கோட்டானே, நாயே, குரங்கே, உனைஒருத்தி
போட்டாளே வேலைஅற்றுப் போய்.

முடிச்சு அவிழப் பெற்ற முன் குடுமியை உடைய சோழிய அந்தணனே! சோற்றுப் பற்றுக் கழுவப்படாமையால் காய்ந்த வாயை யுடையவனே, புலையனே! கும்பகோணத்தில் உள்ள கோட்டானே, ஆந்தையே! நாயே! குரங்கே! ஒரு பெண் உன்னையும் வீணாகப் பெற்றாளே! 63

280. பெருமாளைப் பருந்தெடுத்துப் போகின்றதே!

(வரதராசப் பெருமாளை இகழ்வது போலப் புகழ்தல்.)

பெருமாளும் நல்ல பெருமாள்; அவர்தம்
திருநாளும் நல்ல திருநாள்;—பெருமாள்
இருந்திடத்தில் சும்மா இராமையினால், ஐயோ,
பருந்துஎடுத்துப் போகிறதே பார்.

காஞ்சியில் வீற்றிருக்கும் பெருமையுடையவரே! அவரது திருவிழாவும் காண்பதற்குரிய நல்ல திருவிழாவாகும்; திருமால் தாம் வீற்றிருக்கும் தலத்தில் சும்மா இல்லாமல் பக்தருக்கு அருள் செய்வதால், ஐயோ, கருடன் அவரைச் சுமந்து செல்கின்றது!

விளக்கம் : காஞ்சியில் நடக்கும் கருட வாகனத் தோற்றம் பார்க்கத் தக்கது என்பதாம். 64

281. கவிராயர் என்றால்...!

வால்எங்கே? நீண்ட வயிறுஎங்கே? முன்இரண்டு
கால்எங்கே? உள்குழிந்தகண் எங்கே?—சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள், நீவிர்
கவிராயர் என்றுஇருந்தக் கால்.

இவ்வுலகத்தில் உள்ள மன்னர்கள் போற்றும் புலவர்களே! நீங்கள் கவிராயர் என்றால் (குரங்குத் தலைவர் என்று சொல்லு மாறு இருப்பீராயின்) உங்களுடைய வால் எங்கே? குரங்கு களுக்குரிய நீள வயிறு எங்கிருக்கிறது? முன் பக்கத்தில் இருக்கவேண்டிய இரண்டு கால்கள் எங்கே இருக்கின்றன? உள்பக்கம் குழிந்த கண்கள் எங்குள்ளன?

விளக்கம் : கவிராயர் - கபிராயர்; கபி-குரங்கு; குரங்குக்குத் தலைவர்; கவிஞர். 65

282 தில்லைப் பெருமானின் திருவிழாவைப் பற்றிய பாடல்!

சிவபெருமான் பிச்சாடனர் கோலமாக எழுந்தருளியபோது இது பாடப்பெற்றது.)

நச்சரவம் பூண்டதில்லை நாதரே, தேவரீர்
பிச்சைஎடுத்து உண்ணப் புறப்பட்டும்—உச்சிதமாம்
காளம்ஏன்? குஞ்சரம்ஏன்? கார்க்கடல்போல் தான்முழங்கும்
மேளம்ஏன்? ராசாங்கம் ஏன்?

விடத்தைக் கொண்டுள்ள பாம்பை அணியாகக் கொண்ட நடராசரே! தாங்கள் பிச்சை யெடுப்பதற்காகச் செல்லுமிடத்திலும் சிறந்த எக்காளம் என்ற ஊது கருவி எதற்காக? யானை எதற்கு? கருங்கடலைப் போன்று ஒலிக்கும் முரசு எதற்கு? குடை கொடி முதலிய அரச சின்னங்கள் கொண்டு செல்வது எதற்காக? 66

283. நாகப்பட்டினக் 'காத்தான் சத்திரத்தி'ன் இயல்பு

(நாகப்பட்டினத்தில் காத்தான் வருணகுலாதித்தன் சத்திரத்தில் காளமேகம் சாப்பிட்டபோது பாடிய நிந்தையும், அவன் வேண்டுதலுக்கு ஏற்பத் திரும்ப அதையே பாடிய துதியும்.)

கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும்;—குத்தி
உலையில்இட ஊர்அடங்கும்; ஓர்அகப்பை அன்னம்
இலையில்இட வெள்ளி எழும்.

ஒலிக்கும் கடலால் சூழப்பெற்ற நாகப்பட்டினத்தில் உள்ள 'காத்தான்' என்பானின் சத்திரத்தில், கதிரவன் மறையும் மாலைக் காலத்தில்தான் உணவைச் சமைப்பதற்கு வேண்டிய அரிசி வந்து சேரும்; அரிசியைக் கொழித்து உலையிலே இடும் போது ஊரடங்கும் நள்ளிரவாகும்; வந்தவர்க்கு உண்ணுமாறு இடப்பட்ட இலையில் ஓர் அகப்பைச் சோற்றை இடும்போது வெள்ளி தோன்றும் (விடியற்காலமாகி விடும்.)

விளக்கம் : காத்தான் இதைக் கேட்டவுடன் வந்திருப்பவர் காளமேகம் என வுணர்ந்து தன்னைப் பொறுத்தருளுமாறு வேண்டினன். ஆதலால், புலவர் அப்பாடலையே பாடிப் பொருள் வேறு கூறினர். இதனைப் பாராட்டாகக் கொள்ளும்

போது: அத்தமிக்கும் போதில் – பஞ்ச காலத்தில். ஊர் அடங்கும் - உலகத்தவர் உணவை உண்டு மகிழ்ச்சி அடைவர்; இதன்கருத்து சோற்றுக்காகக்கூப்பிட மாட்டார் என்பதாகும். வெள்ளி-சோற்றின் வெண்மை நிறத்தைக் கண்டு வெள்ளி தோற்று ஓடிவிடும் என்று பொருள் கொள்ள வேண்டும். 67

284. *மீனாட்சி அன்னம் இறங்காமல் அலைவாள்!*

(மதுரை மீனாட்சியம்மன் அன்ன வாகனத்தில் ஏறி வருவதைப் பார்த்து இகழ்வது போலப் புகழ்ந்து பாடுதல்.)

மாயனார் போற்றும் மதுரா புரிச்சொக்க
நாயனார் பித்தேறி னார்என்றே நேயமாம்
கன்னல் மொழிஅங்கயற்கண் காரிகையாள் ஐயையோ,
அன்னம்இறங் காமல்அலை வாள்.

திருமால் வணங்கித் துதிக்கும் மதுரையில், சொக்கநாதப் பெருமானுக்குப் பித்து உண்டாகி விட்டது என்ற காரணத்தால், அவரிடத்தில் அன்புடைய இனிய சொல்லுடைய மீன் போன்ற கண்களைப் பெற்றுள்ள மீனாட்சி யம்மை சோற்றை உண்ணாமல் (அன்ன வாகனத்தை விட்டு இறங்காமல்) திரிவாள் (தெருவில் எழுந்தருளுவார்); ஐயோ! இது என்னே வியப்பு! 68

285. *மாலைக் கண்டாள், சேலையை இழந்தாள்!*

(காஞ்சி வரதராசப் பெருமாள் யானை வாகனத்தில் வந்த போது பாடிய புகழாப் புகழ்ச்சி.)

எட்டொருமா எண்காணி மீதே இருந்தகலைப்
பட்டொருமா நான்மாவில் பாய்ந்ததே—சிட்டர்தொழும்
தேவாதி தேவன் திருவத்தி யூர்வரதன்
மாஏறி வீதிவரக் கண்டு.

சான்றோர் வழிபடும் திருமாலாகிய காஞ்சிபுரத்தில் உள்ள 'அத்திகிரி' என்னும் தலத்தில் உள்ள வரதராசப் பெருமான், யானையின் மேல் ஏறித் தெருவில் வரும் உலாவைக் கண்ட மங்கையின் இடையில் கட்டப்பட்டிருந்த பட்டாடையானது நழுவிக் (காலில்) விழுந்தது!

விளக்கம்: ஒருமா - 1/20; காணி - 1/8; எட்டு மாவும் எட்டுக் காணியும் சேர்ந்தால் அரை. ஒரு மாவும் நான்கு மாவும் சேரின் கால் (1/4) ஆகும். புலவர் இங்கு அரை என்பதைப் 'பாதி எண்' எனவும் 'இடை' எனவும், 'கால்' என்பதைக் 'கால் எண்' எனவும் 'கால் (அடி)' எனவும் இரு பொருள்பட உரைத்துள்ளார். 69

286. விநாயகரை எலி இழுத்துச் செல்கின்றது!

(காஞ்சியில் விநாயகர் உற்சவத்தைக் கண்ட போது பாடிய புகழாப் புகழ்ச்சி.)

மூப்பான் மழுவும் முராரிதிருச் சக்கரமும்
பார்ப்பான் கதையும் பறிபோச்சோ—மாப்பார்
வலிமிகுத்த மும்மதத்து வாரணத்தை, ஐயோ,
எலிஇழுத்துப் போகின்றது என்?

மிகப் பருத்த வன்மை மிகுந்த யானைமுகக் கடவுளைப் பெரிய எலியாகிய பெருச்சாளி தன் மேல் சுமந்து கொண்டு செல்வது எதனால்? சிவபெருமானின் மழு என்ற கருவியும் திருமாலின் சக்கரமும் நான்முகனின் தண்டும் எலியை அடிப்பதற்குப் பயன்படாமல் பறிபோயினவோ! 70

287. 'முக்கால்' முதல் 'கீழரை' என்ற எண் வரை அமையுமாறு பாடியது.

முக்காலுக்கு ஏகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண்டு அஞ்சாமுன்—விக்கி
இருமாமுன் மாகாணிக்கு ஏகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரைஇன்று ஓது.

இயல்பாக உள்ள இரண்டு கால்களுடன் ஊன்றுகோலாகிய மூன்றுவதும் கொள்ளவேண்டிய முதுமைப் பருவம் வருவதற்கு முன், அதற்கு முன்னே தோன்றும் நரை தலையில் தோன்றுவதற்கு முன், பொல்லாத இயம தூதர்களைக் கண்டு கால் நடுங்குவதற்கு முன், விக்கல் கண்டு இருமுவதற்குரிய நேரம் வருவதற்கு முன், பெரிய இடமாகிய சுடுகாட்டுக்குச் செல்லுவதற்கு முன், காஞ்சியில் உள்ள ஒரு மாமரத்தின் கீழ் வீற்றிருக்கும் ஏகாம்பரநாதரை இன்றே துதிப்பாயாக! 71

288. கண்ணனை ஆயர் பெண்டிர் ஏன் அடித்தார்?

வண்ணம் கரியன்என்றும் வாய்வேத நாறிஎன்றும்
கண்ணன்இவன் என்றும் கருதாமல்—மண்ணை
அடிப்பது மத்தாலே அளந்தானை ஆய்ச்சி
அடிப்பது மத்தாலே அழ.

ஆயர்குலப் பெண்டிர், தனது திருவடியாகிய தாமரையால் அளந்த திருமாலைக் கரிய நிறத்தையுடைய பெருமாள் என்றும், வேதம் ஒலிக்கும் வாயினையுடையவன் என்றும் எண்ணிப் பாராமல் அன்றோ, அவன் அழுமாறு தயிர் கடையும் மத்தாலே அடித்தனர்? 72

289. திருச்செங்காட்டு நாதர் மேல் பாடிய பாடல்

காலனையும் காமனையும் காட்டுசிறுத் தொண்டர்தரு
பாலனையும் கொன்ற பழிபோமோ?—சீலமுடன்
நாட்டிலே வீற்றிருந்த நாதரே, நீர்திருச்செங்
காட்டிலே வீற்றிருந்தக் கால்.

மேலான ஒழுக்கத்துடன் முன்னர் நாட்டில் வீற்றிருந்த இறைவரே! இப்போது இந்தத் திருச்செங்காட்டில வீற்றிருந் தால், முன்பு இயமனையும், மன்மதனையும், சிறுத்தொண்ட நாயனாரின் மகனையும் கொலை செய்தீர் என்னும் பழி உம்மை விட்டுப் போய்விடுமோ? போகாது! 73

290. பூனைக்கு ஆறு கால், புள்ளினத்துக்கு ஒன்பது கால்

பூநக்கி ஆறுகால்; புள்இனத்துக்கு ஒன்பதுகால்;
ஆனைக்குக் கால்பதினே ழானதே—மானேகேள்,
முண்டகத்தின் மீது முழுநீலம் பூத்ததுண்டு;
கண்டதுண்டு கேட்டதில்லை காண்.

மான்போன்ற விழிகளை யுடையவளே! கேள்! மலரில் உள்ள தேனை நக்கி உண்ணும் வண்டுகளுக்கு ஆறு கால்கள் உள்ளன; பறவைக்கு இரண்டு கால்கள் உள்ளன; யானைக்கு நான்கு கால்கள் உள்ளன; சிவனின் செந்தாமரை உடல் முழுவதும் நீலநிறத்தைக் கொண்ட உமையம்மையின் வடிவம் உண்டு; அதைச் சான்றோர் கண்டதுண்டு; அதில் தீமை ஒன்றும் இல்லை!

விளக்கம் : பூ நக்கி-வண்டு; இது 'பூனைக்கு' என்பது போல ஒலித்தது. எனவே, ''பூனைக்கு ஆறு கால்கள் ஏது?'' என்ற ஐயம் உண்டாகும். ஒன்பது கால்-ஒன்பதைக் காலால் (1/4) பெருக்கினால் வருவது இரண்டே கால் (இரண்டுகால்). அங்ஙனமே கால் பதினேழு என்ற விடத்தும், பதினேழைக் காலால் பெருக்கினால் நாலேகால் (நான்கு கால்). இங்ஙனம் கவி ஒலி நயத்தை இதில் அமைத்துள்ளார். 74

291. ஆறுமுகனின் பெருமை

அப்பன் இரந்துஉண்ணி; ஆத்தாள் மலைநீலி;
ஒப்பரிய மாமன் உறிதிருடி;—சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன். ஆறுமுகத் தானுக்குஇங்கு
எண்ணும் பெருமை இவை.

முருகனின் தந்தை சிவபெருமான் பிச்சை எடுத்து உண்பவன்; தாய் பார்வதி மலையரசனால் பெற்றெடுக்கப் பெற்ற நீல நிறத்தை உடையவள்; மாமனான திருமால் இடைக்குலப் பெண்கள் உறிகளில் வைத்திருந்த வெண்ணெயைக் களவு செய்து உண்டவன்; சிறுகித் தடித்த கால்களையுடைய அண்ணன் விநாயகர் பெரிய வயிற்றை உடையவன், இவையே, அவரைப் பற்றிக் கருதக்கூடிய பெருமைகளாகும். 75

292. மதுரைக் கூத்தாளின் இயல்பு

கூத்தாள் விழிகள்நெடுங் கூர்வேலாம்; கூத்தாள்தன்
மூத்தாள் விழிகள் முழுநீலம்; மூத்தாள்தன்
ஆத்தாள் விழிகள் அரவிந்தம்; ஆத்தாள்தன்
ஆத்தாள் விழிகள்இரண்டு அம்பு.

'கூத்தாள்' என்னும் பெயரையுடையவளின் கண்கள் கூர்மையான வேல்கள். அவளுடைய தமக்கையின் கண்கள் நீலமலர் போன்றவை. மூத்தாளின் அன்னையினது கண்கள் தாமரை மலரைப் போன்றவை. தாயினுடைய தாயின் (பாட்டியின்) கண்கள் இரண்டு அம்புகளாகும் 76

293. நீ பெற்ற கோட்டானைக் கொடு

(ஒரு சிறுவன் காளமேகத்தைக் கண்டு அஞ்சி அழுது சென்று தாயாரிடம் சொன்னான். அவனுடைய தாய் 'அட கொடுப்பா,' என்று அவரைத் திட்டினார். அதனால், சினம்

கொண்டு அவர் வசைபாட, அச்சிறுவன் இறந்துபோனான். பின் அக்குழந்தையின் தந்தை வேண்டிக்கொள்ள; அக் குழந்தை உயிர்பெற அப்பாடலையே திரும்பப் பாடியது.)

என்னைக் கொடுத்தால் இரக்கம்உனக் குண்டாமோ
வன்னக் கமலமுக வல்லியே—துன்னுமதக்
காட்டானைக் கோட்டுமுலைக் காரிகையே நீபயந்த
கோட்டானைத் தானே கொடு.

அன்னப் பறவையைப் போன்ற நடையும் தாமரை மலரைப் போன்ற முகமும் கொடி போன்ற இடையும் உடையவளே! காட்டில் வாழும் யானையினது கொம்பைப் போன்ற தனங்களை உடையவளே, என்னை நினக்குக் கொடுத்தால் உனக்கு இரக்கம் உண்டாகுமோ? நீ பெற்ற கோட்டானை (கொம்புடைய யானையைப் போன்றவனை) எனக்குக் கொடுப்பாயாக!

விளக்கம் : கோட்டானை - கொம்பை யுடைய யானை; கோட்டான் என்ற பறவை. குழந்தையைக் கோட்டான் என்றது அதன் விகார வடிவத்தைக் குறித்தது. கொடு - 'வசையில் இழந்து விடுவாயாக' எனவும், வசை மீட்சியில் 'உயிருடன் எழுப்பித் தருவாயாக' எனவும் பொருள்படும். 77

294. விகடராமன் குதிரையின் இயல்பு

('விகடராமன்' என்னும் அந்தணன் ஒரு மெலிந்த குதிரை மேல் சென்றான். அக்குதிரை நடக்க இயலாமல் துன்பம் அடைந்தது. ஆதலால், அந்த அந்தணன் தன் வேலைக் காரர்களுள் இருவரைக் குதிரையின் பின்பக்க மிருந்து தள்ளச் சொன்னான்; முன்னால் மூன்று பேரை ஏவி இழுக்கச் சொன்னான். இந்த அருமையை - அதிசயத்தைப் - புலவர் பாடினார்.)

முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டுஇழுக்கப்
பின்னே இருந்துஇரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடராமன் குதிரை
மாதம்போம் காத வழி.

எப்போதும் வேதத்தை ஓதும் வாயை யுடையவனான விகட ராமனது குதிரை, முன்பக்கத்திலிருந்து மூன்று பேர் கடிவா ளத்தைப் பற்றி யிழுக்கவும், பின்னால் இருந்து இரண்டு பேர் தள்ளவும், மாதம் ஒன்றுக்குக் காத தொலைவு செல்லும். 78

295. ஆமூர் வேங்கட முதலியாரின் குதிரை

ஆறும் பதினாறும் ஆமூரில் வேங்கட்டன்
ஏறும் பரிமாவே ஏற்றமா;—வேறுமா
வெந்தமா; சும்மா;—வெறுமா; களிகிளற
வந்தமா; சந்தமா; மா.

அழகிய மாமாவே! பிழைத்தற்கு வழியும் பதினாறு பேறுகளும் ஏற்படக்கூடிய ஆமூரில் வாழும் திருவேங்கடவன் ஏறும் குதிரையே மிகச் சிறந்த குதிரையாகும்; மற்ற மாக்கள் (குதிரைகள்) வெந்த மாவினைப் போன்றவை; சோம்பலுடன் இருக்கும் மற்ற விலங்குகளைப் போலப் பயன்படாதவை; களியைச் செய்வதற்கு ஏற்ப அமைந்த மாவினைப் போன்றவை. 79

296. பதினாறு பேறுகளையும் தருவாய்!

துதிவாணி வீரம் விசயம்சந் தானம்துணிவுதன
மதிதானியம் சௌபாக்கியம் போகம் அறிவுஅழகு
புதிதாம் பெருமை அறம் குலம் நோவகல் பூண்வயது
பதினாறுபேறும் தருவாய் மதுரைப் பராபரனே.

மதுரையில் வீற்றிருக்கும் இறைவனே! புகழும், கல்வியும், மனத்திண்மையும், வெற்றியும், மக்கட் பேறும், துணிவும், செல்வமும் மதிக்கப்படும் தானியங்களும், சுகமும், நல்ல அனுபோகமும், ஞானமும், அழகும், புதியதாய் ஏற்படக் கூடிய பெருஞ்சிறப்பும், அறமனமுடைய குடிப்பிறப்பும், நோயின்மையும், நீண்ட ஆயுளும் ஆகிய பதினாறு பேறுகளை யும் எனக்குத் தந்தருளுவாய். 80

297. கையில் பணமிருந்தால் ஆடாரோ ?

(திருவாரூர்த் தியாகராசரை இகழ்வது போலப் புகழ்தல்)

ஆடாரோ பின்னையவர் அன்பரெலாம் பார்த்திருக்க
நீடாரூர் வீதியிலே நின்றுதான்—தோடாரும்
மெய்க்கே பரிமளங்கள் வீசும் தியாகேசர்
கைக்கே பணம்இருந்தக் கால்.

காதில் குண்டலமும் உடலில் மணமும் கொண்ட திருவாரூர்த் தியாகேசர், தன் கையில் பணம் (பாம்பு) இருக்குமானால்

அடியவர்கள் அனைவரும் கண்டு கொண்டிருக்கும்படி ஆரூரின் வீதிகளில் நின்று ஆடமாட்டாரோ ?

விளக்கம் : பணம் - செல்வம்; பாம்பு. பின்னை - செல்வம் வந்த பின். 81

298. விடத்தை ஏன் உண்டார் ?

(மாயூரத்துச் சிவன் மேல் பாடிய புகழாப் புகழ்ச்சி)

வள்ளல்எனும் பெரிய மாயூர நாதருக்கு
வெள்ளிமலை பொன்மலையு மேஇருக்கத்—தெள்ளுமையாள்
அஞ்சல் அஞ்சல் என்று தினம் அண்டையிலே தானிருக்க
நஞ்சுதனை ஏன்அருந்தி னார்,

மாயூரம் என்னும் தலத்தில் வீற்றிருக்கும் கொடைத் தன்மையுடைய சிவபெருமானுக்குக் கயிலாயம் என்னும் வெள்ளி மலையும், மேரு என்னும் பொன்மலையும் சொந்தமாகவுள்ளன. அவை யன்றிப் பக்கத்தில் 'அஞ்சவேண்டா அஞ்சவேண்டா' என்று சொன்னபடி உமையம்மையார் உள்ளார். இவ்வாறிருக்கப் பிழைப்பதற்கு வழியில்லாதவரைப் போன்று விடத்தை ஏன் உண்டார் ?

(மாயூரம் மாயவரம் என இப்போது வழங்குகிறது.) 82

299. மதுரை மீனாட்சியம்மை மீது இகழ்வது போலப் புகழ்ந்து பாடிய பாடல்

நல்லதொரு புதுமை நாட்டில்கண் டேன்அதனைச்
சொல்லவா சொல்லவா சொல்லவா—தொல்லை
மதுரைவிக்கி னேச்சுரனை மாதுமையாள் பெற்றாள்
குதிரைவிற்க வந்தவனைக் கூடி.

நாட்டில் மிகப் புதுமையான ஒன்றைக் கண்டேன்; அதைச் சொல்லலாமா, சொல்லலாமா, சொல்லலாமா? உமையம்மையார் (மாணிக்க வாசகர் பொருட்டாகக்) குதிரை விற்க வந்தவனைச் (சிவபெருமானைச்) சேர்ந்து விநாயகரை மகனாகப் பெற்றார். 83

300. *இவள் இடைஒடியும்! அதை இவளது மார்புக்கு அறிவிப்பவர் இல்லையே!*

வெள்ளை ஆனேறும் விமலர் அடிபணியும்
பிள்ளையான் வாழும் பெருந்தெருவில்—வள்ளை
இலைக்கறிவிற் பாள்மருங்குல் இற்றுவிடும் என்று
முலைக்குஅறிவிப் பார்இல்லையே முன்.

வெள்ளைக் காளை மீது எழுந்தருளும் சிவபெருமானின் அடிகளை வணங்கும் சிறுவனை நான் வாழும் பெரிய வீதியில், வள்ளைக் கொடிக் கீரையை விற்பவளின் இடையானது மேலிருந்து மேலும் அழுத்தினல் ஒடியும் என்று அவளுடைய மார்புக்கு அறிவிப்பவர் ஒருவரும் இல்லையே! 84

301. *வெட்டிச் சமைக்கப்பட்ட மகன், உயிர் பெற்று வந்தது எங்ஙனம் ?*

(அருணசலப்பெருமான் மீது பாடியது.)

சட்டியிலே பாதியந்தச் சட்டுவத்தி லேபாதி
இட்டகலத் திற்பாதி இட்டிருக்கத்—திட்டமுடன்
ஆடிவந்த சோணேசர் அன்றழைத்த போதுபிள்ளை
ஓடிவந்த தெவ்வா றுரை.

அடியவரின் வேடத்தில் வந்த சிவபெருமானுக்காகச் சிறுத் தொண்டரால் சமைத்துப் பரிமாறப் பெற்ற பிள்ளையானது, பாத்திரத்திலே ஒரு பகுதியும், அந்தப் பாத்திரத்தில் இருந்த அகப்பையிலே பகுதியும், உண்பதற்காகப் பரிமாறிய இலையிலே ஒரு பகுதியும் இருக்க, சிவனடியாராக வந்த அருணசலப் பெருமான் பிள்ளையை அழைப்பித்த போது கறியாகச் சமைக்கப்பட்ட குழந்தை உயிருடன் ஓடி வந்தது எவ்வாறு? உரைப்பாயாக! 85

302. *ஏகாம்பர நாதரைப் பற்றிய பாடிய பாடல்*

நேற்றிரா வந்தொருவன் நித்திரையிற் கைப்பிடித்தான்
வேற்றூரா னென்று விடாயென்றேன்—ஆற்றியே
கஞ்சிகுடி யென்ருன் களித்தின்று போவென்றேன்
வஞ்சியரே சென்ருன் மறைந்து.

நேற்றைய இரவு ஒருவன் வந்து உணவு வேண்டுபவனைப் போல் இரு கையையும் ஒன்று சேர்த்துக் காட்டினான் (தூக்கத்தில் கணவனைப் போன்று கையைப் பிடித்தான் என்று சினந்த) அவன் வெளியூரைச் சார்ந்தவன் என நினைந்து என்னை விட்டுவிடு என்றேன்; அவன் சிறிது நேரம் கழித்துக் காஞ்சிபுரத்தில் குடியிருப்பவன் என்றான்; (விடாய் என்பதைத் தாகம் என்ற பொருளில் கொண்டு, சுடும் கஞ்சியை ஆற்றிக் குடிப்பாயாக என்றான்; அவனைக் கணவன் என்று அறிந்து இன்று இன்பம் அனுபவித்துச் செல்வாயாக என்றேன்). (களியைத் தின்றுவிட்டுச் செல்வாயாக என்றேன்); அவ்வளவில் அவன் மறைந்து போனான்; பெண்களே, நீங்கள் அவனைப் பார்த்ததுண்டோ? 86

303. பெண்டிரைச் சுமந்த பித்தன்!

கண்டீரோ பெண்காள் கடம்பவனத் தீசனார்
பெண்டிர் தமைச்சுமந்த பித்தனார்—எண்டிசைக்கும்
மிக்கான தங்கைக்கு மேலே நெருப்பைஇட்டார்
அக்காளை யேறினா ராம்.

மதுரையில் வீற்றிருக்கும் சிவபெருமான் கங்கை என்ற பெண்ணைத் தலையிலும், உமையை இடப்பக்கத்திலும் கொண்டு சுமக்கும் பித்தராவார்; எட்டுத் திக்குகளிலும் புகழ்ந்து கூறப்படும் தம் கையில் தீயை வைத்திருப்பவர்; காளை வாகனத்தில் எழுந்தருளுபவர்.

விளக்கம் : மிக்கான தங்கைக்கு—மிக்கானது+அம்+கைக்கு எனப் பிரிக்க; அக்காளை—அ+காளை. அவர் ஏறிவரும் அந்தக் காளை. 87

304. சிவகாமி கோட்டானைப் பெற்றாள்!

மாட்டுக்கோன் தங்கை மதுரைவிட்டுத் தில்லைநகர்
ஆட்டுக்கோ னுக்குப்பெண் டாயினாள்—கேட்டிலையோ
குட்டி மறிக்கவொரு கோட்டானையும் பெற்றாள்
கட்டிமணிச் சிற்றிடைச்சி காண்.

பெண்ணே! இதைக் கேட்பாயாக! மாடுகளை மேய்க்கும் கோபாலனின் தங்கையான சிவகாமி, தான் அங்கயற் கண்ணியாகத் தோன்றி வளர்ந்த மதுரையை விட்டு நீங்கித்

தில்லையில் ஆடல் நிகழ்த்தும் நடராசனின் மனைவியாக ஆனாள்; சிறிய இடையை யுடைய அவள் நாம் தலையில் குட்டி வணங்குமாறு ஒரு கோட்டானையும் (ஒரு கொம்பையுடைய ஆனைமுகக் கடவுளையும்) பெற்றாள்.

விளக்கம் : கோட்டானை—கொம்பையுடைய ஆனை முக விநாயகப் பெருமான்; கோட்டான் என்ற பறவை, இடைச்சி-இடையை யுடையவள்; இடைக்குலப் பெண். 88

305. ஆட்டைவிட்டுப் புலி போகுமோ?

நாட்டுக்குள் ஆட்டுக்கு நாலுகால் ஐயாநின்
ஆட்டுக் கிரண்டுகால் ஆனாலும்—நாட்டமுள்ள
சீர்மேவு தில்லைச் சிவனேஇவ் வாட்டைவிட்டு
போமோசொல் லாயப் புலி.

சிறப்புடைய தில்லையில் உள்ள நடராசப் பெருமானே! ஐயா! உலகத்தில் ஆடுகளுக்குக் கால்கள் நான்காகும்; உன் ஆட்டத்திற்குப் பயன்படும் கால்கள் இரண்டாகும்; ஆயினும். புகழுடைய புலி முனியாகிய வியாக்கிரபாதர் இந்தக் கூத்தைக் காணுமல் விலகிப் போவாரோ? (புலி ஆட்டைக் கண்டால் விலகிச் செல்வதுண்டோ?)

விளக்கம் : ஆட்டை விட்டு—ஆட்டத்தைவிட்டு; ஆட்டினை விட்டு. புலி—வியாக்கிரபாதர்; புலி. 89

306. ஐயா, ஏழையானால் என்ன நிகழாது!

தாண்டி ஒருத்தி தலையின்மே லேறுளோ
பூண்டசெருப் பால்ஒருவன் போடானோ—மீண்டொருவன்
வையானோ வில்முறிய மாட்டானோ தென்புலியூர்
ஐயாநீ ஏழையா னால்.

அழகிய புலியூராகிய தில்லையில் வீற்றிருக்கும் பெருமானே! நீ ஏழையானால், கங்கை என்ற பெண் உன்முடிமீது ஏறமாட்டாளோ? ஒப்பில்லாத அன்புடைய கண்ணப்பர் தாம் காலில் அணிந்திருக்கும் செருப்பை நின் கண் மீதுவைக்க மாட்டாரோ? மேலும் ஒருவன் (அருச்சுனன்) உன்னை இகழ்ந்து உரைத்து வில் முறிய அடிக்க மாட்டானோ? 90

307. கூத்தாடத் தொடங்கியது ஏன்?

(தில்லைச்சபா நாயகர் மீது பாடியது.)

கொங்குலவுந் தென்றில்லைக் கோவிந்தக் கோனிருக்கக்
கங்குல்பகல் அண்டர்பலர் காத்திருக்கச்—செங்கையிலே
ஓடெடுத்த அம்பலவா ஓங்குதில்லை உட்புகுந்தே
ஆடெடுத்த(து) எந்தஉபா யம்.

கூத்தனே! மணம் வீசும் தில்லைக் கோவிந்தரான காத்தல் கடவுள் நினக்காகக் காத்திருக்கின்றார்; இரவும் பகலும் தேவர்கள் பலர் நின்னைக் கண்டு வழிபடக் காத்துள்ளனர். இங்ஙனம் இருக்க, ஓட்டைக் கையில் எடுத்துக்கொண்டு பிச்சைக்குப் போன நீர், சிறப்புடைய தில்லைச் சிற்றம் பலத்தில் புகுந்து கூத்தாடத் தொடங்கியது எந்த உபாயத்தைக் கருதி? 19

308. உமக்கு ஏன் இன்னும் ஆட்டம்?

(திருவொற்றியூர்த் தியாகேசர் மேல் பாடியது)

ஆடுந் தியாகரே ஆட்டமேன் தானுமக்கு
வீடுஞ் சமுசார மேலிட்டுக்—கூடிச்
செருக்கி விளையாடச் சிறுவர்இரண் டாச்சே
இருக்குமூ ரொற்றியாச் சே.

கூத்தாடும் தியாகராசரே! உமக்கு மகிழ்ச்சியுடன் ஆடும் ஆட்டம் இனியும் எதற்காக? மனைவி மக்கள் முதலிய உறவினர் அதிகமாகி மகிழ்ந்து விளையாட இரண்டு பிள்ளைகளும் உள்ளனரே! நீவிர் தங்கியிருக்கும் இவ்விடமும் (ஒற்றியூரும்) ஒத்தி வைக்கப்பட்டுள்ளதே! 92

309. வடுமாங்காயே, ஏன் காய்த்தாய்?

திங்கள் நுதலார் திருமனம்போ லேகீறிப்
பொங்குகட லுப்பைப் புகட்டியே—எங்களிடம்
ஆச்சாளுக் கூறுகாய் ஆகாம லாருக்காக்
காய்ச்சாய் வடுகமாங் காய்.

மாவடுவே, (சாதி மாங்காயே!) பிறைச் சந்திரன் போன்ற பெண்டிரின் மனம் போலக்கீறப்பட்டுக் கடலினின்று எடுக்கப்

பட்ட உப்பை யிட்டு என் தாயாருக்குத் தின்னக்கூடிய ஊறு காயாக ஆகாமல், நீ யார் பொருட்டுக் காய்த்திருக்கிருய்? 93

310. திருமால் உலகத்தை உண்டபோது சிவபெருமான் எங்கே இருந்தார்?

அருந்திஞன் அண்டமெலாம் அன்றுமால் ஈசன்
இருந்தபடி ஏதென் றியம்பப்—பொருந்திப்
பருங்கவளம் யானேகொளப் பாகனதன் மீதே
இருந்தபடி ஈசனிருந் தான்.

"திருமால் முற்காலத்தில் உலகத்தையெல்லாம் உண்டார். அப்போது சிவபெருமான் இருந்த விதம் எது?" என்று வைணவர்கேட்க "யானேதனக்குரிய உணவை உட்கொள்ள அதன்மேல் பாகன் இருக்குமாறு போலச் சிவபெருமான் இருந்தார்" என்று சைவர் உரைத்தனர்.

விளக்கம் : யானே உணவை உண்ணும்போது பாகன் அதன் மேல் அமர்ந்திருந்தது போன்று? திருமால் உலகத்தை உண்டபோது அவர்மீது சிவன் தங்கியிருந்தார் என்பது குறிப்பு. 94

311. குயவன் மனேவியின் செயல் !

ஆண்டி குயவா அடாஉன்பெண் டாட்டிதனேத்
தோண்டிஒன்று கேட்டேன் துரத்திஞள்—வேண்டியிரு
கைக்கரகங் கேட்டேன் நான் காலதனேத் தூக்கியே
சச்கரத்தைக் காட்டிஞள் தான்.

ஏழைக்குயவா! நின் மனேவியை நோக்கி நான் 'ஒரு குடம் வேண்டும்' எனக் கேட்டேன்; அவர் என்னே விரட்டிஞள்; மேலும் நான், 'இரண்டு கலசங்கள் தேவை' என்று வேண்டி னேன்; அவள் காலே எடுத்து வனேதலில் ஈடுபடாத சக்கரத்தைக் காட்டிப் 'பாண்டங்கள் ஒன்றையும், வனேய வில்லே' என்ருள்.

விளக்கம் : தோண்டி—குடம்; தோண்டப்படும் இடம். இது அல்குலேயும் குறிக்கும்.

கைக்கரகம்—கலசம்; கையால் பற்றப்படும் கலசம் போன்ற முலேகள்.

தூக்கிச் சக்கரத்தைக் காட்டிஞள்—காலே எடுத்து வனேயாமல் இருக்கும் சக்கரத்தைக் காட்டிஞள். காலேத் தூக்கித் தனது

அல்குலைக் காட்டினுள். இங்ஙனம் இச்செய்யுள் இருபொருள் தோன்ற நின்றது. 95

312. 'ககர' வருக்கத்தில் செய்யுள்

காக்கைக்கா காகூகை கூகைக்கா காகாக்கை
கோக்குக்கூக் காக்கைக்குக் கொக்கொக்க –கைக்கைக்குக்
காக்கைக்குக் கைக்கைக்கா கா.

காக்கைக்குப் பகை கோட்டான்; கோட்டானுக்குப் பகை காக்கை. (பகற் காலத்தில் காகம் கூகையை வென்றுவிடும்; இரவு நேரத்தில் கூகை காகத்தை வெற்றி கொள்ளும்;) அரசன் உலகத்தைக் காப்பாற்றுவதற்கு மீனை நோக்கிக் காத்திருக்கும் கொக்கைப் போன்றிருந்து காலம் வாய்த்த போது செயலைச் செய்து முடிக்கவேண்டும். அவ்வாறில்லாமல் போயின் பகைவரை எதிர்த்து நாட்டைக் காப்பதற்கு மிகுந்த ஆற்றலுடைய தலைவனுக்கும் ஆகாது. 96

313. 'தகர' வருக்கம்

தத்தித்தா தூதுதி தாதூதித் தத்துதி
துத்தித் துதைதி துதைந்தத்தா தூதுதி
தித்தித்த தித்தித்த தாதெது தித்தித்த
தெத்தாதோ தித்தித்த தாது.

வண்டே, நீ சுற்றிச் சென்று மகரந்தத்தை ஊதுகின்றாய். மகரந்தத்தை ஊதிய பின்னர்ப் பாய்ந்து செல்கின்றாய். 'து' 'தி'என ஒலித்து, மலர்களை அணுகுகின்றாய். மிகமிக இனிமையான மலர் எது? இனிமையுடையது எந்த மலரினது மகரந்தம்? அழகான மலர் இதழ் எது? 97

விளக்கம் : தாது-பூவின் மகரந்தம், இதழ், மலர்.

314. வல்லினத்தில் அமைந்த செய்யுள்

துடித்துத் தடித்துத் துடுப்பெடுத்த கோடல்
தொடுத்த தொடைகடுக்கை பொன்போற்—பொடித்துத்
தொடிபடைத்த தோடுடித்த தோகைகூத் தாடக்
கடிபடைத்துக் காட்டித்து காடு.

காந்தள் மலர் தோன்றி அரும்புகள் அரும்பின. கொன்றை பொன்மாலையைப் போல மலர்மாலையைத் தொங்க விட்டன.

வளையலை அணிந்த தோள்கள் சிலிர்த்துத் துடித்தன. மயில்கள் ஆடின. காடு மணம் விசிக் காட்டியது. 98

315. மெல்லினத்தில் அமைந்த செய்யுள்

மானமே நண்ணு மனமென் மனமென்னும்
மானமான் மன்னு நனிநாணும் மீனமா
மாணு மினன்மின்னி முன்முன்னே நண்ணினும்
மாணு மனிமேனி மான்.

நீங்காத மின்னல் மின்னி எதிர் எதிரே வந்தாலும் நிகராகாத அழகிய வடிவை உடைய என் பெண், 'என் மனம் மானத்தைச் சிறிதும் பொருந்தாததாக உள்ளது' என்பாள். மிகவும் நாணம் கொள்வாள். ஆகவே, பெரிய யானைகளையுடைய மன்னனே! இவளைக் காத்தல் வேண்டும். 99

316. இடையினத்தில் அமைந்த செய்யுள்

விரவலராய் வாழ்வாரை வெல்வா யொழிவா
யிரவுலவா வேலை யொலியே—வரவொழிவாய்
ஆயர்வா யேயரிவை ஆருயிரை ஈராவோ
ஆயர்வாய் வேயோ அழல்.

கடலின் ஒலியே! மற்றவருடன் கலவாமல் வாழ்பவரை நீ அடக்கி வெற்றி பெறுவாய்! ஆதலால் நீ நீங்குவாயாக! இரவில் நீ உலவுதல் வேண்டா; வாராமல் ஒழிவாயாக! இப்பெண்ணின் உயிரைத் தாயாரின் வாயினின்று புறப்படும் வசை மொழியே கொன்றுவிடாவோ? ஆயர்கள் தம் வாயில் வைத்து ஊதும் புல்லாங்குழல் தீயானது இவளைத் துன்பப் படுத்துகிறது! 100

317. தென்றல் வாராததேன்?

அம்பேந்து கையா னவன்பதியில் ஐம்மாவைக்
கொம்பேந்தி தந்தைபணி கொண்டதோ—அன்பாய்
அரிந்த மகவை அமுதுக் கழையென்(று)
இருந்தவன்றன் செங்காட்டி லே.

சிறுத்தொண்டர் இறைவனிடம் கொண்ட பக்தியினாலே, அரிந்து கறியாகச் சமைத்த பிள்ளையை நம்முடன் இருந்து

உண்பதற்காக அழைப்பாயாக என்று கூறியவர் சிவபெருமான், அவர் வீற்றிருந்த திருச்செங்காட்டாங்குடியில், தண்ணீர்க் கமண்டலத்தையுடைய அகத்திய முனிவரின் இருப்பிடமான பொதிய மலையிலிருந்து தோன்றும் தென்றற் காற்றை, விநாயகப் பெருமானின் தந்தை சிவபெருமானின் அணியான பாம்பு உண்டுவிட்டதோ? 101

குறிப்பு : ஐம்மா—தென்றல்.

318. வேலை விழியாக அமைத்தார்!

முற்றாத காஞ்சியினு முல்லையினும் பாலையினும்
கற்றான்பின் சென்ற கருணைமால்—பெற்றான்றன்
ஆலைப் பதித்தார் அளகத்தி யாட்கயனார்
வேலைப் பதித்தார் விழி.

முடிவுக்காலம் ஒன்றைப் பெறாத காஞ்சிப் பகுதியிலும் முல்லை நிலத்திலும், பாலை நிலத்திலும், (காஞ்சியில் புலவரின் பின்னாலும், முல்லையில் கன்றோடு கூடிய பசுக்களின் பின்னாலும், பாலை நிலத்தில் இராமாவதாரத்தில் விசுவாமித்திரரின் பின்னாலும்) சென்றவர் திருமால்; அவரைப் போன்ற பெற்றான் என்ற பெயரையுடையவனது 'ஆலை' என்னும் நகரத்தில் உள்ள மாலை அணிந்த கூந்தலை யுடையவளுக்கு நான்முகன் வேலைக் கண்களாக அமைத்துள்ளார் 102

319. குழந்தை பிறந்த பின் ஏற்பட்ட நிலை!

கஞ்ச முகையுங் களிற்றானை யின்கொம்பும்
அஞ்சுமுலை நாலுமுலை யானதுவும்—மிஞ்சுபுகழ்
பெற்றான்றன் மாலை பிறர்க்களித்த துங்குதலை
கற்றான் பிறந்தபின்பு காண்.

தாமரையின் மொட்டும், ஆண் யானையினது கொம்பும், நிகராகாமையால் அஞ்சக்கூடிய முலைகள் தொங்கும் தன்மை யுடையனவாய் ஆனதும், புகழுடைய பெற்றான் என்பவர் தனது மாலையை மற்றவர்க்கு (மயக்கம் தரும் அன்பை) அளித்து விட்டதும் மழலைச் சொல் பேசும் குழந்தை பெற்ற பின்னர் ஏற்பட்டனவாகும். 103

330. விநாயகர் திருவேங்கட மலைக்கு வந்த காரணம்

தந்தை பிறந்திறவாத் தன்மையினுல் தன்மாமன்
வந்து பிறந்திறக்கும் வண்மையினுல்—முந்தொருநாள்
வீணிக்கு வேளை யெரித்தான் மகன்மாமன்
காணிக்கு வந்திருந்தான் காண்.

முன்பு வீண் பெருமை கொண்ட கரும்பு வில்லையுடைய மன்மதனை எரித்த சிவபெருமானின் மகனுன விநாயகர், தந்தை பிறந்து இறவாத தன்மையால் அவருக்கு வாரிசாக வர முடியாது என்று கருதி, தன் மாமன் திருமால் பத்து முறை பிறந்து இறக்கும் தன்மையுடையவராதலால் மாமனுரின் சொத்துக்காக அவர் திருவேங்கடத்துக்கு வந்திருந்தார் என உணர்க. 104

321. தூது

தாதிதூ தோதீது தத்தைதூ தோதாது
தூதிதூ தொத்தித்த தூததே—தாதொத்த
துத்திதத் தாதே துதித்துத்தேத் தொத்தீது
தித்தித்த தோதித் திதி

பதவுரை: தாதி தூ தோ தீது—அடியவரது தூது பயன் இல்லாது; தத்தை தூது ஓதாது—கிளியோ தூதாகச் சென்று கூருது; தூதி தூது ஒத்தித்த தூததே—தோழியின் தூதானது நாள் கடத்தப்பட்ட தூதாகும்.

தே துதித்து—இறைவனை வழிபட்டு, தொத்துதீதி—தொடர்வது பயன் இல்லாததாம்; தாது ஒத்த—மகரந்தத்தைப் போன்ற, துத்தி—தேமல், தத்தாதே-என் மீது மிகுதியாகாமல், தித்தித்தது—இனிய தலைவனின் பெயரை, ஒதித் திதி—என்னைக் காப்பாயாக!

விளக்கம்: ஒருதலைவனின் பிரிவால் ஒருத்தி துன்பம் அடைந்து வாடினுள். ஆதலால், அவளுடைய தாய் தெய்வத்தைத் தொழுது வெறியாட்டயர்தலை விரும்பினுள்; அப்போது வெறி விலக்குவதற்காகத் தலைவி கூறிய கூற்று. 105

322. *தலைவியின் துன்பம் நீங்குமோ?*

முந்நான்கில் ஒன்றுடையான் முந்நான்கில் ஒன்றெடுத்து
முந்நான்கில் ஒன்றின்மேல் மோதினன்—முந்நான்கில்
ஒன்றரிந்தால் ஆகுமோ ஓஓ மடமயிலே
அன்றணைந்தான் வாராவிட் டால்.

பன்னிரண்டு ராசிகளில் ஒன்ருன மீன அவதாரம் எடுத்த திருமால், பன்னிரண்டு ராசிகளுள் ஒன்ருன தனுசு (வில்லே) எடுத்து, பன்னிரண்டு ராசிகளுள் ஒன்ருன கன்னி (தாடகை) மீது அம்பை எய்து கொன்ற தலைவன், முன்பு தலைவியைச் சேர்ந்தான்; அவன் இனி வாராது போயின், மயில் போன்றவளே! பன்னிரண்டு ராசிகளுள் ஒன்ருன மேடம் ஆன ஆட்டைக் கொன்று பலி தந்தால், தலையினது துன்பம் தீர்ந்துவிடுமோ? தீராது. 106

323. *திருமாலும் நான்முகனும் அடி முடியைக் காண வழி!*

ஆனர் இலையே அயனுந் திருமாலும்
காணர் அடிமுடிமுன் காண்பதற்கு மேனள்
இரவுதிரு ஆரூரில் எந்தைபிரான் சென்ற
பரவைதிரு வாயிற் படி,

முற்காலத்தில் நான்முகனும் திருமாலும் சண்டையிடும் காட்டில் தோன்றிய சிவபெருமானின் திருவடியையும் திருமுடியையும் காண்பதற்கு இயலாது போனதே; பின்னர் அவ்விருவரும் திருவாரூரில் ஓர் இரவில் சிவபெருமான் தூது போன பரவையாரின் வீட்டுப்படிகளாக ஆனர் இல்லையே! (ஆனல் அடிமுடியைக் கண்டிருக்கலாம்!) 107

324. *ஆறுதலைச் செய்வாய்!*

சங்கரர்க்கும் ஆறுதலை சண்முகர்க்கு மாறுதலை
ஐங்கரர்க்கு மாறுதலை யானதே—சங்கைப்
பிடித்தோர்க்கு மாறுதலை பித்தாநின் பாதம்
படித்தோர்க்கு மாறுதலை பார்.

சிவபெருமானுக்குத் தலையில் கங்கையாறு உள்ளது; முருகப் பெருமானுக்கு ஆறு தலைகள் உள்ளன; ஐந்து முகங்களையுடைய விநாயகருக்குத் தெய்வ முகத்துக்கு மாருக யானை

முகம் அமைந்துள்ளது;சங்கைக் கையில் கொண்ட திருமாலுக்குப் பல பிறவிகளில் மீன், ஆமை முதலிய பல முகங்கள் அமைந்தன; பித்தராகிய இறைவரே, உம் திருவடியைப் புகழ்ந்து சொல்லக் கற்றவர் அனைவருக்கும், பிறவிக்கடலினின்று நீங்கி ஆறுதல் பெறுமாறு செய்வாயாக. *108*

325. வியாதியைத் தீர்த்துக்கொள்ளாத வைத்தீசுவரர்

வாதக்கா லாம்தமக்கு மைத்துனர்க்கு நீரிழிவாம்
பேதப் பெருவயிறும் பிள்ளைதனக்(கு)—ஓதக்கேள்
வந்தவினை தீர்க்க வகையறியார் வேளூரர்
எந்தவினை தீர்ப்பா ரிவர்.

சொல்வதை நீ கேட்பாயாக! புள்ளூரில் உள்ள சிவபெருமானுக்கு வாதக் காலாகும்; (காற்று திருவடிகளாகும்) மைத்துனரான திருமாலுக்கு 'நீரிழிவு' ஆகும்; (நீராகிய கடலில் படுத்திருப்பது தொழிலாகும்); மகனாகிய விநாயகருக்குப் பெரிய வயிறு உண்டு; (மகோதரம் என்னும் நோய் உண்டு) இவ்வாறு தமக்கு ஏற்பட்ட நோய்களைப் போக்கிக் கொள்ள வழி அறியாத இவர் வேறு எத்தகைய வினையைத் தீர்ப்பார்?

விளக்கம் : வாதக் கால் நோயினர், சிரமபரிகாரத்தின் பொருட்டாகக் காலை மாற்றுவர். ஆதலால் நடனத்திற்காகத் திருவடியைத் தூக்கிய நடராசருக்கு வாதக்கால் என்றார். நீரிழிவு நோயுற்றவர் குளிர்ச்சியை விரும்பி நீரில் இருப்பாராதலால், பாற்கடலில் உள்ள திருமாலுக்கு 'நீரிழிவு' நோய் என்றார். வயிறு பெரிதாகுமாறு வரும் நோய் 'மகோதரம்' எனப்படும். விநாயகருக்கு வயிறு பெரிதாக இருப்பதால் அவருக்கு 'மகோதரம்' என்ற நோயுள்ளதாக உரைத்தார். *109*

326. சிவபெருமான் ஆண்டவர்; திருமால் அடியார்!

(திருவரங்கத்து வைணவர்களும் திருவானைக்கா சைவரும் சமயம் காரணமாகப் போரிட்டுக் கொண்டனர். அவர்களைச் சமாதானப்படுத்த இப்பாடலைப் பாடினார்.)

சீரங்கத் தாரும் திருவானைக் காவாரும்
போரங்க மாகப் பொருவதேன்—ஓரங்கள்

வேண்டாம்இ தென்ன விபரம் தெரியாதோ
ஆண்டானும் தாதனுமா ஞல்.

சீரங்கத்துவைணவர்களும் திருவானைக்கா சைவர்களும் போர் செய்வது போன்று வாதிடுவது எதற்காக? பட்சபாதம் மிக்க சொற்கள் சொல்ல வேண்டியதில்லை. சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் உள்ள தொடர்பை அவர்கள் அறியார்கள் போலும்! சிவபெருமான் இறைவனும், திருமால் அடியவரு மாக இருப்பவர்களே ஆவார்கள்.

விளக்கம் : திருமால் தன் கண்ணைப் பறித்துச் சிவபெருமானை வழிபட்டார் என்பது புராண வரலாறு. 110

327. கண்ணபுரம் பெருமானின் பிறந்த நாள்!

உத்திரத்துக் கோர்நாள் உரோகணிக்குப் பத்தாநாள்
சித்திரைக்கு நேரே சிறந்தநாள்—எத்திசையும்
காராரும் பூஞ்சோலைக் கண்ணபுரம் வாழ்சவுரி
நாரா யணன்பிறந்த நாள்.

எல்லாப் பக்கங்களிலும் சோலை சூழ்ந்திருக்கும் திருக்கண்ண புரத்தில் வீற்றிருக்கும் சவுரி நாராயணரின் பிறந்த நாள் நட்சத்திரம் உத்திரத்துக்கு அடுத்த நட்சத்திரமும் உரோகணி நட்சத்திரத்துக்குப் பத்தாம் நட்சத்திரமும் சித்திரை நட்சத் திரத்துக்கு முந்தைய நட்சத்திரமும் ஆகியஅஸ்தம் ஆகும். 111

328. 'நஞ்சுணி' என்று முடித்தது

சிரித்துப் புரமெரித்தான் சிந்துரத்தைப் பற்றி
உரித்துதிரம் பாய உடுத்தான்—வருத்தமுடன்
வாடும்அடி யாருடனே வானவரும் தானவரும்
ஓடுபயம் தீர்த்தநஞ்சு ணி.

துன்பத்துடன் வாடும் அடியவர்களுடன் தேவர்களும் அசுரர் களும் ஓடுவதற்குக் காரணமான அச்சத்தைத் தீர்த்த விடத்தை யுண்ட சிவபெருமான், சிரித்துத் திரிபுரத்தை எரித்தான்; யானையைப் பிடித்து அதன் தோலை உரித்து இரத்தம் பெருகப் போர்த்துக் கொண்டான். 112

குறிப்பு : சிந்துரம்—யானை; கயமுகாசுரன்.

329. ஆலங்குடியான் ஆலம் குடித்தான்!

ஆலங் குடியானை ஆலாலம் உண்டானை
ஆலங் குடியானென் ருர்சொன்னர்—ஆலங்
குடியானே ஆயின் குவலயத்தோர் எல்லாம்
மடியாரோ மண்மீதி லே.

திருவாலங்குடியில் வீற்றிருப்பவனை, ஆலகால நஞ்சினை உண்டருளியவனை நஞ்சைக் குடிக்காதவர் என்று யார்உரைத்தார்? அவர் நஞ்சைக் குடிக்காது போனல் உலகத்தவர் அனைவரும் இவ்வுலகத்தில் வீழ்ந்து இறந்திருப்பாரே!

விளக்கம்: ஆலங்குடியானை—ஆல்+அம்+குடியானை; கல்லால மரத்தின் கீழ் வீற்றிருப்பவனை எனவும் உரைக்கலாம். **113**

330. நஞ்சை உண்டதன் பயன்!

கடுக்கை முடியானே காலைமுடித் தான்போல்
கடுக்கைகுடி யானுகில் காணர்—கடுக்கை
உரலடிமீ துற்ருனு மும்பர்களு மற்றும்
உரலடிமீ துற்ருனு மூர்.

கொன்றை மலரை அணிந்த சடையுடைய சிவபெருமானே! நீ இயமனை அடக்கியது போல, விடத்தையும் அடக்கிக் கொள்ளாது போனல் துதிக்கையையுடைய உரல்போலும் கால்கள் கொண்ட வெள்ளை யானையின் மீது ஏறும் இந்திரனும் தேவர்களும் உரலில் கட்டப்பட்டு அடிபட்டகண்ணனை திருமாலும் தாங்கள் வாழும் இடங்களில் வாழ்வார்களோ? வாழமாட்டார்கள். *114*

331. மாணிக்கத் தீ, முத்துக் கொப்புளங்கள்

காவலன் எங்கள் கனவைப்பான் சோளேசன்
மாவலி கங்கை மணிவாரி—ஆஅனலென்று
அப்புளங்கை தோய்க்க அதில்வா ரியமுத்தைக்
கொப்புளமென் றூதுங் குரங்கு.

அடைக்கலம் என அடைந்தவரைக் காக்கும் எங்கள் களஞ்சியத்தைப் போன்றவன் சோழ மன்னன்; அவனுக்குரிய கங்கையினது மாணிக்க மணிகளைச் சில குரங்குகள் தம் கையில் எடுத்து 'ஆ தீ!' எனக் கருதி அவற்றை எறிந்து

விட்டு நீரினுள் கைகளைத் தோய்த்தன; சில குரங்குகள் அந் நீரினின்று எடுத்த முத்துகளை நீர்க்குமிழிகள் என எண்ணி வாயால் ஊதும்.

விளக்கம் : மாணிக்க மணிகள் செந்நிறத்தை உடையன. ஆதலால் அவற்றை எடுத்த குரங்குகள் 'தீ' என்று எண்ணி வெம்மையைப் போக்குவதற்காக நீருள் கைகளைத் தோய்த்தன. முத்துக்கள் வெண்மை நிறத்தை உடையன; ஆதலால் சில குரங்குகள் வெண்ணிறமான கொப்புளங்கள் (நீர்க்குமிழிகள்) என்று அவற்றை எண்ணின. 115

332. சிவபெருமான் கையில் உள்ள மான் தாவுவது ஏன்?

(நடராசரின் கையில் உள்ள மான், அவருடைய முகத்துக்கு நேராகத் தன் முகத்தையும் முன்னங்கால்களையும் உயரத் தூக்கியிருப்பதற்குக் காரணம் யாது எனத் தில்லையில் வாழ் அந்தணர் வினவினர். அதற்குப் புலவர் உரைத்த விடை.)

பொன்னஞ் சடையறுகம் புல்லுக்கும் பூம்புனற்கும்
தன்னெஞ் சுவகையுறத் தாவுமே—அன்னங்கள்
செய்க்கமலத் துற்றுலவும் தில்லை நடராசன்
வைக்கமலத் துற்றமான் கன்று.

அன்னங்கள் வயல்களில் உலவும் இயல்புடைய சிதம்பரத்தில் நடனம் செய்யும் சிவபெருமானின் கையில் உள்ள மான்குட்டி, அவரது அழகிய முடியில் உள்ள அன்பர் சாத்திய அறுகம் புல்லிடத்தும், கங்கையாகிய அழகிய நீரிடத்தும் தன் மனத்தில் மகிழ்ச்சி மிகுதலால் பாயும். 116

333. இஞ்சிக்குடியில் வாழும் தாசி கலைச்சி மேல் வசை

(இஞ்சிக்குடியில் இருந்த கணிகை காளமேகத்தை மதிக்க வில்லை; ஆதலால் அவள்மேல் சினங்கொண்டு வசை பாடினார்)

ஏய்ந்த தனங்கள் இரண்டுமிரு பாகற்காய்
வாய்ந்தஇடை செக்குலக்கை மாத்திரமே—தேய்ந்தகுழல்
முக்கலச்சிக் குப்பிடிக்கும் மூதேவி யாள்கமலைக்
குக்கல்இச்சிக் குங்கலைச்சிக் கு.

குறைந்துபோன கூந்தலில் மூன்று கலம் அளவு அழுக்குடைய மூதேவியைப் போன்றவளான திருவாரூரில் வாழும் நாய்

விரும்பும் கலைச்சி என்ற தாசிக்கு, முலைகள் இரண்டு இரண்டு பாகற்காய்கள் போல நீண்டு தொங்கும்; அவளுடைய இடையோ செக்குலக்கை அளவாகப் பெரியதாக இருக்கும். 117

334. தாசி கலைச்சிமேல் பாடிய பாராட்டு

(கலைச்சி என்ற அந்தத் தாசியின் தாய் வேண்டிக் கொண்டதால் புலவர் காளமேகம், கலைச்சியைப் பாராட்டிப் பாடினார்.)

நஞ்சுகுடி கொண்டகணை நாலுந் தெரிந்துமதன்
இஞ்சிகுடி தன்னினும்வந் தெய்வானே—விஞ்சு
முலைச்சிகரத் தாலழுத்தி முத்தமிட்டுச் சற்றே
கலைச்சிகரத் தாலணைத்தக் கால்.

கலைச்சி, பெரிய முலைகளின் முனையால் அழுத்தி முத்தமிட்டுச் சற்று கையால் தடவினால், மன்மதன் நான்கு வகை நஞ்சு தோய்ந்த அம்பை ஆராய்ந்தெடுத்து இஞ்சிக்குடி என்ற ஊரிலும் வந்து தொடுப்பானோ? 118

335. உமையம்மை உன்னை எப்படி விரும்பினார்?

(வைத்தீசுவரன் கோயில் இறைவன் மீது இகழ்வது போல் புகழ்ந்து பாடியது.)

தீத்தானுன் கண்ணிலே தீத்தானுன் கையிலேன்
தீத்தானும் உன்றன் சிரிப்பிலே—தீத்தானுன்
மெய்யெலாம் புள்ளிருக்கு வேளூரா உன்னைஇந்தத்
தையலாள் எப்படிச்சேர்ந் தாள்.

வைத்தீசுவரன் கோயிலில் வீற்றிருக்கும் பெருமானே! நின் நெற்றிக் கண்ணில் இருப்பது தீயாகும்; கையில் இருப்பதும் தீயாகும்; திரிபுரங்களை எரித்த உன் புன்னகையில் இருப்பதும் தீயாகும்; உன் திருவுடல் முழுவதும் தீயாகும்; அங்ஙனமிருக்கக் குளிர்ந்த மேனியை உடைய உமையம்மையார் உன்னை எப்படி விரும்பி வந்து சேர்ந்தார்? 119

336. சிவபெருமானும் திருமாலும்

(கருவை நல்லூரில் களா மரத்தின் கீழ் வீற்றிருக்கும் 'பால் வண்ண நாதர்' மேல் பாடியது; இது மொழி மாற்று முறையில் அமைந்ததாகும்.)

வெண்ணெய் திருடிஉண்ட வேணியர ஞர்இருக்கக்
கண்ணன்மேல் வைத்த களவேது—பெண்ணைத்
தலையிற் சுமந்தான்மால் சர்ப்பத்தி லேறி
அலையில் துயின்றான் அரன்.

வெண்ணெயைக் களவுசெய்து தின்ற கண்ணன் இருக்கவும், சிவபெருமான் முடிமீதுள்ள களாமரம் எதற்கு? கங்கை என்னும் மங்கையைத் தலைமீது கொண்டான் சிவபெருமான்; திருமால் திருப்பாற் கடலில் ஆதிசேடன் என்ற பாம்பில் துயின்றான்.

விளக்கம்: இதில் சிவபெருமானுக்குச் சொல்ல வேண்டியவையெல்லாம் திருமாலுக்கும், திருமாலுக்குச் சொல்ல வேண்டியவை யெல்லாம் சிவபெருமானுக்கும் சொல்லப்பட்டுள்ளன; அவற்றை மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும். இவ்வாறு பொருள் கொள்வது 'மொழி மாற்று' எனப்படும். 120

337. எட்டிகுள செட்டியைச் செய்த ஏளனம்

எட்டி குளத்தில் இருந்து சரக்குவிற்கும்
குட்டிசெட்டி தன்மகளைக் கொண்டுபோய்—நொட்டுதற்கே
ஆயிரம் யானை எழுநூறு கூன்பகடு
பாயும் பகடெண்பத் தைந்து.

எட்டிகுள வாணிகனான குட்டி செட்டி மகளைத் திருமணம் செய்து புணர்வதற்காகத் தரப்பட்டவை ஆயிரம் ஆனைகள்; எழுநூறு ஒட்டகைகள்; எண்பத்தைந்து எருதுகள். 121

338. பெண்களைத் தேடியுண்ண விட்டீர்!

(தண்டாங்கூரில் உள்ளவர்கள் பொருள்களை அதிக விலைக்கு விற்றனர். அதைத் கண்ட காளமேகம் இதைப் பாடினார்.)

தண்டாங்கூர் மாசனங்கள் சற்குணர்நீர் என்றிருந்தேன்
பண்டங் குறையவிற்ற பாவிகாள்—பெண்டுகளைத்
தேடியுண்ண விட்டீர் தெருக்கள் தெருக்கள்தொறும்
ஆடிமுதல் ஆனிவரைக் கும்.

தண்டாங்கூரில் வாழ்கின்ற மக்களே! உங்களை நல்ல குணம் கொண்டவர்கள் என்று எண்ணியிருந்தேன்; பொருள்களை விலைக்கு ஏற்ற அளவு கொடுக்காமல் குறைவாகக் கொடுத்து

அநியாயம் செய்தவர்களே! ஆடி மாதம் தொடங்கி அடுத்த ஆனி மாதம் வரையிலான ஒரு வருடம் முழுவதும், ஒவ்வொரு தெருவிலேயும் உணவுக்காக உழைத்துத் தேடி உண்ணுமாறு உங்கள் பெண்களை அலையச் செய்து விட்டீர்கள்! 122

339. கம்பரை இகழ்ந்து பாடியது

நாரா யணனை நராயணனென் றேகம்பன்
ஓராமற் சொன்ன உறுதியால்—நேராக
வாரென்றால் வர்என்பேன் வாளென்றால் வள்ளென்பேன்
நாரென்றால் நர்என்பேன் நான்.

கம்பர் 'நாராயணன்' என்ற சொல்லை 'நராயணன் என்று ஆராய்ச்சி செய்யாமல் உரைத்தார்; அதை மேற்கோளாகக் கொண்டு, நானும் வார்' என்பதற்குப் பதிலாக 'வர்' என்பேன்; 'வாள்' என்பதை 'வள்' என்பேன்; 'நார்' என்பதை 'நர்' என்பேன். 123

340. நாகைப் பட்டினத்துத் தாசியை இகழ்ந்து பாடியது

வாழ்த்து திருநாகை வாகான தேவடியாள்
பாழ்த்த குரலெடுத்துப் பாடினாள்—நேற்றுக்
கழுதைகெட்ட வண்ணான்கண் டேன்கண்டே னென்று
பழுதையெடுத் தோடிவந்தான் பார்.

நல்வாழ்க்கை விளங்கும் நாகைப்பட்டினத்தில், அழகுடைய தாசி ஒருத்தி, தன் பாழான குரலில் பாடினாள்; அதைக் கேட்டவுடன் முன் தினத்தில் கழுதையை இழந்த வண்ணான் அவளது குரலினைத் தன் கழுதையின் குரலாக எண்ணி அதைக் கண்டு பிடித்ததாகக் கூறியபடி அதை அடித்து அழைத்துக்கொண்டு செல்வதற்காக ஒரு தடியை எடுத்து வந்தான். 124

341. திருத்துருத்திப் பெருமானின் அணி

காலையிலும் வேலை கடையக் கயிருகும்
மாலையிலும் பூமுடித்து வாழுமே—சோலைசெறி
செய்யில்ஆ ரம்பயிலும் செந்துருத்தி மாநகர்வாழ்
பொய்யிலா மெய்யர்இடும் பூண்.

சோலைகளைப் பக்கத்தில் கொண்ட வயல்களில் முத்துக்கள் விளையும் இயல்புடையது செந்துருத்தி; அப்பதியில் வீற்றிருக்கும் பொய்யிலா மெய்யராகிய சிவபெருமான் அணிந்திருக்கும் அணியாகிய பாம்பு காற்றை உணவாகக் கொள்ளும்; திருப்பாற் கடலைக் கடைவதற்குக் கயிருகும்; திருமால் உண்ட உலகத்தைத் தலைமேல் சுமக்கும். 125

342. வைத்தீசுவரர் கோயிற் புற்று மண்ணின் பெருமை

மண்டலத்தில் நாளும் வயித்தியராய்த் தாமிருந்தும்
கண்டவினை தீர்க்கின்ருர் கண்டீரோ—தொண்டர்
விருந்தைப்பார்த் துண்டருளும் வேளூரென் ருதர்
மருந்தைப்பார்த் தால்சுத்த மண்.

இவ்வுலகத்தில் வைத்தீசுவரர் நோய் நீக்குபவராகத் தாமிருந்தும் எந்த வினையையாவது தீர்ப்பதை நீங்கள் கண்டதுண்டோ? அடியார்கள் எங்கேனும் உணவிடுவார்களா என்று எண்ணி அங்குப் போய் அதனை உண்பார் அவரது மருந்து எது என ஆராயின் அது வெறும் மண் (புற்று மண்) ஆகும். 126

343. பாண்டிய நாட்டில் உள்ள தலங்கள்

கூடல் புனவாயில் குற்ருலம் ஆப்பனூர்
ஏடகம்நெல் வேலி இராமேசம்—ஆடானை
தென்பரங்குன் றஞ்சுழியல் தென்றிருப்புத் தூர்காசி
வன்கொடுங்குன் றம்பூ வணம்.

மதுரை, திருப்புன வாயில், திருக்குற்ருலம், திருவாப்பானூர், திருவேடகம், திருநெல்வேலி, இராமேசுவரம், திருவாடானை திருப்பரங்குன்றம், திருச்சுழியல், திருப்புத்தூர், தென்காசி, திருக்கொடுங்குன்றம், திருப்பூவணம் என்பவை பாண்டிய நாட்டுத் தலங்களாகும். 127

344. சொக்கநாதர்க்குப் பணிவிடை செய்!

பண்புளருக் கோர்பறவை பாவத்திற் கோரிலக்கம்
நண்பிலரைக் கண்டக்கால் நாற்காலி—திண்புவியை

ஆள்வார் மதுரை அழகியசொக் கர்க்கரவம்
நீள்வா கனநன் னிலம்.

நற்குணமுடையவர்க்கு ஒரு பறவை ஈ (ஒரு பொருளை ஈ); பாவம் செய்வதற்கு ஓர் எண் ஆகிய அஞ்சு (பயந்து செய்யாதே); நட்புச் செய்யாதவரைக் கண்டால் விலங்கு (அஞ்சி விலகுவாயாக); உலகத்திற்கு அரசரான மதுரைச் சொக்க நாதர்க்கு நிலைத்த பணிவிடை செய். 128

345. பாஞ்சசன்னிய சங்கின் பெருமை

சதுரரங்கர் சங்கத் தழகர் செங்கைச்சங்கை
அதரமிசை வைத்திலரே யாயின்—முதலை
வருங்குளத்தின் முண்டகக்கை வைப்பரன்றே அன்று
பொருங்களத்தில் நூற்றுவர்முன் போய்.

திருவரங்கத்தில் வீற்றிருப்பவரும் சங்கைக் கையில் கொண்டவருமான திருமால், பாரதப் போர் நடந்த காலத்தில் தன் கையில் உள்ள பாஞ்சசன்னியம் என்னும் சங்கினைப் பாண்டவர் வெற்றியின் பொருட்டாக உதட்டில் வைத்து ஊதாது போயின், பாண்டவர் ஐவரும் துரியோதனன் முதலிய நூற்றுவர் முன் சென்று தலையில் கை வைத்துக்கொண்டு நிற்பர். 129

346. தண்டைக்கால் அம்மை சமைத்த பூசுணிக் காய் கறியின் இயல்பு

கண்டக்காற் கிட்டும் கயிலாயம் கைக்கொண்டுட்
கொண்டக்கால் மோட்சம் கொடுக்குமே—கொண்டத்தூர்
தண்டைக்கால் அம்மை சமைத்துவைத்த பூசுணிக்காய்
அண்டர்க்காம் ஈசருக்கு மாம்.

கொண்டத்தூர் என்னும் ஊரில் வாழும் தண்டைக் கால் அம்மையார் பூசுணிக்காய் சமைத்து வைத்தாள்; அக்கறியைக் கண்ட போதும் கயிலாயம் நெருங்குவதாகத் தோன்றும்; கையில் எடுத்து உண்டால் அது மோட்ச இன்பத்தைத் தரும்; அது தேவர்க்கும் விருப்பத்தைத் தரும்; சிவபெருமானுக்கும் மகிழ்ச்சியைத் தரும். 130

347. வெறி விலக்கல்

போலநிற மாவார்க்குப் பூண்ஆரம் ஆவாரை
ஏலவதை செய்தால் இயல்பாமோ—சாலப்
பழிக்குஅஞ்சும் தென்மதுரைப் பாவைஇரு நான்கு
விழிக்கஞ்சன் சோமனலை வேந்து.

பழிக்குப்பெரிதும் அஞ்சுகின்ற மதுரையில் வாழும்பெண்ணே; எட்டு விழிகளையுடைய தாமரை மலரினனான நான்முகன், சந்திரன், கடல் தெய்வமான வருணன் என்ற இவர்களின் சிவப்பு, வெண்மை, கருமை என்னும் நிறங்களையுடைய சிறு தெய்வங்களுக்கு ஆட்டை வதை செய்தால் தலைவியின் துன்பம் நீங்குவதற்குப் பொருத்தமாகுமோ?

விளக்கம்: பூணாரம்-ஆடு. ஆட்டிறைச்சியை அரிந்து உலர்த்துவோர் அவற்றைக் கயிற்றில் கோத்து ஆரம்போலத் தொங்கவிடுவர். ஆதலால் ஆடு பூணாரம் எனப்பட்டது. 131

348. பன்றிக் குட்டியை என் தீய்த்தீர், சிவனே!

கண்ணன் இடுங்கறியும் காட்டுசிறுத் தொண்டரன்பிற்
பண்ணுசிறு வன்கறியும் பற்றாதோ—தண்ணோடு
மட்டியையுஞ் சோலை மருதீச ரேபன்றிக்
குட்டியையேன் தீய்த்தீர் குறித்து.

குளிர்ச்சி பொருந்திய சோலை சூழ்ந்த திருவிடை மருதூரில் வீற்றிருக்கும் சிவபெருமானே! கண்ணப்ப நாயனார் படைத்த ஊன் கறியும், சிறுத்தொண்டர் தனது அன்பைப் புலப்படுத்த சமைத்துப் படைத்த பிள்ளைக் கறியும் போதுமானவை அல்லவோ? பன்றி அவதாரம் எடுத்த திருமாலின் மகனான மன்மதனை எதற்காகத் தீய்த்தீர்? 132

349. கடை மொழி மாற்று

மாடுதின்பான் பார்ப்பான் மறையோது வான்குயவன்
கூடிமிக மண்பிசைவான் கொல்லனே—தேடி
இரும்படிப்பான் தான்செக்கான் எண்ணெய்விற் பான்வண்ணான்
பரும்புடவை தப்பும் பறை.

பறையன் மாட்டினது இறைச்சியைத் தின்பான்; அந்தணன் வேதம் ஓதுவான்;குயவன் மிகுதியாகப் பாத்திரத்தை வனை

தற்காக மண்ணைக் குழைப்பான்; கருமான் நல்ல இரும்பாகப் பார்த்துக் காய்ச்சி அடிப்பான்; வாணியன் எண்ணெய் விற்பான்! வண்ணான் பெரிய ஆடையைத் துவைப்பான்.

விளக்கம்: இச் செய்யுளின் இறுதியில் உள்ள பறை என்ற சொல்லை முதலில் கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும்.

133

350. இச்செய்யுளும் கடைமொழி மாற்று

ஆயனுக்குக் கண்மூன்றும் ஆசிசிவ னுக்கிருகண்
மாயனுக்குச் செங்கையிலே மான்மழுவாம்—நேயமுடன்
சங்கரற்குச் சங்காழி தான்மாலுக் காலமாம்
மங்கையிடத் தாற்காகு மண்.

சிவபெருமானுக்கு மூன்று கண்கள் உள்ளன; இடையனான திருமாலுக்கு இரண்டு கண்கள் உள்ளன; சிவபெருமானின் சிவந்த கைகளிலே மானும் மழுவும் உள்ளன; திருமாலுடைய கைகளில் சங்கும் சக்கரமும் உள்ளன; உமையம்மையை ஒரு பக்கத்திலே கொண்ட அச்சிவபெருமானுக்கு உணவு விடமாகும்; திருமாலுக்கு உணவு பூமியாகும்.

விளக்கம் : 'ஆதிசிவனுக்குக் கண் மூன்றும்; ஆயனுக்கு இரு கண்; நேயமுடன் சங்கரற்குச் செங்கையிலே மன்மழுவாம்; மாயனுக்குச் சங்காழி, மங்கையிடத்தாற்கு ஆலமரம்; மாலுக்கு ஆகும் மண் எனக் கூட்ட வேண்டும். 134

351. இச்செய்யுளும் அங்ஙனமே பாடப்பட்டது

கொன்றை மலர்தரித்தான் கோபாலன் கோலெடுத்து
நின்றுகுழல் ஊதினான் நீள்சடையோன்—பொன்றிகழும்
அக்கணிந்தான் மாயன் அரவணையில் கண்வளர்ந்தான்
சிக்கலிலே வாழுஞ் சிவன்.

நீண்ட சடையையுடைய சிவபெருமான் கொன்றை மலரைச் சடையில் அணிந்து கொண்டார்; கண்ணபிரான் மாடுகளை மேய்க்கக் கையில் கோலை எடுத்ததோடு, புல்லாங்குழலையும் ஊதினார்; சிக்கல் என்ற தலத்தில் வீற்றிருக்கும் சிவன் எலும்பு மாலையை அணிந்தான்; திருமால் பாம்பாகிய படுக்கையில் படுத்து உறங்கினார்.

விளக்கம் : நீள் சடையோன் கொன்றை மலர் தரித்தான், சிக்கலிலே வாழும் சிவன் பொன் திகழும் அக்கணிந்தான் எனக் கூட்டிப் பொருள் கொள்க. 135

அக்கு—எலும்பு.

352. இதுவும் கடைமொழி மாற்று

கடற்பற்கு(எ)ண் தோள்அயற்குக் கண்பதினைந்(து) ஆமால்
கடம்பற்கே நால்வாய்கை யைந்தே—கடம்பற்கோ(டு)
ஆனைமுகற் காயிரங்கண் ணுகண்ட லற்கிலம்பா
டானைமுகற் காறிரண்டு கை.

கடப்ப மாலையை அணிந்த முருகப் பெருமானுக்குப் பன்னிரண்டு கைகள் உள்ளன; நான்முகனுக்கு எட்டுத்தோள் கள் உள்ளன; கடம்பவனத்தில் வீற்றிருக்கும் சிவபெரு மானுக்குப் பதினைந்து கண்கள் உள்ளன; ஆனைமுகக் கடவுளுக்குத் தொங்கும் வாயும் ஐந்து கைகளும் மதமும் பல்லாகிய கொம்பும் உள்ளன. ஐந்து முகமுடைய சிவபெரு மானுக்கு வறுமையும் காளை வாகனமும் உள்ளன. 136

353. கண்ணபுரம் கோயிலை அடைந்ததேன்?

கண்ணபுரங் கோயிற் கதவடைத்துத் தாழ்போட்டார்
மண்ணையுண்டார் வெண்ணெயுண்ட மாயனுர்—எண்ணும்
சிரக்கப் பரையேந்திச் செங்காட்டி லீசர்
இரக்கப் புறப்பட்டார் என்று.

திருச்செங்காட்டங் குடியில் வீற்றிருக்கும் சிவபெருமான் நான்முகனின் தலையைப் பிச்சைப் பாத்திரமாகக் கொண்டு யாசிக்கப் புறப்பட்டார் என்று எண்ணித் திருமாலும் அங்ஙனம் பிச்சையெடுக்கப் புறப்படாதிருப்பதற்காகத் திருக் கண்ணபுரம் கோயிலவர் கதவைச் சாத்தி மூடிவிட்டார்கள்; கண்ணனுக அவதரித்து வெண்ணெயைத் திருடி உண்ட திருமால் பூமியை உணவாகக் கொண்டார். 137

354. திருவாரூர்ப் பெருமான் ஏன் ஆடுகிறுர்?

திருந்தா(டு) அரவணியும் தென்கமலை ஈசர்
இருந்தாடா தென்செய் திடுவார்—பொருந்த

ஒருகாலே அல்லவே ஒண்டொடிக் காஅன்று
இருகாலுஞ் சந்துபோ னால்.

பாம்பு அணியை அணிந்த திருவாரூர்ப் பெருமான் ஒளி பொருந்திய வளையல் அணிந்த பரவையின் பொருட்டாக ஒரு தடவை அன்று, இருதடவையும் தூதாகச் சென்றார்; (ஒரு காலில்அன்றி இருகாலில் அமைந்த இடுப்புச்சந்தின் தொடர்பு விலகிப் போனால்) உட்கார்ந்து நடனம் செய்வதன்றி வேறே என் செய்வார்? 138

355. ஆமூர் முதலியாரின் சிறப்பு

உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற ஒருகோடி
வெள்ளங்கா லம்திரிந்து விட்டோமே—உள்ளபடி
ஆமூர் முதலி அமரர்கோன் இங்கிருக்கப்
போமூர் அறியாமற் போய்.

ஆமூர் என்னும் ஊரில் வாழும் முதலியாராகிய இந்திரனை வன் இங்கிருக்கவும் அவன் இருப்பிடத்துக்குச் செல்லும் வழியை அறியாமல் பலவிடத்தும் சென்று உள்ளங்கால் தேய்ந்து வெண்மை எலும்பு தோன்றப் பலகாலம் வீணாக அலைந்து திரிந்து நொந்தோமே! 139

356. ஆறு சாதிகள் அமையப் பாடியது

கம்மாள னங்கிக் கணக்கனென வேதுதித்தார்
செம்மான் சதுரைத் திருவரசை—அம்மாகேள்
வாணியனும் பொன்னேரி வாழும்வெள் ளாழனுமே
சேணியனும் அன்றே தெரிந்து.

அன்னையே கேள்! நான்முகனும் திருமகள் மார்பில் வீற்றிருக்கும் பாற்கடலைக் கொண்ட திருமாலும் இந்திரனும், அக்காலத்திலே உண்மையை உணர்ந்து சிவந்த யானையையுடைய நடராசப் பெருமானைக் கபாலி கபாலத்தைக் கையில் உடையவன் எனவும், நெருப்புக் கண்ணையுடைய சோதியன் எனவும் வாழ்த்தித் துதித்தார்கள். 140

357. திருமாலின் திருவடி செய்யும் செயல்கள்!

பாரளக்குந் தூதுசெல்லும் பையரவின் மேல்நடிக்கும்
சீரகலி சாபத்தைத் தீர்க்குமே—ஊரருகில்

சண்டச் சகடுதைக்கும் தையலாய் கார்நீல
கண்டத்தார் ஊரான் கழல்.

நங்கையே! கரிய முகத்தையுடைய சிவன் ஏறிச் செல்லும் காளையாகிய திருமாலின் அடி, மாவலி கொடுத்த உலகத்தை அளந்தது போன்று உலகத்தை அளக்கும் வன்மையுடையது. பாண்டவர் பொருட்டாகத் துரியோதனனிடம் தூது சென்றது போலத் தூதாகச் செல்லும். காளிங்கன் என்னும் பாம்பின் மீது நடனம் செய்தது போன்று பாம்பின் தலையில் நடனமிடும். அகலிகையின் சாபத்தைப் போக்கும். தான் பிறந்த ஊரின் அண்மையில் தன்னைக்கொல்வதற்காக வண்டியின் வடிவாக வந்த அசுரனைக் கொல்லும் தன்மையது. *141*

358. சிவபெருமானின் வாகனம் செய்யும் செயல்கள்!

காலால் படியளக்கும் கண்ணிடந்து பூசிக்கும்
சேலாங் கமடமாஞ் சிங்கமாம்—பாலாகும்
ஆழியப்பி லேதுயிலும் ஐவர்க்குத் தூதாகும்
வீழியப்பர் ஏறும் விடை.

திருவீழிமிழலையில் உள்ள சிவபெருமான் ஏறி வரும் காளை வடிவான திருமால் தன் அடிகளால் உலகத்தை அளப்பார்; கண்ணைத் தோண்டிச் சிவபெருமானின் அடிகளில் வைத்துப் பூசை செய்வார்; மச்சாவதாரம் கூர்மாவதாரம் நரசிங்க அவதாரம் எடுப்பார்; பாற்கடலில் அறிதுயில் கொள்வார்; பஞ்சபாண்டவர்க்குத் தூது செல்வார்

விளக்கம் : கண்ணிடந்து பூசித்தல் - திருமால் நாள்தோறும் ஆயிரம் மலர்களைக் கொண்டு திருமாலைப் பூசித்து வந்தார். இவரது பக்தியைச் சோதிக்கச் சிவபெருமான் ஒரு மலரை மறைக்க, திருமால் தன் கண்ணைத் தோண்டி இறைவனை வணங்கினர். 142

359. திருமால் சிவபெருமானுக்கு அயலானவரா?

கடம்பவனச் சொக்கருக்குக் கண்ணன்ருன் வேரு
இடம்பெரிய கண்ணொன்றை ஈந்தான்—உடம்பதனிற்
செம்பாதி யானன் சுமக்க எருதானன்
அம்பானன் தேவியுமா னன்.

மதுரையில் வீற்றிருக்கும் சொக்கநாதர்க்குத் திருமால் அயலானவரோ? இல்லை; காரணம், அத்திருமால் தம் ஒரு

கண்ணைத் தோண்டிச் சிவபெருமானுக்குக் கொடுத்தார்; உடலில் ஒரு பாதியாக ஆனார்; அவரைச்சுமப்பதற்குக் காளை வாகனமாக ஆனார்; திரிபுரம் எரிக்க அம்பாக ஆனார்; சாத்த சாத்தனாரைப் பெறுவதற்குமனைவியுமாக ஆனார்.

விளக்கம் : உலக இறுதிக் காலத்தில் சிவபெருமானின் ஒரு பக்கத்தில் சேர்ந்திருந்ததை 'உடம்பதில் செம்பாதியானான்' என்றார். தேவியுமானான் – திருமால் மோகினி அவதாரத்தில் சிவபெருமானுக்கு மனைவியானார். அவருக்குப் பிறந்த மகன் சாத்தனார். 143

360 சிவனைவிட, திருமாலைவிட நான் உயர்ந்தவன்!

(இவர் திருக்கண்ணபுரக் கோயிலில் மழைக்கு ஒதுங்கச் சென்றார். அங்கிருந்த வைணவர்கள் உள்ளே வரக்கூடாது எனத் தடுத்தனர். அப்போது இதனைப் பாடினார்)

கன்னபுரம் மாலே கடவுளிலும் நீஅதிகம்
உன்னிலுமோ யானதிகம் ஒன்றுகேள்—முன்னமே
உன்பிறப்போ பத்தாம் உயர்சிவனுக் கொன்றுமில்லை
என்பிறப்பெண் ணத்தொலையா தே.

திருக்கண்ணபுரத்தில் உள்ள திருமாலே,சிவனைவிட நீ சிறந்தவன் ஆவாய். உன்னைவிட நான் சிறந்தவன். இங்ஙனம் கூறுவதற்கு ஒரு காரணத்தைச் சொல்லுவேன்; கேள்! முற்காலத்தில் உன் பிறப்புப் பத்தாம். மேலான சிவபெருமானுக்கு ஒரு பிறப்பும் இல்லை. ஆனால் என் பிறப்புக்கள் எண்ணற்றவை யாகும். 144

361. அமராவதி குருக்கள் இட்ட விருந்து

(அமராவதி என்ற குருக்கள் இட்ட விருந்தைச் சிறப்பித்தது)

ஆனை குதிரைதரும் அன்னைதனைக் கொன்றகறி
சேனைமன் னரைக்காய்துன் னீயவரை—பூநெயுடன்
பூட்டியமு திட்டான் குருக்களம ராபதியான்
வீட்டிலுண்டு வந்தேன் விருந்து.

குருக்கள் குலத்தைச் சேர்ந்த அமராபதி என்பவர் அத்திக்காய், மாங்காய், வாழைக்காய், சேனைக்கிழங்கு, நெல்லிக்காய், அவரைக்காய் ஆகியவற்றால் உண்ணும் கறிகள் சமைத்துத் தேனுடன் கலந்து சோற்றை அளித்தான்; நான் அவரது வீட்டில் விருந்துண்டு வந்தேன்.

விளக்கம் : ஆனை—அத்திக்காய்; ஆனைக்கு அத்தி என்பது ஒரு பெயர். குதிரை-மாங்காய்; குதிரைக்கு 'மா' என்ற பெயருண்டாதலால் இங்ஙனம் உரைத்தார். தரும் அன்னை தனைக் கொன்ற கறி-வாழைக்காய்; வாழை குலை தள்ளியதும் தனக்குத் தாயாக இருந்த மரமாகிய தாயை அழித்தலால் 'அன்னைதனைக் கொன்ற கறி' என்றார். பூநெய்-தேன்; சிறந்த ஆவின் நெய் எனவும் உரைக்கலாம். 145

362. திருவாரூர்த் தியாகராசர் கழுத்தில் வைர மாலை அற்றுப் போகப் பாடியது.

(புலவர் திருவாரூர்க் கோயிலுக்குச் சென்றார். குருக்கள்கள் வைரமாலை சாத்தத் தொடங்கினர். அதனால் இறைவனைத் தரிசிக்கச் சற்று நேரம் ஆனது. எனவே அந்த வைரமாலை அற்றுப் போகுமாறு வசை பாடினார். உடனே குருக்கள் வேண்டத் திரும்ப வசை மீட்சியாக அதே பாடலைப் பாடினார்.)

அன்னவயல் சூழ்ந்திருக்கு மாரூரான் நெஞ்சத்தில்
இன்னம் வயிரம் இருக்குமே—முன்னமொரு
தொண்டன்மக னைக்கொன்றுஞ் சோழன்மக னைக்கொன்றும்
சண்டன்மக னைக்கொன்றுந் தான்.

முன் சிறுத்தொண்டரின் மகனான சீராளனைக் கொன்ற பின்னும், மனுநீதி சோழனின் மகனைக் கொன்ற பின்னும் சண்டேசுர நாயனாரின் தந்தையைக் கொன்ற பின்னரும், அன்னப் பறவைகள் வாழும் வயல் சூழ்ந்த திருவாரூரில் வீற்றிருக்கும் சிவபெருமானின் மனத்தில் இன்னும் வைரம் இருக்குமோ (வைர மாலை இருப்பதா?)

விளக்கம்: இருக்குமே - இதில் வசைப் பொருளில் ஏகாரம் எதிர்மறையிலும், வசை மீட்சியில் அசையாகவும் கொள்ள வேண்டும். 146

363. பெண்களால் மடிந்தவர்கள்!

வாலி மடிந்ததுவும் வல்லரக்கர் பட்டதுவும்
கோலமுடி மன்னர் குறைந்ததுவும்—சால
மதியுடைய நூற்றுருவர் மாண்டதுவும் ஐயோ
சதவிகரத் தால்வந்த தாழ்வு.

குரங்குகளின் மன்னரான வாலி இறந்ததும், இராமாயணப் போரில் பல அரக்கர்கள் அழிந்ததும், அழகிய முடிகளை அணிந்த மன்னர் இறந்து அவர்களின் எண்ணம் குறை பட்டதும், மிக்க அறிவையுடைய துரியோதனன் முதலிய நூற்றொருவர் இறந்ததும் சத இகரத்தால் (பெண்ணைப் பற்றிய விவசாரத்தால்) உண்டான இழிவாகும். (சதஇகரத் தால்: சகரஇகரம்-சி; தகர இகரம்-தி; இதைக் கூட்டிப் பொருள்காண்க.) 147

364. *மண் மாரி பெய்யப் பாடியது!*

செய்யாத செய்த திருமலைரா யன்வரையில்
அய்யா, அரனே, அரைநொடியில்—வெய்யதழல்
கண்மாரி யால்மதனைக் கட்டழித்தாற் போல்தீயோர்
மண்மாரி யால்அழிய வாட்டு.

சிவனே! செய்யக்கூடாத செயல்களைச் செய்த திருமலை ராயனின் ஆட்சி எல்லையில், அரை நொடிப் பொழுதிலே கொடிய நெற்றிக் கண்ணினின்று விடுத்த நெருப்பு மழையால் மன்மதனை அழித்ததுபோல், தீய மக்களை மண்மழை பொழிந்து அழியுமாறு செய்வாயாக! 148

365. *மண்மழை பொழிக!*

கோளர் இருக்குமூர், கோள்கரவு கற்றஊர்;
காளைகளாய் நின்று கதறுமூர்;—நாளையே
விண்மாரி அற்று வெளுத்து மிகக்கறுத்து
மண்மாரி பெய்கஇந்த வான்.

கொலையாளிகள் இருக்கும் இந்த நகரத்திலே, புறங்கூறுதலும் வஞ்சமும் அறிந்தவர் வாழும் இந்நகரத்திலே, தம்பொறுப்பை இளைஞர் அறிய மல் சண்டையிடும் இந்நகரத்திலே, நாளையே, வானின்று பெய்யும் மழை பெய்யப் பெறுமல், நீர் இன்றி வெளுத்து மிகவும் சினந்து மண்மழை பெய்க.

விளக்கம் : திருமலைராயனும், அதிமதுரகவியும் மற்றப் புலவர்களும் கேட்டதற்குக் காளமேகம் யமகண்டத்திலிருந்து தக்க விடையளித்தார். அதனால் அவர்கள் மகிழாமல் அலட்சியப்படுத்தியதால் இதைப் பாடினார். 149

366. தலைவியைக் காணாத தலைவனின் வருத்தம்

கம்பத்தா னைக்கடையில் கட்டினான் கால்சாய
அம்பைத்தா வித்தான்கால் ஆனதே—வம்புசெறி
பூவைகாள், கிள்ளைகாள், பூங்குயில்காள், அன்றில்காள்,
பாவையாள் ஆண்ட பதி.

புதுமையுடைய நாகணவாய்ப் பறவைகளே! கிளிகளே! குயில்களே! அன்றில் பறவைகளே! பதுமை போன்ற பெண் ஆண்ட நகரானது பத்துத் தலைகளையுடைய இராவணனைத் தனது வாலில் கட்டிய வாலி அழியுமாறு அம்பைச் செலுத்தியவனான அரிதாள் ஆனது.

விளக்கம்: அம்பைத் தாவித்தான் கால்-அரிதாள்; திருமாலின் அடி; அரியப்பட்ட தாள்களைக் கொண்ட வயல். புனம் காத்த தலைவி தினையை அறுத்துவிட்டதால் வீட்டிற்குள் இருக்கலானாள். அவளைக் காணஇயலாது வருந்தும் தலைவன் 'தினைப் புனம் அரி தாள் ஆனதே; அதனால் புனத்தைக் காத்த தலைவியைக் காண இயலாது போயிற்றே' என வருந்துகிறான். தாவித்தான் தாள்-தாபித்தான் என்பது 'தாவித்தான்' ஆனது. 'தாவுவித்தான்' என்பது 'தாவித்தான்' என்று ஆனது எனவும் உரைக்கலாம். 150

367. சிவனும் திருமாலும் காக்க!
(திருமண வாழ்த்து)
(இச்செய்யுள் சிவனுக்கும் திருமாலுக்கும் சிலேடை)

சாரங்க பாணியர் அஞ்சக்கரத்தர் கஞ்சனைமுன்
ஓரங்கம் கொய்த உகிர்வாளர் பார்எங்கும்
ஏந்திடுமை யாகர் இனிதாய் இவர்உம்மைக்
காத்திடுவர் எப்போதும் காண்.

சிவபெருமானுக்கு ஏற்பப் பொருள் கொள்ளுமுறை :

மானையுடைய கையினர்; பஞ்சாட்சரத்தை மந்திரமாகக் கொண்டவர்; நான்முகனது ஒருதலையை முற்காலத்தில் கிள்ளிய நகத்தைக் கொண்டவர்; உலகமெல்லாம் வணங்கும் உமையம்மையைத் திருமேனியிலே பெற்றவர்; இத்தகைய பெருமான் உம்மை எப்போதும் காப்பாராக.

திருமாலுக்கு ஏற்பப் பொருள் கொள்ளும் முறை: சாரங்கம் என்ற வில்லைக் கையிலேவைத்திருப்பவர்; அழகிய சக்கரத்தை உடையவர்; தம் மாமனுன கம்சனின் உடலைக் கிழித்த நகத்தினர்; உலக முழுவதும் வணங்கும் கரிய உடலினர்; இத்தகைய பெருமான் உம்மை எப்போதும் காப்பாராக. 151

368. திருப்பனந்தாள் பட்டன் தண்ணீரும் சோறும் தருவான்!

விண்ணீரும் வற்றிப் புவிநீரும் வற்றி விரும்பிமழைத்
தண்ணீரும் வற்றிப் புலவோர் தவிக்கின்ற காலத்திலே,
உண்ணீர்உண் ணீர்என்றுப சாரஞ் சொல்லி உபசரித்துத்
தண்ணீரும் சோறும் தருவான் திருப்பனந் தாள்பட்டனே.

விண்ணில் உள்ள வான் கங்கையும் வற்றி, இவ்வுலகத்தில் உள்ள ஊற்றுநீர் முதலியனவும் இல்லாது ஒழிந்து, மழை பெய்வதும் இல்லாமல் வரண்டு, புலவர்கள் எல்லாம் துன்பமடையும் காலத்தில் 'உண்ணுங்கள் உண்ணுங்கள்' என்று உபசாரம் செய்து குளிர்ந்த நீரையும் உணவையும் தருபவன் திருப்பனந்தாளில் உள்ள 'பட்டர்' என்பவரே ஆவார். 152

369. மீனுட்சியம்மை மீது சிலேடை

விள்ளப் புதுமையொன் றுண்டால வாயினில் மேவுதென்னன்
பிள்ளைக் கொருகுலை மூன்றே குரும்பை பிடித்ததிலே
கொள்ளிக் கணன்திட்டி யாலோர் குரும்பை குறைந்தமிர்தம்
உள்ளிற் பொதிந்த இரண்டிள நீர்கச் சுறைந்ததுவே.

மதுரை நகரத்தில் சிறப்பாகச் சொல்லக் கூடிய புதுமை ஒன்றுண்டு. மலையத்துவச பாண்டியனின் மகளாகிய தடாதகைக்கு ஒரு வரிசையில் மூன்று குரும்பை போன்ற தனங்கள் தோன்றின. அவற்றில் நெருப்புக் கண்ணனுன சிவபெருமானின் திருஷ்டியால் (பார்வையால்) ஒன்று மறைந்தது; உயிர்களைக் காப்பாற்றும் பால் அமுதம் உள்ளே கொண்ட இரண்டு இளநீர்க் காய்கள் ரவிக்கையினுள்ளே மறைந்தன.

விளக்கம்: தென்னன் பிள்ளை-தென்னம் பிள்ளை என்பது போன்றும், அதில் ஒரு குலையில் குரும்பைகள் தோன்றின என்பது போன்றும் பாடப்பட்டது. **கொள்ளிக் கணன்**-*தீயைக்*

கண்ணிலே கொண்ட சிவன். திட்டி-திருஷ்டிதோஷம் என்பதை நினைவுறுத்துகிறது. கச்சு உறைந்தது-கைத்து உறைந்து போனது என்ற தொனிப்பொருளைக் கொண்டது.

எனவே, தொனிப் பொருள் வருமாறு:

மதுரையில் சொல்லக்கூடிய அதிசயம் ஒன்று உண்டு. ஒரு தென்னைக்கு ஒரு குலை தோன்றியது. அதில் மூன்று குரும்பைகள் (இளங்காய்கள்) உண்டாயின. அவற்றை நெருப்புக்கண்ணன் (கெட்ட பார்வையையுடையவன்) பார்த்தான். அவனது திருஷ்டிபட்டதால் ஒருகாய் மறைந்தது. இரண்டு காய்கள் கைத்து உறைந்து போயின. 153

370. மாட்டுக்குக் கால் நீட்ட இடம் என ஒன்றுண்டோ?

('தில்லையில் கோவிந்தராசப் பெருமானின் காலின் கீழ் நின்று நடராசர் நடனமாடுகின்ருர்' என்று வைணவர் இகழ்ந்துகூற, அதற்கு விடையாக இதனைப் பாடினுர்.)

ஆட்டுக்கு இசைந்தவர் அம்பல வாணர் அவர்க்குஎதிரே
நீட்டிற்று மால்வட பாலினில் கால்என நீநினையேல்
சூட்டுற்ற முப்புரம் செற்றவர் தம்மைச் சுமந்துஅலுத்த
மாட்டுக்கென் ஞேவிடம்? கால்நீட்டல் சொல்ல வழக்கில்லையே!

ஆடலுக்குத் தகுதியானவர் நடராசர் ஆவர்; அவருக்கு முன்பு கோவிந்தராசர் காலை நீட்டியுள்ளார் என்று அதைத் தவருக எண்ண வேண்டா; ஏனென்ருல், திரிபுரங்களை எரித்த சிவபெருமானைச் சுமந்து அலுத்துப் போன காரணத்தால் அவரது காளை வாகனமான திருமாலுக்குக் கால் நீட்டுவதற்கு இடம் இன்னதென்று தெரியுமா? அதைக் குற்றமாகக் கூறக் கூடாதன்ருே?

விளக்கம் : திருமால் சிவபெருமானை நோக்கி, தான் அவரைச் சுமக்கும் வாகனமாதல் வேண்டும் என வேண்ட, சிவபெருமானும் அங்ஙனமே அருளினுர். எனவே சிவனின் காளை வாகனம் திருமால் எனப்படும். **154**

371. திருவொற்றியூர்ப் பெருமானின் மீது இகழ்வது போலப் புகழ்ந்து பாடியது

பாருர் அழியப் பலிக்குழன் றீர்பற்றிப் பார்க்குமிடத்து
ஒருரும் இல்லை; இருக்கவென் ருலும்உள் ளூரும்ஒற்றி;

பேரூ ரறியத் தியாகரென் றேபெரும் பேரும்பெற்றீர்;
ஆரூரி லேயிருப் பீர்;இனிப் போய்விடும் அம்பலத்தே.

சிவனே! இவ்வுலகத்தில் உள்ளவர் எல்லாம் அறியப் பிச்சை ஏற்றுத் திரிந்தீர்! நன்கு ஆராய்ந்து பார்த்தால் உமக்கு என ஓர் ஊரும் இல்லை எனத் தெரிகின்றது. நீவிர் நிலைத்துத் தங்குவதற்கு இடம் உண்டா எனப் பார்த்தாலும் நீவிர் உள்ள இந்த ஊரும் ஒற்றியூர் (ஒத்தி வைக்கப் பட்டதாகும்); உலகத்தவர் அறிய நீர் பெருங் கொடையாளி எனவும் பெயர் பூண்டிருக்கிறீர்? இனி யாருடைய ஊரில் இருக்கப் போகிறீர்; (ஆரூரில் வீற்றிருப்பிர்); ஓர் ஊரும் உமக்கு உரியதாக இல்லாமையால் பொது வெளியில் (தில்லை அம்பலத்தில்) செல்வீராக. ,55

372. தட்டான் புறப்பட்டான்!

(சிவபெருமான் உலா வருதலைப் பார்த்து இகழ்வது போலப் புகழ்ந்து பாடுதல்)

வாணியன் பாடிட வண்ணான் சுமக்க வடுகன்செட்டி
சேணியன் போற்றக் கடற்பள்ளி முன்தொழத் தீங்கரும்பைக்
கோணியன் வாழ்த்தக் கருமான் துகில்தனைக் கொண்டணிந்த
வேணிய னவன் தட்டான் புறப்பட்ட வேடிக்கையே.

நான்முகன் வேதத்தை ஓத, நந்திதேவன் சுமந்து வர, வயிரவரும் முருகனும் இந்திரனும் மற்றும் பலரும் வணங்க, பாற்கடலில்பள்ளிகொண்ட திருமால் வழிபட, இனிய கரும்பை வில்லாகக் கொண்ட மன்மதன் வாழ்த்துக்கூற, யானைதோலை ஆடையாகப் போர்த்துக் கொண்ட சடையை உடைய எவருக்கும் தட்டுப்படாத சிவபெருமான் வெளிப்பட்டது ஒரு வேடிக்கையாகும்.

விளக்கம் : வாணியன்-வாணி, கலைமகள்; அவளை மனைவியாகக் கொண்ட நான்முகன். வண்ணான்—வளப்பத்தையுடையவன்; நந்தி. வடுகன்-வயிரவன். செட்டி—முருகன். சேணியன் இந்திரன்.கோணியன் – வளைத்தவன்;மன்மதன். கரு மான்துகில்-கரியமாவாகிய யானையின் தோலான துகில். வேணியன் வேணி; முடி; இங்குச் சடையையுடையவன். தட்டான்-மனம், வாக்கு, காயங்களுக்கு அப்பாற்பட்டவன் . 156

373. துதி மதுரமாக உரைப்பதேன் ?

(அதிமதுர கவிராயர்க்குக் கட்டியங் கூறியபோது பாடியது)

**அதிமதுரம் என்றே அகிலம் அறியத்
துதிமதுர மாய்எடுத்துச் சொல்லும்—புதுமையென்ன?
காட்டுச் சரக்குலகில் காரமில் லாச்சரக்குக்
கூட்டுச் சரக்கெனவே கூறு.**

அதிமதுர கவிராயர் என்று உலகம் எல்லாம் அறிந்துகொள்ள இனிமையாய்ப் புகழ்ந்து பேசும்அதிசயம்தான் என்னே? அந்த அதிமதுரம் காட்டில் உள்ள பொருளாகும்; உலகில் காரம் இல்லாத பொருளாகும்; தனி இயல்பு இல்லாமல் மற்ற வற்றுடன் சேர்க்கப்படும் பொருளாகும் என்றேசொல்லுக. 157

374. கவி காளமேகம் நான் !

(கட்டியங்காரன் 'நீவிர் யார்' என, அதற்குக் கூறிய விடை)

**கழியும் பிழைபொருள் தள்ளிநன் னூலங் கடலினுண்டு
வழியும் பொதியை வரையினிற் கால்கொண்டு வண்கவிதை
பொழியும் புலவர் மனத்தே இடித்து முழங்கிமின்னிப்
பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே.**

விலக்கத் தக்க குற்றமுள்ள கருத்துகளையெல்லாம் விலக்கித் தள்ளி, நல்ல நூல்கள் என்னும் கடலில் படிந்து, பொதிய மலையில் பொருந்தும் காற்றை ஏற்று, நல்ல கவிதைகளை இயற்றும் புலவர்களின் உள்ளமாகிய வானத்தில் இடித்து முழங்கி மின்னிக் கவிமழை பொழிவதற்காகக் கவிஞராகிய காளமேகப் புலவர் வெளிப்பட்டார். 158

375. வெள்ளைக்கவி காளமேகம் !

**மூச்சுவிடும் முன்னே முந்நூறும் நானூறும்
ஆச்சுதுஎன்றால் ஆயிரம்பாட்டு ஆகாதோ!—பேச்சென்ன,
வெள்ளைக் கவிகாள மேகமே, நின்னுடைய
கள்ளக் கவிக்கடையைக் கட்டு.**

ஒரு தடவை காற்றை இழுத்து மூச்சை வெளியே விடும் அத்துணை நேரத்துக்குள் முந்நூறு செய்யுட்களும் நானூறு செய்யுட்களும், 'ஆயிற்று' என்னும் சொல்லைச் சொல்லும் நேரத்திற்குள் ஆயிரம் பாட்டுகளும் பாடி முடிக்கப்பட மாட்

டாவோ? அதிகமாகப் பேசுவானேன்? பொருள் இல்லாத கவிகளைப் பாடும் காளமேகமே! பொய்யான பாட்டு என்னும் பொருள்களைக் கொண்டநின் கடைவாயை மூடிடுவாய்! 159

376. தந்தை தாய் இல்லாததால் உண்டான இழிவு

வில்லால் அடிக்கச் செருப்பால் உதைக்க வெகுண்டொருவன்
கல்லால் எறியப் பிரம்பால் அடிக்கஇக் காசினியில்
அல்லார் பொழில்தில்லை அம்பல வாணற்கொ ரன்னைபிதா
இல்லாத தாழ்வல்ல வோகிங்ங னேஎளி தானதுவே.

சோலை சூழ்ந்த தில்லை அம்பலத்தில் நடனமாடும் நடராசப் பெருமானுக்கு இந்தவுலகில் தாய் தந்தை இல்லாத காரணத்தால் அன்றோ,அருச்சுனன் வில்லால்அடித்தான்? கண்ணப்ப நாயனார் செருப்பால் உதைத்தார்? மதுரை மன்னன் சினந்து பிரம்பால் அடித்தான்? சாக்கியநாயனார் கல்லால் அடித்தார்! இங்ஙனம் எல்லாருக்கும் எளிதானார்! 160

377. திருமாலை மணியாக உருவகித்தது !

பாங்கு பெருந்திரு வைந்நூற் றிரட்டிப் பணவிடையில்
தூங்கு மதிலொரு மாவேற் றமுண்டு சுரர்முனிவர்
ஆங்கவர் செப்பிற்கு அடங்கா துஉலகம் அனைத்தும்பெறும்
ஓங்கும் அரங்கத் திருப்பெட் டகத்துள் ஒருமணியே.

சீரங்கத்தில் உள்ள கோயிலில் வீற்றிருக்கும் பெருமாளான இரத்தினம் தன் பக்கத்தில் மிகவும் அழகு பொருந்தியது (திருமகள் தன் பக்கத்தில் இருக்கும் தன்மையது); ஆயிரம் பண நிறையளவு அந்த ரத்தினம் நிறுக்கப்படுவது (ஆயிரம் படங்களையுடைய பாம்பின்மீது துயில் கொள்ளும்); ஆயிரம் பணவிடைக்கு மேல் ஒரு மா அளவு மிக்குக் காட்டும் (அதில் மிக்க உயர்வு உண்டு); அதன் பெருமை தேவர் முனிவர் ஆகியவரின் சொல்லினுள் அடங்காது (அவரது புகழ்ச்சிக்கு அப்பாற்பட்டது); பெரிய உலகம் முழுவதையும் தந்தாலும் அதன் விலைக்குத் தகும் (உலகம் முழுவதையும் காக்கும்.)161

378. கோவிந்தராசரை முதற்கடவுள் என வைணவர் கூற அதற்கு விடை கூறியது.

சத்தாதி ஐந்தையும் தாங்காத தெய்வம் தனிமறையும்
கர்த்தா எனும்தெய்வம் அம்பலத்தே கண்டு கண்கள்இரு

பத்தான வன்மைந்தன் பொய்த்தேவி யைக்கொல்லப் பார்த்தழுத
பித்தா னவன்தனையோ தெய்வ மாகப் பிதற்றுவதே.

சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் ஐந்தால் ஆன உடலை எடுக்காத இறைவன் (பிறப்பற்றவன்) ஒப்பில்லாத வேதமும் உலகத்தின் முதல்வன் எனத் துதிக்கும் தெய்வத் தினைச் சிற்றம்பலத்தைக் கண்டு வணங்கிய பின்னர், இருபது கண்களையுடையவனான இராவணனின் மகனான இந்திரசித்து படைத்த மாயாசீதையைக் கொல்வதைப் பார்த்துக் கொல்லப்பட்ட சீதை உண்மையான சீதையே என்று எண்ணி அழுத, பெண் பித்தனானவரைத் தெய்வம் என்று எங்ஙனம் தவறாகச் சொல்ல முடியும்? 162

179. ஆதி சேடன் அச்சம் கொண்டதேன்?

திரண்டிமை யோர்தொழும் தென்னரங் கேசர்முன் செங்கைக ளாறு
இரண்டுடை யோனும் எதிர்சென்ற தாலெதிர்ந் தார்தமைக் கண்டு
அருண்டெழும் ஐவர்க்கும் தேரூர் பவன்கொள் அணைவெருண்டு
புரண்டொரு புற்றைக் கடந்தொரு புற்றில் புகுந்ததுவே.

தேவர்கள் ஒன்று சேர்ந்து வணங்கும் திருவரங்கப் பெருமானான கோவிந்தராசரின் முன் பன்னிரண்டு கைகளை யுடைய முருகப் பெருமான் சென்றார்; அங்ஙனம் சென்றதால், பகைவரைக் கண்டு அஞ்சி எழுந்த, பாண்டவர்களுக்குத் தேரைச்செலுத்திய கண்ணனின் படுக்கையான பாம்பு தன் முன் தோன்றியவரைப்பார்த்து அஞ்சி, இருந்தஇடத்தைவிட்டு ஒரு புற்றை விட்டு மற்றொரு புற்றை அடைந்தது.

விளக்கம் : திருமாலின் படுக்கையாகிய ஆதிசேடன் என்ற பாம்பு முருகப் பெருமானின் மயில் வாகனத்தைக் கண்டு அஞ்சி அங்கிருந்து நீங்கிச் சிவபெருமானின் உடலாகிய புது வீட்டில் புகுந்து கொண்டது. 163

380 காஞ்சி காமாட்சியைப் பாடியது.

மாக்கைக் கிரங்கும் குருகும் வளர்சக்ர வாகப்புள்ளும்
தாக்கச் சரபம் குழைந்த தெவ்வாறு சகதலத்தை
ஆக்கிப் பெருக்கித் திருவறச் சாலையில் அன்னமிட்டுக்
காக்கைக் கொருகொக்கின் கீழே இருக்கும் கருங்குயிலே.

உலகங்கள் எல்லாவற்றையும் படைத்து வளர்த்து அழகிய தருமசாலையில் எல்லார்க்கும் உணவுபடைத்துக்காத்ததற்காக ஒரு மாமரத்தின்கீழ் எழுந்தருளியிருக்கும் கரிய குயில் போன்றவளே! பெருமை பொருந்திய நின் கைகளில் ஒலிக்கும் வளையலும் சக்கரவாளப் பறவை போன்ற முலைகளும் தழுவுவதால் சிம்புள் பறவை வடிவம் கொண்ட சிவபெரு மானின் மேனி எவ்வாறு குழைந்து பே யிற்று? கூறுவா யாக!

விளக்கம் : ஒரு பெண்ணாகிய உனக்குச் சிவபெருமான் எவ்வாறு குழைந்தார் என்றும், குயிலாகிய உனக்குச் சரபம் என்னும் பறவை எவ்வாறு குழைந்தது என்றும் இரு பொருள் கொள்ள வேண்டும். சிவபெருமான் உமைக்குக் குழைந்த வரலாறு : காமாட்சி யம்மையார் சம்பாநதியில் மணலிலே லிங்கத்தைச் செய்து பூசனை செய்தார். அப்போது வெள்ளம் வரவே, அம்மை அப்பனைத் தழுவிக் கொண்டார். அதனால் அம்மையின் மார்புத் தழும்பும் வளையல் தழும்பும் பட்டுச் சிவலிங்கம் குழைந்தது என்பது வரலாறு. புலவர் இதில் குருகு, சக்கரவாகம், சரபம், காக்கை, கொக்கு, குயில் என்ற பறவைகளின் பெயர்களைக் கையாண்டு சொல் நயம் தோன் றப் பாடியுள்ளார். நரசிங்க அவதாரத்தை வெல்வதற்காகச் சிவபெருமான் சரபப் பறவை வடிவம் கொண்டார். 164

381. திருவாரூர்ப் பெருமானைப் பற்றிப் பாடியது.

தென்னைக்கும் சோலைக் கமலைப் பிரான்செஞ் சடாடவிதான்
என்னைக்கு மென்னில், எரிஒக்கும் அந்த எரியில் இட்ட
பொன்னைக்கும், கொன்றை கரிஒக்கும், வண்டு நற்பொற்பணிசெய்
மின்னைக்கும் கங்கைகிழக் கொல்லன்ஒக்கும் அவ்வெண்பிறையே.

அழகுடைய சோலை சூழ்ந்த திருவாரூர் சிவபெருமானின் சிவந்த சடையாகிய காடு எதைப்போல இருக்கும் என்றால் தீயைப் போல விளங்கும்; அதில் உள்ள கொன்றைமலர் அந்தத்தீயில் இட்ட பொன்னைப் போன்றிருக்கும்; அம் மலரைச் சூழ ஒலிக்கும் வண்டானது தீயைச் சூழ்ந்த கரியைப் போன்றிருக்கும்; சடையில் உள்ள கங்கையாறு அப்பொன்னால் நல்ல நகை செய்து கொள்ளும் பெண்ணைப் போன்றதாகும்; சடையில் உள்ள வெண்பிறைச் சந்திரன் முதிர்ந்த கிழவனைப் போல விளங்கும். 165

382. *ஆரூரர் பவனி வந்த கோலம்*

கரியொன்று பொன்மிகும் பையேறக் கற்றவர் சூழ்ந்துதொழ
எரியொன்று செல்வன் துலாத்தினி லேற இருண்டமஞ்சு
சொரிகின்ற நாகமின் சோற்றினி லேறித் தொடர்ந்துவர
நரியொன்று சொந்தக் கனலேறி வந்தது நங்களத்தே.

யானை முகத்தை உடைய விநாயகர் பெருச்சாளி வாகனத்தின் மீது ஏறிவர, கற்றவர் சூழ்ந்துவர, தீப்போன்று செந்நிறத்தையுடைய முருகப் பெருமான் மயிலில் ஏறிவர, கரு மேகங்கள் மழையைப் பெய்யும் இமயமலை அரசனின் மகளான உமையம்மை அன்னவாகனத்தில் ஏரிவர, சம்புவாகிய கடவுள் (சிவபெருமான்) நந்திமேல் எழுந்தருளி நம்மிடத்தே வந்தார்.

விளக்கம் : நரி—சம்புகம்; அது சிவபெருமானை இங்குக் குறித்தது; சம்பு—சிவபெருமான். சாளி—பொன்னை இட்டு வைக்கும் பை. ஆகையால் பெருச்சாளியைக் குறிக்க 'பொன் மிகும் பை' என்றார். சொந்தக்கனல் ஏறி: சொந்தம்—நம். கனல்—தீ. நம் தீ என்ற இரண்டுசொற்களும் சேர்ந்து 'நந்தீ' என்றாகிப் பின்னர் 'நந்தி' என்று குறுகியது; குறுகிக் காளை வாகனத்தைக் குறித்தது. துலாத்தினில் ஏற—துலாஸ்நானம்; ஐப்பசி மாதம் காவேரியில் முழுகுதல். 166

383. *சிவபரமாகவும் விட்டுணுபரமாகவும் பாடிய சிலேடை*

இருந்தாரை கேள்வனை ஒங்கும் அராவை எழுபுனலைத்
திருந்தாரை வன்னியை முடிமுடித்தோன் செய்ய வேளைப்பண்டு
தரும்தாதை நாயகன் சுந்தரன் தூதன் சமரில் அன்று
பொருந்தார் புரத்திட்ட தீப்போல் மதியம் புறப்பட்டதே.

சிவனுக்குரியதாகப் பொருள் கொள்ளல்:

தாரையின் கணவனாகிய சந்திரனையும், படம் எடுக்கும் பாம்பையும், கங்கையாற்றையும், நல்ல ஆத்தி மாலையையும், வன்னி மலரையும், முற்காலத்தில் சடையில் சூடிக் கொண்டவனும் செந்நிறத்தையுடைய முருகப் பெருமானைப் பெற்றெடுத்தவனும், உலகுக்குத் தலைவனும், சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் தூது போனவனும் ஆகிய சிவபெருமான், போர் நிகழ்ந்த அக்காலத்தே, திரிபுரத்தில் இட்ட தீயைப்

போல, தலைவரைப் பிரிந்தவரைத் துன்புறுத்துவதற்காகச் சந்திரன் தோன்றினன்.
திருமாலுக்குரியதாகப் பொருள் கொள்ளல்: தாரையின் கணவனாகிய வாலியையும், வளர்ந்த மராமரத்தையும், கடலையும், பகைவரையும், முன்னாளில் மன்மதனைப் பெற்ற தந்தையான தலைவனும், இராமனும் ஆகியவனின் தூதனான அனுமான் முற்காலத்தில் இலங்கையில் நடந்த போரில் அவ் விலங்கையில் இட்ட தீயைப் போலச் சந்திரன் தோன்றினன். 167

384. 'சோமி' என்னும் தாசியின் அழகு

ஆராயு முத்தமிழ் ஆற்றூரில் சோமி அழகுகண்டு
நாரா யணன்நெடு மாலாகி னான்; மற்றை நான்முகனும்
ஓரா யிரமடல் ஊர்ந்தான்; வில்மாரன் உருவழிந்தான்;
பேரான வானவர் கோனுங்கண் ஆயிரம் பெற்றனனே.

இயல் இசை நாடகம் என்ற மூன்றையும் ஆராயும் ஆற்றூரில் உள்ள 'சோமி' என்னும் தாசியின் அழகைக் கண்டு, திருமால் பெரு மயக்கத்தை அடைந்தார்; (நீண்ட திருமேனியை உடையவரானார்); நான்முகன் ஆயிரம் முறை மடல் ஏறினர் (ஆயிரம் இதழுடைய தாமரையில் ஏறினார்); கரும்பு வில்லை யுடைய மன்மதன் எரிந்து போனான்; புகழுடைய இந்திரனும் ஆயிரம் கண் உடையவனாயினன். 168

விளக்கம் : இயற்கையாக உள்ளவற்றிற்குக் கவி ஒவ்வொரு காரணத்தைக் கற்பித்துக் கூறினார்.

835. திருவலஞ்சுழியில் உள்ள விநாயகக் கடவுள்

பறவாத தும்பி, கருகாத வெங்கரி, பண்புரண்டே
இறுகாத தந்தி, உருகாத மாதங்கம் இந்துநுதல்
நிறவாத சிந்துரம் பூசாக் களபம், நெடுஞ்சுனையில்
பிறவாத ஆம்பல் வலஞ்சுழிக் கேவரப் பெற்றனனே.

பறந்து செல்லாத வண்டு) (யானை), எரிந்து கருநிறம் அடையாத அடுப்புக்கரி (யானை), பண்ணின் முறை மாறு வதற்குக் காரணமான இறுகக் கட்டப்படாத வீணையின் நரம்பு (யானை), பிறைச் சந்திரனைப் போன்ற நெற்றியில் நிறத்தைப் புலப்படுத்தாத செந்தூள் (யானை), உடலில் பூசப்

படாத சந்தனம் (யானை), பெரிய சுனை நீரில் தோன்றுத ஆம்பல் மலர் (யானை) ஆகிய விநாயகப்பெருமான் திருவலஞ் சுழியில் காட்சி தரும் பேற்றைப் பெற்றேன்.

விளக்கம்: தும்பி—வண்டு, யானை, கரி—அடுப்புக்கரி. யானை. தந்தி—வீணையின் நரம்பு; யானை. மாதங்கம்—மிகுந்தபொன்; யானை. சிந்துரம்—செந்நிறத் தூள்; யானை களபம்—கலவைச் சாந்து; யானை. ஆம்பல்—ஆம்பல் மலர்; யானை. 169

386. விநாயகப் பெருமானின் பெரிய வயிற்ருல் உண்டான விளைவுகள்

கம்பமத கடகளிற்ருன் தில்லை வாழும்
  கணபதிதன் பெருவயிற்றைக் கண்டு வாடி
உம்பரெலாம் விழித்திருந்தார்; அயில்வேற் செங்கை
  உடையஅறு முகவனுங்கண் ணீரா ருனுன்;
பம்புசுடர்க் கண்ணனுமோ நஞ்சுண் டான்;மால்
  பயமடைந்தான்; உமையுமுடல் பாதி யானுள்;
அம்புவியைப் படைத்திடுவ தவம தேயென்று
  அயனுமன்னம் இறங்காமல் அலைகின் ருனே.

மதம் பொழியும் யானை முகத்தையுடைய தில்லை விநாயகப் பெருமானின் பெருவயிற்றைக் கண்டு துன்பம் அடைந்து தேவர்கள் எல்லாம் கண் விழிக்காதவர் ஆனுர்கள்; கூரிய வேற்படையை உடைய முருகனும் பன்னிரண்டு கண்களை உடையவர் ஆனுர் (கண்ணினின்று நீர் வடியப் பெற்ருர்); தீக் கண்ணையுடைய சிவபெருமான் விடத்தை உண்டார்; திருமால் அச்சமடைந்தார் (பாற்கடலை அடைந்தார்); உமை யம்மை பாதியுடலானுள் (சிவனின் உடலில் பாதியானுள்); அழகிய உலகத்தைப் படைப்பது வீண் என்று எண்ணி நான்முகனும் அன்னம் இறங்காமல் (அன்னவாகனத்தை விட்டிறங்காமல்) திரிபலானுர். 170

387. முருகன் வள்ளியை மணந்ததால் நேர்ந்தவை

மருகிருக்கும் வேளூரின் வயித்திமகன் குறமகளை மணந்தா னென்றே
உருகியரன் நஞ்சுண்டான் உமையவளும் தவம்புரிந்தாள் உயர் மால்மேனி
கருகிமிக மண்தின்ருன் கமலன்முக நாலானுன் கடவு ளோர்கள்
இருவிழியும் இமையாமல் இரவுபகல் உறங்காமல் இருக்கின் ருரே.

மணம் கமழும் வேளூரில் வைத்தியநாதரின் மகனுன முருகன் குறப்பெண்ணுன வள்ளியை மணந்து கொண்டார் என்று மனம் வருந்திச் சிவபெருமான் விடத்தை உண்டார்; உமையம்மையும் இமயமலையில் தவம் செய்யலானுர்; திருமால் உடல் கருகி மண்ணைத் தின்ருர்; நான்முகன் முகம் தொங்கப் பெற்ருர் (நான்கு முகங்கள் பெற்றவர் ஆனுர்); தேவர்கள் இரு கண்களும் மூடாமல் இரவும் பகலும் உறங்காமல் இருக்கின்ருர்கள். 171

388. 'குரங்கு' எனத் தொடங்கி 'இடம்' என முடித்தது

குரங்குஅனலில் வீழ்ந்துவெறி கொண்டுதேள் கொட்டக்
கரஞ்செறியப் பாம்பலவன் கவ்வி—விரைந்துபேய்
பற்றவே கள்ளுண்டு பச்சைமிள கைக்கடித்தால்
எத்தனைபார் சேட்டைக் கிடம்.

குரங்கு தீயில் விழுந்து, வெறியும் பிடிக்கப் பெற்று, தேள் கொட்டப்பட்டு, பாம்பு கையில் கடிக்கப் பெற்று, நண்டு காலினைப் பற்ற, பேய் விரைவாகப் பிடித்துக் கொள்ள, அது கள்ளையும் குடித்து, மிளகையும் கடித்துக் கொள்ளுமாயின் எத்தனை சேட்டைக்கு இடமாகும்? 172

389. நாயேனைக் காப்பாய்!

நீருவாய் நெற்றி நெருப்பாவாய் அங்கமிரு
கூருவாய் மேனி கொழுந்தாவாய்—மாருத
நட்டமா வாய்சோறு நஞ்சாவாய் நாயேனை
இட்டமாய்க் காப்பாய் இனி.

இறைவனே! நீ திருநீறு அணியப்பெற்ற மேனியை உடையாய்! நெற்றியில் தீக்கண்ணை உடையாய்! உடல் இரு பகுதியாகப் பெற்ருய்! உடல் முழுவதும் தீ வடிவமாக உள்ளாய்! நிலையாக நடனத்தைச் செய்வாய்! சோறு விடமாகக் கொண்டாய்! இத்தகைய நீ என்னை விருப்பத்துடன் காப்பாற்றுவாயாக! 173

390. *கல்லுடன் கலந்து சேர்றிட்டவளை மறக்கலாமோ?*

நீச்சாற் பெருத்திடு காவேரி ஆற்றை நிலைநிறுத்திச்
சாய்ச்சாள் இலை கறிச் சாற்றையெல் லாம்அது தானுமன்றிக்
காய்ச்சாப் புளியும்நற் கல்லுடன் சோறும் கலந்துவைத்த
ஆச்சாளை யான்மற வேன்மறந் தால்மனம் ஆற்றிடுமோ.

நீந்துமாறு பெருகி வரும் வெள்ளமாகிய காவிரி ஆற்றைத் தடுத்துக் கீரைக் கறி சாற்றில் நீரைச் செலுத்தினள்; அது வன்றி, காய்ந்த புளியையும் அந்தக் கீரைச் சாற்றினில் கூட்டினள்; கற்களுடன் சோற்றைச் சேர்த்துச் சமைத்து வைத்தாள்; அத்தகையவளை நான் மறக்க மாட்டேன்; நான் மறந்தாலும் எனது மனம் ஆறுதல் பெறுமோ? 174

391. *தாசி ஒருத்தி கதை சொல்லுமாறு கேட்க, அதற்கு புலவரின் பதில்*

சோமன் புறப்படத் தென்றலும் வீசத் துயிலொழிய
யாமங்கள் தோறுங் குயில்வந்து கூவிடங் நேரத்திலே
நாமும் பிழைத்து மனிதர்முன் பேசிட நாமுமுண்டாய்க்
காமக் கலகந் தெளிந்தபின் நானுங் கதைசொல்வனே.

சந்திரன் தோன்றவும், தென்றல் வீசவும், உறக்கம் இல்லாமல் ஒழிந்து ஒவ்வொரு சாமத்திலும் குயில் எழுந்து கூவிடவும், அந்நேரத்தில் நாமும் உயிர் தப்பி மக்கள் முன்னர்ச் சென்று பேசும் உணர்ச்சியும் பெற்று, காதல் போர் முடிந்த பின்னர் நீ மட்டுமன்றி நானும் கதையைச் சொல்வேன். 175

392. *உன் கோயில் நாசமாகுக!*

(இவரைக் கயிற்றுறு என்ற கோயிலில் உள்ள பெருமாளைச் சுமக்குமாறு செய்தபோது இதனைப் பாடினர்.)

பாளைமணங் கமழுகின்ற கயிற்றுற்றுப்
பெருமாளே, பழிகா ராகேள்,
வேளை யென்றால் இவ்வேளை பதினாறு
நாழிகைக்கு மேலா யிற்றென்

தோளைமுறித் ததுமன்றி நம்பியா
　　ளையுங்கூடச் சுமக்கச் செய்தாய்;
நாளையினி யார்சுமப்பார்? எந்நாளும்
　　உன்கோயில் நாசந் தானே.

கமுகின் மணம் வீசும் 'கயிற்ருறு' என்னும் பதியில் வீற்றிருக்கும் பெருமாளே! பழிகாரனே, கேட்பாயாக! இந்நேரத்தை நினைத்தால், இரவு பதினுறு நாழிகை ஆகியுள்ளது; நின் வாகனத்தைச் சுமந்த காரணத்தால் அது என் தோளை முறித்ததே அல்லாமல், குருக்களையும் நின்னுடனே சுமக்கும்படிச் செய்தாய். இனி நாளைக்கு உன்னை யார் சுமக்கப்போகின்ருர்கள்? எக்காலத்தும் உன் கோயில் அழிந்து போவதாகுக. 176

393. ஏரி உடைக!

கலங்கல் துறையதனில் காராளர் போதத்
தெலுங்கப்ப நாரணன் தண்டிக்கச்—சலம்பெருகி
கட்டாறு கொண்டுகரை நன்ருய் உடைந்துநீர்
கட்டாது ஒழிதல் கடன்.

ஏரியினது கலங்கின நீர்த்துறைக்கு அருகில் வேளாளர் செல்லும்போது அவர்களை அடித்துச் செல்லவும், தெலுங்கு அதிகாரியாகிய நாரணன் தண்டிக்கவும், ஏரியின் நடுவில் வெள்ளம் பெருகித் தண்ணீர் அடங்காமல் வெளியே ஏரி முற்றும் உடைந்து ஓடுவதாகுக. 177

394. திருமலைராயனின் புகழ்

வீமனென வலிமிகுந்த திருமலைராயன் கீர்த்தி
　　வெள்ளம் பொங்கத்
தாமரையின் அயன்ஓடிச் சத்தியலோகம் புகுந்தான்;
　　சங்க பாணி
பூமிதொட்டு வானமட்டும் வளர்ந்துநின்ருன்; சிவன்கயிலைப்
　　பொருப்பி லேறிச்
சோமனையும் தலைக்கணிந்து வடவரைத் தண்டால்ஆழம்
　　சோதித் தானே.

வீமனைப் போன்று பலம் அதிகமாக உள்ள திருமலைராயனின் புகழ் என்ற வெள்ளம் பெருகி ஓடியதால், தாமரையை இருப்பிடமாகக் கொண்ட நான்முகன் ஓடிச் சத்தியலோகத்தைச் சேர்ந்தார்; சங்கைக் கையில் உடைய திருமால் நிலத்திலிருந்து வானம் வரை உயர்ந்து நின்றார்; சிவன் கயிலாயமலையில் ஏறிச் சந்திரனைத் தம் தலையில் அணிந்து இமயமலையாகிய தண்டினால் திருமலைராயனின் புகழ் வெள்ளத்தின் ஆழம் எவ்வளவு என்று ஆராய்ந்தார். 178

395. நடராசப் பெருமானின் உடைமை

ஏறு கட்டிய கொட்டி லரங்கமே;
ஈரி ரண்டு முகன்வா யிலாயமே;
மாறு கண்ணப்பன் வாய்மடைப் பள்ளியே;
வாய்த்த வோடை திருமால் வதனமே;
வீறு சேர்சிறுத் தொண்டனில் லாளுந்தி
வேட்ட நற்கறி காய்க்கின்ற தோட்டமே;
நாறு பூம்பொழில் சூழ்தில்லை யம்பல
நாரி பாகற்கு நாடக சாலையே.

உமையை ஒரு பக்கத்தில் கொண்ட சிவபெருமானுக்குக் காளையைக் கட்டும் கொட்டில் சீரங்கமாகும்; நான்முகனின் வாயில் குதிரை கட்டும் இடமாகும்; வேடனாக வந்து அன்புடைய பக்தனாய் மாறிய கண்ணப்பனின் வாய், சமையல் செய்யும் இடமாகும்! தாமரை மலர் பொருந்திய ஓடையானது திருமாலின் திருமுகமாகும்; சிறப்புடைய சிறுத்தொண்டருடைய மனைவியின் வயிறு காய்கறி விளையும் தோட்டமாகும்; மணம் கமழும் சோலை சூழ்ந்த தில்லை நடன அரங்கமாகும்.

விளக்கம் : சிவன் திரிபுரத்தை எரித்தபோது திருமால் காளை வாகனமாக அமைந்ததால், திருமாலின் இருப்பிடமான சீரங்கத்தை 'மாடு கட்டும் கொட்டில்' என்றார். திருமால் தன் தாமரை போன்ற கண்களைப் பிடுங்கிச் சிவபெருமானை அருச்சித்ததால், தாமரை மலரும் நீர் நிலை 'திருமாலின் வதனம்' என்றார். சிவபெருமானுக்குச் சிறுத்தொண்டர் தன் மகனை அரிந்து சமைத்து உண்ண இட்டார். ஆதலால் அம் மகனைப் பெற்ற சிறுத்தொண்டரின் மனைவியின் வயிறு 'காய்கறி விளையும் தோட்டம்' என்றார். 179

396. நடு எழுத்து அலங்காரம்

திருமால்வா கனம்நாவாய் இராசி ஒன்று
சினைதெவிட்டார் மாதுலன்கோ கிலமிவ் வேழின்
உருவாமே ழெழுத்தினடு எனக்குச் செய்தான்
உகந்துபதி னுன்கினையுந் தானே கொண்டான்
ஒருபாகத் திருத்தினுன் கையில் ஏற்ருன்
ஒருமதலை தனக்களித்தான் உண்டான் பூண்டான்
பரிவாயொண் கரத்தமைத்தான் உகந்தான் இந்தப்
பைம்பொழில்தில் லையுளாடும் பரமன் தானே.

பசுமையான சோலை சூழ்ந்த தில்லையில் நடனம் செய்யும் சிவபெருமான், திருமாலின் வாகனமான நாகாரி (கருடன்), கலம் (தெப்பம்), கன்னி, கவடு(கிளை), ஆரார், மாமன், பல்லி என்ற இந்த ஏழு சொற்களின் நடுவெழுத்துக்களால் ஆகிய 'காலன் வராமல்' என்பதை எனக்குச் செய்தான். எஞ்சிய பதினுன்கு எழுத்துக்களால் ஆன சொற்கள் புலப்படுத்தும் பொருள்களைத் தானே அமைத்துக் கொண்டான். அவை வருமாறு: நாரியை (பெண்ணை) ஒரு பாகத்தில் வைத்துக் கொண்டான்; கம்மை (கபாலத்தைக்) கையில் எடுத்துப் பிச்சையெடுத்தான்; ஒரு மகனுக்குக் கனியைத் தந்தான்; கடுவை (விடத்தை) உண்டான்; ஆர் மாலையை (ஆத்தி மாலையை) முடியில் அணிந்தான்; மானை விருப்பத்துடன் தன் கையில் வைத்தான்; பலியை (பிச்சையை) விரும்பினுன்.

விளக்கம் : திருமால் வாகனம் 'நாகாரி; நாவாய் 'கலம்'; இராசி ஒன்று 'கன்னி'; சினை 'கவடு'; தெவிட்டார் 'ஆரார்' மாதுலன் 'மாமன்'; கோகிலம் 'பல்லி'. இச்சொற்களில் உள்ள நடு எழுத்துக்களைச் சேர்த்தால் 'காலன் வராமல்' என்ருகும்; எனவே சிவபெருமானுனவர் 'காலன் வராமல் செய்தான்' என்று கொள்க.

இந்த ஏழு சொற்களில் முதலிலும் முடிவிலும் உள்ள எழுத்துக்களைச் சேர்த்தால் 'நாரி,' 'கம்,' 'கனி,' 'கடு,' ஆர்,' 'மான்,' 'பலி' என்ருகும்.

சிவபெருமான், நாரியை ஒரு பாகத்தில் இருத்தினுன்; 'கம்' கையில் ஏற்ருன்; கனி'யை ஒருமதலை தனக்கு அளித்தான்; 'கடு' உண்டான்; 'ஆர்' பூண்டான்; 'மான்' கரத்தில் அமைத்

தான்; 'பலி' உகந்தான் எனச் சொற்களைக் கூட்டிப் பொருள் கொள்க. 180

397. நிரல்நிறைப் பொருள்கோள்

(ஒரு செய்யுளில் முன் நின்ற வரிசைக்கேற்பப் பின் நின்ற சொற்களை வரிசையாகக் கூட்டுதல் நிரல் நிறைப் பொருள்கோள் ஆகும்.)

கூற்றுவனை வில்மதனை யரக்கர் கோவைக்
கூனிலவைக் குஞ்சரத்தை யிஞ்சி மூன்றை
ஏற்றுலகின் புறவுருவ மாளத் தோள்கள்
இறவெறிப்ப விமையப்பெண் வெருவ வேவக்
காற்றொழிலால் நயனத்தால் விரலால் கற்றைக்
கதிர்முடியால் கரதலத்தால் கணையால் பின்னும்
ஊற்றழிய வுதைத்தெரித்து நெரித்துச் சூடி
உரித்தெரித்தா னவனென்னை யுடைய கோவே.

இச்செய்யுளில் சொற்களைக் கொண்டு கூட்டும் முறை வருமாறு :

(1) கூற்றுவனை ஏற்று உலகு இன்புறக் கால்தொழிலால் ஊற்றழிய உதைத்து,

(2) வில்மதனை உருவம் மாள நயனத்தால் எரித்து,

(3) அரக்கர் கோவைத் தோள்களிற விரலால் நெரித்து,

(4) கூன் நிலவைக் கற்றைக் கதிர் முடியால் எறிப்பச்சூடி,

(5) குஞ்சரத்தை இமையப் பெண் வெருவ கரதலத்தால் உரித்து,

(6) இஞ்சி மூன்றை எரித்தான்

(7) என்னுடைய கோவே.

இதன் பொருள்: உலகமானது இன்பத்தை அடையத் தன் திருவடியினது செயலால் மார்க்கண்டேயனுக்கு வந்த துன்பம் நீங்குமாறு இயமனை எதிர்த்து உதைத்துத் தள்ளினார்;

கரும்பு வில்லைக் கொண்ட மன்மதனை அவனது உடல் அழிய நெற்றிக் கண்ணால் எரித்தார்;

கயிலை மலையை எடுத்தபோது இராவணனது தோள் ஒடியுமாறு கால் விரலால் அழுத்தி நசுக்கினார்; பிறைதிரனை அவனது குறை நீங்குமாறு தன் ஒளி வீசும் சடையில் அணிந்தார்; பார்வதி அஞ்சுமாறு யானையின் தோலுரித்தார்; திரிபுரத்தை எரித்து அழித்தார்;
இத்தகைய இயல்புடையவர் என் தலைவராகியபெருமான். 181

398. இதுவும் நிரல்நிறைப் பொருள் கோ

பொன்னனைவா ளரக்கனைநூற் றுவரைக் காவைப்
　பொருசிலையைக் கனைகடலைப் பொன்னீன்ற
நன்மகற்காய்ச் சுரர்க்காயைக் வருக்க காதல்
　நட்பினுக்காய்ச் சானகிக்காய் நாக் காக
மன்னுகிரால் வடிக்கணையால் வளை புள்ளால்
　வயங்குதோள் வலியால்வா லீ ளாலும்
முன்னுடல்கீ றிச்சிரங்கொண் டமர் வீழ்த்தி
　முதலொடுங்கொண் டிறுத்தடைத்த மோகூ ரானே.

(1) பொன்னனைப் பொன் ஈன்ற நன்மகற்காய் மன் உகிரால் முன் உடல் கீறி

(2) வாளரக்கனைச் சுரர்க்காய் வடிக்கணையால் சிரம்கொண்டு

(3) நூற்றுவரை ஐவருக்காய் வளையால் அமரில் வீழ்த்தி

(4) காவைக் காதல் நட்பினுக்காய்ப் புள்ளால் முதலொடுங் கொண்டு

(5) பொருசிலையைச் சானகிக்காய் வயங்குதோள் வலியால் இறுத்து

(6) கனைகடலை நாக்காக வானரங்களால் அடைத்த

(7) மோகூரான்

இதன் பொருள்: இரணியனைப் பிரகலாதனுக்காக வன்மையுள்ள தனது நகத்தினால் உடலைப் பிளந்து கொன்று, இராவணனைத் தேவர் பொருட்டாகக் கூர்மையான அம்பினால் தலையை அறுத்து, துரியோதனன் முதலிய நூற்றுவரைப் பாண்டவர்க்காகத் தன் கையில் இருந்த சங்கை ஊதிக் கொன்று, தன் மனைவியான நப்பின்னையினது மன நிறைவுக்காகப் பாரிசாத சோலையைக் கருடன் மூலமாகக் கொண்டு வரச்செய்து, சீதையின் பொருட்டாகச் சனகன் வைத்திருந்த

வில்லை, தோள் வன்மையால் ஒடித்து, ஒலிக்கும் கடலைச் சேனைகடந்து செல்வதற்காகக் குரங்குகளைக் கொண்டு அணைகட்டடைத்தவர் மோகூரில் வீற்றிருக்கும் பெருமாள் ஆவார். 182

399. வீரனை அளித்த கூழின் இயல்பு

ஏழானை யடித்து தனையடித்தான் வீரசென்னன் என்றே
காட்டில்
வாழாமல் சிறுபுலிப்புலியோ டெலிப்புலியாய் வடிவங் [கொண்டு.
பாழாகிக் காடெல்லாந்தவிக்க வடுகரடுப் படியில்வந்து
கூழாகி வயிற்றினிலாம்பொழுது குணம்போகாமற் குமு [றுந்தானே.

மனிதர் எழுவரை ஓர் காலத்தில் கொல்லும் புலியை அடித்துக் கொன்ற 'வீரன்' என்ற வடுக அந்தணன் என அறிந்து, சிறிய புலிக்கூட்டில் தங்கியிராமல் 'ஈ'ப்புலி யாகவும் 'எலி'ப்புலியாகவும் வடிவம் கொண்டு வந்து, காடெல்லாம் பாழாகுமாறுந்த அந்தணனின் சமைய லறையில் கூழ் வடிவத்தைப் பெற்று என் வயிற்றிலே போகும் போது தம் இயற்கையான தன்மைகள் நீங்கப் பெறாமல் இரைச்சல் இடுகின்றன. 183

400. ஓர் இடைச்சி தந்த மோரின் இயல்பு

காரென்று பேர்படைத்தாய் ககனத்து போது
நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தரை வந்ததன்பின்
வாரொன்று மென்முலையார் ஆய்ச்சியர் வந்ததன்பின்
மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே.

இடைச்சி தந்த மோரே! வானத்தில் இருக்கும்போது நீ 'மேகம்' என்ற பெயரைப் பெற்றிருந்தாய்; இந்த உலகத்தில் வந்தபிறகு 'நீர்' என்ற பெயரைப் பெற்றாய்; கச்சணி அணிந்த மார்பையுடைய இடைச்சியர் கையில் சேர்ந்தபின் 'மோர்' என்ற பெயரைப் படைத்தாய்; இங்ஙனம், மேகம், நீர் மோர் என்று மூன்று பெயரையும் பெற்றாய்! 184

401. இவரைக் கண்டு செட்டியார்கள் தம்முள் பரிபாஷையில் பேசிக்கொண்டபோது பாடியது.

கருந்தலை செந்தலை தங்கான் திரிக்கால் கடையில்சுற்றி
வருந்திக் குடவற்குந் தாட்டிக்குங் கொத்திட்டு மாய்வதால்

கரந்தைக ளாண்டிலொருக் கால்வருவது கண்டிருந்தும்
அரும்புக்குங் கொத்துக்கும் வந்தார் பிழைப்ப தரிதென்பரே.

செட்டியார்கள் வருந்த முயன்று கருந்தலை (கால்), செந்தலை (அரைக்கால்), தங்கான்(அரை), திரிக்கால்,(முக்கால்) என்ற அளவுகளில் காசுகளைக் கடையில் சம்பாதித்து அவற்றைப் பரத்தைக்கும் தாசிக்கும் தந்து மாய்வர்; அவ்வாறின்றி ஆசாரியர்கள் ஆண்டிற்கு ஒரு முறைதான் காணிக்கைக்காக வருவதை அறிந்திருந்தாலும், அவ்வாசாரியர்கள் 'அரிசிக்கும் சோற்றுக்கும் வந்துவிட்டார்கள்; இங்ஙனம்வந்தால் எவ்வாறு நாங்கள் பிழைப்பது? அரியதாகும்' என்று சொல்வார்கள். 185

402. 'திம்மி' என்னும் தாசி கூறியது

ஏமிரா வோரி யென்பாள் எந்துண்டி வஸ்தி யென்பாள்
தாமிராச் சொன்ன வெல்லாம் தலைகடை தெரிந்ததில்லை
போமிராச் சூழுஞ் சோலைப் பொருகொண்டைத் திம்மி கையில்
நாமிராப் பட்ட பாடு நமன்கையில் பாடு தானே.

'திம்மி' என்ற தெலுங்குத் தாசி 'ஏமிரா ஓரி' (என்னடா, அடே) என்பாள்; 'எந்துண்டி வஸ்தி' (எங்கிருந்து வருகின்றாய்) என்பாள்; நேற்று இரவு அவள் கூறியவற்றையெல்லாம் ஆராய்ந்தால் அவற்றில் முதலும் முடிவும் என்ன எனத்தெரிய இயலவில்லை; இருள் செறிந்த சோலையைப் போன்ற கூந்தலை உடைய திம்மியினிடத்தில் நாம் நேற்றிரவில் அனுபவித்த சங்கடம் எமன் கையில் படும் துன்பமே ஆகும். 186

403. கிழத்தாசியை இகழ்ந்தது

இந்து முடிக்குஞ் சடையாளர்
இருக்குந் தொண்டை வளநாட்டில்
சிந்து படிக்கக் கவிபடிக்கத்
தெரியா மடவாய் உன்தனக்குக்
கந்தப் பொடியேன் பூமுடியேன்
கிழமாய் நரைத்து முகந் திரைத்தும்
இந்த முறுக்கேன் வீறுப்பேன்
எடுப்பேன் உன்னைக் கெடுப்பேனே.

பிறைச்சந்திரனைச் சூடிய சிவபெருமான் வீற்றிருக்கும் தொண்டை நாட்டில், சிந்துகளும் வேறு சிறந்த பாடல்களும்

பாடத்தெரியாத அறிவில்லாதவளே! உனக்கு மணம் வீசும் பொடிகள் எதற்காக? மலரைச் சூடிக்கொள்வது எதற்காக? வயது அதிகமாகி நரையும் திரையும் முகத்தில் உண்டான பின்னரும், இத்தகைய அலங்காரங்கள் ஏன்? இறுமாப்பு உனக்கு ஏன்? கிளர்ச்சி ஏன்? உன்னை இழக்க ஆயத்தமாக உள்ளேன். 187

பொய்யாமொழிப் புலவர் பாடல்கள்

404. குதிரை மாளக் கொண்டு போ!

(பொய்யாமொழிப் புலவர் தம் ஆசிரியரின் கொல்லையைக் காத்து வந்தார். அப்போது காளிங்கன் என்ற அரசனின் குதிரை கொல்லையில் புகுந்து அதை அழித்தது. அப்போது அக்குதிரை இறக்கும்படியாகப் பாடினார்).

வாய்த்த வயிரபுர மாகாளி அம்மையே
ஆய்ந்த மணலில் அணிவரையில்—காய்த்த
கதிரைமா ளத்தின்னுங் காளிங்கன் ஏறும்
குதிரைமா ளக்கொண்டு போ.

பல வளங்களும் பொருந்திய 'வயிரபுரம்' என்னும் தலத்தில் வீற்றிருக்கும் காளியம்மையே! நுண்ணிய மணல் நிலத்திலும் மலைச் சாரலிலும் விளைந்த பயிரின் கதிரை அழிந்து போகுமாறு தின்னும் 'காளிங்கன்' என்னும் மன்னன் ஏறும் குதிரையானது இறக்குமாறு அதைக்கொண்டு செல்வாயாக!
குறிப்பு: இதனைக் கம்பர் பாடினார் எனவும் கூறுவதுண்டு. 1

405. குதிரை இறந்ததைக் கண்ட ஆசிரியர் பாடியது!

பொதியில் அகத்தியனாய்ப் பொய்யா மொழியாய்ச்
சிதைவில் புலவர் சிகாமணியாய்த்—துதிசேரும்
செங்காட்டங் கோட்டத் துறையூர் எனுந்தலத்தில்
தங்காட்டங் கொண்டிருப்பாய் தான்

பொதிய மலையில் வாழும் அகத்திய முனிவராகவும், பொய்யா மொழிப் புலவராகவும், குற்றம் இல்லாத கல்வியாளர்க்குத் தலைவராகவும், புகழ் வாய்ந்த செங்காட்டம் கோட்டத்

துறையூர் என்ற இடத்தில் தங்கியிருக்கின்ற விளையாட்டைச் செய்வாயாக!

விளக்கம்: இது, 'அகத்தியரே பொய்யா மொழியாகத் தோன்றியுள்ளார்' என்னும் பொருள் தோன்றப் பாடப்பட்டது. அரசனின் குதிரை இறக்கப் பாடியதால், ஆசிரியரும் அவருடைய மாணவராகிய பொய்யா மொழிப் புலவரும் மற்ற மாணவரும் அவ்வூரில் வாழ இயலாது போய்விடும். அரசன் சினந்து அவர்களைத் துன்புறுத்துவான். ஆதலால் 'நாம் இங்கு வாழ்வதற்கு உரிய முறையையும் கடைப்பிடிப் பாயாக' என்பார், ''தங்காட்டம் கொண்டிருப்பாய்தான்'' என்றார். 2

406 நானும் அவனுக்குத் துணையாகச் செல்வேன்!
(சீனக்கன் இறந்த காலத்தில் பாடியது)

வாழி சோழ, என்வாய்மொழி கேண்மோ!
ஊழி நிலவெறி மாளிகை யின்வயின்
கட்டிளங் கணவன் கவின்பெறு சேக்கை
என்றறி மனைவி நெடிது துயில்கொளச்
செல்லக் கிடமின் எனக்கிடம் தருகெனச்
சொல்லிய நண்பன் தனிச்செல் பவனோ
நானும் ஏகுவன் நற்றுணை அவற்கே.

நீடு வாழும் சோழ அரசனே! என் உண்மையான சொல்லைக் கேட்பாயாக நிலவொளி வீசும் மாடத்தில், தன்னை மணந்த கணவனின் அழகிய படுக்கையில் (நான் படுத்திருந்ததை அறியாமல) கணவன் படுத்திருப்பதாக எண்ணி நெடுநேரம் அவன் மனைவி உறங்கினாள். பக்கத்தில் தானும் படுத்திருந்து, அங்கேயே என்னை இடம் கொடுததுப் படுத்திருப்பாயாக என்று சொன்னான். இத்தகைய நண்பனான 'சீனக்கன்' தனியே இறக்கலாமோ? அவனுக்குச் சிறந்த துணையாக நானும் இறப்பேன். 3

407. சீனக்கா, சிதையில் இடம் தா!

அன்றுநீ செல்லக் கிடவென்றாய்! ஆயிழையோடு
இன்றுநீ வானுலகம் ஏறினாய்!—மன்றல்கமழ்
மானனைக்கும் வேல்விழியார் மாரனே கண்டியூர்ச்
சீனக்கா, செல்லக் கிட.

கண்டியூரில் வாழும் சினக்கனே! உன் மனைவியின் பக்கத்தில் இடம் கொடுத்துப் படுத்துக் கொள்வாயாக எனக் கூறிய நீ, இன்றைக்கு உயிர்விட்டுச் சுவர்க்கத்துக்குச் சென்றாய். மான் போன்றதும் வேல் போன்றதுமான கண்களையுடைய மகளிர்க்கு மன்மதனைப் போன்றவனே! இப்போது சுடுகாட்டில் நீ கிடக்கும் சிதையில் எனக்கும் இடம் அளிப்பாயாக!

விளக்கம்: சினக்கனின் படுக்கையில் பொய்யா மொழிப் புலவர் படுத்திருந்தார். அப்போது தன் கணவன் படுத்திருப்பதாக எண்ணி, சினக்கனின் மனைவியும் புலவருடன் படுத்துறங்கினாள். பின் சினக்கன் வந்து தனக்கும் இடம் தருமாறு கேட்டுப் படுத்துக் கொண்டான். அதனுடன் புலவரை எழுந்து செல்ல வேண்டா எனவும் தடுத்தான். அத்தகைய நட்புடைய சினக்கன் இறந்தபோது, பொய்யா மொழிப் புலவரும், சுடுகாட்டில் சினக்கனுக்காக அடுக்கப் பட்ட சிதையில் படுத்து உயிர் நீத்தார். 4

408 சங்கப் பலகையே சற்றே மிதி!

(மதுரைப் பொற்றாமரைக் குளத்தில் மூழ்கிக் கிடந்த சங்கப் பலகை மேலே எழுமாறு பாடியது.)

பூவேந்தர் முன்போல் புரப்பார் இலையெனினும்
பாவேந்தர் உண்டென்னும் பான்மையால்—கோவேந்தன்
மாறன் அறிய மதுரா புரித்தமிழோர்
வீறணையே சற்றே மித.

இவ்வுலக மன்னர்களுள் முற்காலத்தைப் போலத் தமிழைப் பேணுபவர் இல்லையாயினும், கவிமன்னர்களாகிய புலவர்கள் என்பதால், பாண்டிய மன்னனும் காணுமாறு, மதுரையில் இருந்த சங்கப்புலவர்களின் இருக்கையே, சிறிது நேரம் நீரில் மேலே தோன்றி மிதப்பாயாக! 5

409. சங்கப் புலவர்களின் சிலைகள் தலையசைத்தன!

உங்களிலே யானொருவன் ஒவ்வுவனோ ஒவ்வேனோ?
திங்கள் குலனறியச் செப்புங்கள்!—சங்கத்தீர்,
பாடுகின்ற முத்தமிழ்க்கென் பைந்தமிழும் ஒக்குமோ,
ஏடெழுதார் ஏழ்எழுவீர் இன்று.

நாற்பத்தொன்பது கடைசங்கப் புலவர்களே! நீங்கள் இயற்றிய இயல் இசை நாடகம் என்ற முத்தமிழ்ப் பாக்களுக்கு

என் புதுத்தமிழ்ப் பாட்டு நிகராகுமோ! உங்களில் யானும் ஒருவனாய் இருப்பதற்குத் தகுதியுடையவனோ, இல்லையோ என்று சந்திர குலத்தவனான பாண்டியன் அறியுமாறு கூறுவீர்! 6

410. என் மகள் சென்ற காட்டின் இயல்பு

(பொய்யாமொழிப் புலவர் ஓர் ஊருக்குச் சென்று கொண்டிருந்தபோது, முருகப் பெருமான் வேடர் கோலத்தில் அவர் முன் தோன்றித் தன்மேல் பாடல் பாட வேண்டும் என்றார். புலவர் 'உம் பெயர் யாது?'' என வினவினார். முருகப் பெருமான் 'முட்டை' என்றார். அப்போது இதனைப் பாடினார்.)

(இச் செய்யுள் சுரம் போக்கு என்னும் துறை.)

பொன்போலுங் கள்ளிப்பொறி பறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே—மின்போலும்
மானவேல் முட்டைக்கு மாறாய தெவ் வர்போம்
கானவேல் முட்டைக்குங் காடு.

மின்னல் போன்ற ஒளி பொருந்திய வேற்படையையுடைய 'முட்டை' என்னும் பெயரையுடையவரின் பகைவர் செல்லுகின்ற வேல முட்கள் காலில் தைக்கும் காட்டில் கள்ளிச் செடியிலிருந்து பொன்போல நிறத்தையுடைய தீப்பொறிகள் பறக்கும் பாலைநில வழியிலே என் மகள் தான் விரும்பிய தலைவனுடன் செல்வதற்கு இணங்கினாள். 7

411 முருகப்பெருமானின் பாடல்

விழுந்ததுளி யந்தரத்தே வேமென்றும் வீழின்
எழுந்து சுடர்சுடு மென்றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தில் பெய்வளையுஞ் சென்றனளே
பொய்யா மொழிப்பகைஞர் போல்.

மேகத்தினின்று கீழே விழும் துளிகள் வானத்திலே வெம்மை அடையும் என்றும், துளிகள் வீழ்ந்தால் கீழே உள்ள அனல் மேலே சென்று வெம்மை உண்டாக்கும் என்றும் பயந்து, மழை பெய்யாத காட்டிலே, பொய்யாமொழிப் புலவரின் பகைவர் போல என் மகளும் தலைவனுடன் செல்லலானாள். இச்செய்யுளும் 'சுரம் போக்கு' என்னும் துறையில் அமைந்தது. 8

15. ஒப்பிலாமணிப் புலவர் பாடல்கள்

412. *நின் முகம் நோக்கி வந்தேன், குமணா!*

(தன் தம்பியிடம் சினங்கொண்ட குமணன் காட்டில் வாழ்ந்து வந்தான். அப்போது ஒப்பிலாமணிப்புலவர் காட்டில் அவனைக் கண்டு இதனைப் பாடினார்.)

ஆடெரி படர்ந்த கோடுயர் அடுப்பில்
ஆம்பி பூப்பத் தேம்பசி உழல
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைதொறும் சுவைதொறும் பால்கா ணாமல்
குழவி தாய்முகம் நோக்க
மனைவி என்முகம் நோக்க யாமும்
நின்முகம் நோக்கி வந்தனம் குமணா.

குமணனே! அசையும் தீயின் நாக்குகள் பரவும் இயல்பை யுடைய பக்கங்கள் நிமிர்ந்துள்ள அடுப்பில் காளான் முளைத் துள்ளன. கொடிய பசி எங்களை வருத்துகின்றது. பால் இல்லாமையால் துளைகள் மூடப்பெற்ற என் மனைவியின் தனங்களை, குழந்தை வாய்வைத்துக் குடிக்க முயலும் போதெல்லாம் பால் சுரக்காததால் தாயின் முகத்தைப் பார்த்தது. குழந்தையின் தாயாகிய என் மனைவி என் முகத்தைப் பார்த்தாள். நானும் உன் அருளை எதிர்பார்த்து உன்னைக் காண்பதற்காக வந்தேன். 1

413. குமணனின் விடை

அந்நாள் வந்திலை யருங்கவிப் புலவோய்!
இந்நாள் வந்துநீ நொந்தெனை யடைந்தாய்;
தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன்
விலைதனை மீட்டுன் வறுமைநோய் களையே.

அரிய பாடல் பாட வல்ல புலவரே! நான் நாட்டில் செல்வ வளத்துடன் இருந்தபோது நீ வரவில்லை. நான் கொடுப் பதற்கு இயலாத நிலையில் இருக்கும் இப்போது வறுமையால் வாடி என்னை வந்து சேர்ந்தாய. ஆயினும் ஒன்று சொல்வேன் கேட்பீராக. என் தலையை அரிந்து எடுத்துச் சென்று அதை விரும்பும் என் தம்பியின் கையில் தந்து, அதற்கு விலையான

அவன் தரும் பொருளைப் பெற்று உன் வறுமையாகிய நோயினைப் போக்கிக்கொள்வாயாக! 2

414. இரண்டு வடுக்கள்

(குமணன் தலைபோலத் தலையொன்றைச்செய்து தரவேண்டும் என்று புலவர் மாந்தையில் வாழும் கம்மாளனிடம் கேட்டார். அவனும் குமணன் தலைபோன்று தோன்றும் பொய்த்தலையை செய்து தந்தான். அப்போது புலவர் இதனைப் பாடினர்.)

மாந்தையிலே வாழும் மகுடத் தியாகியுனக்கு
ஏந்து தழும்போ இரண்டுளவே—வேந்தர்
முடித்தழும்புன் காலிலே முத்தமிழோர்க் கீயும்
படித்தழும்புன் கையிலே பார்.

'மாந்தை'என்னும் ஊரில் வாழும் முடிகள் செய்து கொடுக்கும் கொடைத் தன்மையுடையவனே, நீ பெற்ற தழும்புகள் இரண்டுண்டு. மன்னர்களுக்கு முடிகளைச் செய்யும்போது பட்ட தழும்பு காலில் ஒன்றுண்டு; முத்தமிழ் வல்ல புலவர்க்கு அளந்து கொடுக்கும் கருவியின் வடு ஒன்று கையில் உள்ளது. 3

415. என் தம்பிபோல் எனக்குச் சிறந்தார் யார்?

வெம்புங் காலை வெதும்பி விழுஞ்சிரம்
செம்பொன் கோடிவிலை யெனச்சிந் தித்தான்
உம்பர் நாடு முலகினும் தேடினும்
எம்பி போல்எமக் கியாவர் உரியரே.

பகைவர் வெட்டும்போது சூட்டுடன் விழும் என் தலையானது ஒரு கோடி செம்பொன் விலையாகும் என்று என் தம்பி கருதினன். எனவே, வானுலகத்திலும் இவ்வுலகத்திலும் தேடினலும் என் தம்பியைப் போல என்னைப் பாராட்டும் உரிமையுடையவர் எவர் இருக்கின்றர்? 4

416. என் வறுமையை ஆற்ற நின்னல் இயலாதோ?

ஆறு பெருக்கற்று அருந்திடர்தான் பட்டாலும்
ஊறலமை யாதோ உலகாற்றத் தேற
வறியையே யானலும் என்கலியை மாற்றச்
சிறியையோ சீர்க்குமண செப்பு.

சிறந்த குமணனே! ஆறானது வெள்ளப் பெருக்கை இழந்து செல்வதற்கரிய மணல் மேடாகக் காணப்பட்டாலும், உலகத்தவரின் நீர்த்தாகத்தைப் போக்க, அதில் உள்ள நீர் ஊற்றுப் போதுமானதன்றோ! அது போன்றே நீயும், வறியவனாக இருப்பினும் என் வறுமையைப் போக்குவதற்கு இயலாத சிறியவனோ? சொல்வாயாக! 5

417. வந்தார் முருகர்! தந்தார் கடப்பமாலை!

வில்லை வளையாதே, மீசைமுறுக்கிச் சினத்து
முல்லைமலர்அம்பையென்மேல் மோதாதே, —நில்லடா,
வந்தாரடா முருகா, வந்துகடப் பந்தாரைத்
தந்தா ரடா,மன் மதா.

மன்மதனே! உன் கரும்பு வில்லை வளைத்து மலர் அம்பைச் செலுத்தாதே! நின் முகத்தில் உள்ள மீசையை முறுக்கிச் சினந்து என்மேல் முல்லை மலரான அம்பு தாக்குமாறு செய்யாதே! நின் தொழிலை நிறுத்துவாயாக! முருகப் பெருமான் வந்தருளினார்; தாம் அணிந்திருக்கும் கடப்பம் பூமாலையை எனக்குத் தந்தார். 6

418. அன்னமே தூது செல்வாய்!

செந்தில் குமரன் திருவழகைக் கண்டவுடன்
வந்திக்கு மாரன் வதைக்கின்றான்—அந்திக்கு
முன்னமே சென்றென்றன் மோகமெலாஞ் சொல்லிவந்தால்
அன்னமே கும்பிடுவேன் யான்.

திருச்செந்தூரில் வீற்றிருக்கும் முருகப்பெருமானின் அழகை நான் கண்டவுடன், மன்மதன் என்னைத் துன்புறுத்துகிறான். தூதாகச் செல்லும் அன்னப் பறவையே! மாலைக் காலத்துக்கு முன்னேயே, நீ சென்று அவரிடம் என் காதல் முழுவதையும் தெரிவித்துவிட்டு வந்தால் நான் உன்னை வணங்குவேன். 7

419. தலைவனுக்காகத் தூது வந்தவனிடம் தலைவி ஊடல் கொண்டு உரைத்தது

தங்கள் தனமிருக்கத் தார்வேந்தர் எல்லாரும்
எங்கள் தனத்துக்கே இச்சிப்பார்—எங்கள்தனம்

கச்சிருக்கும், பாலிருக்கும், காமபாணங் கள்பட்டுப்
பிச்சிருக்கும் வேண்டாம் பிளாய்.

தூதாக வந்த பிள்ளையே! மாலையை அணிந்த அரசர் எல்லாம் தங்களுடைய செல்வம் எல்லாம் தங்களிடம் இருக்கவும், எங்களுடைய தனத்துக்கு (முலைக்கு) ஆசை வைப்பார். எங்கள் தனம் (முலை) கைத்துப்போயிருக்கும் (சட்டைக்குள் இருக்கும்); இரு பாகத்துக்கு உரியதாக இருக்கும் (பால் நிறைந்திருக்கும்); மன்மதனின் அம்புகள் பட்டுப் பிய்ந் திருக்கும். இது அவர்களுக்கு வேண்டியதில்லை. 8

420. படுபாவி, கூவத்து நாரணனைக் கொன்றுயே !

(கூவம் என்ற ஊரில் உள்ள 'நாரணன்' என்ற வள்ளல் இறந் தார். அதைக் கண்ட புலவர் இயமனை இகழ்ந்து பாடியது)

இடுவோர் சிறிதிங் கிரப்போர் பெரிது
கெடுவாய், நமனே கெடுவாய்,—படுபாவி
கூவத்து நாரணனைக் கொன்றுயே, கற்பகப்பூங்
காவெட்ட லாமோ கறிக்கு.

கெடும் தன்மையுடைய இயமனே! இந்த வுலகத்தில் பிறர்க்குக் கொடுப்பவர் தொகை மிகவும் சிறியது; ஏற்பவரின் தொகை பெரியது. கூவத்து நாரணன் என்ற வள்ளலைக் கொன்றுயே! பெரும் பாவியே! நீ அழிவாய்! கறி சமைப்பதற்காகக் கற்பகச் சோலையை வெட்டலாமோ? 9

421. செய்யூர் நயினுர் மீது பாடியது

மையூருங் கண்ணுர் மயங்கப் பொருகரும்பு
கையூருங் காமாஉன் கண்ஆணை; செய்யூர்
வளவனையி னுன்பிரிந்த வாறுஉனக்குச் சொன்ன
உளவனைஇ னுரென் றுரை.

மைபூசிய மங்கையர் மையல் கொள்ளுமாறு போர் செய் வதற்கு ஏற்ற கரும்பு வில்லைக் கையில் கொண்ட மன்மதனே! நின் சண்ணன் மேல் ஆணை! 'செய்யூர்' என்ற ஊரில் வாமு... சோழனைப் போன்ற நயினுர் என்ற வள்ளல் என்னை நீ... சென்றதை உனக்குச் சொன்ன ஒற்றனை இன்... எனக்குச் சொல்வாயாக! ...20

422. *ஐயகோ! இரவு நீள்கின்றதே!*

ஆழிவாய்ச் சத்தம் அடங்காதோ? யான் வளர்த்த
கோழிவாய் மண்கூறு கொண்டதோ—ஊழி
திரண்டதோ கங்குல் தினகரனும் தேரும்
உருண்டவோ பாதாளத் துள்.

கடலின் ஓசையானது அடங்காதோ? யான் வளர்த்து வரும் கோழி கூவாமல் இருப்பதற்குக் காரணமாக அதன் வாயை மண் மூடிவிட்டதோ? ஊழியானது இந்த இரவாக வடிவம் கொண்டதோ? சூரியனும் அவனது தேரும் பாதாளத்துள் உருண்டு விழுந்தனவோ? எனவே இரவு நீண்டு கதிரவன் உதயமாகவில்லையோ? 11

423. *இந்த இரவு எவ்வாறு கழியும்?*

அரவங் கரந்ததோ! அச்சுமரம் இற்றுப்
புரவி கயிறுருவிப் போச்சோ! இரவிதான்
செத்தானே இல்லையோ! தீவினையோ! பாங்கிஎனக்கு
எத்தால் விடியும் இரா?

தோழி! இராகு கேது என்னும் பாம்பு கதிரவனை மறைத்து விட்டனவோ! சூரியனின் தேர் அச்சுமரம் முறிந்து தேர்க் குதிரைகள் கட்டின கயிறு அறுந்து போனதால் வழிவிட்டு ஓடிவிட்டனவோ! சூரியன் மாண்டானே இல்லையோ? இரவு நீள்வதற்கு காரணம் நான் செய்த பாவமோ? இந்த இரவு எனக்கு எவ்வாறு கழியும்? கூறுவாய்! 12

424. *மகாதேவன் மீது மையலானுள்!*

முலையுங் குழலு முளைப்பதற்கு முன்னே
கலையும் வளையுங் கழன்ருள்—மலையில்
சிராப்பளியான் ஏறிவருஞ் சேவின்மணி யோசைக்கு
இராப்பளியுங் கொள்ளாள் இவள்.

மலைமீது விற்றிருக்கும் திருச்சிராப்பள்ளி இறைவன் ஏறிவரும் ...லையின் கழுத்தில் உள்ள மணியினது ஓசையைக் கேட்டு
தங்கள் த... கூந்தலும் தக்கவாறு வளர்வதற்கு முன்பே, என் ...டையும் வளையும் நழுவப் பெற்ருள். இவள்
எங்கள் தனத்து... ...வதில்லை. 13

425. நினக்கு வேண்டாதவள் ஆனேன்!

பாண்டியன்தா ரானேன்; பசலைமுலைப் பாலானேன்;
ஆண்டிகையி ல்ஏந்தியதொன் றுனேனே!——வேண்டியபோது,
உள்ளங்கைத் தேனுனேன்; ஓர்மதலை பூத்தபின்
உள்ளம்கைத் தேன்நான் உனக்கு

தலைவனே, முன்னர் உனக்கு நான் பாண்டியனது மாலை போல அருமையாகக் காணப்பட்டேன்; உன்னேடு சேர்ந்து பசலையுடன் கூடிய முலைகளில் பால் ஊறப்பெற்றேன். ஆண்டிக்குக் கிடைத்த அரிய பொருளைப் போலக் காக்கப் பட்டேன்; நீ ஆசை கொண்ட போதெல்லாம் உன் கையில் உள்ள தேனைப் போன்று பயன்பட்டேன். ஆனுல் ஒரு குழந்தை பெற்றெடுத்த பின்னர் நின் உள்ளத்தால் வெறுக்கத் தக்கவள் ஆகிவிட்டேன். 14

426. என் துன்பத்தைக் கெடுப்பாயாக!

(ஸ்ரீ முஷ்ணத்தில் உள்ள வராகப் பெருமாள் மீது பாடியது.)

முட்டத்துப் பன்றி! முளரித் திருப்பதத்தைக்
கிட்டத்துப் புஅன்றிக் கிடந்தேனே! —தொட்டு
மருங்கிலே சங்கெடுத்த மாலே, யெனக்கு
வரும்கிலே சங்கெடுக்க வா.

'ஸ்ரீமுஷ்ணம்' என்னும் பதியில் வீற்றிருக்கும் திருமாலே! உன் பாத கமலத்தைக் கிட்டுவதற்கு வன்மையில்லாமல் தொடர்ந்து பயன் இன்றி இருந்தேன். இடக்கையில் சங்கை யுடைய பெருமாளே! எனக்கு உண்டான துன்பத்தினைப் போக்குவதற்கு வந்தருளுவாயாக! 15

427. அறிவுடையாரின் செயல்கள்

மாதர்க் கிதம்கவி வாணர்க்குச்
சால வணக்கம்குரு
நாதர்க்கு நீதியோ டாசாரம்
நண்பின் நயந்தவர்க்குக்
கோதற்ற வாசகம் பொய்க்குப் பொய்
கோளுக்குக் கோள்அறிவி
லாதர்க் குஇரட்டி அறிவுடை
யோர்செய்யும் ஆண்மைகளே.

அறிவுடையோர் ஆற்றும் ஆண்மையுடைய செயல்களாவன; பெண்டிர்க்கு இனிமையானவற்றை உரைத்தலும், புலவர்க்கு மிகுந்த வழிபாட்டை ஆற்றுதலும், ஆசாரியரிடத்தில் நீதியும் ஒழுக்கமும் பூண்டு விளங்குதலும், நட்புடையவர்கட்குப் பிழையற்ற நல்ல சொற்களைக் கூறுதலும், பொய்யில் வல்ல வரைப் பொய் கூறி வெல்லுதலும், புறம் கூறுபவர்க்குத் தாமும் புறங்கூறி அதன் மூலம் அதன் இழிவைப் புலப்படுத்த லும், அறிவற்றவர்க்கு அவரைக் காட்டிலும் இருமடங்கு அறிவற்றவராய் விளங்குதலும் ஆகும். 16

428. *பாண்டியனே, சிவனை வணங்காயோ!*

குழல்கா அரவிந்தம் கூம்பக் குமுத முகையவிழ
நிழல்கான் மதிய மன்றோ நின்திருக்குலம் நீஅவன்தன்
அழல்கா லவிர்ச டைமீதே யிருந்துமவ் அந்திவண்ணன்
கழல்கால் வணங்குதியோ வணங்கா முடிக்கைதவனே.

எவருக்கும் தலைவணங்காத முடியையுடையவனே! உள்ளே தொளையையுடைய தாமரை மலர்கள் குவியவும், ஆம்பல் அரும்புகள் மலரவும், ஒளி வீசுகின்ற சந்திரன் நின் குல முதல்வன் அல்லனோ? அக்குலத்தில் தோன்றியதால் நீயும் சந்திரன் ஆவாய். சந்திரனாகிய நீ செவ்வொளி வீசும் முடி மீது வீற்றிருந்தும், வீரக்கழலை அணிந்த சிவபெருமானின் திருப்பாதத்தை வணங்குகின்றாயோ! 17

429. *எமன் வாரான்; வரினும் என்னை வணங்குவான்!*

பாட்டா னதைவண்டு பாடும்
குழல்சண் பகவல்லிதன்
தாட்டா மரையைத் தொழுதேன்.
இனியென் தலையில்விதி
தீட்டான் கருமுகில் போலே
வருமந்தச் சேட்டெருமை
மாட்டான் இனிவர மாட்டான்வந்
தாலும் வணங்குவனே.

தே...கள் இனிய இசையைப்பாடும் கூந்தலையுடைய சண்பக எங்கள் ...மையின் திருவடித் தாமரையைத் தொழுதேன்; ... பிறப்பு நீங்கியது. ஆதலால், நான்முகன் என்

தலையில் விதியை எழுதமாட்டான். எருமை மாட்டை வாகன மாகக் கொண்ட இயமன் இனி என் அருகில் வரமாட்டான். அங்ஙனம் அவன் வருவானாயின், அவன் என்னை வணங்கு வான். 18

430. எமனே! என்னிடம் வருவதற்கு :உன்னால் ஆகுமா?

சீமானும் நாமகள் கோமானும் ஏத்தித் தினம்பணிந்து
பூமாலை சாத்திய ரத்ன சபாபதி பொன்னடிக்குப்
பாமாலை சாத்திநின் றேன்அவ னால்மிகப் பாடுபட்ட
ஏமா,வுன் னாலினி ஆமாவென் பால்சினந்தெய்துதற்கே.

திருமகளின் கணவனை திருமாலும், கலைமகளின் கணவனை நான்முகனும் வாழ்த்தி நாள்தோறும் மாலை கட்டிய இரத்தின சபாநாயகரின் திருவடிகளுக்கு, நான் பாட்டு மாலையை அணி வித்தேன். ஆதலால், எமனே, இனி என்னுடன் சினந்து வருவதற்கு உன்னால் இயலுமா? 19

431. தியாகேசர் புற்றை இடமாகக் கொண்டதேன்?

தடங்கொண்ட கல்வில்லின் மெல்லெனப்
பூட்டித் தமதுரத்தில்
வடம்கொண்டு சாத்தி விடம்கொண்டு
பார்த்து மணிகிளரும்
படம்கொண்ட பாம்பிற் பழகிய
பின்மலைப் பாவைதன்னை
இடம்கொண்ட ஒற்றித் தியாகேசர்
புற்றி னிடங்கொண்டதே.

மலையரசனின் மகளான பார்வதியை ஒரு பக்கத்தில் கொண்ட திருவொற்றியூர்த் தியாகேசர், பெரிய மேருமலையாகிய வில்லில் நாணாகப் பாம்பினைப் பூட்டிப் பார்த்தும் தம் மார்பில் அதை மாலையாக அணிந்து பார்த்தும் விடத்தை உண்டு ஆராய்ந்தும் என இவ்வாறு மணியுடைய படம் கொண்ட பாம்புகளுடன் பழகி யறிந்த பின்னரே, பாம்புப் புற்றைத் தமக்கு ஏற்ற தங்குமிடமாகக் கொண்டார். 20

432. *பரமன் பாம்பென ஆடினார்!*

விடம்காட்டிக் கண்டத்தில் தோலுரி
காட்டித்தன் மெய்யினைப்புற்று
இடம்காட்டி வாலை ஒருபுறம்
காட்டிவண் டேறுமலர்த்
தடம்காட் டியபொழி ல்ஆரூர்த்
தியாகர் தமதுபொற்றாள்
படம்காட்டி யாடினின் றார்உல
கேழும் பணியென்னவே.

வண்டுகள் மொய்க்கும் மலர்கள் மலர்ந்த நீர்நிலைக்கருகே சோலை சூழ்ந்த திருவாரூரில் வாழும் தியாகராசப் பெருமான், தம் கழுத்தில் நஞ்சு உள்ளதைக் காட்டியும், உரித்த யானைத் தோல் போர்வையைக் காட்டியும், தம் உடல் புற்றில் இருப்பதாகப் புலப்படுத்தியும், இளமை பொருந்திய உமையம்மையை ஒரு பக்கத்தில் காட்டியும், தம் அழகிய திருவடி நிழலைக் காட்டியும் ஏழுலகும் (பணி என்ன) வணங்குமாறு நடனம் செய்தார். 21

விளக்கம் : பணி என்னவே–பணி-பாம்பு, வணங்கு என இரு பொருள் பட்டது. என்ன-உவம உருபு. உலகு ஏழும் பாம்பாகும் என்பது ஓர் குறிப்பு. விடம், தோல், புற்று, வால், படம் என்பவை பாம்புக்கு உரியவை. எனவே, இறைவன் பாம்பைப் போல ஆடினார் என்க.

433. *கோபுரத்தைக் கண்டேன்! இனிப் பிறவி காணேன்!*

(திருவொற்றியூர் புற்றிடங் கொண்ட இறைவனைப் பாடியது.)

புரந்தனை மாலைச் சதுரா னனத்தனைப் போகியையுப்
புரந்தனைச் சாதித் துஇமையாத நாட்டப் புலோமசைவாழ்
புரந்தனை மானுந் திருவொற்றியூர்நின் பொன்மணிக்கோ
புரந்தனைக் கண்டனன் காணேன் உதிக்கும் புரந்தனையே.

இமைக்காத கண்களையுடைய இந்திராணி வாழும் அமராவதிப் பட்டினத்தைப் போன்ற திருவொற்றியூர்ப் பெருமானே! மூன்று புரங்களை அழித்துத் திருமாலையும் நான்முகனையும் இந்திரனையும் நீ காப்பாற்றினாய். மணிகள் இழைத்த நின் கோபுரத்தைக் கண்டேன். ஆதலால் இனிப் பிறக்கும் உடலைக் காண மாட்டேன். 22

434. சந்திரனின் கொடுமை

(நாணிக் கண் புதைத்தல்)

கல்அம் புலியணிந்தோன் நாளதனுக் குஎட்டாம்நாள்
வில்லம் புடன்கூடி விட்டாலும்—வல்லி
இடையாளே, முன்உலகம் ஏழளந்தோன் மைந்தன்
குடையானது அன்றோ கொடிது.

கொடி போன்ற சிறு இடையைக் கொண்டவளே! பிறைச் சந்திரனை அணிந்த சிவபெருமானின் ஆதிரை நட்சத்திரத்துக்கு எட்டாம் நட்சத்திரமான (அஸ்தம்) கையானது வில்லைப் போன்ற புருவத்தையும், அம்பினைப் போன்ற விழியையும் போய் மூடிக்கொண்டாலும், முன் மாவலியிடம் மண் கேட்டுப் பெற்று அதனைத் திருவடியால் அளந்த திருமாலின் மகனான மன்மதனின் குடையாகிய சந்திரனன்றோ கொடுமையுடையதாய் உள்ளது?

விளக்கம் : கண்களையும் புருவத்தையும் தலைவி கைகளால் மூடிக்கொண்டாள். எனினும் சந்திரன் போன்ற முகம் தெரிவதால் அது தலைவனைத் துன்புறுத்துகிறது என்பது கருத்து. 23

435. தென் புன்னை வனத்தானிடம் செல்வாய்!

வாழ்நிலைசேர் பொன்னுலகம் வண்களந்தைக் கோபுரத்தின்
ஏழ்நிலைமேல் ஏறிடினும் ஏறலாம்—பாழ்மனமே,
அன்புஉன்னைக் காட்ட அரனறிவ தேஅருமை
தென்புன்னைக் காட்டனடி சேர்.

வாழ்வதற்கேற்ற வசதிகள் பொருந்தப் பெற்ற வளமான 'திருக்களந்தை' என்னும் தலத்தில் உள்ள கோபுரத்தின் ஏழு நிலைகளில் ஏறினாலும் ஏறலாம்! பாழான மனமே! அன்பு காட்டுவது உனக்கு அரிதாக உள்ளது. அதனால், சிவபெருமானை அறிதல் அரிதாகியது. தென்புன்னை வனத்தவனின் திருவடிகளைச் சேர்வாயாக. 24

436. காமாட்சியின் இயல்பு

கஞ்சி குடியாளே, கம்பன்சோ றுண்ணாளே,
வெஞ்சினங்கள், என்றும் விரும்பாளே,—நெஞ்சுதனில்
அஞ்சுதலை ஆவாருக்கு ஆறுதலை ஆவாளே
கஞ்சமுக காமாட்சி காண்.

தாமரை போன்ற முகத்தையுடைய காமாட்சி யம்மையார் காஞ்சியில் விற்றிருப்பவள்; (கஞ்சியைக் குடிக்க மாட்டாள்); ஏகாம்பர நாதருக்கு அன்னத்தைப் படைக்காமல் தான் உண்ணமாட்டாள் (கம்பஞ் சோற்றை உண்ண மாட்டாள்); கொடிய சினத்தைக் கொள்ள மாட்டாள் (கறி காய்களை விரும்பி யுண்ண மாட்டாள்); மனத்தில் அச்சம் உடைய வர்க்கு ஆறுதலைத் தருவாள் (ஐந்து முகங்களையுடைய சிவ பெருமானின் மனத்தில் நிறைவை உண்டாக்குவாள்.) 25

437. ஆட்டைப் பலியிடுவதால் வரும் பயன் யாது?

(வெறி விலக்கல்)

சீதார விந்தைபுயன் தென்னவன்தன் திண்சிலம்பில்
போதாலும் கண்ணாலும் போர்செய்வோர்க்கு—ஓதும்
கொடியிடையார் தம்மால் குணமோ இந்தத்
துடியிடையார் கொண்ட துயர்.

குளிர்ந்த தாமரையில் விற்றிருக்கும் இலக்குமியைத் தோளில் கொண்டவனான பாண்டியனின் மலையில், உடுக்கையைப் போன்று விளங்கும் இடையை யுடைய இந்தப் பெண்ணின் துன்பமானது, மலரால் போர் செய்யும் மன்மதனுக்கும் நெற்றிக் கண்ணால் போர் செய்யும் சிவபெருமானுக்கும் உரிய தாக உரைக்கப்படும் கொடிகளாகிய மீனத்துக்கும் இடபத் துக்கும் நடுவில் இருக்கும் ஆட்டைப் பலியிட்டால் நீங்கி விடுமோ?

விளக்கம் : மன்மதனுக்குரிய கொடி மீனம். சிவனுக்குரிய கொடி இடபம். மீனராசி இடபராசி ஆகிய இவ்விரண்டுக்கும் இடையில் உள்ளது மேஷ ராசி. மேஷம்-இங்கு ஆட்டைக் குறித்தது. துன்பம் நீங்குதற்கு ஆட்டைப் பலியிடுதல் வழக்கம். 26

438. இக்கலிங்கம் போகட்டும்! சொக்கலிங்கம் உண்டே!

(ஆடை நீரில் அடித்துச் சென்ற போது பாடியது.)

அப்பிலே தோய்த்திட்டு அடுத்தடுத்து நாம் அதனைத்
தப்பினால் நம்மைஅது தப்பாதோ—இப்புவியில்
இக்கலிங்கம் போனாலென்? ஏகலிங்க மாமதுரைச்
சொக்கலிங்கம் தானிருக்கச் சொல்.

துணியை நீரில் நனைத்துத் திரும்பத் திரும்ப அடித்து வெளுத் தால் அது நம்மை விட்டுத் தப்பிப் போய் விடாதோ? இவ்வுல

கத்தில் ஒப்பில்லாத சிவலிங்கமான சிவபெருமான் துணையாக உள்ளார். ஆதலால் இந்தத் துணி போனால் என்ன? ஓர் இழப்பும் இல்லை.

குறிப்பு : இச் செய்யுளை 'இரட்டையர்' பாடியது என்று இக் காலத்தில் பலரும் கூறுகின்றனர். 27

16. இரட்டையர் பாடல்கள்

(இரட்டையருள் ஒருவர் முதல் இரண்டடியைப் பாடுவார். மற்றவர் பின்னிரண்டடியைப் பாடுவார். இஃது அவர்கள் வழக்கம். ஒருவர் பெயர் முதுசூரியர்; மற்றவர் பெயர் இளஞ் சூரியர்.)

439. இடக்கையால் பரிசை வாங்கியதேன்?

(வீரசம்பு என்பவர் இரட்டையர்க்குப் பரிசைத் தந்தார் அதை இரட்டையர் இடக்கையால் பெற்றனர். அதற்குக் காரணம் யாது என அவர் வினவுதல்.)

பதிவீர சம்பு என்று பாராமல் கல்விக்கு
இதமுடையி ரட்டையரே, ஈகை—உதவில்வலக்
கைத்தலத்தில் கொண்டு களிக்காமல் உம்இடது
கைத்தலத்திற் கொள்ளுவதேன் காண்.

கல்வியில் வல்ல இரட்டையரே! வீரசம்புவாகிய என்னை ஒரு தலைவன் என மதிக்காமல், நான் பொருளைத் தந்தபோது வலக்கையால் அதைப் பெறாமல், இடக்கையால் பெற்றுக் கொண்டதற்குக் காரணம் யாது?

440. இரட்டையரின் விடை

கூவரா யன்தியாகம் கொள்வோம் வலக்கை, முடி
யாவர் தரினும்இடக் கைகொள்வோம்,—பூவுலகில்
மின்பணிமின் னார்மதனே, வீரசம்பு வேஇனிநாம்
அன்பு எவர்பால் காண்போம் அடுத்து.

உலகில் மின்னலை வென்ற இடையையுடைய பெண்களுக்கு மன்மதனைப் போன்றவனே! வீரசம்பு என்பவரே! கூவராயன்

என்பவர் தரும் பொருளை நாம் வலக்கையில் ஏற்றுக் கொள்வோம். அவரன்றி மற்றவர், அவர் முடிமன்னராக இருந்தாலும், அவர் தருவதை இடக்கையால்தான் ஏற்போம். இனிமேல் நாங்கள் அவர் காட்டிய அன்பை எவரிடத்தில் கண்டு அனுபவிப்போம்? 2

441. *விரசம்புவின் வினு*

என்னுடைய பேரும் புகழும் இருஞ்சீரும்
என்னுடைய ஈகையும்கண் டுளப்படிநம்—முன்னவனை
ஆவ லுடன்திகம் சொன்னீர், இரட்டையரே?
கூவரா யன்இயல்பென் கூறு?

இரட்டைப் புலவர்களே! என் பெயர், புகழ் மிகுந்த சிறப்பு, ஈகை ஆகியவற்றையெல்லாம் நீங்கள் கண்டீர். கண்ட பின்னரும், என்னைக்காட்டிலும் என் அண்ணனை மிக்க சிறப்புடையவனுகப் புகழ்ந்து கூறினீர். என் அண்ணனின்-கூவராயனின்-இயல்பு இன்னது என உரைப்பீராக! 3

442. இரட்டையர் விடை

மாதா பிதாவும் அவன்; மன்னுகுரு தெய்வம்அவன்;
தாதா அவனே; தருங்கீர்த்திக்கு—ஆதாரன்;
தியாக சமுத்திரன் தென்கூவ ராயன்தன்
ஈகைதனைச் சொல்லஎளி தோ!

எங்கட்குத் தந்தையும் தாயும் அவனே. எங்கட்கு ஆசாரியரும் தெய்வமும் அவனே. உண்டாகும் பெரும்புகழ்க்கு ஆதாரமானவன் அவனே. கொடைக்கடல் அவனே. இத்தகைய கூவராயனின் கொடைத் தன்மையைச் சொல்ல இயலுமோ? 4

443. *சோறு கண்ட மூளி யார்?*

(இரட்டையர் திருவாங்கூரில் உணவு உண்ணக் கிடைக்காமல் இரவில் படுத்துக் கிடந்தபோது பாடியது.)

தேங்குபுக ழாங்கூர்ச் சிவனேஅல் லாளியப்பா,
நாங்கள் பசித்திருக்கை ஞாயமோ?—போங்காணும்
கூறுசங்கு தோல்முரசு கொட்டோசை அல்லாமல்
சோறுகண்ட மூளியார் சொல்?

நிறைந்த புகழையுடைய திருவாங்கூரில் வாழும் சிவபெருமானே! இரவிலும் எங்களைக் காப்பாற்றும் இறைவனே! நாங்கள் உணவின்றி வாடியிருப்பது நியாயமாகுமோ? (என்று ஒருவர் சொல்ல, மற்றவர்) ஆடம்பரமாகப் பேசப்படும் சங்கு, பறை, பேரிகை, கொட்டு என்பவற்றின் ஒளி முழக்கம் காணப்படுவதல்லாமல் இங்குப் பிரசாதத்தைப் பார்த்தவறியவர் யார்? ஒருவருமில்லை; எனவே நீவிர் போய் வாரும் (என்றார்.) 5

444. மூடர் முன் பாடல் சொன்னால் அறிவாரோ?

(தில்லையில், இரட்டையர் ஒருவரைப் புகழ்ந்து பாடினர். பாடப்பட்டவரோ பரிசளிக்கவில்லை. அப்போது இதனைப் பாடினர்.).

மூடர்முனே பாடல் மொழிந்தால் அறிவரோ?
ஆடெடுத்த தென்புலியூர் அம்பலவா,—ஆடகப்பொன்
செந்திருவைப் போல்அணங்கைச் சிங்காரித் தென்னபயன்?
அந்தகனே நாயகன் ஆனால்?

"நடனம் செய்யும் சிதம்பரத்தில் உள்ள பெருமானே! மங்கை ஒருத்திக்குக் கணவன் குருடனாக இருப்பின், அப்பெண்ணை உயர்ந்த பொன் நகைகளால் இலக்குமியைப் போன்று அலங்கரிப்பதால் யாது பயன்?" (என ஒருவர் மொழிய, அதற்கு மற்றவர்,) "குருடனாகிய கணவன் அவளது அழகை அறியாதவாறுபோல, அறிவற்றவர் முன் பாடலைச் சொன்னால், அதன் பொருளையும் சுவையையும் அறிவாரோ?" (என்றார்.) 6

445. இடையன் இறைவனை வெட்டினான்!

வேய்ஈன்ற முத்தர்தமை வெட்டினா னேஇடையன்
தாய்ஈன்ற மேனி தயங்கவே - பேயா,கேள்,
எத்தனைநா ளென்றே இடறுவான் பால்குடத்தை?
அத்தனையும் வேண்டும் அவர்க்கு.

"திருநெல்வேலியில் மூங்கில் மரத்தின் அடியில் வீற்றிருக்கும் முத்துப் போன்ற இறைவனை, அவ்வழியாகப் பால் எடுத்துச் செல்லும் வழக்கமுடைய இடையன், உடல் தளருமாறு வெட்டினான். அப்படிச் செய்வது தகுமோ? இஃதென்ன?" (என்று ஒருவர் சொல்ல, அதற்கு மற்றவர்) "பேய்

போன்றவளே! கேட்பாயாக! பால் கொண்டு சென்ற இடையன் எத்தனை நாளைக்குக் கால் இடறப்பெற்றுப் பால் குடத்தைக் கவிழ்ப்பான்? மூங்கிலடியில் வீற்றிருந்து அந்த இடையனை இடறச் செய்த இறைவனுக்கு அவன் செய்த அத்துணைச் செயல்களும் தக்கவையே!'' (என்றார்.)

விளக்கம்: திருநெல்வேலியில் மன்னன் ஒருவனுக்கு நாள் தோறும் பால் எடுத்துச் சென்றான் ஓர் இடையன். அப்போது மூங்கில் கணு ஒன்றில் பலநாள் அவன் கால் இடறப் பெற்றான். பால்குடம் கவிழ்ந்தது. ஆதலால் இடையன் அந்த மூங்கிற்கணுவை வெட்டினான். அதினின்று இரத்தத்துடன் சிவலிங்கமும் தோன்றியது. அதனை அறிந்த மன்னன் பூசைக்கு வேண்டியவற்றைச் செய்தான். வேயின் கீழ் தோன்றியதால் அவருக்கு 'வேயின்ற முத்தர்' என்னும் பெயர் வழங்கியது. 7

446. மாங்காட்டு வேளாளன் மகளைப் புணர்ந்தான்!

(அன்பின் மிகுதியால் தன் மகளைத் தழுவிக் கொண்டு சென்றான் மாங்காட்டு வேளாளன். அதைக் குறித்து இது பாடப் பெற்றது.)

மாங்காட்டு வேளாளன் மகளை மருமகன்பால்
போம்காட்டில் இன்பம் புணர்ந்தானே!—ஆம்காணும்
மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம், மற்றவர்
சொற்கேட்டல் இன்பஞ் செவிக்கு.

''மாங்காடு என்ற ஊரில் வாழும் வேளாளன் என்பவன் தன் மகளை மருமகனிடம் சேர்ப்பதற்கு அழைத்துச் சென்ற வழியில் மகளை(க் குழந்தைபோல)எடுத்து அணைத்து இன்ப மடைந்தான்; இதென்ன முறைகேடு?'' (என்று ஒருவர் வினவினர். அதற்கு மற்றவர்,) ''அது பொருத்தமே ஆகும்; ஏனென்றால், மக்களின் மெய் தீண்டல் உடலுக்கு இன்பம் தருவதாகும்; பின்னும் அவர்களின் சொல்லைக் கேட்பது செவிக்கு இன்பத்தைத் தருவதன்றோ?'' (என்றார்.) 8

447. பொய் சொன்னால் இத்தகைய துன்பம் நமக்கு வராதோ?

குன்றுங் குழியும் குறுகி வழிநடப்பது
என்று விடியும்எமக்கு என்கோவே,—ஒன்றும்

கொடாதானைக் கோஎன்றும் காவென்றும் கூறில்
இடாதோ நமக்குஇவ் விடி.

"என் தலைவரே! மலைகளையும் தாழ்ந்த பள்ளத்தாக்குகளையும் கடந்து வழிச் செல்வது நமக்கு எப்போது நீங்கும்?" (என்று ஒருவர் உரைத்தார். அதற்கு மற்றவர்,) "புலவர்களுக்கு ஒன்றையும் தராதவனைக் 'காமதேனுவே' என்றும், 'கற்பகச் சோலையே' என்றும் பொய்யாகப் புகழ்ந்து பேசினால் இத்தகைய துன்பம் வராமல் போகுமா?" (என்று உரைத்தார்.) 9

448. திரிபுரத்தை எரித்தது எவ்வாறு?

(இதில் முதல் இரண்டடியை இரட்டையருள் ஒருவர் பாடினார்; பின்னிரண்டடியை முடிக்க இயலவில்லை. ஆகவே காளமேகம் பின்னிரண்டடியைப் பாடி முடித்தார்.)

நாண்என்றால் நஞ்சிருக்கும்; நற்சாபங் கற்சாபம்;
பாணந்தான் மண்தின்ற பாணமே;—தாணுவே,
சீராரூர் மேவும் சிவனேநீ எப்படியோ
நேரார் புரமெரித்த நேர்.

"இறைவனே! சிறப்புடைய திருவாரூரில் வீற்றிருக்கும் சிவபெருமானே! திரிபுரத்தை எரிப்பதற்குப் பயன்பட்ட நல்ல வில் எது என்றால் மேருமலை என்னும் கல்லாகிய வில்லாகும்; அம்பு எது என்றால் மண் உலகத்தை விழுங்கிய திருமாலாகிய அம்பாகும் (மண்ணால் தின்னப்பட்ட செல் அரித்த அம்பாகும்); அந்த வில்லின் கயிறோ அது நைந்திருக்கும் (நஞ்சு உடைய பாம்பாக இருக்கும்.) இவ்வாறு இருக்க, நீ பகைவரின் திரிபுரத்தை எரித்தது எவ்வாறு? உரைப்பாயாக." 10

449. 'மண்தின்ற பாணம்' என்று பாடிய வாய் எரிகின்றதே!

(காளமேகத்தின் உடல் சுடுகாட்டில் எரிக்கப்பட்டபோது இரட்டையர் பாடியது.)

ஆசு கவியால் அகில உலகெங்கும்
வீசுபுகழ்க் காள மேகமே,—பூசுரா,
விண்கொண்ட செந்தழலில் வேகுதே, ஐயையோ,
மண்தின்ற பாணம்என்ற வாய்.

ஆசுகவி பாடும் திறத்தால் உலகம் எவ்விடத்தும் பரவிய புகழையுடைய காளமேகமே! வேதியனே! 'மண்தின்ற பாணம்' என்று தொடங்கி நாங்கள் பாடி முடிக்காமல் விட்டதைப் பாடி முடித்த நின் வாய், வானத்தை அளாவி உயர்ந்தோங்கிய தீயில் எரிகின்றதே! ஐயோ! 11

450. பாண்டியனை நோக்கிக் கூறியது

(இரட்டையருக்குப் பாண்டியன் பரிசைத் தந்தான். அதை அமைச்சர் தடுத்திட, அப்போது பாடியது.)

புராதன மான தமிழ்ப்புல வீர்இந்தப் புன்குரங்கு
மராமரம் விட்டிங்கு வந்ததென் னே,வகை கேட்டிலேயோ?
தராதலம் வென்ற தமிழ்மா றனையும்தன் தம்பியையும்
இராவக னென்றும் இலக்குவனென்றும் இருந்ததுவே.

பழமையான தமிழை நன்கு அறிந்தவர்களே! (புலவர்க்குத் தரும் பரிசைத் தடுக்கும் அமைச்சராகிய)இந்தச் சிறு குரங்கு, தான் இருக்க வேண்டிய மராமரத்தை விட்டு இங்கு வந்த காரணம் யாது? இதற்குக் காரணத்தைக் கேட்டதில்லையோ? உலகம் முழுவதையும் வென்ற பாண்டியனையும் அவனுடைய தம்பியையும் இராமன் என்றும் இலட்சுமணன் என்றும் எண்ணி இங்கு வந்து சேர்ந்தது. 12

17. சத்தி முத்தப் புலவர் பாடல்கள்

451. நாராய், என் மனைவிக்கு என்நிலை உரைப்பாய்!

(ஒருநாள் பாண்டியன் நகர் சோதனைக்காக மதுரை நகரைச் சுற்றி வருகிறான் அப்போது ஒரு பாழடைந்த சத்திரத்தில் இருந்த சத்தி முத்தப் புலவர் தம் வறுமையை நினைந்து பாடியது)

நாராய் நாராய், செங்கால் நாராய்,
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்,
நீயும்உன் மனைவியும் தென்திசைக் குமரியாடி
வடதிசைக்கு ஏகுவீ ராயின்

எம்ஊர்ச் சத்திமுத்த வாவியுள் தங்கி
நனைசுவர்க் கூரைக் கனைகுரல் பல்லி
பாடுபார்த் திருக்கும்எம் மனைவியைக் கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம் எனுமே.

நாரையே, நாரையே! சிவந்த காலையுடைய நாரையே! பனையின் பழத்தினின்று தோன்றும் கிழங்கை நடுவில் பிளந்தாற்போலப் பவழம் போன்று செம்மையும் கூர்மையும் கொண்ட வாயையுடைய நாரையே! நீயும் உன் மனைவியும் தென் குமரியில் நீராடிவிட்டு வடதிசைக்குச் சென்றால் என் ஊராகிய 'சத்தி முத்தம்' என்ற ஊரில் இருக்கும் நீர்நிலையில் தங்கி, மழையால் நனைந்த சுவரையுடைய வீட்டின் கூரையில் பல்லியின் குரலை எதிர்பார்த்திருக்கின்ற என் மனைவியைக் காணுங்கள்; அவளிடம், "பாண்டியனின் மதுரையில் தக்க ஆடையில்லாமல் குளிர்க் காற்றால் த்ளர்ந்து வருந்தி அக் குளிரைப் போக்கிக் கொள்வதற்காக இருகையாலும் உடலை மூடிக் கொண்டு, காலால் உடலின் மேற்பக்கத்தைத் தழுவிய படி பெட்டிக்குள் இருக்கும் பாம்பைப் போன்று மூச்சுவிடும் வறியவனான என்னைக் கண்டேன்" என்று உரைப்பீர்களாக!1

452. புலவரின் முன்நிலையும் பின்நிலையும்.

(பாண்டியன் புலவர் பாடிய பாடலைக் கேட்டதும், அவர்க்கு வேண்டிய பரிசைக் கொடுத்தான். அதைக் கண்டு மகிழ்ந்து பாடியது இப்பாடல்.)

வெறும்புற் கையும்அரி தாம்கிள்ளை
சோருமென் வீட்டில்வரும்
எறும்புக்கும் ஆற்பத மில்லை,முன்
னாள்என் இருங்க கலியாம்
குறும்பைத் தவிர்த்தகுடி
தாங்கியைச் சென்று கூடியபின்
தெறும்புற் கொள்யானை கவளம்
கொள்ளாமல் தெவிட்டியதே.

முற்காலத்தில் என் இல்லத்தில் வெறுஞ்சோறு கிடைப்பதும் அரிதாகும். நாங்கள் வளர்க்கும் கிளியானது பசியால் தளர்ச்சி அடையும். எறும்புகளுக்கும் ஆதரவில்லாமல் இருந்தது. இத்தகைய என் வறுமைத் துன்பம், மக்களைக் காக்கும் பாண்டியனைக் கண்ட பின்னர் நீங்கியது. புல்லை உணவாகக் கொள்ளும் யானையானது மிகுந்த உணவைத் தின்றதால் பசி நீங்கி உணவை உண்ணுமல் உண்டதையும் உமிழ்ந்து விட்டது. 2

18. வரதுங்கராம பாண்டியன் பாடல்

453. உள்ளத்தில் இறைவன் இருக்கப் பயம் ஏன்?

(மரணகாலத்தில், வரதுங்கராம பாண்டியனின் மனைவி அவனை நோக்கி "மரணத்துக்குப் பயப்படுகின்றீரா?" என வினவிய போது பாடிய பாடல்)

அஞ்சலென்ற காதலமுங் கணபண கங்கணமும்
அரைக்கிசைந்த புலியுடையும் அம்புலிச் செஞ்சடையும்
கஞ்சமலர்ச் சேவடியும் கனைகழலும் சிலம்பும்
கருணைபொழி திருமுகமும் கண்களொரு மூன்றும்
நஞ்சையுண்ட மணிமிடறும் முந்நூலும் மார்பும்
நலம்திகழ்வெண் ணீற்றொளியும் மறிமானும் மழுவும்
பஞ்சடிசிற் றிடைஉமையாள் ஒப்பனைபா கமுமாய்ப்
பால்வண்ணர் உளத்திருக்கப் பயமுண்டோ எனக்கே?

"அஞ்சாதே என்று அபயம் தரும் கையும், தொகுதியான பாம்புகளாகிய அணிகளும், இடையில் கட்டிய புலித்தோல் ஆடையும், சந்திரனை அணிந்த சிவந்த சடையும், தாமரை மலர் போன்ற திருவடியும், ஒலிக்கும் வீரக் கழலும் சிலம்பும், கருணை மழையைச்சொரியும் திருமுகமும், நிகரில்லாத மூன்று கண்களும், விடத்தையுண்ட, நீலமணி போன்ற கழுத்தும் முப்புரி நூலும், அழகிய மார்பும், அழகுமிக்க திருநீற்றின் ஒளியும், மான் கன்றும், மழு என்ற படையும், செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப்பெற்ற அடியும், நுண்ணிய இடையும் கொண்ட பார்வதியாகிய அம்மையை ஒரு பாகத்தில் கொண்ட பால் வண்ணநாதர் என் நெஞ்சத்தில் குடி கொண்டிருக்கின்றார். ஆதலால் எனக்கு அச்சம் தோன்றுவதுண்டோ? இல்லை" என வரதுங்கராம பாண்டியர் உரைத்தார். 1

454. தெய்வப் பெருவெளியை மன வெளியில் அடைப்போம்!

(வரதுங்க ராமனின் மனைவி பாடியது.)

யாக்கைஎனும் புழுக்குரம்பை அணைந்தணையாப் பொருளை
அருள் ஒளியைப் பராபரத்துக் குஅப்புறமாம் அறிவை
நீக்கம்அற மயிர்முனைக்கும் இடம்அறவெங் கெங்கும்
நிறைந்துநின்ற முழுமுதலை நினைவில்எழுஞ் சுடரைப்
பாக்கியங்கள் செய்தனந்தந் தவக்குறைகள் முடிக்கும்
பழஅடியார் தமக்குதவும் பசுந்துணர்க்கற் பகத்தை
வாக்குமன விகற்பத்தால் அளவுபடா ஒன்றை
மாசற்ற வெறுவெளியை மனவெளியி லடைப்பாம்.

புழு நிறைந்த உடலாகிய சிறு குடலை, எல்லா உயிர்களுக்கும் ஆதரவாக இருந்தும் அதில் அகப்படாத இறைவனை, கருணையாகிய விளக்கை, மேல் உலகத்தும் கீழ் உலகத்தும் உள்ள பொருள்களைக் கடந்துள்ள பேரறிவை, மயிர் முனை நாட்டுவதற்கும் இடம் இல்லாதபடி எங்கெங்கும் பரந்து பூரணவியாபகம் உடைய முழுமுதல் கடவுளை, தியானத்தில் தோன்றும் ஒளிவடிவாக விளங்குபவரை, நல்வினைகள் செய்து எல்லையற்ற பாக்கியங்களை நிறைவு செய்யும் பழைய தொண்டர்களுக்கு வேண்டும் பொருளைத் தருகின்ற கற்பக மரத்தை, சொல்லுக்கும் செயலுக்கும் அப்பாற்பட்டு அளவிட்டு அறிய இயலாத ஒரு பெரும் பொருளை, களங்கம் அற்ற வெட்ட வெளியை மனமாகிய வானத்தில் அடைத்து வைப்போம். 2

455. பரதனையும் ராமனையும் பார்!

(வரதுங்கராம பாண்டியனின் தம்பி அதிவீரராம பாண்டியன். அவர் பத்மினிச் சாதியாகிய சக்கிலியப் பெண்ணை மணக்க இருந்தார். அதற்கு வரதுங்கராமன் தடைசெய்ய, அதனால் சினம் கொண்ட அதிவீரராம பாண்டியன் வரதுங்கராம பாண்டியனைக் கொல்ல வந்தார். அப்போது வரதுங்கராம பாண்டியன் இப்பாடலைப் பாடினார்.)

செஞ்சுடரின் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரில் பார்த்தனையும் பாராதே—விஞ்சு
விரதமே பூண்டுஇந்த மேதினியை யாண்ட
பரதனையும் ராமனையும் பார்.

சூரியனின் மகனுன சுக்கிரீவனையும் இலங்கை மன்னனுன விடணனையும் பாண்டவருள் அருச்சுனனையும் பார்த்து, அவர்கள் உடன் பிறந்தாரைக் கொன்றதுபோல் நீயும்நடந்து கொள்ளாமல், தன் தமையன் வராவிட்டால் அரசாள்வதில்லை என மேலான சபதத்தைச் செய்து இவ்வுலகத்தை ஆண்ட பரதன் இராமன் என்னும் இருவரையும் பார்த்து அவர்கள் நடந்தபடி நடந்து கொள்வாயாக!

19. பட்டினத்தடிகளின் பாடல்

456.

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியம் தேடி
நலமொன்றும் அறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க எழுகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்.
காப்பதற்கும் வகையறியீர், கைவிடவும் மாட்டீர்,
கவட்டுத்தொல் மரத்திடுக்கில் கால்நுழைத்துக் கொண்டே
ஆப்பதனைப் பிடித்தசைத்த பேய்க்குரங்கு போல
அகப்பட்டீர், கிடந்துழல அகப்பட்டீர் நீரே.

நாவானது வலி எடுக்கும்படி பொய்யைக் கூறிப், புதிய செல்வங்களைச் சேர்த்து, நன்மை ஒன்றுமற்ற மங்கையைக் கூடி, பூமியைப் பிளப்பதைப்போல மிகுந்து புற்றிலிருந்து வெளிப்படும் ஈசல்களைப்போல, 'புலபுல' என்றும் 'கலகல' என்று கூக்குரலிடுமாறு மக்களைப் பெற்றெடுப்பீர்! அம்மக்களைத் தகுந்த முறையில் காப்பாற்றும் வகையையும் அறியமாட்டீர்கள். அவர்களை விட்டு நீங்க மாட்டீர்கள்! இரண்டு பிளவாகப் பிளக்கப்பட்ட பழைய மரத்தின் சந்திலே காலை நுழைத்துக் கொண்டே, அந்தப் பிளவுகளை வேறுபடுத்திக் கொண்டிருக்கும் ஆப்பினை எடுக்கும் குரங்கைப்போல, இல்லறத் தொல்லையில் நீங்கள் அலைந்து கிடந்து வருந்துமாறு அகப்பட்டுக் கொண்டீர்கள்!

20. சிவப்பிரகாச சுவாமிகளின் பாடல்கள்

457. உமையம்மை உங்களைக் காப்பாளாக!

(திருமணம் ஒன்றில் பாடியது)

ஐயநின் சென்னிமிசை உறைகின்ற மடமங்கை
யாரென்ன, வுமை வினவவும்,
அன்னதொரு மடமங்கை யன்று,வெண் டிரைகொழித்து
அழகொழுகு தண் புனல்எனத்
துய்யஒளி ஆனனங் கரியவிழி காதுவாய்
தோயத்தில் உண்டோவெனச்
சொல்அருங் கமலமலர் காவிமலர் கொடிவள்ளை
தூயசெங் குமுத மென்னப்,
பொய்என நினைத்துநல் கொங்கையுங் கூந்தலும்
புனலின்இடை உண்டோ வெனப்
புற்புதஞ் சைவலம்அதுஎனவே மறுத்துப்
புகன்றிடுதி நங்காய் எனத்
தையலவ ள்என்ன, நாணொடு வணங்கியென்
தன்பிழை பொறுத்தி டென்றே
சங்கர ன்உரைத்திடத் திருவுள மகிழ்ந்தசிவ
சங்கரி உமைக் காக்கவே.

உமையம்மை சிவபெருமானைப் பார்த்து, "ஐயனே, நின் தலையில் உள்ள பெண் யார்?" என்றாள். அதற்கு சிவபெருமான், "அஃது ஒரு பெண் அன்று; வெண்மையான அழகிய அலைகளையுடைய நீர் நிலையாகும்" என்றார். அம்மை, "தூய ஒளியுடைய முகமும் கரிய கண்ணும் காதும், வாயும் தண்ணீரில் இருக்குமோ?" என்றாள். சிவபெருமான், "தாமரை மலரும் குவளைப் பூவும் வள்ளைக்கொடியும் செவ்வாம்பல் மலரும் (முகம் போன்றும் கண் போன்றும் காது போன்றும் வாய் போன்றும்) உள்ளன" என்று உரைத்தார். அவர் கூறியவை உண்மை அல்ல என்று எண்ணிய அம்மை, "சிறந்த முலையும் கூந்தலும் நீரில் இருக்குமோ?" என்றாள். பெருமான், "நீ கூறியவை நீர்க்குமிழியும் நீர்ப்பாசியுமாகும் என நான் கூறினும் நீ அதையும் மறுத்துப் பேசுவாய், பெண்ணே!" என இயம்பினர். (இவ்வாறு கூறும்போது

'பெண்ணே' என்றதால்) தலையில் உள்ள கங்கையானவள் தன்னை அழைத்ததாக எண்ணி 'ஏன்' என வினவினாள். அதன் பின்னர் 'உண்மையை மறைப்பதற்கு இயலாது; உண்மை புலப்பட்டு விட்டது' என்பதால் பெருமான் அம்மையாரை நாணத்துடன் வணங்கி, "என்னைப் பொறுத்தருள வேண்டும்" எனத் தாழ்ந்து வேண்டினார். அதனால் மனம் மகிழ்ந்தாள் பார்வதி. அத்தகையவள் உங்களைக் காப்பாற்றுவாளாக. 1

458. விநாயகரும் முருகனும் செய்த குறும்புகள்

அரனவன் இடத்திலே ஐங்கரன் வந்துதான்
ஐயஎன் செவியை மிகவும்
அறுமுகன் கிள்ளினான் என்றே சிணுங்கிடவும்,
அத்தன்வே லவனை நோக்கி
விரைவுடன் வினவவே, அண்ணனென் சென்னியில்
விளங்குகண் எண்ணி னன்என,
வெம்பிடும பிள்ளையைப் பார்த்துநீ அப்படி
விகடமேன் செய்தாய்என,
மருவுமென் கைந்நீள முழமளந் தானென்ன,
மயிலவ னகைத்து நிற்க,
மலையரையன் உதவவரும் உமையவளை நோக்கிநின்
மைந்தரைப் பாரா யெனக்
கருதரிய கடல்ஆடை உலகுபல அண்டம்
கருப்பமில் பெற்ற கன்னி
கணபதியை அருகழைத் தகமகிழ்வு கொண்டனள்
களிப்புடன் உமைக்காக் கவே.

சிவபெருமானிடத்தில் ஐந்து கைகளையுடைய விநாயகன் வந்து, "தந்தையே! என் செவிகளை என் தம்பி ஆறுமுகன் கிள்ளினான்" எனவுரைத்து வருந்தினான். எம்பெருமான், ஆறு முகனைப் பார்த்து, "நீ ஏன் அவ்வாறு செய்தாய்?" என வினவினார். ஆறுமுகன், "அண்ணன் என் தலையில் உள்ள கண்களை எத்தனை என எண்ணப் பார்த்தார்" என்றான். வருந்துகின்ற விநாயகரை நோக்கி, "நீ அங்ஙனம் ஏன் வேடிக்கை செய்தாய்?" என்று பெருமான் கேட்டார். அதற்கு விடையாக விநாயகப் பெருமான், "என் துதிக்கையினது நீளத்தை எத்தனை முழம் இருக்கிறது என்று என் தம்பி

அளந்து பார்த்தான்'' என மொழிந்தான். அதைக்கேட்டதும் முருகன் ஒன்றும் உரைக்காமல் சிரித்து நின்றான். இறைவன் மலையரசனின் மகளாகிய பார்வதியைப் பார்த்து, ''உன் மக்களின் செயல்களைக் காண்பாயாக'' என்று இயம்பினார். கடலால் சூழப்பட்ட உலகையும் மற்றும் பல உலகங்களையும் கருக் கொள்ளாமலே தோற்றுவித்த உமையம்மை விநாயகப் பெருமானைத் தன் பக்கத்தில் அழைத்து ஆறுதல் உரைத்து மனம் களித்தாள். அத்தகையவள் உம்மைக் காப்பாளாக. 2

459. *உமை உம்மைக் காக்க!*

(மண வாழ்த்து)

அம்பிகை அரன்தன்னை நோக்கிஉன் ஆபரணம்
அரவமென, உமையை நோக்கி
அரியரவ சயனத்தை அரவுருவம் ஆனதை
அறியாய்கொல் சிறிது மென்ன,
நம்பிமனை தொறும்இரந் துணும்ஆண்டி நீயென்ன,
நான்தான் அறிவேனென,
நவைஉறும் பொய்புகன் றீரெனப், பாரதம்
நடந்ததே கரியாமென,
வெம்பியொரு வன்பிரம் பாலடித் தானென,
விளங்கிழை ஒருத்தி தாம்பால்
வீசினது சொல்லென்ன, எண்ணாயிரம் பெண்கள்
மிகுகற்பை நீக்கினையெனப்
பம்புகற் பினிலோர் இரட்டிப்பு நீங்கினது
பதறாமல் நீகேளெனப்,
பரமருடன் இவ்வாறு விளையாடு பச்சைப்
பசுங்கொடி உமைக்காக்கவே.

உமையம்மைசிவபெருமானை நோக்கி, ''உமக்குஅணியாவன பாம்புதானே!'' என்றாள். அதற்குப் பெருமான், ''திருமால் பாம்பைப் படுக்கையாகக் கொண்டுள்ளார். பாம்பு வடிவத்தையும் அவர் எடுத்தார். இதைச் சிறிதுகூட நீ அறிய மாட்டாயோ?'' எனக் கூறினார். அம்பிகை ''நீர் வீடுதோறும் சென்று யாசித்து உண்ணும் ஆண்டியாவீர்!'' என மொழிந்

தாள். "நான் கொடுக்தும் இயல்புடையவரை அறிவேன்" என்று அவர் உரைக்க, அம்மை, "நீர் பொய்யைக் கூறினீர்" என்ருள. சிவபெருமான், "பாரதம் நடந்ததே திருமால் பொய் சொன்னதற்குச் சாட்சியாகும்" என்ருர். உமை "பாண்டியன ஒருவன சினத்துடன உம்மைப் பிரம்பால் அடித்தான்" என, சிவபெருமான், "ஓர் இடைச்சி கண்ணனைக் கயிற்ருல் அடித்த செய்தி பற்றி உரைப்பாயாக" என இயம் பிஞர். அம்மை, "தாருகாவன முனிவர்களின் மனைவியர் எண்ணுயிர மாதரின் கற்பை நீவிர் அழித்தீர்" எனக் கூற, எம்பெருமான், "இரண்டு எண்ணுயிர மாதர்களின் (பதினரு யிரம் மாதர்களின்) கற்பை அழித்தது யார் என நிதானமாகச் சொல்லக் கேட்பாயாக" என்ருர். இங்ஙனம் சிவபெரு மானுடன் விளையாட்டாகப் பேசும் தன்மையுடைய பார்வதி யானவள் உங்களைக் காத்தருள்வாளாக! 3

460. கண்ணுதல் உங்களைக் காப்பாராக!

அச்சுதனன் அப்பனிலம், உமதுநே யன்வித்தை
 அருளுவன், பலபத் திரன்
அலமுதவு வன்சமன் பகடுஈவன், நந்தமக்கு
 ஆனதோர் எருதும் உண்டே?
முச்சிர அயில்படை யினைக்கொழுவ தாக்குவோம்;
 மொய்ம்புடன் இழுத்து இறுக்க
முந்திய வடக்கயிற் றுடன்மற்றும் நமதன்பர்
 முன்போய் இரந்து கொள்வோம்;
இச்சையுடைய நமதிளைய தனயனு கியகந்தன்
 இனிமையொடு மாடு மேய்ப்பன்;
இனிஉழுது பயிரிடுதல் நன்றுநன்று இதைவிட்டு
 இரந்துண்ப தூஈன மெனவே
கச்சுமுலை மாதுமை உரைத்திடும் புத்தியைக்
 கைக்கொண்டு உளந்தி லிதுநல்
காரியம் எனக்கருதி மெத்தக் களித்திடும்
 கண்ணுதல் உமைக்காக் கவே.

"திருமால் நமக்குப் பயரிடுவதற்குரிய நிலத்தை அளிப் பான்; உம் நண்பனுன குபேரன் பயரிடுவதற்கேற்ற விதை களைத் தருவான்; பலராமன் ஏர்க்கலப்பையினை அளிப்பான்;

எமன் எருமையைத் தருவான்; நமக்குச் சொந்தத்திலே ஒரு காளையும் இருக்கின்றது; மூன்று தலையையுடைய சூலத்தினைக் கொழுவாக அமைத்துக் கொள்வோம் கொழு கலப்பை முதலியவற்றை வன்மையுடன் இழுத்துக்கட்டுவதற்கு வேண்டிய வடக்கயிறு முதலியவற்றையும் நம் தொண்டரிடத்தில் நாம் வாங்கிக் கொள்ளலாம். நம்மிடத்தில் விருப்பமுடைய இளைய மகனான முருகன் மாட்டை மேய்ப்பான். எனவே இனி உழவு வேலை செய்வதே மிகவும் நல்லது. இதை விட்டுப் பிச்சையெடுத்து உண்பது இழிவாகும்'' என்று உமையம்மை கூறிய அறிவுரையை ஒப்புக் கொண்டு, ''இது நல்ல செயலே என எண்ணிக் களிப்படையும் சிவபெருமான் உங்களைக் காப்பாராக! 4

461. *சுற்றத்துடன் வாழ்க!*

கவுரிகம லாய்அரன் இரந்தசோறு இதுவெனக்;
 கமலைமண் கண்டேனெனக்,
காளையொன் றேஅரற் கெனமாடு மேய்த்ததைக்
 கட்டிடைய னரோஎனச்,
சிவனொருவர் தூதென்ன, அத்தூது சென்றகதை
 செப்பிலொரு பாரதமெனச்,
சேரோடு திருடினன் அரனெனக் கட்டுண்ட
 செய்திநாம் அறிவோமென,
அவையில்நட மாடினு னரனென்ன, அவ்வாடல்
 அரவமறி யாதோவென,
ஆலமதை யுண்டனன் அரனென்ன, மண்ணுண்ட
 அதனையறி யோமோவென,
விவரமொடு மலைமகளும் மலர்மகளும் இவ்வாறு
 விளையாடு ம்இவர்கள் துணையாம்
மேவிவரு புத்ரமித் திரகளத் திரருடன்
 மேன்மேலும் மிகவாழியே,

பார்வதி இலக்குமியை நோக்கி, (தன் வறுமையைப் புலப் படுத்த) ''தாமரையில் வாழ்பவளே! சிவன் பிச்சை எடுத்துக் கொண்டு வந்த சோறு இவ்வளவுதான்'' என்றாள். இலக்குமியோ, ''என் நிலை இன்னும் தாழ்ந்தது! நான் மண்ணைத் தான் உணவாகப் பார்த்தேன்'' என்றாள். (திருமால் மண்ணை

உண்டார் என்பது இங்ஙனம் இலக்குமியால் உரைக்கப் பெற்றது).

பார்வதி, "சிவனுக்கு ஓர் எருது மட்டுமே உள்ளது," என்ருள். இலக்குமியோ, "மாட்டை மேய்த்துக் கட்டும் கோனுர் யார்?" என வினவிஞள். (தன் கணவனுன திருமாலுக்கு ஒரு மாடு கூடச் சொந்தத்தில் இல்லை என்பது கருத்து.)

உமாதேவி, "சிமபெருமான் ஒருவருக்குத் தூதராகச் சென்ருர்" எனக் கூறிஞள்.

திருமகள், 'கண்ணபிரான் தூது போன வரலாற்றைச் சொன்னுல் அது ஒரு பாரதமாகும்" என்று உரைத்தாள்.

உமை, "சிவன் தம்மிடம் ஒப்படைத்த திருநீலகண்டரின் ஓட்டைத் திருடிஞர்" என மொழிந்தாள்.

இலக்குமி, "திருட்டுக் குற்றத்துக்காகக் கண்ணன் உரலில் கட்டப்பட்ட செய்தியை நாம் நன்ருக அறிவோம்" என விடையிறுத்தாள்.

மலையரசனின் மகள், "சபையில் கூத்தாடியவர் சிவபெருமான்" என இயம்பிஞள்.

திருமகள், "கண்ணன் ஆடிய கூத்து காளிங்கனுகிய பாம்புக்குத் தெரியும்" என்ருள்.

சிவகாமி, "சிவபெருமான் ஆலகால விஷத்தை உண்டார்" என்ருள்.

இலக்குமி, "கண்ணன் மண்ணை உண்ட செய்தியை அறியமாட்டாயோ?" என்றுரைத்தாள்.

இங்ஙனம் பேசி விளையாடும் தன்மையுடைய சிவகாமியும் இலக்குமியும் அருளுதலால் பெறக்கூடிய மக்கள் நண்பர்கள் மனைவியர் ஆகியவருடன் சிறந்து வாழ்வீராக! 5

462. *அன்னை சொற்படி உப்பு விற்பவனை அழைத்தது!*

நிறைய உளதோ, வெளிதோ, கொளுவோம்;
பிறையை முடிக்கணிந்த பெம்மான்—உறையும்
திருக்காட் டுப்பள்ளி திரிபாவாய், நீஇங்கு
இருக்காட்டுப் பள்ளி யெமக்கு.

பிறைச்சந்திரனைத் தலையில் சூடிய சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்காட்டுப் பள்ளியில் உப்பை விற்றுத் திரியும்

பெண்ணே! நீ இங்கு இருப்பாயாக! நின்னிடம் இருக்கும் உப்பை அள்ளி எனக்குக் காட்டு. நிறைய இருக்கின்றதா? வெண்மை நிறம் உடையதாக உள்ளதா? அங்ஙனம் இருக்குமானால், நாம் அதை வாங்கிக் கொள்வோம். 6

463. *என்னை மடிபிடித்தவன் சாவானா!*

அடுத்துவரும் தொண்டனுக்கா அந்தகனைத் தாளால்
அடர்த்ததுவும் சத்தியமே யானால்—எடுத்ததொரு
மாங்கனிக்கா என்னை மடிபிடித்த மாபாவி
சாம்கனிக்குஆ தித்தன்வரத் தான்.

சிவனே! உன்னை வந்து அடைந்து வணங்கிய மார்க்கண்டேயனுக்காக இயமனைக் காலால் உதைத்தது உண்மையானால், கீழே விழுந்து கிடந்த பழமொன்றை எடுத்ததற்காக என் துணியைப் பிடித்திழுத்த இந்தப் பெரும் பாவி, கதிரவன் கன்னி ராசிக்கு வரும்போது (புரட்டாசி மாதத்தில்) இறப்பானாக!

விளக்கம்: சிவப்பிரகாசர் கீழே விழுந்து கிடந்த மாம்பழம் ஒன்றை எடுக்க அதற்காகத் தோட்டக்காரன் அவரது மடியைப் பிடித்து இழுத்தபோது பாடிய வசை இது. 7

464. *சிவபெருமானின் ஊர், உடை, வாகனம்.*

(தருமபுர மடத்து வெள்ளியம்பலத் தம்பிரான், இவருடைய கல்வி முதலியவற்றை அறிவதற்காக சிவபெருமானின் ஊர், உடை, வாகனம் ஆகியவற்றை ஒரு வெண்பாவில் முதலிலும் இறுதியிலும் 'கு' வருமாறு பாடச் சொல்ல, அங்ஙனமே பாடியது.)

குடக்கோடு வான்எயிறு கொண்டார்க்குக் கேழல்
முடக்கோடு முன்னம் அணிவார்க்கு—வடக்கோடு
தேருடையான் தெவ்வுக்குத் தில்லைதோல் மேற்கொள்ளல்
ஊருடையான் என்னும் உலகு.

"மேற்குத் திசை நோக்கிச்செல்லும் இயல்புடைய சூரியனின் பற்களைத் தக்கன் வேள்வியில் பிடுங்கியவரும், திருமால் பன்றி அவதாரம் எடுத்த காலத்தில் அப்பன்றியின் வளைந்த கொம்பை அணிந்துகொண்டவரும், வடக்கு நோக்கி ஓடும் தன்மையுடைய தென்றல் காற்றைத் தேராகக் கொண்ட

மன்மதனுக்குப் பகைவருமான சிவனுக்கு, தில்லை ஊராகும்! புலியின் தோல் ஆடையாகும்; ஏறிச் செல்லும் ஊர்தி காளையாகும்'' என்று உயர்ந்தவர் உரைப்பர்.

விளக்கம்: இதில் முதற்சீரின் முதல் எழுத்து 'கு'; இறுதிச் சீரின் இறுதி எழுத்து 'கு'. சிவபெருமானின் ஊர், ஆடை, ஊர்தி என்பன இதில் கூறப்பட்டுள்ளன. 8

465. பெண் கொள்ளலாகாது!

(பட்டீசுரப் பெருமானின்மீது பாடப்பட்டது)

சேய்கொண்டா ரும்கமலச் செம்மலுட னேஅரவப்
பாய்கொண்டா னும்பணியும் பட்டீச் சுரத்தானே!
நோய்கொண்டா லும்கொளலாம் நூறுவய தாம்அளவும்
பேய்கொண்டா லும்கொளலாம் பெண்கொள்ள லாகாதே.

சிவப்பு நிறத்தையுடைய தாமரை மலரில் வாழும் நான்முகனுடன் ஆதிசேடனைப் பள்ளியாகக் கொண்ட திருமாலும் வழிபடும் பட்டீச்சுரத்தில் வீற்றிருக்கும் இறைவனே! நூறு வயது வரை நோயினால் வருந்தினாலும் வருந்தலாம். பேயால் பற்றப்பட்டு வருந்தினாலும் வருந்தலாம். ஆனால் பெண்ணை மணப்பது என்பது முடியாத செயலாகும். 9

466. இல்லறம் துன்ப மயம்!

நிட்டையிலே இருந்துமனத் துறவுஅடைந்த
பெரியோர்கள் நிமலன் தாளைக்
கிட்டையிலே தொடுத்துமுத்தி பெறுமளவும்
பெரியசுகம் கிடைக்கும் காம
வெட்டையிலே மதிமயங்கிச் சிறுவருக்கு
மணம்பேசி விரும்பித் தாலி
கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே
கிடத்துமட்டும் கவலை தானே.

யோகத்தில் நின்று உள்ளப் பற்றைத் துறந்த பெரியோர்கள், குற்றமற்ற சிவபெருமானின் திருவடியை நெருங்கிய காலத்திலிருந்து, வீடு பேற்றை அடையும் வரை பேரின்பத்தை அடைவார்கள். காமவெம்மையால் அறிவு மயங்கிய இளைஞருக்குத் திருமணம் பேசித் தாலி கட்டும் காலம்

தொடங்கி உயிர் விட்டுச் சுடுகாட்டில் சிதையில் வைக்கும் வரை கவலையே உண்டாகும். 10

467. காளியின் தேர் சாய்ந்து முருங்கை மரம் ஒடிந்த நேரத்தில் பாடியது!

திருந்துதமிழ் இலக்கணஐந் திணைக்கோவை
விருத்தகிரிச் செல்வர்க்கு ஓதும்
பெருந்தகைமை உடையம்யாம் விடுமோலை;
வெங்கனூர்ப் பிடாரி காண்க;
இரும்புவியில் ஒரு முருங்கைக் கொம்பொடியா
மல்காத்திங் கிருக்கும் நீநம்
முருங்கைதனை வேரோடு களைந்தனையென்
றால்உனக்கு முறைநன் றாமோ?

விருத்தாசலத்தில் வீற்றிருக்கும் பெருமானின்மீது ‘ஐந்திணைக் கோவை’ என்ற நூலை இயற்றும் பெருஞ் சிறப்புடைய யாம் எழுதும் ஓலை இது. வெங்கனூரில் வீற்றிருக்கும் பிடாரியம்மை இவ்வோலையைக் காண்பாளாக. நீ இவ்வுலகத்தில் முருங்கைக் கொம்பு ஒடியாதபடி அதன் அடியில் வீற்றிருக்கின்றாய். இருந்தும் நீ எம் முருங்கை மரத்தை உன் தேரால் வேரோடும் வீழச்செய்தாய் எனின் உனக்கு இது நியாயமாகுமா? சொல்வாயாக! 11

468. நகைப்பைத் தருமன்றோ!

(சிவப்பிரகாசருடைய தந்தை பாடிய பாடல்)

கயல்வாய்த்த கண்ணி உலகுஈன்ற
வல்லிபங் கா,உனது
செயல்வாய்த்த அன்பர்க்கும் அல்லா
தவர்க்கும் சிரிப்பல்லவோ?
இயல்வாய்த்த எந்தைக்கு யான்வாய்த்
ததுவும்இங் கென்தனக்கு
வயல்வாய்த் ததும்மனை வாய்த்ததும்
மைந்தர்கள் வாய்த்ததுமே.

மீன் போன்ற கண்ணையுடையவளும், உலகைப் பெற்றவளும், கொடி போன்றவளுமான பார்வதியை ஒருபாகத்தில் கொண்

டிருப்பவளே! என் தந்தைக்கு நான் மகனுகப் பிறந்ததும், எனக்கு நன்செய் நிலம் பொருந்தியதும், மனைவி அமைந்ததும், மக்கள் வாய்க்கப் பெற்றதும், உன் அடியார் கட்கும் மற்றவர்க்கும் நகைப்பைத் தருமன்ரே! 12

469. சிவப்பிரகாசர் தம் தம்பி கருணைப் பிரகாசர் மறைந்தபோது பாடியது.

முன்னமொரு தமிழ்ப்புலவன் தனையுண்டு
கண்டசுவை முதிர்ச்சி யாலே
தன்னியலை முழுதும் உரைத்தமையாமுன்
நினைக்கவர்ந்து தடங்கா ளத்தி
மன்னவனுண் டான்எனது மாதவத்தின்
வலிதீர மண்ணின் மீதே
என்னுடன் வந்து அவதரித்த இளங்கருணைப்
பிரகாசன் என்னுங் கோவே.

என்னோடு தோன்றிய கருணைப் பிரகாசன் என்னும் அரசே! முன்னொரு காலத்தில் நிகரில்லாத புலவராகிய அப்பரை விழுங்கிச் சுவை கண்ட மிகுதியாலே, காளத்தியில் வீற்றிருக்கும் பெருமான் தன்னை முழுவதும் பாடி முடிப்பதற்கு முன், என் புண்ணியத்தின் பலன் ஒழியுமாறு நின்னை உட் கொண்டான்.

விளக்கம்: கருணைப் பிரகாசர் காளத்தி புராணத்தைப் பாடத் தொடங்கி முடிப்பதற்குள்ளாக இறந்தார். ஆதலால் சிவப்பிரகாசர் இவ்வாறு உரைத்தார். 13

470. நாரி என்பதால் மூங்கிலும் வளர்ந்தது!

நாணியென்பதை நாரியென்று உரைத்திடும் நசையால்,
வேணுவானது வளைந்துபோய்ப் புகுந்தது என்ருல்,
காணலாவதோர் உருவமெய்ந் நாரியைக் கண்டால்
பூணுவார்மயல் காளைய ரென்பதும் புதிதோ?

உலகத்தவர் 'நாணி' என்ற சொல்லை 'நாரி' என்று வழங்கு தலால், 'நாரி' என்பதைப் பெண் என உணர்ந்து விருப்பத் துடன் மூங்கில் வளைந்து போனது. அங்ஙனமாயின், இளைஞர் பார்க்கக் கூடிய ஒப்பில்லாத உண்மையான நாரியராகிய

பெண்களைக் கண்டால் காதல் கொள்வார் என்பது புதிதானதோ?

விளக்கம்: 'நாணி' என்ற சொல்லை 'நாரி' என உலகத்தவர் வழங்குகின்றனர். 'நாரி' என்பதற்குப் பெண் எனப்பொருள் உண்டு. ஆதலால் ஓரறிவுயிராகிய மூங்கிலும் வளைந்து போயிற்றும். அப்படியானுல், உண்மையான பெண்ணைக் கண்டால் காளையரின் நிலை சொல்லவும் வேண்டுமோ? 14

471. வேலையர் பாடியது.

ஆண்டதனுல் எனையொவ்வாய்; வித்தையினில்
 தமையனினும் அதிகம் என்றே
பூண்டவுலகு அதனினுள்ளோர் புகல்வதுகேட்
 டிருந்துமென்ன புதுமை தானே,
காண்தகுகண் மணியேநல் இளங்கருணைப்
 பிரகாசக் காளாய், நீதான்
மாண்டனைஎன்று அறிந்திருந்தும் உயிர்தரித்தேன்;
 யானுமிகு வன்னெஞ் சேனே.

கண்மணி போன்றவனே! கருணைப் பிரகாசம் என்னும் பெயருடைய தம்பியே! வயதில் எனக்கு ஒப்பாக மாட்டாய்! எனினும் கல்வியிலே, உனக்கு அண்ணனுகிய என்னைவிட நீ உயர்ந்தவன் என்று உலகத்தவர் சொல்வதைக் கேட்டுள்ளேன். இத்தகைய சிறப்புடையவனுக இருந்தும், என்ன வியப்பு! நீ மாண்டாய் என்பதைக் கேட்ட பின்னரும் உயிருடன் வாழ்கின்றேன். நான் கடினமான மனத்தை உடையவனே! 15

472. கரும்பின் கணுவானேன் நான்!

(சின்னுட்களில் சிவப்பிரகாசரும் மறைந்தார். அப்போது முன் மறைந்த கருணைப் பிரகாசரையும் பின்மறைந்த சிவப் பிரகாசரையும் எண்ணி வேலையர் பாடியது.)

குறிப்பு: வேலையர் என்பவர் சிவப்பிரகாசருக்குத் தம்பி; கருணைப்பிரகாசருக்குத் தமையர்.

அல்லிமலர்ப் பண்ணவனும் ஆராய்ந்து அறிகவிதை
சொல்லும் இருவரிடைத் தோன்றியயான்,—முல்லை
அரும்பில் பொலியும் அணிமுறுவல் நல்லாய்!
கரும்பில் கணுநிகர்த்தேன் காண்.

முல்லை அரும்பைப் போன்ற அழகிய பற்களை யுடையவளே! தாமரைமலர் மீது வீற்றிருக்கும் நான்முகனும் ஆராய்ந்து தெளிவதற்குரிய பாடலை இயற்றும் வல்லமையுடைய சிவப் பிரகாசர் கருணைப்பிரகாசர் என்னும் இருவருக்கும் இடையில் பிறந்த நான் இனிய கரும்பின் இடையில் உள்ள கணுவைப் போன்றவனாவேன். 16

21. பொன் விளைந்த களத்தூர் அந்தகக் கவி வீரராகவர் பாடல்கள்

473. கண்ணுக்கினியான் ஏன் பிறந்தான்?

(அந்தகக் கவி திருவேங்கடம் என்ற வள்ளலிடம் சென்று பாடிப் பரிசில் வேண்ட, அதை அவ்வள்ளல் தரும் நேரத்தில் அவருடைய தமையன் 'கண்ணுக்கினியான்' என்பார் தடுத்தார். அப்போது இதனைப் பாடினார்.)

தேன்பொழிந்த வாயான் திருவேங் கடத்துடனே
ஏன்பிறந்தான் கண்ணுக் கினியானே—வான்சிறந்த
சீதேவி யாருடனே செய்யதிருப் பாற்கடலில்
மூதேவி ஏன்பிறந்தாள் முன்.

தேன் போன்ற இனிய சொற்களைப் பேசும் வாயினனான 'திருவேங்கடம்' என்ற வள்ளலுடன் 'கண்ணுக்கினியான்' என்பவன் ஏன் பிறந்தான்? திருப்பாற்கடலில் மிக்க சிறப் புடைய சீதேவியுடன் அவளுக்குத் தமைக்கையாக மூதேவி பிறந்த காரணம் எதுவோ, அதுவே ஆகும். 1

474. சும்மா கலங்கினாள்!

(யானைப் பரிசில் தந்த இராமனைப் பற்றிப் பாடியது. இச் செய்யுள் பாணன், பாணி கூற்றில் அமைந்துள்ளது.)

இம்பர்வான் எல்லைஇரா மனையே பாடி
என்கொணர்ந்தாய்,பாணாநீ என்றாள் பாணி;
வம்பதாம் களபமென்றேன்; பூசு மென்றாள்,
மாதங்கம் என்றேன்; யாம் வாழ்ந்தே மென்றாள்;

பம்புசீர் வேழமென்றேன்; தின்னு மென்ருள்;
பகடென்றேன்; உழுமென்ருள் பழனந்தன்னைக்;
கம்பமா என்றேன்; நல் களியாம் என்ருள்;
கைம்மாஎன் றேன்; சும்மா கலங்கி ளுளே.

பாணனின் மனைவியானவள், "பாணனே, இவ்வுலகத்தும் வானுலகத்தும் புகழ் பரந்த இராமன் என்ற வள்ளலைப்பாடி என்ன பரிசில் கொண்டு வந்தாய்?" என வினவினுள். நான், யானையைக் குறிப்பதற்குப் "புதுமையான களபம்" என்றேன். அவள் அதைச் சந்தனம் என்று எண்ணிப் "பூசும்" என்ருள். யானையின் மற்ருெரு பெயராகிய "மாதங்கம்" என்றேன். அவள் அதை "மிக்க தங்கம்" என்று எண்ணி "நாம் வறுமையினின்று தப்பி வாழ்ந்தோம்" என்ருள். மிக்க புகழையுடைய "வேழம்" என்றேன். அவள் கரும்பு எனக் கருதித் "தின்னுக" என்ருள். "பகடு" என்று மொழிந்தேன். அவள் அதை மாடு என்று நினைத்து "வயலை உழுக" என்ருள். நான் இறுதியில் "கம்பமா" என்றேன். அவள் கம்பு தானியத்தின் மாவு என்று எண்ணி, "நல்ல களியாகச் செய்யலாம்" என்ருள். பின்னர் நான் "கைம்மா" என்றேன். நான் கொணர்ந்த பரிசில் யானை என்பதை உணர்ந்து அவள் வீணே கலங்கினுள்.

விளக்கம்: பாணி கலக்கம் அடைந்ததற்குக் காரணம் யானையை வைத்துக் கொண்டு எவ்வாறு காப்பது என்பதாம். அன்றியும், 'களபம்' முதலிய சொற்களுக்குப் பொருள் தெரியாமல் கலங்கினுள் எனவும் உரைக்கலாம். 2

475. ஒரு வாய்க்கே உணவில்லை! நால்வாய்க்கு எங்கே செல்வேன்?

'இல்' எனுஞ்சொல் அறியாத சீகையில்வாழ்
தானனைப்போய் யாழ்ப்பா ணன்யான்,
பல்லைவிரித்து இரந்தக்கால், வெண்சோறும்
பழந்தூசும் பாலி யாமல்,
கொல்லநினைந் தேதனது நால்வாயைப்
பரிசென்று கொடுத்தான்; பார்க்குள்
தொல்லைஎனது ஒருவாய்க்கும் நால்வாய்க்கும்
இரையெங்கே துரப்பு வேனே?

யாணுன நான் 'இல்லை' என்ற சொல்லைத் தன்னிடம் வந்து இரந்தவர்க்குச் சொல்லி அறியாத 'தானன்' என்பவனிடம் சென்று பல்லைக் காட்டி இரந்தேன். அவன் எனக்கு வெண்மையான சோறும் பழைய ஆடையும் தராமல் என்னைக் கொல்ல எண்ணியோ என்னவோ, தன் நால்வாயை, (யானையை) எனக்குப் பரிசிலாகத் தந்தான். இந்த வுலகத்தில் பசியால் வருந்தும் ஒரு வாய்க்கு உணவிட இயலாத நான், நான்கு வாய்களுக்கு (யானைக்கு) எங்கிருந்து உணவைக் கொண்டு வந்து நிரப்புவேன்?

குறிப்பு : நால்வாய் –நான்கு வாய்கள்; யானை; தொங்கும் வாய். 3

476. *அன்பு குறைந்தது!*

முன்னாள் இருவர்க்கும் யாக்கைஒன் ருக முயங்கினமால்;
பின்னாள் பிரியன் பிரியை யென் ருயினம்; பேசலுறும்
இந்நாள் கொழுநன் மனைவியென் ருயினம்; இன்னமும்ஓர்
சின்னாளில் எப்படி யோ,ஐய, நீஇன்று செப்புகவே.

மகனே! முன், உன் தந்தையும் நானும் உடல் ஒன்று என்று கூறுமாறு சேர்ந்து வாழ்ந்தோம். பின்னர்ச் சில நாட்கள் கழிந்த பிறகு 'அன்புடையவன் அன்புடையவள்' என்று உரைக்கும்படியாக வாழ்ந்தோம். நாம் பேசும் இப்போது 'கணவன்' 'மனைவி' எனச் சொல்லக்கூடிய நிலையை அடைந்தோம். இன்னும் சிறிது காலம் செல்லுமாயின் நாங்கள் எந்த நிலையை அடைவோம் என நீ கூறுவாயாக.

விளக்கம் : மணம் செய்து கொண்ட நாளிலிருந்து அன்பு குறைந்து கொண்டே வந்து மகன் பிறந்த பின்னர் அது நீங்கியது என்பதாம். 4

477. *வில்லெடுத்ததேன்? விளக்கு!*

(கவிஞர் அரசன் ஒருவனிடம் சொன்னார். அவன் தன் கையில் வில்லையும் அம்பையும் வைத்துக்கொண்டிருந்தான் என்ன செய்கிறேன், சொல்' என்றான் இறைவனின் அருளால் அவன் செயலை உணர்ந்து இப்பாடலைப் பாடினார்.

வாழும் இலங்கைக்கோ மான்இல்லை; மானில்லை;
ஏழு மராமரமோ ஈங்கில்லை;—ஆழி

அலைஅடைத்த செங்கை அபிராமா, இன்று
சிலைஎடுத்த வாறுஎமக்குச் செப்பு.

கடலின் அலைகளை அணைகட்டி அடைந்த சிவந்த கையையுடைய அழகனே! இப்போது இலங்கையை ஆண்ட இராவணன் இல்லை. மாயமானாக வந்த மாரீசனும் இல்லை. ஓர் அம்பால் எய்யப்பட்ட ஏழு மராமரங்களும் இப்போது இல்லை. இங்ஙன மிருக்கவும் இப்போது நீ வில்லும் அம்பும் எடுத்த காரணம் யாது? சொல்! 5

478. *அகளங்கன் என்பவர் மேல் பாடிய பாடல்*

வடவைக் கனலைப் பிழிந்து கொண்டு,
மற்று மொருகால் வடித்தெடுத்து,
வாடைத் துருத்தி வைத்தூதி மறுகக்
காய்ச்சி குழம்புசெய்து,
புடவிக் கயவர் தமைப் பாடிப்
பரிசு பெருமல் திரும்பிவரும்
புலவர் மனம்போல் சுடுநெருப்பைப்
புழுகென் றுரைத்தால், பொறுப்பாளோ?
அடவிக் கதலிப் பசுங்குருத்தை
நச்சுக் குழல்என் றஞ்சியஞ்சி
அஞ்சொல்கிளிகள் பஞ்சரம் விட்டு
அகலாதிருக்கும் அகளங்கா,
திடமுக் கடவா ரணம்உகைத்த
தேவே, தேவ சிங்கமே,
திக்கு விசயம் செலுத்திவரு
செங்கோல் நடாத்தும் எம்கோனே.

அகளங்கன் என்னும் பெயரை யுடையவனே! மும்மதங்களைப் பொழியும் யானை மேல் ஏறிவரும் இயல்புடைய தெய்வம் போன்றவனே! தேவர்களுக்குச் சிங்கம் என்று கூறத் தக்கவனே! எட்டுத்திக்குகளிலும் வெற்றி கொண்டு செங் கோலாட்சி செலுத்தும் எம் அரசே! காட்டு வாழையின் தண்டை நஞ்சுக் குழல் என்று அச்சம் அடைந்து கிளிகள் தம் கூட்டை விட்டு நீங்காமல் இருக்கின்றன. கடலில் உள்ள வடவைக் கனலின் சாற்றை எடுத்து அதனைத் திரும்பவும் ஒரு முறை வடிகட்டி, வடதிசையினின்று வரும் குளிர்

காற்ருகிய காற்றுப் பைக்கு அருகில் வைத்து ஊதி, நன்ருகக் காய்ச்சிக் குழம்பாகச் செய்து, பூமியில் உள்ள புல்லரைச் சிறப்பித்துப் பாடிப் பரிசு ஏதும் அவரிடமிருந்து பெருமல் திரும்பி வரும் புலவரின் உள்ளத்தைப் போலச் சுடும் தீயை மணம் வீசும் புனுகு என்று சொல்லி அதைத் தலைவியின் மீது தடவினல் அவள் பொறுப்பாளோ? 6

479. இவளை ஏற்றுக் கொள்வாயாக!

(சிதம்பர பூபதிமேல் பாடிய பாடல்)
(நற்ருய் இரங்கல்)

மாதரணி மென்முலைத்தோய் மாரா, சிதம்பரபூ
மாதரணி ராசர்மகிழ் மாவசன, —மாதர்
மறுகிடத்தே, அம்பொன் மடவார் பழிக்க, நெஞ்ச
மறுகிடத்தேங் கும்துரைப்பெண் வா.

பெண்களின் மென்மையான மார்பைச் சேரும் மன்மதனே! சிதம்பரம் என்ற பெயரைக் கொண்டவனே! மற்ற மன்னர் மகிழ்ச்சி யடைவதற்குரிய சொற்களைப் பேசுபவனே! அழகிய வீதியில் பொன் அணிகளை அணிந்த பெண்கள் குறை கூற என் மகள் மனம் சுழன்று அஞ்சி வருந்துகின்ருள்; இவளை ஏற்றுக்கொள்ள வருவாயாக. 7

480. வல்லியைப் புல்லி அணை!

(நற்ருய் இரங்கல்)

சொல்லும் அல்லும்பகலும் சோரும்; கிடை கிடக்கும்;
கல்லும் உருகக் கனிந்தரற்றும்; —புல்லியணை;
விண்கலக்கும் கீர்த்திவேள் சிதம்பரக் குமணு,
பெண்கலக்கம் கொண்டுநின்தன் பேர்.

விண்வரை பரவிய புகழை யுடையவனே! குமணன் எனச் சொல்லத்தக்க 'சிதம்பரம்' என்ற பெயரினனே! என் மகள் மனக் கலக்கத்தால் உன் பெயரை இரவும் பகலும் உரைத்துக் கொண்டிருக்கின்ருள். தளர்ச்சி அடைகின்ருள். படுக்கையில் படுத்தபடி உள்ளாள். கல்லும் கரையுமாறு மனம் உருகிப் புலம்புகின்ருள். அத்தகையவளை நீ தழுவிக் கொள்ள வேண்டும். ८

481. கோடி வணக்கம்! என் கொடியைச் சேர்வாயாக!

வந்தனந்த மென்பூ மணம்தோய்ந்து பாயப்பா
வந்தனம்விம் மிச்சோர்ந்தாள்; வாகோடி,—வந்தனம்கல்
அன்னமனம் கொள்ளாமல் ஆள், சிதம்ப ரக்குமணு,
அன்னமனம் கொண்டுயவே ஆங்கு.

குமண வள்ளலைப் போன்ற சிதம்பரனே! அன்னத்தைப் போன்ற என் மகள், தென்றலானது எண்ணற்ற மலர்களின் மணத்தில் தோய்ந்து வந்து வீசுவதால், ஐயோ, மார்பு விம்மப் பெற்றுத் தளர்ச்சி அடைந்தாள். நீ கல்லைப்போன்ற மனத்துடன் இல்லாமல், அவள் உண்டு உயிர் வாழுமாறு ஆட்கொள்வாயாக! அவளை ஏற்க! உனக்குக் கோடி வணக்கம். 9

482. மாதின் மயக்கத்தைத் தவிர்ப்பாயாக!

மாவாரி முத்தவெண்பல் மாதுமய லைத்தணிசோ
மாஆரி முத்தளித்த வைபோகா,—மாஉச்
சிதம்பர வுஜயாநீ திக்குளுயர் பூமா,
சிதம்பர வையா,நீ திக்கு.

சந்திரனைப்போன்றவனே! 'ஆரி முத்து' என்ற வள்ளல்பெற்ற மகனே! அனைவரும் மிக உயர்வாகப் புகழ்கின்ற ஐயனே! நீதியால் மேன்மையுற்றவனே! சிதம்பர வள்ளலே! என் பெண்ணுக்குக் கதியாவாய்! பெரிய கடலில் விளையும் வெண்மையான முத்து போன்ற பற்களையுடைய இப் பெண்ணின் மயக்கத்தைத் தணிப்பாயாக! 10

483. சிதம்பர யாகா! சேயிழையை ஏற்பாய்!

பங்கசமேல் மேவியசௌ பாக்யசுப மான்அளித்த
அங்கசவேள் வெங்கணையால் ஆவிநொந்த—எங்களிடம்
மாரஞ் சிதம்பரவும் மாதினைஆள், கோடிநமக்
காரம், சிதம்பரயோ கா!

சிதம்பரனே! செந்தாமரைமேல் வீற்றிருக்கின்ற, செல்வத்தையும் இன்பத்தையும் தருகின்ற இலக்குமி பெற்றெடுத்த மன்மதனின் கொடிய கணையால் உயிர்த் துன்பத்தை அடைந்த எம்மிடம் உள்ள மிக இன்பமான பெண்ணை ஆட்கொள்வாயாக! உனக்குக் கோடி வணக்கம்! 11

484. திரௌபதி மாமனுரைத் தழுவினுள்!

கோள் அரவேந்து உலகில்இந்தப் புதுமையுண்டோ?
    என மொழிந்த குமனு, கேளாய்,
ஆளர்ஐவர் தமைத்தோய்ந்த கற்புடைய
    பாஞ்சாலி அணைந்த வீமன்
வாள்அரிபோல் அருகிருக்க, மலய வெற்பில்
    இருந்துவந்த மாம னுரைச்
சாளர வாசலைத் திறந்து, வரவழைத்து,
    முலையாரத் தழுவி னுளே.

'ஆதிசேடனுல் சுமக்கப்படும் இந்த உலகில் புதுமை உண்டோ?' என வினவிய குமணனே! கேள். ஐந்து கணவரைச் சேர்ந்த கற்புடைய பாஞ்சாலி, தன்னைச் சேர்ந்த வாயுவின் மகனுன வீமன் சிங்கம் போலத் தன் பக்கத்தில் இருக்கவும், பொதியமலையில் தோன்றி வரும் தென்றலாகிய மாமனுரை, பலகணியின் கதவைத் திறந்து, வரவழைத்து மார்பாரத் தழுவிக்கொண்டாள்.

விளக்கம் : திரௌபதி தென்றலைத் தழுவினுள் என்பதை இங்ஙனம் நகைச்சுவைபட உரைத்தார். 12

485. பெண்களைச் சேர்பவர் அடையும் பயன்!

பணியாரந் தோசையி லக்கொங்கை
    தோய்ந்திடப் பார்ப்பர்பல்லி
பணியாரந் தோசையி லாச்செந்து
    வாய்ப்பிறப் பார்களென்னே
பணியாரந் தோசைமுன் னேனுக்கிட்
    டேத்திப் பழனிச்செவ்வேள்
பணியாரந் தோசைவ ராகாரன்
    னேர்க்கென்ன பாவமிதே

தோசை முதலிய பண்டங்களை விநாயகருக்குக் காணிக்கையாக்கிப் படைத்து வழிபட்டு, பழனியில் உள்ள முருகப்பெருமானை வணங்க இயலாதவர் சைவசமயத்தவர்ஆகமாட்டார்கள்; மாதரின் அணிகள் பொருந்திய அழகிய இரண்டு மலைபோன்ற மார்புகளைச் சேர்ந்து அனுபவிக்க நினைப்பார்கள். (அவர்கள்) பல்லி பாம்பு, அந்துப்பூச்சி முதலிய ஒலிமை

எழுப்ப இயலாச் சிற்றுயிர்களாகப் பிறப்பார்கள்; ஐயோ, அவர்க்கு இது என்ன பாவத்தின் பயன்!

விளக்கம் : (1) பணியாரந் தோசையிலக் கொங்கை—பணி+ஆர்+அம்+தோ+சையிலம்+கொங்கை;அணிகள் அணிந்த அழகிய இரண்டு மலைகள் போன்ற தனங்கள்.

(2) பணியாரந் தோசை யிலாச்செந்துவாய்—பணி+ஆர்—அந்து+ஓசை+இலா+செந்துவாய்; பல்லியும், ஓசை இல்லாத அந்துப் பூச்சி முதலிய உயிர்களாக.

(3) பணியாரந் தோசை முன்னேனுக்கிட்டு—பணியாரம்+தோசை+முன்னேனுக்கு+இட்டு; தோசை முதலிய பண்டங்களை விநாயகருக்குப் படைத்து.

(4) பணியாரந் தோசைவராகார்—பணியார்+அந்தோ+சைவர்+ஆகார்; வணங்காதவர் சைவ சமயத்தவர் ஆக மாட்டார் .

என நான்கு அடிகளையும் பிரித்துப் பொருள் கொள்க. 13

486. விநாயகரே, ஒருவரும் உனக்குப் பெண்தர மாட்டார்!

வீரம் சொரிகின்ற பிள்ளாய்,
  உனக்குப்பெண் வேண்டுமென்ருல்,
ஆரும் கொடார், உங்கள் அப்பன்
  கபாலி;அம் மான்திருடன்;
ஊரும் செங்காடு;நின் தன்முகம்
  யானை; உனக்கி ளையோன்
பேரும் கடம்பன்;உன் தாய்
  நீலி;நிற்கும் பெருவயிறே.

வீரத்தையுடைய விநாயகரே! உனக்குப் பெண் கொடுக்க வேண்டும் என்ருல், ஒருவரும் தரமாட்டார்; காரணம் என்னவெனில், உங்கள் தந்தை சிவபெருமான் கையில் மண்டையோட்டைக் கொண்டு பிச்சையெடுப்பவர்; உன் மாமனை கண்ணன் வெண்ணெயைத் திருடி உண்டவன்;உங்களுக்குத் தங்கி வாழும் இடம் சுடுகாடு; உனக்கு முகம் யானைமுகம்; உன் தம்பி முருகனின் பெயர் கடம்பன் என்ற கீழ்ச்சாதிப் பெயர்; உன் அன்னையோ நீலி (நீல நிறத்தை உடையவள்; கரியவள்);

உனக்குப் பெருவயிருக உள்ளது. (மகோதரம் என்ற நோய் உண்டு.) 14

487. *கட்டுச்சோறு பறிபோனது!*

சீராடை அற்ற வைரவன் வாகனம் சேரவந்து,
பாராரு நான்முகன் வாகனந் தன்னைமுன் பற்றிக்கௌவி,
நாரா யணனுயர் வாகன மாயிற்று; நம்மைமுகம்
பாரான்;மை வாகனன் வந்தே வயிற்றினில் பற்றினனே.

நல்ல ஆடையில்லாத கோவணத்தை அணிந்த வைரவரின் வாகனமாகிய நாய், என் அருகில் வந்து நான்முகனின் வாகனமாகிய அன்னத்தை (உணவை), நான் எடுப்பதற்கு முன் தான் எடுத்து வாயில் வைத்துக்கொண்டு திருமாலின் வாகனமாகிய கருடனைப் போன்று ஓடிவிட்டது. என்னிடத்தில் அன்பில்லாதவனுன ஆட்டினை வாகனமாகக் கொண்ட தீக்கடவுள் என் வயிற்றில் வந்து பற்றித் தங்கினுன். 15

488. *கோதண்டராமன் மீது பாடிய பாடல்*

பாண்டியன் மாலைகண் டாய்மக ளேகினைப் பார்த்தவர்க்கு
வேண்டிய இன்பம் மிகவருமே?வெண்ணெ யேதிருடித்
தாண்டிக் குதித்தநல் கோதண்ட ராமன் தடவரைமேல்
ஆண்டி இருப்பிடம் தாத னிருப்பிடம் ஆனபின்னே.

வெண்ணெயைத் திருடி உண்டு துள்ளி விளையாடிய சிறந்த கோதண்டராமன் என்ற பெயரையுடைய வள்ளலின் அகன்ற எல்லைக்குள் வாழும் பெண்ணே! சிவபெருமான் தங்கும் கயிலை மலையைப்போன்ற தனங்கள், திருமாலின் இருப்பிடமான ஆல இலை போன்ற வயிற்றினிடமாக ஆனபின், உன்னைக் கண்டவர்க்கு விரும்பிய இன்பம் உண்டாகுமோ? பாண்டியனின் மாலையைப் போன்று வேம்பாக நீ இருப்பாய் என்பதை உணர்வாயாக!

விளக்கம்: மலைபோன்று விளங்கும் முலைகள் திருமாலின் இருப்பிடமான ஆலிலை போன்ற வயிறுவரை தொங்கி விட்டன. எனவே, நீ இனிய தோற்றத்தை உடையவளாக இல்லை; வேம்பாக (வெறுக்கும்படியாகத்) தோன்றுவாய். **ஆண்டியிருப்பிடம் :** ஆண்டியான சிவபெருமானின் மலை. **தாதன் இருப்பிடம் :** திருமாலின் இருப்பிடமான ஆல இலை. 16

489. என்னைக் காத்தல் அரிதன்று

சோனையும் காத்து,நல் லானையும்
 காத்துத், துரோபதைதன்
தானையும் காத்து,அடைந் தானையும்
 காத்துத், தடத்தகலி
மானையுங் காத்துஅனு மானையும்
 காத்து, மடுவில்விழும்
ஆனையும் காத்தவ னேஎனைக்
 காப்பது அரிதல்லவே.

கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து மழையையும் தடுத்து நிறுத்தி, அவ்வாறு செய்ததால் பசுக்களையும் காத்து, துரியோதனன் முதலியவர் திரௌபதியின் ஆடையை உரித்து அவமானம் செய்ய முனைந்தபோது அவளது ஆடையைக் காப்பாற்றி, தன்னை அடைக்கலமாக அடைந்த வீடணனையும் காப்பாற்றி, காட்டில் சென்றபோது அகலிகையையும் காத்து, அனுமானையும் காத்து, முதலை வாயில் அகப்பட்டு நீர்நிலையில் விழுந்த கசேந்திரன் என்ற யானையையும் காத்தவனே! நீ என்னைக் காப்பது அரிதன்று.

விளக்கம்: சோனை-மழை. தானை-ஆடை. அகலிமான்—அகலிகை. அனுமானைக் காத்தலாவது அவனுக்குச் சிரஞ்சீவிப் பட்டத்தை அளித்தது. 17

490. பொய் உரைக்குமிடமும் உரைக்கா இடமும்

பொய்யருக்குப் பொய்யுரைத்தால் வெற்றியாம்;
 அவருக்குப் பொய்யா காத
மெய்யருக்குப் பொய்யுரைத்தால் தேய்பிறைபோல்
 தவம்குறையும் மிடிஉண் டாகும்;
துய்யதாய் தந்தையர்க்குப் பொய்யுரைத்தால்
 வறுமைபிணி தொலையா; என்றும்
உய்யவருள் தேசிகற்குப் பொய்யுரைத்தால்
 நரகமது உண்மை தானே.

பொய் கூறுவாரிடம் பொய் சொன்னால் வெற்றி உண்டாகும்; பொய்யை விரும்பாதவரிடம் பொய் சொன்னால் பிறைச்

சந்திரன் தேய்வது போன்று புண்ணியப் பயன் தேய்ந்து போகும். அதுவன்றி வறுமையும் உண்டாகும். தூய பெற்ருேரிடம் பொய் சொன்ஞல் வறுமையும் நோயும் எப்போதும் நீங்கா. உய்வதற்கு நல்ல வழியைக் காட்டும் ஆசானிடம் பொய் சொன்ஞல் நரகம் கிடைக்கும். 18

491. தன் மனமே ஏடாகக் கற்ருர்!

(கவிஞர் மறைந்தபோது அவருடைய மாணக்கர் பாடியது.)

இன்னம் கலைமகள் கைமீதில் புத்தகம் ஏந்தி, அந்தப்
பொன்னம் பலந்தனில் புக்கிருந் தாள்என்ன புண்ணியமோ!
கன்னன் களந்தைக் கவிவீர ராகவன் கச்சியிலே
தன்னெஞ்சம் ஏடெனக் கற்ருன் ஒருமுத் தமிழையுமே.

கலைமகள் தம் கையில் புத்தகத்தை எடுத்துக் கொண்டு பொன்னம்பலத்தில் சென்று தங்கினுள். ஏதோ நல்வினைப் பயனுகக் கர்ணனைப் போன்ற வள்ளலான களந்தை என்னும் ஊரில் தோன்றிய கவி வீரராகவ முதலியார் காஞ்சிபுரத்தில் தங்கி மூன்று தமிழையும் தனது மனமே ஏடாகக் கொண்டு கற்ருர். 19

492. வாது செய்யப் பொன்னுட்டுக்குப் போனுயோ?

(இதுவும் அவர் இறந்தபோது மாணவர் ஒருவர் பாடியது.)

முன்னுட்டுத் தவமுனியுஞ் சேடனும்வான்
மீகனுமுன் முன்னில் லாமல்
தென்னுட்டு மலையிடத்தும் பாரிடத்தும்
புற்றிடத்தும் சென்று சேர்ந்தார்;
இந்நாட்டுப் புலவருனக் கெதிரிலையே;
கவிவீர ராக வா, நீ
பொன்னுட்டுப் புலவருடன் வாதுசெய்யப்
போயினையோ, புகலு வாயே?

வீரராகவர் என்னும் கவியே! நீ தோன்றுவதற்கு முன்னர்த் தமிழ் நாட்டு முனிவரான அகத்திய முனிவரும், ஆதி சேடனும் வான்மீகி முனிவரும் முறையே தென் நாட்டில் உள்ள பொதிய மலையிடத்திலும், பூமிக்குக் கீழேயும், புற்றிலும் சென்று தங்கினுர்கள்; எனவே நினக்கு எதிராக இருக்கக்

கூடிய புலவர் இவ்வுலகத்தில் இல்லையே! ஆதலால், தேவ உலகத்தில் புலவர் எனப்படும் தேவர்களுடன் சொற்போர் நிகழ்த்தி அவர்களை வெல்லச் சென்றாயோ? சொல்வாயாக! 20

22. பொற்களந்தைப் படிக்காசுத்தம்பிரான் பாடல்கள்

493. என்ன பிறவி எடுத்தோம்!

அடகெடுவாய், பலதொழிலும் இருக்கக் கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோம் அறிவில் லாமல்;
திடமுளமோ கனம்ஆடக் கழைக்கூத் தாடச்
செப்பிடுவித் தைகளாடத் தெரிந்தோ மில்லை;
தடமுலைவே சையராகப் பிறந்தோ மில்லை;
சனியான தமிழைவிட்டுத் தைய லார்தம்
இடமிருந்து தூதுசென்று பிழைத்தோ மில்லை;
என்னசென்மம் எடுத்துலகில் இரக்கின் றோமே!

மனமே! கெடுவாயாக! பிழைப்பதற்குரிய பல தொழில்கள் உலகத்தில் இருக்கும்போது அவற்றின் மேன்மையை அறிந்து கொள்ளாமல் கல்வியானது உயர்ந்தது என்று உணர்ந்து அதைக் கற்றோம்; மயங்கச் செய்யும் தொழிலைக் கற்கவில்லை; கம்பத்தின்மேல் நின்று ஆடும் தொழிலைக் கற்கவில்லை; கண் கட்டு தொழில் முதலியவற்றைக் கற்கவில்லை. இவையே யன்றி, பருத்த முலைகளையுடைய கணிகைப் பெண்களாகப் பிறந்தோமோ எனின் இல்லை; சனியைப்போன்று துன்பத்தையச் செய்யும் தமிழ்க் கல்வியைக் கைவிட்டுப் பெண் களுக்குத் தூதாகச் சென்று உயிர் வாழவில்லை; எத்தகைய பிறவியை எடுத்து உலகத்தில் பிச்சையேற்றுத் திரிகின்றோம்! 1

494. பசுவைத் தருவாயாக!

பெற்றான் ஒருபிள்ளை என்மனை
யாட்டி;அப் பிள்ளைக்குப்பால்
பற்றாது;கஞ்சி குடிக்கும்
தரமல்ல;பால்இரக்கச்

சிற்றூணும் இல்லைஇவ் வெல்லா
வருத்தமும் தீரஒரு
கற்று தரவல்லை யோவல்ல
மாநகர்க் காளத்தியே.

'வல்லம்' என்னும் ஊரில் வாழும் 'காளத்தி' என்ற வள்ளலே! என் மனைவி ஒரு குழந்தையைப் பெற்றாள். அந்தக் குழந்தைக்குத் தாய்ப்பால் போதுமானதாக இல்லை. அது கஞ்சி குடிக்கும் படியான நிலைமையிலும் இல்லை. பாலைப் பிச்சையெடுத்து வருவதற்கு வேலைக்காரரும் இல்லை. இந்த வருத்தங்கள் எல்லாம் நீங்குமாறு கன்றுடன் கூடிய பசு ஒன்றை எனக்குத் தர வல்லாயோ! 2

495. பசுவைப் பெற்றுப் பாடியது!

வழிமேல் விழிவைத்து, வாடாமல்
என்மனை யாளும்மற்றோர்
பழியாமல் பிள்ளையும் பால்என்று
அழாமல் பகிர்எனும்சொல்
மொழியாமல், என்னை வரவிட்ட
பாவி முசித்துச்சதை
கழியாமல் ஆஅளித் தாய்,வல்ல
மாநகர்க் காளத்தியே.

வல்ல நகரில் வாழும் காளத்தி வள்ளலே! நான் திரும்பி வரும் வழியைப் பார்த்த வண்ணம் உள்ள என் மனைவி மனம் தளராமலும், மற்றவர் பழிச்சொல்லைச் சொல்லாமலும், குழந்தை பாலைக் கேட்டு அழாமலும், என்னை இங்கே அனுப்பிய என் மனைவி உள்ளம் திடுக்கிடும் சொல்லைச் சொல்லாமலும், அவள் உடல் வருந்தி மெலிவு அடையாமலும் எனக்குப் பசுவைத் தந்தாய்.

396. சீதக்காதியின் கொடைச் சிறப்பு! 3

ஓர்தட்டி லேபொன்னும், ஓர்தட்டி
லேநெல்லும் ஒக்கவிற்கும்
கார்தட் டியபஞ்ச காலத்தி
லேதங்கள் காரியப்பேர்

ஆர்தட்டி னும்தட்டு வாராம
லேஅன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக்
காதிவ ரோதயனே.

தராசின் ஒரு தட்டிலே பொன்னையும் மற்றத் தட்டிலே நெல்லையும் வைத்துச் சமமாக விற்குமளவிற்கு மழைபெய்யாத பஞ்சம் உண்டான காலத்தில், தங்கள் காரியத்திலே கருத்துடைய எவர் தடை செய்தாலும் உணவிடும் அறத்திற்குத் தடை ஏற்படாமல் 'நான் இருக்கின்றேன்; வறியவரே, அஞ்ச வேண்டா' எனத் தன் மார்பைத் தட்டித் தைரியச் சொற்களை உரைத்து அறம் செய்தவன் திருமாலைப் போன்ற சீதக்காதி என்பவனாவான்.

497. புல்லரின் பொருள் போகுமிடம் 4

நேசித்து வந்த கவிராசர்
தங்கட்கு நித்தம்நித்தம்
பூசிக்கும் நின்கைப் பொருளொன்று
மேமற்றப் புல்லர்பொருள்
வேசிக்கும், சந்து நடப்பார்க்கும்,
வேசிக்கு வேலைசெய்யும்
தாசிக்கும் ஆகும்கண் டாய்,சீதக்
காதி தயாநிதியே.

சீதக்காதி என்னும் கருணைக் களஞ்சியமே! நாள்தோறும், நின் கைப்பொருள் ஒன்று மட்டுமே நின்னை விரும்பி வந்த புலவர்களுக்கு உதவும்; மற்ற அற்பருடைய பொருள் தாசிக்கும், அத்தாசியிடத்துத் தூது போவோருக்கும், வேசிக்கு வேலை செய்யும் வேலைக்காரிக்கும் பயன்படும். 5

498. செம்பொன்னை அளிப்பவன் சீதக்காதி

ஈயாத புல்லர் இருந்தென்ன,
போயென்ன? எட்டிமரம்
காயா திருந்தென்ன, காய்த்துப்
பலனென்ன? கைவிரித்துப்

போயா சகமென் றுரைப்போர்க்குச்
செம்பொன் பிடிபிடியாய்
ஓயாமல் ஈபவன் வேள்சீதக்
காதி ஒருவனுமே.

மற்றவர்க்குப் பொருளை மனம் உவந்து ஈயாத கீழ்மக்கள் இருந்தாலும் இறந்தாலும் பயன் ஒன்றும் இல்லை. எட்டி மரமானது காயைத் தந்தாலும் தாராது போனாலும் அஃது ஒருவருக்கும் பயன் அளிக்காது; கையை விரித்துப் பிச்சை எனக் கேட்பவர்க்குச் செம்பொன் காசுகளைப் பிடிப்பிடியாக இடை விடாமல் அளிப்பவன் அழகால் மன்மதனைப் போன்ற சீதக்காதி ஒருவன் மட்டுமே ஆகும். 6

499. சீதக்காதியின் கரங்கள் கொடையால் சிவந்தன!

காய்ந்து சிவந்தது சூரிய
காந்தி; கலவியிலே
தோய்ந்து சிவந்தது மின்னார்
நெடுங்கண்கள்; தொல்பலநூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர்
நெஞ்சம்; அனுதினமும்
ஈந்து சிவந்தது மால்சீதக்
காதி இருகரமே.

சூரியகாந்தி என்னும் மலர் வெய்யிலில் காய்ந்து சிவந்த நிறத்தை அடைந்தது; பெண்களின் நீண்ட கண்கள் தம் காதலருடன் சேர்ந்து இன்பம் அனுபவித்ததால் சிவந்த நிறத்தை அடைந்தன; கவிஞரின் உள்ளங்கள் பழைமை யுடைய நூல்களை ஆராய்ந்து கற்றதால் செம்மை அடைந்தன; சீதக்காதியின் இருகைகளும் வந்து இரந்தவர்க்குக் கொடுத் துக் கொடுத்துச் சிவந்தன. 7

500. புலவரை ஒட்டாண்டியாக்கினான் சீதக்காதி!

தேட்டாளன் காயல் துரைசீதக்
காதி சிறந்தவச்ர
நாட்டான் புகழ்க்கம்பம் நாட்டிவைத்
தான்; தமிழ் நாவலரை

ஓட்டாண்டி யாக்கி, அவர்கள்தம்
    வாயில் ஒருபிடிமண்
போட்டான்; அவனும் ஒளித்தான்
    சமாதிக் குழிபுகுந்தே.

பொருள் சேர்க்கும் வல்லமை உடைய காயல் பட்டினத்தின் தலைவனாகிய சீதக்காதி வச்சிர நாட்டை உடையவன்; புகழாகிய தூணை நாட்டி வைத்தவன்; தமிழ் வல்ல புலவர்களை ஓட்டை எடுத்து உண்ணும் யாசகர்களாகச் செய்து அவர்களது வாயில் ஒருபிடி மண்ணை இட்டு, தானும் கல்லறைக் குழியில் புகுந்து மறைந்து கொண்டான். (இறந்தான்.) 8

501. *கள்வர் என் பொருளைக் கவர்ந்து சென்றனரே!*

(தாசி ஒருத்தி சீதக்காதியை நோக்கிக் கூறுவதாகப் பாடியது)

தினம்கொடுக்குங் கொடையானே, தென்காயல்
    பதியானே, சீதக் காதி
இனம்கொடுத்த உடைமையல்ல, தாய்கொடுத்த,
    உடைமையல்ல, எளியாள் ஆசை
மனம்கொடுத்தும் இதழ்கொடுத்தும் அபிதானந்
    தனைக்கொடுத்தும் மருவி ரண்டு
தனம்கொடுத்த உடைமையெல்லாம் கள்ளர்கையில்
    பறிகொடுத்துத் தவிக்கின் றேனே.

நாள்தோறும் இரந்து வந்தவர்க்குக் கொடுக்கும் இயல்பையுடையவனே! காயல் பட்டினத்துக்குத் தலைவனே! என்னிடம் உள்ள பொருள் என் சுற்றத்தார் கொடுத்த பொருள் அன்று. என் தாய் எனக்குத் தந்ததுமன்று. எளியவளாகிய நான் வேட்கையுடைய மனத்தைக் கொடுத்தும் உதட்டைத் தந்தும் இரகசிய இடத்தை (அல்குலை)த் தந்தும் இரண்டு முலைகளைக் கொடுத்தும் சேர்த்த செல்வமாகும். அதைக் கள்வர் கவர்ந்து சென்றதால் வருந்துகின்றேன். 9

502. *தலைவியின் ஆற்றாமை!*

தரைகண்ட மட்டும் படர்ந்துஅண்ட கோளமும் தாவியெங்கும்
உரைகண்ட கீர்த்தி பெறும்சீதக் காதி உலகினில்வெண்
திரைகண் டெழுங்கடல் மீதேதன் வங்கத்தைச் செல்லவிட்டுக்
கரைகண் டவனினம் காணுன் என் ஆசைக் கடற்கரையே.

இவ்வுலகம் எங்கும் போய் அண்டத்தின் உச்சிக்கு அப்பாலும் சென்று, எவ்விடத்தும் புகழ்ந்து பேசக்கூடிய புகழையுடைய சீதக்காதி, இவ்வுலகத்தில் வெண்மையான அலைகள் தோன்றும் கடலின்மேல், தன் கலத்தைச் செலுத்தி அதைக் கரை கண்டவனாக இருந்தும், என் காதற் கடற்கரையை அறியாதவனாக உள்ளான். 10

503. எனக்கு ஒன்றும் தரவில்லையே!

வேல்கொடுத் தாய்,திருச் செந்தூரர்க்கு அம்மியின் மீது வைக்கக்
கால்கொடுத் தாய்,நின் மணவாள னுக்குக் கவுணியர்க்குப்
பால்கொடுத் தாய், மதவேளுக்கு மூவர் பயப்படச்செங்.
கோல்கொடுத் தாய்,அன்னை யே,யெனக் கேதும் கொடுத்திலையே.

பார்வதியம்மையே! திருச்செந்தூரில் வீற்றிருக்கும் முருகப் பெருமானுக்கு வேலைத் தந்தாய். நின் கணவரான சிவபெருமானுக்குத் திருமணத்தின்போது அம்மியின்மேல் எடுத்து வைப்பதற்கு நின் திருவடியைக் கொடுத்தாய். திருஞான சம்பந்தப் பெருமானுக்கு ஞானப்பாலை அளித்தாய்! மன்மதனுக்குத் திரிமூர்த்திகளும் அஞ்சுமாறு நீதி செலுத்தச் செங்கோல் தந்தாய்! ஆனால், எனக்கு ஒன்றும் தரவில்லையே! 11

504. இயலாத செயல்கள்

பொல்லாத மூர்க்கருக்கு எத்தனை தான்புத்தி போதிக்கினும்
நல்லார்க்குஉண் டான குணம்வரு மோ, நடு ராத்திரியில்
சல்லாப் புடவை குளிர்தாங்குமோ, நடுச்சந்தையினில்
செல்லாப் பணம்செல்லு மோதில்லை வாழுஞ் சிதம்பரனே?

தில்லையில் நடனம் செய்யும் பெருமானே! நள்ளிரவில் மென்மையான ஆடையானது குளிர்காற்றைத் தடுக்கும் வன்மையுடையதோ? சந்தையின் நடுவில் செல்லாத காசைச் செல்ல வைக்க இயலுமோ? தீயவர்க்கு எவ்வளவு அறிவுரை சொன்னாலும் நல்லவர்க்கு இயல்பாக உள்ள குணங்கள் உண்டாகுமோ? உண்டாகா. 12

505. இரகுநாத வள்ளலின் இயல்பு

மூவேந்தும் அற்றுச் சங்கமும் போய்ப்பதின் மூன்றெடிரு
கோவேந் தரும்அற்று மற்றொரு வேந்தன் கொடையும்அற்றுப்

பாவேந்தர் காற்றில் இலவம்பஞ் சாகப் பறக்கையிலே
தேவேந்திர தாருவொத் தாய்ரகு நாத சயதுங்கனே.

இரகுநாத சேதுபதி என்னும் வள்ளலே! தமிழ் நாட்டின் சேர சோழ பாண்டியர் ஆகிய மூவரும் ஒழிந்துபோய், அம்மன்னர் களின் காலத்திலிருந்த தமிழ்ச் சங்கங்களும் அழிந்து, முதல் எழு வள்ளல்கள் இடையெழு வள்ளல்கள் கடையெழு வள்ளல்கள் ஆகியவர்களும் இல்லாமல் போய், வேறு ஓர் அரசரும் ஓர் அறத்தையும் செய்யாமல் இருக்கும் காலத்தில், புலவர்கள் புயலில் அகப்பட்ட இலவம் பஞ்சைப்போல அலைகின்ற காலத்தில், நீ கற்பக மரத்தைப்போன்று இரந்த வர்க்கு வேண்டியவற்றை யெல்லாம் கொடுப்பவனாக உள்ளாய்! 13

506 முருகா! இன்னும் நீ சிறு குழந்தையா?

முன்னம்நின் அன்னை முலையூட்டி மையிட்டு மூக்குச்சிந்திக்
கன்னமும் கிள்ளிய நாளல்ல வே, என்னைக் காப்பதற்கே
அன்னமும் மஞ்சையும் போலிரு பெண்கொண்ட ஆண்பிள்ளைநீ
இன்னமும் சின்னவன் தானோசெந் தூரில் இருப்பவனே?

திருச்செந்தூர் முருகப் பெருமானே! நீ குழந்தையாக இருந்த போது நின் தாய் நினக்குப்பாலையூட்டி, விழிகளுக்கு மையினை எழுதி, மூக்கைத் துடைத்து, காதினைக்கிள்ளிய இளம்பருவம் இப்போது உனக்கு இல்லையே! அன்னத்தையும் மயிலையும் போன்ற தெய்வயானை வள்ளியம்மை என்ற இருபெண்களை மணந்த ஆண்மகன் நீ! என்னைக் காத்தற்கு இயலாத இளையவனோ? இல்லையே! என்னைக் காத்தருள்வாய்! 14

507. சர்க்கரைக் கட்டியைத் தரிசித்தேன்!

முற்கரை அப்பரை ஏறவிட் டாட்கொள் முதல்வர்உள்ளக்
கற்கரைக் கும்படி போதித் திடும்கரு ணைக்கடலைச்
சிற்பரைக் குட்டியை எங்கெங்கும் தித்திக்கும் செழுகரும்பின்
சர்க்கரைக் கட்டியைக் கண்டேன்செந் தூரெனும் தானத்திலே

முற்காலத்தில் சமணர் கல்லுடன் பிணைத்துக் கடலில் விட்ட திருநாவுக்கரசு நாயனாரை ஆட்கொண்ட சிவபெருமானின் உள்ளம் கரையுமாறு பிரணவ மந்திரத்தை உபதேசிக்கும்

கருணை வடிவமான முருகனை, ஞான பராசக்தியின் மகனை, எங்கும் இனிக்கும் கரும்பினின்று எடுத்த சர்க்கரைக் கட்டி போன்றவனைத் திருச்செந்தூரில் நான் கண்டு வணங்கினேன். 15

508. *வள்ளிக் கணவனின் இயல்பு!*

சின்னஞ் சிறுபிள்ளை செங்கோட்டுப் பிள்ளை சிவந்தபிள்ளை.
பொன்னன் மணிப்பிள்ளை பூலோக மெங்கும் புகழும்பிள்ளை
சொன்னெஞ் சுழல்கின்ற சூரனை வென்றசொக் கேசர்பிள்ளை
வன்னக் கிளிப்பிள்ளை செந்தில் குறத்திக்கு மாப்பிள்ளையே.

மிக இளமையுடையவன், திருச்செங்கோட்டில் வீற்றிருக்கும் குமரன் செந்நிறத்தைக் கொண்டவன், பொன்னாலும் மணியாலும் ஆன அணிகளை அணிந்த சிறுவன், இவ்வுலகத்தில் உள்ளவர் அனைவரும் புகழும் பெருமான், சொல்லும் மனமும் தடுமாறுகின்ற சூரபன்மனை வெற்றி கண்ட சொக்கலிங்கப் பெருமானின் பிள்ளை, நல்ல நிறத்தையுடைய கிளிப்பிள்ளையைப் போன்ற செந்தூரிலிருக்கும் வள்ளி நாயகிக்குக் கணவனாவான். 16

509. *படிக்காசு எனும் பைங்கிளியைக் கூட்டில் அடைத்து வைத்தாய்!*

(திருமலை நாயக்கன் படிக்காசுப் புலவரைச் சிறையில் அடைத்தபோது பாடியது)

நாட்டில் சிறந்த திருமலையா, துங்க நாகரிகா,
காட்டில் வனத்தில் திரிந்துழலாமல் கலைத்தமிழ்தேர்
பாட்டில் சிறந்த படிக்காச னென்னுமோர் பைங்கிளியைக்
கூட்டில் அடைத்துவைத் தாய், இரைதாவென்று கூப்பிடுதே.

நாட்டில் உயர்ந்த புகழை உடைய திருமலை நாயக்கனே! சிறந்த பண்பாட்டை உடையவனே! தமிழ் நூல்களில் தேர்ச்சி பெற்றுக் கவிபாடுவதில் வல்ல படிக்காசுப் புலவராகிய பசுங்கிளியை, காட்டிலும் சோலையிலும் திரிந்து வருந்தாமல் சிறையில் அடைத்து வைத்தாய். அக்கிளி இப்போதுஉணவு வேண்டும் என்று கேட்கின்றது! 17

510. சீதக்காதி மண்ணுக்குள் மறைந்தான்!

விண்ணுக்கும் மண்ணுக்கும் பேராய் விளங்குதே வேந்தர் என்னும்
கண்ணுக் கினிய துரைசீதக் காதி கமலநிகர்
தண்ணுக் கிசைந்தஃவதனசந்த் ரோதய சாமிஇந்த
மண்ணுக்குள் ளேயொளித் தான்புல வோர்முகம் வாடியதே.

வள்ளல் சீதக்காதி, மேல் உலகத்திலும் இந்த வுலகத்திலும் புகழுடன் விளங்கும் தேவேந்திரன் என்று சொல்லத்தக்க இனிய தோற்றத்தை யுடையவர்; தாமரை போன்ற குளிர்ந்த முகத்தால் நிலவொளி வீசும் இயல்பினர்; அத்தகையவர் இன்று மண்ணுக்குள் மறைந்தார்; ஆதலால் புலவர்கள் முகம் வாட்டம் அடைந்தது. 18

511. புலவர்களுக்குப் பிழைப்பில்லை!

மறந்தா கிலும்அரைக் காசும் கொடாமட மாந்தர்மண்மேல்
இறந்தாவ தென்ன, இருந்தாவதென்ன, இறந்துவிண்போய்ச்
சிறந்தாலும் காயல்துரைசீதக் காதி திரும்பிவந்து
பிறந்தா லொழியப் புலவோர் தமக்குப் பிழைப்பில்லையே.

தம்மிடம் இரப்பவர்க்கு மறந்துங்கூட அரைக்காசும் தராத மூட மனிதர்கள் இவ்வுலகத்தில் வாழ்ந்தால் பயன் என்ன? இறப்பதால் என்ன பயன்? இறந்து விண்ணுலகத்தை அடைந்து அங்கு ஆட்சிசெய்யும் காயல்பட்டினத் தலைவனை சீதக்காதி திரும்பவும் இவ்வுலகில் வந்தால் ஒழியப் புலவர்களுக்குப் பிழைக்க வழியில்லை! 19

512. தமிழ்ச்சுவை அறியாதவரைப் பாடுவேனோ?

கல்லடிக்கும் உளிஇரண்டு காதடிக்குள்
அடிப்பதெனக் கவிதை கேட்டுப்
பல்லடிக்கக் கிடுகிடெனப் பறையடிக்கும்
நெஞ்சர்தமைப் பாடு வேனோ,
வில்லடிக்கும் பிரம்படிக்கும் கல்லடிக்கும்
விரும்பிநின்ற மெய்யன் ஈன்ற
செல்லடிக்கும் தடவரையில் சேறடிக்க
அலையடிக்கும் செந்திலானே.

அருச்சுனன் வில்லினல் அடித்ததையும் பாண்டிய அரசன் பிரம்பால் அடித்ததையும் சாக்கிய நாயனர் கல்லால் அடித்ததையும் விருப்பத்துடன் ஏற்றுக் கொண்ட சிவபெருமான் பெற்றெடுத்த மேகம் தவழும் திருச்செந்தூரில் வீற்றிருக்கும் முருகனே! கவிஞரின் பாடலைக் கேட்டுக் கல்லைப் பிளக்கும் உளியானது இரண்டு காதுகளில் அடிப்பதைப் போன்று எண்ணிப் பல் கிடுகிடு என்று ஒன்றுடன் ஒன்று அடிபட நடுங்கும் நெஞ்சத்தை யுடையவரைப் பாடுவேனே? (முருகனையே பாடுவேன் என்பது கருத்து.) 20

513. *தேசமெங்கும் புலவரெனத் திரியலாம்!*

குட்டுதற்கோ பிள்ளைப்பாண் டியன்ஈங் கில்லை;
  குறும்பியள வாக்காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி இல்லை;
  இரண்டொன்ருய் முடிந்துதலை இறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை;
  விளையாட்டாய்க் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைக ளுண்டு;
  தேசம்எங்கும் புலவரெனத் திரிய லாமே.

கேட்ட வினவுக்கு விடை சொல்லாதவரைத் தலையில் குட்டிக் கண்டிப்பதற்குப் பிள்ளைப் பாண்டியன் என்பவன் இப்போது இவ்வுலகத்தில் இல்லை; குற்றத்துடன் கூடிய புலமையுடைய புலவரின் காதைத் தோண்டிக் குறும்பி வரை குடைந்து கைக்கு எட்டிய அளவில் அறுப்பதற்கு வில்லிபுத்தூரார் இப்போதில்லை; குற்றமுடைய இருவரின் தலைகளை ஒன்ருக முடிந்து அவர்களைப் பலியிடுவதற்கு ஒட்டக்கூத்தர் என்னும் புலவர் இப்போதில்லை; வேடிக்கையாகச் செய்யுட்களை விரைவாகப் பிழையுடன் பாடிவரின் அதை ஏற்று ஏமாறுவதற்குக் கல்வியறிவற்றவர் பலர் இருக்கின்றனர். ஆதலால் தக்க முறையில் கல்வியைக் கல்லாதவர்கள் தங்களைக் கற்றவர்கள் என்று சொல்லிக் கொண்டு திரியலாம். 21

23. சொக்கநாதப்புலவர் பாடல்கள்

514. கறுப்பன் என்ற வள்ளலின் இயல்பு

சீர்கறுத்த முகில்கரத்தான் கத்தூரி பூபனருள் சேயா என்றும்
ஓர்கறுப்பும் இல்லாத தொண்டைவள நாட்டிருக்கும் உசித வேளே,
ஆர்கறுப்பன் என்று சொல்லி அழைத்தாலும் நாம்உன்னை அன்பினுலே
பேர்கறுப்பன் நிறம்சிவப்பன் கீர்த்தியினுல் வெளுப்பன்எனப் பேசுவோமே.

கரிய மேகத்தைப் போன்ற கொடைத் தன்மையுடைய கையனுன கஸ்தூரி என்பவர் பெற்ற மகனே! எக்காலத்தும் ஒரு குற்றமும் இல்லாத தொண்டை நாட்டில் வாழும் உயர்ந்த வேளாளரின் தலைவனே! உன்னைக் கறுப்பன் என்ற பெயரால் எவர் அழைத்தாலும், உன்னிடம் நான் கொண்ட அன்பால் 'பெயரளவில் கறுப்பன்; நிறத்தால் சிவந்தவன்; புகழால் வெண்மையன்' என்று சொல்லுவேன். 1

515. கறுப்ப! நின்னை வாழ்த்தினும்!

பிள்ளைவய தினில்கல்வி கற்ருேம்,பின்பு
பெரியநர வாகனமும் பெற்ருேம், பூமி
உள்ளளவும் கீர்த்திநிலை நிறுத்திக் கொண்டோம்,
ஒருகுறைய மில்லைஇனி உரைப்பக் கேண்மோ
தெள்ளிலகு சிதம்பரத்தைத் தெரிசித் தோம்பின்
சேல்கருங்கண் தவளநகைத் தெய்வ யானை
வள்ளிபுணர் சிவப்பனையும் துதித்தோம் எங்கள்
மாவைவளர் கறுப்பஉன்னை வாழ்த்தி னேமே!

இளம்பருவத்தில் கல்வியைக் கற்ருேம்; பின்னர் அக்கல்வியின் பயனுக மனிதர் எடுத்துச் செல்லும் பல்லக்கிலும் ஏறப் பெற்ருேம்; உலகம் நிலைத்திருக்கும் வரையும் புகழையும் உண்டாக்கிக் கொண்டோம், எனவே எனக்குக் குறை ஒன்றுமில்லை; இனி யான் சொல்வதைக் கேட்பாயாக! விளங்கும் சிதம்பரத்தைக் கண்டு நடராசரை வணங்கினேம். சேல் மீன் போன்ற பெரிய விழியையும் வெண்மையான பற்களையும் கொண்ட தெய்வயானை யம்மையையும் வள்ளியம்மையையும் மணந்து கொண்ட செந்நிறம் வாய்ந்த முருகனை வணங்கி

றேம்; மாவைப்பதியில் வாழும் கறுப்பவள்ளலே, உன்னை வாழ்த்திறேம். 2

குறிப்பு : மாவை-திருவாமாத்தூர்.

516. கறுப்பண்ணன் பல்லக்கைச் சுமந்தான்

எல்லப்பன் அம்மையப்பன் தருதிருவேங்
கடராம னெழில் சீராமன்
வல்லக்கொண் டமனுடனே மாவைவெங்க
டேசனைப்போல் வரிசை தந்தான்;
செல்லத்தம் பியருடனே மாவையில்வாழ்
கறுப்பண்ணன் தெருவீதிக்கே
பல்லக்குத் தான்சுமந்தா னதுநமக்கோர்
ஆயிரம்பொன் பரிசுதானே.

எல்லப்பன் ஆன அம்மையப்பன் என்பார் பெற்றெடுத்த திருவேங்கடராமனையும் அழகுடைய சீராமனையும் வல்லக்கொண்டமனையும் மாவையில் வாழும் வேங்கடேசனையும் போலப் பரிசுகளை எனக்குத் தந்தான். தன் உடன் பிறந்தவருடன் மாவையில் வாழும் கறுப்பண்ணன் பரிசளித்ததுடன் அமையவில்லை; அகன்ற தெருவுக்கு வரும் வரையிலும் நான் ஏறிய பல்லக்கையும் சுமந்து வந்தான். அவ்வாறு அவன் செய்தது நமக்கு ஆயிரம் பொன்னைப் பரிசாகத் தந்தது போலாகும். 3

517. பிள்ளையைக் கொன்ற குற்றம் மறையுமோ?

மெய்யிலே ஒருபாதி உமைக்குஅளித்த செங்காட்டு
விமல னாரே,
மையிலே தோய்ந்தவிழிச் சந்தனமான் தலைக்கறியை
வளமாய் ஆவின்
நெய்யிலே தான்சமைத்துக் கொடுத்திருந்தும் படைத்திருந்தும்
நீர்தாம் இன்று
கையிலே மழுவெடுத்தால் பொய்யாமோ பிள்ளைகொன்ற
களவு தானே!

உடலில் ஒரு பாதியை உமையம்மைக்குக் கொடுத்த செங்காட்டில் உள்ள விமலனுரே, மை பூசப் பெற்ற விழிகளையுடைய ‘சந்தன நங்கை’ என்பவள், பிள்ளையினது தலைக் கறியை நெய்யில் கலந்து சமைத்துக் கொடுத்திருந்தும், அதனை இலையிலிட்டிருந்தும் அவ்வளவுடன் திருப்தி அடையாமல்மழு என்ற ஆயுதத்தை இன்று நீ கையில் வைத்திருந்தால், சிறுத் தொண்டரைக் கொண்டு அவர் மகனைக் கொல்வித்த வஞ்சகம் மறைந்து விடுமோ? 4

குறிப்பு:- சந்தன நங்கை-சிறுத் தொண்டரின் மனைவி.

518. கப்பரையும் கையுமாகப் புறப்பட்ட காட்சி, நல்ல காட்சி!

துப்பரையு மரகதத்தின் கொழுந்தரையும்
 ஒன்ருகத் துலங்கு மெய்யா,
செப்பரிய புலியதனைத் தரிக்குமுத்த
 ராபதியிற் சிவனே நீதான்
அப்பரையும் விழுங்கியொரு பிள்ளையும் றுதின்
 ஆற்ருமல் ஐயோ, இன்னும்
கப்பரையும் கையுமாய்ப் புறப்பட்டாய்,
 நல்லதிருக் காட்சி தானே

பவழமும் மரகதத்தின் ஒளியும் என்னும் இரண்டும் ஒன்ருகத் திகழும் வடிவத்தையுடையவனே! புலியின் தோலை ஆடையாக உடுத்த உத்ராபதியில் வீற்றிருக்கும் சிவனே! நீவிர் திருநாவுக்கரசரையும் விழுங்கினீர்; சிறுத்தொண்டர் பிள்ளைக் கறியையும் உண்டீர்; எனினும் பசி நீங்காமல் அனைவரும் கண்டு இரங்குமாறு பிச்சைப் பாத்திரத்துடன் வெளியே புறப்பட்டீர்! இஃது அழகான காட்சிதான்! 5

519. எவ்வாறு உன்னைத் தெய்வம் எனக் கூறுவது?

அடிபட்டீர் கல்லாலும் எறிபட்டீர்,
 அத்தனைக்கும் ஆளாய் அந்தப்
படிபட்டும் போதாமல் உதைபட்டீர்,
 இப்படியும் படுவார் உண்டோ?

முடிபட்ட சடையுடையீர் கழுக்குன்றீர்,
முதல்கோணல் முட்டக் கோணல்;
இடிபட்டும் பொறுத்திருந்தீர், சிவசிவா,
உமைத்தெய்வ மென்ன லாமே?

திருக்கழுக்குன்றச் சிவபெருமானே! பாண்டியன் கைப்பிரம்பால் அடிக்கப் பெற்றீர்; சாக்கிய நாயனாரின் கைக்கல்லால் தாக்கப்பட்டீர்; அவ்வளவு துன்பத்துக்காளானீர். அது போதாமல், கண்ணப்பநாயனர் காலாலும் உதைக்கப்பட்டீர். இத்தகைய துன்பங்களை எல்லாம் அடைபவர் இவ்வுலகத்தில் உண்டோ? கிரீடத்தின் வடிவத்தில் அமைந்த சடையை உடையவரே, முதலில் ஏற்படும் கோணல் முழுவதும் கோணலாக அமைந்து விட்டது! இவ்வூரில் இந்திரன் செய்யும் இடிய பிடேகத்தையும் பொறுத்துக்கொண்டீர். சிவசிவா, உன்னைக் கடவுள் என எங்ஙனம் உரைப்பது? 6

520. *மலர் எறிந்தவனை எரித்ததேன்?*

செல்லாரும் பொழில்புடைசூழ் புலியூர்அம்
பலவாண தேவா உம்மைக்
கல்லாலும் வில்லாலும் செருப்பாலும்
பிரம்பாலும் கடிந்து சாடும்
எல்லாரும் நல்லவர்என் றெண்ணியருள்
ஈந்ததென்ன இகழ்ச்சி யொன்றும்
சொல்லாமல் மலரால்விட் டெறிந்தவனைக்
காய்ந்ததென்ன சொல்லு வீரே?

மேகத்தை அளாவி வளர்ந்துள்ள சோலைகள் சூழ்ந்திருக்கும் சிதம்பரத்தில் நடனம் செய்யும் பெருமானே! உம்மைக் கல்லினாலும் செருப்பினாலும் பிரம்பினாலும் தாக்கிய அனைவரும் நல்லவர் என எண்ணி அருள் செய்த காரணம் என்ன? இகழ்ச்சி ஏதும் உரைக்காமல் நின்மேல் மலரினை எறிந்தவனை (மலராகிய அம்புகளை எறிந்த மன்மதனை) சினந்து நெற்றிக் கண்ணால் எரித்தது ஏன்? சொல்வீராக. 7

521. *உன்னிடத்தில் நியாயம் இல்லையே!*

நல்லாளை யிடமருவுந் தியாகையா,
வுமதிடத்தினி யாயங் காணோம்;

கல்லாலே எறிந்தோர்க்கும் செருப்படியால்
உதைத்தோர்க்கும் கடிந்து போரில்
வில்லாலே யடித்தோர்க்கும் கொடுத்தீரே
அல்லாமல், விழிநீர் சோர
எல்லாமுன் செயலென்றே யிருப்போருக்
கியாதேனு மீகி லீரே.

பார்வதியை இடப்பக்கத்தில் கொண்ட சிவபெருமானே! உம்மிடத்தில் நியாயம் இருப்பதாகத் தெரியவில்லை! ஏன் எனின், கல்லை எறிந்த சாக்கிய நாயனுருக்கும், செருப்பை அணிந்த காலை உன்மேல் வைத்த கண்ணப்பருக்கும், சினம் கொண்டு போரில் உம்மைத் தாக்கிய அருச்சுனனுக்கும் அருள் செய்தீரே அல்லாமல், எல்லாம் உம்மாலே ஆவதாகும் என்று எண்ணியிருப்பவர்களுக்கு ஒன்றையும் அளிப்ப தில்லை. 8

522. வெண்காட்டு இறைவன்மீது சிலேடை

பண்காணும் தமிழ்ப்புலவீர் இனத்தோடே
இனம்சேரும் பரிசே போலத்
தண்காவி மலர்த்தடம்சூழ்க் காவிரிநாட்டு
ஒருபுதுமை சாற்றக் கேளீர்.
கண்காண நரையான்மேல் வெண்காடை
வீற்றிருக்கக் கண்டோம் அந்த
வெண் காடை இடப்புறத்தே பச்சையன்னம்
கலந்திருக்கும் விதம்கண் டோமே.

பண்ணின் தன்மையை அறிந்த புலவர்களே! 'இனம் இனத்துடன் சேரும்' என்பதைப் போன்று, குவளை மலர்கள் மலர்ந்துள்ள பொய்கள் சூழ்ந்திருக்கப் பெற்ற சோழ நாட்டில் உள்ள புதுமை ஒன்றைக் கேட்பீராக! கண்ணால் காணுமாறு மீன் குத்திப் பறவையின் மேல் (வெள்ளைக்காளையின்மேல்) வெண்மையான காகம் வீற்றிருப்பதைக் கண்டோம் (வெண் காட்டில் சிவபெருமான் வீற்றிருப்பதைக் கண்டோம்); அந்த வெண்மையான காடைக்கு இடப்பக்கத்தில் (வெண் காட்டுப் பெருமானின் இடப்பக்கத்தில்) பச்சை நிறத்தையுடைய அன்னம் இருக்கும் முறையைப் பார்த்தோம் (பச்சை

நிறத்தையுடைய அன்னத்தைப் போன்ற பார்வதி அம்மை பொருந்தியிருக்கும் முறையைப் பார்த்தோம்.)

விளக்கம்: நரையான்-மீன் குத்திப் பறவை; வெண்மையான எருது. வெண்காடை-வெண்மை நிறத்தையுடைய காடை; வெண் + காடு + ஐ-திருவெண் காட்டில் உள்ள சிவபெருமான் பச்சை அன்னம்—பச்சை நிறத்தையுடைய அன்னப் பறவை; பச்சை நிறத்தையுடைய அன்னம் போன்ற பார்வதி அம்மை. 9

523. *திப்பையராயன் வாக்கினால் என்னைக் குபேரனாக்கினான்!*

இந்திரன் கலையாய் என்மருங் கிருந்தான்
அக்கினி உதரம்விட் டகலான்;
இமயன் எனைக்கருதா னரனெனக் கருதி;
நிருதிவந் தென்னைஎன் செய்வான்?
அந்தமாம் வருணன்இரு கண்விட் டகலான்
அகத்தினின் மக்களும் யானும்
அநிலம தாகும் அமுதினைக் கொள்வோம்
யார்எதிர் எமக் குளார்உலகில்
சந்ததமிந்த வரிசையைப் பெற்றுத் தரித்திர
ராசனை வணங்கித்
தலைசெயும் எம்மை நிலைசெய் சற்கீர்த்தி
சாளுவ கோப்பையன் உதவும்
மந்தர புயத்தான் திப்பைய ராயன்
மகிழ்வொடு விலையிலா அன்னேன்
வாக்கினால் குபேர னாக்கினான் அவனே
மாசில் ஈசான பூபதியே.

தன் உடலில் ஆயிரம் கண்களையுடைய இந்திரன் என் உடலில் ஆடையாகி இருந்தான்; (என் உடையில் பல துளைகள் இருந்தன); அக்கினித் தேவன் என் வயிற்றை விட்டுப் போவதில்லை (பசித்தீ எப்போதும் இருந்தது); இயமன் என்னைச் சிவன் என்று எண்ணி என்னிடம் வரமாட்டான்; (ஏழை என எண்ணினான்) நிருதி என்னும் திக்குப் பாலகன் என்னிடம் வந்து என்ன செய்வான்? அழகிய நீர்க்கடவுள் என் கண்களை

விட்டு நீங்குவதில்லை; (கண்கள் நீர் சிந்தியபடியிருக்கும்); வீட்டில் யானும் என் மக்களும் காற்றுகிய உணவை உண்போம்; எனவே எங்களுக்கு ஒப்பாக எவர் உண்டு? எக்காலத்திலும் இத்தகைய சிறப்பை அடைந்து வறுமை என்ற தலைவனை வழிப்பட்டு, வணங்கும் எங்களை, புகழையுடைய சாளுவ கோப்பையன் என்பானின் மகனான திப்பையராயன் மகிழ்ச்சியுடன் தன் சொல்லால் (ஆணையால்) என்னை வட கிழக்குத் திக்கிற்குத் தலைவனான செல்வக் கடவுளாக (குபேரனாகச்) செய்தான்; அவ்வாறு செய்த அவன் குறைவற்ற வட கிழக்குத் திக்கிற்குத் தலைவனான கடவுளை (ஈசான பூபதி)ப் போன்றவனாவான்.

விளக்கம்:- புலவர் உடுத்தியிருந்த ஆடை கிழிந்து கந்தையாக இருந்தது. ஆதலால் 'இந்திரன் கலையாய் என் மருங்கு இருந்தான்' என்றார். இந்திரனுக்கு ஆயிரம் கண்கள் இருப்பது போல் புலவரின் ஆடையில் பல துவாரங்கள் இருந்தன என்பது கருத்து. அரன்-வறியவன்; சிவபெருமான். அட்ட திக்குப் பாலகர்களும் தம் வசமிருப்பதால் தமக்கு 'நிகர் ஒருவருமில்லை' என்றார். இதில் அட்டதிக்குப் பாலகர் அமைந்த முறை: இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் 10

524. மடலேறுவேன்!

வண்டுகிண்டிய தொங்கலோதி குணக்கெழுந்திடும் அனிலமோ!
மன்னுநூபுர மோபயோதர மூருவானவர் கணிகையோ!
அண்டர்பூபதி வனிதையோ, முகம் அமுதவாயிதழ் தும்பியோ!
அரிகையாயுத மோபிறந்திட மன்னமென்ன வுலாவுவீர்
கொண்டநண்பு முதாரமுந்தவ ருதகோகன கானனன்
குத்திபல்லவ ராயமேருகு ணளதிப்பையன் வரையின்மேல்
துண்டவெண்பிறை வேணிகைச்சிலை நாணெனப்புக லாவிடின்
தூரமோவதி பாரமோவொரு சேரனுக்கொரு தொங்கலே.

திப்பையராயன், எவரிடத்தும் நட்பும் அருளும் குறைவின்றிக் காட்டுபவன்: தாமரைபோன்ற முகத்தையுடையவன்; 'குத்தி பல்லவராயன்' என அழைக்கப்படுபவன்; மேருமலை போன்ற உயர்ந்த குணங்களையுடையவன். அத்தகைய வள்ளலின் குன்றில் அன்னப் பறவை போலநடக்கும் பெண்ணே! வண்டு கள்நெருங்கி மொய்க்கும் மலர் மாலையுடைய உன் கூந்தல் கிழக்குத் திக்கில் தோன்றி வரும் காற்றோ (மேகமோ?),

உன்னுடைய தனங்கள் நிலைபெற்ற சிலம்போ (மலையோ), நின் துடை அரம்பையோ (வாழைத் தண்டோ?) முகம் தேவர்க்குத் தலைவனான இந்திரனின் மனைவி சசியோ (திங்களோ); அமுதம் ஊறும் உதடானது வண்டோ (தேனோ); நீ தோன்றிய இடம் திருமாலின் கையில் உள்ள ஆழிதானோ (பாற்கடலோ); பிறைச் சந்திரனைச் சடையில் சூடிய சிவனது வில்லின் நாணான வாசுகி எனச் சொல்லாது போனால் (வா, சுகி எனக் கூறுவிடில்) சேர மன்னனின் மாலை யான பனம்பூ (பனையின் மடங்களால் செய்யப்பட்ட குதிரை) எனக்குத் தொலைவானதாகவும் இல்லை; மிக்க பாரமும் ஆவதில்லை; (அதாவது மடல் ஏறுவேன்.)

விளக்கம்:- ஒருவன் விரும்பிய பெண்ணை மணக்க இயலாத போது பனங்கருக்கால் செய்த குதிரையில் ஏறுதல் 'மடல் ஏறுதல்' எனப்படும். தான் விரும்பிய பெண்ணின் படத்தை அதன் மேல் வைப்பதும் வழக்கம். பனங்கருக்கு அவனது உடலைக் கீற அதனால் உடலினின்று வெண் நீர் தோன்றின், அவன் விரும்பிய பெண்ணை மணம் செய்விப்பது வழக்கம். 11

525. *மானிடரை விதி விடுமோ?*

சந்திரனுக் குடலூனந் தனதனுக்கோர்
கண்ணூனந் தருவி னீழல்
இந்திரற்கோ பகக்குறியா மிகயமனுக்ரோர்
புழுக்காலா மிரவி யீன்ற
மைந்தனுக்கோ கான்முடமாம் வனசனுக்கோர்
தலைகுறையாம் வாழ்வ ரானால்
பந்தமுள மானிடரை விதிவிடுமோ
வாலவாய்ப் பதியு ளானே.

மதுரையில் கோயில் கொண்டிருப்பவனே! சந்திரனின் உடலில் களங்கமும் கூனலும் உள்ளன. குபேரனுக்கு ஒருகண் குருடாகும். கற்பக மரத்தின் நிழலில் உள்ள இந்திரனுக்கு உடல் முழுவதும் பெண் குறிகள் இருக்கின்றன. இமயனுக்குக் காலில் புழுக்கள் உள்ளன. சூரியன் பெற்ற மகனான சனிக்கு ஒரு கால் ஊனமாகும். நான்முகனுக்கு ஒருதலை கிள்ளப் பட்டுள்ளது. தேவர்களின் வரலாறேஇதுவானால், பாசத்தால் கட்டுப்பட்ட மனிதரை ஊழ்வினை விட்டு விடுதல் முடியுமா? 12

526. தட்டானைச் சாடினேன்!

அட்டாவதானமுந் தொல்காப் பியமு மகப்பொருளும்
தொட்டாதி தொட்டப்ர பந்தமெல்லாம் நம்மைச் சொல்லச்
சொல்லி
ஒட்டாரங் கட்டிநம் பல்லக்குக் கொம்பை யொடித்தெறிந்த
தட்டாரப் பைய லரிகர புத்ரனைச் சண்ணினனே.

தட்டான் அரிகரபுத்திரன், எட்டுச் செயலை ஒரு நேரத்தில் செய்யும் ஆற்றலும் தொல்காப்பியம் என்னும் இலக்கணமும் அகப்பொருள் இலக்கணமும் ஆகிய இவை முதலானவையும் இலக்கியங்களும் என்னைப் பயிற்றுமாறு வற்புறுத்திப் பிடிவாதம் செய்தான். என் பல்லக்கின் முனையைப் பிடுங்கி எறிந்தான். இங்ஙனம் செய்த அத்தட்டானுன அரிகரபுத்திரனை நான் சாடினேன். 13

527. மணிகண்டனைக் கண்டால் முக்தி அடைவாய்!

பண்டனைப் பண்டனை யோதுபெம் மானைப் பனிவரைக்கோ
தண்டனைத் தண்டனை செய்யுமுத் தண்டனைத் தண்டனைமு
தண்டனை யண்டர் தொழுந்திரு மாற்பே றமர்ந்தமணி
கண்டனைக் கண்டனை யாயினெஞ் சேமுத்தி கண்டனையே.

நெஞ்சமே! பழமையானவனை, பண்ணுடன் கூடிய பாடலைப் பாடும் கடவுளை, மேருமலையாகிய வில்லை வளைத்தவனை, தீயவை செய்தவரைத் தண்டிக்கும் சினமுடையவனை, மழுவாயுதமுடையவனை, உலகங்களுக்குத்தலைவனை, திருமால் பேறு என்னும் தலத்தில் வீற்றிருப்பவனை, நீலமணி போலும் கழுத்தை உடைய சிவபெருமானைக் கண்டாயானுல் வீட்டை அடைந்தவன் ஆவாய். 14

528. கூத்தனின் புகழ்!

துளைபடு மாமர மோரேழு மெய்தவன் தூதுகவி
உளைபடு வாரிதி யொன்றே கடந்த தொளிர்தரள
வளைபடு வாவி மணவைமன் கூத்தன் வகுத்தகவி
தளைபடு காலுட னேகட லேழையுந் தாண்டினதே.

அம்பால் எய்தற்குரிய ஏழு பெரிய மராமரத்தையும் ஓர் அம்பால் துளைத்து வீழ்த்திய இராமபிரானின் தூதன் என்னும் குரங்கு, சேற்றுடன் கூடிய கடலை மட்டுமே தாண்டியது.

விளங்கும் முத்துக்களை ஈனும் சங்குகள் உள்ள நீர்நிலை சூழ்ந்த மணவைப் பதிக்குத் தலைவனுன ஒட்டக் கூத்தன் செய்த கவியானது, தளைபொருந்திய காலுடன் (தளை என்ற செய்யுள் உறுப்பு அமைந்த அடியுடன்) ஏழு கடலையும் தாண்டிச் சென்றது (புகழ் பரவியது).

விளக்கம்:. கவி-முதலாவது குரங்கு; இரண்டாவது 'செய்யுள்' தளைபடுகால்-விலங்கு பூட்டிய கால்; தளை என்ற செய்யுள் உறுப்பமைந்த அடி. 15

529. ஆதிசேடனுக்குக் காது படைக்கப்படாததற்குக் காரணம்!

துங்கா தராதல மெங்கு மொருமிக்கத் துய்த்தநர
சிங்கா தராதரந் தானறிந் தேநல்கச் சேலம்வந்த
கங்கா தராநின் புகழ்கேட் டசைப்பன் கிரீடமென்றே
வெங்கா தராவுக்குச் செய்தா னிலைமலர் வேதத்தனே.

மேலானவனே! உலகம் எல்லாவற்றையும் ஒரு சேரக் கொண்ட நரசிங்கத்தைப் போன்றவனே! புலவர்களின் தகுதியை அறிந்து அதற்கு ஏற்பப் பரிசு அளிக்கச் சேலத்தின் கண் தோன்றிய கங்காதரன் என்னும் பெயரையுடைய வள்ளலே! உன் பெருமையைச் செவியேற்றுத் தன் முடியை அசைப்பான் என எண்ணித் தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகன் ஆதிசேடனுக்குச் செவிகளைப் படைக்கவில்லை. 16

530. வடமலையப்ப வள்ளலே, நீ இவ்வுலக இந்திரன்;

புரசை வடமலை யப்பாவி ருட்கயம் பூண்டுகொண்டு,
முரசை வடமலை யப்பாலுஞ் செல்ல முழக்கஞ்செய்தோய்;
சிரசை வடமலை யப்பாம்பில் வைத்துத் திருக்கண்வளர்
இரசை வடமலை யப்பாவிப் பாருக்கோ ரிந்திரனே.

கழுத்தில் கட்டப்பட்ட கயிறு அசையுமாறு இருள் போன்ற யானைமேல் ஏறிச் சென்று இமயமலைக்கு அப்பாலும் ஒலியானது கேட்கக் கொடை முரசை ஒலிக்கச் செய்தவனே! தலையினை ஆலிலையிலும் பாற்கடலிலுள்ள பாம்பாகிய ஆதி சேடன் மேலும் வைத்து உறங்கும் திருமாலைப் போன்ற 'இரசை' என்ற ஊரில் வாழும் வடமலையப்ப வள்ளலே! நீ இந்த வுலகத்துக்கு ஒப்பற்ற இந்திரனாக விளங்குகின்றாய். 17

531. *சவரிப்பெருமாள் என நினைந்துருக இவளுக்குக் கற்பித்தவர் யார்?*

சோதிச் சவரி விழிக்கோ கரவில்லை தூயகுழல்
கோதிச் சவரி முடிக்கறி யாள்கொண்ட கோலமென்னே?
நீதிச் சவரிப் பெருமாளென் றோதி நினைந்துருகப்
போதிச் சவரி வட்கா ராரறிகிலன் பூங்கொடியே.

பூங்கொடியைப் போன்றவளே! ஆராய்ந்து படைக்கப்பெற்ற சிவந்த வரிகளையுடைய கண்களில் வஞ்சம் இல்லை. புனிதமான தலையை வாரிச் சவரி மயிர் வைத்து முடிப்பதை அறியாமட் டாள். இப்படியிருக்க இவள் அணிந்த வேடம் யாதாயிற்று இன்று இவள் 'சவரி நாராயணனே' என்று துதித்து நினைத்து உருகுமாறு இவளுக்குக் கற்பித்தவர் யாரோ? அறியேன்.

குறிப்பு:- சோதிச் சவரி விழிக்கு—நான்முகன் ஆராய்ந்து படைத்த கண்களுக்கு, சோதிச்ச—'சோதித்த' என்பதன் விகாரம். 18

532. *போர்த் தொழில் இது தானே?*

சொல்லுக் கினிய கழுக்குன் றரே, யுமைச் சொல்ல வென்றால்
அல்லற் பிழைப்புப் பிழைத்துவிட்டீர் முப்பு ராதியர்மேல்
வில்லைக் குனித் தெய்ய மாட்டாம னீரந்த வேளைதனில்
பல்லைத் திறந்து விட்டீ ரிதுவோநும் படைத்தொழிலே.

பேசுவதற்கு இனியவரான திருக்கழுக்குன்றத்தில் உள்ள பெருமானே! உம்மைப் பற்றிச் சொல்வதானால் நீர் அல்லல் பிழைப்பை நடத்திவிட்டீர். முப்புரங்களையுடைய அசுரர் மீது வில்லை வளைத்து எய்ய முடியாமல் அந்த சமயத்தில் பல்லைக் காட்டிச் சிரித்தீர். போர் செய்வதில் உன் ஆற்றல் இது தானே? 19

533. *மயிலை சிங்காரவேலன் துணை!*

துயிலையி லேயிடர் துன்னையி லேதெவ்வர் சூழையிலே,
பயிலையி லேயிருட் பாதியி லேபசும் பாலனத்தை
அயிலையி லேவய தாகையி லேநமக் கார்துணைதான்
மயிலையி லேவளர் சிங்கார வேலர் மயிலையிலே.

மயிலையும் வேலையும் உடைய முருகப்பெருமானின் திருமயிலை என்னும் பதியில், உறங்கும்போதும், துன்பம் வரும்போதும் பகைவர் நம்மை எதிர்க்கும்போதும், நள்ளிரவில் வழி நடந்து செல்லும்போதும், பசும்பால் ஊற்றிய சோற்றை நோய் வந்தபோது உண்ணும்போதும், முதிய பருவம் வரும்போதும் அம் முருகனைத் தவிர நமக்கு எவர் துணையாவார்? ஒருவருமில்லை!

விளக்கம்:- (1) மயிலையிலே—மயில் + அயிலே; மயிலையும் கூர்மையான வேலையும்; அயில்—வேல் ( ) மயிலையிலே—மயிலை என்னும் தலத்திலே. 20

634. தன் கண் குருடு என்பதைத் திருமால் மெய்ப்பித்தான்!

காப்பிட்ட பிள்ளைக் கறிக்கிச்சைப் பட்டுவை யைக்கரைமேல்
மாப்பிட்டு வந்த மயிலேச னேமலை யானநின்னைக்
கூப்பிட்டு நின்று குனிந்தொரு கோலக்கொம் பால்தடவிப்
பூப்பட்ட கண்ணிச் சயமாக்கினான் மைப்புயல் வண்ணனே.

கையில் காப்பை அணிந்த சிறுத்தொண்டரின் பிள்ளைக் கறிக்கு ஆசை கொண்டவனும், வையை ஆற்றின் ஓரத்தில் கரையை அடைப்பதற்காக வந்து மாவினால் செய்த பிட்டை விரும்பியவனுமான மயிலாப்பூரில் வாழ்பவனே! தீ மலையாக நின்ற உன்னைக் கரிய மேகம் போன்ற நிறத்தையுடைய திருமால் அழைத்தபடியே நின்று குனிந்து தன் பன்றிக் கொம்பால் தடவித் தனக்குப் பூ விழுந்த கண் உள்ளதை நிருபித்துவிட்டான. (கண் தெரியாமையால் தடவினான்.)

விளக்கம் : பூப்பட்ட கண்ணிச்சயமாக்கினான்—பூப்பட்ட கண் நிச்சயம் ஆக்கினான்; தனக்குப் பூப்பட்ட கண் உண்டு என்பதை நிரூபித்தான். பூப்பட்டகண்—குருடு. இதற்கு மற்றொரு பொருள் தாமரை போன்ற கண்ணன் என்பதாகும். 21

535. திருவெண்காடனை வாழ்த்துங்கள்!

உம்பரை வாழ்வித்த நஞ்சங்கண் டோமொண் புரமெரித்த
அம்பரை யேற்றிய சூலங்கண் டோமரு ளுங்குறைவில்
நம்பரை பாகமுங் கண்டோ மவர்திரு நாமஞ்சொல்லா
வம்பரை யுங்கண்ணில் கண்டோம் வெண்காடனை வாழ்த்துங்களே.

தேவர்கள் பிழைத்தற் பொருட்டாக உண்ட நஞ்சினைச் சிவபெருமானின் கழுத்தில் கண்டோம். திரிபுரங்களை எரித்தற்கு உதவிய நாராயணனை உய்வித்தற்காக அந்தகாசுரனை வென்ற சூலத்தை அவரது கையில் பார்த்தோம்; அருள் பொழியும் பராசக்தியை அவரது இடப்பாகத்தில் இருக்கக் கண்டோம்; அவர் பெயரைச் சொல்லாமல் காலத்தைக் கடத்துபவர் அழிவதையும் நேரிலே பார்த்தோம்; ஆகையால், திருவெண் காட்டில் விற்றிருக்கும் இறைவனை வணங்குங்கள்! 22

556. என் பகையை அறுக்கலாகாதா?

போதா சிவகுருநாதா கலவைப் புழுகொடுசவ்
வாதார்ந்த கொங்கைக் குறமாது வள்ளிக்கு வாய்த்திடுமின்
பாதா ருகற்செற்ற வேல்விடுத் தாலென் பகையையறுக்
காதா மனமிரங் காதா சிவகிரிக் காங்கேயனே.

'சிவகிரி' என்ற தலத்தில் விற்றிருக்கும் கங்கையில் தோன்றிய முருகனே! அறிவு வடிவமானவனே! சிவனுக்குக் குருவாகியவனே! மணம் பொருந்திய சந்தனக் குழம்பு, புனுகு, சவ்வாது ஆகியவை பூசப்பெற்ற தனங்களையுடைய குறவர் குலப் பெண்ணான வள்ளிக்கு இன்பத்தை அளிப்பவனே! தாரகாசுரனை அழித்த வேற்படையைச் செலுத்தினால் எனது பிறவிப் பகையை அழிக்காதா? நின் மனம் என்னிடம் இரங்காதா? 23

557. சிவபெருமானுக்கு உகந்த தலம் திருக்கழுக்குன்றமே!

மாடேறு தாளு மதியேறு சென்னியு மாமலரோன்
ஓடேறு கையு முடையார் தமக்கிட மோங்கியநெல்
சூடேறு சங்கஞ் சொரிமுத்தை முட்டையென் றேகமலக்
காடேறு மன்னஞ் சிறகா லணைக்குங் கழுக்குன்றமே.

வெள்ளைக் காளையின்மேல் ஏறிவரும் திருவடியும், பிறைச் சந்திரன் அணியப்பெற்ற திருமுடியும், நான்முகனது தலையோடு ஏந்திய திருக்கையும் உடைய சிவனுக்குத் தலமாவது, நெற்குவியலின்மேல் ஏறிய சங்குகள் சொரிகின்ற முத்துக்களைத் தம் முட்டைகள் எனக் கருதித் தாமரையில்

வாழும் அன்னப் பறவைகள் அவற்றைத் தம் சிறகுகளால் தழுவுவதற்கு இடமான திருக்கழுக்குன்றமே ஆகும். 24

538. சிவந்த மேனியரின் தலம் கழுக்குன்றமே!

நெருப்புக் கறுக்கச் சிவப்புள்ள மேனியர் நீள்கனகப்
பொருப்புக் குனித்துப் புரமெரித் தார்க்கிடம் போர்க்களிற்றின்
மருப்புக்கண் முத்தும் வளர்கழை முத்தும் வளைக்கண்முத்தும்
கருப்புக்கண் முத்து மதிக்குலங் காட்டுங் கழுக்குன்றமே.

சிவந்த தீயும் கருமையுடையது என்று சொல்லுமாறு மிகச் சிவந்த மேனியையுடையவரும் பெரிய பொன்மயமான மேருமலையை வில்லாக வளைத்துத் திரிபுரத்தை எரித்தவருமாகிய சிவபெருமானுக்குத் தலமாக விளங்குவது, போர் செய்வதில் வல்ல யானைத் தந்தங்களில்விளையும் முத்துக்களும், மூங்கிலில் விளைந்த முத்துக்களும், கரும்பில் தோன்றும் முத்துக்களும் பல சந்திரன்கள் ஒன்ருகக் கூடியிருப்பது போல விளங்கும் திருக்கழுக்குன்றமே யாகும். 25

539 நல்லார்க்கும் அல்லார்க்கும் செய்த உதவியின் இயல்பு

ஆலங் கிடக்கு மனத்தார்க் கொருநன்றி யம்பிலிட்ட
கோலங் கிடக்குங் கண்டாய் குறையாத குணமுடைய
சீலங் கிடக்கு மனத்தார்க் கொருநன்றி செய்யில்வெகு
காலங் கிடக்குங் கண்டாய் வணிகா செந்தில் காத்தவனே.

திருச்செந்தூரில் வீற்றிருப்பவனே! நஞ்சின் தன்மையுடைய நெஞ்சுடையவர்களுக்குச் செய்த ஒரு நன்மையானது நீரில் எழுதப்பட்ட எழுத்தினைப் போன்று விரைவில் அழிந்து போகும்; நிரம்பிய நற்குணம் வாய்க்கப் பெற்ற நெஞ்சுடையவர்க்கு ஒரு நன்மை செய்தால் அது நெடுங்காலம் நிலைத்து நிற்கும். 26

540. பிச்சை எடுப்பது ஏன்?

சிந்தா மணிசங்கு தேனுமலர்த் தாமரைசீர்
ஐந்தருவு நின்னவே யாயிருக்க—வந்தேதான்
கச்சவிட மேயுண்ட கண்டா கடைதோறும்
பிச்சையிரந் துண்டதென்ன பேசு.

தெய்வத் தன்மையுடைய சிந்தாமணியும், சங்கநிதியும், பதுமநிதியும், சிறப்புடைய ஐந்து தேவமரங்களும் நினக்கு உரிமையுடையனவாக உள்ளன; அங்ஙனம் இருக்கவும், அவற்றைவிட்டுக் கசப்பான நஞ்சையுண்ட கழுத்தையுடையவனே! வீடுகள்தோறும் பிச்சை ஏற்று உண்பதற்குக் காரணம் யாது எனச் செல்வாயாக!

விளக்கம் : சீர் ஐந்தரு—அரிச்சந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம். 27

541. *மங்கைக்கு ஆதரவானவர் யார்?*

அந்திக்கார் வந்துமய லாற்றுவா ரன்னையிடு
வந்திக்கார் வந்து வழக்குரைப்பார்—நந்திக்கார்
கச்சிக்கா ளத்திக்கார் காதலுரைப் பார்கனகக்
கச்சிக்கா ளத்திக்கார் காண்.

சங்குகளும் கரும்புகளும் நிறைந்த காஞ்சிப்பதியில் வாழும் 'காளத்தி' என்னும் வள்ளலுக்கு இந்தப் பெண்ணின் வேட்கையை எவர் போய்ச் சொல்வார்கள்? மாலைப்போதில் யார் வந்து இவள் மயக்கத்தைப் போக்குவார்கள்? அவளுடைய அன்னை பேசும் இகழ்ச்சிச் சொல்லுக்கு எதிராக எவர் வந்து வாதிடுவார்கள்? பொன்னிறக் கச்சை அணிந்த நங்கையை ஆள்வதற்குக் கதியாக உள்ளவர் எவர்?

விளக்கம் : அந்திக்கார்—அந்திக்கு + ஆர். வந்திக்கு—நிந்தனைக்கு. நந்திக்கார்—நந்து + இக்கு + ஆர்; நந்து—சங்கு; இக்கு—கரும்பு; ஆர்—பொருந்திய. கச்சிக்காளத்திக்கார்—கச்சிக்கு + ஆள + திக்கு + ஆர். கச்சிக்கு—கச்சை அணிந்த பெண்ணுக்கு. 28

542. *கரும்பும் கசக்கும்!*

இருப்போ மென்றலு மிராதுள மானேயிக்
கருப்போ மென்றலுங் கசக்கும்—விருப்பாரும்
காசண் முகனைக் கடல்புடைசூழ் கோவளம்வாழ்
மாசண் முகனை மறந்து.

பெண்ணே! அனைவரும் விரும்புகின்ற மணிகள் பொருந்திய ஒலிக்கும் கடல் சூழப்பெற்ற கோவளத்தில் வாழ்கின்ற

முருகனை மறந்திருப்போம் என்றாலும் என்மனம் அங்ஙனம் இருப்பதில்லை; இந்தக் கரும்போ மென்று தின்றாலும் கசக்கும். (தலைவன் தன்னைச் சேரப் பெறாமையால் கரும்பு கசக்கின்றது என்றாள்.) 29

513. இடைக்குக் கேடு செய்தவர் யார்?

பாரவிள நீர்சுமக்கப் பண்டே பொறாதவிடை
ஆர வடஞ்சுமக்க வாற்றுமோ—நேரே
புடைக்கனத்த கொங்கையின்மேற் பூங்களபஞ் சாத்தி
இடைக்கனத்தம் வைத்தவரா ரின்று.

கனமான இளநீர்க்காய் போன்ற தனங்களைச் சுமப்பதற்கு முன்னரே வலிமை இல்லாத இடை முத்துமாலையைத் தாங்குமா? ஒன்றுக்கு ஒன்று நேராக எழுந்து பக்கங்களிலே பருத்துள்ள அத்தனங்களில் மீது சந்தனக் குழம்பைப் பூசி அதனால் இடைக்குக் கேட்டை உண்டாக்கியவர் யார்? 30

514. சீரகத்தைத் தருவீர் செட்டியாரே!

வெங்காயஞ் சுக்கானால் வெந்தயத்தா லாவதென்ன
இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை—மங்காத
சீரகத்தைத் தந்தீரேல் தேடேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டியா ரே.

முதற்பொருள் : 'திருவேரகம்' என்ற ஊரில் உள்ள செட்டியாரே, வெங்காயம் சுக்காக ஆகிவிடுமானால் வெந்தயம் என்னும் பொருளால் விளைவதென்ன? இந்தச் சரக்கை எவர் சுமந்திருப்பார்? மங்காத சீரகத்தைத் தந்தால் நான் பெருங்காயத்தைத் தேடமாட்டேன்.

இரண்டாம் பொருள் : திருவேரகம் என்னும் தலத்தில் வீற்றிருக்கும் முருகப் பெருமானே! கொடிய உடல் சுக்குப் போலத் தவத்தால் வற்றுமானால், கொடிய வினையால் வரக் கூடியது யாது? இந்தவுடலை இங்கு யார் சுமந்திருப்பார்? அழிவற்ற மோட்சத்தைத் தந்தால் இனிப் பலவாகிய உடலைத் தேடிப் பிறக்க விரும்பமாட்டேன்.

விளக்கம் : வெங்காயம்—வெங்காயம் என்ற பொருள்; கொடிய உடல். வெந்தயம்—ஓர் உணவுப்பொருள்; கொடிய

விஜ; பஸ்பம் செய்யப்பட்ட அயச்செந்தூரம். சரக்கு—பொருள்; உடல். சீரகம்—சீர்+அகம்; சிறந்த இடமாகிய மோட்சம்; சீரகம் என்ற உணவுப்பொருள். பெருங்காயம்—ஓர் உணவுப் பொருள்; பெரிய பலவுடல்கள். ஏரகத்துச் செட்டியார் ஏரகம்—சுவாமிமலை; செட்டியார்—முருகன்; வாணிகம் செய்பவர். 31

545. தலைவனுக்கு இனி என்னுடல் என்னாகும்?

முன்னே யிரண்டுமுலை முற்றியபின் னாலுமுலை
எந்நேர மென்மதலைக் கெட்டுமுலை—எந்நாளும்
பைந்நாகஞ் சூழ்மதுரைப் பாணாநின் பாகனுக்கிங்
கென்னாக மென்னா மினி.

எப்போதும் படத்தையுடைய பாம்பால் சூழப் பெற்றிருக்கும் மதுரையில் வீற்றிருக்கும் பாணனே! நான் இளமைப் பருவத்தைப் பெற்றிருந்த போது இரண்டு தனங்கள் இருந்தன; பின் முதுமை அடைந்தேன். இப்போது அவை நான்காயின; (தொங்குகின்றன.) எப்போதும் என் குழந்தைக்கு எட்டுத்தனங்களாயின (எட்டுகின்றமுலை.) இனி என் தலைவனை உன் நண்பனுக்கு என் உடல் எவ்வாறு பயன் படக் கூடியதாகும்? 32

546. பழையவரால் என்ன பயன்?

(படுக்கையில் இருந்தபோது தலைவனுக்குப் பரத்தை மீது எண்ணம் சென்றது. அதனை அறிந்து தலைவி யுரைத்தது.)

நங்கை யொருத்தியையும் நாமிருவர் மூவரையும்
பொங்கு மமளி பொறுக்குமோ—சங்கம்
குழைய வரால்பாயும் குருநாடர் கோவே,
பழையவரால் என்ன பயன்.

சங்குகள் வருந்துமாறு வரால் மீன்கள் பாயும் நீர் வளத்தை உடைய குருநாட்டவர்க்குத் தலைவனே! (நின் நெஞ்சில் இப்போது இருக்கும்) என் தங்கை ஒருத்தியுடன் (பரத்தையுடன்) நாம் இருவர் ஆகிய மூவரையும் இந்த படுக்கை சுமக்க வல்லதோ? பழகிய என்னைப் போன்றவரால் உனக்கு என்ன பயன்?

விளக்கம்: என் தங்கையாகிய புதியவருடன் சேர்ந்திரு; நான் பழையவள்; என்னுல் பயனில்லே என்பது கருத்து. 33

547. கரிகாலன் நாட்டில் புதுமை!

ஒருவர்க் கிடமா யுகந்திருந்த பாயல்
இருவர்க் கிடமாய தென்னே—மருவலரைக்
கன்ருட்ட வின்ருட்டுங் கண்டன் கரிகாலன்
தன்ருட் டிதுபுதுமை தான்.

விரும்பிய ஒரு பெண்ணுக்கு மட்டும் இடமாக இருந்த இந்தப் படுக்கை இரு பெண்களுக்கு இடம் தந்தது எப்படி? பகைவரைக் கொன்று கல்லே நாட்டுவதற்காக வில்லே நிறுத்திப் பயன்படுத்தும் கரிகாற் சோழனின் நாட்டில் இதுவும் ஒரு புதுமையே ஆகும்.

விளக்கம் : தன் இல்லாளொடு இருக்கும்போது தலேவன் பரத்தையை நினேத்திருந்ததால் 'ஒருவர்க்கு இடமாக இருந்தது இருவர்க்கு இடமாகியது' என்ருள் தலேவி. 34

548. வளேயல்கள் கழன்றன!

நங்கை பயண நமக்கென்று உரைத்தளவில்
அங்கம் பசலேநிற மானதே—செங்கை
வளேநெகிழப் பாதி மறுத்தேன் என்ருேத
உளநெகிழப் பாதி யுடைந்து.

'பெண்ணே! நான் வெளியூர்க்குச் செல்ல வேண்டியுள்ளது' என்ற அளவில், தலேவியின் உடலில் பசலே நிறம் பாய்ந்தது. அவள் கையிலுள்ள பாதி வளேயல்கள், உடல் மெலிந்ததால் கழன்றன; அதைப் பார்த்த நான், 'பயணம் செல்லவில்லே' என்றேன். அதனேக் கேட்டு அவள் பூரித்தாள்; எனவே எஞ்சிய பாதி வளேயல்கள் உடைந்து கழலும் நிலேயில் உள்ளன. 35

549. இன்னெருகால் ஆடலாகாதோ?

அம்பலவா இன்னெருகா லாடினுல் ஆகாதோ
உம்பரெலாம் கண்டதெனக் கொப்பாமோ—சம்புவே
வெற்றிப் பதஞ்சலிக்கும் வெம்புலிக்கும் தித்தியென
ஒற்றிப் பதஞ்சலிக்கு மூர்.

சிவபெருமானே! நின் நடனத்தைக் காண்பதில் வெற்றி பெற்ற பதஞ்சலி முனிவருக்காகவும் புலிக்கால் உடைய வியாக்கிரபாத முனிவருக்காகவும் 'திதி' என்று தாளம் இட்டு நடனம் செய்த பதியில் உள்ள பொன்னம்பலவா! இன்னும் ஒரு தடவையும் (அல்லது இன்னொரு காலாலும்) கூத்தாடக் கூடாதா? முன்னர்த் தேவர்கள் எல்லாம் உன் நடனத்தைப் பார்த்தார் என்றால் அது நான் பார்த்ததாகுமா? 36

550. *கொங்கை குலுங்காமல் நடமின்!*

இந்தஇடை நிற்பது அரிது என்னாணை, உம்மாணை,
சந்தேக மாகச் சமைத்தானே—அந்தஅயன்
பாரதிரா மன்வரையில் பைங்கொடியீர், கொங்கையிள
நீர்அதிரா மல்நடமின் நீர்.

பாரதிராமன் என்பவனின் எல்லைக்குட்பட்ட ஊரில் வாழும் கொடி போன்ற மாதரே! உம் இடையானது என்மேல் வைத்த ஆணையாலும் உங்கள் மேல் வைத்த ஆணையாலும் நிலைத்து நிற்பது அரிதாகும். அதைப் படைத்த நான்முகன், அது இருக்கின்றதோ இல்லையோ எனக் கூறுமாறு அமைத்து விட்டானே! உங்கள் தனங்களாகிய இளநீர்க்காய்கள் அதிர்ச்சி யடையாமல் நடந்து செல்வீராக! 37

551. *நம்மிருவர் உயிரும் ஒன்று என்பதை அறிந்தேன்!*

உன்னுயிரும் என்னுயிரும் ஒன்றென்பது இன்றறிந்தேன்
மன்னுபுகழ் மச்சத்தரர் மன்னவா—உன்னுடைய
பொன்னகத்து எங்கையர்தம் போகநகச் சின்னம்கண்டு
என்னகத் தேளரிகை யால்.

நிலையான புகழுடைய மச்ச நாட்டின் அரசனே! நின்னுடைய அழகிய மார்பில் என் தங்கையாகிய பெண்டிர் (பரத்தையர்) புணர்ச்சிக் காலத்தில் ஏற்படுத்திய 'நகக்குறிகளைக் கண்டேன்; அவற்றைக் கண்டு என் மனம் எரிவதால் நின் உயிரும் என் உயிரும் ஓர் உயிரே' என்பதை இன்று நான் அறிந்து கொண்டேன்.

விளக்கம் : தலைவன் பரத்தையிடம் சென்று வந்தான்; அப் பரத்தையால் உண்டான நகக்குறிகள் அவனுடைய மார்பில் இருந்தன. ஆகலான் தலைவி அவனை இங்ஙனம் பழித்துரைக்கின்றாள். 38

552 *கங்கை உம் வெப்பத்தைத் தணித்தாள்!*

காளத்தீ கண்டத்தே காளத்தீ நெற்றியிலே
காளத்தீ உன்தன் கரத்திலே—காளத்தீ
அங்கம்எங்கும் வெவ்வழலை ஆற்றினுள்; ஞானப்பூங்
கங்கைஎன்னும் பெண்ணொருத்தி கண்டு.

திருக்காளத்தியில் உள்ள பெருமானே! உம் கழுத்தில் விடத்தால் உண்டான வெப்பம் உள்ளது; உம் நெற்றியில் மன்மதனைக் கொன்ற விடம் போன்ற தீ இருக்கின்றது. கையிலும் விடம் போன்ற வெம்மையான தீயிருக்கின்றது. உம் உடல் முழுவதும் தீ மயமானது. இதனைக் கண்டு, அறிவு வடிவான கங்கை என்னும் நங்கை தன் குளிர்ச்சியால் அத் தீயினைத் தணித்தாள்.

விளக்கம் : கண்டத்தில் காளத்தி என்றது பாற்கடலில் தோன்றிய விடத்தை. நெற்றியில் காளத்தீ என்றது நெற்றிக்கண் நெருப்பினை. கரத்தில் காளத்தீ என்றது மழுவாயுதத்தை. அங்கம் எங்கும் வெவ்வழல் என்றது திருமேனி தீவடிவாக விளங்குதலை. காளத்தீ விடமாகிய நெருப்பு. 39

553. *இரவுக்கு அமைந்துள்ள புதுமை!*

மேவில் உடனே விடியும்; விடியாது
கோவைமணி மார்பாநீ கூடாநாள்!—தேவர்
திரண்டு ஆதரிக்கின்ற தென்னரங்க மாலே,
இரண்டாலும் பொல்லாது இரா.

வானவர்கள் ஒன்று சேர்ந்து வணங்குகின்ற திருவரங்கத்தில் உள்ள பெருமானே! மணிமாலையை அணிந்த மார்பை உடையவனே! நீ என்னுடன் சேர்ந்தால் இரவுப் பொழுது விரைவாகக் கழிந்து விடுகின்றது. சேராத நாளிலோ இரவுப் பொழுது விரைவிலே கழிவதில்லை; நீளுகின்றது. எனவே இரவு இவ்விரண்டு வகையாலும் புதிதாக உள்ளது. 40

24. பலபட்டடைச் சொக்கநாதப் புலவரின் பாடல்கள்

554. ஒரு கொடிக்கு அரை தந்தார்; மற்ருெரு கொடிக்குக் காலும் தரவில்லையே! ஏன்?

நின்று படியளக்கும் நீலக் கொடிகளிரண்டு
என்றுமுள வாம்குடத்தை ஈச்சுரருக்கு—ஒன்றுக்கும்
உரைக்கும் அரையீந்தா ரொன்றதனுக் கென்னே
அரைக்கும் அரைஈயார் அவர்.

திருக்குடந்தையில் வீற்றிருக்கும் சிவபெருமானுக்கு, நிலையாக இருந்து உயிர்களுக்கு அவற்றின் வினைகளுக்கு ஏற்றவாறு உணவை அளித்துக் காப்பாற்றும் நீல நிறத்தையுடைய கொடிபோன்ற உமையம்மையாகிய கொடியும் நீல நிறத்தையுடைய திருமாலாகிய கொடியும் ஆக இரு கொடிகள் எப்போதும் உள்ளன. அவற்றுள் ஒன்றுக்கு (உமையம்மையாருக்கு) தம் மேனியில் ஒரு பகுதியைத் தந்தார்; மற்ருெரு கொடிக்கு (திருமாலுக்கு) எக்காரணத்தாலோ அரையில் பாதியாகிய கால் பகுதியையும் (திருவடியையும்) தரமாட்டார். 1

விளக்கம்: திருமால் சிவபெருமானின் அடியைத் தேடச்சென்று அதைக் கண்டறிய இயலாமையை இங்குக் கவிஞர் சுட்டினுர்.

555. சிதம்பரப் பெருமான் மேல் பாடியது

எடுத்தசன னங்கள்தொறும் ஈன்றெடுத்த தாய்மார்
கொடுத்தமுலைப் பாலனைத்தும் கூட்டில்—அடுத்தமணிப்
பைந்நா கணைதுயில்மால் பாலாழி யும்சிறிதாம்
மன்னு, சிதம்பர தேவா!

மன்னனே! நான் எடுத்த பிறவிகள் எல்லாவற்றிலும் என்னை ஈன்று வளர்த்த தாய்மார்கள் எனக்கு ஊட்டிய முலைப்பாலைக் கூட்டிப் பார்த்தால், அது மணிகள் பொருந்திய ஆதிசேடன் என்ற பாம்பணையில் துயில்கொள்ளும் திருமாலின் பாற்கடலை விடப் பெரியதாகும். 2

556. *முக்கண்ணனுக்கு உள்ளது அரைக்கண்ணே!*

முக்கண் ணன்என்று அரனைமுன்னோர் மொழிந்திடுவர்
அக்கண்ணற்கு உள்ளதரைக் கண்ணே—மிக்க
உமையாள்கண் ஒன்றரைமற் றூன்வேடன் கண்ஒன்று
அமையும் இதனாலென்று அறி.

சிவபெருமானை மூன்று கண்களை உடையவர் என்று உரைப்பார்கள்; எலும்பை அணிந்த அப்பெருமானுக்குச் சொந்தமாக உள்ளது அரைக்கண்ணே ஆகும். எவ்வாறென்றால், அப்பெருமானின் உடலில் பாதியைப் பெற்றுள்ள உமையம்மையாருக்குரியது ஒன்றரைக் கண்ணாகும்; மேலும் ஊனைப் படைத்த கண்ணப்பரின் கண் ஒன்றாகும். எனவே, இங்ஙனம் கணக்கிட்டுப் பார்த்தால் இரண்டரைக்கண் போக அவருக்கு அரைக்கண்தான் சொந்தமாக உள்ளதாகும்.

குறிப்பு : இச்செய்யுள் காளமேகப் புலவரால் பாடப்பட்டதாகவும் கூறுவதுண்டு. 3

557. *என் மானுக்கு எங்கே இடம்?*

பாணியிலே புள்ளிமான் பாகத்தே பச்சைமான்
வேணிதனி லேஓர் வெள்ளைமான்—காணுமலர்ச்
செம்மா னுலவும் திருமறைக் காட்டீசரே
எம்மா னுக்குளங்கே இடம்.

தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் தங்கும் வேதாரணியத்தில் வாழும் இறைவனே! உம் கையில் புள்ளிகளையுடைய மான் உள்ளது. இடப்பாகத்தில் பச்சை நிறத்தையுடைய மான் இருக்கின்றது. (உமையம்மையார் வீற்றிருக்கின்றார்); சடையில் ஒரு வெள்ளை மான் உள்ளது (கங்கை உள்ளாள்); ஆதலால், என் மகள் தங்குவதற்கு உம் உடலில் எங்கே இடம் உள்ளது?

விளக்கம் : புள்ளிமான் - வேள்வியில் வந்த மான்; அதனைச் சிவபெருமான் கையில் கொண்டுள்ளார். வெள்ளை மான் - வெண்மையான நிறத்தையுடைய கங்கை; நீருக்கு நிறம் வெண்மை; அதலால் 'வெள்ளை மான்' என்றார். 'வெள்ள மான்' எனவும் பாடல் உண்டு. 4

558. *நான் பணிந்தால் சான்று பகர்வார் யார்?*

வான்பணிந் தால்அவன் என்பே யுரைக்கும் மலரில்அயன்
தான்பணிந் தாலவன் தன்தலை யேசொலும் தாரணியுண்
டான்பணிந் தால்அவன் கண்ணே பரிந்து பரிந்துரைக்கும்;
நான்பணிந் தாலெனக் கார்சொல்லு வார்சொக்க நாயகர்க்கே?

சொக்கநாதனைத் தேவர்கள் வணங்கினால் அதற்கு அவரது எலும்பே சாட்சி சொல்லும்; தாமரையில் வீற்றிருக்கும் நான்முகன் வணங்குவானாயின் அதற்கு அவனது கிள்ளப்பட்ட தலையே சாட்சி கூறும்; மண்ணை உண்ட திருமால் வணங்கினானாயின், அதற்கு, அவன் பிடுங்கி அர்ச்சித்த கண்ணே மிக விரும்பிச் சாட்சி பகரும்; நான் அவனை வணங்கினால் அதற்குச் சான்று உரைப்பவர் யார் உள்ளார்?

விளக்கம்: சிவன் அணிந்துள்ள எலும்பால் தேவர்களால் அவன் வணங்குதற்குரியவன் எனவும், கையில் கொண்ட கபாலத்தால் நான்முகனால் வணங்குதற்குரியவன் எனவும், திருவடியில் உள்ள கண் மலரினால் திருமாலால் வணங்குதற்குரியவன் எனவும் பொருள் கொள்க. 5

559. *சொக்கநாதரது திருவடியை அடையும் வழி யாது?*

மெய்க்கே அணியும் பணியே என்பே முடிமேல் கிடந்த
கொக்கேவெண் கூன்பிறை யேஅரை சேர்ந்த கொடும்புலியே
அக்கே உமக்குக் கிடைத்த உபாயங்களா எமக்கும்
சொக்கேசர் பாதத்தைக் கிட்டும் உபாயத்தைச் சொல்லுங்களே.

சிவபெருமான் உடலில் அணியும் பாம்பே, கழுத்தில் அணிந்துள்ள எலும்பு மாலையே, முடிமேல் தங்கிய கொக்கின் இறகே, வெண்மையான வளைந்த பிறைச் சந்திரனே, அரையில் அணியப்பட்ட புலித்தோலே, உருத்திராட்ச மணிகளால் ஆன மாலையே! உங்கட்கு அவர் மேனியில் அடையும் பேற்றுக்குக் கிடைத்த உபாயங்கள் வியக்கத்தக்கன! எங்களுக்கும் சொக்கநாதப் பெருமானின் அடியை அடையும் வழியைக்கூறுவீராக! 6

560. *பிரம்படி பட்டார்!*

தாண்டித் திரியும் விடையேறி ஓடுஒன்று தாங்கிப் பிச்சை
வேண்டிக் கலியுக காலம்தள் ளாமல் விரும்பிச் சொக்கர்

ஆண்டித் தொழிலை விட்டையோ மதுரைக்கு அரசிருந்து
பாண்டித் துரைத்தனம் செய்தே பிரம்படி பட்டனரே.

தாவிப் போகும் எருதின்மீது ஏறி, திருவோட்டைக் கையில் எடுத்துப் பிச்சை எடுத்து உண்டு கலியுகத்தில் காலத்தைத் தள்ளாமல், சொக்கநாதர் பிச்சைக்காரர் செய்யும் தொழிலைக் கைவிட்டு, சில காலம் மதுரையில் அரசனாக முடிசூடி ஆட்சி செய்து, மற்றொருபோது பிட்டு விற்கும் வந்திக்காகக் கூலி ஆளாய் வந்து ஒரு பாண்டியன் பிரம்பினால் அடியும் பட்டார். என்னே பரிதாபம்! 7

561. களந்தையில் ஒருவடிவும், என் மனத்தில் ஒருவடிவு மாவீர்!

ஆகத்தி லேஒரு பாதியென் அம்மைக் களித்து அவள்தன்
பாகத்தி லேயொன்று கொண்டாய் அவள்மற்றைப் பாதியும்உன்
தேகத்தில் பாதியுஞ் சேர்ந்தால் இருவருண் டேசிவனே
ஏகத்தி ராமல் இருப்பாய் களந்தையும் என்னெஞ்சுமே.

சிவனே! உம் உடலில் ஒரு பாதியை என் அன்னையாகிய பார்வதிக்குத் தந்து, அவளது மேனியின் ஒரு பகுதியை நீ பெற்றாய்; அவளது மற்றொரு பாதியும் உன் உடலின் பாதியும் சேர்ந்தால் இருவர் இருக்கவேண்டுமன்றோ? ஆதலால் நீவிர் ஒருவராய் இல்லாமல், திருக்களந்தைப் பதியில் ஒரு வடிவும் என் மனத்தில் ஒரு வடிவமாகத் தங்கியிருப்பீராக! 8

562. களந்தையாரின் செயலை என்னென்று உரைப்பது?

துணையான நாரி புவியையெல் லாம்பெறும் தொல்லைவடிக்
கணையா னதுபுவி யெல்லா மெடுத்துண்ணும் கைச்சிலைகல்
அணையாக நின்று புவியினைத் தாங்குமென்றால் இனியான்
பணையார் களந்தைப் பதியார் செயலைஎன் பன்னுவதே.

திருக்களந்தைச் சிவபெருமானுக்கு மனைவியான உமையம்மை உலகை யெல்லாம் தோற்றுவிப்பாள்; பெருமான் கொண்ட அம்பான திருமால் உலகங்களையெல்லாம் எடுத்து உண்பான்; கையில் உள்ள வில்லாகிய மேருமலை ஆதரவான கல்தூணாக இருந்து உலகத்தை எல்லாம் தாங்கிக் கொண்டிருக்கும். இங்ஙனமென்றால் திருக்களந்தையாரின் தொழிலை என்னவென்று உரைப்பேன்? 9

563. மதுரைப் பெருமானை வணங்குவோம்!

முன்னானை கூப்பிட ஓடி வந்தானை முளரிமலர்ப்
பொன்னானை யேறி யிருப்பானைப் பூழியன் கைக்கரும்பைத்
தின்னானை என்று கல்லானைக்கு இட்டானைத் திருமதுரை
மன்னானை வீதி யிலேறி வந்தானை வணங்குதுமே.

முற்காலத்தில் முதலையின் வாயில் சிக்கிய யானை அழைத்திட அதைக் காப்பதற்கு விரைவாக வந்தவனும், தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமியை உடையவனுமாகிய திருமால் காளை வாகனமாகிட அதன்மேல் ஏறியவனை, பாண்டியன் கையில் இருந்த கரும்பை 'ஆனையே நீ இதனைத் தின்பாய்' என ஆணையிட்டு அதைக் கல் யானைக்குத் தந்தவனை, மதுரையின் பெரிய வீதியில யானை வாகனத்தில் எழுந்தருளி வந்தவனை நாம் வணங்குவோமாக! 10

564. எங்கள் மகள் உயிர் பிழைக்கச் செய்வீர்!

நமக்குஇன் றொருவரம் நீர்தரவேண்டும் நலந்திகழ்குங்
குமக்கொங் கைபாகத்துக் கொச்சையுள் ளீர்கொடுங் கோளரவிற்
இமைக்கும் பிறையை அளித்தால் அதற்குமிரும் பசிபோம்;
உமக்கும் தலைச்சுமை போமெங்கள் மானு முயிர்பெறுமே.

குங்குமம் பூசப்பெற்ற தனங்களையுடைய உமையம்மையைத் தம் இடப்பக்கத்தில் கொண்டு சீர்காழியில் வீற்றிருப்பவரே! இன்று என் ஒரு வேண்டுகோளை நிறைவேற்றிடல் வேண்டும். கொடிய பாம்பிற்கு ஒளியுடைய பிறைச் சந்திரனைத் தந்தால், அதற்குள்ள மிகுந்த பசியும் நீங்கும்; உமக்குத் தலையில் உள்ள சுமையும் போகும்; எங்கள மகளும் உயிர் பிழைப்பாள்!

விளக்கம் : இச்செய்யுள் 'நற்றாய் இரங்கல்' என்ற துறையில் அமைந்துள்ளது.

சந்திரனின் நிலவால் காதல் மிகும். ஆதலால் அதை ஒழிக்கச் சந்தரனைப் பாம்பிற்கு உணவாகத் தருமாறு கூறப்பட்டது. 11

565. பானை பிடித்த முகூர்த்தத்தால் வந்த பாக்கியம்!

ஆனை யுரித்து மதடனைப் போர்த்திட் டடியும்பட்டு
மான மழிந்தங் கிரந்தே திரிந்த மதுரைச்சொக்கர்

ஞான மிகப்பெற்று வாழ்வதெல் லாம்சொக்க நாயகியாள்
பாணி பிடித்த முகூர்த்தத்தி னுல்வந்த பாக்கியமே.

தாருகாவனத் துறவிகள் செய்த வேள்வியினின்று வெளிப் பட்ட ஆனையை உரித்தும், அதன் தோலைப் போர்வையாகப் போர்த்தியும், பிரம்பால் அடிபட்டும், பெருமையிழந்து பிச்சையெடுத்து அலைந்த சொக்கலிங்கப் பெருமான் ஞானத் தைப் பெற்று வாழ்வதற்குக் காரணம் என்னவென்றால், அழகிய மீனாட்சியம்மை அப்பெருமானை மணந்து வாழ்வைத் தொடங்கிய நல்ல வேளையால் ஏற்பட்டதாகும். 12

566. *வாய் முத்தம் சிந்திவிடுமோ!*

ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை மீதுஉன் அருகிருந்து
நீமுத்தம் தாவென் றவர்கொஞ்சும் வேளையின் நித்தநித்தம்
வேய்முத்த ரோடென் குறைகளெல் லாம்மெல்ல மெல்லச் சொன்னால்
வாய்முத்தம் சிந்தி விடுமோ நெல்வேலி வடிவன்னையே.

திருநெல்வேலியில் வீற்றிருக்கும் வடிவம்பிகை என்ற பெயரை யுடையவம்மையே! முத்துக்களால் அமைந்த பந்த லுக்குக் கீழே உள்ள மெல்லிய படுக்கையின்மீது, உன் பக்கத்தே சிவபெருமான் அமர்ந்து, ‘நீ முத்தம் தரவேண்டும், என்று உம்மிடம் கொஞ்சும்போது, நாள்தோறும் மூங்கிலடி யில் முத்தைப் போல வீற்றிருப்பவரிடம் என் குறைகளையெல் லாம் மெல்ல மெல்லச் சொன்னால் உன் வாயின் முத்தம் சிந்திவிடுமோ?

விளக்கம் : பெண்களின் கழுத்தில் முத்துக்கள் பிறக்கும். ஆதலால் ‘வாய் முத்தம் சிந்திவிடுமோ’ என்றார். 13

567. *சொக்கநாதருக்கு அருள் உண்டோ?*

குதியால் நமனை யுதைத்துள்ளம் காலினில் கூன்நிமிர
மதியாகந் தேய்த்தவ் விலங்கேசன் மாமுடி பத்துநக
நுதியால் மிதித்து முயலகன் மேனி நொறுங்கஇன்னும்
மிதியாநின் றலருள் எங்கே சொக் கேசர்தம் மெல்லடிக்கே.

குதிக்காலால் இயமனை உதைத்து, உள்ளங்காலால் சந்திர னின் கோணல் நீங்குமாறு அவன் உடலை நிலத்தில் தேய்த்து நிமிர்த்தி, இலங்கை மன்னன் இராவணனின் தலைகள் பத்தினை

யும் கால் நகத்தின் நுனியால் அழுத்தி, முயலகன் என்னும் அசுரனின் உடல் அழியும்படி இப்போது மிதித்துக் கொண்டிருந்தால் சொக்கலிங்கப் பெருமானின் திருவடியில் அருள் எங்கே காணப்படுகின்றது? 14

568. *பாண்டியன் அருளற்றவன்!*

மண்ணென்ற மண்டலம் எல்லாம் புரக்கும் வழுதிசற்றும்
தண்ணென்ற நெஞ்சம் தரித்தில னேதனு வேடனெச்சில்
உண்ணென்ற போதுண்டவர்சொக்கர் பாதி யுடலம்பச்சைப்
பெண்ணென்ற றிந்தும் அடித்தா னெவ்வாறுபிரம்பு கொண்டே.

இவ்வுலகம் முழுவதையும் காக்கும் பாண்டியன் சற்றும் அருள் உடைய நெஞ்சினனாகத் தோன்றவில்லையே! ஏனென்றால், வில் வேடன் கண்ணப்பன் தன் எச்சிலுடன் கூடிய ஊனை உண் என்றபோது அதை உண்டவர் சொக்கலிங்கப் பெருமான்; அவரது உடலில் பாதி பச்சை நிறத்தை உடைய பார்வதியம்மையார் என அறிந்திருந்தும், பாண்டியன் எவ்வாறு இரக்கமில்லாமல் பிரம்பால் அடித்தான்? 15

569. *எப்போது இருவினை ஒப்பு உண்டாகும்?*

இன்றொக்க வேண்டிலெவ் வாறொக்குமோ வெழில்சேர் களந்தைக்
குன்றொக்கும் கோபுரங் கோபுர மொக்குமக் குன்றதுபோல்
அன்றொக்க வேண்டுமென் னல்வினை தீவினை யாமிரண்டும்
என்றொக்கு மோவினித் தென்களக் காடனை யான்பெறவே-

அழகுடைய களந்தையில், மலை கோபுரத்தைப் போன்றிருக்கின்றது; கோபுரமோ மலைபோன்றிருக்கின்றது. அது போன்றே நான் பிறக்கும் போதே புண்ணியமும் பாவமும் ஆகிய இரண்டும் ஒரே தன்மை அடைந்திருக்க வேண்டும். அன்றி இன்று அவ்விரண்டும் ஒத்த நிலை அடைய வேண்டும் என்று விரும்பினால் அவை எவ்வாறு ஒத்தநிலை அடையும்? இனித் தென் களந்தைப் பெருமானை நாம் அடைவதற்கு எக்காலத்தில் இருவினைகளும் ஒத்தநிலையை அடையுமோ? 16

570. *சிவந்தான் என்னும் பல்லவனின் இயல்பு*

மாதாம் படியுண்டு மெய்சிவந் தான்குழல் வைத்திசைத்துச்
சேதாம் பலக்கனி வாய்சிவந் தான்செம் மலர்த்திருவின்

சூதாம் தனத்தைத் துரஞ்சிவந்தா னவர் தூதுசென்று
பாதாம் புயஞ்சி வந்தான் சிவந்தான் மல்லைப்பல்லவனே.

மல்லை என்ற நகரத்தை ஆளும் 'சிவந்தான்' என்னும் பல்லவ மன்னன் (அரசர்கள் திருமாலின் அவதாரம் ஆதலால்) வெண்ணெய் களவு செய்து உரலில் கட்டப்பட்டுக் கயிற்றால் அடிக்கப்பட்டுச் செந்நிறம் அடைந்தான். வாயிலே குழலைப் பொருத்தி இசை எழுப்பிச் செவ்வாம்பல் போன்ற வாய் சிவந்தான்; செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமியின் சூதாடு கருவியைப் போன்ற முலைகள் பொருந்தியதால் மார்பு சிவந்தான்; பாண்டவர்களுக்காகத் தூதாகச் சென்று திருவடிகள் சிவந்தான். (இவ்வாறு பல்லவன் செம்மை அடைந்த காரணத்தால் அவன் 'சிவந்தான்' எனப் பெயர் பெற்றான்.) 17

571. *சிவந்தான் தந்தான் கடுக்கன்!*

பாடும் தமிழ்க்குச் சிவந்தெழுந்தான் மல்லைப் பல்லவர்கோன்
காடும் செடியும் திரியா திரட்டைக் கடுக்கன்செய்து
போடும்பொழுதென்ன பூட்டகமோ?அற்பப்புல் லரைக்கொண்டு
ஆடும் பொழுதிரு கன்னத்திலே நின்ற டிக்கின்றதே.

சிவந்தான் என்ற பல்லவ மன்னன் காடுகளிலும் சோலைகளிலும் நான் சென்று அலையாமல் நான் பாடிய தமிழ்க் கவிக்குப் பரிசாக இணையான கடுக்கன்கள் செய்து என் செவிகளில் அணிவித்தான்; அப்போது,என்ன நுட்பமான வேலைப் பாட்டை அந்தக்கடுக்கனில் அமைத்தானோ அறியேன்; நான் கீழான புல்லரைப் புகழ்ந்து பாடும்போது அது காதுகளின் இரண்டு பக்கங்களிலும் இருந்தபடி 'அற்பரைப் பாடாதே' என்று தாக்குகின்றது. 18

572. *இயமனும் என்னை வணங்குவான்!*

கான்தெண்ட னிட்ட கனம்குழ லாளை என்கண் மணியைத்,
தேன்தொண்டை வாய்ச்சியைத், தென்கூடல் வாழ்சிறு பெண் [பிள்ளையை,
யான்தெண்ட னிட்ட பொழுதே இயம னெனக்குமடி
யேன்தெண்ட னிட்ட விண்ணப்பமென் றோலை யெழுதுவனே.

மரங்கள் அடர்ந்த காடும் வணங்குதற்குரிய கூந்தலையுடைய தாயை, என் கண்ணின் மணியைப் போன்ற அரியவளை,

தேன் போன்ற சொல்லும் சிவந்த வாயும் உடையவனை, மதுரையில் வீற்றிருக்கும் இளையவனை நான் வணங்கினேன். அப்போதே காலன், எனக்கு வணக்கம் கூறி 'வேண்டு கோள்' என்று தலைப்பில் எழுதி ஓர் ஓலைச்சுருளை எனக்கு அனுப்புவான். (என்னை அவன் கொண்டுசெல்ல மாட்டான்.) 19

573. *மாலும் நான்முகனும் அந்தணரும் என்ன தவத்தைச் செய்தனரோ!*

அண்டத் தமரரும் மாயனும் வேதனும் அந்தணரும்
பண்டெத் தனைதவம்செய் தனரோ, மணப்பந்தலிலே,
துண்டப் பிறையணி சொக்கர்கைத் தாலிக்கு நீதுணிந்து
கண்டத்தை நீட்டினையே, கூடல் வாழும் கயல்கண்ணியே.

மதுரையில் வீற்றிருக்கும் கயல்போன்ற கண்ணை உடைய அம்மையே! திருமணத்துக்காக அமைக்கப்பட்ட பந்தலின் கீழ், பிறைச் சந்திரனைச் சூடிய சொக்கநாதர் தம் கையால் கட்டும் தாலியை ஏற்றுக் கொள்வதற்கு நின் கழுத்தினை உறுதியுடன் காட்டினாய். அத்திருமணத்தைப் பார்ப்பதற்குத் திருமாலும் நான்முகனும் முனிவர்களும் என்ன தவத்தைச் செய்தார்களோ? 20

574. *உனக்கு நெஞ்சம் கல்லோ?*

அற்பீன்ற தாயென் றுனைப்பணிந் தாலென் னவதியெல்லாம்
பொற்பீன்ற பூடணம் போல்குறித் தாய்புகழ்க் கூடலின்வாழ்
கற்பீன்ற கட்டிக் கரும்பே யுனக்குக்கல் நெஞ்சதுதான்
வெற்பீன்ற வாசனையோ உள்ளவாறு விளம்புஎனக்கே.

"தாயே! நீ அன்பைக் காட்டுபவள் என எண்ணி உன்னை வழிபட்டேன்; என் துன்பம் எல்லாவற்றையும் செவியின் உள்ளே செல்லவிடாமல், அழகு செய்யும் நகைபோலக் கருதி வெளியில் நிறுத்திவிட்டாய்! மதுரையில் வீற்றிருக்கும் கற்பு அமைந்த கருப்பங்கட்டி போன்றவளே! என்னிடம் உனக்கு இரக்கம் இல்லாமல் கல்போன்ற நெஞ்சம் இருப்பதற்குக் காரணம் நின்னை மலையரசன் பெற்றெடுத்தான் என்னும் தொடர்போ? உண்மைக் காரணத்தை எனக்குச் சொல்வாயாக! 21

575. *நின் மனம் கல்லானது அற்புதந்தான்!*

பேயல்ல வோவொரு வேளே வரம்தந்து பேசிடும்கல்
லாயல்ல வோநின் மனங்கெட்டி யானதும் அற்புதந்தான்;
நீயல்ல வோமது ரேசர்பங் குற்றவள் நீயெனக்குத்
தாயல்ல வோபிள்ளை நானல்ல வோசிவ சாம்பவியே.

அம்மையே! பேயுங்கூட ஒரு காலத்தில் இரங்கி வரம் தந்து பேசுவதுண்டு. ஆனல் நின் மனம் கல் போலவன்றோ வன்மையாக விளங்குகின்றது! இது ஓர் அற்புதந்தான்! சிவபெருமானின் இடப்பக்கத்தில் தங்கியிருப்பவள் நீ யல்லவளோ? நீ எனக்குத் தாயில்லேயோ? நான் உனக்குப் பிள்ளையல்லேனே? 22

576. *இயமன் வந்தால் குண்டோதரன் அவனை விடான்!*

பண்டோ தரிய மறைபாடும் கூடற் பசுங்கிளியைக்
கண்டோ தினேனென் கவலேயெல் லாம்இனிக் காலன்திண்டு
முண்டோதி வந்திடும் போதம்மை கோயின்முன் னேதிரியும்
குண்டோ தரன்கண்டு கொண்டால் தொடைதட்டிக் கொள்ளு
வனே.

பழைமையுடைய வேதங்கள் புகழும் மதுரையில் வீற்றிருக்கும் பசுங்கிளியைப் போன்றவளே! என் கவலேகள் முழுவதையும் நினக்குத் தெரிவித்தேன்; இனிமேல் இயமன் தாறுமாருகப் பேசிக்கொண்டு என்னிடம் வரும்போது, உமையம்மையின் கோயிலதுவாயிலில் காவல் செய்து கொண் டிருக்கும் குண்டோதரன் (அந்த இயமனேப் பார்த்தால்) போரிட்டு ஓட்டுவதற்கு முன்வருவான். 23

577. *அம்மையாரின் மூக்குத்தியினது இயல்பு*

செகத்தா யெனவந்த தெள்ளமு தேதென் கயிலேஎனும்
நகத்தார் பணியும் கயல்கணம்மே நின்ந யனத்திஞல்
மிகத்தான் கருநிறம் கொண்ட் மையாலவ் விளங்குதிரு
முகத்தா மரைக்கொரு வண்டானது முத்து மூக்குத்தியே.

உலகத்திற்குத் தாயாக உள்ள அமுதம் போன்றவளே? தெற்குத் திசையில் இருக்கும் கயிலாயம் என்று எண்ணப்படும் காளத்திமலேயில் வாழ்பவர்கள் வணங்குகின்ற கயல் போன்ற கண்ணேயுடையவளே! முத்துக்களால் ஆன நின் மூக்குத்தி

யானது, நினது கண்ணின் ஒளியைப் பெற்றுக் கருமை நிறம் உடையதாக விளங்குவதால், அது நின் முகமாகிய தாமரைப் பூவின் நடுவில் உள்ள வண்டைப் போன்று விளங்குகின்றது. 24

578. *மூக்குத்தி சந்திரனே?*

செகமதின் மிக்க மதுரையின் மாணிக்கஞ் செட்டியதாய்
மிகமதி ரத்தினம் விற்றசொக் கேசரை மேவியன்பாச்
சுகமதி தந்தெனை யாள்கயற் கண்ணி நின்சுந்தரமாம்
முகமதி ஈன்றகதிர் மணியோ முத்து மூக்குத்தியே.

எனக்கு நல்லறிவு தந்து ஆட்கொள்ளும் மீனாட்சியே! நின் முத்தால்ஆன மூக்குத்தி பூவுலகிற் சிறந்த மதுரை நகரத்தில் மாணிக்கம் விற்கும் வாணிகராக வந்து, விலைமிக்க மணிகளை விற்ற சொக்கநாதரை அன்புடன் கலந்து அழகிய முகமாகிய சந்திரன் பெற்ற ஒளி தரும் மணியோ? 25

279. *மூக்குத்தி விண்மினே!*

பொன்னே மலையத்து வசனா கியபுய லீன்றெடுத்த
மின்னே யுனது வதனத்தை யேவெண் மதியம்எனத்
தன்னே யத்தா லொருதாரகை யானது தான்விரும்பி
முன்னே கிடந்தினம் பார்க்கின்றதோ முத்து மூக்குத்தியே.

பொன்மயமாக விளங்கும் தாயே! மலயத்துவசன் என்னும் மேகமானது பெற்ற மின்னல் கொடி போன்றவளே! அந்த முத்து மூக்குத்தியானது முகத்தை வெண்மை நிறமுடைய சந்திரனை எண்ணி அதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற ஆசையால் முகத்தின் முன் பக்கத்தில் இருக்கும் நட்சத்திரமோ? 26

580. *சொக்கநாதரின் அடிகளை அடியார் கண்ட சமயம்!*

வடிகொண்ட செந்தமிழ்க் கூடலில் வாழ்சொக்கர் வந்திதரும்
பிடிகொண்ட பிட்டுக் குமண்ணே சுமந்து பெருமகரக்
கொடிகொண்ட வெற்றித்துரைப் பாண்டியன்கைக் கொண்டு (பிரம்பால்
அடிகொண்ட போதில்அடி யாரவர் பொன் னடிகண்டதே.

சிறந்த தமிழ் வழங்கும் மதுரை நகரில் வீற்றிருக்கும் சிவ பெருமான், வந்தி என்ற பிட்டு வாணிகம் செய்பவள் தரும் ஒரு கையளவுள்ள பிட்டின் பொருட்டாக மண்ணைச் சுமந்து, பெருமை பொருந்திய மீனக் கொடியினனுன பாண்டியன் கைப் பிரம்பிஞல் அடிபட்ட போதுதான் அடியார்கள் அவருடைய திருவடிகளைப் பார்த்தனர் போலும்! 27

581. *கடம்பவனப் பெருமானை வணங்கக் கவலை நீங்கும்!*

அக்கு வடம்புனை யானந்த வெள்ளத்தை அங்கயல்கண்
பக்கத் திருந்த பவளா சலத்தைப் பழம்பொருளை
முக்கண் கனியைக் கடம்பா டவிக்கண் முளைத்தெழுந்த
சொக்கைக் கண்டால்அன்றித் தீராவென் நெஞ்சில்துயரங்களே.

எலும்பு மாலையைச் சூடிய பேரின்ப வடிவமான சிவபெரு மானை, அங்கயற்கண் அம்மையாரின் பக்கத்தில் வீற்றிருக்கும் பவள மலையினைப் போன்று விளங்குபவரை, மிகப் பழமை யான பொருளை, மூன்று விழிகளைக் கொண்ட கனி போன்ற வரை, கடம்ப வனத்தில் விளங்கும் அழகரை வணங்கிஞல் அன்றி என் மனத்தில் உள்ள கவலைகள் நீங்கமாட்டா. 28

582. *அன்னை அருளாமலிருப்பதற்குக் காரணம்!*

பொன்போலும் கூடல் பிராட்டியைச் சேவிக்கப் போம்பொழுதில்
என்பால் வரவுமெதிர்நின்று பேசவும் என்தலைமேல்
தன்பாதம் சூட்டவும் கேட்டதெல்லாம் தந்தருளவுமே
அன்பாக வந்திடு வாள்கலி காலமென்று அஞ்சுவளே.

அழகிய மதுரையில் உள்ள தாயை, வணங்குவதற்கு நான் போகும்போது என்னிடம் காட்சி அளிப்பதற்கும் எதிரே நின்று இனிய சொல்லைச் சொல்வதற்கும் என் தலைமேல் தன் திருவடியைச் சூட்டுவதற்கும் நான் வேண்டிய வரங்கள் எல்லாவற்றையும் அளிப்பதற்கும் தயவோடு காட்சி தருபவள் இப்போது கலியுகம் என்பதால் அங்ஙனம் அருளாமல் இருக் கின்ருள். 29

583. *வினையை எவ்வாறு கடப்பேன்?*

உரையேன்உன் பேரை யுணரேன் நின்சீரை உனக்கருதிக்
கரையேனெவ் வாறு கடப்பேன் வினையைக் கடந்தகுண

வரையே அருட்பெரு வாரிதி யேமது ராபுரிக்குத்
துரையே அழகிய சொக்கே தமிழ்தந்த சுந்தரமே.

எல்லாவற்றையும் கடந்து நிற்கும் குணக்குன்றே! அருள் பெருங்கடலே! மதுரைமா நகரின் தலைவனே! அழகிய சொக்க லிங்கப் பெருமானே! தமிழை அளித்த இறைவனே! நின் திருப்பெயரை நான் சொல்வதில்லை! நின் புகழை நான் அறிவதில்லை! நின்னை நினைத்து மனம் நெகிழ்வதில்லை! இத்தகைய நான் எவ்விதத்தில் வினைகளைக் கடந்து உய்வேன்! 30

584 சொக்க நாயகியை வணங்கியவர் சொர்க்கத்தை அடைவர்!

முக்கண்பராபரை சொக்கப் பிரானெனு முன்னவனோடு
ஒக்கச் சிறந்த கயல்கண்ணி சந்நிதி யுற்றுமிகச்
செக்கச் சிவந்த பொற்றாமரைப் பாத தரிசனைக்கே
பக்கத் தடுத்தவர் சொர்க்கத்தினை எட்டிப் பார்ப்பவரே.

மூன்று கண்களையுடைய மேலானவளே! சொக்கலிங்கப் பெருமான் என்ற தலைவனுடன் ஒரு படித்தாகக் கருதப்படும் மீனாட்சியினது திருமுன் சென்று மிகச் சிவந்த பொன் தாமரையைப் போன்ற பாதங்களைக் காண்பதற்காக அண்மையில் சென்றவர் சொர்க்கத்தை எட்டிப் பார்ப்பவர் ஆவர். 31

585. என்னை நட்டாற்றில் கைவிடாதே!

மட்டார் குழலங் கயற்கணம் மேஇம்மட் டென்றுதொகைக்கு
எட்டா தெனது துயரம்நின் பாற்சொல்லி யேசலிக்க
ஒட்டாரம் நீசெய்ய லாகாது பாருன் னடிமைதன்னை
நட்டாற்றில் கைவிட்டிடாதே பழிவெகு நாள்நிற்குமே

தேன் பொருந்திய மலர் அணிந்த கூந்தலையுடைய மீனாட்சியம்மையே! என் துன்பங்கள் இவ்வளவு என்று எண்ணின் அவை எண்ணிற்கு எட்டாதவை; அவற்றை நின்னிடம் கூறி வருந்தும்படி நீ பிடிவாதம் செய்தலாகாது; உன் அடியவனாகிய என்னை ஆதரிப்பாயாக! நிறைந்த வெள்ளத்தையுடைய ஆற்றின் நடுவில் என்னைக் கைவிடாதே! அங்ஙனம் நீ செய்யின், பழியானது உனக்கு நெடுங்காலம் நிலைத்து நிற்கும். 32

586. சோமசுந்தரப் பாண்டியனின் செயல்கள்!

விரித்தான்சடையை மக மேருவாசுகி வில்லைவிட்டுச்
சிரித்தான் புரத்தை எரித்தான் பரகுரு தேசிகன்முன்
உரித்தான் கரியை உடுத்தான் பகிரண் டத்துள்ளுலகும்
பரித்தான் மதுரை தரித்தான் சவுந்தர பாண்டியனே.

சோமசுந்தரப் பாண்டியன் (சிவபெருமான்) மிக்க சடையுடன் விளங்கினான்; மேரு மலையாகிய வில்லையும் வாசுகியாகிய அதன் கயிற்றையும் பயன்படுத்தாமல் கைவிட்டுச் சிரித்தான்; மூன்று புரங்களை எரியச் செய்தான்; மேலாகிய குருநாதன் முன் காலத்தில் யானையின் தோலையுரித்து அதன் தோலைப் போர்த்திக் கொண்டான்; வெளியே இருக்கும் உலகங்களை எல்லாம் காப்பாற்றினான்; மதுரையில் வாழ்ந்தான். 33

587. ஒருநாள் தொழுதால் சொர்க்கம் பெறலாம்!

மைக்கார்க் குழல்பெண் வடிவாளைத் தென்னவன் மாமகளை
அக்காளை யோன்பங்கி லாத்தாளை மாறங்கை யானவளைத்
திக்கார் தொழும்கயற் கண்ணாளை ஓர்தினம் சேவைசெய்தால்
எக்கா லமும்அவர் சொர்க்காதி போகத்து இருப்பவரே.

மேகத்தைப் போன்ற கரிய நிறத்தையுடையவளை, பாண்டியனுடைய மகளை, காளை வாகனத்தையுடைய சிவபெருமானின், ஒரு பாகமாக விளங்குபவளை, திருமாலின் உடன் பிறந்தவளை அனைத்துத் திக்குகளிலும் உள்ளவர் தொழும் மீனாட்சியம்மையை ஒரு முறை வணங்கினால் சொர்க்கம் முதலிய போகங்களையுடைய உலகங்களில் பிறப்பவர் ஆவர். 34

588. எமன் வந்தால் அவனைத் திருப்பி அனுப்புவேன்!

வண்டிட்ட கூந்தலும் வாரிட்ட கொங்கை வரைகளும்கற்
கண்டிட்ட சொல்லங் கயற்கண்ணி பாதத்தைக்கை தொழுதேன்
தண்டிட் டடிக்கும் மறலிவந்தால் சன்னை யிட்டுநகைத்
துண்டிட்டு வாசிறு பிள்ளாயென்று ஊருக் கனுப்புவனே.

வண்டுகள் மொய்க்கும் கூந்தலும், கச்சை அணிந்த முலைகளாகிய மலைகளும், கற்கண்டினைப் போன்ற சொல்லையுமுடைய

மீனாட்சியம்மையின் திருவடிகளைத் தொழுதேன். இனி இயமன் என்னிடம் வந்தால், "குழந்தையே! நீ போய் உண்டு விட்டு வருவாயாக" எனக் கூறி அவனை ஊருக்கு அனுப்பி வைப்பேன். 35

589. *அருள் செய்க, அம்மையே!*

பொன்னே பொருந்தற்புதமே பொலிந்தஎன் பூந்திருவே
தென்னே சிறந்த செந்தேனே திருந்தருள் சின்மயமே
அன்னே அமுதே அருளே அமரர்க்கு அரும்பொருளே
மின்னே வியன்சுட ரேமது ராபுரி மீனம்மையே.

பொன் போன்றவளே! அற்புதமானவளே! விளக்கமுடைய தாமரை மலரில் வீற்றிருப்பவளே! அழகின் வடிவமே! அடியார்க்குச் சிறந்த தேன் போன்று இனிப்பவளே! சிறந்த அருளையுடைய ஞான வடிவமே! தாயே, அமிழ்தமே! அருள் உருவமே! தேவர்களுக்கு அரிய பொருளே! மின்னலைப் போன்ற இடையையுடையவளே! பெருஞ்சுடரே! மதுரையில் வீற்றிருக்கும் மீனாட்சியம்மையே! என்மேல் அருள் செய்வாயாக! 36

590. *உன்மேல் பழி சுமத்தினேன்!*

தேட்டேது மில்லை கொடுப்பாரும் இல்லை திரத்து உழவில்
பூட்டேரும் இல்லை இதெல்லாம் எம்பாலில்லை பூர்ணவரம்
கேட்டே னதற்குப் பிறிதில்லையே இனிக்கேட்கவும் நான்
மாட்டேன் உன் மேற்பழி போட்டேன், மதுரை மனோன்மணியே.

நான் தேடிச் சேர்த்த பொருள் ஒன்றுமில்லை; எனக்குப் பொருளைத் தருபவரும் இல்லை; உழவுத் தொழிலைச் செய்வதற்கு ஏரும் இல்லை; இவை போன்ற பிற பொருள் ஒன்றுமில்லை; நின்னிடம் முழுவரம் கேட்டேன்; மதுரையில் வீற்றிருக்கும் மனோன்மணியே! நான் கேட்டதற்கு விடை தரவில்லையே! இனிமேல் உன்னிடம் நான் ஒன்றையும் கேட்க மாட்டேன்; உன்மேல் பழியைச் சுமத்தினேன். 37

591. *என்னை வெளியே தள்ளினாலும் போகேன்!*

உள்ளக் கவலையெலாம் விள்ளும் போதும் உனதுமனம்
எள்ளத் தனையிரங் காதிருந்தாய் எளியேன் இனிமேல்
தள்ளப் புறத்தினில் என்றாலும் போவது தானிலைபொன்
வள்ளத்து அமுதுண்ணும் கிள்ளாய் கடம்ப வனவல்லியே.

பொன் கிண்ணத்தில் உணவு கொள்ளும் கிளியைப் போன்றவளே! கடம்ப வனத்தில் உள்ள கொடியைப் போன்றவளே! என் மனத்தில் உள்ள துன்பங்கள் எல்லாவற்றையும் சொல்லும்போதும் உன் மனத்தில் எள்ளளவு கூடக் கருணை காட்டாமல் இருந்தாய். இனிமேல் என்னை நீ வெளியே தள்ளுமாறு ஆணையிட்டாலும் நான் உன்னை விட்டு அப்பால் செல்ல மாட்டேன். 38

592. *அருள் செய்யாத அற்புதம் என்ன?*

எப்படி எப்படிச் சொன்னாலும் நானிரங் கேன்எனவே
அப்படி அப்படி நீயிருக் கின்ற அதிசயத்தை
இப்படி இப்படி யென்று கிலும்எனக் கேதெரியச்
செப்படி செப்படி அம்மா மதுரைச் சிவாநந்தியே.

மதுரையில் வீற்றிருக்கும் அம்மையே! நான், என் குறைகளை எப்படி எப்படிச் சொன்னாலும், நீ மனம் இரங்கி அருள் செய்யாமல், முன்னிருந்த அப்படியே இருக்கும் அதிசயத்தை இப்படி இப்படி என விளக்கியேனும், தாயே எனக்குத் தெரியுமாறு சொல்வாயாக! 39

593. *நின்னைக் காண முப்பத்திரண்டு கண்கள் வேண்டும்!*

செப்பத் தில்உன்னைத் தொழஆ யிரங்கண்ணும் செல்லும்
பொல்லேன்
தப்பத் தவறத் தொழுதாலும் சொக்கர் தடம்புயத்துக்
கொப்பத் திரண்டகொங்காய்உன் அவயவம் ஒன்றுக்கொன்று
முப்பத் திரண்டுகண் வேண்டும் கண்டாய்என் முகத்தினுக்கே.

சொக்கநாதரின் பரந்த தோள்களுக்குப் பொருத்தமான முறையில் திரண்டிருக்கும் தனங்களையுடையவளே! நான் உன்னைச் செம்மையான முறையில் கண்டு தொழ ஆயிரம் கண்கள் வேண்டியதாயிருக்கும்; பொல்லாதவனாகிய நான் மிகத் தவறான முறையில் நின்னை வணங்கினாலும், உன்னு

டைய அங்கங்கள் ஒவ்வொன்றையும் காண்பதற்கு ஒவ்வொரு கண்ணுக என் முகத்திற்கு முப்பத்திரண்டு கண்கள் தேவை யாயிருக்கும். 40

594. வந்தியின் வல்வினைகளை வையையில் கரைத்தாய்!

துடியார் கரத்து மதுரேசரே, உம்மைத் துள்ளியசேல்
கொடியான் அடித்ததும் குற்றமன்றேகிழக் கோதையிவள்
அடியாளென் றேசுட்ட பிட்டையெல் லாம்அள்ளி அள்ளித்தின்று
வடியா நதியில் கரைத்துவிட் டீர்அவள் வல்வினையே.

உடுக்கையைக் கையில் கொண்டுள்ள மதுரையில் வீற்றிருப்பவரே! மீன் கொடியை உடைய பாண்டியன் உன்னை அடித்தது குற்றமுடையதன்று. முதியவளும் பிட்டு வாணிச்சியும் ஆகிய வந்தி உன் தொண்டராக எண்ணி, அவள் தந்த பிட்டினையெல்லாம் அள்ளி அள்ளியுண்டு, அவளுடைய தீய வினைகளையெல்லாம் வையை ஆற்றின் வெள்ளத்தில் கரைத்து விட்டாய்.

(வல்வினை என்பதற்கு வந்தியின் தொழிற்பங்கு எனவும் உரைக்கலாம்.) 41

595. என் வறுமையை ஒழிப்பாயாக!

கரம்சொன்னம் கண்டதுஎங் நாளோ தொடுத்த கலிக்கெவர்கள்
உரஞ்சொன்ன தோவந் திறுத்தது இவ்வேளை யுதவுனக்கே
பரம்சொன்னேன் உன்னம் பராமுக மேதிது பத்துலக்ஷம்
தரம்சொன்ன தாயெண்ணு வாய்சிவ காம சவுந்தரியே.

சிவகாம சுந்தரியே! என் கை எக்காலத்தில் பொன்னைத் தொட்டது? தொடர்ந்து வரும் வறுமைக்கு என்னைத் தொடர்ந்து பற்றுமாறு யார் சொல்லித் தந்தார்களோ? அவ்வறுமை என்னை வந்து அடைந்தது! அதைத் தீர்ப்பது உன் பாரம் எனக் கூறிவிட்டேன். இன்னும் கவனிக்காமல் இருப்பது எதனல்? இதைப் பத்து லட்சம் முறை எடுத்துக் கூறியதாகக் கொள்வாயாக! 42

596. சிவன் என் கையில் ஓட்டைத் தந்தான்!

ஒருபாதி மால்கொள, மற்றொரு பாதி யுமையவள்கொண்டு
இருபாதி யாலும்இறந்தான் புராரி இருநதியோ

பொருவா ரிதியில் பிறைவானில் சர்ப்பம் பிலத்தில்கற்ப
தருவான போச கொடையுன்கை யோடுஎன் கைதந்தனனே.

கற்பக மரத்தைப் போன்ற போசனே! சிவனின் உடலில் ஒரு பாதியைத் திருமால் எடுத்துக் கொள்ளவும் உமையம்மை ஒரு பாதியைக் கொள்ளவும், திரிபுரத்தை எரித்தவன் உடலில் இருபாதியும் இல்லாதவன் ஆனான். பெரிய கங்கை யாற்றைப் பெரிய கடலிலும், பிறையை வானத்திலும், பாம்பைப் புற்றுக்களிலும் போகுமாறு விட்டுக் கொடைத் தன்மையை உன் கையிலும், பிச்சை ஓட்டை என் கையிலும் தந்தான். 43

597. *மகனே, என் தலைவரை என்னிடமிருந்து பிரிக்கின்றாயே!*

அரும்பால காமுனம் பூமணம் சொற்பொரு ளாகமுயிர்
கரும்பாம் சுவையெள்ளும் எண்ணெயும் போலொத்த காதலரைப்
பெரும்பாலி னல்லன்னங் கங்கா சலத்தைப் பிரிப்பதுபோல்
சுரும்பாம் புலவர் யமன்ஆலை செக்கெனத் தோன்றினையே.

அருமை மகனே! உன் தந்தையாகிய என் கணவனும் நானும், உன்னைப் பெறுவதற்கு முன் மலரும் மணமும் போலவும், சொல்லும் பொருளும் போலவும், கரும்பும் இனிமையும் போலவும், எள்ளும் அதன் எண்ணெயும் போலவும் உடலும் உயிரும் பொருந்தி வாழ்ந்தோம். அத்தகைய அத்தலைவரை அன்னப் பறவை மிக்க பாலிலிருந்து நீரைப் பிரிப்பது போலவும், வண்டு மலரிலிருந்து தேனைப் பிரிப்பது போலவும், கற்றவர் நல்ல பொருளிலிருந்து தீயதைப் பிரிப்பது போலவும், இயமன் உடலினின்று உயிரைப் பிரிப்பது போலவும், ஆலை கரும்பினின்று சாற்றைத் தனித்து எடுப்பது போலவும், செக்கு எள்ளினின்று எண்ணெயைப் பிரிப்பது போலவும், என்னிடத்தினின்று பிரிப்பதற்குத் தோன்றினாய் 44

598. *உன்னைப் பெற்றது பெரும் பாக்கியம்!*

அரும்பாக் கியகொங்கை பாலாக் கியும்உங் கள்அப்பனெஞ்சை
இரும்பாக்கி என்னெஞ்சைப் பித்தனையாக்கிஅவ் வேந்திழையைக்
கரும்பாக்கி என்னையும் வேம்பாக்கி இவ்வண்ணம் கண்டனையே
பெரும்பாக் கியமல்ல வோமக னேயுனைப் பெற்றதுவே.

மகனே! அரும்பைப் போன்றிருந்த என் தனங்களைப் பால் ஊறுமாறு செய்தும் நின் தந்தையினது மனத்தை இரும்பைப் போன்று கடினமாகுமாறு செய்தும், என் நெஞ்சைப் பித்தனை போல அடிபடுமாறு செய்தும், நின் தந்தை விரும்பும் மங்கையை அவருக்குக் கரும்பு போல இனிக்குமாறு செய்தும், என்னை அவருக்கு வேம்பைப் போன்று கசக்குமாறும் செய்தனை. இத்தகைய உன்னைப் பெற்றது எனக்குப் பெரும் நல்வினைப் பயன் அன்றோ? 45

599. *எலும்பைப் பெண்ணாக மாற்றும் கல்வி பயின்று வருக!*

(தலைவன் கல்விக்காக, பிரியும்போது பாடியது)

விண்ணுக்கு மாமதி காயவெங் காம வெரிகொளுந்தப்
பண்ணுக்கு மாமொழி மாதங்க மாம்பஞ்ச பூதியம்போம்
கண்ணுக்கு மூக்குச் செவியாக்கை யற்ற கடத்திலங்கம்
பெண்ணுக்கு வார்தமைப் போலோதி வாரும் பிரிபவரே.

வானத்தில் ஒளிவீசும் சந்திரன் என் பெண்ணுக்கு வெப்பத்தைத் தரவும் கொடிய காதல் தீயானது கொளுத்தவும் செய்தலால், இனிய சொல்லைப் பேசும் அவள் மெலிந்து எலும்பானாள். ஐம்பூதத்தால் ஆகிய உடல் அழிந்துவிடும். இவனைப் பிரிந்து செல்லும் தலைவரே, கண், நா, மூக்கு, செவி, உடல் ஆகியவை இல்லாத குடத்தில் இருந்த எலும்பினைப் பெண்ணாக உயிர் பெற்றெழச் செய்த ஞானசம்பந்தரைப் போன்று கல்வியைக் கற்றுக் கொண்டு வருவீராக. 46

600. *தலைவன் இறக்கும் விதம்!*

உனக்கின்றி யான்செய்த குற்றமொன்று இல்லை
உனைப்பிரிந்தால்
வனக்குன்றி லேறி விழஅறி யேன்; வண்மை சேர்மயிலே
எனக்கென்று வட்டமிட்டு அண்ணாந்து விம்மி யிருக்குமுன்தன்
தனக்குன்றி லேறி விழுவேன்நின் அல்குல் தடாகத்திலே

மயில் போன்ற சாயலை உடையவளே! உனக்கு நான் இப்போது செய்த குற்றம் ஒன்றும் இல்லை. நான் உன்னைப் பிரிய நேருமானால், மலைமீது ஏறிக் கீழே விழுந்து இறப்பதை அறியேன். எனக்காகவே வட்டவடிவமாய் மேல்நோக்கி

எழுந்து பருத்துள்ள உன் முலை என்னும் மலையில் ஏறி உன் அல்குல் என்ற பொய்கையில் வீழ்வேன். 47

601. ஈயாதவரால் என்ன பயன்?

சுண்ணம்பு தீட்டநல் லாள்காட்ட மோதிரம் சூட்டமலர்க்
கண்ணாரைக் கூட்ட விரல்நான் கிருக்கக் கதிர்க் கம்பிபோல்
எண்ணா நடுவிரற் கேதாமு லோபருக் கேதுகண்டாய்!
கண்ணார் நுதலண்ணல் சேய்வணிகா, செந்தில் காத்தவனே!

நெற்றிக் கண்ணான சிவபெருமானின் மகனே! செட்டி என்ற பெயரினனே! திருச்செந்தூரில் வாழ்பவனே! சுண்ணம்பைத் தொட்டுத் தடவுவதற்குப் பெருவிரலும், மனிதரைச் சுட்டிக் காட்டச் சுட்டுவிரலும், கணையாழி அணிவதற்கு மோதிர விரலும், மலர்போன்ற கண்ணையுடைய பெண்களைச் சேர்க்கச் சுண்டுவிரலும் ஆக நான்கு விரல்கள் இருக்கின்றன. அங்ஙனம் இருக்கவும், கம்பி போன்ற மதிக்கப்படாத நடுவிரலால் என்ன பயன் உண்டாகும்? அதுபோன்றே, பிறர்க்குப் பொருளைத் தராத உலோபிகளால் என்ன பயன் உண்டு? 48

602. கீழ்மக்கள் தொடர்பு வேண்டா

நிணம்போதத் தள்ளிப் பெரும்பூதம் போலப்பின் நேற்றுச்செத்த
பிணம்போல் கிடந்து புரளுவர் காண்பிறர்க்கு ஈட்டிவைத்த
பணம்போன பின்புவி வேகமுண்டாகும்அப் பஞ்சைகள்வங்
கணம்போதும் போதும் கறுப்பாதென் மாவையிற் காவலனே.

கறுப்பன் என்னும் வள்ளலே! மாவைப் பதியில் வாழ்பவனே! உடலில் கொழுப்பு அதிகமாக உண்டாகப் பெற்று, பெரிய பூதத்தைப் போல முன்னாள் இறந்த பிணத்தைப் போலச் சிலர் படுத்துப் புரளுவர். அவர்கள் தமக்குப் பயன்படாமல் மற்றவர்க்குப் பயன்படுமாறு சேர்த்து வைத்த செல்வத்தை இழந்த பின், அவர்களுக்கு அறிவு உண்டாகும். வள்ளலே, நினக்கு அத்தகையவரின் நட்பு முற்றிலும் வேண்டியது இல்லை. 49

603. மாதுக்கு மன்மதன் தரும் துன்பம்!

ஏவைக்கும் கூன்சிலை தொட்டா னனங்க னிருவிசும்பின்
தீவைக்குந் திங்கட்குடையெடுத் தான்தென்றல் தேருகைத்தான்

காவைக்குங் கண்மணி கத்தூரி யீன்ற கறுப்பன்வரை
மாவைக்கும் பாவைக்கும் பூவைக்கும் போது வடுவைக்குமே.

மன்மதன் அம்பு தொடுத்து விடுதற்குரிய வில்லைக் கையில் எடுத்தான்;பெருவானத்தில் வெப்பத்தையுடைய சந்திரனாகிய குடையை எடுத்துப் பிடித்தான்; தென்றலாகிய தேனரச் செலுத்தினன்; கற்பக மரத்தைப் போன்ற தன்மையுடைய கண்மணி என்பவள் பெற்ற கறுப்பனின் ஆட்சி எல்லையுள், பெருமையுடைய பதுமை போன்ற மாதுக்கும் அம் மன்மதன் அம்பை எய்யும்போது வடுவை உண்டாக்குகின்றான். 50

604. கரந்தை என்ற ஊரில் உள்ள பெண்ணின் இயல்பு

பொன்னுகத் தார்பணி மாயோன் கரந்தைப் பொருப்பில்வரும்
மின்னுள் முகம்கண் டனஞ்சாயல் போல்பெற வேண்டியன்றோ
அந்நாட் கமல மலர்கடல் மேரு அணிமயிலும்
தன்னு லயனரி சங்கரன் வேலனைத் தாங்கியதே.

பொன் உலகத்தில் உள்ள தேவர்கள் வழிபடுகின்ற திருமாலினது 'கரந்தை' என்னும் ஊரில் பிறந்த மின்போன்ற இடையை யுடைய மாதின் முகம், விழி, தனம், சாயல் என்பவை போன்ற உருவத்தைப் பெறுவதற்காக அன்றோ, அக்காலத்தே தாமரை மலரும், பாற்கடலும், மேருமலையும், அழகிய மயிலும் என்பனவற்றுள் ஒவ்வொன்றும் நான்முகனை யும் திருமாலையும் சிவபெருமானையும் முருகனையும் தாங்கிச் சுமந்தன? 51

605. சிவபெருமான் ஒரு தெய்வமோ?

(இகழ்வது போல் புகழ்வது)

குண்டைக்கொருத்தனைக் கூத்தாடும் பித்தனைக்
குண்டுணியைக்
கண்டக் கறுப்பனைப் பிள்ளையைத் தின்னியைக் காணவயன்
மண்டைக் கரத்தனைக் கண்ணப்ப னெச்சிலை வாரியுண்ட
பண்டைப் பறையனை யோதேவ னென்று பகருவதே.

காளையை வாகனமாகக் கொண்ட பெருமானை, நடனம் ஆடும் பித்தனை, புறம் கூறுபவனை, கழுத்தில் கருமை உடையவனை, பிள்ளைக் கறியைத் தின்றவனை, எல்லாரும் காணுமாறு பிரமனின் தலையோட்டைக் கையில் உடையவனை, கண்ணப்பன்

இட்ட எச்சில் உணவை உண்டவனை, பராசக்தியை ஒரு பாகத்தில் உடையவனையோ தெய்வம் எனச் சொல்வது? 53

606. சிவகாமியின் இயல்பு

அந்தங் கரும்பள்ளி பாசாங்கு சத்திகண் ணம்படைச்சி
ஙைந்த விடைச்சி குறத்திக்கு மாமி நவில்வலைச்சி
சந்தம் புழுக்கச்சி பாம்பணை யோனுக்குத் தங்கச்சியாம்
இந்தப் பரச்சியை யோசிவகாமியென் றேத்துவதே.

அழகிய கரும்பு வில்லைத் தாங்கியவளும் (முடிவாக இருண்ட நிறத்தை யுடையவளும்), பாசமும் அங்குசமும் கையில் கொண்டவளும், (பசிய நிறமுடைய குசத்தியும்) கண் அம்பு போலக் கொண்டவளும் (பெருமையுடைய அம்படச்சியும்) நுட்பமான இடையை யுடையவளும் (தளர்ந்து இடைக்குலப் பெண்ணும்), வள்ளிக்குறத்திக்கு மாமியும், வலைவீசிய சிவனுக்கும் மனைவி எனச் சொல்லத்தக்க வலைச்சியும், சந்தனம் புனுகு சேர்ந்த கச்சினை அணிந்தவளும், பாம்பின் மேல் அறிதுயில் கொள்ளும் திருமாலுக்குத் தங்கையுமான இந்தப் பராசக்தியையோ சிவகாமி என எல்லாரும் வழிபடுவது? 54

607. என் சஞ்சலம் என்று நீங்கும்?

நிலமே ழளந்த நெடுமால்பணியும் நிமலர் பொன்னம்
பலமேவு தில்லைப் பதிநட ராசர் பணிவரையிற்
கலமே திமிங்கல மேசங்க மேநற் கயிலனமே
சலமே சலஞ்சல மேயென்று தீருமென் சஞ்சலமே.

ஏழ் உலகங்களையும் தன் அடியால் அளந்த திருமால் வணங்குகின்ற தில்லைப் பொன்னம்பலத்தில் நடனம் ஆடும் சிவபெருமானது குளிர்ந்த கடல் எல்லையில் இருக்கும் கலமே! திமிங்கலமே! சங்கே! நல்ல அன்னமே! நீரே! ஆயிரம் வலம் புரி சூழ்ந்த சங்கே! என் துன்பங்கள் என்று நீங்கும் 55

608. இப்பெண்ணுக்கும் அடக்கயில்லை!

பொரடக் கயம்பிடி யென்ருன் மதனுமிப் பூவையுமா
தாடக் கமுஞ்சற் றறிந்தில ளேமலர்த் தாள்வணங்கா
முரடக் கவுடக் கொடிமன்னர் வெற்றி முடிபிடுங்குங்
கரடக் களிற்றண்ண லேவல்லை மாநகர்க் காளத்தியே.

தன் அடியிணைப் பணியாத வன்மைமிக்க கவுடநாட்டு மன்னரின் முடிகளைப் பறிக்கின்ற வெற்றியுடைய மதம் கொண்ட யானையின் மீதுவரும் வீரனே! வல்லை என்னும் ஊரில் வாழும் காளத்தி என்னும் வள்ளலே! மன்மதனும் போர் செய்வதற்குக் கொடியெடுங்கள் என ஏவினான்; இந்தப் பெண்ணும் பொதுவாகப் பெண்களுக்கிருக்க வேண்டிய அடக்கத்தைச் சிறிதுகூட அறிந்து கொள்ளவில்லை! 56

609 *கவிதை என்னும் பெண்ணின் சுற்றத்தார்!*

கவியாகு மாதினைப் பெற்றோன் புலவன்கற் றோன்அனையாம்
செவியாரக் கேட்டங் குணர்வான் சகோதரன், செந்தமிழ்க்கு
தவியா வருமை யறிவான் பதியவன்; தானிலையேல்
புவியாகு மண்ணுக்கு ளென்பல மாம்அந்தப் பூங்கொடிக்கே

கவிதை என்னும் பெண்ணுக்குத் தந்தை கவிஞன் ஆவான்; அந்தக் கவிதையைக் கற்றவன் தாயாவான்; அதைச் செவி யாரக் கேட்டு அதன் பொருளை உணர்ந்தவன் சகோதரன் ஆவான்; செந்தமிழ்க்கு உதவும் இயல்புடன் அச்செயலின் அருமையை அறிபவன் கணவனாவான்; அவனும் இல்லை யாயின், அந்தக் கவிதை என்னும் காரிகைக்கு இம்மண்ணில் என்ன பயன் உண்டாகும்? 57

610. *காளத்தியார்க்குச் சுற்றத்தார் இல்லாததன் விளைவு*

சேராத வேடன் செருப்பா ல்அடிக்கவும் தீண்டவும்தன்
நீர்வா யுமிழவும் உச்சிட்டம் போடவும் நீண்டசிலைத்
தாரா லடிக்கவும் கண்ணீர் ததும்பவும் தாய்தமர்கள்
ஆரா கிலுமில்லை யோதிருக் காளத்தி யப்பனுக்கே

திருவுடலை நெருங்குதற்குக் கூடாத வேடரான கண்ணப்பர் செருப்பால் உதைக்கவும்(மேனிமேல் உள்ளவற்றைக் காலால் விலக்கவும்), தொட்டுத் தழுவவும், வாயினின்று தண்ணீரை மேலே உமிழவும், எசசில் பொருந்திய உணவைப் படைக் கவும், அருச்சுனன் நீண்ட வில்லால் அடிக்கவும், கண்ணி னின்று நீர் பொழியவும் நிகழ்ந்ததற்குக் காரணம், திருக்காளத்திப் பெருமானுக்குத் தாய் சுற்றத்தினர் முதலிய வர் யாவரும் இல்லாமைதானே? 58

611. சிவபெருமான் ஏன் பாம்பு அணிந்தார்!

ஒட்டாகவெட்டியும் கால்பொன்னில் மாப்பொன் னுபாயமதாத்
தெட்டா திரான்;பணி செய்யாதிரான்; செம்பொன் மேருவினைக்
கட்டாகக் கட்டிக் கடுகள வாய்நிறை காட்டவல்ல
தட்டானுக்கு அஞ்சியல் லோஅணிந் தான்சிவன் சர்ப்பத்தையே

தட்டான், பிறர் தரும் கால் வராகன் பொன்னில் ஒரு மா அளவுடைய பொன்னாவது உரைக்கல்லில் ஒட்டிக்கொள்ளு மாறு தேய்த்தும் தந்திரமாகக் கவர்ந்து கொள்ளாமல் இருக்க மாட்டான்; ஆபரணங்களைச் செய்யாமலும் இருக்க மாட்டான்; பொன் மலையாகிய மேரு அளவுள்ள பொன்னையும் சுருக்கிக் கடுகின் கனமுடையதாக நிறுத்துக் காட்டும் வல்லமையுடையவன். அத்தகைய தட்டானுக்கு அஞ்சி யன்றோ, சிவபெருமான் பாம்பை அணியாக அணிந்தார்! 59

612. காதலர்க்கு இன்பத்தைத் தருவது எப்போது?

ஏராட்டும் பூந்தொங்கன் மோகனக் காரற் கினியசுகம்
பாராட்ட நான்இனி ஆளல்லவே, பசும்பொற் குழவி
தாராட்ட வும்சங்கிற் பால்பிள்ளைக் கூட்டித் தடவி மஞ்சள்
நீராட்ட மையிடப் போமே எனக்குள்ள நேரமுமே

அழகிய மலர்மாலையை அணிந்த என் கணவர்க்கு இன்பத்தைத் தருவதற்கு இனித் தகுதியுடையவளாய் இருக்க இயலாது; ஏனென்றால் அழகிய குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டவும், அப்பிள்ளைக்குச் சங்கில் பாலைப் புகட்டவும், மஞ்சள் பூசிப் பிள்ளையை நீராட்டவும், கண் களில் மை பூசவும் எனக்குள்ள பொழுது கழிந்து விடுகின்றது 60

613. படிக்காசுப் புலவரின் பாடற்சிறப்பு

மட்டாரும் தென்களந்தைப் படிக்காசனுரைத்த தமிழ்
வரைந்த வேட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலு மூவுலகும் பரிமளிக்கும்
பரிந்தவ் வேட்டைத்

தொட்டாலும் கைம்மணக்கும் சொன்னாலும் வாய்மணக்கும்
துய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே பாட்டினுறு
நளினநந் தானே

தேன் மிகுந்த சோலை சூழ்ந்த தென் களந்தை நகரில் தோன்றிய படிக்காசுப் புலவரின் செய்யுட்கள் வரைந்த சுவடியை, பட்டுத்துணியால் மூடினாலும் அதன்மணம் மூன்று உலகங்களிலும் மணக்கும்; அன்புடன் அந்தச் சுவடியைத தொட்டால் தொட்ட கையானது மணம் கமழும்; அச்செய் யுளைப் பாடினாலும் பாடிய வாய்மணம் உடையதாய் விளங்கும்; அதனைத் தூய்மையான சேற்றில் விதைத்தாலும் பாட்டினது நயம் தமிழ்ப் பயிராக விளைந்து பயனை அளிக்கும். 61

614 *செங்குன்றையூரன் இருக்குமிடத்தில் இரவலர் எல்லாம்!*

ஆலெங்கே அங்கே அரும்பறவை ஆல்துயிலும்
மாலெங்கே அங்கே மலர்மடந்தை—கோலம்சேர்
செங்கே தகைமணக்கும் செங்குன்றை யூரன்எங்கே
அங்கே இரவலரெல் லாம்

ஆலமரம் எங்கு இருக்கின்றதோ அங்கே அதன் பழத்தை உண்ணும் பறவைகளும் இருக்கும். ஆல இலையில் பள்ளி கொள்ளும் திருமால் எங்கே இருக்கின்றாரோ, அங்கே திரு மகளும் இருப்பாள். அழகிய செந்தாழை மணம் வீசுகின்ற செங்குன்றையூரின் தலைவன் எங்கு இருக்கின்றானோ, அங்கே இரவலர் எல்லாரும் இருப்பர். 62

615. *நெருப்பு வட்டமான நிலா யாரைச் சுடுமோ!*

ஊரைச் சுடுமோ வுலகந் தனைச்சுடுமோ
ஆரைச் சுடுமோ அறியேனே—நேரே
பொருப்புவட்ட மானமுலைப் பூவையரே இந்த
நெருப்புவட்ட மான நிலா

மேலே எழுந்து வட்டமான தனங்களை உடைய தோழியரே! இந்த நெருப்பால் ஆகிய வட்டமான சந்திரனின் ஒளியானது ஊரைச் சுடுமோ! அல்லது உலகத்தையே சுட்டுவிடுமோ? இன்னும் யாரை அழிக்குமோ? நான் அறியேன்! 63

616. காளத்தியின் கையே கை

நற்றோ ரணவீதி நண்ணும்வல் லைக்காளத்தி
கற்றோர் தமக்களிக்கும் கையேகை—மற்றோர்கை
வேற்கை அலகைமுகை வேட்கை பலகைநகை
காங்கை அழுகைவிழு கை

தோரணங்கள் தொங்கவிடப்பட்ட தெருக்களை உடைய வல்லை என்னும் நகரில் இருக்கும் காளத்தி என்னும் வள்ளலின் கற்றவர்க்குப் பரிசு அளிக்கும் கைதான் சிறந்த கையாகும். மற்றவரின் கையானது வேங்கை, அலகை, முகை, வேட்கை, பலகை, நகை, காங்கை, அழுகை, விழுகை என்னும் சொற்களில் உள்ள 'கை' என்னும் விகுதியைப் போன்றதாகும். 64

617. என் வறுமை நீங்காததற்குக் காரணம்

போசநீ யோர்புயலாப் பூமுழுதும் பொன்மாரி
வீசுவா யங்கதிலோர் விந்தேனும் பேசும் என்மேல்
பட்டதிலை என்வறுமை பாரக் குடையாகி
முட்டக் கவித்திடுத லால்

போசனே! நீ ஒப்பில்லாத கொடை முகிலாக விளங்கி உலக முழுவதும் பொன்மழை பெய்கின்றாய்! ஆனால் என் வறுமை என்ற குடையானது விரிந்து பரந்து முழுவதும் என்னை மூடி விடுகின்றது; அதனால் நின் புகழைக் கூறும் என் உடல்மேல், நீ சொரியும் பொன் மழையின் ஒரு துளிக்கூட விழுவதில்லை 65

618. பாண்டியனார் ஊரை அழிப்பதற்குக் காரணம் என்ன?

(நாணிக்கண் புதைத்தல்)

காலையர விந்தங் கழுநீரு டன்கலந்தால்
மாலையர விந்தம் மயக்காதோ—பாலைப்
பழிக்கின்ற மென்மொழியீர் பாண்டியனார் ஊரை
அழிக்கின்றது என்னோ அது

சுவையால் பாலினை வெல்லும் மென்சொல்லை யுடையவளே! காலைத் தாமரை போன்ற நின் கையானது செங்கழுநீர்ப் பூவைப் போன்ற உன் விழிகளுடன் சேர்ந்து அதை மூடினால், மாலைக் காலத்துத் தாமரை போன்ற உனது தனம் எனக்கு

மயக்கத்தை உண்டாக்காதா? பாண்டியன் கூடலை (புணர்ச்சியை) அது தடுத்துக் கெடுக்கின்றது! இது என்ன அநியாயம்!

விளக்கம் : மதுரை—கூடல்; அதாவது புணர்ச்சி. தலைவி நாணத்தால் கைகளால் கண்ணை மூடிக்கொள்கிருள். அவ்வாறு செய்வது புணர்ச்சிக்கு இடையூருக இருக்கின்றது என்பது கருத்து. காலை அரவிந்தம் மலர்ந்த தாமரை; கை. மாலை அரவிந்தம்—குவிந்த தாமரை; தனம். கழுநீர்—செங் கழுநீர் மலரைப் போன்ற கண். 66

25. காளிமுத்துப் புலவர் பாடல்கள்

619 மாது அனுப்பினுள் தூது!

(தோழி கூற்று)

(முதல் ஆறு செய்யுட்கள் மயிலைக் குழந்தை வேல் முதலியார் மீது பாடியவை)

நெல்லைச்சொன் ஞப ரணத்தைக்கைம் மாவை நிதம் நிதமும்
வெல்லச்சொன் ஞவலர்க் கீயும் குழந்தை விசயநின்பால்
செல்லச்சொன்ஞள் என்னை இப்போதென் மையலைத் தீர்த்தி டென்று
சொல்லச்சொன் ஞளந்த மின்ஞள்பன் ஞள்மலர்ச் சோலையிலே.

நெல்லினையும், தங்க நகைகளையும், யானைகளையும் நாள் தோறும் புலவர்களுக்குக் கொடுக்கின்ற குழந்தை வேலனே! பல புதுமலர்கள் மலர்ந்துள்ள சோலையில் உள்ள அந்தப் பெண், என்னை உன்னிடம் செல்லுமாறு உரைத்தாள். இப்போது காம மயக்கத்தை தணிக்க வேண்டும் எனக் கூறுமாறு இயம்பினுள்.

620. குழந்தை வேலன் கூடாதபோது...!

(தலைவி கூற்று)

பழுத்தான் மரத்திற் பறவையைப் போலநற் பாவலர்க்குக்
கொழுத்தான் வழங்கும் குழந்தையென் கொங்கையைக் கூருகிரால்
அழுத்தாத வேளையில் வெங்கீர்பன் னீர்மதி யும்மழல்சேர்
கொழுத்தான் மதனும் கொழுத்தான் பருவக் குறிப்பறிந்தே.

பழுத்த ஆலமரத்தில் கூடும் பறவைகளைப் போன்ற, நல்ல புலவர்களுக்குப் பசுக்களைத் தரும் குழந்தை வேலன், என் தனங்களில் கூர்மையான நகங்கள் பதியுமாறு செய்யாத போது குளிர்ந்த நீரும் வெந்நீராகின்றது; சந்திரனும் தீயில் இட்டுக் காய்ச்சிய கலப்பையின் நுனியைப் போலத் தோன்றுகின்ருன். மன்மதனும் என்னைத் துன்பம் செய்ய வேண்டிய நேரத்தை உணர்ந்து துன்பம் செய்வதில் வெற்றி உடையவனுனுன்.

குறிப்பு : பழுத்தால்—பழுத்த+ஆல். (1) கொழுத்தான்—கொழுத்த+ஆன். (2) கொழுத்தான்—கொழு+தான். 2

631. நன்ருள் இந்நாள்! நின்னை வரச் சொன்ருள்!
(தாய் இரங்கல்)

பொன்ஞர் மருமத்தன் பூம்பாவை வேலப்ப பூபனருள்
மன்னு குழந்தைக் குருநாதநீத வரோ தயனே
பன்னுள் மலர்க்குழற் பின்னுளெந் நாளும் பரிந்தணைய
நன்னுளிந் நாள்வரச் சொன்னுள்மின் னுள்மண நாளென்னவே.

திருமகள் வாழும் மார்பினனுன பூம்பாவை வேலப்பன் என்பவன் பெற்றெடுத்த மன்னனே! குழந்தை வேலனுன குருநாதனே! நீதியையுடையவனே! வரத்தால் தோன்றிய வனே! பல மலர்கள் கூடிய கூந்தலையுடைய என் பெண் திருமணம் செய்த நாளினைப் போல் எப்போதும் அன்புடன் தழுவதற்கு நல்ல நாளான இன்று நின்னை வருமாறு வேண்டினுள். 3

622. நாகத்தை மறைத்துக் குழலைக் காட்டுவது சிறந்த தாகாது!

(நாணிப் புறங்காட்டல்)

மாக மழைக்கரன் பூம்பாவை வேலப்பன் மைந்தன்மின்னுர்
மோகன் குழந்தைக் குருநாதன் வெற்பினின் மோடிவைத்துப்
பாக மொழிக்குழன் மாதே விரித்துப் படமெடுக்கும்
நாக மறைத்துக் குழனமக் கீத னலமல்லவே.

கரும்பின் பாகைப் போன்ற இனிய சொல்லும் கூந்தலும் உடையவளே! வானத்து மேகத்தைப் போன்ற கொடைத்

தன்மையுடையவனும், பூம்பாவை வேலப்பனின் மகனும் பெண்டிர்க்கு மோகத்தை அளிப்பவனும் ஆகிய குழந்தை வேலனின் குன்றில் சீற்றம் கொண்டு படத்தை எடுத்துக் காட்டும் பாம்பினை ஒளித்துக் கொண்டு குழல் என்ற இசைக் கருவியை நமக்குத் தருவது சிறந்ததாகாது.

விளக்கம் : ஒரு பெண் வெட்கம் கொண்டு திரும்பி நின்றதைக் குறித்துப் பாடப்பட்டது. பாம்பின் படத்தைப் போன்ற அல்குலைக் காட்டாமல் கூந்தலைக் காட்டுவது தக்கதன்று என்பது கருத்து. நாகம் — மலை எனவும் கூறலாம். எனவே மலை போன்ற மார்பை மறைத்துக் கொண்டு கூந்தலைக் காட்டல் தககதன்று எனவும் உரைக்கலாம். 4

623. தத்தையே, தலைவரிடம் தூது சென்றுவா!

(கிளிவிடு தூது)

போதத்தை மேவு மயிலைக் குழந்தைக்குப் போர்மதன்செய்
ஏதத்தை யும்குயி லுதத்தை யும்தனக்கிண்ணத்திளுல்
மோகத்தை யும்துயி லாதத்தை யும்மயன் முட்டுதென்றல்
வாதத்தை யும்தரி யாதத்தை யும்சொல்லி வாதத்தையே.

கிளியே, ஞானத்தை விரும்பும் மயிலைக்குழந்தை வேலவரிடம் போர்செய்யும் மன்மதன் செய்கின்ற துன்பத்தினையும், குயில் ஓசையால் உண்டாகும் துன்பத்தையும், தனமாகிய கிண்ணத்தின் நிறைவையும், நான் தூங்காமலிருப்பதையும், காம இன்பத்தை மிகுதிப்படுத்தும் தென்றல் செய்யும் இடையூற்றையும், இவற்றைப் பொறுக்க இயலாமல் இருப்பதையும் சொல்லி விட்டு வருவாயாக! 5

624. ஆட்டைப் பலியிடுவதால் என்ன பயன்?

(வெறி விலக்கல்)

வண்டாங் கிசைபயின் மாலையன் வேலப்பன் மைந்தனிதி
கொண்டான் கிளையை வளர்த்தான் குழந்தைக்கு வட்டின்
மின்னே
பண்டாங் கிசையினள் மலர்கொண்டு பாம்பன் குளத்தினடுக்
கண்டாங்கி யைக்கிழித் தாலென்ன பாவம் கருதுவதே.

வண்டுகள் பாடும் மலர்மாலை யணிந்தவனும், வேலப்பனின் மகனும், மிக்க செல்வத்தையுடையவனும், உறவினரைப்

பேணியவனும் ஆகிய குழந்தை வேலவனின் மலைமீது மின்னல்கொடி போன்ற பெண்ணே, பண்போல மொழியினைப் பேசும் தலைவி மயக்கம் அடைந்ததற்காகப் பாம்பை அணிந்த சிவபெருமானின் நெற்றியில் உள்ள தீக்கடவுளின் ஊர்தியாகிய ஆட்டினைப் பலியிடுவதால் என்ன பயன்? அச்செயல் பாவமாகும்; அதைச் செய்ய எண்ணலாமோ?

விளக்கம்: கண்டாங்கியைக் கிழித்தால் — கண் + தாங்கியை + கிழித்தால்; சிவபெருமானின் நெற்றிக்கண் தீ மயமானது. அத்தீக்கடவுளைத் தாங்குவது ஆடு; எனவே, தீக்கடவுளின் வாகனமான ஆட்டைப் பலியிட்டால் எனப்பொருள் கொள்ளப்பட்டது. கண்டாங்கியைக் கிழித்தால்—சேலையைக் கிழித்தால் என்ற தொனிப்பொருள் கொள்ளலும் கூடும். 6

625. தஞ்சியின் தனங்கள்

வனக்கொந் தளவஞ்சி பூஞ்சோலைத் தஞ்சி வளருமிரு
தனக்குன்று செய்யும் தொழில்சொல்ல வோதமியேனைக்
கண்டால்
கனக்கும் புளகிக்கும் பாரிக்கும் பூரிக்கும் கண்கறுக்கும்
சினக்கும் தமக்கு மெனக்கு முண்டாக்குந் தினஞ்சண்டையே

அழகிய கூந்தலையுடையவளே! பூஞ்சோலையில் வாழும் 'தஞ்சி' என்பவளுடைய வளர்ந்து வரும் இயல்பையுடைய இரண்டு தனங்களாகிய மலைகள் தனியாக என்னைக் கண்டால் அவை செய்யும் தொழிலைச் சொல்லவோ? அவை என்னைக்கண்டதும் பருக்கும்; மயிர்சிலிர்ப்புக் கொள்ளும்; விரிவடையும்; விம்மி மேலெழும்; அவற்றின் காம்புகள் கருமை அடையும்; சினம் கொள்ளும். ஆகையால் அவற்றிற்கும் எனக்கும் எப்போதும் போர் நடந்து கொண்டே இருக்கும். 7

626. என் மகள் மீது மன்மதன் அம்பு எய்கிறானே!

சரராச சம்பு வைரியென் மாது சரீரமெல்லாம்
பொரராச ரத்துக் கிவள்பொரு ளோபசும் பொற்கிரண
சுரராச திவ்ய கிரீடவி பாடத் தொடித்தடக்கைப்
பரராச ராவண ராமா பராக்கிரம பாண்டியனே.

தேவரின் மன்னனான இந்திரனின் பசும்பொன்முடி கீழே விழுமாறு வளை என்ற ஆயுதத்தை எறிந்தவனே! தொடியை அணிந்த கையை யுடைய பகையரசனான இராவணனுக்கு,

இராமனைப் போன்றவனே! பராக்கிரம பாண்டியனே! மலர் அம்பு தொடுப்பதில் வல்ல சிவபெருமானின் பகைவனான மன்மதன், என் பெண்ணின் உடல் முழுவதும் அம்பைச் செலுத்திப் போரிட வல்லவனாய் இருக்கின்றான்; அந்தப் போருக்கு இவள் இலக்காவது தக்கதோ? 8

விளக்கம் : இவள் மன்மதன் கணையால் வருந்துவாள்; ஆதலால் இவளுக்கு அருள் காட்டி அணைவாயாக என்பது கருத்து.

சரராசன்—அம்பு எய்வதில் வல்ல மன்மதன். சம்பு வைரி—சிவப்பகைவனான மன்மதன். சுர ராசன்—இந்திரன். பர ராசன்—பகை மன்னன். பொர ராசர்—போர் செய்ய வல்லவராய் உள்ளார்.

627. *மன்மதனுக்கு விலங்கிடக் கூடாதா?*

காளை முகிற்குல மெல்லாம் விலங்கு கடிந்திட்டநீ
வேளையு மப்படிச் செய்குலே யேவிளை நெல்வயலில்
வாளை குதித்து வளர்பூங் கமுகின் மடலொடியப்
பாளை முடுக்குந் துறைவா பராக்கிரம பாண்டியனே.

நெல் விளையும் வயல்களில் மீன்கள் துள்ளி அருகில் இருக்கும் பாக்கு மரங்களின் மடல்கள் ஒடியுமாறு பாய்ந்து பாளையை முரிக்கும் வளம் வாய்ந்த துறையை யுடையவனே! பராக்கிரம பாண்டியனே! எருதைப் போன்ற கரிய மேகக் கூட்டத்தை எல்லாம் விலங்கு பூட்டிய நீ இந்த மன்மதனையும் அங்ஙனம் செய்யாது விட்டு விட்டாயே! 9

628. *சந்திரன் தியாகி விட்டான்!*
(தாய் இரங்கல்)

ஆர்க்குங் குளிரு நிலவுயர் கோனின் எலங்கல்பெரு
வார்க்குங் குமமுலையாட்கன லாகும் வடக்குந்தெற்கும்
மேற்குங் கிழக்கு மொருவெளுப்பாய் நின்று விண்ணையெட்டிப்
பார்க்கும் புகழுக் கிறைவா பராக்கிரம பாண்டியனே.

வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு ஆகிய எல்லாத் திசைகளிலும் பரவி, வானுலகத்திலும் செல்லும் புகழையுடைய தலைவனே! பராக்கிரம பாண்டியனே! உயர்ந்த நீதியைச்

செலுத்தும் உன்னுடைய மாலை கிட்டப்பெறாத கச்சினையும் குங்குமத்தையும் உடைய முலைகளையுடைய என் மகளை எல்லார்க்கும் குளிர்ச்சியுண்டாக்கும் சந்திரனின் ஒளி தீயாகத் துன்புறுத்துகிறது. ஆகவே, அவளை நீ அணைவாயாக! 10

629. *வாழைக் குருத்தின் குளிர்ச்சியையும் பொறுக்க மாட்டாள்!*

(தாய் இரங்கல்)

கூரம் பொறுத்த விழியாள் கதலிக் குருத்திலிட்ட
ஈரம் பொறுக்க வறிந்தில ளேயிந்திர னிட்டசெம்பொன்
ஆரம் பொறுத்த புவிமீதி லாயிர நாவுரக
பாரம் பொறுத்த புயலே பராக்கிரம பாண்டியனே.

இந்திரனால் அணிவிக்கப் பெற்ற கனத்த மாலையை அணிந்த வன்மையுடைய தோள்களில், ஆயிரம் நாவையுடைய ஆதி சேடன் தாங்கும் உலகச் சுமையைத் தாங்கிய மேகம் போன்றவனே! பராக்கிரம பாண்டியனே! கூர்மையான அம்பைத் தன் வடிவ அழகால் வென்ற இப்பெண் வாழையின் குருத்தில் உள்ள குளிர்ச்சியையும் பொறுக்க முடியாதவளாக உள்ளாள்! இவளுக்கு அருள் செய்வாயாக! 11

630. *பிறைச் சந்திரனின் ஒளியையே இவள் பொறுக்க வில்லை!*

(தாய் இரங்கல்)

வெறிக்குங் குமக்கொங்கை மீமே லிளம்பிறை வெள்ளைநிலா
எறிக்கும் பொழுதுவந் தாயிலை யேயிலங் காபுரியைக்
குறிக்கின்ற ராவணன் பொன்முடி பத்துங் குரங்கைவிட்டுப்
பறிக்கின்ற சண்பக மாறா பராக்கிரம பாண்டியனே.

இலங்கையைத் தனக்கே உரியது என எண்ணிய இராவண னின் தலைகள் பத்தையும் அனுமானை அனுப்பிப் பின்னர் போர் செய்து வெட்டின திருமாலின் அம்சமான சண்பக மாறனே! பராக்கிரம பாண்டியனே! மணம் கமழும் குங்குமச் சாந்து பூசிய இவள் மார்பின்மீது இளம்பிறைச் சந்திரன் தன் கதிர்களை வீசும்போது அதைக் காண்பதற்கு நீ வராமல் போனாயே! 12

விளக்கம்: பிறைச் சந்திரனின் ஒளியே அவளை எவ்வாறு துன் புறுத்துகிறது என்பதைப் பாண்டியன் காணவேண்டும் என்பதும், அதனைக் காணின் அவன் அவளுக்கு இரங்குவான் என்பதும் கவியின் கருத்து. 12

631. நின் வேப்ப மாலையைத் தருவாயாக!

சுரும்பேய்க்கும் வாட்கண்ணி பங்காளர் கண்கொண்டு
சுட்டுவிட்ட
பெரும்பேய்க்கு வேப்பிலைக் காப்புத வாய்பிணர் சேர்பசுங்கோங்
கரும்பேய்க்கு மென்முலை யாரமு ணீட்டி யடர்ந்துகொல்ல
வரும்பேய்க்கு வானுத வுங்குல சேகர மன்னவனே.

கோங்கின் அரும்பை ஒத்த தனங்களில் உள்ள பாலைக் குடிக்கச் செய்து, தாக்கி உயிரைப் போக்கிப் வந்த 'பூத' என்ற அரக்கிக்கு அவளைக் கொன்று விண்ணுலகத்தைத் தந்த திருமாலின் அமிசமான குலசேகர பாண்டியனே! கரு வண்டுகளைப் போன்ற கண்களையுடைய உமையம்மையை ஒரு பாகத்தில் கொண்டு சிவபெருமான் நெற்றிக் கண்ணி னால் சுட்டு அழித்த மன்மதனான பேய் வராமல் தடுப்பதற்கு உன் வேப்ப மாலையாகிய காப்புப் பொருளை அளிப்பாயாக! 13

632. மாணிக்கம் தித்திக்கின்றது!

பூணித் திலத்துப் புயல்வீர மாறன் புகல்கவிக்கு
நாணிப் புலவர்செல் லாதென்செய் வாரிந்த நானிலத்தில்
ஆணிக் கனக மணந்தாரிற் பூமணம் யார்கொள்ளுவார்
மாணிக்கந் தித்திக்கில் என்னுகும் மற்ற மதுரங்களே.

இந்த வுலகத்தில் முத்தால் ஆன அணிகளை அணிந்தவனும், மேகத்தைப் போன்றவனும் ஆன பராக்கிரம பாண்டியன் என்பான் பாடும் பாட்டுக்கு, புலவர்கள் நாணமடைந்து செல் லாமல் என் செய்வர்! சிறந்த பொன்னானது மணத்தையும் பெற்றால் மலர்களின் மணத்தை எவர் பொருட்படுத்து வார்கள்? மாணிக்கக் கல் இனிமைச் சுவையைப் பெற்று விட்டால் மற்ற இனிமையுடைய பொருள்கள் என்ன சிறப்பைப் பெறும்?

விளக்கம் : மன்னன் கல்வி கற்றவனாயின், அது மற்றவர் கல்வியைவிடச் சிறந்தது என்பது கருத்து. 14

633. பாண்டியனின் கல்விச் சிறப்பு!

எண்ணீர்மை நூலுக் ககத்திய ஞமிவ னென்பதெல்லாம்
வெண்ணீர்மை யன்றி விரகல்ல வேயிவ் வியனுலகில்
பண்ணீர்மை தேரும் பராக்கிரம மாறன் பதங்கழுவும்
தண்ணீர் குடித்தல்ல வோகும்ப யோணி தமிழ்கற்றதே.

மதிக்கப்படும் தன்மையுடைய இலக்கியக் கல்வியில் இவன் அகத்திய முனிவரைப் போன்றவன் என்பதெல்லாம் அறிவில் லாத தன்மையாக ஆவதல்லால், அது உண்மையாகாது; பண்ணின தன்மையை ஆராயும் பண்புடைய பராக்கிரம பாண்டியனின் அடிகளைக் கழுவிய நீரைக் குடித்த பின் னன்றோ குடத்தில் தோன்றிய அகத்திய முனிவர் தமிழைக் கற்றுத் தேர்ச்சியுடையவரானார்! 15

634. என் பெண்ணுக்கும் நின் வேப்பமாலைக்கும் பொருத்தமில்லையோ?

(தாய் இரங்கல்)

காம்பு வடம்புக்க தோளாட்கு நின்றன் கழுத்திலிட்ட
வேம்பு தனக்கும் விதியில்லை யோவெகுண் டாய்ச்சியர்கள்
தாம்பி னடிக்கஉரலோடு கட்டத் தடைப்பட்டுச்சிப்
பாம்பில் நடிக்கின்ற மாலே பராக்கிரம பாண்டியனே.

இடைச்சியர் சினத்துடன் கயிற்றால் அடிக்கவும், உரலில் கட்டி வைக்கவும், அதனால் அசைவற்று நின்றும், காளிங்கன் என்னும் பாம்பின் தலையில் நின்று நடனம் செய்தும் விளை யாடல் நிகழ்த்திய திருமாலே! பராக்கிரம பாண்டியனே! மூங்கிலைப் போன்ற தோளையுடைய என் பெண்ணுக்கும் நின் கழுத்தில் அணிந்த வேப்பமாலைக்கும் பொருந்தும் விதி யில்லையோ! 16

635. என் மகள் துன்பம் நீங்க யாது செய்வேன்?

(தாய் இரங்கல்)

கடந்தூங்கு வேழப் பிடர்க்கே வரக்கண்டு கண்கள்முத்து
வடந்தூங்க வாடுங் கிளிக்கென்செய் வேன்மணி வாய்திறக்க
விடந்தூங்கு பாம்பின் படத்தின் மிசைதிமி தித்தியெனப்
படந்தூங்க வாடும் புயலே பராக்கிரம பாண்டியனே.

மணி பொருந்திய வாயைத் திறக்கவும் படம் தாழ்ந்து தொங்கவும் நஞ்சையுடைய காளிங்கன் என்ற பாம்பின் தலையில் நின்று 'திமி தித்தி' என்ற ஓசை உண்டாகுமாறு நடனம் செய்த மேகத்தின் நிறத்தைக் கொண்ட திருமாலின் அமிசமானவனே! பராக்கிரம பாண்டியனே! மதத்தைச் சொரியும் யானையினது பிடரியின் மீது அமர்ந்து நீ உலா வருவதைக்கண்டு, கண்ணினின்று நீர்த்துளிகள் முத்துமாலை போன்று கீழே சிந்த வருத்தமடையும் கிளி போன்ற என் மகளுக்கு நான் என்ன செய்வேன்? 17

636. பழிகாரர் உணரவில்லையே!

(நாரை விடுதூது)

சடம்பழுக் குங்கிழட்டுக் குருகேர் தலைசாய்ந்து நின்று!
முடம்பழுக் குங்கைதை நற்றுறைவிற் றெங்கு முப்புடைக்காய்
குடம்பழுக் குங்கொற்கை யான்குல சேகரன் கூடலிலென்
உடம்பழுக் குஞ்சிறையும்பழி கார ருணர்ந்திலரே.

உடல் முதுமையடைந்த அன்னங்களே! தாழைச்செடிகள் ஒரு பக்கமாகச் சாய்ந்து நிற்க, அவற்றின் வளைந்த இலைகள் பழுத்த நிறத்துடன் விளங்கும் நீர்த்துறைகளில் தென்னை மரத்தின் முற்றிய காய்கள் குடங்களைப் போலத் தொங்கும் கொற்கைத் துறைக்குத் தலைவனே! குலசேகர பாண்டியனது மதுரையில உள்ள என் உடல் நீராடாமையால் உண்டாகும் அழுக்கையும், எங்கும் செல்லாது நான் சிறையில் இருப்பது போல அடைபட்டிருப்பதையும் பழிகாரராகிய என் தலைவர் உணரவில்லையே!

விளக்கம்: சடம்—உடல்; கைதை - தாழை. தாழையினிடை தெங்கங்காய் காணப்படுகின்றன. தென்னை வளைந்திருப் பதால் அவ்வாறு தோற்றின. தலைவன் தன்னைக் கூடாமை யால் உடல் நீராடப் பெறவில்லை; ஆதலால் அது அழுக்கை யுடையதாயிற்று. 18

637. பாண்டியனே, நினக்கு அடங்காதவை இரண்டு!

(தலைவி இரங்கல்)

மற்றெருப்பி லாக்கொடைச் சண்பக மாறவ ரோதயநின்
வெற்றிக் கிரண்டுன் டடங்காத காரியம் மேருவிரிச்

சுற்றிலுங் கீர்த்தி யடங்காது நின்னுடைத் தோடமுவாக்
கற்றைக் குழலிக்கு மாலடங் காதிது கைகண்டதே:

உவமை சொல்வதற்கு முடியாத கொடைத் தன்மையை யுடைய சண்பக மாறனே! வரத்தால் பிறந்தவனே! உன் வெற்றிச் செயலுக்கு உட்படாதவை இரண்டு இருக்கின்றன. அவ்விரண்டுள் ஒன்று உன் புகழ் மேருமலைக்கு அப்பாற் பட்டும் செல்வதாகும். மற்றொன்று, உன் தோள்களை அணையப் பெறாத பெண்ணுக்கு ஆசையானது அடங்கப் பெறாதது; இது கண்ணால் காண்பதாகும். 19

638. அருள் செய்ய இது நல்ல தருணம்?

(தாய் இரங்கல்)

ஒருவா ணுதல்பண் டுளங்களிக்க வுயர்வான் முகடு கிழித்
தெழுந்து
மருவார் தருவின் மரங்கொணர்ந்த மதுரை வடிவே லதிதீர
அரவார் வேம்பின் பசுங்கண்ணி யந்தி யிறைவிக் கருளென்று
இரவாதிருக்க நீயளித்தற் கிரங்கா திருந்தா யிதுநாளே.

ஒளியுடைய நெற்றியைக் கொண்ட மனைவியான நப்பின்னை முற்காலத்தில் மகிழ்ச்சி அடையுமாறு, வான் உலகத்தில் சென்று பாரிசாத மலரைக் கொண்டு வந்தவன் திருமால்; அவனது அமிசமாய் மதுரையை ஆள்பவனே! அசைந்து ஓசையைச் செய்யும் வேம்புமாலையை மாலைப்பொழுதில் தலைவிக்குத் தரவேண்டும் என்று, உன்னை வேண்டிக் கொள்ளாமல் இருக்குமாறு நீ அருள் செய்யாமல் இருந்தாய். அத்தகைய அருள் செய்ய இதுவே நல்ல நாளாகும். 20

26. நமச்சிவாயப் புலவர் பாடல்கள்

639. 'செவி செட்டி'யே துன்பத்தைப் போக்குவார்!

அவிசெட்டி வாங்குசுரர்க் கிறநிகராய்வளமருவு அமரரென்றே
தவிசெட்டி மரம்போல வளர்ந்திருப்போர் தமைப்பாடோம்தனி
நக்கீரன்
கவிசெட்டி திருவடியைப் புகழ்வணிக னிசையுடனற் கவினுர்
தஞ்சைச்
செவிசெட்டி புாலடைந்தால் நமதுகுறை விட்டோடுஞ்
சேற்கண் மானே.

மீன் போன்ற கண்ணையுடையவளே! வேள்வியில் இடப்படும் ஆகுதியைப் பெற்றுக் கொள்ளும் தேவர்களுக்குத் தலைவனான இந்திரனுக்கு ஒப்பாகச் செல்வம் உடைய தேவர்கள் எனத் தங்களை எண்ணிக்கொண்டு, மற்றவர்க்குப் பயன் அளிக்காத எட்டி மரத்தைப் போல வளர்ந்து தாம் அமர்ந்த இருக்கையினை விட்டு எழாமல் இருக்கும் உலோபிகளை நாங்கள் பாடுவதில்லை. புலவர் நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படை முதலிய பாடல்களால் முருகனின் திருவடியை வணங்கும் வாணிகரான அழகுடைய 'செவி செட்டி' என்பவரது இடத்தைச் சேர்ந்தால் எம் குறைகள் எல்லாம் நீங்கும். 1

640. மன்மதன் என் மகளை வருத்துவதேன்?

(திருக்கோவலூர் தாண்டவராயன் மீது பாடப் பெற்றது)

பாங்குயர் பளிக்கு மேடைகொல் லுலையா
மாருதந் துருத்தியா நீடும்
பகர்நிலாக் கற்றை பதடியா மூடும்
படரிருட் குழாங்குடை கரியா
ஒங்கிய செக்க ருள்ளிடுங் கனலா
வுயர்பெரும் பனிகொடும் புகையா
உருவிலி யென்னுங் கொல்லனென் பொன்னை
யுருக்குமா றென்கொலோ உரையாய்
தூங்கிய விழியுந் தாம்புடைக் கயிறுந்
தூம்புறு காம்பியற் குழலும்
துவருடைத் துகிலுங் கவருடைக்கழியுந்
தொறுவிய ருறிபடு குடமும்
தாங்கிய கையும் மெய்யுமாய் நின்று
தண்ணளி பெய்யுமா முகிலே
தாண்டவராயா பாண்டவர்தூதா
தாழ்வில்சீர்க் கோவலா திபனே.

தூங்குவது போன்று விளங்கும் கண்களும், தாம்புக் கயிறும், துளையை உடைய மூங்கிலால் செய்யப்பட்ட குழலும், சிவந்த ஆடையும், பிளவுடைய கோலும், இடைச்சியர் உறியில் வைத்த குடமும் ஆகியவற்றைக் கையிலும் உடலிலும் சுமந்து நின்று கருணை மழையைப் பொழியும் சிறந்த

மேகமே! தாண்டவராயன் என்னும் பெயரையுடைய வள்ளலே! பாண்டவர்க்குத் தூதாகச் சென்ற திருமாலின் அவதாரமானவனே! திருக்கோவலூர்க்குத் தலைவனே! பக்கங்களில் உயர்ந்த பளிங்கு மாடம் கொல்லனின் உலையாகவும் தென்றல் காற்று பையாகவும், சந்திரனின் ஒளிக்கதிர்க் கூட்டம் உமியாகவும், பக்கத்தில் பரந்த இருளின் செறிவு கரியாகவும், செவ்வானம் உலையில் இட்ட தீயாகவும், மிக்க பனியானது கடுமையான புகையாகவும் கொண்டு உருவற்ற மன்மதன் என்ற கொல்லன் பொன்னைப் போன்ற என் பெண்ணை உருக்குவதற்குக் காரணம் எதுவோ? உரைப்பாயாக! 2

641. நீர் களவு செய்ததை நான் மெய்ப்பிப்பேன்!

மெய்யாரப் புலிகாணப் பொதுவி லாட்டை
மிகவெடுத்தீர் உமையாளுக் கொருபங் கீந்தீர்
பய்யாரப் பணமெடுத்தீர் ஐயா நீர்தாம்
பாரறியச் சக்கரத்தை மாலுக் கீந்தீர்
செய்யாரத் தடம்புடைசூழ் கருவை வாழும்
திருக்களா வீச்சுரரே தேவ ரீர்தாம்
கய்யார மழுவெடுத்துக் காட்டி னாலும்
களவும்மைக் கொண்டேநான் காண்பிப் பேனே.

வயல்களும் பொய்கைகளும் சூழப் பெற்ற 'கருவை' என்னும் ஊரில் களாமரத்தின் கீழ் வீற்றிருக்கும் இறைவரே! உடலில் மாலையாக அணிந்த பாம்பும் புலி முனிவரும் காணுமாறு சபையில் ஆட்டைஎடுத்தீர் (நடனம் செய்தீர்); உமையம்மையாருக்கு உடலில் ஒரு பகுதியை அளித்தீர்; பை போன்ற படத்தையுடைய பாம்பை அணிந்தீர் (பையில் உள்ள பணத்தை எடுத்தீர்); ஐயனே, உலகத்தவர் காணுமாறு சக்கராயுதத்தை (சக்கரம் என்ற காசினை)த் திருமாலுக்குக் கொடுத்தீர்; நீவிர் கையில் மழுவாயுதத்தை எடுத்துக் காட்டினாலும் (ஒன்றையும் எடுக்கவில்லை என்பதை மழுவேந்திச் சத்தியம் செய்தாலும்) நான் உம் செயலாலேயே களவு செய்ததை மெய்ப்படுத்துவேன் (களாமரத்தின் கீழ் இருப்பதைப் புலப்படுத்துவேன்.)

விளக்கம்: பையார் அப்பணம்—பசுமை நிறைந்த அப்பொன் பணம்; பசுமையாகிய பாம்பின் படம், சக்கரம்—சக்கராயுதம்;

சக்கரம் என்ற காசு, மழுவெடுத்துக் காட்டுதல்—மழு ஆயுதத்தைக் கொண்டிருத்தல்; சத்தியம் செய்தல். களவு—திருடு; களாமரம். 3

642. *காளத்தி நாதரைக் கழுகுகள் சுற்றுகின்றன!*

மான்பிடித்தீர் முயன்மிதித்தீ ரெவருங் காண
மன்றுதனில் ஆடெடுத்தீர் மகத்து வந்த
ஊன்பெருத்த யானையைக்கொன் றுரித்தீ ரிப்பால்
உரப்பான தலைக்கறிக்கு முவந்தீ ரையா
மீன்பொதிந்த விழிமடவாட் கொருபங் கீந்தீர்
மேலான வேடனெச்சில் மிகவே கொண்டீர்
கான்பொதிந்த காளத்தி நாதா உம்மைக்
கழுக்கள்வந்து சுற்றுவதுங் காணத்தானே

காடு சூழ்ந்த காளத்தி மலையில் வீற்றிருப்பவரே! நீவீர் மானை இடக்கையில் வைத்துக் கொண்டீர்; முயலகனின் மேல் கால் வைத்து அழுத்தினீர்; அனைவரும் காணுமாறு பொன்னம்பலத்தில் நடனம் செய்தீர் (ஆட்டை எடுத்தீர்); முனிவர் செய்த வேள்வியினின்று வெளிப்பட்ட உடல் பெருத்த யானையைக் கொன்று அதன் தோலை உரித்தீர்; மேலும் வன்மையுடைய பிள்ளைக் கறிக்கும் ஆசைப்பட்டீர்; மீன் போன்ற கண்ணையுடைய பார்வதிக்கு ஒரு பாகத்தைத் தந்தீர்; அன்பால் சிறந்த கண்ணப்பனின் எச்சில் கலந்த உணவை ஏற்றுக் கொண்டீர்; கழுகுகள் வந்து உன்னைச் சுற்றுவது வணங்குவதற்காகவே! (ஊன் உணவைஆசை கொண்டதால் போலும்!) 4

643. *நான்முகன் . . திருப்பணிக்கென்றே நின்னைப் படைத்தானோ?*

பருப்பதங்கள் ஒவ்வொருதூண் பாவுக்கல்
வளையாத பார மேரு
சுரிப்படங்காப் போதிகைநீ செய்தபணி
விடையையென்ன சொல்வே னையா
தருப்பொலியுங் கரதலமுத் திருளப்ப
சாமிநின்றன் தாய்பா லுன்னைக்
கருப்பணிமுன் திருப்பணிக்கென் றுருப்பணினுன்
மருப்பொலியுங் கமலத் தோனே,

கற்பக மரத்தின் தன்மையுடைய கையினரான முத்து இருளப்பன் என்ற பெயரை உடையவரே! மலைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தூணாகவும், அத்தூண்களின் மேல் பரப்பும் கல் வளையாத மேருமலையாகவும், சுருங்காத சிறு தூண்களை அமைத்து நீ செய்த ஆலயப் பணியின் இயல்பை என்னவென்று சொல்வேன்? முன்பே, நின் தாயிடத்தில், திருப்பணிக்குத் தக்கவன் ஆவாய் என்று நான்முகன் உன்னைக் கருவாகச் செய்து உருவம் பெறச் செய்தான்.

விளக்கம்: கருப்பணி—கரு+பண்ணி; கருவாகச் செய்து. உருப்பணி—உரு+பண்ணி; உருவாகச் செய்து. 5

644. முத்துராமலிங்கத் துரையின் ஆட்சி

சேதுபதி காத்தமுத்து ராமலிங்க துரைராசர் சிங்க மந்திரி
மாதுபதி முத்திருளப் பன்கொடிய வரிவேங்கை வளரா திக்கம்
கோதுறுபா மரக்காடு கருணீகர் மும்மதக்கொல் யானை மற்றோர்
மோதுபெரும் புலிக்காடு கல்விமான் களுந்திரிந்தால் மோசந் தானே.

சேதுபதி பெற்றெடுத்த முத்துராமலிங்கத்துரை அரச சிங்கம் ஆவார். அவர்க்கு அமைச்சராகிய முத்திருளப்பர் என்பவர் கொடிய வரிப்புலி. அவர்களது ஆட்சி நிலம் குற்றமுடைய எளிய மக்களின் காடு. கணக்குத் தொழிலைச் செய்பவர்கள் மும்மதத்தைப் பொழியும் கொல்லும் யானைகள். மற்ற அலுவலர்கள் தாக்கும் பெரும்புலிக் கூட்டம், இங்ஙனம் சிங்கம், புலி, யானை முதலிய விலங்குகள் உள்ள காட்டில் கல்வியாளர்கள் நடமாடுவது ஆபத்தை ஏற்படுத்தக் கூடியதே. 6

645. திருமாலின் நெற்றியில் உள்ள நாமம் சூலக் குறியாகும்!

ஞாலத் தெவரும் புகழ்குடந் தாபுரி நாதனெங்கோன்
காலப் புயல்வண்ணன் கண்மலர் சாத்தக் கருத்திலுன்னிச்
சீலத் தவனம் மடியானென் றியார்க்குந் தெரியவிட்ட
சூலக் குறியல்ல வோநாமம் யாதெனச் சொல்லுவதே.

உலகத்தில் எல்லாரும் புகழும்திருக்குடந்தையின் தலைவனான சிவபெருமான், கரிய மேகத்தைப் போன்ற திருமால், தன் கண்ணைப் பறித்து மலராக அருச்சித்ததால், சிவபெருமான் அந்தத் திருமாலைத் தன் அடியான் என மனத்தில் எண்ணி

அந்த உண்மையை அனைவருக்கும் தெரிவிக்குமாறு பொறித்த சூலக்குறியன்றோ திருமாலின் நெற்றியில் உள்ள நாமம்! இல்லையானால் அந்நாமத்தை வேறு எது என உரைப்பது? 7

646. திருக்கழுக்குன்றத் தலச் சிறப்பு

வியந்த நிசாசர னுமென்று சந்திரனும் வெஞ்சனிக்குப்
பயந்தவ னுமென்று பானுவும் வந்து பணியச்செம்பொன்
நயந்தரு செல்வக் கழுகா சலமது நண்புவைத்துச்
செயத்தந்த தால்மதி யாதவ ரென்னத் திரிந்தனரே.

இரவு வேளையில் உலவுபவன் என்று சொல்லப்படும் சந்திரனும் (இரவில் உலவுவதற்குக் காவல் தனக்குத் தேவை என்ற சந்திரனும்) கொடிய சனியைப் பெற்றவன் என்று சூரியனும் (சனியின் வன்மைக்கு அஞ்சியவன் என்பதால் சூரியனும்) வந்து வணங்கியதால், திருக்கழுக் குன்றமானது அன்பு கொண்டு அவ்விருவருக்கும் வெற்றியைத் தந்தது; ஆதலால் அவர்கள் எவரையும் மதியாதவர் எனச்சொல்லுமாறு அலைந்தார்கள் (மதி, ஆதவர் எனத் திரிந்தனர்).

விளக்கம்: சந்திரன் சூரியன் என்னும் இருவரும் திருக்கழுக் குன்றத்துக்கு வந்து வணங்கினார்கள். அதனால் அவர்கள் மேன்மையடைந்தார்கள். எனவே ஒருவரையும் மதியாதவர் ஆயினர் என்பதாம். மதியாதவர் என்பதை 'மதி ஆதவர்' என்று பிரித்து 'மதியும் ஆதவனும் எனத் திரிந்தனர்' என்பது இரண்டாம் பொருள். 8

647. தில்லைக் கற்பக விநாயகர் எல்லா நன்மையும் தருவார்

பொருகோட்டு வாரிநிலத்திற் குணங்கெட்ட பூரியரைத்
தருகோட்டுக் கொம்பென் றுரைத்தென் பயன்வருந் தண்டமிழீர்
வருகோட்டுத் திங்கண் முடிக்கூத்தர் தில்லை வனத்தில்வளர்
ஒருகோட்டுக் கற்பக மெல்லாந் தருந்தன்னை யுற்றவர்க்கே.

குளிர்ந்த தமிழைக்கற்ற புலவரே! கடலால் சூழப்பட்ட இந்த வுலகத்தில் நற்குணம் அற்ற கீழானவரைக்கற்பக மரத்தினது கொம்பு என்று சொல்லிப்புகழ்வதால் என்ன பயன்? வளைந்த பிறையை அணிந்த திருமுடியையுடைய சிவபெருமானின் தில்லைவனமாகிய சிதம்பரத்தில் வீற்றிருக்கும் ஒற்றைக்

கொம்பையுடைய கற்பக விநாயகர் தன்னைச் சேர்ந்தவர்க்கு எல்லா நன்மைகளையும் தருவார். 9

648. *சோலைமலை அழகர்மேல் பாடியது!*
(வெறி விலக்கல்)

வண்டுறை சோலை மலைப்பரி காரிவந் தாலிவளுக்
கண்டு படாதவிக் காமச் சுரம்விடு மாதலினல்
பண்டு பழகினர் போலிந்த வேளையிற் பாயசத்தைக்
கொண்டுவந் தீரிதிற் ரேடம் பிறந்திடுங் கோதையரே.

அன்னையரே! இவளுக்கு வரக் கூடாத இந்தக் காம நோய் வண்டுகள் திரியும் சோலைமலையில் உள்ள மருத்துவரான அழகர் வருவாரானல் குணமாகும்; ஆதலால் முன் மருந்து கொடுத்துப் பழகியவர்போல இப்போது பாயும் ஆட்டைப் பலி தருவதற்காகக் கொண்டு வந்தீர்கள்; இதனல் பாபம் உண்டாகும்.

விளக்கம்: பாயசம்—பாயும் ஆடு;அசம்—ஆடு; பால் உணவு.

649. *கண்ணீர்க் கடலை அடைக்க இயலாது.*
(தாய் இரங்கல்)

படைத்தாம வேற்கண்ணி கண்ணீர்பிர வாகப் பரவைபொங்கி
உடைத்தா லடைத்தற் குபாயமுண் டோநறை யூற்றிதழித்
தொடைத்தார் மவுலியிற் சும்மாடு கட்டிச் சுமந்துசுமந்து
அடைத்தா லடைபடச் சொக்கேயிது வையை யாறல்லவே.

சொக்கநாதரே! வேல் போன்ற கண்ணையுடையவளின் கண்ணீர்-வெள்ளமான'கடலானது உயர்ந்து எழுந்து நாணம் என்ற கரையை உடைத்து விட்டால், அந்த வெள்ளத்தைத் தடுப்பதற்கு வழி உண்டோ? தேன் சிந்தும் கொன்றை மாலையை அணிந்த சடையில் சும்மாடு வைத்து மண் கூடையை அதன்மேல் வைத்து!எடுத்துப்போய் அடைத்தால் அடைபட்டுவிட இது வையை யாறன்று; இது கடலாகும். 11

650. *ஆலவாய்ப் பெருமானின் அடியும் முடியும்!*

ஏழேழு சங்கத் துடனிருந் தானென் றியம்பு கின்றீர்
பாழெம்மை யுற்றிடு மானிட ரேசொக்கர் பண்பறியீர்

ஆழேழுலகத்துக் கப்பா லிருந்த வடிகளும்பர்
வாழே ழுலகத்துக் கப்பா லிருந்த மணிமுடியே.

அறியாமை உடைய மக்களே! சொக்கநாதர் நாற்பத்தொன்பது புலவருடன் ஒருவராக இருந்தார் என்று உரைக்கின்றீர்கள். நீங்கள் சொக்கநாதரின் பண்பை அறிய மாட்டீர்கள். திருமாலும் நான்முகனும் சிவபெருமானுடைய அடியையும் முடியையும் தேடியபோது, அவருடைய பாதங்கள் ஆழ்ந்து செல்லும் ஏழுலகங்களையும் கடந்து அவற்றுக்கு அப்பால் இருந்தன; அழகிய முடியானது தேவர் தங்கும் உலகம் ஏழையும் கடந்து அவற்றுக்கு அப்பால் சென்றிருந்தது. 12

651. 'செல்லூரன்' என்ற வள்ளல் தந்த மோதிரம் ஒரு தடை

காவொன்றுங் கைத்தலத் தண்ணல் செல்லூரன் கனிந்துநம்மை
வாவென் றழைத்திட்ட மோதிரமே வண்மை யானதமிழ்ப்
பாவொன்றுஞ் சற்று மறியாத புல்லர்தம் பக்கலிற்போய்த்
தாவென்று கையெடுத் தேற்காம லிட்டதடை யிதுவே.

கற்பக;மரத்தின்இயல்பையுடைய கையினனை,'செல்லூரன்' என்ற வள்ளல் எம்மை வா என்று அழைத்து அன்புடன் என் கையில் மோதிரத்தை யிட்டான். அம்மோதிரம், தமிழ்ப் பாவின் இயல்பை அறியாத கீழ்மக்களிடம் சென்று 'பொருளைக் கொடு' என அவர்களை இரக்காமல் இடப்பட்ட தடையாகும். 13

652. சீதக்காதியின் முற்றத்தில் கிடப்பவை!

தடக்கும்ப கிம்புரிக் கொம்பா சலப்பெருந் தந்திபட
நடக்குந் துரங்கத் துரைசீதக் காதிநன் னாட்டினல
வடக்குங் குமக்கொங்கை மின்னே யவன்றெரு வாயிலிலே
கிடக்குங் கவியும் பரராச ரத்ந கிரீடமுமே.

பெரிய கும்பம் போன்ற தலையும் தந்தப் பூணும் கொண்ட மலைபோன்ற யானை இறக்குமாறு செல்லும் குதிரைகளையுடைய சீதக்காதியின் நாட்டில், முத்துமாலை யணிந்து குங்குமம் பூசப்பெற்ற முலைகளையுடையவளே! சீதக்காதியின் வாசலில் அவனைப் புகழ்ந்து பாடிய பாக்களும் பிற முடி மன்னரின் மணிகளால்ஆன முடிகளும் குவிந்து கிடக்கும் 14

653. சீதக்காதி இறந்ததும் புலமையும் செத்தது!

பூமா திருந்தென் புவிமா திருந்தென்ன பூதலத்தில்
நாமா திருந்தென்ன நாமிருந் தென்னநன் னாவலர்க்குக்
கோமா னழகமர் மால்சீதக் காதி கொடைமிகுந்த
சீமா னிறந்திட்ட போதே புலமையுஞ் செத்ததுவே.

இவ்வுலகத்தே தாமரை மலரில் தங்கும் இலக்குமி இருந்து என்ன பயன்? புவிமடந்தை வாழ்ந்துஎன்ன பயன்? கலைமகள் வாழ்ந்தும் என்ன பயன்? நாம் வாழ்ந்தும் என்ன பயன்? புலவர்களுக்கு மன்னனைப் போன்றவனும் காத்தல் கடவுளான திருமாலைப் போன்றவனும் கொடைத் தன்மையில் தலை சிறந்தவனுமான சீதக்காதி என்பவன் இறந்ததும் புலமைத் தன்மையும் அழிந்தது. 15

654. சோதிடரைத் தாய் பழித்தது

மாகத்தத் தும்புக ழான்பகை வேந்தர் மகுடம்பொடி
ஆகத்தத் தும்பரி யான்சீதக் காதி யணிமலரின்
ஏகத்தத் தும்பி யிசைபாடு மார்பனி லென்மகட்கோர்
மோகத்தத் துண்டென்று சொன்னா ரிலைமுன் மொழிந்தவரே.

வானத்தை அளாவும் புகழையுடையவனும், பகைமன்னரின் முடிகள் தூளாகுமாறு பாய்ந்து செல்லும் குதிரைகளையுடையவனும், அணிந்த மாலையிடத்தில் வண்டுகள் இசைபாடும் மார்பினைப் பெற்றிருப்பவனுமாகிய சீதக்காதி என்பவனால் என் பெண்ணுக்கு அவன்மேல் ஆசைப்பட்டிறக்கக் கூடிய அபாயம் உண்டு என்று, அவளது எதிர்காலத்தைக் கணித்த சோதிடர்கள் உரைக்கவில்லையே! 16

655. சீதக்காதியின் கொடைச் சிறப்பினை ஈயாதவரிடம் உரைத்தல்

மைப்போ தகமும் வளநாடுஞ் செந்தமிழ் வாணர்க்கருள்
கைப்போ தகமனை யான்சீதக் காதியைக் காத்திருந்த
அப்போ தறிந்தில மிப்பாழ்ப் பணத்தி னருமையெல்லாம்
இப்போ தறிந்தன மீயாத லோப ரிடத்தில்சென்றே.

மேகத்தைப் போன்ற யானையும் வளமையுடைய ஊரும் சிறந்த தமிழ்ப் புலவர்களுக்குக் கொடுத்த இளம் யானையைப்

போன்ற சீதக்காதியை எதிர்பார்த்துக் காத்திருந்த அந்த நாளில், நிலையற்ற செல்வத்தின் கிடைத்தற்கரிய தன்மையை அறிந்தகொள்ள வில்லை; இரப்பவர்க்கு ஒரு பொருளையும் தராத உலோபிகளிடம் போய் இன்று அறிந்து கொண்டோம். 17

656. இவள் உனக்கு எட்டாத கனி!
(திருப்பரங்குன்றன் மீது பாடியது)

கிட்டாது பெண்குடி மார்க்கம் கணவன் கிழவனல்ல
பட்டாணிச் சேவக னல்லும் பகலுமப் பாற்பிசக
ஒட்டான் பொய்யல்ல மலைமே லிருககு முமக்குமிவள்
எட்டாத கொம்பிற் கனிகாண் பரங்குன் றிருப்பவனே.

திருப்பரங்குன்றத்தில் வீற்றிருக்கும் பெருமானே, இப்பெண் உன்னை அடையமாட்டாள்; இவள் இல்லறத்தில் உள்ளவள் (தாசியல்லள்); இவள் கணவன் முதிர்ந்தவனுமல்லன்; அவன் முகம்மதிய வீரன்; இரவும் பகலும் வீட்டை விட்டு அவன் செல்லமாட்டான்: இது உண்மையே! ஆதலால் மலைமேல் இருக்கும் உனக்கும் இப்பெண் எட்டாக் கொம்பில் கனிந்த கனியைப் போன்றவள். 18

657. நங்கை ஒருத்தியின் கண்ணினது சிறப்பு

மஞ்சுமஞ் சுங்கைப் பரராச சேகர மன்னன்வெற்பில்
பஞ்சுமஞ் சும்பதப் பாவைநல் வாய்படை வேள்பகழி
அஞ்சுமஞ் சுங்கய லஞ்சுமஞ் சுங்கட லஞ்சுமஞ்சும்
நஞ்சுமஞ் சும்வெற்றி வேலோ வுனது நயனங்களே.

மேகமும் அஞ்சும் கொடைத் தன்மை பொருந்திய கையை யுடைய பரராச சேகரன் என்பவனது மலையில் வாழும், பெண்மையால் பஞ்சும் அஞ்சத் தக்க அடிகளையுடைய பெண்ணே! மன்மதனின் மலர் அம்புகள் ஐந்தும் அஞ்சும் அஞ்சும். கயல் மீன்கள் அஞ்சும் அஞ்சும். கடலும் அஞ்சும் அஞ்சும். நஞ்சும் அஞ்சும் அஞ்சும் எனவே நின் விழிகள் வெற்றி தரும் வேலைப் போன்றனவோ? 19

658. ஆனந்தரங்கரின் இயல்பு

பாரார்சொல் லாரார் பறவைக் குலங்கடம்மில்
சீராருங் கிள்ளைமுதற் செப்பலால்—ஓரா

பிரம்பையா னக்தரங்க னின்பரங்க னன்பன்
பிரம்பையா னந்தரங்கன் பேர்.

பிரம்பூர் ஆனந்தரங்கன் என்பவன் ஆயிரம் தலையுடைய ஆதிசேடனுக்குக் கல்வியால் நெருங்கியவன்; உயிர்களுக்கு இன்பத்தை அளிக்கும் திருவரங்கப் பெருமானுக்குப் பக்தன். அவனுடைய பெயரைப் பறவைக் கூட்டத்துள் கிளி முதலியனவும் சொல்வதால் இவ்வுலகத்து மக்களில் அவன் பெயரைச் சொல்லாதவர் யார்? 20

659. திருத்தணிகையின் சிறப்பு

பங்கயமு மோரிகளும் பாவையர்கை யும்மணியும்
தங்கவளை சூழுந் தணிகையே—திங்கணுதற்
செந்திலகத் தாள்புனிதன் செல்வன் கடற்கரைசேர்
செந்திலகத் தாள்புனிதன் சேர்பு.

பிறைச்சந்திரனைப் போன்ற நெற்றியில் பொட்டினை அணிந்த பார்வதியம்மை தழுவும் சிவபெருமானின் மகனும் கடற்கரையில் உள்ள திருச்செந்தூரில் வீற்றிருக்கும் தூயவனுமாகிய முருகனின் இருப்பிடம், தாமரைகளும் நீர்நிலைகளும் பெண்டிர் கைகளும் இரத்தினங்களும் பொன்வளைகளும் பொருந்தியிருக்கும் திருத்தணிகையாகும். 21

650 முன்னைய தொழில் மறக்குமோ?

கோலெடுத்துக் கோத்துரத்துங் கோப்பாண்டி மன்னன்வடி
வேலெடுத்துக் கோத்துரத்தல் விட்டிலனே—சால்படுத்த
பூபால னானலும் போமோ புராதனத்தில்
கோபால னான குணம்.

செங்கோலை ஏந்திப் பகை அரசரைத் துரத்தும் பெருமன்னனான பாண்டியன், முருகப் பெருமானுக்குரிய வேலைக் கைக்கொண்ட பின்னரும், பகை மன்னவரை (பசுக்களை) ஓட்டும் தொழிலைக் கைவிடவில்லை. உயர்வுடைய உலகத்தைக் காப்பவன் ஆனாலும் முன்காலத்தில் கோபாலனாகிப் பசுவைக் காத்த பழக்கம் போகுமோ? 22

661. மன்மதன் என்மேல் அம்பு தொடுக்கின்ருன்!

(புதுவை வேங்கடராயன் என்பவர் மீது பாடியது)

விதுவையம்பதி யோசையைப்பேரிக விகையெனும்
மதன் வில்லில்வண் டேற்றினுன்
மதுவையம்ப திவேகமோ டெய்துகு வலயமீதுகை
வைக்க வென்னுள்ளநோ
குதுளவையம் பதிஞலும் புகழ்பெறுங்குமணன்கன்னன்
கொடைகளே மாற்றிய
புதுவையம்பதி வேங்கடராயன்பாற் புகலிவ்வேளேயி
லென்றன்கைப் பூவையே.

என் கையில் உள்ள நாகணவாய்ப் பறவையே! சந்திரனேக் குடையாகவும், கடலின் ஒலியை முரசாகவும் கொண்ட மன்மதன் தன் கரும்பு வில்லின்கண் வண்டின் ஒழுங்காகிய நாணே ஏற்றினுன்; தேன் நிறைந்த அம்புகளாகிய மலர்களே மிக்க விரைவுடன் செலுத்தி, கண் போன்ற குவளே மலரின் மேல் கை வைத்த காரணத்தால் என் உள்ளம் துன்பப்படு கின்றது. இதனைப் பதினன்கு உலகங்களிலும் புகழ் பெற்ற குமணன் கர்ணன் முதலிய கொடையாளர்களின் கொடை களே விடச் சிறந்த கொடைச் செயலேச் செய்த புதுச்சேரியில் உள்ள திரு வேங்கடராயனிடத்தே இப்போதே சென்று தெரிவிப்பாயாக! 23

27. மதுரகவிராயர் பாடல்கள்

662. பூபதியே! ஒரு பெண்ணிடமுள்ள அற்புதத்தைக் கேள்!

(துரை ரங்க பூபதிமேல் பாடியது)

துங்கவரை மார்பா துரைரங்க பூபதியே
இங்கோர் புதுமை யியம்பக்கேள்—பங்கயக்கை
ஆயிழைக்கு நான்குநுத லேந்துகுழை யாறுமுலே
மாயவிழி யேழா மதி.

தூய்மையான மலைபோன்ற மார்பையுடைய துரைரங்கன் என்பவரே! இங்கு ஒரு புதுமை உள்ளது; கேட்பாயாக! அது என்னவென்றால், தாமரைபோன்ற கையையுடைய கன்னிக்கு நெற்றி நான்கு; (கன்னி ராசிக்கு நான்காவது ராசி தனுசு; எனவே வில்போன்ற நெற்றி) காதணி ஐந்து(கன்னி ராசிக்கு ஐந்தாம் ராசியான மகரம் போன்ற காதணிகள்); தனங்கள் ஆறு(கன்னி ராசிக்கு ஆறாவது ராசி கும்பம்; எனவே அவள் கொங்கைகள் கும்பத்தைப் போன்றவை); வஞ்சமுள்ள கண் ஏழு (கன்னி ராசிக்கு ஏழாம் ராசி மீனம்; எனவே கண்கள் கயல் போன்றவை); இவற்றை எண்ணுவாயாக.

விளக்கம்: பெண்ணின் நெற்றி வில் போன்றது; காதணி மகரகுண்டலம்; தனங்கள் குடம் போன்றவை; கண்கள் கயல் மீன் போன்றவை என்பது கருத்தாகும். 1

663. கொண்டுவந்து போட்டுக் கொளுத்து!

அந்திவெடி முல்லை யரும்பெடுத்து நான்வந்தேன்
விந்தையதா நாயகற்கு மெல்லியலே—சுந்தரஞ்சேர்
செண்டுகட்ட வேண்டும் திருவிளக்கி லேதிரியைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

மென்மைத் தன்மையுடைய பெண்ணே! மாலைக் காலத்தில் மலரும் முல்லையின் மொட்டுகளை நான் பறித்து வந்தேன். தலைவனுக்கு அழகுடைய செண்டாகக் கட்டுதல் வேண்டும். ஆதலால், அழகிய விளக்கில் திரியைக் கொண்டு வந்து இட்டுத் தீபத்தை ஏற்றுவாயாக.

விளக்கம்: 'கொண்டு வந்து போட்டுக் கொளுத்து' என்ற ஈற்றை அமைத்துப் பாடுமாறு ஒருவர் வேண்ட அதற்கு ஏற்பப் பாடியது இது. 2

664. நான் இருக்குமிடத்தை மன்மதனுக்கு உரைத்தவர் யார்?

சித்திரமா மண்டபங்க டென்றல்வரு சாளரங்கள்
பத்தி யுலாவும் பளிக் கறைகள் இத்தனைவிட்டு
இக்குச் சிலையா னிருப்பிடமென் றார்சொன்னார்
இக்குச் சிலையானுக் கின்று.

ஓவியம் வரையப்பட்ட உயர்ந்த மண்டபங்களும் தென்றல் தவழும் பலகணிகளும் வரிசையாக உலாவுவதற்கு ஏற்றவாறு அமைந்த பளிங்கறைகளும் உள்ளன; அவற்றை விட்டு, நான் இருக்கும் இடம் இந்தக் குடிசை என்று மன்மதனுக்கு யார் உரைத்தார்கள்? 3

665 *வறுமையே இன்று மட்டும் என்னுடன் இரு!*

நீளத் திரிந்துழன்ருய் நீங்கா நிழல்போல
நாளைக் கிருப்பாயோ நல்குரவே—காளத்தி
நின்றைக்கே சென்றக்கால் நீயெங்கே நானெங்கே
இன்றைக்கே சற்றே யிரு.

என் வறுமையே! ஒரு பொருளை விட்டு எப்போதும் நீங்காத நிழலைப் போன்று, நீ என்னுடன் நெடுங்காலம் அலைந்து வருந்தினுய். நீ நாளைக்குஎன்னுடன் இருப்பாயோ? நான் காளத்தி வள்ளலின் 'திருநின்றை' என்ற ஊருக்குச் சென்றபின், நீ எங்குச் செல்வாயோ? நான் எங்கே இருப்பேனே! ஆதலால் நீ இன்று மட்டும் என்னுடனே இருப்பாயாக!

விளக்கம்: காளத்தியப்ப முதலியார் பெருவள்ளல். அவர்மேல் பொருமை கொண்ட மன்னன் அவரது பொருள்களையெல்லாம் கவர்ந்து கொண்டான். எனவே, அவர் வெளியூருக்குப் புறப்பட்டுச் செல்லும்போது, இரவில் ஒரு சத்திரத்தில் தங்கினுர். அப்போது அந்தச் சத்திரத்துக்கு மதுரகவிராயரும் வந்து மேற்கண்ட இப்பாடலைப் பாடினுர். இப்பாடலைச் செவியேற்ற காளத்தி முதலியார் தன் இல்லத்துக்குச் சென்று இப்புலவரை வரவேற்க எண்ணினுர். புலவர்க்குத் தரப் பொருள் இல்லாமையால், கொல்லையில் இருந்த புற்றில் அவர் கையைவிட, அந்தப் புற்றில் இருந்த பாம்பு அவரது கையில் மணியை உமிழ்ந்தது. அதை இப்புலவர்க்குக் காளத்தியார் அளித்தார். 4

666. *ஆனந்த ரங்கனைக் கண்டு வேண்டும் பொருளைப் பெற்ருேம்!*

உலங்கொண்ட மணிப்புயனே பிரம்பூரா னந்த
ரங்கா வுன்பால் செல்ல
வலங்கொண்ட கருடனையா மிடங்கண்டோ மெழினரையான்
வலத்தே கண்டோம்

பொலங்கொண்ட மணிமாட மீமிசையில் புயல்தவழும்
புதுவை யென்னும்
தலங்கண்டோம் நினதுநகை முகங்கண்டோ மினிவேண்டுந்
தனங்கண் டோமே.

திரண்டகல்லைப் போன்றதோள்களையுடையவனே! புதுச்சேரியைச் சேர்ந்த பிரம்பூரில் வாழும் 'ஆனந்த ரங்கம்' என்ற பெயரையுடையவனே! நான் உன்னிடம் வருவதற்காகப் புறப்பட்டபோது வட்டமிடும் கருடன் இடப் பக்கமாகச் சென்றதைக் கண்டோம்; காக்கை வலப்பக்கம் செல்வதைக் கண்டோம்; பொன்னால் ஆன மாடங்களின் மீது மேகங்கள் தவழ்ந்து செல்லக் கூடிய புதுச்சேரி என்னும் நகரைக் கண்டோம். உன் புன்னகையுடைய முகத்தையும்கண்டோம்! இவற்றிற்கு மேல் நாம் விரும்பிய பொருளையும் கண்டோம். 5

667. புதுமை ஒன்று கண்டோம்!

கார்படைத்த கரதலத்தான் துரைதிருவேங் கடமளித்த
கன்ன வெங்கும்
பேர்படைத்த வானந்த ரங்கமகி பாலாநின்
பிரம்பூர் நாட்டில்
நேரிழைக்கு விழியேழு முலையாறு காதைந்து
நெற்றி நான்கு
பாரிடத்தில் இப்புதுமை கண்டுவந்தேன் இதன்பயனைப்
பகர்ந்தி டாயே.

மேகத்தைப்போன்ற கொடைத்தன்மையுடைய கையினனான திருவேங்கடம் என்பவர்பெற்ற மகனே! கர்ணனைப் போன்றவனே! எவ்விடத்தும் புகழ் பரவப் பெற்ற ஆனந்த ரங்கனே! நீ வாழும் பிரம்பூரில், ஒரு கன்னிக்குக் கண்கள் ஏழு; முலைகள் ஆறு; செவிகள் ஐந்து; நெற்றி நான்கு. இத்தகைய ஓர் அதிசயத்தை நான் கண்டு விட்டு வந்தேன். இதனது கருத்தை இன்னது எனச் சொல்வாயாக!

விளக்கம்: விழி ஏழு, முலை ஆறு, காது ஐந்து, நெற்றி நான்கு என்பதன் விளக்கத்தை 662 ஆம் பாடலில் உரைத்தபடி கொள்க. 6

668. ஆனந்த ரங்கா, உன்னை விட்டுச் செல்லேன்!

கொக்குப் பறக்கும் புருப்பறக்குங் குருவி பறக்குங் குயில் பறக்கும்
நக்குப் பொறுக்கி களும்பறப்பர் நானேன் பறப்பேன் நராதிபனே
திக்கு விசயஞ் செலுத்தியுயர் செங்கோ னடாத்து மரங்காநின்
பக்க மிருக்க வொருநாளும் பறவேன் பறவேன் பறவேனே.

மன்னனே! கொக்கு, புரு, குருவி, குயில் முதலியவை பறக்கும் இயல்பினவாகும்; இழிந்த பயனை அடைய விரும்பும் கீழ் மக்களும் தாம் விரும்பியது கிடைத்தவுடன் ஓடிச் செல்வர். ஆனால், நான் ஏன் ஓடிச் செல்ல வேண்டும்? எல்லாத் திக்குகளிலும் வெற்றி பெற்றுச் செங்கோல் ஆட்சி செய்யும் ஆனந்த ரங்க வள்ளலே! உன் அன்பு என்னிடம் இருந்தால் ஒரு நாளும் செல்ல மாட்டேன்; செல்ல மாட்டேன், செல்ல மாட்டேன். 7

669. நங்கையைத் தழுவுவதற்கு வழியில்லையே!

மூவொன்ப தென்பதிலோர் நாளில்லை மொய்வனத்தில்
தாவுந் தனிமிருகந் தானில்லை—நேரே
வளையா நடையில்லை வாரிறுக விம்மும்
முலையாளை யான்முயங்கு தற்கு.

கச்சில் அடங்காமல் பூரித்துள்ள தனங்களை யுடைய இப் பெண்ணை, நான் தழுவுவதற்கு இருபத்தேழு நட்சத்திரங் களுள் ஒன்றான உத்தரம் இல்லை (அவளது சம்மதத்தைத் தெரிவிக்கும் பதில் இல்லை); மரங்கள் அடர்ந்த காட்டில் விரைந்து செல்லும் தன்மையுடைய வேங்கை இல்லை (பொன் இல்லை); வளையாமல் நேரே போகும் அன்னம் இல்லை (உணவு இல்லை); ஆதலால் என்ன செய்வேன்? 8

670. வேதாசல வள்ளலே, நினக்கு ஒருவரும் நிகராகாதது ஏன்?

தனம்பொன்ப ணம்படைத்த சம்பரிபாப் பின்னோர்
முனம்பிச்சை கள்வனில மூட்டை—கனம்பெற்ற
மீதலத்தும் போற்றுகின்ற வேதா சலாநினைப்போல்
ஈதலத்த மார்கிலரே யென்.

செல்வத்தை (அல்லது மான் கன்றினை] உடைய சிவனும், பொன்னையுடைய (இலக்குமியைக் கொண்ட) திருமாலும், பணத்தையுடைய (படத்தை யுடைய) ஆதிசேடனும் ஆகிய இவர்கள் முற்காலத்தில் முறையே பிச்சை எடுப்பவராகவும், வெண்ணெயைத் திருடியவராகவும், நிலமாகிய மூட்டையைச் சுமப்பவராகவும் இருந்தார்கள். அங்ஙனமின்றி, வானுலகத்திலும் போற்றப்படும் வேதாசல வள்ளலே, உன்னைப் போன்று கொடுக்கும் கையை உடையவராக இருந்ததில்லை. அதற்குக் காரணம் யாது?

விளக்கம் : தனம் பொன் பணம்: படைத்த சம்பரிப் பாம்பு தனம் படைத்த சம்பு, பொன் படைத்த அரி, பணம் படைத்த பாம்பு எனக் கூட்டிப் பொருள் கொள்ளவேண்டும்.

அங்ஙனமே 'சம்பரி பாம்பு இன்னோர் முனம் பிச்சைக் கள்வன் நில மூட்டை' என்பதை, சம்பு பிச்சை, அரி கள்வன், பாம்பு நில மூட்டை எனக் கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும்! சம்பு—சிவன்; அரி-திருமால். 9

671. சீனிவாசையன் மீது பாடப்பட்டது

(தலைவி இரங்கல்)

சேராநா ளெல்லாம்வெண் டிங்களன மேசேர்ந்தால்
ஆரா வமுதாமென் னாச்சரியம்—ஓராமல்
நானிவா சையால் நரசையன் தந்தருளும்
சீனிவா சையன்மணஞ் செய்து.

அன்னமே! நான் ஆராய்ச்சி யின்றி இத்தகைய காதல் கொண்டதால், நரசையன் பெற்ற சீநிவாசையன் என்பான் திருமணம் செய்து என்னைச் சேராத நாளில், வெண்ணிறமான சந்திரனனவன் சூரியனாக உள்ளான்; சேர்ந்தால் தெவிட்டாத நிலவு போன்று அமுதமாக விளங்குகின்றான்; என்னே வியப்பு! 10

672. மாலையைத் தந்து என் மகளைக் காப்பாயாக!

(கலசை வேதாசலம் மீது பாடியது).

அஞ்சம்பி னாலெய்து மன்னநடைக் கன்னிகையை
அஞ்சப்பி னாலெய்யு மப்பாவி—நெஞ்சமுறும்
காவிக் கணந்தார் கலசைவே தாசலனே
காவிக் கணந்தார் கடந்து.

குவளை மலர்கள் மீது சங்குகள் தங்கும் 'கலசை' என்ற நகரில் உள்ள வேதாசலமே! அன்னமும் தோற்றுப் போகின்ற நடையையுடைய என் மகளை ஐந்து மலர் அம்புகளை எய்யும் மன்மதன் உள்ளத்தைத் துன்புறுத்துகின்றான். அவனை இப்போதே நின் மாலையைக் கொடுத்துக் காப்பாயாக!

விளக்கம் : காவிக்கணந்தார் கலசை — காவி+கண்+நந்து+ஆர்+ கலசை; குவளை மீது சங்குகள் தங்கும்கலசை. காவிக்கணந்தார் கடந்து - இக்கணம்+தார்கள்+தந்து + கா; இப்போது மாலையைத் தந்து காப்பாற்றுவாயாக. 11

673. தாயும் என்னைப் பழிக்கின்றாள்!

மதுமேவு குவளையணி புயனென் றேனே
 மருவனஞ்சூழ் கலசைநகர் மன்னனென் றேனே
முதுநீதி தெய்வசிகா மணிமா லுக்கு
 மூத்தவொரு மகனெனநான் மொழிந்திட் டேனே
பதுமாச னத்திமக னென்மேல் சண்டை
 பண்ணுகின்ற ஞனவனாற் படுந்துன் பத்தால்
இதுவேதா சலமென்றேன் இதற்கென் னன்னை,
 ஏதேதோ வைதுபழி யிடுகின் றாளே.

தேன் பொருந்திய குவளை மலர் மாலையை அணிந்த தோளையுடையவன் என்று சொன்னேனா, மணமுடை காடு பொருந்திய கலசையின் தலைவன் என்று சொன்னேனா, உயர்ந்த நெறியையுடைய தெய்வசிகாமணி என்னும் பெரியவனுக்கு முதல் மகன் என்று சொன்னேனா, அவ்வளவில் தாமரையில் வீற்றிருக்கும் திருமகளின் மகனான மன்மதன் என்னுடன் போர் செய்கின்றான். இங்ஙனம், நான் அவனால் படும் துன்பத்தினால் இது என்ன சங்கடம் (இது ஏது ஆசலம்; இது வேதாசலம்). என்று சொன்னேன். இதைச் சொன்னதற்கு என் தாயானவள் பல வகையாக வைது என்மீது பழி கூறுகின்றாள். 12

குறிப்பு : ஆசலம் - துன்பம்; சங்கடம்.

674. வேதாசல வள்ளலின் படைப்பாற்றல்

பூங்கமலன் கலசைவே தாசலன்போ லுருவமைக்கும்
 பொற்பி லானென்று
ஆங்கயலார் சொலக்கேட்டு வாணியரி பாலுரைக்க
 வடைந்தா ளன்னேன்

**தூங்குவனம் போயிருந்தா னரனிடத்தில் சொலப்பித்தாய்ச்
சூலழ லுற்ருன்
ஏங்கியந்தத் திறங்கற்பா னிவனுவில் வீற்றிருந்தா
ளெழிற்கண் மானே.**

தாமரையில் வீற்றிருக்கும் நான்முகன் கலசைப் பகுதியில் வாழும் வேதாசலத்தைப் போன்று வடிவத்தைப் படைக்க ஆற்றலில்லாதவன் என்ற செய்தியை அயலவர் கூறக் கேட்டுக் கலைமகள் அதைத் திருமாலிடம் தெரிவிப்பதற்குச் சென்ருள்; திருமால், தான் உறங்கும் ஆலிலையுள்ள காட்டிற்குச் சென்றிருந்தான்; பின் அதனைச் சிவனிடம் தெரிவிக்க, அச்சிவன் பித்தனுய்த் திரியலானுன்; ஆதலால் அந்தக் கலைமகள் அஞ்சி, அந்த ஆற்றலைக் கற்பதற்காக வேதாசலம் என்னும் கொடையாளியின் நாவில் வீற்றிருக்கலானுள். 16

28. சவ்வாதுப் புலவர் பாடல்கள்

675. *சேதுபதியின் தலைவணங்கும் இடங்கள்*

(இரகுநாத சேதுபதியின்மேல் பாடியது.)

**கிளையாளன் சேது பதிரகு நாயகன் கிஞ்சுகவாய்
இளையார் கலவி யிடத்துநம் மீச ரிடத்துமென்றும்
வளையாத பொன்முடி சற்றே வளையு மகுடமன்னர்
தளையா டியகையிற் காளாஞ்சி யேந்துஞ் சமயத்துமே.**

உறவினரைப் பேணும் இயல்பையுடைய சேதுபதியின் என்றும் வணங்காத பொன்முடியானது முருக்கம் பூவின் மலரைப் போன்ற சிவந்த வாயினையுடைய பெண்டிரது புணர்ச்சியின் போதும், சிவபெருமானின் சன்னதியிலும், தோற்ற முடிமன்னர் விலங்கிட்ட கைகளில் தம்பலத்தட்டை அவரிடம் நீட்டும் போதும் சிறிதே வணங்கும். 1

676. *புதுமை ஆனந்தரங்கம் பிள்ளையின் கொடைச் சிறப்பு*

**பானுகிர ணம்பார்க்கும் பங்கே ருகநிலவு
தானும்வரப் பார்க்குஞ் சகோரங்கள்—வானமரும்**

மையைப்பார்க் கும்மயில்கண் மாவிசயா னந்தரங்கன்
கையைப்பார்க் கும்புலவோர் கண்.

தாமரை கதிரவனின் கதிர்களை எதிர்பார்க்கும்; சக்கிரவாகப் பறவைகள் சந்திரனின் நிலவொளியை எதிர்பார்க்கும்; மயில்கள் வானத்தில் உள்ள மேகத்தை எதிர்பார்க்கும்; கற்றவரின் கண்கள் புதுவை ஆனந்தரங்க வள்ளலின் கையைப் பரிசின் பொருட்டாக எதிர்நோக்கும். 2

677. என் மகள் பாலைநிலத்தில் எத்தகைய துன்பத்தை அடைவாளோ!

பாலையிலாள் பின்னங்காற் பஞ்சுளியென் றேசுளிப்பாள்
பாலையிலாள் பின்னென் படுவளோ—சோலையிலே
ஆடு மயிற்பிரம்பூ ரானந்த ரங்கதுரை
நாடுதனி லென்னிளமின் னுள்.

சோலையில் மயில்கள் ஆடும் பிரம்பூரில் வாழும் ஆனந்தரங்கம் என்பவரின் நாட்டிலே என் இளம் பெண் பாலைக் குடிக்கமாட்டாள். தன் காலில் படும் செம்பஞ்சு, உளிபோல வருத்துகின்றது என்று முகத்தைச் சுளிப்பாள். அத்தகையவள் பாலை வழியில் தலைவனின் பின்னால் செல்லும்போது எத்தகைய துன்பத்தினை அடைவாளோ? 3

29. இராம கவிராயர் பாடல்கள்

678. சற்குண சிந்தாமணியைச் 'சோலை' என்றவர் யார்?

அலையான் கவடுபடா னுரிடத்துங் காயான்
இலையென்ப தோர்நாளு மில்லை—கலைதேர்ந்த
சாலைமுத்துக் கிருஷ்ணனருள் சற்குணசிந் தாமணியைச்
சோலையென்று சொன்னவரார் சொல்.

கலைகளைக் கற்றறிந்த முத்து கிருஷ்ணன் என்பவர் பெற்றெடுத்த சிந்தாமணி என்னும் பெயரையுடைய வள்ளல், சோலையைப் போன்று அலையமாட்டான். மரக்கிளைகளைப் போலப் பிளவு படுவதில்லை (கபடம் இல்லாதவன்), யாரிடத்தும் சினம் கொள்ளான். இரப்பவர்களுக்கு இல்லை என்று

கூறுவதில்லை. இத்தகையவனைச் 'சோலை' என்று யார் உரைத்தார்கள்?

விளக்கம்: அலைதல். கிளை உண்டாதல், காய்த்தல், இலை பெற்றிருத்தல் ஆகியவை சோலையின் இயல்பு. அவை சிந்தாமணியிடம் இல்லை.: எனவே, அவனைச் சோலை எனச் சொல்லக் கூடாது என்பதாம். இலை-இல்லை எனக்கூறுதல். கவடு படுதல் – கிளை உண்டாதல். 1

679. கச்சி செல்லப்பன் என்பவரின் சிறப்பு

செல்லப்பன் கச்சியிலே சேர்ந்ததற்பி ன்மணிகள்
நல்லதரு மேக நவநிதியம்—சொல்லவே
முட்டின்றி யொன்றிரண்டு மூன்றுநான் கைந்தாறேழ்
எட்டொன்பான் பத்தான வே.

செல்லப்பன் என்பவர் காஞ்சியைச் சேர்ந்த பின்னர் உண்டான நிலைமையைச் சொல்ல வேண்டும் என்றால் ஒன்றாக இருந்த காமதேனு இரண்டாக ஆயிற்று. ஒளியுடைய பொருள்களான சூரியன்: சந்திரன், நெருப்பு ஆகியவை அவனுடன்சேர்ந்து நான்காக ஆயின. கற்பகம் முதலிய தேவர் உலக மரங்கள் ஐந்தாக இருந்தவை அவனுடன் சேர்ந்து ஆறாயின. ஏழு மேகங்கள் அவனுடன் சேர்ந்து எட்டாயின. சங்க நிதி, பதுமநிதி முதலியவை ஒன்பதாக இருந்தவை அவனுடன் கூடிப் பத்தாயின.

விளக்கம்: மணி - ஒளியுடைய சூரியன், சந்திரன், தீ. ஒளியுடைமையால் இவை மணி எனப்பட்டன.

680. சென்னை அடைந்தேன்; சிவனானேன்.

சென்னபுரி மேவிச் சிவனானே னல்ல
அன்ன மறியா தவனாகி—மன்னுசிரங்
கய்க்கொண் டரைச்சோமன் கட்டிச் சடைமுறுக்கி
மெய்கொண்ட நீறணிந்து மே.

பொருந்தியசிரத்தைக் கையில்ஏந்தி(சிரங்குகள் கையில் வரப் பெற்று), தக்க ஆடையை அணியாமல், எண்ணெய் தடவி வாரப்படாமையால் தலைமயிர் சடையாக ஆகப்பெற்று, உடல் முழுவதும் தூசு படியப் பெற்று (திருநீறு அணிந்து) சென்னை நகரத்தில் சென்று நல்லஉணவு உண்ணப் பெறாமல் சிவனாக மாறினேன்.

30. நையாண்டிப் புலவர் பாடல்கள்

681. சொர்க்கமும் மோட்சமும் பத்தடி

(திருவாரூர்ப் பெருமான் மீது பாடப்பட்டது.)

விற்கம்பத் தடியாலு மடியுண்டான் விண்ணவரை வேலை கொள்ளும்
நற்கம்பத் தடியானுந் தூக்கவசை யாரூர் நாதன் கோயில்
பொற்கம்பத் தடியினின்று வன்மீகத் தானையுன்னிப் போற்றி னோர்க்குச்
சொர்க்கம்பத் தடியப்பால் மோட்சம்பத் தடியாகத் தோற்றுந் தானே.

அருச்சுனனின் தூண் போன்ற வில்லினால் அடிப்பட்டவனும் தேவர்களைப் பணி செய்யச் செய்த பத்துத் தலையுடைய இராவணன் தூக்கியபோது கூட அசையாதவனுமான திருவாரூர்ப் பெருமானின் ஆலயத்தில் உள்ள கொடி மரத்தின் கீழ் நின்று, அவரை வணங்கியவர்க்குத் தேவலோகம் பத்தடியில் உள்ளதாகும்; அதற்கு அப்பாலுள்ள வீட்டுலகம் தேவலோகத்திற்கு அப்பால், பத்தடியில் தோன்றும். 1

682. 'பள்ளி கொண்டான்' என்பவரின் கொடைச் சிறப்பு

செங்கை வரிச்சிலை தங்கம தைச்சம்புத் தீவுதன்னில்
எங்குவைத் தாலுமப் பள்ளிகொண் டான்தமிழ்க் கீவனென்றே
திங்க ளிரவி தினஞ்சுற்றிக் காக்கத் திரைசுருட்டும்
கங்கைக்கு முத்தரத் தேயொளித் தானுமை காதலனே.

பார்வதியின் கணவனான சிவபெருமான் தன் கையில் இருந்த மேருமலையாகிய பொன்னை, நாவலந்தீவில் எங்கு வைத்தாலும், பள்ளி கொண்டான். அதைத் தமிழ்ப்பாக்களுக்குப் பரிசாகத் தந்து விடுவான் என்று எண்ணியே, நாள்தோறும் சூரியனும் சந்திரனும் அதைக் காவல் செய்யுமாறு செய்து, அலைகள் வீசும் கங்கையாற்றுக்கு வடக்கில் அதை ஒளித்து வைத்தான். 2

683. மேலாடை இன்றேல் மேன்மை ஏது!

மேலாடை யின்றிச் சவைபுகுந் தாலிந்த மேதினியோர்
நூலாயி ரம்படித் தாலுமெண் ணார்நுவல் பாற்கடலோ

மாலா னவனணி பொன்னுடை கண்டு மகளைத்தந்தே
ஆலால மீந்தது தோலாடை சுற்று மரன்தனக்கே

உடல்மீது சிறந்த உடையை உடுத்துக் கொள்ளாமல் ஒரு சபைக்குள்ளே புகுந்தால், இவ்வுலகத்தவர், நூல்கள் ஆயிரக் கணக்கில் கற்றிருந்தாலும் அங்ஙனம் புகுந்தவரை மதிப்பது இல்லை. சிறந்த பாற்கடல், திருமால் அணிந்திருக்கும் ஆடையைப் பார்த்தே தன்னிடம் தோன்றிய திருமகளைத் தந்தது. தோல் ஆடை அணிந்துள்ள சிவபெருமானுக்கு ஆலகால விடத்தைத் தந்தது. 3

684. பள்ளி கொண்டானின் புகழ்ச் சிறப்பு

வள்ளிகொண் டான்மயி லேறிக்கொண் டான்மதி போலுமலை
வெள்ளிகொண்டான் விடையேறிக்கொண்டான்விண் ணவர்க்கமுதம்
துள்ளிகொண் டான்புள்ளி லேறிக்கொண்டான் சுபசோபனஞ்சேர்
பள்ளிகொண் டான்புக ழேறிக்கொண் டானென்றுபார்க்கவென்றே.

மங்கலமான மணவாழ்க்கையுடைய பள்ளி கொண்டான் என்ற வள்ளல் தன் புகழ்மீது ஏறிக்கொண்டு உலா வருவதைக் கண்டு மகிழ எண்ணி, வள்ளியின் கணவனாகிய முருகப் பெருமான் மயில் மேல் ஏறினன். சந்திரனின் ஒளியைப் போன்ற வெண்மையான கயிலாய மலையில் வீற்றிருக்கும் சிவபெருமான் காளை வாகனத்தின் மேல் ஏறிக்கொண்டான். தேவர்களுக்கு அமுதத்தைப் பங்கிட்டுக் கொடுத்த திருமால் கருடனின்மேல் ஏறிக் கொண்டான். 4

31. சுப்பிரமணியப் புலவர் பாடல்கள்

685. சேவித்து நிற்கும் இவளைப் பார்!

வாரிட்டு விம்மிப் புடைத்திறுகி யிளகிமணி
மார்பிட மெலாங் கவர்ந்து
வட்டமிட் டடியிட்டு நாளுக்கு நாள்மேல்
வளர்ந்து பூரித்து முத்து

மாலையிட் டிருமாங் துபட்டவர்த் தனயானை
மத்தகத் தோடெ திர்த்து
வாதிட்டு மல்லிகைப் பூச்செண் டினைத்தினம்
வாட்டப் படுத்தி வரையைப்
போரிட்டு மைந்தர்கண் மனஞ்சூறையிட்டு
மேற் புளகித்து வச்சிரரத்நப்
புதுச்செப் பினைத்தோழ மைகொண்ட பொன்னினைப்
பொடியாவ ராவி-மீதிற்
பொட்டிடதென்னவே தேமல் படர்ந்துசெம்
பொற்சரிகை வேலை யிட்டுப்
புனைதரு ரவிக்கையை யிறுக்கிக் கிழித்துப்
புறப்பட்டு வாசனைப் பூந்
தாரிட்டு வரவரப் பளபளப் பாகியுயர்
தங்கக் கிணத்தை யொத்துச்
சந்தனம் புனுகுகத் தூரிகர்ப் பூரம்
சவாது குங்கும மணிந்து
சந்த்ரகாவிச்சேலை வல்லவாட் டுக்குள் ததும்பி
யண் ணுந்திடையி னித்
தாங்காதெ னக்கனத் தோங்கிமன் மதனுஞ்
சலாமிட்டு நிற்க வுந்தான்
சீரிட்டு நின்றுதந் தலைவணங் காமற்
றிரண்டபூண் முலைக ளுன்றன்
திருமார்பி லணையவோ ரூசிமே லேதவஞ்
செய்கின்ற தொக்கு மென்னுஞ்
சிறுரோம ரேகையாள் வந்தாள் பராக்கென்று
சேவித்து நிற்கிருள் பார்
திகழ்வடுக நாததுரை மெச்சுபிர தானிசிவ
சுப்ர மண்ய ராசனே.

புகழுடைய வடுக நாதர் என்பவர் பாராட்டுகின்ற முதல் உத்தியோகத்தராகிய சிவசுப்பிரமணியம் என்னும் பெயரை யுடையவரே! கச்சு அணியப்பட்டு, மேல்நோக்கி எழுந்து, பக்கத்தே பருத்து, இறுக்கமாயும் நெகிழ்ந்தும் அழகுடைய மார்பெல்லாம் பரவி, வட்ட வடிவத்தை உடையதாகி, நாள்

தோறும் வளரும் இயல்புடையதாகி, நிரம்பி, முத்துமாலை அணியப் பெற்று, பெருக்கு அடைந்து, பட்டத்து யானையின் மத்தகத்துடன் எதிர்த்துப் போர் செய்து, மல்லிகைப் பூச் செண்டினை நாளும் அணிந்து அதனை வாட்டம் அடையச் செய்து, மலையைப் போரில் வென்று, வீரர்தம் மனங்களைக் கவர்ந்து, புளகம் கொண்டு, வயிரமணிகள் முதலியவற்றால் ஆன மாலையை எந்நாளும் அணியப் பெற்று, பொன்னைப் பொடியாகச் செய்து மேல் தூவி விட்டதைப் போன்று பசலை பரவப் பெற்று, செம்பொன் சரிகைத் தொழிலையுடைய கச்சினை நெருக்கிக் கிழித்து வெளியே புறப்பட்டுத் தோன்றி, நல்ல மணம் உள்ள மாலை அணியப் பெற்று, நாள்தோறும் ஒளி கொண்டதாகி, உயர்ந்த பொன் கிண்ணத்தைப் போன்று, சந்தனம் பச்சைக்கற்பூரம் சவ்வாது குங்குமம் முதலிய மணப் பொருள்கள் பூசப்பெற்று, மேலாடையாக அணியப்பெற்ற சேலைக்குள் நிமிர்ந்து நின்று, இனி இடையானது தாங்காது என்று கூறுமாறு அண்ணுந்து சுமையுடையதாக வளர்ந்து, காமனும் வணங்குமாறு சிறப்புற்று, தம் தலை வணங்காமல் திரண்ட நகையை அணிந்த தனங்கள் உன் அழகிய மார்பைச் சேர்வதற்கு ஓர் ஊசியின் முனையில் நின்று தவம் செய்வது போலும் என்று சொல்லக் கூடிய மயிர் ஒழுக்கினையுடைய பெண் வந்துள்ளாள்; எச்சரிக்கை எனக் கூறி வணங்கி நிற்கின்றாள்; இவளைக் காண்பாயாக!

32. கடிகை முத்துப் புலவர் பாடல்கள்

686. சங்கரா, இவளைக் காப்பார் யார்?

கராமடியச் சக்கரந்தொட் டெய்தவெங்க டேசுரெட்டன் கமலப் பூநி
கராமடிதொட் டாலும் வரவழைப்பார் காணேனங்கனைமார் சேவ
கராமடிமட் டிடுபேரி வாரிதியாமிவளை யெவர் காப்பா ரோசங்
கராமடிவிட் டிறங்காத பேதையின்மேற் கணைதொடுத்தான் காமவேளே.

நீர்நிலையில் யானையைப் பற்றிய முதலை சாகுமாறு தன் கையில் உள்ள சக்கரத்தை வீசிய திருமாலின் அமிசமான வேங்கடேசுரெட்டன் என்ற பெயரையுடைய வள்ளலின் தாமரை போன்ற அடிகளைத் தொட்டு வணங்கியேனும் அழைத்து வருபவரைக் காணவில்லை; பெண்களே தொண்டர்

களாகவும் அடிக்கப்படும் முரசம் கடலாகவும், கொண்ட மன்மதன், என் மடியை விட்டு இறங்காத இளமையுடைய பெண்ணின் மீது மலர் அம்பை எய்துவிட்டான்; சிவனே. இவளை யார் காப்பார்? 1

687. என் மகளுக்குக் காமன் செய்யும் துன்பம்!

கன்றுதொட்டுக் கனியுகுத்த கீர்த்திவெங்க டேசுரெட்டா
கமலக் கண்ணா
கன்றுதொட்ட தத்தனையுங் கைநெகிழ்ந்த தறியாயோ
கலையுஞ் சோர்ந்த
கன்றுதொட்ட ரவிக்கையெல்லாங் காமனம்பு கிழித்ததுபார்
கருத்துத் தானே
கன்றுதொட்டுப் பட்டசிட்டுப் போன்மெலிந்து வாடுவதுங்
கண்டி லாயே.

கன்றை எடுத்து வீசி விளாமரமாக நின்ற அசுரனைக் கொன்ற கண்ணபிரானின் அமிசமான புகழ் பொருந்திய வேங்கடேசுரன் என்னும் வள்ளலே! தாமரை போன்ற கண்களையுடையவனே! கையில் அணிந்த வளையல்கள் அவ்வளவும் உடல் மெலிந்த காரணத்தால் கழன்று போனதை அறியமாட்டாயோ! உடுத்த ஆடையும் நெகிழ்ந்து விலக, அணிந்த கச்சு முழுவதும் மன்மதனின் பாணங்களால் துளைக்கப்பட்டுக் கிழிந்துவிட்டது. காண்பாயாக! மனம் வெதும்புகின்றது; ஒட்டிக் கொள்ளும் தன்மையுடைய பிசின் முதலியவற்றில் கட்டுப்பட்ட குருவியைப் போன்று நான் உடல் மெலிந்து வாடுவதைக் காணவில்லையே! 2

688. வண்டுகளே, இவள் துன்பத்தைத் தெரிவிப்பீராக!

வளவனைநே ராகஇசை வளர்த்தவெங்க
டேசுரெட்டன் மருவா நாளில்
வளவனைமா ரையும்வெறுத்தாள் மாரனும்பூங்
கணையேவ வருந்தி யேய
வளவனையே நினைத்திருந்தாள் மடலெழுத
வறியாளாய் மருங்கி லேது
வளவனையா டையுமிழந்தாள் வண்டினங்காள்
கண்டசெய்தி வழுத்து வீரே.

வண்டினங்களே! சோழ மன்னனைப் போன்ற புகழுடைய வேங்கடேசுர எட்டப்பன் என்பவர் சேராத காலத்தில், தலைவி இல்லத்தே உள்ள தாய்மார்களைப் பகைத்துக் கொண்டாள்; மன்மதனும் அவள்மேல் தன் மலரம்புகளைச் செலுத்துவதால் அவள் அவனையே எண்ணி வருந்தலானாள்; தன் துன்பத்தைத் தலைவனுக்கு முடங்கல் எழுதித் தெரிவிக்கவும் அறியாதவளாக இடையில் அணிந்திருந்த ஆடையும் நெகிழ்வதை உணராதவள் ஆனாள். இச்செய்தியை நீங்கள் அவனுக்குத் தெரிவிப்பீராக! 3

689. என் மகள் உமையம்மை ஆனாள்!

(தாயிரங்கல்)

பாகப்பா வருமையறியிளசைவெங் கடேசுரெட்டா
 பகரக் கேண்மோ
பாகப்பா மொழிவிழியாள் நீயேறிவருங் களிற்றைப்
 பார்த் தாளாம்கொம்
பாகப்பா மதிக்கவரா வென்றுளம் மதியுதிக்கப்
 பசந்தே யீசன்
பாகப்பா வையினாக மானாள்யானீன் றெடுத்த
 பாவை தானே.

பாவின் அருமையை அறிந்து கொள்ளும் இயல்புடைய இளசையில் உள்ள வேங்கடேசுர எட்டப்பனே! சொல்வதைக் கேட்பாயாக! நான் பெற்று வளர்த்த பெண், சர்க்கரைப் பாகைப் போன்ற இனிய சொல்லினள்; கடல் போன்ற பெரிய கண்ணினள்; இத்தகையவள் நீ ஏறிவரும் யானையைக் கண்டாளாம்; அதன் கொம்புகள் இயற்கைக் கொம்புகளா, அன்றி மரக் கிளைகளா, அன்றிப் பிளவுடைய மதியா என்று ஐயம் கொண்டாளாம். சந்திரன் தோன்றியதும் பசலை தோன்றப் பெற்றாள். சிவபெருமானின் இடப்பாகத்தில் உள்ள உமையின் உடல்போலக் கருநிறம் அடைந்து பாதி வடிவமாக ஆனாள். 4

690. தோழியே மன்மதனை விரட்டு!

கருக்கோட்டை யாளும்வெங்க டேசுரெட்ட
 மேந்த்ரனென்னைக் கலந்த போகக்

கருக்கோட்டை காணுமடி சகியேமுன்
போலின்னுங் காம னுந்த
கருக்கோட்டை நிகர்வீசை முறுக்கிவரக்
காணிலவன் கங்குன் மாவைக்
கருக்கோட்டை யம்பிணையும் பறிவெருட்டு
தலைவாசல் கடக்கத் தானே.

தோழியே! ‘கருக்கோட்டை’யை ஆட்சி செய்யும் வேங்கடேசுர எட்டப்பன் என்ற இந்திரன் என்னைச் சேர்ந்து அனுபவித்த இன்பம் இப்போது குறைவுபடும்; முன்னர் மன்மதன் என்னைத் தாக்கியது போல, இப்போதும் தன் ஆட்டின் கொம்பு மீசையை முறுக்கிக்கொண்டு வருவதை நீ கண்டால், அவனது இரவாகிய யானையைப் பொசுக்கிவிடு; அவனையும் விரட்டு; அவனுடைய கையில் உள்ள ஐந்து மலர் அம்புகளையும் பறித்துவிடு; தெருவாயிலைக் கடந்து செல்லுமாறு வெருட்டிவிடு. 5

691. கவலை நீங்கும் வழி!

(தலைவி கூற்று)

சந்தான மேகநிகர் குமாரமுத்து சாமிசகோ தரவான் பொன்னே
சந்தான மேருவென நிறைந்தகுமா ரெட்டனெனைத் தழுவாவாயா
சந்தான மேதரிக்கக் கூடுதில்லை யவன்மருங்கிற் சகியே நீபோய்
சந்தான மேலேறி யுபரிசெய்தால் தீருமடி தனக்குத்தானே.

தோழியே! சந்தன மரத்தையும் மேகத்தையும் போன்ற முத்துக்குமாரசாமியின் சகோதரனாகவும், சிறந்த பொன் போன்றவனாகவும் உள்ள மேருமலை போன்ற விருப்பம் உடைய குமர எட்டப்பன் என்னைச் சேராததால் உண்டான வருத்தந்தான் பொறுக்க முடியவில்லை. அம்மையே! நீ அவனிடம் சென்று சொல்லும் தூதினால், அவன் என்னிடம் வந்து நான் செய்யும் விளையாடல்களை அவனும் செய்தால் கவலை தானே நீங்கும். 6

692. தோழியே தலைவனைச் சேருமாறு செய்!

(தலைவி கூற்று)

திருமாலை யம்புதொட்டசிலைமார னம்புவிக்குட்டிட வான்முல்லைந்
திருமாலை யம்புயஞ்சூழ் குமாரவெட்ட மனைச்சேரச்
செய்தாலுள்ள

திருமாலை யந்தெளிந்து சுபசோப னம்பொருந்திச்சிவனை நேசித்
திருமாலை யந்தொறும்போ யுனைநினைத்துத்தெரிசிப்பேன் றிருமின்
னாளே.

மின் போன்ற பெண்ணே! திருமாலினது அம்சமானவனும், ஐந்து மலர் அம்புகளைச் செலுத்தும் மன்மதனைப் போன்றவனும், இவ்வுலகத்தில் வன்மையுடையவனுமாகிய முல்லை மலரால் ஆன மாலையைத் தோளில் அணிந்த குமார எட்டமன் என்பவனை, நான் சேருமாறு செய்தால், மனத்தில் உண்டான கவலை நீங்கி நல்ல வாழ்வைப் பெற்றுச் சிவபெருமானிடத்தில் அன்பைச் செலுத்திக் கோயில்கள்தோறும் சென்று நின் நன்மையை விரும்பி வணங்குவேன். 7

693. விரைந்து வந்து இவளைச் சேர்!

(தாயிரங்கல்)

மாதங்கங் கோடிநில வறைக்குளொளித் தாலுமந்த வழியேகம்ப
மாதங்கங் கோடிவிடச் சென்றடிக்கு முயிர்தரிக்கு மாசிவாரா
மாதங்கங்கோடிகலுங் கடலொலிக்கென் செய்வளினிவந்து
சேர்வாய்
மாதங்கங் கோடிதமிழ்க் குதவும்வசு வப்பமதி மந்திரிநீயே.

பல யானைகளைத் தமிழ்ப் பாட்டிற்காக அளிக்கும் 'வசுவப்பன்' என்பானின் அறிவுடைய அமைச்சனே! என் பெண் பல விடங்களுக்கும் ஓடிச்சென்று நிலத்திற்குள்ளே அமைந்துள்ள வீட்டிற்குள் ஒளிந்து கொண்டாலும், அவ்விடத்துக்கும் போய்ச்சேரும் மன்மதனின் அம்பானது, அவளது உடலானது குறுகி வருந்துமாறு தாக்கும். சிவனே! இராமனே! இந்தப் பெண்ணின் உயிர் நிலைபெறுமா? நிலையான கடலின் ஓசைக்கு என்ன செய்வாள்? இனியேனும் விரைந்து வந்து இவளைச் சேர்வாயாக! 8

694. இவளைச் சேர்வதற்கு இதுவே நேரம்

(தாயிரங்கல்)

தமிட்டரா ணுவம்பெருக்கி வந்தெதிர்த்த வேண்முரசு
சத்தங்காது
தமிட்டரா வெனம்புலம்புஞ் சிறுபேதை விரகமது தணியவேமுத்
தமிட்டரா மதிமுகத்தின் முகமழுந்த வேபுணரச் சமயம்வாணர்
தமிட்டரா தரந்தெரியு மெங்களெட் டேந்திரமகிபா தமிழரேறே.

புலவர் பாடல்களின் தகுதியை அறிந்து கொள்ள வல்ல எட்டேந்திர மன்னனே! தமிழருள் ஆண் சிங்கத்தைப் போன்றவனே! தம் பட்டம் முதலியவற்றுடன் கூடிய படை வீரர்களைப் பெருக்கிக் கொண்டு வந்து தாக்கிய, காமனின் முரச ஒலியைச் செவியில் கேட்டு, பாம்பினைப் போன்று வருந்தும் என் இளம்பெண்ணின் காதல் துன்பம் அடங்குமாறு இரவில் தோன்றும் சந்திரனைப் போன்ற இவளது முகத்தில் உன்முகம் பொருந்துமாறு சேர்வதற்குத் தக்க நேரம் இதுவே ஆகும். 9

695. அம்புக்கூட்டில் அகப்பட்ட குரங்கானேன்!

(தலைவி கூற்று)

பரத்துவசத் துருத்தாயர் பாயன்மிசைப் பூவைமுலைப்
பணைப்பிலேம
கரத்துவசப் பாவிமலர் தூற்றுவர்நா ஞற்றுவனே காட்டிலேழு
மரத்துவசத் தொருகணையா லெய்தவெங்க டேசுரெட்டன்
மருவா நாளிற்
சரத்துவசக் குரங்கெனவே தனித்திருக்க முடியாது
சாற்றினேனே.

பகை வடிவத்தில் உள்ள அன்னைமார்கள் படுக்கைமேல் மலரையும், தனப்பரப்பின் மேல் மன்மதனின் பாணங்களாகிய மலர் அம்புகளையும் பரப்புகின்றனர். நான் அதைப் பொறுக்க முடியுமா? கிட்கிந்தை காட்டில் ஏழு மராமரங்களையும் ஓர் அம்பினால் வீழ்த்திய இராமபிரானின் வடிவமாகிய வேங்கடேசுர எட்டப்பன் என்னைச் சேராத நாளில் அம்புக் கூட்டில் அகப்பட்ட குரங்கினைப் போன்று தனியே இருக்க முடியாதென்பதைத் தெளிவாகச் சொன்னேன். 10

696. ஆடையும் அகன்றது! வளையும் கழன்றது!

(தாயிரங்கல்)

நிலமாது திலகனெங்க ளிளசைவெங்க
டேசுரெட்ட நின்னைப் பார்த்த
பலமாது வதனமும்பொற் பசலைகொண்டாய்
மகளே பெண்படையா மேகங்
குலமாது ரங்கமென்ற கிள்ளையின்மேன்
மாரன்வருங் குறியைப் பார்த்துச்
சொலமாது துகிலுங்கையிலே தொடுவளையுந்
தோற்றுநின்ற துணிவுதானே.

மகளே! பெண்டிரைப் படையாகவும், இரவை அழகிய யானை யாகவும் கொண்டு குதிரையாகிய கிளியின் மீது ஏறி மன்மதன்வரும் குறியைக்கண்டு கூறியதும், சிறந்த ஆடையும் கையில் வளையலும் நழுவியது நிச்சயமாகி விட்டது; இவ்வுல கத்திற்குத் திலகம் போன்ற வேங்கடேசுவர எட்டப்பன் நின்னைப் பார்ப்பதன் பயனாக இரண்டு தனங்களின் மீதும் பசலை படரப் பெற்றாள். 11

697. *வேங்கடேசுரன் மாலை தந்தான்!*

(தலைவி மன்மதனைப் பழித்தல்)

கலக்கடமானைத்தொனியை முழக்கமன
 மலைந்தடையார் கால்சாய்ந் தோடப்
பெலக்கடமா நகக்களிற்றை நடத்தும்வெங்க
 டேசுரெட்டன் பிணைய லீந்தான்;
சிலக்கடமா மரக்குயிலை யொடுக்குகடற்
 றொனியடக்கு தென்றற் றேரை
விலக்கடமா மதப்பயலே தலைக்கடைவா
 சலைக்கடக்க வெருட்டுவேனே.

பகைவர்க்கு அச்சம் உண்டாக்குவதற்கான முரசொலியை உண்டாக்கி, அவர்கள் உள்ளம் அஞ்சித்தலைகீழாக ஓடுமாறு, வன்மையுடைய மலைபோன்ற யானை மேல் ஏறிச் செலுத்தும் வேங்கடேசுரன், தனது மாலையை எனக்குக் கொடுத்தான். மிகுந்த கர்வம் கொண்ட சிறுவனே! சில சோலைகளில் உள்ள மாமரத்தில் அமர்ந்து கூவும் குயிலைக் கூவாமல் அடக்கு! கடலின் ஓசையை அடங்கச்செய்! நின் தென்றல் என்ற தேரை இங்கு வாராமல் செய்! என்வீட்டு வாயிலைக் கடந்து அப்பால் போகுமாறு உன்னைத் துரத்துவேன்! 12

698. *ஒருகலம் கண்ணீர் வடித்தாள் எனக் கூறுக!*

(வண்டுவிடு தூது)

பொரக்கலக்க முற்றவருக் கிரங்கும்வெங்க
 டேசுரெட்டன் புயங்கண் டாள்மேல்
உரக்கலக்க மற்றகணை மதன்விடுத்தா
 லென்னசெய்வா ளோகோ கிண்ணச்

சரக்கலக்கம் மியன்கடைந்த செப்பலத்தா

னேதிரண்ட தனத்தி னூடே

வரக்கலக்கண் ணீருகுத்தாள் வண்டினங்காள்

கண்டசெய்தி வழுத்து வீரே.

தம்முடன் போரிட அஞ்சுபவர்க்கு அருள் காட்டும் வேங்கடேசுரனின் தோள்களைக் கண்டவளது உடல்மேல் எண்ணில்லாத அம்புகளை மன்மதன் செலுத்தினால் அவள் என்ன செய்வாள்? ஐயோ! கிண்ணம் போன்றில்லாமலும் கொல்லன் கடைந்து செய்த செப்பினைப் போன்றில்லாமலும் தானே திரட்சி பெற்றுள்ள தனங்களின் இடையே பரவி விழுமாறு ஒரு கலம் கண்ணீரை வடித்தாள். வண்டின் கூட்டமே! இந்தச்செய்தியைத் தலைவருக்குச் சொல்வீராக. 13

699. சந்திரனே, உன்னால் விளைந்தது துன்பம்!

(சந்திரனைப் பழித்தல்)

இத்தரமே சத்துணிவா ரென்சகிமார்

வஞ்சகிமா ரென்றால்வேளம்

புத்தரமே வத்தனமே புண்படுமே

யென்புகல்வேன் புலவோர்க்கேபோ

தத்தரமே கத்திணையாய்த் தழைத்த

வெங்கடேசு ரெட்டன் தழுவினாலே

துத்தரமே தித்தனையு முன்னாலே

விளைந்த தன்றேவொரு நிலாவே.

சந்திரனே!என் தோழியர் என்னை இகழ்ந்து கூறலானார்கள்; அவர்கள் வஞ்சகர்கள் என இகழ்ந்துரைக்கலாம் என்றால் இயலவில்லை; ஏனென்றால் மன்மதன் பல அம்புகளை ஏவ, அதனால் என் தனம் நொந்து வருந்துமே என்ன செய்வேன்? புலவர்க்கு மிகுதியாகக் கொடுத்தற்கு மேகத்தைப் போன்ற வேங்கடேசுர எட்டப்பன் என்னைத் தழுவிக் கொண்டால் விடை ஏது? இவ்வளவு துன்பமும் சந்திரனுன நின்னாலே உண்டாகியது. 14

700. சத்தில்லாத என் உடலை நீயும் வருத்தலாமோ, சந்திரனே!

(தலைவி சந்திரனைப் பழித்தல்)

கொட்டமிடு மருவலர்க ளிட்டகற்கோட்
டைகளனைத்துங் கொழி தூளாக
வட்டமிடும் பரிநகுல னெட்டமரா
சேந்த்ரனென்னை மருவா நாளில்
துட்டமதன் கணைதுளைத்த துளைவழியே
தென்றல்வந்து சுவைத்துத் தள்ளி
விட்டவெறுங் கூட்டையினிச் சுட்டதனு
லென்னபயன் வெண்ணி லாவே.

வெண்மையான சந்திரனே! துன்பம் செய்யும் பகைவர் கட்டிய கல்லாலான அரண்மனைகள் எல்லாம் தூளாகும்படி வட்டமிட்டு ஓடும்குதிரையின் தலைவனான நகுலனைப்போன்ற வேங்கடேசுரன் என்னைச் சேராத நாளில், பொல்லாத காமனின் அம்பானது துளைத்த துளையினினூடே தென்றல் காற்று புகுந்து சுவை பார்த்து அறிந்து தள்ளிவிட்ட சத்தில் லாததாகி விட்ட இவ் வெறுங்கூட்டை இனியும் நீ வருத்து வதால் என்ன பயன்? 15

701. தோழியே, இவளைத் தேற்றுவாயாக!

(தோழி கூற்று)

புவிக்காதி பதியிளசை புரந்தவெங்க
டேசுரெட்டன் புலவோர் சொல்லும்
கவிக்காதி வள்ளலைக்கண் டாசைகொண்டா
ளுக்கமுதைக் கரைத்துப் பால்வார்த்
துவிக்காதிவ் வளவேனும் புகட்டுசகியே
முகத்தைத் துடைதண் ணீரு
தவிக்காதி லேசுக்கானுலும் வைத்தூதிவள்
காமத் தகைக்குத் தானே.

தோழியே, உலகத்திற்குத் தலைவனான இளசையைப் பாதுகாத்த வேங்கடேசுரனும் புலவர் சொல்லும் பாடலுக்குப் பரிசைத் தரும் முதல் வள்ளலைப் போன்றவனுமான இவனைக்

கண்டு ஆசைக் கொண்ட இவளுக்குஉண்டான காதல்துன்பம் நீங்குவதற்காகச் சோற்றைக் கரைத்து அதில் பாலை ஊற்றி, ஒரு சிறிதளவாவது விக்கிக் கொள்ளாமல் இவளை அருந்துமாறு செய்வாயாக. அவள் மயக்கத்தை அடைந்தால் முகத்தைத் துடைப்பாயாக! தண்ணீரைத் தந்து காதில் சுக்கு வைத்தாயினும் ஊது! 16

702. மகளே! உனக்கு நேர்ந்தது யாது!

(நற்றுயிரங்கல்)

பொருவாசிக் கொருநகுல னிளசைவெங்க
டேசுரெட்டன் புயங்கண் டாயோ
இருவாசிக் கெனக்கலையை யுடுத்துபணி
திருத்துவளை யெங்கே தேடு
மருவாசிக் குங்குழலை முடியுனக்குத்
தரிப்பிடந்தான் மகளே சிச்சி
தெருவாசிச் சினந்துமவன் கைமருந்தான்
மெய்ம் மறந்து திரிகின் றுயே.

மகளே! போர்க் குதிரைகள் நடத்துவதில் ஒபபில்லாத நகுலனைப் போன்ற இளசைக்குத் தலைவனுன வேங்கடேசுர எட்டப்பனின் தோள்களைப் பார்ப்பாயோ? தன் அமுதத்தைப் போன்ற கைகளால் அவன் தடவியதால் தன்னை மறந்து திரிகின்றுயே! இங்கு வா! அமர்! நெகிழாமல் ஆடையை உடுத்துவாயாக! கழலும் அணிகளை ஒழுங்கு செய்வாயாக! வளையல் எங்கு விழுந்ததோ, அதனைத் தேடி எடுப்பாயாக! மணம் பொருந்திய கூந்தலை வாரி முடித்துக் கொள்வாயாக! சிச்சி, நீ அமர்வதற்கு இடம் தெருவா அகப்பட்டது. 17

703. குயில்களே, கருணை காட்டுங்கள்!

(தலைவி குயிலை நோக்கிக் கூறுதல்)

பொரவிசையஞ் செலுத்தவெங்க டேசுரெட்ட
மேந்திரன்மேற் புதுமால் கொண்டேன்
கரவிசையங் கசமாரன் கருப்புவில்லை
வளைத்துவலக் கையா லெய்யும்

சரவிசையங் கத்தில்வந்து தைத்துருவி
யப்புறம்போஞ் சகிக்க மாட்டேன்
இரவிசையம் புகுந்தொளித்தா னிளங்குயில்காள்
நீருமெனக் கிரங்கு வீரே.

பகைவர் போர் செய்ய அதில் வெற்றி கொள்ளும் வேங்கடேசுர எட்டப்பன் மீது மிக்க வேட்கையுடையவள் ஆனேன்; அம்பு செலுத்துவதில் விரைவுடைய மன்மதன் கரும்பு வில்லை வலக்கையால் செலுத்திய அம்பு உடலில் தைத்துத் துளைத்துப் பின்புறத்தே செல்கின்றது; அதைச் சகிக்கமாட்டேன்; கதிரவன் அத்தமன மலையில் மறைந்தான்; இளங்குயில்களே! நீங்கள் என் மீது அருள் செய்வீராக! 18

704. *அனங்கவேளே! நீ போ!*

(தலைவி மன்மதனை நோக்கி யுரைத்தல்)

புடவிகட கடெனவுடை படவடவை சிதறவரு பொருதார்ச்
தடவிகட களிற்றுதய னிளசைவெங்க டேசுரெட்டன் [சீறும்
றருவான் முல்லை
அடவிகட. வுனதுகுடை யகலமத கயமேகவனிலத்தேரை
நடவிகட நிமிர்முகடு தொடுபரிதி யுதயமிதோ நான்கண்டேனே.

மன்மதனே! உலகமானது 'கடகட' என உடைந்திடவும், வடவைத் தீயானது தீப்பொறி வீசவும், போரிடுபவர் மேல் சினம் கொள்ளுகின்ற யானை மீது கதிரவனைப் போன்று ஏறி வரும் இளசையை ஆளும் வேங்கடேசுர எட்டப்பன், தன் முல்லை மாலையை எனக்குத் தருவான்; இந்தக் கடலினது உச்சியைத் தொடும் கதிரவன் உதயத்தை நான் கண்டு கொண்டேன்; ஆதலால் நினது குடையாகிய சந்திரன் விலகுவானாக; மதநீரைப் பொழியும் யானையான இருள் நீங்குக. தென்றற் காற்றாகிய தேரைச் செலுத்திக் கொண்டு போவாயாக! 19

705 *பெண்கள் பழி கூறுர்!*

(தலைவி உள்ளத்தோடு உரைத்தல்)

கற்றனமின் னுவதென்சொன் முனியென்றுன்
தனயனம்பாற் கலங்கித் தாபம்
உற்றனமின் னுரமுதங் கசந்தணையா
ராதநெஞ்சே யுணர்ந்தோர்க் கங்கை

பிற்றனமின் ஞளுதவு மிளசைவெங்க
டேசுரெட்ட னினியநோக்கம்
பெற்றனமின் ஞமையின்ரே டொழிந்ததயன்
மாதரலர் பேசார் தாமே.

"முனிவனே! கல் பெண்ணாக ஆனதற்குக் காரணம் யாது?" என்று வினவிய இராமனாகத் தோன்றிய திருமாலின் மகனான மன்மதனின் பாணத்தால் காதல் பிணி உடையவராக ஆனேம். சிறந்த அமுதமும் கசந்து படுக்கையில் பொருந் தாத மனமே! கற்ற புலவர்களுக்குப் பொருளை உள்ளங்கை யில் உதவும் இளசை என்னும் ஊரில் வாழும் வேங்கடேசுர னது இனிய பார்வையை அடைந்தோம்; நம் துன்பம் இன் றுடன் விலகியது; பிற பெண்கள் இனிமேல் பழிச்சொற்களைக் கூறமாட்டார்கள்! 20

706. என் மகளின் அறிவு எட்டப்பனால் அழிந்தது!

(நற்றாய் இரங்கல்)

ஆளுக்கே யழகனெங்க ளிளசைவெங்க
டேசுரெட்ட னன்பை யீசன்
தாளுக்கே விருந்திட்டா னென்னலர்கள்
செங்குருதித் தசையைச் செங்கை
வாளுக்கே விருந்திட்டான் மாதரா
ராவியெல்லா மலர்க்கை வாளி
வேளுக்கே விருந்திட்டான் வெண்மதிக்கென்
பெண்மதியை விருந்திட் டானே.

மக்களுள் அழகுடைய இளசைப்பதியில் வாழும் வேங்கடேசுர எட்டப்பன் தன் அன்பை இறைவனின் அடிகளுக்குக் காணிக்கையாக்கினான்; பகைவரின் சிவந்த இரத்தம் சிந்தும் உடலை வாளுக்கு விருந்தாக்கினான்; பெண்டிரின் உயிரை யெல்லாம் மலர்க்கணையையுடைய மன்மதனுக்கு உரியதாக ஆக்கினான்; வெண்மை நிறமுடைய சந்திரனுக்கு என் மகளது அறிவை விருந்தாக இட்டான். 21

707 இவளைச் சேர்வாயாக!

(தோழியிரங்கல்)

அனங்கலக்க ணந்தெரியாள் சிறுபேதை
 விரகமிவட் கதிக மையோ
மனங்கலக்கப் பக்கமில்லை யுன்னையன்றி
 யாதலினால் வாரா தாலே
தினங்கலக்க ணீருகுத்துத் தேடுகிறாள்
 வாடுகிறா டிரண்ட கும்பத்
தனங்கலக்க வருள்புரிவா யிளசைவெங்க டேசு
 ரெட்ட தமிழ்க்கோ மானே.

இளசையில் உள்ள வேங்கடேசுர எட்டப்ப மன்னனே! மன்மதனின் தன்மையை அறிந்து கொள்ளாத இளையவளான இவளுக்குக் காதல் நோய் மிகுதியாக உள்ளது. ஐயோ! மனம் கலந்து பேசுவதற்கு உன்னையன்றி வேறு ஒரு துணையுமில்லை. ஆதலால், நீ வரவில்லை என்பதால் ஒவ்வோர் தினமும் கலம் கண்ணீரைச் சிந்தி நின்னைத் தேடுகின்றாள்; வாடுகின்றாள். திரட்சியுடைய குடம்போன்ற தனங்களைச் சேர்வதற்கு அருள் செய்வாயாக! 22

708. வேங்கடேசுரன் அணைந்துக் கொள்ளாததால் வந்த துன்பம்!

(தலைவி பாங்கியிடம் வருந்திக் கூறல்)

எனக்குடந்தை யானவெங்க டேசுரெட்ட
 னருகிலழைத் திருத்தி வைத்துத்
தனக்குடங்கை யாரவெனைத் தழுவாத
 மனக்குறையைச் சகியே சொன்னேன்
உனக்குடம்பெ லாம்பசக்கும் பாலனமுங்
 கசக்குமழ குற்ற கொங்கை
கனக்குடங்காத் தொனிகேட்கு மதன்படையும்
 வந்தினிக்கை கலக்குந் தானே.

தோழியே, என் உள்ளத்துக்கு உகந்த வேங்கடேசுர எட்டப்பன் என்னைத் தன் அருகில் அமர்வித்து, உள்ளங்கை பொருந்த என்னை அணைத்துக் கொள்ளாமையால் ஏற்பட்ட

மனக் குறையை உனக்குச் சொன்னேன். உடல் முழுவதும் பசலை உண்டாகின்றது; பாற்சோறும் கசக்கின்றது; அழகிய என் தனங்களாகிய குடத்தினுள் சோலையினது ஒலி கேட்கின்றது; மன்மதனின் படையும் வந்துபோர் செய்கின்றது. 23

709. *கலம் நீங்கிய காக்கையென வாடினுள்!*

(தோழியிரங்கல்)

மாலைமணி முடிதரித்த மருவலர்கள்
சேனதனைமடி யத்தாக்கும்
கோலமத களிற்றுதய ளிளசைவெங்க
டேசுரெட்டன் கூடா நாளில்
பாலனந்தி வலையருந்தாள் சிறியாட்கு
மதிக்குமென்ன பகையோமேனி
வேலைநடுக் கலத்தைவிட்டே யெழுந்தலைந்த
காகமென மெலிகின்ருளே.

மலர்மாலைகளையும் மணிகள் இழந்த முடியையும் கொண்ட பகை மன்னர்களுடைய படையை அழியத் தாக்கும் அழகிய மதத்தையுடைய யானை மேல் வரும் கதிரவனைப் போன்ற இளசை வேங்கடேசுர எட்டன் சேராத காலத்தில் இவள் பாற்சோற்றில் ஒரு சிறு பகுதியைக்கூட உண்ணமாட்டாள்; இத்தகைய சிறியவளுக்கும் சந்திரனுக்கும் என்ன பகை இருக்கின்றதோ? கடலின் நடுவில் இருந்த மரக்கலத்தை விட்டு வெளியே சென்று திரிந்து வருந்திய காகம்போல உடல் வாட்டமுற்ருள். 24

710. *இவளுக்கு இரங்கியருள்வாய்!*

(நற்ருய் இரங்கல்)

ஓங்கியரா மாமதியா தவன்போல வரவுமிடை
யுடையுந்தன்ருல்
நீங்கியரா மாரசரத் தாலவருந்து வதற்கிரங்க
நேமியாத
பாங்கியரா மாவெனக்கண் பார்த்துமரு வாய்கவந்தன்
படகையால்வாள்
வாங்கியரா மாபூமா விளசைவெங்க டேசு ரெட்ட
மன்ன ரேறே.

மிக நீண்ட இரவில் சந்திரன் சூரியன்போல வெப்பம் தருமாறு தோன்றவும், இடையில் இருந்த ஆடை தானே விலகவும், நின்னால் நியமிக்கப்படாத தோழியர் 'இது ஆகுமா?' என்று கடிந்து சொல்லவும்; சிவன் மட்டுமே அறியுமாறு எய்யப்படும் மன்மதனது அம்பால் துன்பம் அடைகின்றாள்; இரங்குவாய். கவந்தன் என்பவன் சாகுமாறு வாளை வீசிய ராமனே! உலகத்திற்கு மன்னனே! இளசையில் வாழும் வேங்கடேசுர எட்டப்பன் என்னும் அரசர்க்கு அரசே! இவளைக் கண்டு இரங்கி அணைவாயாக! 25

711. மன்மதன் மலர் அம்பு கொண்டுவந்தான்!

(நற்றாய் இரங்கல்)

கனத்துவரை போல்புடைத்த கொங்கைமங்கை
கொண்டமயல் கண்டு நந்தா
வனத்துவரைச் சென்றுமலர் கொய்திவளை
யெய்ய வந்தான் வந்தா னெப்போ
துனத்துவரைப் புரந்திதவு சொல்லாரைத்
தாக்கியவர்த் துருவ னேட்டிற்
சனத்துவரை யாக்கும் வெங்கடேசு ரெட்ட
மேந்திரனே. தளசிங் கேறே

எக்காலத்திலும் உன்னை வணங்குபவரைப் பாதுகாத்து, இனிய சொல் சொல்லாதவர்களை ஒருகணப் பொழுதில் நான்முகனின் ஏட்டில் பதிவு செய்துகொள்ளுமாறு செய்துவிடும் வேங்கடேசுர எட்டனே! படைத்தலைவரின் தலைவனே! கனம் மிக்க மலையைப் போன்று பருத்த தனங்களையுடைய பெண் அடைந்த மயக்கத்தைக் கண்டு தென்றலைத் தேராக உடைய மன்மதன் இவள்மேல் எய்யப் பூஞ்சோலைக்குச் சென்று மலரைப் பறித்து வந்தான். 26

712. மன்னனின் மாலைவரும்! மன்மதனுக்கு அஞ்சுவானேன்?

(தலைவியைத் தாய் தேற்றல்)

தரும்பலிக்கு மருவலரைத் தாக்கும்வெங்க
டேசுரெட்ட சாமிமாலை

வரும்பலிக்கு நினைத்தபடிக் கிப்போது தப்பாது
 வலத்திருந்த
திரும்பலிக்கு ரலைப்பார்க்கிற் செயமடிபெண் ணேமதனன்
 செங்கையாலெய்
அரும்பலிக்கு மென்னபயஞ் சுகமாக வாழ்வாயுன்
 னதிட்டந்தானே.

பல துன்பங்களைச் செய்யும் பகைவரைக் கொல்லும் வேங்கடேசுர எட்டனின் மாலை நமக்கு வரும்; இப்போது நாம் எண்ணிய வண்ணம் தப்பாதபடி நிறைவேறும்; வலப் பக்கத்தினின்று ஒலியை உண்டாக்கும் பல்லியின் சொற் பயனை ஆராய்ந்து பார்க்கின், மகளே, நமக்கு வெற்றியே யுண்டாகும். காமன் தன் சிவந்த கையால் எய்யும் அல்லி யினது மலருக்கு நாம் ஏன் அஞ்ச வேண்டும்? நீ இன்ப வாழ்வை நடத்துவாய்! அஃது உன் அதிருஷ்டத்தின் பயனே ஆகும். 27

713. மின்கொடி உண்ண மறுக்கிறாள்!

(நற்றாய் இரங்கல்)

மின்னமருங் கொடியனைய சின்னமருங்
 கொடியமுலை விம்மலானாள்
முன்னமரும் பெடுத்துமதன் றன்னமருந்
 தொடுக்க வெகுமோக மாகி
அன்னமருந் தென்னினுமீ தென்னமருந்
 தென்னவுண்ணா தயர்கின் றாளே
சொன்னமருந் தமிழ்ப்புலவர்க் குதவும்வெங்க
 டேசுரெட்ட சுகுண மாலே.

தமிழ்ப் புலவர்க்குப் பொன்னை அளிக்கும் வேங்கடேசுர எட்டன் என்பவனே! திருமாலின் அமிசமானவனே! மின்னல் கொடி போன்ற நுட்பமான இடை ஒடிந்து போகுமாறு தனங்கள் உயர்ந்து வளரவும், முன்னரே மலர் அரும்புகளைப் பறித்து மன்மதன் தன் போரைத் தொடங்க, மிக்க மோகம் கொண்டு சோற்றை உண் என உரைத்தாலும் இஃது என்ன மருந்தோ என்று உண்ணாமல் தளர்ச்சி அடைகின்றாள். 28

714. *தென்றல் காற்று வந்து வருந்துகின்றதே!*

(நற்ருய் இரங்கல்)

சடங்கலா மகட்கிளமாந் தளிரேமுத் தம்பொரிபச்
சகிக்குமாவன்
மடங்கலா னையைப்பாயு மாறுபோற்சீ றுதென்றல் வருமா
சொர்ணக்
குடங்கலா மதிதனமா னனமாஞ்சேர் வாய்மருவார் கூடியுத்தம்
தொடங்கலாற் பவுரிகொண்ட தருமவெங்க டேசுரெட்ட சுகுண
மாலே.

பகைவர்கள் ஒன்றுகூடிப் போர்தொடுப்பதால் அவர்களுடன் சுழன்று போர் செய்யும் அறச்சிந்தையுடைய வேங்கடேசுரன் என்பவனே, திருமாலைப் போன்றவனே! என் மகளுக்குத் தனங்கள் பொன்குடம் போன்றுள்ளன; முகம் கலையுடன் கூடிய சந்திரனைப் போன்றுள்ளது; உடல் கல்லாகுமா? அது மாந்தளிரைப் போன்றுள்ளது; ஆதலால் மேலே முத்து உதிரு மானல் அதை இவள்பொறுப்பாளா? வன்மையுடைய சிங்கம் யானையின் மேல் பாய்வது போலத் தென்றற்காற்று வந்து வருத்தும். ஐயோ, இவளைச் சேர்வாயாக. 29

715. *தேனும் பாலும் கசந்தன!*

(தலைவி இரங்கல்)

திருவிருக்கு மணிமார்ப னிளசைவெங்க
டேசுரெட்ட தீரனென்னை
மருவிருக்கு மணிகணவ னெனச்சேரா
நாள்மோக மயக்கத்தான்மேல்
விருவிருக்கு மணிவளையு மேகலையுஞ்
சோர்ந்திடு மேன்மேலுந் தேன்பால்
அருவிருக்கு மணியலுங்காந் துந்தரள
மெனவருங் கண்ணருவி தானே.

இலக்குமி தங்கும் அழகிய மார்பினனுன வேங்கடேசுர எட்டன், ருக்மணியின் கணவனைப் போன்று என்னைப் புணராத நாளில், வேட்கை மிகுதியால் என் உடல் ஊறல் எடுக்கின்றது, கையில் வளையலும் இடையில் மேகலையும் நெகிழ்கின்றன; மேலும் தேனும் பாலும் உண்பதற்கு அருவருப்பை உண்டாக்குகின்றன. 30

716. *வேங்கடேசுரனைத் தழுவுவாயாக!*

(தலைவியை நோக்கித் தாய் கூறல்)

குருவடியை வணங்கும் வெங்கடேசுரெட்ட
மேந்திரன்முன் கூசாமற்போய்
இருவடி வெல்லாம்பாரு வீணையைமீட்
டனுராக மிசைத்தனேகந்
தருவடி தெள்ளமுதநவரச மொழுகும்படி
படிசவ்வாதுபூசி
மருவடி பெண்ணேயினிமேல் மகராசியாய்ச்
சுகித்து வாழ்குவாயே.

பெண்ணே, தன் ஆசிரியரின் அடிகளை வணங்கும் இயல்புடைய வேங்கடேசுரன் முன்பு நாணம் கொள்ளாமல் செல். அங்கு அமர்; அவனுடைய திருமேனி முழுவதையும் கவனி; வீணையை வாசி; ஆசையை எழுப்பி அனேக தேவமரங்களின் சாரத்தை வடிவெடுத்துத் தெளிந்த அமுதத்தைப் போல ஒன்பது சுவை மிகுமாறு பாடு; சவ்வாது போன்ற மனம் பொருந்திய பொருளைப் பூசி அவனைத் தழுவுவாயாக! இனி மிக்க இன்பத்துடன் வாழ்க்கையை நடத்துவாயாக! 31

717. *ஐயனே! நின்மீது என் மகள் காதல் கொண்டாள்!*

(நற்றுயிரங்கல்)

கன்னியுன்றன் மேற்பிரிய மையா
மற்றோரையிவள் கண்டால்மூன்று
மன்னர்தமி லேயொருவன் பெயரை
யடிக் கடிவழுத்து வாளனத்தைத்
தென்னவன்றன் மாலையென்றாள் மதியையதிற்
கடையெழுத்தாய்த் தீாத்தாளைய
நன்னயகு ணகரகு மாரவெட்ட
ராசேந்த்ர நளினமாலே.

நல்ல குணங்களுக்கு இருப்பிடமான குமார எட்டனே! திருமாலின் வடிவானவனே! ஐயனே! என் மகளுக்கு உன் மேல் காதல் இருக்கின்றது! மற்றவர் இவளை நோக்கின் மூன்று அரசர்களான முடியுடை வேந்தர்களுள் ஒருவரது

பெயரை இவர் சொல்வாள் (சேரேன் என மொழிவாள்) உணவைப் பாண்டியனது மாலை என உரைப்பாள் (கசக்கின்றது என்பாள்); மதியை அதனது இறுதி எழுத்து என்று முடிவு செய்வாள் (தீ என இயம்புவாள்; 'மதி' என்பதில் உள்ள ஈற்று எழுத்து 'தி'; அது 'தீ' என்பதன் குறுக்கல் என்று முடிவு செய்வாள். 32

718. பரிந்து இவளைச் சேர்வாயாக!

(தாயினது கூற்று)

பொன்னிலங்கை ராவணனை வென்றவிடை
யாட்களகம் புளகக் கொங்கை
தென்னனைநே ராயிருக்குஞ் சொல்வார்த்தை
கண்டு பால்தேன்ம காவிற்
பன்னிவடி வீர்கணிதம் பம்மரம்பை
யாமிவட் பரிந்து சேர்வாய்
சொன்னமொழி தவருத குமாரவெட்ட
ராசேந்த்ர சுகுண மராலே.

சொன்ன சொல் தவருத குமர எட்ட ராசேந்திரனே! திருமாலின் அமிசமானவனே! ஒடிந்து விழும் இடையை யுடைய இவளுக்குக் கையானது திருமகளின் இருப்பிடமான தாமரை போன்றது; கூந்தல் இருண்ட கரிய நிறத்தை யுடையது; தனங்கள் தென்னையின் சிறு காய்களைப் போன்றவை; மொழிகின்ற சொல் கற்கண்டு பால் தேன் ஆகியவை கலந்தது போன்றது; மிக்க கல்வியை யுடையவள்; உருவம் தெய்வப் பெண்ணின் மேனியைப் போன்றது; துடை வாழைத் தண்டைப் போன்றது; கண் அரத்தைப் போன்றது. அளகுல் பாம்பின் படத்தைப் போன்றது. இவள் மேல் இரக்கம் கொண்டு இவளைச் சேர்வாயாக! 33

719. என் துன்பத்தைக் குமார எட்ட பூபதியிடம் சொல்க!

(தலைவி கூற்று)

மெலக்கணக்காப்பொருந்துவோ மெனவேளை
மணங்குறிக்கும் வேளை பார்த்து

நிலக்கணக்கா மனம்புகுந்து குந்தாப்பாய
வென்மே னிரைத்தா னெண்ணிச்
சொலக்கணக்கா வழக்சாநா னறிந்த
வளாதெரிந் தவளா துயரமெல்லாம்
இலக்கணக்கா ரிகைதேர்ந்த குமார வெட்ட
பூபதிபா லியம்பு வாயே.

மெதுவாகத் தலைவனைச் சேரலாம் என்று மனத்தில் விருப்பம் கொள்ளும் நேரத்தில் மன்மதன் தன் அம்புகளைக் குவியல் குவியலாகப் பாயுமாறு வரிசையாக என்மீது செலுத்தினன்; அந்த அம்புகளை அளந்து இத்தனை என்று அளவு சொல்வ தற்குக் கணக்கு வழக்குண்டா? நான் அத்தகைய அறிவைப் பெற்றவளா? கணக்கின் விவரத்தை அறிய மாட்டேன்; என் துன்பத்தை யெல்லாம் இலக்கணத்தை ஆராய்ந்து தெளிவு கொண்ட குமார எட்ட மன்னனிடம் சொல்வாய்! 34

720. கதிரவன் மறைகின்ருனே!

(செவிலியின் கூற்று)

அரைத்தசந்த னம்பொருந்தா ளமளியின்மேற்
கண்டுயிலா ளரக்கன் மௌலி
நிரைத்தசந்த னம்பாலே துடைத்த
மருதப்பன் வரநினையா ளன்னை
இரைத்தசந்த னம்பசலைக் காற்றுமென்
ருள்பரவை யிடத்தி லேசென்
றுரைத்தசந்த னம்பாருக் குளில்லையோ
திவாகரனு ரொளிக்கின் ருரே.

தேய்த்த சந்தனத்தைப் பூசிக்கொள்ள மாட்டாள்; படுக் கையில் படுத்துக் கண் உறங்க மாட்டாள்; அரக்கனுகிய இராவணனின் முடிகளை வரிசையாக எய்த தன் அம்புகளால் அறுத்த இராமனின் அமிசமான மருதப்பபூபதி தன்னிடம் வருமாறு தாய் எண்ண மாட்டாள்; ஆரவாரிக்கின்ற மன்மத னின் பாணமலையைப் பொறுக்க இயலாது என்ருள்; கடற் கரையில் சென்று தூது மொழிந்தஅன்னமானது பூவுலகத்தில் இல்லையோ! கதிரவன் மறைகின்ருனே! இனி என்னுகும்?

விளக்கம்: சந்திரன் தோன்றினுல் துன்பம் மிகுமே என்பாள், 'கதிரவன் மறைகின்ருனே' என்ருள். 35

721. *கிளுவை மருதப்பனுக்குச் சொல்வீராக!*

(தோழி கூற்று)

அரமியஞ்சேர்த் திளவாழைக் குருத்தை
விரித்ததிற் கிடத்தவதுவுஞ் சூடா
கரமியங்கொள் ளாதெழுந்து தரையில்
விழுந்தாளதனைக் கண்டு தாய்மார்
சரமியங்கு தோவில்லையோ வெனமூக்கிற்
கையைவைத்தார் சத்ய வாய்மைத்
திரமியங்குங் கிளுவைமரு தப்பனுக்குச்
செய்திசொல்லித் தெளிவிப் பீரே.

நிலா முற்றத்தில் இளைய வாழைக் குருத்தைப் பரப்பி அதில் படுக்க வைப்பினும் அதுவும் வெம்மையாக இருந்தமையால், இன்பம் அடையாமல், வெற்று நிலத்தில் விழுந்தாள். அதைக் கண்டு தாய்மார்கள், மூச்சு இயங்குகிறதா இல்லையா என்று அவளது மூக்கின் மேல் கை வைத்துப் பார்த்தார்கள். இந்தச் செய்தியைக் கிளுவை என்ற ஊரில் வாழும் மருதப்பனுக்குச் சொல்லி உண்மை நிலையை விளக்குவீராக! 36

722. *மதியம் வரின் என் செய்வேன்?*

(தலைவி கூற்று)

திருந்தலரி கலையடக்குங் கிளுவைமரு தப்பசெய
சிங்க மென்னைப்
பொருந்தலரி தாயிருந்தால் பூத்தானஞ் செய்யானோ
போர்வேளையோ
வதந்தலரி குளையலரி மாவலரி பூவலரி
மாதர் கீழ்பால்
இருந்தலரி வாராமுன் னிரவிதனின் மதியம்வந்தா
லென்செய் வேனே.

பகைவரின் வன்மையை அடக்கும் கிளுவை என்ற ஊரில் வாழும் மருதப்பன் என்னும் வெற்றிச் சிங்கம் என்னைச் சேர்வது அரிதாக இருக்குமானால், போர் செய்யும் மன்மதன் மலர் அம்புகளை என்மீது தொடுக்க மாட்டானோ? ஐயோ! என் தோழியர்கள் எனக்காகத்துன்பப்பட மாட்டார்கள். அவர்கள் பழி சொல்வதிலே வல்லவர்கள். பகைப்பதில் வல்லவர்கள்.

அழகிய கீழ்த்திசையிலிருந்து கதிரவன் தோன்றுமுன் இவ்விரவில் சந்திரன் உதயமானுல் நான் செய்வது என்னே? 37

குறிப்பு: ரிபூ-பகைமை; 'ரிபு' என்பது 'ரிபூ' என நீண்டது.

723 தாய்க்கிழவியும் சினம் காட்டினாள்!

(தலைவி இரங்கல்)

வரைத்தூற்று நெடுங்காட்டு வழிப்புலவோ ரலையாமல்
    வளர்த்த தாய்போல்
உரைத்தூற்று மலைபுரந்த துங்கமரு தப்பனொரு
    நாளுஞ் சேரான்
கரைத்தூற்று நறும்பாலு மன்னமும் வேண்டே
    னதனைக் கண்டலோமா
தரைத்தூற்று மெனவிடுத்துத் தாய்க்கிழவி கூடநின்று
    சலஞ்செய் தாளே.

மலை புதர் முதலியவை உள்ள பெரிய காட்டு வழிகளில் புலவர்கள் அலையாமல், பெற்றெடுத்த தாயைப் போன்று ஆதரவு காட்டி, இன்மொழி பேசி, 'ஊத்து மலை'யைக்காத்து வரும் மருதப்ப வள்ளல், என்னை ஒருநாள் கூடச் சேரான். அதனுல், சோற்றைக் கரைத்துப் பாலையும் ஊற்றிக்கொடுக்கும் உணவையும் நான் உண்ணவில்லை. அதனைப் பார்த்தன்றோ பாட்டியானவள் என்மீது பழி சொல்லும்படி சில பெண்களை ஏவினாள்; தானும் அவர்களுடன் சேர்ந்து சினம் காட்டினாள்! 38

724 சந்திரன் காணப்பட்டான்; நீ காணப்படவில்லையே!

(நற்றுயிரங்கல்)

செருத்தாக்கு மதப்புலியே திருமலைவே
    லப்பாநின் செவ்வா யூறல்
அருத்தாக்கு மரிக்கமுதங் கசப்பாகு
    மணவேண்டா ளையோ வாழைக்
குருத்தாக்கு மதைவிரித்துக் கிடத்தினுஞ்சூ
    டெனவெழுந்து கொள்வாள் காமக்
கருத்தாக்கு முதநாதன் கங்குல்வரக்
    கண்டுமுனைக் கண்டி லாளே.

போரில் பகைவர்களைக் கொல்கின்ற வீரப் புலியைப் போன்ற வனே! திருமலையில் உள்ள வேலப்ப வள்ளலே! நின் சிவந்த வாயில் உள்ள நீரைப் பருகுமாறு செய்! ஐயோ! அங்ஙனம் நீ செய்யவில்லையேல் இந்தப் பெண்ணுக்கு அமுதமும் கசக்கும்; படுக்கையையும் விரும்பாள். ஐயோ! வாழைக் குருத்தைப் படுக்கையில் விரித்து அதில் கிடத்தினும் அது சுடுகின்றது என எழுந்து கொள்வாள்; காதல் எண்ணம் உண்டாகச் சந்திரன் இரவில் வரப் பார்த்தும் உன்னைப் பார்க்கும் வாய்ப்பு இவளுக்குக் கிட்டவில்லையே! 39

725 இவள் நிலையை வேலப்பன் அறிந்து கொள்ள வில்லையே!

(நற்றாய் இரங்கல்)

எடுத்துவரி முறத்தினிலிட் டிழைத்தகுறி
 பலித்ததென வெண்ணித் தந்த
வடுத்துவரி தழுக்கேறு மெனக்கனிவாய்
 மடுத்துறிஞ்சு மாதைப் பாடு
படுத்துவ ரிம்மாதரென்றுற் சொல்பவரார்
 வளத்திலங்கைப் பதிமேற் சென்று
கடுத்துவரி தனைப்பொருத திருமலை
 வேலப்பனிதைக் கண்டி லானே.

நெல்லை முறத்தில் இட்டுப் பார்த்த குறி தனக்குச் சாதகமாக உள்ளது என்று எண்ணி, தலைவனின் பல்லின் குறி, பவழம் போன்ற தன் உதட்டில் பதியும் எனக்கொவ்வைப் பழத்தைப் போன்ற வாயின் நீரை உறிஞ்சுவாள்; இத்தகைய பெண்ணை இங்குள்ள பெண்கள் துன்பப்படுத்துகிறார்கள். எனின், இதைத் தலைவனிடத்தில் சொல்பவர்கள் யார்? வளமான இலங்கையின் மேல் படையெடுத்துச் சென்று சினந்து கடலுடன் போர் செய்த திருமலையில் வாழும் வேலப்பன் இச்செய்தியை அறிந்து கொள்ள வில்லையே! 40

726. வேலப்ப வள்ளலிடம் என் நிலைமையைச் சொல்!

தலைவி வண்டைத் தூதாக விடுத்தல்)

பொருந்தமரங் கசசரத்துக் கல்லாம
 லம்புலிக்கும் புறம்போ வென்ன

இருந்தமரஞ் சிதமொழியா ளிப்பாடு
　　படமுறையோ வெமதூ தாணி
கருந்தமரு மெனையளியே யென்னளியே
　　யாச்சியர்தங் கலையைவாரிக்
குருந்தமரங் குழைத்தேறுந் திருமலை
　　வேலப்பனிடங் கூறு வாயே.

என் வண்டே! ஏற்பட்ட சண்டை மன்மதனின் பாணங்களுக்கே அல்லாமல் சந்திரனுக்கும் வேருக இல்லை என்று கூறுமாறு இரண்டிற்கும் ஈடாக இருந்து காதல் கொண்டு விரும்பத் தகும் இனிய சொல்லையுடையவள் இவ்வாறு துன்பப் படுதல் முறையாகுமோ? எமனின் தூதுவரைப் போன்ற உறவினரும் அன்புடையவராயிருக்கின்ருரோ? இல்லை. இடைச்சியருடைய சேலைகளை எடுத்துக் கொண்டு குருந்த மரத்தில் ஏறிய கண்ணபிரானின் அமிசமான திருமலை வேலப்ப வள்ளலிடம் இந்தச் செய்தியைச் சொல்வாயாக! 41

727. என் மையலை வேலப்பனிடம் சொல்வாயாக!

(தலைவி தோழியிடம் இரங்கல்)

திருகலகு வாய்ப்பறந்து சிறகொடுக்கி
　　யிருந்து கடற்சேலை வாரிக்
குருகலகு வளையொதுக்குங் கூடலில்வாழ்
　　திருமலைவேல் கொலுவி னீபோய்
இருகலகு தலைமொழியா ளித்தனைமா
　　லானுளென் றிசைத்தே யன்னம்
பருகலகு வளைத்தாரை யாகிலுங்கேட்டா
　　ளெனச்சோ பனஞ்சொல் மானே.

என் தோழி! குருகுகள் மெல்லப் பறந்து சிறகுகளை ஒடுக்கியிருந்து கடலில் உள்ள சேல் மீன்களை எடுத்துக் கொண்டு மூக்குகளால் பொந்துகளில் இட்டு வைக்கும் தன்மையுடைய மதுரையில் உள்ள திருமலை வேலப்பனது கொலு மண்டபத்தில் நீ சென்று உட்கார்ந்திரு; கலந்து உறவாடு; மழலைச் சொல்லையுடையவள் இத்துணை ஆசை கொண்டாள் என்று கூறிச் சோற்றை உண்பாயாக! அல்லது நின் நீலோற்பல மாலையேனும் தருவாய் என வேண்டினுள் என்று நல்ல சொல்லைச் சொல்வாயாக! 42

728. *ஆசைப் பெருக்கைச் சொல்ல இயலாது!*

(*தாயிரங்கல்*)

சருக்கரை யமுதுகனிதேன் கலந்ததமிழ்
முனிநிகர்வான் தரியார் பெண்டிர்
கருக்கரைய முனிவிசய கிரிமேலேச்
சின்னேப கனவா ஞசைப்
பெருக்கரைய வளவலவென் றலேக்கேறி
மயக்கின துபித்த மூர்ச்சைத்
திருக்கரைய வுடதமொடுகரைத்து மெல்லப்
புகட்டமுது செலுத்தென் ருளே.

சர்க்கரை அமுதம் தேன் பழம் ஆகியவை கலந்தது போன்ற சுவையுடைய தமிழில் வல்ல அகத்தியரைப் போன்றவனும் பகைவரின் மனைவியருடைய கர்ப்பமும் கலங்குமாறு சினம் கொள்ளுபவனுமான விசயகிரியில் உள்ள மேலேச்சின்னேபன் என்பவனிடத்தில் கொண்ட ஆசையானது அளவற்றது; பித்தமானது என் தலேக்கேறி மயக்கியது; மூர்ச்சை ஏற்படுகின்றது. அரைத்துத் தரப்படும் மருந்தை எடுத்து அதை நீரில் கரைத்து மெல்ல உள் செலுத்து! உணவையும் உண்ணச் செய் என்ருள்.

குறிப்பு: கருக்கரைய-கரு+கரைய; கர்ப்பம் கலங்க; பெருக்கரைய—பெருக்கு+அரைய. 'அறைய' என்பது 'அரைய' என வந்தது; சொல்ல என்பது பொருள். 43

729. *மாலேயைத் தருக; இல்லேயேல் காதலேத் தருக!*

(வண்டு விடுதூது)

பொருவதற்குச் சிலேக்காமன் வருமுனமே
மதுரையிற்போய்ப் பொறிவண் டீர்காள்
செருவதற்குப் புகழ்விசயன் திருமலே
நரேந்தான்வரச்செய்வீ ரிங்கு
வருவதற்குத் தாமதித்தால் மாலேயொன்று
கேளுமந்த மாலே தானுந்
தருவதற்கு மதியானேல் மையலேயா
யினுந்திரும்பத் தரச்செய் வீரே.

புள்ளிகளையுடைய வண்டுகளே! கரும்பு வில்லை உடைய மன்மதன் போர் செய்வதற்கு வருமுன்னே, மதுரையில் சென்று போரில் புகழ் பெற்று விளங்குபவனான திருமலை ராயனை இங்கே வருமாறு செய்ய வேண்டும். இங்கு வருவதற்குக் கால தாமதம் ஏற்படுமானால் அவன் அணிந்திருக்கும் மாலையைப் பெற்று வருவீராக. அதைத்தர அவன் நினையானாயின் அவனிடம் உள்ள என் காதலையாவது திரும்பக் கொடுக்குமாறு செய்வீர்! 44

730. எனக்கும் மதனுக்கும் போர் உண்டாகும்!

(தலைவி தோழியரிடம் இரக்கல்)

தெந்தனம் பேசும் கொழுநர் மயல் கொள்ளுஞ்
　　சேல்விழியீர் திரண்ட மேரு
பந்தனம் போற்றன முடையீ ரின்சொலுரை
　　யானுரைக்கும் படிநீர் கேண்மின்
எந்தனஞ் சேராத வெங்கடேசுரெட்டன்
　　தனையழைக்க வெழுந்து போன
சந்தனஞ் சும்மா வந்தால் பூசலா
　　மெனக்குமதன் தனக்குந் தானே.

விளையாட்டாகப் பேசும் கணவர் ஆசை கொள்வதற்குக் காரணமான சேல் மீன் போன்ற கண்ணை உடைய தோழியரே! திரண்ட மேருமலையின் அமைப்பைப் போன்ற தனங்களையுடையவரே! யான் சொல்லும் இனிய மொழிகளை நீங்கள் கேட்பீராக! என் தனங்களைச் சேராத வேங்கடேசுர மன்னனை அழைத்து வரச் சென்ற அன்னம் அழைத்துக் கொண்டு வராது போனால், எனக்கும் மன்மதனுக்கும் போர் உண்டாகும். 45

731. நீயும் இவளை வருத்தலாமா?

(தாய் இரங்கல்)

விருத்தப்பா கலித்துறையும் வெண்பாவுங்
　　கொச்சகமும் விரிவாய்ச் சொல்லக்
கருத்தப்பா வெனதுமகள் காமனர
　　விந்தமலர்க்கணையா னெஞ்சில்

இருத்தப்பா லனம்வெறுத்தா
ளென்னையுமவள் சகிதனையு மேசுருள்நீ
வருத்தப்பாத் திரமலவே யணைந்திடுவாய்
திருமலைவேல் வரிசை மாலே.

திருமலை வேலப்பன் என்னும் சிறப்புடைய பெரியவனே! நான், விருத்தப்பா, கலித்துறை, வெண்பா, கொச்சகம் ஆகியவற்றை விரிவாக இயற்றிச் சொல்லும் கருத்தை உடையேன். மன்மதன் தாமரை மலராகிய அம்பைக் கொண்டு என் பெண் மார்பில் அழுத்தினன். ஆதலால் இவள் பாற் சோற்றை வெறுத்தாள். என்னையும் தோழியரையும் வைகின்ருள். நீயும் இவளைத் துன்புறுத்தக் கூடியவன் அல்லனே! விரைவில் வந்து இவளைச் சேர்வாயாக! 46

732. *மார்பினிடையே மன்மதனின் பாணம்!*

(தலைவி தோழியை இரத்தல்)

விறுதர மேவலரை வென்ற வெங்கடேசு ரெட்டன்
மேவவேண்டி
நூறுதர மாகவண்டைத் தூதுவிட்டா ளனமருந்தா
ஞெந்தாள் கண்ணீர்
ஆறுதர மேற்பாய வனங்கன்பூ வாளிமுலை
யானை யூடே
ஏறுதர மாச்செவியைத் துளைக்கு தென்றே யோலமிட்
டாளெனச்சொல் மாதே.

"பெண்ணே! மற்றவர்க்கு இல்லாத பெருமையுடைய வேங்கடேசுரன், தன்னை அணைய விரும்பி வண்டினை நூறு முறை உன்னிடம் தூது அனுப்பினுள். உணவை உண்ணுமல் வருந்தினுள். கண்ணீர் ஆறுகப் பெருக்கெடுத்தோட மன்மதனின் பாணமானது தனங்களாகிய யானையினூடு பாய்ந்து போக வண்டின் ஓசை காதைத் துளைத்து வருத்துகின்றது என்று சொன்னுள் என்று சொல்வாயாக" எனத் தலைவி தோழியை நோக்கிக் கூறினுள். 47

733. *மன்மதன் நான்கு கோடி அம்பு செலுத்துகிருன்!*

(நற்ருய் இரங்கல்)

இக்கோடி வளைப்பனென விருகோடி யிளம்பிறைக்கீற்
றெழுந்து வானில்

முக்கோடி வளைப்பமதனுற் கோடிகணை தொடுத்தான்
முன்னிற் பாளோ
கொக்கோடி யிரையெடுக்கு மிளசைநகர் செழிக்கவருங்
குமணு வெட்டுத்
திக்கோடிப் புகழ்படர்ந்த வடமலையா கடமலைமுன்
சென்ற மாலே.

கொக்குகள் பறந்து சென்று உணவை எடுத்தற்கு இடமான இளசை நகரில் வாழும் குமணனைப் போன்றவனே! எட்டுத் திக்குகளிலும் புகழ் பரவிய வடமலையப்பப் பூபதியே! மதத்தையுடைய மலையான யானையைக் காப்பதற்கு எழுந்தருளிய திருமாலின் அமிசமானவனே! இரண்டு கொம்புகளைப் போன்று விளங்கும் பிறைச்சந்திரன் தோன்றி வானத்தில் எங்கும் ஒளிவீசிச் சூழவும் கரும்பு வில்லை வளைப்பேன் என மன்மதன் நான்கு கோடி அம்புகளைச் செலுத்திஞல் அவற்றின் முன் இவள் நிற்பாளோ? 48

734. என்மகள் ஒருவன் பின் செல்கின்ருளே!

(நற்ருய் இரங்கல்)

கெஞ்சுமா தங்கமுகம் பார்த்திரங்குந் திருமலைவேற்
கிரியினுனீர்
அஞ்சுமா தஞ்சுமந்து பெற்றபலன் கிடைத்ததெனக்
காறுமாதங்
கஞ்சுமா தந்ததனைப் பெற்றிழந்தார் போற்றிரிந்து
கலங்கு தேழை
நெஞ்சுமா தம்பலுக்கு நேர்ந்தொருவன் பின்ருெடர்ந்து
நேர்கின்ருளே.

இரப்பவரின் முகத்தைப் பார்த்து அவர்களுக்கு அருள் செய்கின்ற திருமலை வேலப்பனின் மலையில், நான் பத்து மாதம் வயிற்றில் சுமந்து பெற்ற என் மகள் தங்குவாளா? சிரமமின்றிக் கிடைத்த பொன்னை உடனே இழந்தவரைப் போல, ஏழையின் மனம் கலங்குகின்றது. என் மகள் பழிச்சொல்லுக்கு ஆளாகி ஒருவன் பின் செல்வதற்கு மனம் இசைந்தாளே! 49

735. *மன்மதனே, நின் செயலை அடக்குவாய்!*

(தோழி மன்மதனை நோக்கி யுரைத்தல்)

திடக்குவடக் கடக்களிற்றுன் கம்பளவல் லக்கர்குலன்
 தெற்குப் பூர்வ
குடக்குவடக் கடற்கரசன் மலையாண்டி ராசன்முல்லை
 கொடுவந் துன்னை
மடக்குடவக் கனசெய்வள் மதப்பயலே யுனக்கினி
 யொவ்வாது பேரி
அடக்குவடக் கயமீனின் சடக்குநடக் காதினிமே
 லறிந்து பாரே.

வன்மையான மலைபோன்ற மதம் பொழியும் யானையை உடையவனும், கம்பள வல்லக்கர் சாதிக்குத் தலைவனும், தெற்கு கிழக்கு மேற்கு வடக்கு ஆகிய திசைகளில் உள்ள கடலை ஆள்பவனுமான மலையாண்டி மன்னின் மாலையை என் தலைவி பெற்று வந்து உன் செருக்கை அடக்குவாள். தக்கதைச் செய்வாள். மன்மதனே, உனக்கு இங்குப் பொருத்தம் இல்லை. ஒலிக்கும் உன் முரசை நிறுத்து! நின் மீனக்கொடியின் பெருமிதம் நிலைக்காது! இனி உனக்குத் தெரிந்ததைச் செய்து கொள்! ൰0

736. *அக்காளே! என் துன்பத்தைக் கூறுக!*

(தலைவி கூற்று)

இலக்கார மணியாள்கண் ணிமைபொருந்தாள்
 மன்மதனு ரெய்த புண்ணில்
கலக்காரம் பெய்ததெனக் கதிர்மதியுஞ்
 சுழன்றெறிப்பக் கனன்று ளென்றே
சொலக்காரம் மியமாக விலக்கணநாற்
 கவிப்புலமைத் தொன்னூ லோர்க்குப்
பலக்கார மருள்விசய சிரிவேலாஞ்
 சின்னுேப பூபதிச்செவ் வேட்கே.

அக்காளே! இலக்கணத்தில் வல்ல நாற்கவி இயற்றும் புலவர்களுக்குப் பல பொருள்களையும் வழங்குகின்ற விசயகிரியில் வாழும் முருகனைப் போன்ற சின்னுேப பூபதியின் மேல் காதல்

கொண்டு அவன் வந்து சேராமையால் முத்து மாலையை அணிந்து கொள்ளமாட்டாள். சிறிதும் உறங்கமாட்டாள். மன்மதன் அம்பை எறிந்து உண்டான புண்ணில் ஒருகலம் அளவு கொண்ட காரமான பொருளைத் தூவியதைப் போல, சந்திரனும் சுற்றி வெப்பத்தை உண்டாக்க வெந்து போகின்ருள் என்று நீ இனிமையாகத் தெரிவிப்பாயாக! 51

737. *இது தவருக உள்ளது!*

(தலைமகள் கூற்று)

இப்பளப்பா றையில்படுக்கச் சொல்லுகிறீர்
 செடிமறைவோ வில்லைச் சூழ
உப்பளப்பா றையுமாச்சுக் கணவனே
 வெகுகோபி யும்மைக் கண்டால்
கொப்பளப்பார்க் கினும்பார்ப் பான்பேனைப்
 பார்க் கினும்பார்ப்பன் குணமில்லாத
தப்பளப் பாவிருக்குதையா கிளுவைமரு
 தப்பமன்னு தமிழ்க்கோ மானே.

'கிளுவை' என்னும் ஊரில் வாழும் மருதப்பன் என்னும் அரசனே! தமிழுக்குத் தலைவனே! இந்தப் பள்ளமான கல் நிறைந்த இடத்தில் படுக்குமாறு சொல்கின்றீர்! சுற்றிலும் மரங்கள் ஒன்றும் இந்த இடத்தை மறைக்கவில்லை. இங்கு உப்பளத் திடல்களே இருக்கின்றன. என் கணவனே மிக்க சினத்தை உடையவன். அவன் உம்மைப் பார்த்தால் சுற்றத் துடன் அழிக்கும் கொலைத் தொழிலைச் செய்தாலும் செய் வான். பேனைப் பார்ப்பது போன்று எளிதாகக் கருதினலும் கருதுவான். ஐயனே! இது நன்மையில்லாத தவறுடைய செயலாக உள்ளது! 52

738. *என் மகளைக் குணப்படுத்த என் செய்வேன்!*

(நற்ருய் இரங்கல்)

ஆரசந்தி ரணத்துமட் டுண்டிலா ளருவருத்து
 விருவிருப் பாகியே
ஊரசந்தி ரவிற்பாதி சென்றுமே யுறங்கிலாள்மகட்
 கென்செய் வேனையா
தீரசந்தி ரகாவி யிடக்கயா சிங்கவுத்தண்ட
 தூர்த் தாண்ட னேரண

வீரசந்தி ரகிரிநக ராதிபா வெங்க டேசுர
வெட்டம ராசனே.

ஆண்மையுடையவனே! சந்திரக் காவி கொடியை உடையவனே! சிங்கத்தைப் போன்ற பேராற்றல் வாய்ந்தவனே! போரில் வெற்றி கொள்பவனே! சந்திரகிரி என்னும் நகரின் தலைவனே! வேங்கடேசுர எட்ட மன்னனே! ஆ! என் மகள் ஒரு சிறிதும் நீரைக் காய்ச்சிக் குடிக்கமாட்டாள்; உணவை வெறுத்தாள்; உடலில் ஊறல் கொண்டு ஊர் முழுவதும் உறங்கும் நள்ளிரவு கழிந்தபின்னரும் உறங்காமல் உள்ளாள். இவளைக் குணப்படுத்த நான் என்ன செய்வேன்? 53

739. ஆட்டைப் பலியிட்டால் இவளது பிணி நீங்குமா?

(வெறி விலக்கல்)

தடக்கயந் தலரெல்லா மெடுத்துவேள்
சமரச் சோலையில் வந்தா னெனவதை
அடக்கயத் தையுந் தாயர் கொன்றுல்
வெறியாடுத் தானிவ ளாசையைத் தீர்க்குமா
கடக்கயத் தடையார்புவி கைக்கொண்டு
கட்டுஞ்சந் திரகாவி யிடாலெனும்
இடக்கயத்தன் னிலைநாட்டுமாமண்ட லேசுரா
வெங்க டேசுரெட் டேந்த்ரனே.

மதநீரைச் சொரியும் யானையை உடைய பகைவரின் நாட்டை வென்று தனதாக்கி அங்கே சந்திரகாவிக் கொடியினைக் கட்டிய நிலைபெற்ற பூபதியே! வெங்கடேசுரனே! பெரிய நீர் நிலையில் உள்ள மலர்கள் எல்லாம் பறித்துக் கொண்டு போர் செய்யும் சோலையில் மன்மதன் வந்தான் என்று சொல்ல, அதை அடக்கத் தாய்மார் ஆட்டைப் பலியிட்டால், வெறியாடுதலாகிய வேடிக்கையாக ஆகுமே அல்லாமல், அஃது இவள் காதற் பிணியைத் தணிக்கும் வன்மை கொண்டதா? 54

740. பெண்ணின் ஆசை ஒழியாது!

(செவிலி இரங்கல்)

கலக்கை வாளியை யார்தடுப் பார்தென்றற்
காற்றுக் காற்றுவளோ மடவார்வசை

சொலக்கை வாய்பொத்தி மெய்சோர்ந் திருக்கவுந்
தோகைமோகந் தொலையாது பாரையா
உலக்கைவாரி யடிக்குங் கடாசலத்
துதயனேகணை யொன்றின் மராமரத்
திலக்கை வாலியைப் பார்த்தெய்தமா
மண்ட லேசுரா வெங்கடேசு ரெட்டேந்திரனே.

உலக்கைகளை எடுத்துப் பகைவரைத் தாக்கும் மதமலை போன்ற யானைமேல் வருபவனே! ஓர் அம்பால், குறித்த மராமரம் ஏழையும் வாலியையும் அழித்தவனே! உலகத் தலைவனே! வேங்கடேசுரனே! மன்மதன் எய்யும் ஒரு கல அம்புகளை எவர் தடுக்க வல்லவர்? தென்றற் காற்றின் கொடுமையை என் மகள் தாங்குவாளா? பெண்கள் பழி தூற்ற உடலும் தளர்ந்துள்ள எம் பெண்ணின் ஆசை ஒழியாது என்பதை நீ கவனிக்க வேண்டும் ஐயா! 55

741. குயில் பாடினல் கோதை பொறுப்பாளா?

(தாயிரங்கல்)

குரங்கிக் காய்ந்திளந் தென்றலு மன்றிலும்
கோபங் கொண்டதனுன் மாத ரேதுசெய்
வரங்கிக் காபொர வாவென்றழைப் பார்கள்
மறுத்துப்பேசவும் வாயிலை மாங்குயில்
அரங்கிக் காவென்றி ருந்திசைபாடவு
மாற்றுமோ மயலாற் ருதபேமைக்கே
இரங்கிக் காவிக்ர மார்க்கா செகமண்ட
லேசுர வெங்க டேசுரெட் டேந்திரனே.

விக்கிரமாதித்தன் போன்றவனே! உலகத் தலைவனே! வேங்கடேசுரனே! குரங்கைத் தன்னிடத்தில் கொண்ட (அல்லது மானைத் தன்னிடம் கொண்ட) சந்திரனின் ஒளியினுல், வாட்ட மடைந்து, மென்மையான தென்றற் காற்றும் அன்றில் பறவையும் சினங்கொண்டால் மாதர் அதற்கு யாது செய்ய இயலும்? அங்குக் காமனே போர் செய்ய வா என்று அழைப்பார்கள்; அதைத் தடுத்துக் கூறவும் வாய் இல்லை. மாமரத்துக் குயில்கள் ‘இந்தச் சோலை நடன அரங்கு’ என்று நினைத்துப் பாடலைப் பாட, இவள் தன் மயக்கத்தைப்

போக்கிக் கொள்வாளோ? இவள்மீது இரக்கம் கொண்டு காப்பாற்றுவாயாக!

742 *மையல் ஏற்பட்ட வகையையும் அறியாள்!*

(தாய் இரங்கல்)

தான வாரணமாமுலை யாளுக்குத் தான
வாவெண்டளப்பத்தி லேமையல்
ஆன வாறுமறியா ளிவள்கண்ணீ ரானவாறு
மறியார் மின்னாரந்தோ
வானவா கண்ட லாமண்ட லாதிபா
வானவா வளவாமது ராபுரி
மீன வாவிசை யாமீன கேதனு வெங்க
டேசுர வெட்டமாராசனே.

விண்ணுலக இந்திரனே! உலகத் தலைவனே! சேரனே! சோழனே! பாண்டியனே! அருச்சுனனே! மீனக்கொடியைக் கொண்டவனே! வேங்கடேசுரனே! யானையைப் போன்ற தனத்தை உடையவளுக்கு உண்டான விருப்பு வெண்மை நிறத்தையுடைய முல்லை மாலையிலேதான்! நின்னிடம் ஆசை தோன்றிய வகையினையும் அவள் அறியாள்; தோழியரும் அவளது கண்ணீர் ஆற்றை அறியார்கள். என்னே பரிதாபம்! 57

743. *இவளைப் புணரும் நாள் எந்நாளோ?*

(தலைவற்குச் செவிலியுரைத்தல்)

துரையத் தந்தி தலைமுலை மேல்வைத்துத்
தோயு நாளெந்தநாளோ விரகத்தை
விரையத் தந்தி வளவுஞ்செய் தாலிந்த
மெல்லியற்கென்ன சொல்லியான் தேற்றுவேன்
தரையத் தந்தி வரையேந்துமேகம் போற் றணிந்த
கொம்பு படத்தன்னி ழலைப்பாய்ந்
திரையத்தந்தி நடாத்திய மாமண்ட லேசு
ராவெங்க டேசுரெட் டேந்திரனே.

உலகத்தில், அந்தி நேரத்தே கதிரவன் மறையும் மலையானது சுமக்கும் மேகத்தைப் போல, தனது கொம்பு தரையில் பட

நிழலைப் பார்த்து அதன்மீது தாவிச் சத்தமிட யானையை நடத்தியவனே! வேங்கடேசுரனே! ஆசையை விரைவில் உண்டாகுமாறு செய்து துன்பப்படுத்தினால், மென்மைத் தன்மை உடைய என் மகளை என்ன கூறி யான் தேற்றுவேன்? பசலையுடைய தனங்களின்மீது நின் கையை வைத்து அவளைப் புணரும் நாள் எந்த நாளோ? 58

744. கடல் ஒலியை இக்காரிகை பொறுக்கமாட்டாள்!

(செவிலி யுரைத்தல்)

அந்திராமன முன்மே லென்றுற்பக
லடங்கு மோமையலானாலு மையநீ
வந்திராமனம் பேதைக்கு வேளம்பு
வச்சிராயுதம் போல்வந்து தைக்குமே
முந்திராமனம் பாலுண்ட வாரிதி முழக்கமே
சகியாளே யிளசைவாழ்
இந்திராமனு வேந்தா செகமண்ட
லேசுரா வெங்கடேசுரெட் டேந்திரனே.

இளசை என்னும் நகரத்தில் வாழும் இந்திரனே! மனுமுறைப் படி ஆட்சி செய்பவனே! உலகத் தலைவனே! வேங்கடே சுரனே! என் மகளின் காதல் மாலைக்கால முதல் இரவெல்லாம் நின் மேல் ஏற்பட்டுள்ளதென்றால், அந்த மோகம் பகற்பொழு திலும் அடங்கி நிற்குமா? ஆனாலும், ஐயனே, நீ வந்து என் பெண்ணைக் கலவாததால், சிறு பெண்ணுக்கு மன்மதனது அம்புகள் இந்திரனின் வச்சிரப்படை போல வந்து தைக்கின்றன. முற்காலத்தில் இராமன் எய்த அம்பால் கவரப் பெற்ற கடல் ஒலியை இவள் பொறுக்கமாட்டாள். 59

745. என் அன்னத்துக்கு நின் அன்னம் வேண்டும்!

(நற்றாய் இரங்கல்)

கொடிக்கத் தத்தும்மலையுமடக்கிநெற் குறியும்
பார்த்துக் குணம்பார்த்துப் பார்த்திந்தப்
படிக்கத் தத்து வளைசோரச் சோருமென்பால
னத்துக்குன் பாலனம் வேண்டுங்காண்;

அடிக்கத் தத்துகளையும் பரப்பிமு
தண்ட கூடமுகடும் படீரென
வெடிக்கத் தத்தும்பரியா திருமலை
வேலுராச விவேககு லேசனே.

தன் காலடியால் வழியில் புழுதியைப் பரப்பி அண்டத்தின் உச்சி படீரென்று வெடிக்குமாறு பாய்ந்து செல்லும் குதிரையை யுடையவனே! திருமலை வேலப்பனே! காக்கை ஒலிப்பதைப் பார்த்துத் தும்மல் எழுவதையும் அடக்கிக் கொண்டு, பின்னால் நிகழ்வதைத் தெரிவிக்கும் நெல்லின் அடையாளத்தையும் ஆராய்ந்து பார்த்து, நின் நல்ல தன்மையை எண்ணி எண்ணி இவ்வாறு கைவளையல்கள் கழல்வதால் உடல் தளரும் அன்னம் போன்ற என் மகளுக்கு உன் பாதுகாவல் வேண்டும். அல்லது பாற்சோறு வேண்டும். 60

716. காதல் பேய் கொண்ட இவளை எவ்வாறு தேற்றுவேன்

நற்றாய் இரங்கல்

பூசத்தந்தி முலையும்புண் ணுக்கினீர்
போதும்போதும் புழுகுஞ்சவ் வாதுமா
காசத்தந்தி மதியுஞ் சுடுமென்ற காமப்பேய்
கொண்டகள்ளிக்கென் சொல்லுவேன்
மாசத்தந்தி சையெல்லாம திரவே
மந்தரத்தை மருப்பிட் டிடித்தள்ளி
வீசத்தந்தி நடாத்துந் திருமலைவேலு
ராச விவேககு லேசனே.

மிக்க ஓசை எழுமாறு மந்தர மலையைக் கொம்பால் இடித்து அதைத் தூக்கி எறிகின்ற யானையை நடத்தும் வேலப்ப மன்னனான அறிவுடையவனே! புனுகு சவ்வாது ஆகியவற்றை அணியுமாறு கொடுத்து இவள் தனங்களை வருந்துமாறு செய்தீர்கள்! அவை இனிமேல் தேவையில்லை; வானத்தில் மாலையில் தோன்றும் சந்திரனும் வெப்பமுண்டாக்கும். என்று இவள் கூறுகின்றாள். இத்தகைய காதற்பேய் கொண்ட இந்த வஞ்சகிக்கு நான் என்ன சொல்வேன்? 61

747. பிறைச்சந்திரன் தோன்றினன்: பேதை கண்ணீர் விட்டாள்!

(நற்ருய் இரங்கல்)

ஓராவுண் டுமிழு மதிப்பிள்ளை யூரராவுறங்
காதபெண் பிள்ளைமேல்
கூரராவுக ணைகடொட் டான்மதன் கும்பராசி
கொழிப்பது முத்தமாம்
சூரராவி துடிப்பத்து டிப்பத்திண் டுணைக் கராசலங்
துண்டிக்கக் கண்டிக்கும்
வீரராகவ ராமா திருமலை வேலுராச
விவேககு லேசனே.

பகைத்த வீரரின் உயிர் துடிதுடிக்குமாறு வன்மையான இரு கைகளாகிய மலைகள் அவர்கள் உடம்பைத் துண்டாகுமாறு வெட்டுகின்ற வீரத்தையுடைய இராமனைப் போன்றவனே! திருமலை வேலப்ப மன்னனுன அறிவு பொருந்திய குலத் தலைவனே! ஒரு பாம்பு விழுங்கிக் கக்கும் பிறைச்சந்திரன் வானத்தில் ஊர்ந்துபோக இரவு உறங்காத சிறு பெண்ணின் மேல் மன்மதன் கூர்மையாகத் தீட்டிய அம்புகளை எய்தான். குடம் போன்ற தனங்களின்மீது துள்ளி விழுவன முத்தைப் போன்ற கண்ணீராகிய துளிகளாகும். 62

748 குழலோசை மன்மதனை அழைக்கும்

(நற்ருய் இரங்கல்)

சங்கரா வையகமும் பழிக்குமாங்
தாயார் தூற்றிலெனும் பேதை நெய்முடை
அங்கரா வையழைக்குங் கழைக்குர
லனங்கவேளை யழைக்குமென் றேங்குமாம்
கங்கரா வையடர் வதுபோலொரு கைக்
கடாசலங் கால்சர்யத் தாக்கிய
வெங்கரா வையிடறுங் திருமலை வேலு
ராச விவேககு லேசனே.

கருடனுனது பாம்பைக் கொல்வதுபோல, தும்பிக்கையை யுடைய மதமலை போன்ற யானைகைக் காலற்று வீழுமாறு

பற்றிய கொடிய முதலையைக் கொன்ற திருமாலின் அமிசமான திருமலை வேலப்பனே! சங்கரனே, 'தாயார் பழிச்சொல் கூறினல் உலகத்தவரும் பழிப்பர்' எனச் சொல்லும் இச்சிறு பெண் நெய்யின் நாற்றத்தையுடைய இடையர் பசுவை அழைக்க ஊதும் குழலோசையானது மன்மதனை அழைக்கும் என அஞ்சுகிருள். 63

749. பாலும் அன்னமும் கசந்தன!

(நற்ருய் இரங்கல்)

சந்தனத்தை விடுக்குமுன்னே வில்வ
சந்தனத்தை யலைப்பகைத் தெய்வன
சந்தனத்தைத் துளைக்குதுபா லுங்க
சந்தனத்தையுமப்படிச் செய்ததே
சந்தனத்தை யணிதிண் புயாசலத் தாருவே
தண்டமிழ்க் கவிஞோர்தம்வ
சந்தனத்தைத் துசங்கட்டி யீந்தருள்
தந்த்ரனே முத்துமந்த்ரி நரேந்த்ரனே.

சந்தனத்தைப் பூசிய மலைபோன்ற திண்மையான தோள்கள் பொருந்திய கற்பக மரத்தைப் போன்றவனே! தமிழில் வல்ல பாவலர்க்கு, கொடிகட்டி, வேண்டிய பொருளை அவர்களுக்குத் தருகின்ற சூழ்ச்சி வல்லவனே! முத்து மந்திரி என்னும் மக்களின் தலைவனே! அன்னத்தைத் தூதாக அனுப்புவதற்கு முன்னர், வில்லினையுடைய மன்மதன் எய்கின்ற தாமரைப்பூ அம்பானது தனத்தை ஊடுருவிச் செல்கின்றது. ஆகவே, பாலும் கசந்தது; உணவும் அங்ஙனமே கசந்து விட்டது. 64

750. மன்மதன் போர் தொடங்கினன்!

(நற்ருய் இரங்கல்)

பூரிக்குஞ்சர மாவார மார்கெரங்கை
பூவைதாங்கப் பொருதத் தொனிக்கடல்
பேரிக்குஞ்சர பம்போலுந் தென்றற்கும்
பெருமயக்குற் றுருகக்கண் டாங்குவேள்

நேரிக்குஞ்சர முங்கொண்டுவந்து போர்
நிறைத்திட்டா னினிநீவந்து சேர்மத
மாரிக்குஞ் சரமீதாகு மிந்திரா
வன்யராய வசுவப்ப தூயனே.

மதநீராகிய மழையைப் பெய்யும் யானைமேல் ஏறிச் செல்லும் இந்திரனே! வன்னியர் குலத்திற்கு மன்னனே! 'வசுவப்பன்' என்னும் தூய்மையானவனே! பூரிக்கும் மார்பினையுடைய பெண், அந்த ஓசையுடைய கடலாகிய முரசுக்கும், சிம்புள் பறவையைப் போன்ற தென்றல் காற்றுக்கும் ஆற்ற இயலாமல் மிக்க ஆசை கொண்டு மனம் இளகுவதைப் பார்த்து மன்மதன் கரும்பு வில்லையும் பாணத்தையும் எடுத்து வந்து போர் தொடங்கினன்; ஆதலால் இனிமேல் வந்து இவளை அணைவாயாக! 65

751. *மன்மதனின் கணையை யார் தாங்குவார்?*

(நற்றுய் இரங்கல்)

நகத்துவா ரயிலாங்கண்ணி கொங்கைக
ணயவாரறத் தைத்தவழித்தென்றல்
புகத்துவா ரஞ்செய்தாலந்த வேளம்பைப்
பொறுக்கவாரம் புயக்கண்ணி தந்துசேர்
சகத்துவா ரஞ்செயுந் தென்னிளசை
ராசத்துவாரத்துக் கோர்மந்த்ரியாய்வந்த
மகத்துவா ரஞ்சிதவசனுநர வாகனு
நம் வசுவப்ப தீரனே.

இவ்வுலக மக்கள்மேல் அன்பு காட்டும் இளசையில் வாழும் அரசனின் அரண்மனைக்கு ஒப்பில்லாத அமைச்சனுக விளங்குபவனே! பெருமையுடையவனே! இனிய சொல் சொல்பவனே! 'வசுவப்பவன்' என்ற தீரனே! வேலைப் போன்ற கண்களையுடையவளின் மலைபோன்ற தனங்கள் வருந்துமாறும் கச்சு அறுந்து போகுமாறும் மன்மதனின் அம்பு பாய்ந்த வழி தென்றல் செல்லுமானுல் அந்தக் காமனின் அம்பைத் தாங்குபவர் யார்? நின் அழகிய தோள்களில் அணிந்துள்ள மாலையைத் தந்து இவளைச் சேர்வாயாக. 66

752. *உயிர் இருப்பது கடினம்! உடனே இவளைச் சேர்!*

(நற்றாய் இரங்கல்)

கருத்தவா விலையாள்கரனுய்வருங்
    காமனாலுடல் வாடாதின் றின்பத்தை
அருத்தவா விலையாயினிப் பேதையோ
    வாவிதாங்கரிதாகுமையா கண்பார்
திருத்தவா விலையாத் தன்னை நல்கிய
    செந்தமிழ்க்குத் தியாகா நிணப்புலால்
மருத்தவா விலையாரயில் வேற்கரா
    வன்யராய வசுவப்ப தீரனே.

அழகான விலைமதிப்பற்ற பசுக்களைச் செந்தமிழுக்குப் பரிசாக அளிக்கும் வள்ளலே! புலாலின் மணம் நீங்கப்பெறாத இலை வடிவத்தில் அமைந்த வேலையுடையவனே! வன்னியர் குலத் தலைவனான வசுவப்பன் என்பவனே! தலைவனே! நீ வருவாயாக! கரும்புவில்லை ஆளும் மன்மதனால் இவள் உடல் வருந்தாது மகிழ்ச்சியை ஊட்டுவாயாக! இதில் உனக்கு ஆசையில்லாது போனால், இச்சிறு பெண்ணின் உயிர் இருப்பது முடியாததாகும். ஐயனே, இரக்கம் காட்டுவாயாக. 67

753. *நேற்றைய நிலையை எப்படி உரைப்பேன்?*

(தலைவி யிரங்கல்)

நேற்றிருந்த நிறவுமந் நேரமென் னினைவிருந்த
    நினைப்புமிளந் தென்றற்
காற்றிருந்த சுகமுமுன் னாணையென்
    கருத்திருந்ததும் யாதென்று சொல்லுவேன்
சேற்றிருந்த செந்தாமரைப் பூ வின்மேற்
    றிருவிருந்தது போலச்சிம் மாசனம்
விற்றிருந்த துரையே திருமலை·வேலுராச
    விவேககு லேசனே.

சேற்றில் தோன்றிய செந்தாமரை மலர்மீது திருமகள் வீற்றிருப்பது போல அரியாசனத்தில் வீற்றிருக்கும் தலைவனே! திருமலை வேலப்பனே! உன் ஆணைப்படி நேற்று அழகாக ஒளி வீசிய சந்திரனையும், அந்த நேரத்தில் என் உள்ளத்தில் இருந்த

காதல் நினைவுகளையும், தென்றல் காற்றினால் உண்டான இன்பத்தையும், அப்போது என் உள்ளத்தில் உண்டான முனைப்பையும் இப்படியிருந்தன என்று நான் எப்படிக் கூற இயலும்? 68

754. இலக்குமி போன்ற இவளைச் சேர்வாயாக!

(நற்றாய் இரங்கல்)

நிருதராக வனந்தந்த கங்குலிந்
நேரத்தேமத னேறியவூர்திமேல்
வருதராக வனந்தந்த மங்கையை
மருவுவாய்மலர் மஞ்சத்தின்மீதிலே
விருதராக வனந்தந்த ளஞ்செறி வேந்தன்
ராவணன்சென்னிபத் தீர்ந் திடப்
பொருதராக வனந்தந் தகுஞ்செய பூபனே
வெங்க டேசுரெட் டேந்த்ரனே.

விருதுகள் பலவற்றை உடையவராக அளவற்ற படைகளுடன் கூடிய இராவணனின் பத்துத் தலைகளும் பிளவுபடும்படி போர் செய்த இராமனின் அமிசமானவனே! வெற்றி மன்னனே! வேங்கடேசுரனே! அரக்கரின் நிறத்தைக் காட்டும் இரவில், இந்த நேரத்தில் மன்மதனின் தேரான தென்றல் காற்று மெல்லென வரப் பூம்படுக்கையின்மேல் திருப்பாற்கடலில் தோன்றிய இலக்குமியைப் போன்ற இவளை அணைவாயாக! 69

755. மலர், அம்பால் உருகுகிறாள் மங்கை!

(நற்றாய் இரங்கல்)

தடக்கடக் கயலோ விடமோ விழி தாமரைக் குமிழோ
சிமிழோதிரண்
டிடக்கடக் குடமாமுலை மாம னெய்யவாடி யுருகுதல்
பாரையா
உடக்கடக் குக்ரமாங் கும்பகன்னனை யுசித விந்திரசித்தைச்
செயங்கொண்ட
திடக்கடக் கயங்காத்த மனோகரா சீதரா வெங்க டேசுரெட்
டேந்திரனே.

ஒன்று சேர்ந்து வரும் படைகளை அடக்கும் வன்மையுடைய கும்பகன்னனையும் இந்திரசித்தையும் வென்ற, வன்மையுடைய முதலையால் பற்றப்பட்ட மதயானையைக் காப்பாற்றிய உள்ளத்துக்கு உகந்தவனே! இலக்குமியை மார்பில் கொண்டவனே! வேங்கடேசுரனே! நீர்நிலையில் உள்ள கயல் மீனோ அன்றி விடமோ என்று சொல்லக் கூடிய விழியையும் தாமரை அரும்போ அல்லது மலையோ என்று சொல்லத் தக்க திரண்ட பரந்த குடத்தைப் போன்ற பெரிய தனத்தையுமுடைய இவள், மன்மதனின் அம்பினால் வாடி உருகுவதைக் காண்பாயாக! 70

756. *இவள் துன்பத்தை நீ காண்பாயாக!*

(நற்றாய் இரங்கல்)

உரைக்கத் தத்துவத்துட் பொருளாகிய வொருவன்
கைவில்லுக் கொப்ப மிவள்கொங்கை
வரைக்கத் தத்துவ சக்கரன்போரிது மட்டுண்டோ
வத்து முட்டுதல் பார்க்கிலாய்
தரைக்கத் தத்துவளையு மெழுப்பிப் பூச் சக்ர
வாளத்தைத் தாக்கிக் கடல்கடந்
திரைக்கத் தத்துவ யப்பரி யாமண்டலேசுரா
வெங்கடேசுரெட் டேந்த்ரனே.

நிலம் அதிருமாறு புழுதியை எழும்படி செய்து சக்கரவாள மலையைப் போய்த் தாக்கிப் பெரும்புறத்தில் உள்ள கடலுக்கு அப்பாலும் சென்று ஒலி கேட்கப் பாய்கின்ற குதிரையையுடைய உலகத்திற்குத் தலைவனே! வேங்கடேசுரனே! எல்லாத் தத்துவங்களின் உட்பொருளாகிய சிவ பெருமானின் மேருமலை போன்ற இவளது தனமாகிய மலையுடன் மன்மதன் செய்யும் போருக்கு அளவுண்டோ? தென்றல் காற்று வந்து மோதுவதையும் நீ பார்க்கவில்லையே 71

757. *உண்ணவில்லை; உடுக்கவில்லை; உடனே இவளைச்சேர்!*

(செவிலி இரங்கல்)

பண்ணப்பம்பர மன்ன முணுமலே
பாற்றுப் பம்பரஞ்சோர்ந்து மயல்கொடு

வண்ணப்பம்பர மாங்குய மீறிமே வவிரும்பம்
பரக் கண்ணினட் சேரையா
தண்ணப்பம்பர வைசூழ்பதியர சருங்கப்
பம்பரந்தே கொடுவந்தடி
விண்ணப்பம்பர மென்றேதொழுஞ்செக
வீரராமகுமாரவெட் டேந்த்ரனே.

குளிர்ந்த கடல் நீரால் சூழப்பெற்ற உலகின் மன்னர் பலரும் தங்களின் கப்பப் பணத்தைக் கொண்டு வந்து வைத்து 'அடிக்கு விண்ணப்பம்; எங்களைக் காப்பது உம் பொறுப் பாகும்' எனக் கூறித் தொழும் குமார எட்டேந்திரனே! ஐயனே! சமைத்த அப்பத்தையும் சிறந்த உணவு வகைகளை யும் பால் உணவையும் உண்ணுமல், உடைநழுவுமாறு மயக் கத்தை அடைந்து பம்பரம் போன்ற தனங்கள் மேலெழுந்து நின்னை அணைய ஆசைப்படும் அம்பும் அரமும் போன்ற விழியையுடைய இவளை விரைந்து சேர்வாயாக! 72

758. இவள் ஏதுக்காவாள்?

(தோழி இரங்கல்)

உன்னக்காவடிப் பூப்பறியாள்நதி யும்புகாள்
வடிபாலை யருந்தென
என்னக்காவடி வேண்டா மென்ருேதினு
லேதுக்காவடி யங்காமற்சேருவாய்
அன்னக்காவடி யாற்கழு காசலத்
தாதிக்காவடி மைத்திறம் பூண்டுக
விண்ணக்காவடி வேலாவென் றுஞ்செக
வீரராமகு மாரவெட் டேந்த்ரனே

அன்னக்காவடி எடுத்துக் கழுதமலையில் வீற்றிருக்கும் முருகப் பெருமானுக்குத் தொண்டன் என்ற முறையில் நின்று 'முருகனே, பாதுகாப்பாயாக!' என்று வழிபடும் செகவீரராம குமார எட்டேந்திரனே! இவள் சிறப்பாக நினைக்கத் தக்க சோலையில் சென்று மலர்களைப் பறிக்கமாட்டாள்; ஆற்றில் நீராடமாட்டாள்; வடிக்கப்பட்ட பாலை அருந்துவாய் என்று சொன்னுல், 'அக்காளே, அந்தப்பால் எனக்குத் தேவையில்லை' என்று சொன்னுள். இவள் என்ன துன்பப்படுவாள்? இவள் வருந்தாமல் சேர்வாயாக! 73

759. அன்னத்தைத் தூது விடுக்கும் அன்னத்தைச் சேர்வாய்!

(நற்ருய் இரங்கல்)

ஆரிச்சந்த நயம்படிப்பார்மத
ஞலச்சந்தனக் குண்டாகியேபினும்
தேரிச்சந்த ணமேசொலுவாயெனச்
செப்பிச்சந்தநங் கைதனேச் சேருவாய்;
பூரிச்சந்த நம்விம்மிய மாதரைப்
புலப்பச் சந்தனமாகவு ளத்தில்வை
வேரிச்சந்த நமார்பகத் தாய்செக
வீரராம குமாரவெட் டேந்த்ரனே.

அழகிய தனங்கள் பூரிக்கப்பெற்று அழுத பெண்டிரின் ஊடலும் அச்சமும் தம்முடையனவாகக் கருதுதுகின்றவனே! சந்தனம் பூசப்பெற்ற மார்பையுடையவனே! எட்டேந்திரனே! இந்தத் தூதை யார் நன்கு கூறுவார்கள்? காமனல் தனக்கு உண்டாகும் துன்பத்தால் அச்சம் ஏற்பட்டதெனினும், பின்னர்த் தெளிவடைந்து ‘அன்னமே, நீ சென்று தூது சொல்வாயாக’ என்று தூது அனுப்பும் இந்த அழகிய பெண்ணைச் சேர்வாயாக! 74

760. மன்மதன் வருவதற்கு முன் வருவாய்!

(நற்ருய் இரங்கல்)

சம்புதைக்குங் கருங்காலன் சோற்கங்குல்
சாரவேலேயொலிக்குப் பயந்து நோக்
கம்புதைக்குமென் பெண்பிள்ளை மேலினிக்
காமராசனெ டுத்துத்தொ டுத்திடும்
அம்புதைக்குமுன் னேயணேந்தாலிவ
ளாவிதைக்குமிப் பூவிலிருக்கும்நம்
பும்புதைக்குள்நிதி யெனவாய்த் தவெம்
புண்ணியாவெங்க டேசுரெட் டேந்தரனே.

நம்புதற்குரிய புதையலுக்குள் பொருந்திய பொருள் போல எங்களுக்கு அமைந்தவனே! வேங்கடேசுரனே! சிவபெருமான் தன் காலால் உதைத்துத் தள்ளிய இயமனேப் போல இரவா

னது வந்து சேர, கடல் ஓசைக்கு அஞ்சி, கண்களை மூடிக் கொள்ளும் என் பெண்ணான் மேல் மன்மதன் எடுத்துத் தொடுக்கும் அம்பு பாய்வதற்கு முன்னர்த் தழுவினால் இவளது உயிரானது தங்கும்; இவ்வுலத்தில் வாழ்வாள். 75

761. புடவை போயிற்று என வந்தாள்!

(நற்றாய் இரங்கல்)

மாதானை வேந்தர்க்கு மேலோன் பெரியசுவாமியையென்
மாதானை மேல்வரக் கண்டனள் கண்டும யங்கியுஞ்சும்
மாதானை யோவரக் காணே னெனது வளவுக்குளம்
மாதானை போச்சென்று வந்தா ளினிச்சொல்ல வாயில்லையே

மிக்க படைகளையுடைய அரசர்களுக்கு மேம்பட்ட 'பெரிய சுவாமி' என்பவனை, யானைமீது பவனி வருதலை என் மகள் கண்டாள். கண்டு மோகம் கொண்டு கெடுதியில்லாமல் வருவதை நான் காணவில்லை. என் வீட்டிற்குள் அவள் 'அம்மா புடவை போய்விட்டது' என்று சொல்லிக்கொண்டு வந்தாள். இனி அவளுக்கு ஆதரவாகச் சொல்லக் கூடச் சொல் இல்லையே! என் செய்வேன்? 76

762. மன்மதன் என்னுடலைத் துளைத்து விட்டான்!

(தலைமகள் இரங்கல்)

அச்சங்க பாணி பதம்போற்றிச் செந்தமிழ்க் கன்பியற்றி
அச்சங்க மேவுந் திருமலை ராய னணைந்திலனால்
அச்சங்க லாமதிக் கென்றிருந் தேனென்த னாகத்தைநூல்
அச்சங்க மாகத் துளைத்தான் மதப்பய லம்புகொண்டே.

சங்கினைக் கையில் கொண்ட திருமாலினது திருவடிகளை வணங்கிச் செந்தமிழிடத்தில் அன்பு கொண்டு தமிழ்ச்சங்கத்தை விரும்பும் திருமலைராயன் என்னை வந்து சேராததால், கலைகளையுடைய சந்திரனுக்கு அஞ்சவேண்டும் என எண்ணினேன். ஆனால், என் உடலை மன்மதன் அம்புகளால் தாக்கித் துளைத்து நூலிழைசேர்ப்பின் வடிவமாகச் செய்துவிட்டான். 77

763. மன்மதனின் பாணங்கள் மார்பைத் துளைக்கின்றன.

(தலைவியிரங்கல்)

அத்திக் குதையன் திருமலை வேலப்ப னன்பு சொல்லத்
தித்திக் குதையன் கருத்தென்ன வோமதி சென்றுகுணக்
குத்திக் குதையன் கதிர்காட்டு மோவிரு கொங்கையின்மேல்
தத்திக் குதையமட் டேறுது காமன்சரங்கள் வந்தே.

கசேந்திரன் என்ற யானைக்கு முன்தோன்றிய திருமாலின் அமிசமான திருமலை வேலப்பன், அன்புடைய சொல்லைக் கூற அது இனிமை அளிக்கின்றது. தலைவனின் கருத்து யாதோ? மன்மதனின் அம்புகள் இரண்டு தனங்களின்மீது தாக்கிப் பின் புறத்தே ஊடுருவிப் போகின்றது. மதி மறைந்து கிழக்குத் திசையில் தோன்றும் கதிரவன் ஒளியை வீசுவானோ? 78

764. வளை கழன்று போனதைச் சொல்பவர் ஆர்?

(செவிலி இரங்கல்)

கல்வளைக் குண்டிவள் கைவளை போனதுங் காரிகையார்
சொல்வளைக்குந் தரம்போலத் தைப்பதுஞ் சொல்பவரார்
நல்வளைக் குஞ்சரி யாஞ்செவிச் சானகி நாண்புனைய
மெல்வளைக் குஞ்சிலை யானே திருமலை வேலப்பனே.

நல்ல வள்ளைத் தண்டுக்கு நிகரான செவியை யுடைய சீதையை மணம் - செய்துகொள்ள வில்லை எளிதில் ஒடித்தவனே! 'திருமலை' வேலப்பனே! இவள் கையில் இருந்த கல் போல இறுகிய வளையல் கழன்று போனதும் உண்டு என்று பெண்கள் சொல்லும் பழிச்சொல் ஈட்டி போன்று தைப்பதை உன்னிடம் கூறுபவர் யார்? 79

765. இளம்பெண் இவள், மன்மதனின் கணைக்குக் குறியோ?

(செவிலி இரங்கல்)

முடிக்கு மருப்புக் கிசையாப்பைங் கூந்தலம் மூரிமதன்
பிடிக்கு மருப்புக் கிலக்கல்ல வேயெதிர் பேசுமொன்னார்

குடிக்கு மருப்புக் கடலேற்று வித்துக் கொடி மதில்மாய்ந்
திடிக்கு மருப்புக் களிற்ரு னிளசையி லெட்டமனே.

எதிராகப் பேசும் பகைவரின் குடிமக்களை ஒலிக்கும் உப்புக் கடலுக்கு அப்பாற்பட்ட தீவுகளில் செல்லுமாறு செய்து, அப்பகைவரது கொடி கட்டப் பெற்ற அரண்மதிலைப் பாய்ந்து அழிக்கும் யானைகளையுடைய இளசையில் வாழும் எட்ட மன்னனே! மருக்கொழுந்து சூட்டப் பெறின் பொருந்தியிருக் கப் பெருத இப்போதுதான் முளைக்கும் இளமையான கூந்தலை யுடைய இவள், அந்த வன்மை பொருந்திய மன்மதன் எய் யும் அம்புகளுக்குத் தக்க இலக்காக மாட்டாளே! 80

766. மன்மதன் வண்டுகளை நாண்கயிருகக் கட்டி அம்பு எய்கின்ருன்

(செவிலி கூற்று)

தடத்தத் தளிச்சிறு நாண்பூட்டி மார சரந்தனமு
கடத்தத் தளித்தலை தோற்ருட்குத் தோற்றுக டாசலத்தை
நடத்தத் தளிக்குள் பதைத்துக் கிடக்குமொன் ஞர்கண்முறை
இடத்தத் தளிக்கப் பொரும்வெங்க டேசுரெட் டேந்த்ரனே.

யானையை நடத்தியவுடனே, தத்தம் இல்லத்துக்குள் ஒடுங்கி கிடக்கும் பகைவர்கள் குறையிரக்கவும் திண்டாடவுமாகப் போர்செய்யும் வெங்கடேசுரனே! மன்மதன்சோலையில் உள்ள வண்டுகளைத் தன் வில்லில் நாண் கயிருகக்கட்டி அம்புகளைத் தனங்களின் உச்சியிலே கையால் எய்தான். அதற்கு வருந் தித் தோல்வி கண்ட என்னுடைய மகளுக்கு முன் நீ தோன்றி இவளை ஏற்றுக் கொள்ள வேண்டும். 81

767. என் மகளுக்கு இரதியும் நிகராக மாட்டாள்

(செவிலி கூற்று)

செல்லுக்கு மல்லுக்கு நேரோதி மங்கலச் சித்தசவேள்
வல்லிக் கிணையிலை வல்லிக் கிணைகந்த மாதனஞ்சொன்
முல்லைக்கு மானுக்கு மாந்தளி ருக்குமிம் மூன்றினுக்கும்
பல்லக்கு மேல்வரு மன்னுவெட் டேந்த்ர பாண்டியனே.

பல்லக்கில் ஏறிவரும் மன்னனே! எட்டேந்திரப் பாண்டி யனே! மேகத்தையும் இருளையும் போன்ற கூந்தலையுடைய

என் மகளுக்கு மன்மதனின் மனைவியான ரதியும் ஒப்பாவதில்லை; மணம் வீசும் பெரிய தனமும் இனிய சொல்லும் சூதாடும் கருவிக்கும் கரும்பினது சுவைக்கும் நிகராகும், அரும்புக்கு ஒப்பாகப் பல்லும், மான் கண்ணுக்கு நிகராக விழியும், மாந்தளிருக்கு இணையாக உடலும் பொருந்தியுள்ளன. 82

768. *தலைவி தோழியை வணங்கலாமோ?*

(செவிலி வண்டோடு இரங்கல்)

கவள வளைக்குக் களவுசெய் தோன்வஞ்ச கப்பிணைமேல்
துவள வளைக்குஞ் சிலையான் மருதப்ப துங்கன்வரான்
தவள வளைக்குத் தடையிடு வாரில்லை சந்துசொல்ல
அவள வளைக்கும் பிடப்படு மோதண் ணளிக்குலமே.

குளிர்ந்த வண்டினமே! ஒரு வாய் அளவுள்ள வெண்ணெயைத் திருடியவனும்' வஞ்சகமாகப் பெண் வடிவம் கொண்டு வந்த பேயானது விழுமாறு வளைத்த வில்லினையுடையவனுமான கண்ணபிரானது வடிவான மருதப்பன் என்பவன் இவளிடம் வரவில்லை; இவளது கையில் உள்ள வெண்மையான வளையம் கழலாத வண்ணம் அதைத் தடுப்பவர் இல்லை; தூது சென்று வருமாறு தலைவி தோழியை வணங்கலாமோ?83

769. *மன்மதனின் பாணத்துக்கு அஞ்சிய தலைவி!*

(செவிலி கூற்று)

இந்திரற் செல்வன் றுரைபூலிக் காத்தப்ப னிங்கிவள்பால்
வந்தில னின்னமும் வேள்கணை யாள்கண் வளர்ச்சிமு
கந்திரள் காலினுள் வைத்தது மகர கர்க்கடக
சந்திர யோகங்க ளாமட வீர்கணி தந்திடமே.

பெண்டிரே! இந்திரனைப் போன்ற செல்வத்தை உடையவனாகிய, 'பூலிக்காதப்பன்' என்பவன் இங்கு இவளிடம் இன்னும் வரவில்லை; மன்மதனின் அம்பால் உறங்காத இவள் மதி முகத்தை முழங்காலுக்கு இடையில் வைத்துக் கொண்டது, மகரக் காதணிகளைக் கொண்ட முகத்தை முழங்காலுள் காட்டுவது, மகரக் கர்க்கடக சந்திர யோகங்களாகும்; இங்ஙனம் உரைக்கும் சோதிடக்கலை உறுதியேயாகும்.

விளக்கம் : மன்மதனின் அம்புக்கு அஞ்சி முழங்காலில் முகத்தை வைத்துக்கொண்ட தலைவியைப் பார்த்து வியந்து இது மகரக்கர்க்கடக சந்திர யோகங்கள் என்றார். மகரம்—காதில் அணியும் அணி; சந்திரன்—முகம், கர்க்கடகம் முழங்கால்: யோகம்-சேர்க்கை. 84

770. கடலே, நீ இனி ஒலி செய்வாயோ?

(தலைவி கடலுடன் உரைத்தல்)

வெஞ்சத் தமரந் துளைக்குந் திருமலை வேலுவந்தால்
வஞ்சத் தமரம்ப லுக்குமஞ் சேனன்னை வாய்க்கு மஞ்சேன்
நெஞ்சத் தமரங்க சப்போரை வெல்லுவ னீயுமெனை
அஞ்சத் தமரஞ்செய் வாயோ வலைசெறி யம்பரமே.

அலைகளை உடைய கடலே! ஏழு மராமரங்களையும் ஓர் அம்பால் துளைத்த இராமனின் அமிசமான திருமலை வேலப்ப பூபதி என்னிடம் விரும்பி வந்தால், வஞ்சம் உடைய சுற்றத்தாரின் பழிச் சொல்லுக்கு நான் அஞ்சமாட்டேன்; தாய் சொல்லும் கடுஞ்சொல்லுக்கும் அஞ்சமாட்டேன்: மனத்தில் இருந்து மன்மதன் செய்யும் போரிலும் நான் வெற்றி காண்பேன். கடலே, நீயும் நான் அஞ்சுமாறு ஒலியை எழுப்புவாயோ'! 85

771. மன்மதன் சத்தியப்பேர் மீது போர் தொடுத்தான்!

(செவிலி இரங்கல்)

புத்தியின்பேர்க்]குள்ளாய்வேள் பொற்றொடிக்கு முன்புவந்து
சத்தியப்பேர் மீது சரந்தொடுத்தான்—நித்தம்
குருபதம்ப ராவு மனுகூலாபொன் மாது
மருவும்வெங்க டேசுரெட்ட மா.

நாள்தோறும் ஆசாரியனின் அடிகளை வணங்கும் இயல்புடைய வனே! திருமகள் தோள்களில் தங்கப் பெற்ற வேங்கடேசுர எட்டவேந்தனே! புத்தியின் பேருக்குள்ளாகி (மதிக்குடைக் குக் கீழ் இருந்து] மன்மதன், பொன்னால் ஆன வளையலை அணிந்த இவளுக்கு முன் வந்து சத்தியத்தின் பேர் மீது (இவளது மெய் மீது) போர் தொடுத்தான்.

குறிப்பு : புத்திக்குள்-மதிக்குள்; மதிபோன்ற குடைக்குள். சத்தியப் பேர்-மெய். மன்மதன் மதியாகிய குடைநிழலில் வந்து உடல்மேல் அம்பு தொடுத்தான் என்பதாம். 86

772. கடலே முரசாகக் கொண்டு போர் தொடுத்தான்!

(தலைவி இரங்கல்)

அத்திதனை யூர்ப்பசுப்பே ராக்கிச் சினந்தடித்துச்
சித்தசனென் மேற்சமரஞ் செய்தானே—முத்தமிழ்க்கெந்
நாளும் பசுங்கனக நல்கிமுதல் வள்ளலென
வாழும்வெங்க டேசுரெட்ட மா.

முத்தமிழ்ப் பாடல் இயற்றும் புலவர்க்கு எக்காலத்தும் பசும் பொன்னைப் பரிசாகத் தந்து முதல் வள்ளல்களைப் போன்று விளங்கும் வேங்கடேசுர மன்ன! மன்மதன் கடலை ஊர்ப்பசுவின் பெயராக்கி (நகர் ஆ-முரசாகச் செய்து) என் மீது போர் தொடுத்தான். 87

773. தூது சென்றுள் தோழி! திரும்பக் காணேன்!

(தலைவி கூற்று)

மன்னன்வெங்க டேசுரெட்ட மாநிதிபால் தூதுரைத்துக்
கன்னிதார் வாங்கிவரக் காண்கிலனே—மின்னுபசும்
சொன்னவடி வாயிலங்குந் தோகை ரதிகணவன்
கன்னல்வளைத் தெய்யுங் கணை;

வேங்கடேசுர மன்னனை பெருஞ்செல்வனிடம் தோழி மாலையை வாங்கிவரச் சென்றுள்; திரும்பக் காணேம். பசும் பொன் வடிவமாக விளங்கும் இரதியின் கணவனை மன்மதன் கரும்பு வில்லை வளைத்து என் மீது மலர் அம்புகளை எய்கின்றுன். 88

774. உண்ணுள், உண்ணின் உமிழ்வாள்!

(செவிலி இரங்கல்)

தண்ணமுத பாஷிதவித் தாரன்வெங்க டேசுரெட்ட
புண்ணியவான் வந்து புணராநாள்—உண்ணமுது
மாமனத்தை யேகுமட்ட வம்புவிட்டாள் பால்கொடுக்க
வீமனத்தை பேரெடுத்தாள் மின்.

குளிர்ந்த அமுதம் போன்ற சொற்களைப் பேசும் வெங்கடேசுர எட்டன் வந்து தழுவாத போது, உண்ணும் உண

வானது மனத்தைப் புரட்டுவதால் அதைவெறுத்தாள் (கச்சு விட்டாள்); இவள் பாலை அருந்துமாறு தந்தால் தாமரை மலரிலிருக்கும் நான்முகனின் அத்தையான சத்தியின் பேரை எடுத்தாள் (வந்தி எடுத்தாள்).

விளக்கம் : வம்பு விட்டாள்-வம்பு-கச்சு; 'கச்சு' என்பது 'கைத்து' என்பதன் விகாரமாகக் கொள்ள வேண்டும். வீமன்-வீ-மலர்; மன்-இறைவன்; நான்முகன். வீமன் அத்தை-நான்முகனின் அத்தை; சக்தி; இங்கு வாந்தியெடுத்தாள் என்ற பொருளில் வந்தது. சக்தி-வாந்தி. 89

775. *அமுதம் தந்தேன்; என் மகள் ஆடானாள்!*

(நற்றாய் இரங்கல்)

தண்டமிழ்தே ருத்தமத யாளுவெங்க டேசுரெட்ட
மண்டலிகன் கூடி மருவாநாள்—செண்டு
முலைமானாட் கின்னமுது முன்கொடுக்க வாட்டுத்
தலையனாள் மால்மயக்கத் தால்.

குளிர்ந்த தமிழை ஆராய்ந்து தெளியும் தூயவனான வேங்கடேசுர மன்னன், என் மகளைத் தழுவாத நாளில் பந்தைப் போன்று திரண்டுள்ள தனங்களையுடைய என் மகளுக்கு இனிய அமுதத்தைக் கொடுக்க அவள் மிக்க மோகத்தால் ஆட்டுத் தலையைக் கொண்டவள் ஆனாள். (ஆடு, தலையாட்டுவதைப் போல அவள் தனக்கு அமுதம் வேண்டா எனத் தலையை அசைத்தாள்.) 90

776. *அற்பன் மன்மதன், மலர் அம்பு எய்வானே!*

(நற்றாய் இரங்கல்)

தெள்ளுதமி ழுக்கருடி யாகிவெங்க டேசுரெட்ட
வள்ளன்மே லாசைகொண்ட மானாள்மேல்—துள்ளும்
கயவாளி வேட்குவரி கைமுரசா னல்பங்
கயவாளியே வானோ காண்.

தெரிந்த தமிழ்ப் புலவர்க்கு அருள் செய்யும் வள்ளலான வேங்கடேசுர எட்டன் மேல் மையல் கொண்ட என் மகளின் மீது துள்ளி விளையாடும் அற்ப குணத்தைக் கொண்ட மன்மதனுக்குப் பெரிய கடல் முரசாக அமையுமானால் செருக்குற்றுத் தாமரையாகிய அம்பினைச் செலுத்த மாட்டானோ?

விளக்கம் : 'இழிந்தவன் உயர்ந்த பொருளைப் பெற்றால் கர்வம் கொண்டு மற்றவரைத் துன்புறுத்த மாட்டானோ' என்பது கருத்து. 91

777. ஊரெலாம் போனாள் இவள்!

(நற்றாய் கூற்று)

கொங்கைகும்ப கோணமா கூந்தலுமோ கூடலா
தங்கும்விழி யம்பா சமுத்திரமா—பைங்கனக
மேருவெங்க டேசுரெட்ட மேந்த்ரா யிவள்சசிபுற்
றூருடையா ளூரிடைய தாம்.

பொன் மயமான மேருமலையைப் போன்ற வேங்கடேசுர எட்டேந்திரா, இவள் இந்திராணியைப் போன்றவள், இடையானது பனைமாலை அணிந்த சேரனின் தலைநகரான வஞ்சி (வஞ்சிக்கொடியைப் போன்றது): தனங்கள் கும்பகோணமாகும் (கும்ப வட்டம்-குடத்தைப் போன்றவை; கும்பம்-குடம்; கோணம்-வட்டம்) கூந்தல் கூடலாகும்; (கூடு+அல்-மிக்க இருளையுடையதாகும்); பொருந்திய கண்கள் அம்பா சமுத்திரமாகும்;(அம்பாசமுத்திரம்-அம்பா+சமுத்திரம்; அம்பு போன்றதா? கடலைப் போன்றதா? என்று ஐயம் கொள்ளத் தக்கது.) 92

778. காமன் வில்லை முரித்தாள்; துப்பினாள்!

(மகளின் செயலுக்குத் தாய் வியத்தல்)

மெய்யன்வெங்க டேசுரெட்ட வேந்தன்பாற் சந்துரைத்துத்
தையல்கண்ணி வாங்கித் தரவிலையே –கையதினால்
துண்டித்தாள் மென்றுமென்று துப்பினாள் மாரனையும்
கண்டித்தாள் அச்சமற்றாள் காண்.

மெய்மை பொருந்திய வேங்கடேசுரனிடம் சென்று தோழி அவனது மாலையை வாங்கித் தந்தாள்; அவ்வளவில், இவள் மன்மதனின் வில்லான கரும்பைத் தன் கையால் துண்டு துண்டாக முரித்தாள்; நன்றாகச் சுவைத்துத் துப்பினாள்; மன்மதனையும் கண்டித்தாள்; அச்சம் அகலப் பெற்றாள்.

விளக்கம்: தலைவனின் மாலை இவளுக்குக் கிடைத்ததால் மன்மதனின் செயல் இவளிடம் பயன்படாது ஒழிந்தது என்பது கருத்து. 93

779 அம்பு எடுத்து வந்தான் மன்மதன்!

(நற்ருய் இரங்கல்)

பூத்தூக்கி யுண்டவனைப் போங்தேறிக் கொண்டவனே
மாத்தூக்கி யைத்தூக்கி வந்தானே—நேர்த்திதரும்
பொன்னு பரணு புயசயிலா தென்னிளசை
மன்னு குமாரவெட்ட மா.

அழகிய பொன் அணிகளை அணிந்தவனே! தோள்களாகிய குன்றுகளை புடையவனே! இளசை என்னும் நகரின் தலைவனே! உலகத்தைத் தூக்குபவனாகிய ஆதிசேடன் என்னும் பாம்பு உண்ணும் காற்ருன தென்றலைத் தன் வாகனமாகக் கொண்ட மன்மதன், திருமகளைச் சுமக்கும் தாமரைப் பூவினை என் மகள் மீது எய்வதற்கு எடுத்து வந்தான்.

விளக்கம் : பூத்தூக்கி—ஆதிசேடனாகிய பாம்பு. மாத் தூக்கி—இலக்குமியைச் சுமப்பது; தாமரை. 94

780. ஆட்டைப் பலியிடுவதால் பயன் இல்லை!

(வெறிவிலக்கல்)

நற்றமிழ்வா ணர்க்குநிதி நல்கும்வெங்க டேசுரெட்டக்
கொற்றவன்ரு ரன்றியரன் கோயிலின்முன்—உற்றகொடிக்
காலைவிட்டப் பாலேநீங் காததுமுன் துண்டுபட
வேலையிட்ட தேது விடு.

நல்ல தமிழ்ப் புலவர்க்குப் பெருஞ் செல்வத்தை அளிக்கும் வேங்கடேசுர எட்டனது மாலையல்லது சிவபெருமானது கோயில் முன் இருக்கும் கொடிமரத்தை விலகாததாகிய காளை (ரிஷப ராசிக்கு) முன் உள்ள மேஷம் (ஆடு) துண்டாகுமாறு பலியிட ஏவியதன் காரணம் யாது? இதனைக் கைவிடுக.

விளக்கம்: வேங்கடேசுரனின் மாலையால்தான் தலைவியின் மையல் நீங்கும்; ஆட்டைப் பலியிடுவதால் நீங்காது என்பது கருத்து. காளை-ரிஷபராசி. மேஷம் – ஆடு. 95

781. மாலையால்தான் மயக்கம் நீங்கும்!

(வெறி விலக்கல்)

கன்னன்வெங்க டேசுரெட்ட காண்டிபன்மேன் மாமோகச்
சன்னதங்கொண் டாட்குமுல்லைத் தாரல்லா—தென்னசெய்தீர்

தையன்முன்பூ முன்னட் சரமுற்ற தைத்தெரியச்
செய்யும்பே ரென்ன செயும்.

கன்னனைப் போன்ற கொடைத் தன்மை வாய்ந்த வேங்கடேசுரனாகிய அருச்சுனனைப் போன்ற வில் வீரன்மேல் மிக்க காதல் கொண்ட இவளுக்கு, அவனது முல்லை மாலையை வாங்கித் தருவதல்லாமல் வேறென்ன செயலைச் செய்தீர்? 'தையல்' என்ற சொல்லுக்கு முன் 'பூ' என்ற எழுத்தின் முன் எழுத்தாகிய 'பு' சேர்வதால் உண்டான 'புதையல்' என்பதைத் தெரியச் செய்யும் பேராகிய மை (ஆடு) என்ன செயலைச் செய்யும்? (ஆட்டை பலியிடுவதால் என்ன பயன் உண்டாகும்? புதையல் இன்ன இடத்தில் உள்ளது என்பதை அறிந்துகொள்ள மையிட்டுப் பார்ப்பது வழக்கம். மை என்பதற்கு ஆடு என்பதும் பொருள்.) 96

782. *மின்னல் போன்ற பெண்ணின் துன்பம் நீங்கச் செய்வீர்.*

(வெறி விலக்கல்)

தாண்டுபரி தூண்டுதிட சாலிவெங்க டேசுரெட்ட
பாண்டியன்மே லாசைகொண்ட பைந்தொடியை—வேண்டியே
ஒன்றிரண்டாப் போக வொருத்தனையிங் கேன்கொணர்ந்தீர்
மின்றுயர்க்கென் செய்யும் விடும்.

பாய்ந்து செல்லும் குதிரையைச் செலுத்தும் தன்மையுடைய வேங்கடேசுர எட்டபாண்டியன் மீது காதல்கொண்ட இந் நங்கையின் பொருட்டாகப் பலியிட ஓர் ஆட்டை ஏன் கொண்டு வந்தீர்கள்? இவளது துன்பத்தை நீக்குவதற்கு என்ன செய்யக்கூடும்? ஆட்டினைப் பலியிடும் செயலைக் கைவிடுக.

விளக்கம்: ஒருத்தனை—ஆட்டை; ஒரு—ஆடு. மின்—மின்னல் போன்ற பெண். 97

783. *வேங்கை மீது அரவிந்தம்!*

(அலர்க்குறி உரைத்தல்)

கல்விகரை கண்டகும்பன் கம்பன்வெங்க டேசுரெட்ட
வில்விசயன் தென்னிளசை வெற்பிடத்தில்—சொல்லுவதென்
கட்செவியு மம்புலியுங் கங்கையுமோர் வெம்புலியிற்
பட்சமுற வைத்தார் பதி.

தமிழின் கரைகண்ட அகத்தியனையும் கம்பனையும் போன்ற வேங்கடேசுர எட்டனின் தென் இளசைப்பதியின் மலையில், கண்ட அதிசயத்தை எவ்வாறு கூறுவது? சிவபெருமான் பாம்பையும் (அரவும்) சந்திரனையும் (இந்துவும்) கங்கை நீரும் (அம்) ஓர் கொடிய புலியின் மீது (வேங்கை மரத்தின் மேல்) வைத்தார்.

விளக்கம்: பாம்பு—அரவு; சந்திரன்—இந்து; கங்கைநீர்—அம். 'அரவு, இந்து, அம்' ஆகிய மூன்றும் சேரின் 'அரவிந்தம்' என்ருகும். இதை வேங்கை மரத்தின்மேல் சிவபெருமான் வைத்தார். வேங்கை மரத்தின் மீது தாமரை மலர் இருந்தது என்பது கருத்து. தலைவியைத் தேடிவந்த தலைவன் அவளைக் காணுமல் திரும்பும்போது, தான் கொணர்ந்த மாலையை வந்ததன் அடையாளமாக ஓரிடத்தில் வைத்துவிட்டுச் செல்வது வழக்கம். இதுவே அலர்க்குறி. 98

784. *முல்லையைப் பாதிரியின் மீது கண்டேன்!*

(அலர்க்குறி)

சங்கநிதி யென்னத் தழைத்தவெங்க டேசுரெட்ட
சிங்க மிளசைச் செழுங்கிரியில்—அங்குகண்டேன்
மானிலத்தை முற்றுமொரு·வள்ளனடு வாதியந்தந்
தானிருப்ப தேந்திநிற்கத் தான்.

நினைத்தவற்றையெல்லாம் அளிக்கும் சங்க நிதியைப் போன்றவனுன வேங்கடேசுரனின் இளசை நகர் மலையில், திருமாலுக்குரிய நிலமான முல்லை, (மலரை) பாரி என்ற சொல்லின் நடுவில் 'ஆதி' என்ற சொல்லின் முடிவில் உள்ள எழுத்தாகிய 'தி' என்ற எழுத்துச் சேர்வதால் உண்டாகும் 'பாதிரி' என்ற மரத்தின் மேல இருப்பதைக் கண்டேன்.

விளக்கம்: 'முல்லை மலரைப் பாதிரி மரத்தின் மேல் இருக்கக் கண்டேன்' என்பது பொருள். மானிலம்—மால்+நிலம்; திருமாலுக்குரிய முல்லை நிலம். வள்ளல்—பாரி; இச்சொல்லின் நடுவில் 'தி' என்ற எழுத்துச்சேர்ந்தால் பாதிரி என்ருகும். 99

785. *மூங்கிலின் மீது தாமரை உள்ளது!*

(அலர்க்குறி)

தாலமுற்றும் வாழ்த்துமிந்த்ர தாருவெங்க டேசரெட்ட
வாலகிருஷ்ண விம்பன் மணிவரையின்—மேலு

மருக்கமழு நன்மா மனையுமொரு சந்தி
இருக்கவதிற் கண்டுகொண்டே னின்று.

இவ்வுலகம் முழுவதும் போற்றுகின்ற கற்பக மரத்தினைப் போன்ற வேங்கடேசுர எட்டனுன கண்ணபிரானைப் போன்ற வனது மலையின் மீது, இலக்குமியின் மணம் வீசும் தாமரை மலரை ஒரு மூங்கிலின் மீதிருக்க இன்று அங்குப் பார்த்தேன். 100

786. மூங்கிலின் மேல் குவளை!

(அலர்க் குறி)

தங்கள் குலதீபமெனத் தாரணியோர் கொண்டாடும்
எங்கள்வெங்க டேசுரெட்ட வேந்தன்வெற்பில்—செங்கணரி
உண்ட துடனவனின றூதினதுஞ் சேர்ந்தவன்பேர்
கொண்டதின் மேற்கண்டேன் குறி.

இவ்வுலகத்தவர் தங்களின் குலவிளக்கு என்று பாராட்டும் வேங்கடேசுர எட்டனின் மலையின் மீது, சிவந்த கண்ணினை உடைய திருமால் உண்டதாகிய உலகத்தின் பெயராகிய 'கு' என்பதுடன் அப்பெருமான் ஊதின சங்கைக் குறிக்கும் 'வளை, என்பதும் சேர, குவளை என்பதாகும்; அக்குவளையை, திருமாலினது பெயரையுடையதாகிய மூங்கிலின்மேல் ஓர் அடையாளமாக இருப்பதை இன்று நான் கண்டேன். 101

787. அழகியின் அழகு!

(செவிலி கூற்று)

அழகிசக்க தேவக் கனந்தம்பணி யல்குல்
விழையுங் குமாரவெட்ட வேந்தே—பழகுமொழி
கூந்தலல் கொள்ளக்கடால்கூறுஞ்சொன் னேன்கனகம்
ஏந்துதன மாந்தளிர்மெய் யாம்.

எல்லாராலும் விரும்பப்படும் வேங்கடேசுர எட்டனே! இந்த அழகிய பெண்ணின் கண்ணனது அம்பைப் போன்றது; பேசும் சொல் கரும்பைப் போன்றது; கூந்தல் இரவினது இருளைப் போன்றது; கழுத்து சங்கைப் போன்றது; அல்குல் பாம்பினது படத்தைப் போன்றது; வயிறு ஆல இலையைப் போன்றது; தனங்கள் பொன்மலையைப் போன்றவை; உடல் மாந்தளிரைப் போன்றது. இவளது அழகைச் சொன்னேன்; இவளை அணைவாயாக.

விளக்கம்; சக்கு ஏவு; பழகுமொழி இக்கு; கூந்தல் அல்; களம் நந்தம்; அல்குல் பணி; அகடு ஆல்; ஏந்து தனம் கனகம்; மெய் மாந்தளிர் எனக் கூட்டிப் பொருள் கொள்ளப் பட்டது. 102

788. *நின்னையன்றி அடைக்கலம் இல்லை!*

ஏகாம் பரரிடப்பே ரில்லாத தாழ்வுசொல்லப்
போகாது வேறு புகலிலையே—பாகார்ந்த
சந்த மதுரத் தமிழுக் ககத்யனென
வந்தவெங்க டேசுரெட்ட மா.

சர்க்கரைப் பாகு போன்ற ஓசை இனிமையுடைய தமிழுக்கு அகத்தியரைப் போன்று தோன்றிய வேங்கடேசுர எட்ட மன்னனே! ஏகாம்பர நாதரது இடத்தின் பெயர் (காஞ்சி) இலாத இழிவைச் சொல்ல இயலாது; என்றாலும் நின்னைத் தவிர எனக்கு வேறு அடைக்கலம் இல்லை.

விளக்கம் : ஏகாம்பர நாதரின் இடப்பெயர் காஞ்சி. இது காஞ்சி எனவும் வழங்கும். இந்தக் கஞ்சி எனக்கு இல்லாத குறையை-வறுமையைச் சொல்ல இயலாது. 103

789. *எனது இடுப்பில் உள்ள ஆடையின் இயல்பு*

திரைக்கலைக்குத் தையலென் றேயிருபத் தேழென்
னரைக்கலைக் குத்தையல னேகம்—உரைக்கவொண்ணு
தந்தம்ப்ரசண்டா வரசசிரோ ரத்னமென
வந்தவெங்க டேசுரெட்ட மா.

பிரசண்டனே! மன்னர்க்குள் சிறந்தவனாகத் தோன்றிய வேங்கடேசுர மன்னனே! கடலில் தோன்றிய கலையையுடைய சந்திரனுக்குத் தையல்கள் (மனைவியர்) இருபத்தேழுபேர் (இருபத்தேழு நட்சத்திரங்களாகும்); என் இடுப்பில் உள்ள ஆடைக்குத் தையல்கள் பலவாகும்; அத்தையல்களின் எண்ணிக்கையை இவ்வளவு என்று எண்ணிச் சொல்ல இயலாது. 104

790. *மாலை பெற்று வரும்வரை மயங்காதிரு!*

(செவிலி தலைவியைத் தேற்றல்)

சென்றலந்தார் சேர்முத் திருளப்ப பூபதிபான்
மன்றலந்தார் வாங்கி வருமளவும்—குன்றமுலை

ஏழா யிரம்பண்ணை யில்லுடம்பு வாடாதே
ஏழா யிரம்பண்ணை யில்.

மலை போன்ற தனங்களை யுடையவளே, வறுமையால் துன்பப்பட்டவர் அடைக்கலமாகச் சென்று அடையக் கூடிய முத்திருளப்ப மன்னனிடம் சென்று அழகிய மாலையை வாங்கி வரும் வரையில், மன்மதனின் அம்பு நெருங்கி வரும்போது உடல் தளராமல் 'ஏழாயிரம் பண்ணை' என்ற ஊரில் இருப்பா யாக!

விளக்கம் : குன்ற முலை ஏழாயிரம் பண்ணையில்—குன்றமுலை ஏழாய் இரு அம்பு அண்ணையில் - மலை போன்ற முலையுடைய பெண்ணே, மன்மதனின் அம்பு நெருங்கும்போது, துன்பப் படாமல் இரு. 150

791. *என் மகள் உடையற்றவள் ஆனாள்!*

(நற்றாய் இரங்கல்)

கூன்கலைநி லாவின் குளிர்ச்சிபொறுக் காதுகல்வி
மான்கலையில் லாமன மருளுமா—தேன்கலையச்
சந்தநறுங் காவின்மந்தி தாவு மிளசைநகர்
வந்தவெங்க டேசுரெட்ட மா.

குரங்குகள் பெரிய தேன் கூடுகள் கலையுமாறு பாய்கின்ற நறு மணத்தையுடைய சோலையுடைய இளசை நகரில் வந்து தோன்றிய வேங்கடேசுர மன்னனே! கல்வியையுடைய என் பெண் வளைந்த சந்திரன் பொழியும் நிலவின் குளிர்ந்ததாகத் தோன்றும் வெம்மையைத் தாங்க இயலாமல் ஆடை யில்லாமல் வருந்துகின்றாள். இவளை நீ தழுவவேண்டும். 106

792. *தோழியரும், சந்திரனும் செய்யும் துன்பம்*

(செவிலி கூற்று)

நீகா விதுரா நெருப்பா மிவட்குவிலக்
காகா விதுரா கதம்புரிவார் கன்னியர்கள்
வாகா விதுரா மராமாதி மராவச்ர
தேகா விதுரா திருமலைவே லேந்திரனே.

தோள் வன்மை உடையவனே! இராமச்சந்திரனே, ரதியின் கணவனாகிய மன்மதன் போன்றவனே! வலிய உடலையுடைய

வனே! விதுரனைப் போன்றவனே! திருமலை வேலேந்திரனே! இந்தப் பெண்ணின் தோழியர் இவளது உயிர்க்குத் துன்பத்தைச் செய்வார்கள்; இரவில் தோன்றும் சந்திரன் அக்கினியைப் போன்ற துன்பத்தைத் தருவதாகும்; ஆதலால் இத்தகைய துன்பத்தை நீக்கி நீ காப்பாற்ற வேண்டும். 107

33. நாகூர் முத்துப் புலவர் பாடல்கள்

793. என் மகள் தூது அனுப்பச் சொன்னாள்!

(நற்றாய் இரங்கல்)

தனதனுக நடாத்தி யடர்ந்தபூச்
சரத்தைவாங்கித் தனத்திற் றெடுக்கம
தனதனுக தவிலான்மின் போன்மெய்ப
சந்தசந்து சந்தேசொலென் றுண்மினாள்
தனதனுக ணத்தொம்மெனப் பையினிர்த்
தம்புரிந்த சரணச ரோருகா
தனதனுக வளரும்ப்ர தாபவித்
தாரனே வெங்கடேசுரெட் டேந்த்ரனே.

'தனதனு கணத்தொம்' என்னும் ஓசை யுண்டாகும்படி, காளிங்கன் என்ற பாம்பின் மீது நடனம் செய்த திருவடியை யுடைய கண்ணனின் வடிவானவனே! குபேரனைப் போன்று வளரும் புகழை உடையவனே! வேங்கடேசுர எட்டனே! இருளாகிய யானையை நடத்தி அடர்ந்த மலர் அம்பைக் கொண்டு தனம் மீது எய்வதற்கு மன்மதனின் கையில் பொருந்திய வில் காரணமாக, மின்னலைப் போன்ற உடலில் பசலை உண்டாகித் தளர்ந்து என் மகள் நின்னிடம் தூது அனுப்பு எனக் கூறினாள். 1

794. மன்மதன் மலரம்பு எறிந்தான்!

(நற்றாய் இரங்கல்)

கனகனங்கம் பிளந்தளிர் கொந்தள கங்களந்திருக்
காயமின்மேன்மற்ற
கனக னங்கம் பிளந்தலை கண்டுகொங் கைக்குளேவினன்
சேராத நென்கொலோ

கனகனங்கம் பளகோத்தி ராவருட் காதலன்றனைக்
காத்தடி மைகொண்டு
கனகனங்கம் பிளந்தநரசிங்க காகுத்தா வெங்க
டேசுரெட்டேந்த்ரனே.

அளவற்ற பெருமையுடைய கம்பள நாயக்கக் குடியிலே உதித்தவனே! சிறுவனான பிரகலாதனைக் காத்துத் தன் தொண்டனாக்கிக் கொண்ட இரணியனின் உடலைப் பிளந்த நரசிங்கப் பெருமானின் வடிவானவனே! இராமனின் அமிச மானவனே! வேங்கடேசுரனே! மேகமும் சங்கும் கலந்தது போன்ற மலர்களை அணிந்த கூந்தலும், இளந்தளிர் போன்ற கழுத்தும் கொண்ட அழகிய உடலையுடைய பெண்ணின் மீது மனத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மன்மதன் இவளது எளிமைத் தன்மையைப் பார்த்துத் தன் அம்பைத் தனத்தின் இடையே எய்தான். இங்ஙனமிருந்தும் நீ இவளை வந்து சேராதது ஏன்? 2

795. ஆட்டினைப் பலியிடுவதால் உண்டாகும் பயன் யாது?

(வெறி விலக்கல்)

கடகரிக்கு மதனனவர்செயுங் காயந்தேர்ந்தன
ரோவளவன்னை மார்
கடகரிக்கு மரிவாழ வேலன்முன் கட்டினரதி
லென்ன மொன்னார்க்குவி
கடகரிக்கு ருவிக்கன்று கண்ணருள் கர்த்தர்
தாளிணையைத்துதி நேமகா
கடகரிக்கு நிருபாவி ளசைவாழ் கருணைமால்
வெங்க டேசுரெட் டேந்த்ரனே.

பகைவர்க்கு மாறுபட்டவனே! அக்காலத்தில் கருங்குருவிக் குக் கருணை செய்த சிவபெருமானின் திருவடிகளை வழிபடும் இயல்பைக் கொண்டவனே! இளசையில் வாழும் வேங்கடே சுர எட்டனே! வளையலை அணிந்த பெண்டிர் கரும்பு வில்லைக் கொண்ட மன்மதன் உண்டாக்கும் புண்ணை அறிந்தார்களோ? இந்த மங்கை உயிர் வாழும் பொருட்டாக வீட்டில் உள்ள அன்னையர்கள் வெறியாடும் வேலனின் முன்னர் ஆட்டைக் கட்டி வைத்தார்கள்: அதனாலே உண்டாகும் நன்மை யாது? 3

796. *அப்பா, முல்லை மாலையைத் தா!*
(செவிலி இரங்கல்)

தந்தப்பாது கடீர்மருங் கம்பிரு தாரை யாமிந்த
மாதைமின்னூர் சந்தம்
தந்தப்பாது கனற்றவ ரம்புவே டானொளிக்கச்
சரமுல்லைதாசர
தந்தப்பாது கவிப்பட்டம் வாலியைத் தாக்கியேயவன்
தம்பிக்குத் தந்துதந்
தந்தப்பாதுகை தம்பிக்கு நல்கிய தாருவே
வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உண்மையினின்று தவறுதிருத்தற் பொருட்டாக வாலியைக் கொன்று 'வானர மன்னன்' 'என்னும் பட்டத்தைச் சுக்கிரீவனுக்குத் தந்த கற்பக மரம் போன்றவனே! வேங்கடேசுர எட்டனே! குற்றமற்ற இடையும் இரண்டு கண்களிலிருந்து கண்ணீரை வடித்தலும் உடைய இவளுக்குச் சந்தனத்தைக் கொடுத்துத் தடவச் செய்யாது வெம்மையை உண்டாக்குகிறார்கள். அப்பா, துன்பத்தை உண்டாக்கும் மன்மதன் ஒளித்துக் கொள்ளும்படியாக நின் முல்லை மாலையைத் தருவாயாக! 4

797. *திருவைப் போன்றாளைச் சேர்வாயாக!*
(நற்றாய் இரங்கல்)

கனதனந்தன தாவலி ஞலந்தக் களிக்குமாமலை
யாமிடை மின்னிலும்
சினதனந்தன மாற்கூறரிதரி தென்னுமல்குல்
திருவையணை குவாய்
மனதனந்தன மாடை தமிழ்பகர் வாணர்க்கீந்து
மகிழும்ப்ரதாபனே.
தனதனந்தன வென்றுடு வோரரு டங்கிவாழ்
வெங்கடேசுரெட் டேந்த்ரனே.

தமிழ்க் கவிகளை இயற்றும் புலவருக்கு மனத்தின் கண் கொண்ட கவலை நீங்குமாறு உணவும் உடையும் கொடுத்து மகிழும் புகழை யுடையவனே! 'தனதன' என்ற ஓசை எழுமாறு நடனம் செய்யும் சிவபெருமானது திருவருளைப் பெற்று

வாழும் வேங்கடேசுர எட்டனே! அந்தச் சிறுமிக்குக் கனத்த தனம் மலை போன்று பெரிதாக உள்ளது; இடையானது மின்னலைவிடச் சிறியதாகும், ஆதிசேடனும் நம்மால் சொல்ல இயலாது என்னும்படி அல்குலை யுடைய திருமகள் போன்ற வளை நீ சேர்வாயாக! 5

798. மதி அனலைச் சொரிகின்றது! யான் என் செய்வேன்!

(தலைவி யிரங்கல்)

இந்தக்காவனங் கற்கோர்க விகையா விருந்து காந்துதி
 யானென்ன செய்குவேன்
பந்தக்காவன மம்மைகண் டப்பியெப் படியங்கேகுவன்
 பாங்கியென் ருள்கலி
சிந்தக்காவன சத்திரசோமாதி யாகசற்குண
 பாகம ஞேகரா
சந்தக்காவனஞ் சூழிள சைப்பதித் தானமால்வெங்க
 டேசுரெட் டேந்த்ரனே.

வறுமை நீங்கச் சோலையையும் உணவுச் சாலைகளையும் அமைத்த சந்திரனைப் போன்றவனே! நல்ல பண்பை யுடையவனே! சந்தனச் சோலை சூழ்ந்த இளசை என்னும் நகரில் வாழும் கொடைத்தன்மை யுடையவனே! வேங்கடேசுரனே! 'தமக்கையே, சந்திரன் காமனுக்கு ஒரு குடையாக அமைந்து துன்பப்படுத்துகிறது; நான் யாது செய்வேன்? கடுமையான காவலை மேற்கொண்டுள்ள நம் தாயின் கண்களி னின்று தப்பிச் சென்று அங்கே எப்படிப் போய்ச் சேர்வேன்?' என்று சொன்னாள். 6

799. சொந்தம் என இவளைச் சேர்வாயாக!

(செவிலி கூற்று)

இருபந்தந்த மெனும்பொற் பயோதர மென்னசொல்
 லரதிக்கெண் மடங்கிவள்
சொருபந்தந்தச் சிவிகையில் வந்தனள் சொந்தமாகவு
 வந்தணை வாய்சுடர்
தருபந்தந்த மனியவெற் புப்பெற்றித் தாய்த்துலங்கித்
 தனைநம்பு வோர்க்கெலாம்
நிருபந்தந்த மனதின்படிக்கரு ணேசனே வெங்க
 டேசுரெட்டேந்த்ரனே.

ஒளியுடைய பந்தம் பொன்மலை என்ற இவற்றின் தன்மை யுடையவனுய்த் தன்னை நம்பி வருபவர்க் கெல்லாம் அவரவர் விருப்பத்தின்படி நிரு பம் தந்தருளிய அன்புடையவனே! வேங்கடேசுரனே! அழகுடைய இவளுடைய இரு தனங்கள் இரு பந்துகளைப் போன்றுள்ளன. இவளது அழகை என்ன என்று சொல்வது? இவளது வடிவத்தின் அழகு ரதியை விட எட்டு மடங்காகும்; யானைக் கொம்பால் ஆன பல்லக்கில் வந்தாள்; இவளை உன் உரிமைப் பொருளாக எண்ணி அணைவாயாக! 7

800. மன்மதனின் மலரம்புகள் கற்களாகப் பாய்கின்றன!

(தோழி கூற்று)

தரகலாதனங் கன்சமர்க் கோலஞ்ச மைந்துபாண
மெய்தான்பூ வலவர
கரகலாதன கும்பம் பொறுக்குமா கன்னியேயெனைக்
காண்பாரென் ருள்புல
வரகலாதனன் மார்க்கசி லாக்கிய மாவசந்ததி
யாக வரோதயா
பிரகலாதன னுள்ளத்தி ருந்தருள் பெருக்குமால்
வெங்கடேசுரெட் டேந்த்ரனே.

புலவர்கள் அகலாதிருக்கும் நல்ல நெறியில் உள்ளவனே! உயர்வுடைய மன்மதனே! கொடைத் தன்மை யுடையவனே! வரத்தினுல் தோன்றியவனே! பிரகலாதனின் மனத்தில் குடி கொண்ட திருமாலினது வடிவமானவனே! வேங்கடேசுர எட்டனே! மலருடைய மரங்களை விட்டு நீங்காது மன்மதன் போர்க் கோலத்துடன் வந்து அம்புகளை எய்தான்; அந்த அம்புகள் உண்மையில் மலர்கள் அல்ல, கற்களே! அவற்றைக் குடத்தைப் போன்ற தனங்களை யுடையவள் தாங்குவாளா? தோழியே, என் மீது அருள் காட்டுக என்ருள். 8

801. துரும்பு போன்ற இரவு மலைபோலப் பெரிதாகியது!

(செவிலி கூற்று)

மாதமந்திர ணம்போலி ருந்ததை மலைக்கொப்பாக
வளர்த்தது மாரன்கைச்
சூதமந்திர வோருக மாமதி சோர்ந்துதானிந்த
வேந்திழை வாடுமோ

போதமந்திர சக்கினி யைக்கவ்விப் பொழிலிற் ருவும்
    புகழ்க்கழு காசல
வேதமந்திர மெய்க்குகனைத் தொழும் வெங்க
    டேசுர வெட்டம தீரனே.

குரங்குகள் இனிய சுவையுள்ள கனிகளைக் கவ்விக் கொண்டு சோலைகளில் தாவும். இத்தகைய சோலைகளையுடைய கழுகாசலத்தில் வீற்றிருக்கும் மறை மொழியின் பொருளாக உள்ள முருகனை வணங்கும் வேங்கடேசுரனே! மன்மதன் கையில் இருந்த மாம்பூவானது துரும்பு போலிருந்த இருளை மலை போலப் பெரிதாக்கியது. அந்த இரவு ஓர் யுகம் போன்று நீண்டு தோன்றியது. இந்த மங்கை மனம் வருந்தி வாடு வாளோ? 9

802. மலரம்பு மார்பில் பாய்கின்றது!

(தலைவி கூற்று)

வருதுகட்டு முட்டெல்லாங் கடந்துபூ வாளிவேள்கய
    வாழிமுரசம்
திருதுகட்டு வசனம லமலைத் தென்றலாங்கொடுந்
    தேரைநடாத்தியே
பொருதுகட்டு வதனத்திற் சாடவே பூத்தொடுத்தனன்
    சந்திர காவிடால்
விருதுகட்டு மதிபாவி ளசைவாழ் வெங்கடேசுரெட்
    டேந்த்ரவ் சீகரனே.

சந்திரகாவி நிறங்கொண்ட கொடியை யுடையவனே! இளசை நகரில் வாழ்பவனே! வேங்கடேசுர எட்டனே! கவர்ச்சி யுடையவனே! 'மன்மதனின் மலர் அம்பு கட்டுகளை யெல்லாம் கடந்து வருகின்றது; அவனது கடலாகிய முரசு முழங்குகின்றது. இது புனைந்து கூறும் வார்த்தையன்று. பொதிய மலையில் தோன்றிய கொடிய தேரை நடத்திப் போரிட்டு இரண்டு தனங்களில் அவன் அம்பைச் செலுத்துகிறான்! 10

803. தூது வந்தேன்!

(தோழி கூறல்)

தந்துகந்துகந் தாகந்த ணிக்குநீர்த் தடமருங்கு
    தனமல்குல் தையலே

முந்துகந்துகக் தாகணப் போழ்திலுன் மோகத்தூது
மொழிவனென் றேவந்தேன்
வந்துகந்துகந் தாகமு காசல வாசகா வென
வாழ்த்துமுன் பாகட்டுங்
கந்துகந்துகந் தாகப்பு ரட்டுங்க டாசலவெங்க
டேசுரெட் டேந்த்ரனே.

விரும்பிச் சென்று 'கந்தனே! கழுகுமலையில் வாழ்பவனே' என்று கூறி வணங்கும் வன்மை யுடையவனே! கட்டப்பட்ட கட்டுத்தறிகள் துண்டு துண்டாக உண்டாகுமாறு அதைப் பிடுங்கி எறியும் யானையை யுடையவனே! வேங்கடேசுரனே! நூலிழையே இடையாகவும் பந்து தனமாகவும் தண்ணீர்ப் பொய்கை அல்குலாகவும் கொண்ட பெண் ஆசைப்படுவதால் அதற்கு ஆதரவாக ஓர் இமைப்பொழுதில் அவளுக்கு உன்னிடம் கொண்ட காதல் கூறுவதற்காகத் தூதாக நான் வந்தேன். 11

801. மன்மதனின் போரை எங்ஙனம் எதிர்ப்பேன்?

(தலைவி யிரங்கல்)

கம்பரக்கரை யானன ராகிய
கடவுள்முன்பு நமைவேண்டிச் செல்கவென்
றும்பரக்கரை யாயனுப் பத்தன துருவி
லாமதன் யுத்தத்துக் கென்செய்வேன்
அம்பரக்கரை யானதிற் பாளய மன்றி
றங்கிய டர்ந்திலங் காபுரி
வம்பரக்கரை யாசுகத் தால்வென்ற
மாதவாவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

அக்காலத்தில் கடற்கரையில் படையைத் தங்குமாறு செய்து இலங்கையைத் தாக்கிக் கொடிய அரக்கரை அம்பால் அழித்த இராமனின் வடிவமானவனே! வேங்கடேசுர எட்ட மன்னனே! ஏகாம்பரதாதரும் நெற்றியில் கண்ணையுடையவரும் ஐந்து முகங்கள் உடையவரும் ஆன சிவபெருமானின் முன் எங்கள் நன்மைக்காகச் சென்று வருக என்று தேவர்கள் ஆவலோடு அனுப்பவும், சிவபெருமானின் முன் போய்த் தன் உருவத்தை இழந்த மன்மதனின் போரை எதிர்க்க நான் யாது செய்வேன்? 12

805. சளைக்காமல் அம்பு எய்கிறான் காமன்!

அத்தன் கண்ணுக்குத் தோற்றான்றன் மாதலா
லரிபிர்மமாதிக்குந் தோற்றா ளவன்மகா
எத்தன் மாமனை யென்றுந தனையனென்
றேசொல்வோன்கணை யெய்யாம லெய்கிறான்
கத்தன் பூவுலகேழையு மேயொரு
கவிகைநீழலில் காத்தருளும்பரி
சுத்தன் மன்னுங் குமாரவெட் டேந்திரன்.
சோதரா வெங்கடேசு ரெட்டேந்திரனே.

ஏழு உலகையும் ஒரு குடை நிழலில் அடக்கிக் காப்பாற்றும் தூய ஒழுக்கமுடைய குமார எட்டேந்திரனின் உடன் பிறந்தவனே! வேங்கடேசுர எட்ட மன்னனே! சிவனின் கண்ணால் எரிந்து அழிந்த மன்மதன் தன் மனைவிக்கேயன்றித் திருமால் நான்முகன் முதலியவர்க்கும் புலப்படாதவன் ஆவான்; அவன் ஏமாற்றுக்காரன்; திருமகளின் தலைவனான திருமாலை எப்போதும் தன்னுடைய தந்தை என்று உரைப்பவன்; அவன் சிறிதும் சளைக்காமல் அம்பு எய்கிறான். 13

806. உன்னை இரகசியமாய் அழைத்து வருமாறு சொன்னாள்!

(தோழி தூது)

உபையராசியை யூரும்பி ரான்வள
ரோங்கனேருந் தனத்தாளு னைமகிழ்ந்
துபையராசிய மாய்க்கூட்டி வாவென்று
சொல்லியென்னையுன் பால்விடுத் தாள்பொன்னார்
சபையராசிற் சொருபாவென் றீசரைத்
தன்கையாற்றொழுந் துங்கன்கை வீடணற்
கபையராசியருள்வல்ல வாபுகழாகரா
வெங்க டேசுரெட்டேந்த்ரனே.

"தில்லைப் பொன்னம்பலத்தில் நடனம் செய்யும் நடராசப் பெருமானே, ஞானத்தின் வடிவினனே" என்று போற்றி இறைவனைக் கையால் தொழும் சிறப்புடையவனும் கையால் வீடணனுக்கு அடைக்கலம் அருள் செய்யும் வல்லவனுமாக

உள்ளவனே! புகழுடையவனே! வேங்கடேசுரனே! ராசிகளுள் இரண்டாவதாகிய ரிஷபத்தை (காளையை) ஊர்தியாகக் கொண்ட சிவபெருமானின் உயர்ந்த மலையைப் போன்ற தனத்தையுடையவள் உன்னை விரும்பி மெல்ல அந்தரங்கமாய் அழைத்து வருமாறு என்னை நின்னிடம் அனுப்பினாள். 14

807. *மாலையை இப்போதே கொடு!*

சங்கதாதர எங்கால் கமுகதாதன்
கழுத்திணை யென்றுட் குன்றுரின்று
துங்கதாதரத் தாமதஞ் செய்யிலத் தோகை
தேகத்தை மாரன்வ ருத்துவான்
அங்கதாதர நீதூது செல்லென்ற
வாரியாரண வீரியப்ர தாபனே
வெங்கதாதர வீமா செயதரா
வெங்கடேசுர வெட்டம பூபனே.

துரியோதனன் முதலியவரிடம் தூது செல்ல வேண்டும் என்று பாண்டவர்களால் தூதாக அனுப்பப்பட்ட கண்ணனின் வடிவானவனே! போரில் புகழ் பெறுபவனே! கொடிய கதை என்ற கருவியையுடைய வீமன் போன்றவனே! வெற்றி பெறுபவனே! வேங்கடேசுரனே! தன் கழுத்தைப் போன்றது சங்கோ அல்லது முத்தினைச் சிந்தும் கமுக மரமா என்று ஐயப் படத்தக்க அழகுடையவளுக்குச்சிறந்தவனே! உன் மாலையை இப்போதே கொடு! அதில் அவளுக்கு மிக்க ஆசை. அதைத் தருவதற்குத் தாமதித்தால் அவளது உடலை மன்மதன் வருத்துவான்.

808. *மன்மதனின் அம்பு மங்கை மனத்தைக் கலக்காமல் இருக்குமா?*

(செவிலி கூற்று)

பூவலாரை முதலான கற்பகங்கள்
புரிந்துநிட்டை வசித்திருந் தாலுமென்
ஆவலாரை யும்விட்டுவி டாதந்த
வரிப்மிர்மா திகளானுலுந் தானென்ன

மாவலாரை மலரதி ஞலெய்யின்3
மங்கையுள்ள மயங்காதி ருக்குமா
மேவலாரை யடக்கிச்செ யம்பெற்ற
விசயனேவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

பகைவரை வென்ற அருச்சுனனைப் போன்ற ஆற்றலை யுடைய வனே! வேங்கடேசுரனே! இவ்வுலகத்தில் வினையும் வல்லாரை இலை முதலியவைகளால் செய்யப்பட்ட ஆயுளை நீடிக்கச் செய்யும் மருந்துகளைச் செய்து உண்டு நிட்டையில் அமர்ந் திருந்தாலும் என்ன பயன்? ஆசை எவரையும் விட்டு நீங்குவ தில்லை; திருமால் நான்முகன் முதலிய தேவர்களாலும் அவ்வாசையை விட இயலவில்லை; மிக்க வன்மையுடைய சிவபெருமானையும் மன்மதன் அம்பால் எய்தான் என்ருல், அவனது அம்பால் பெண்ணின் மனம் கலங்காதிருக்குமா? 16

809. இவனைச் சேர்ந்து மோகத்தைத் தணி!

(தாய் இரங்கல்)

அஞ்சக்கஞ்ச ஹங்கைபா லகனந்த
ஆவல்மேவ வடர விடுகுமு
தஞ்சக்கஞ் சனமெல்லாங் கரைத்திரு
தனத்தைநீலத் தடவரை யாக்கமால்
மிஞ்சக்கஞ்ச னந்தாழக்கு லுக்குமெய்ம்
மின்னைமேவி விரகந்த ணித்திடாய்
வஞ்சக்கஞ்ச னகத்தைத்து ணித்தவா
வாசவாவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

வஞ்சத்தையுடைய கம்சனின் மார்பைப் பிளந்தவனே! இந்திரனே! வேங்கடேசுரனே! அஞ்சத்தக்க வகையில் தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமியின் மகனுன மன்மதன் ஆசையுண்டாக விடும் குவளை மலரானது, விழிகளில் தீட்டப் பட்டமையை யெல்லாம் கரைத்து மையுடன் விழுந்த கண்ணீரால் தனங்கள் நீலமலை போல் ஆகுமாறு செய்து, ஆசை மிகுவதால் கண்ணுடியும் தோற்க ஒளிபொருந்திய உடலைக்கொண்ட பெண்ணைச் சேர்ந்து காதலைத் தணிப் பாயாக! 17

810. மால் கொண்டாள்! மயக்கத்தைப் போக்கு!

(தாயிரங்கல்)

கந்தரப்புய ருஞ்சடை யார்பகைக்
காமன்வந்து கணையேவ வேமினுள்
அந்தரப்புய லின்பேர்மி குத்தன
ளணையின் மீதணை வாயணைவாய்பர
தந்தரப்புயங் கப்பணி மீதுதெய்தத்
தென்றுடுஞ்சரணும்புயாதிட
மந்தரப்புய பாரசெயதர
வாசவா வெங்கடேசுரெட் டேந்த்ரனே.

பரத நூலின் இலக்கணம் பொருந்தப் பாம்பின் படத்தின்மீது 'தெய்தத்து' என்ற ஒலியுடன் நடனம் செய்த திருவடியைக் கொண்டவனே! திடமான மந்தர மலைபோன்ற தோள்களை யுடையவனே! வெற்றி பெறுபவனே! இந்திரனே! வேங்கடேசுரனே! இவ்வுலகத்தைப் படைத்தவரும் கங்கை பொருந்திய சடை கொண்டவருமான சிவனின், பகைவனான மன்மதன் வந்து மலர் அம்பைத் தொடுத்ததால் இவள் வானில் உள்ள புயலின் பேரான 'மால்' என்பதை மிகவும் கொண்டாள். 18

811. ஊரின் வாயை மூடமுடியுண்டா?

(தாய் இரங்கல்)

அந்தராசலவன் பன்றி போற்பகை
யார்ப்பரிக்க வவர்க்கிசைந் தெய்துமின்
பந்திராசல னேபயந்தாள் வெறுப்பா
யுரைக்கிற் பலரென்சொல் லாருல
கந்தராசல வாவூரின் வாய்மறைக்க
வுலைமூடியுண் டாகொண்ட காதல்தீர்
மந்தராசல வாகாசயதரா வாசவா
வெங்கடேசுரெட் டேந்த்ரனே.

மந்தர மலையைப் போன்ற தோள்களைக் கொண்டவனே! வெற்றி கொள்பவனே! இந்திரனே! வேங்கடேசுரனே! கீழ்மை யுடையவராக வலிய முள்ளம் பன்றியைப் போன்று பகைவர் ஆரவாரம் செய்ய, இவர்களுடன் மனம் ஒத்துப்போய்

அவர்கள் அடைய எண்ணும் நன்மையை அளிக்காதவனே! பெற்ற தாய் வெறுத்துப் பேசினுல் மற்றவர் என்னதான் சொல்லமாட்டார்? உலகம் துலைக் கோல் போல இருக் கின்றதன்றோ! ஊரினது வாயை மூடுவதற்கு ஏற்ற மூடியுண்டா? என் மகள் கொண்ட ஆசையைத் தீர்ப் பாயாக! 19

812. காதல் சுரமாக மாறியது!

(தலைவி இரங்கல்)

முனசநங்கை முகன்கண் ணிருந்துற
முற்றும்வெந்தவன் வந்திகல் செய்யவே
தினசநங்கைக் குதுகஞ்சி தட்டுது
சேலைசோர்ந் திருகாலையும் பின்னவே
இனசனங்கை யதுகொட்டிக் கொட்டிவந்
தேசவேமயன் மீசுர மாகுது
வனசநங்கை மருவும்பு யாசலா
வாசவாவெங்க டேசுரெட்டேந்த்ரனே.

தாமரையில் உள்ள வெற்றித் திருமகள் தங்கிய மலையாகிய தோள்களைக் கொண்டவனே!இந்திரனே! வேங்கடேசுரனே! முற்காலத்தில் ஆட்டுவாகனத்தையுடைய தீக்கடவுள் ஐந்து முகங்களைக் கொண்ட சிவபெருமானின் நெற்றிக் கண்ணி னின்று எழுந்த தீயால் உடல் முழுவதும் எரிந்து சாம்பலான மன்மதன் வந்து போர் தொடுத்தான்; அதனுல் உண்ணும் உணவு கசக்கின்றது; கஞ்சியும் உள்ளே செல்லவில்லை;உடை நெகிழ்ந்து !இருகால்களும் பிணைந்து கொண்டன, அதைக் கண்டு சுற்றத்தவர் கைகொட்டிச் சிரித்து இகழ்ந்தனர். மோகமானது மிக்க சுரமாக ஆகிவிட்டது. 20

813. இவளைத் தழுவாவிடில் மையல் தணியுமா?

(செவிலி உரைத்தல்)

படங்குமாதங்க ரேக்காற் சமைத்திட்ட
பாரக்கொங்கைக் குறியுஞ்ச மீபந்தான்
சடங்குமாதங் கழிக்குமுன் ஞமிது
சமயங்கட்டித் தழுவா விடிலவா

அடங்குமாதங்கள் சித்தமென் பாக்கிய
மணையவேண்டும்முன் ஞள்மூல மென்னவே
தொடங்குமாதங்க முன் வந்தமாதவா
துங்கனே வெங்க டேசுரெட் டேந்த்ரனே.

முற்காலத்தில் 'ஆதிமூலமே' என்று அழைக்கத் தொடங்கிய யானைக்கு எதிரில் தோன்றிய திருமால் வடிவமானவனே! சிறந்தவனே! வேங்கடேசுரனே! மேலாடையானது, தங்கத் தாளால் செய்யப்பெற்றது; சுமைமிக்க தனம் பூப்படை யாளத்தை அண்மையில் உள்ளதாகக் காட்டுகின்றது; பூப்புச் சடங்கு ஒரு மாதத்தினுள் நிகழ்ந்துவிடும்; இந்த நேரத்தில் அணையாவிடில் காதல் தணியுமா? தங்கள் கருத்து யாது? என் நல்வினைப் பயனுல் வந்து சேரவேண்டும். 21

814. சந்தனமும் மாலையும் பகையாயின!

(தோழி தூது)

வாசக்காந்தண் மலர்க்கையிஞலனை
வாரிவாரிப்பன் னீரோடு சந்தனம்
பூசக்காந்தல் பொரும லயர்ந்துவாய்
புலம்பத்தாமமும் வெம்பமின் ஞர்களும்
ஏசக்காந்த முரைக்கிலென் செய்குவா
ளெய்துவாய்குற மாதுதெய் வானைக்கோர்
நேசக்காந்த ரருள்பெற்று வாழ்மனு
நீதனேவெங்க டேசுரெட் டேந்திரனே.

குறமகளாகிய வள்ளிக்கும் தெய்வயானைக்கும் நிகரற்ற அன்பு காட்டும் முருகப்பெருமானின் அருளைப் பெற்று மனுநீதிப்படி ஆள்பவனே! வேங்கடேசுரனே! அன்னையானவள் மணம் பொருந்திய காந்தள் மலர் போன்ற கையால் பன்னீருடன் கூடிய சந்தனத்தை அள்ளிப் பூச அதனுல் வெப்பம் தாங்க முடியாது, தலைவி தளர்ந்து முணுமுணுத்தாள்; மாலை சூட்ட அதுவும் வாடிப் போயிற்று; தோழியரும் ஏளனமான சொற் களைக் கூறினர். ஆதலால் இவள் என் செய்வாள்? விரைவில் வந்து சேர்வாயாக! 22

815. மன்மதனின் அம்பால் விளைந்தது!

(தோழி தூது)

வந்துவாரவையம் நடத் திச்சிலை
வளைத்துச் சித்தசன் மாங்கணை யேவப்பு
குந்துவார வளவும்பி திர்ந்திடக் குடைந்து
கொங்கைக் குடத்தையு மேயனே
கந்துவாரம தாக்கிவிட் டதலிந்தக்
கன்னியென் செய்கு வாள்காண் கவியினல்
சிந்துவார மதிலணை கண்டவா
சீதரா வெங்க டேசுரெட் டேந்த்ரனே.

குரங்குகளால் கடலில் மதில் போன்ற அணையைக் கட்டியவனே! இலக்குமியை யுடையவனே! வேங்கடேசுரனே மன்மதன் தன் தென்றலாகிய தேரைச் செலுத்தி வந்து வில்லை வளைத்து மாமரத்தின் மலராகிய அம்புகளைச் செலுத்தினன்; அவை சென்று கச்சு முழுவதும் ஊடுருவி விழுமாறு செய்தன; தனமாகிய குடங்கள் பல துளைகள் ஏற்படுமாறு துளைத்தன. ஆதலால் இந்தப் பெண் என்ன செய்வாள்? காண்பாயாக! 23

816. கதிரவன் எப்போது தோன்றுவான்?

(செவிலி உரைத்தது)

அரிசிராவணத் தாலடைத்துத் துந்தொனி
யமருதில்லை யதை முனியுண்ணவும்
கரிசிராவக லப்பக லோன்வருங்
காலமான தெக்கால மென் ருடரும்
பரிசிராமுழு லோபகு டாரிநீ
பாரவில்வளைத் துக்காதூசண
திரசிராவிழ வோர்பாணந் தொட்டவா
சீதராவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

இரவலர்க்குப் பரிசு தரும் தன்மை இல்லாதவர்க்குக் கோடரி போன்றவனே! கனமான வில்லை வளைத்துக் கரன் தூஷணன் திரிசிரன் முதலியவர் இறக்குமாறு அம்பை எய்தவனே! இலக்குமியை மார்பில் கொண்டவனே! வேங்கடேசுரனே! கடலைக் கல்லால் அடைத்தும், அக்கடலை அகத்தியன் குடிக்க

வும் ஓசை அடங்கக் காணோம்; குற்றமுடைய இரவு நீங்கக் கதிரவன் தோன்றும் நேரம் எப்போது என்று என் மகள் வினவினாள். 24

817. நின் மாலையை அளிப்பாய்!
(மாலையை வேண்டல்)

தொடுக்க வத்திரம்வேளது தானிந்தத்
 தோகைமெய் யைத்துளைத்தூ டுருவவே
கடுக்கவத்திரண் மேல்விழு மீயெனக்
 கலங்குவாட் குன்ன லங்கலின் றீகுவாய்
இடுக்கவத்திரங் காவென்ற ழைக்கவந்
 திடங்கரைத்திகி ரிக்கிரை யிட்டவா
உடுக்கவத்திர மில்லாத வர்க்கரு
 ளுத்தமாவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

துன்புற்ற யானை 'ரங்கனே (திருமாலே)' என்று அழைக்க அந்த யானைக்கு எதிரில் சென்று, அதனைப் பற்றிய முதலையைச் சக்கரத்திற்கு இரையாகச் செய்தவனே! உடுக்க ஆடையற்றவர்களுக்கு ஆடையை யுதவுபவனே வேங்கடேசுரனே! மன்மதன் இவள்மேல் அம்பைச் செலுத்த அஃது இவளது உடலை ஊடுருவிக் கொண்டு வெளியே போய் விட்டது; கொடிய கோழையின்மீது விழும் ஈயைப் போன்ற துன்பம் அடையும் இவளுக்கு நின் மாலையை இப்போதே அளிப்பாயாக!

818. மன்மதனின் அம்பு மலரன்று! வாள்!
(தலைவியிரங்கல்)

சீதமாரம்ப ளங்கன்றெட் டான்றனத்
 தினைத்துளைத் துத்த டாரிக்கு தந்தம்பு
சூதமாரம்பம் ராமரா மாவெனச்
 சொல்லுவேன் சந்து சொல்லவிம் மாதர்க்குள்
நீதமாரம்ப லாதிசெய் வாரெந்தன்
 னேமக்காமந் தணிமுல மென்னவே
போதமாரமபஞ் செய்யு முன்வந்தவா
 போசனே வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

கசேந்திரன் என்ற யானை ஆதிமூலமே என்று சொல்லத் தொடங்கி முடிப்பதற்கு முன்பே, அதன் முன் தோன்றி அருள் செய்தவனே! போசனைப் போன்ற வள்ளலே! வேங்கடேசுர எட்டனே! மன்மதன் குளிர்ச்சி பொருந்திய அம்பைத் தொட்டு எய்தான்; அது தனங்களை ஊடுருவிப் போகின்றது. அது மாம்பூவா? அன்று; வாள்தான். அதனால் ஏற்படும் வேதனையை என்னென்று சொல்வேன்! இங்குள்ள இப்பெண் களுள் தூது செல்வதற்கு உரியவர் யார்? இவர்கள் தூற்றும் தன்மையுடையவர்கள். ஆதலின் நீ வந்து என் ஆசையைத் தணிப்பாயாக! 25

819. இவளது வேட்கை தணியவில்லை!

(தோழி கூற்று)

பூசுகந்தந் தனத்திற் பொரிந்தது
பொருக்கெழும்பியிப் பூவை தன்மாலுக்கே
நீசுகந்தந் தடங்கலின் றித்தர
நேமஞ்செய்திவள் காமந் தணித்திடாய்
தேசு கந்தந் தராவணன் சேய்தலை
சிக்கெனக் கொண்டு வாவென்றி லக்குவற்
காசுகந்தந் தராமா பெரும்புக ழாகரா
வெங்க டேசுரெட் டேந்த்ரனே.

புகழை விரும்பி இராவணன் மகனான இந்திரசித்தின் தலையை வெட்டிக் கொண்டுவா என்று இலக்குவனுக்கு அம்பை அளித்த இராமனின் வடிவானவனே! பெரும் புகழ்க்கு இருப்பிடமானவனே! வேங்கடேசுரனே! தனங்களில் பூசிய சந்தனமானது பொருக்கெனப் பொரிந்தது; இந்த மங்கையின் வேட்கைக்கு இன்பம் தந்து அது அடங்குவதில்லை; இந்தத் தடவை நியதி என்று எண்ணி இவளது ஆசையைத் தணிப்பாயாக. 27

820. காமன் வில்லுக்கும் குடைக்கும் கலங்குவாள்!

(தாயிரங்கல்)

பொருப்புக் குஞ்சரி யாகப்பு டைத்தெழும் பூண்முலைக்
கன்னி மீதேசமர் செய்யத்
துருப்புக் குஞ்சரி யேறிமெய் யெங்கணுந்
துளைக்கமாரன் வளைக்கவ வன்செங்கைக்

கருப்புக்குஞ்சரி சாமமிழற்றுந்திங்
 கள்குடைக்குங் கலங்குவ ளோமன
விருப்புக் குஞ்சரி காந்தற்கு வைத்தவா
 வீரனேவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

மன விருப்பத்தைத் தெய்வயானையிடம் செலுத்தியவனே! வீரனே! வேங்கடேசுரனே! மலைக்கு ஒப்பாகப் பருந்து எழும் அணியை அணிந்த தனங்களையுடைய இந்தப் பெண்ணின் மீது போர் தொடுக்கும் பொருட்டாகத் தென்றல்மீது ஏறி உடம்பைத் துளைப்பதற்கு மன்மதன் வளைக்க எடுத்த அவனது கையில் உள்ள வில்லுக்கும் எல்லாச் சாமங்களிலும் ஒரே விதமாக ஒளியை வீசும் அவனது குடைக்கும் இவள் அஞ்சுவாள். 28

821. தலைவனைக் குதிரைமேல் வரச்சொல்வாயாக!

(செவிலி கூற்று)

அடிதங்கச்சி யிவளென்ன மோதெரி யாதுசிந்தை
 யயருகிருளிந்தா
பிடிதங்கச்சி விசையிலி ருந்தநம் பிள்ளைதான்கிளிப்
 பிள்ளையல் லோமயல்
கொடிதங்கச்சிப் பரிபோற்சென் றேவரக் கூறென்ருளிகல்
 கொண்டோ ரமர்கண்டு
துடிதங்கச்சி மையப்புயங் கொட்டுமுத் துங்கனேவெங்க
 டேசுரெட் டேந்த்ரனே.

பகை கொண்டவர் போர் தொடங்குவதை அறிந்து துடிக்கும் பொன்மலை போன்ற தோள்களைத் தட்டிய சிறந்தவனே! வேங்கடேசுர மன்னனே! 'தங்கையே, இவள் என்ன காரணத்தாலோ தெரியவில்லை, மனம் தளர்கின்ருள். இவளைப் பிடி; தங்கப் பல்லக்கில் இருந்த நம் பெண்ணல்லவா! கிளிப்பிள்ளை யைப்போன்றவள் அல்லளோ! அங்கே தலைவனைக் குதிரைமேல் ஏறி வரச் சொல்வாயாக!' என்ருள். 29

822. மன்மதன் சினத்துடன் அம்பெய்தான்!

(தலைவியிரங்கல)

அரகதத்தை மதன் சிந்தை தன்னில்வைத்
 தம்பரத்தையடித் தார்ப்ப ரித்துமே

துரகதத்தை நடத்தியப் பாலுமென் றுவதனத்தைத்
துளைத்துவிட் டான்கொண்ட
விரகத்தை யெவர்தணிப்பார் மலர்மெத்தை
மீதினில் வைத்தணை வாய்மணி
மரகதத்தை யணியும்பு யாசலா
வாசவாவெங்க டேசுரரெட் டேந்த்ரனே.

மரகதத்தால் ஆன மாலையை அணிந்த தோள்களையுடைய வனே! இந்திரன் போன்றவனே! வேங்கடேசுரனே! சிவசிவா! மன்மதன் தனது சினத்தை மனத்தில் கொண்டு தனது கடலாகிய முரசை அறைந்து ஆரவாரித்துக் கிளியாகிய குதிரையைச் செலுத்தி அம்பால் எனது இரு தனங்களையும் துளைத்து விட்டான்; எனக்குண்டான துன்பத்தை உன்னை யன்றி எவர் விலக்குவார்? பூம்படுக்கையில் என்னை அணைவாயாக. 30

823. மங்கை மாமரமானுள்!
(தாய் இரங்கல்)

அனங்கனம்பனந் தந்தொட மெய்பசந்
தசந்துவாடுவ தல்லாலிடைக்கிரு
தனங்கனம்பனந் தாரானி ருக்குநற்
றலத்தின் பேர்க்கொடி தாங்காது பெற்றதா
மனங்கனம்பனம் பின்போ மிகுத்தந்த
மாதர்சொல்லும் வசைக்கிலக் காகிய
மினங்கனம்பனஞ் சேர்சூத மாயினுள்
வேந்தனேவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

வேங்கடேசுர மன்னனே! மன்மதன் என் மகள்மீது அளவற்ற அம்புகளைச் செலுத்தியதால் மேனி பசப்புற்றுத் தளர்ந்து வருந்தினுள்; அதுவன்றி இவளது இடை இரண்டு தனங் களுக்குத் தாங்க இயலாத கனமுள்ளவையாக உள்ளன; பனம் பூமாலையை அணிந்த சேரனின் தலைநகரின் பேரை யுடைய (வஞ்சிக் கொடி போன்ற இடை) கொங்கைகளைத் தாங்காது; இவளது தாயின் மனம் கல் போன்ற இயல்பைப் பெற்றது அன்னங்கள் பின் தொடர்ந்து செல்லக் கூடிய பெண்கள் கூறும் வசைக்கு இலக்கான இவள் இலைகளையுடைய மாமரம்போல ஆனுள். 31

324. *அன்னே வாயை அடக்குவது யார்?*

(தாய் இரங்கல்)

மாதவாவின மட்டலர் நின்புய
	மாலேமாலே யகற்றிடு மாசடை
யாதவாவினன் சொல்லுந் துராகத
	வன்னேவாயை யடக்குவ தார்மலர்ச்
சீதவாவினஙந் தங்கந்த ரமெனுஞ்
	செல்விக்கோர் மொழி சொல்லிய ணேந்திடாய்
போதவாவினங் காத்தருண் மாதவா
	போசனே வெங்க டேசுரெட்டேந்த்ரனே.

மிக்க பசுக் கூட்டங்களேக் காத்த கண்ணனின் அமிசமான வனே! போச ராச மன்னவனேப் போன்றவனே! வெங்க டேசுரனே! இவள் விரும்பிய நின் தோளில் அணிந்த மாலே தந்து இவளது மயக்கத்தை நீக்குவாயாக! குற்றமற்றவனே! இன்னும் அவதூறு உரைக்கும் தாயின் வாயை அடக்குபவர் யார்? மலர்கள் மலர்ந்துள்ள நீர்நிலேயில் உள்ள சங்கைப் போன்ற கழுத்திணே யுடைய இவளேச் சேர்வாயாக! 32

325. *காதல் மயக்கம் கொள்ளச் செய்தான் காமன்!*

(தாய் இரங்கல்)

இருதனங்கனிக் குச்சிலே போற்புடைத்
	தெழுந்துவிம்மி யிறுமாந் திடகயல்
விருதனங்கனிக் குச்சிலே வாங்கிமா
	விசைகொண்டுடுரு விப்பாய வாளியாற்
பொருதனங்கனி வர்க்கமுண் ணுமல்மால்
	பூண்டிருக்கச்செய் தான்தமிழ் வாணர்க்கு
வருதனங்கனி வாய்த்தரு மன்னவா
	வாசவாவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

தமிழ்க் கவிஞர்களுக்கு மிக்க செல்வத்தை மனம் இரங்கி அளிப்பவனே! இந்திரனேப் போன்றவனே! வேங்கடேசுரனே! இந்தப் பெண்ணுக்கு இரண்டு கொங்கைகளும் மலேபோலப் பெருத்து மேலோங்கி எழுந்து இறுமாப்பு அடையவே, கயல்

மீன் கொடியைக் கொண்ட மன்மதன் கரும்பு வில்லை வளைத்து மிக்க வேகத்துடன் உள்ளே செல்ல அம்பினால் போர் செய்து உணவும் கனியும் உண்ணுதபடி காதல் மயக்கம் கொண்டிருக்குமாறு செய்து விட்டான். 33

826. என் பைங்கிளியை அணைவாயாக

(தாய் இரங்கல்)

என்னிலங்குச் சலராசராசருக் கேற்றதாமவ
 ரிங்கேவர நீ போய்
முன்னிலங்குநங் காரியம் யாவையு மொழியென்றாள்
 பைங்கிளி தான் மருவுவாய்
நன்னிலங்கு வலயத்தீங்கீதென நாட்டுந்தென்கருக்
 கோட்டைக் கதிபனே
பொன்னிலங்கு மணிமார்பனேதிட போசனேவெங்க
 டேசுரெட் டேந்த்ரனே.

இவ்வுலகத்தில் உள்ள நாடுகளுள் இதுவே சிறந்தது என்று உயர்த்திக் கூறப்படும் தென்திசையில் உள்ள 'கருங் கோட்டை' என்னும் ஊருக்குத் தலைவனே! திருமகள் வாழும் மார்பையுடையவனே! வன்மையுடைய போச மன்னனைப் போன்றவனே! வேங்கடேசுரனே! கிளிபோன்ற என் மகள் 'என் வீடானது சிறு வீடன்று; மன்னர் மன்னர்க்குத் தக்க தாகும்; அவர் இங்கு வருமாறு நீ சென்று அவர் முன் நின்று என் நிலைமை அனைத்தையும் உரைப்பாயாக!' என்று சொன்னாள். நீ இவளை அணைவாயாக! 34

827. காமம் கடலினும் பெரியது!

(தலைவி கூற்று)

அரகராசலங் கொண்டபுண் போன்முலை யானைவிம்ம
 வதிற்றென்ற ருவவே
உரகராசல வன்குளி ராதன லுருக்கினனந்த
 மாரற் கிம் மாதருந்
தரகராசல ராசிய தாமய ரானெனைப்புணர்
 வாய்முல மென்றதோத்
திரகராசலங் காத்தசக் ரேச்வரா சிதரா வெங்க
 டேசுரெட் டேந்த்ரனே.

'ஆதிமூலமே' என்று அழைத்த கையையுடைய மலைபோன்ற கசேந்திரனைக் காப்பாற்றிய திருமாலின் உருவானவனே! இலக்குமியை மார்பில் கொண்டவனே! வேங்கடேசுரனே! சிவனே! நீர் கொண்ட புண்ணைப் போன்று கொங்கைகளாகிய யானைகள் விம்மவும் அவற்றின்மீது தென்றல் வீசவும் பாம்பு அஞ்சும் மதி குளிர்ச்சியை உண்டாக்காமல் தீயைப்பெய்து உருக்கினான்; அந்தக் காமனுக்கு இந்தப் பெண்களும் தரகரா? என் காதல் கடல் போன்றுள்ளது; என்னைச் சேர்வாயாக! 35

828. *மின்னுளைச் சேர்வாய்!*

கஞ்சாஞ்சப் பெடைபோலு மென்னடைக்
    கமலத்தாளிரு கண்ணினை யானது
பஞ்சரஞ்சக் கரவட் டுரைமுலைப்
    பருப்பதத்தி லறுபதத் தான்ஞெட்டான்
வெஞ்சரஞ்சப் பிரமஞ்ச கோளகை
    மீதிருந்திந்த மின்னுளை மேவுவாய்
வஞ்சரஞ்சப் பொருஞ்செய தோர்த்தண்டா
    வாசவாவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

வஞ்சத்தையுடைய பகைவர்கள் அஞ்சும்படி போர் செய்யும் படையையுடையவனே! இந்திரனே! வேங்கடேசுர மன்னனே! இவளது நடையானது நான்முகனின் வாகனமான அன்னத்தைப் போன்றது! தாமரை போன்ற அடிகள் பஞ்சு போன்றவை; இருவிழிகளும் அரத்தைப் போலக் கூர்மையானவை. சொல் வெல்லக் கட்டி போன்று இனியது. இத்தகைய இயல்பையுடையவளது முலையாகிய குன்றின்மீது வண்டினை வில்லின் கயிருகக் கொண்ட மன்மதன் கொடியஅம்பினை எய்தான். பூவுலகு போன்றவட்டமான படுக்கையின் மேலிருந்து இவளைக் கூடுவாயாக! 36

829. *வஞ்சி அனைவர்க்கும் அஞ்சித் தளர்ந்தாள்!*

(தாய் இரங்கல்)

மாமனுக்கு மகனு கவந்தகா மனுக்கும்பெற்று
    வளர்த்தவட் குங்கலைச்
சோமனுக்கு மினத்தார்க்கு மஞ்சிமெய் சோர்ந்துவாடினள்
    சேர்ந்தணை வாயினி

தாமனுக்கு மிளியகு மாரெட்ட தருமனுக்குங்
குமாரமுத் தேந்திர
பூமனுக்குஞ் சகோதர னேதிட போசனேவெங்க
டேசுரெட் டேந்த்ரனே.

தாமன், குமாரெட்டன், குமார முத்திர பூபதி ஆகியவர்க்கு உடன் பிறந்தவனே! போசனைப் போன்றவனே! வேங்கடேசுரனே! இலக்குமியின் தலைவனான திருமாலுக்கு மகனாகத் தோன்றிய மன்மதனுக்கும் பெற்று வளர்த்த அன்னைக்கும் சந்திரனுக்கும் சுற்றத்தவர்க்கும் அஞ்சி உடல் தளர்ந்து இவள் வருந்தினாள். இனியேனும் இவளை அணைவாயாக! 37

830. துன்புறுத்தவோ நான்முகன் படைத்தான்!

(தாய் இரங்கல்)

என்னவாவிது ராசிய மாநடை யேலுமாமகள்
காலொடு கான்மிகப்
பின்னவாவிது ராவன றூவவாப் பிரமனிப்படிச்
செய்தானென் னூர்கள்வாய்
கொன்னவாவிது ராகதத் தென்றிசை குடிபுகக்கையிற்
கோதண்டம் வாங்கிய
மன்னவாவிது ராபுகழாகரா வாசவா
வெங்க டேசுரெட் டேந்த்ரனே.

அச்சத்தால் பகைவரது வாய் குழறவும், அவர்களின் வாய் தென்திசையில் போய்ச் சேரவும், கைகளில் வில்லை எடுத்து வளைத்தவனே! விதுரனைப் போன்றவனே! புகழுக்கு இருப்பிடமானவனே! இந்திரனே! வேங்கடேசுரனே! இந்த அவா எத்தகையது! இரகசியமான களவொழுக்கம் பொருந்துவதோ? என் மகள் ஒருகாலுடன் மற்றொரு கால் பின்னிக் கொள்ள இரவில் தோன்றும் சந்திரன் தீயைச் சிதறவா நான்முகன் இங்ஙனம் படைத்தான்? 38

831. இந்நாளே நல்ல நாள்!

(தோழி இரங்கல்)

சொலங்கக் காகொண்ட மோகத்தி
னல்வருஞ் சோபதாபந் தொலைக்கவென் றூட்குமே

விலங்கக் காமச ரத்தாலும் பூந்தளிர்
    மெய் யிளைத்தன எல்லாம லொப்பிலா
நலங்கக் காரிசு கக்காரி மேவவிந்
    நாளுமேநல்ல நாளடை யார்மனம்
மலங்கக் கால்கொண் டடர்பரி மேல்வரும்
    வாசவாவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

பகைவரின் மனம் கலங்குமாறு தன் கால்களால் தாக்கும் குதிரைமேல் ஏறிவரும் இந்திரனைப் போன்றவனே! வேங்கடேசுரனே! 'தமக்கையே! நான் கொண்ட காதலால் உண்டாகும் தளர்ச்சி, வெப்பத்தைத் தணிக்கும்படி அவரிடம் சொல்வாயாக!' என்று சொன்ன தலைவிக்கு மன்மதன் எய்யும் அம்பால் தளிர் போன்ற உடல் வாடப் பெற்ருள். நிகரற்ற உறுப்பையுடையவள். இன்பத்தை அளிப்பவள். இவளை அணைவதற்கு இதுவே நல்ல நாளாகும். 39

832. இவள் உள்ளத்தை வயப்படுத்தி அணைவாயாக!

(தாய்க் கூற்று)

சரந்தராதரங் கண்டா மதன்விடுத் தானெனது
    குழந்தைதனி யேமால்
பரந்தராதர ளக்கச்சி றுக்கும்பொற் பார்
    பயோதர பாரத்தைத் தாங்கவே
உரத்தராதர வம்போற்று வண்மருங்
    கொசியுமுள்ளம் வசியா யணைந்திடாய்
புரந்தராதர ணிக்கதி பாசெய பூதரா
    வெங்க டேசுரெட் டேந்த்ரனே.

இந்திரனைப் போன்றவனே! உலகின் தலைவனே! வெற்றியுடையவனே! வேங்கடேசுரனே! மன்மதன் தன் அம்பைத் தகுதியை அறிந்தா எய்தான்? சிவனே, என் மகள் தனியே இருந்து காமம் மிகுந்து முத்துப் பதித்த கச்சினை அழுத்தும் தனபாரத்தைச் சுமக்க வன்மை இல்லாமல் இடையானது ஒடிந்து விழத் தக்கதாய் இருக்கின்றது. இவளது உள்ளத்தை உன் வயப்படுத்திச் சேர்வாயாக! 40

833. கனவும் நினைவும் காதல் மயமாயின!

(செவிலி கூற்று)

பீலிக்குஞ்சர வங்களைக் கொத்தி
பிடித்துத்தாக்கும்பெரும் பகை யின்றிக்கா
லாலிக்குஞ்சர பஞ்சிங்கமீதுசென்
றடிப்பபோல்வந் தடிக்குது தாயென்ற
நீலிக்குஞ்சர சம்பேச்சு மாச்சிவ
ளினைவுங்காணுங் கனவுமிங் கேயொரு
வாலிக்குஞ்சர மேவிய ராகவா வாசவா
வெங்க டேசுரெட் டேந்த்ரனே.

நிகரில்லாத வாலியைக் கொல்ல அம்பினைச் செலுத்திய இராமனின் வடிவானவனே! இந்திரனைப் போன்றவனே! வேங்கடேசுரனே! மயில் குஞ்சுகள் பகையில்லாமல் பாம்பினைப் பிடித்துக் குத்திக் கொல்லும் இயல்புடையன; அதைப் போலவும் ஆரவாரிக்கும் சிம்புள் என்னும் பறவை சிங்கத்தின் மேல் பாய்ந்து கொல்வதைப் போலவும் தென்றல் என்னைக் கொல்கின்றது; என் தாயான நீலிக்கும் வேடிக்கையான பேச்சுக்கு இடமாகியது. இவளுடைய எண்ணமும் காண்கின்ற கனவும் இப்படியே உள்ளன; என் செய்வேன்? 41

834. இன்பவிளையாட்டைச் செய்து இவளைத் தழுவுவாய்

(தோழி கூற்று)

அராவுக்கேகணை யேசெவி யென்பர
தல்லபெற்றவ னைக்கே மின்னுரும்வம்
பராவுக்கேகணை யேகுழ லாக்கிய
பண்ணுக்கேநொந்த பெண்ணுக்கி ரங்கியின்
றிராவுக்கேகணை மேற்சென்றி ருந்துநல்
லின்பலீலைசெய் தன்பாய் மருவுவாய்
மராவுக்கேகணை யேவிய ராகவா
வாசவாவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

மராமரங்களின் ஏழின் மேலும் அம்பைச் செலுத்திய இராமனின்வடிவானவனே! இந்திரனைப்போன்றவனே! வேங்கடேசுரனே! பாம்புக்குக் கண்ணையே காது எனக் கூறுவார்கள்;

அப்பாம்பிற்கு மட்டுமன்று; என் தாய்க்கும் கண்ணே காதாக இருக்கின்றது. பெண்களும் குறும்புத்தனம் உள்ளவர்களாக உள்ளனர். பசுவின் பொருட்டாக மூங்கிலால் இயன்ற குழலின் இசையைக் கேட்டு மனம் வருந்திய பெண்ணின் மேல் அன்புவைத்து இன்றிரவே இவளிடம் செல்வாயாக! பஞ்சணையின்மீது இன்ப விளையாட்டைச் செய்து அன்புடன் தழுவுவாய்! 42

835. மன்மதன் போர் தொடுத்தான்!

(தலைவி கூற்று)

அல்லைமாலை மருதங்கி ளியைமின்
　　ஞரைநால்வகைத்தானைய தாக்கிவிட்
டெல்லைமாலையும் விட்டார்ந் தேறிநா
　　னிருக்குமாலயத் துட்புகுந் தேதன்கை
வில்லிமாலை விளைத்து வளைத்தம்பை விட்டு
　　வேண்மட்டு மீறினன் மேவுவாய்
குல்லைமாலை யணிமாலைப் போற்றிவாழ்
　　குமணனேவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

துளசி மாலையை அணிந்து வாழும் குமணவள்ளலைப் போன்றவனே! வேங்கடேசுரனே! மன்மதன் இருள் என்ற யானையையும், தென்றலாகிய தேரையும், கிளியாகிய குதிரையையும், பெண்களாகிய காலாட் படையையும் நான்கு வகைப்பட்ட படைகளையும் ஒழுங்குபடுத்திக் கதிரவனை மறையச்செய்து, நெருங்கி வந்து நான் வாழும் வீட்டிற்குள் புகுந்து தனது கரும்பு வில்லை வளைத்து மோகத்தை உண்டாக்கி அம்பை எய்து அளவை மீறிவிட்டான். ஆதலால் என்னை அணைவாயாக! 43

836. இளையள் இவள்! ஆயினும் அம்பெய்கின்றான் மன்மதன்!

(நற்றாய் இரங்கல்)

தடிக்கவில்லை முலைதிரண் டேமகள்
　　சமையவில்லை மணந்தான் குழகுமென்
றடிக்கவில்லை பொடிபுனு கத்தர்சேர்த
　　தணியவில்லை யதற்குமுன் மார

முடிக்கவில்லை வளைத்தாற்கு ழுந்தைதான்
மோகந்தாங்க முடியாதொன் ஞர்துடி
துடிக்கவில்லை வளைக்கும கோரவித்
தூங்கனேவெங்க டேசுரெட் டேந்த்ரனே-

பகைவர் அஞ்சித் துடிதுடிக்க வில்லை வளைத்துப் போர் செய்யும் சினத்தையுடைய மேலோனே! வேங்கடேசுரனே! என் பெண்ணின் தனங்கள் திரட்சி பெற்றுத் தடிப்பு அடையவில்லை; பூப்பினை எய்தவில்லை. மணம் வீசவில்லை. மணப் பொடியினையும் புனுகு அத்தர் ஆகியவற்றையும் பூசிக் கொள்ளவில்லை. இவை நிகழ்வதற்கு முன்பே மன்மதன் போர் செய்ய வந்தானுனல் அதனுல் உண்டாகும் வேட்கையைப் பொறுக்க இவளால் இயலாது. 44

837. *நிலவொளியில் அணைவாயாக!*

(*செவிலி கூறல்*)

மஞ்சலக்கணங் கன்புற வேகட்டி
மருவுதற்குளவாவைத் திருக்குநாள்
அஞ்சலக்கண லார்க்கே தெரியுநின்
ஞவலோவடங் காதிரங்காதவன்
நெஞ்சலக்கணப் பெற்றியின் வெண்ணெயாம்
நிலவில்வந்து கலவிசெய் வாயையா
பஞ்சலக்கண முத்தமி ழாகர பாஷிதா
வெங்க டேசுரெட் டேந்த்ரனே.

ஐந்திலக்கணமும் பொருந்திய இயல் இசை நாடகம் என்ற முத்தமிழுக்கும் இருப்பிடமான சொல்லாற்றல் உடையவனே! வெங்கடேசுரனே! அழகுடைய இப்பெண் அன்புடன் கட்டி அணைவதற்கு மனத்தில் ஆசையுடன் காத்திருக்கும் நாட்கள் ஐந்தும் அதன் துன்பத்தைப் பெண்களே அறிவார்கள்; இவள் நின்னிடம் கொண்ட ஆசையோ அளவற்றது; தணியாதது; உனது நெஞ்சம் இரங்காதது அன்று; அஃது ஒரு கணப்பொழுதில் வெண்ணெயைப் போல உருகிவிடக் கூடியது. ஆதலால், நிலவுக் காலத்தில் வந்து இவளைச் சேர்வாயாக! 45

838. காதல் தீர இப்போதே சேர்வாய்!

(தாயிரங்கல்)

சத்திக்கும்பணி லக்கையினுன்பெற்ற
தனையன் போர்க்குவினையமின் ஞரைச்சு
மத்திக்கும்பணி யாய்நிரைத்துச்சர மாரி
பெய்யவென் மானினைத் தாளுரைக்
கத்திக்கும்பணி சோர்ந்ததுங் காண்கிலாள்
காதல்தீவிரப் போதணை வாயையா
எத்திக்கும்பணி வேங்தேம காமண்ட
லேசுராவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

எல்லாத் திக்குகளிலும் உள்ளவர்கள் வணங்கும் மன்னனே! உலகத் தலைவனே! வேங்கடேசுரனே! ஒலிக்கும் சங்கைக் கையிலே கொண்ட திருமாலின் மகனுன மன்மதன் போர் செய்வதற்கு ஏற்ற சூழ்ச்சியை உடைய பெண்களைக் கூட்டம் கூட்டமாக அணிவகுத்து நிற்கச் செய்து அம்பு மழை பெய் தான். ஆதலால் என் மகள் உடல் இளைத்தாள். பேசுவதற்குச் சொல் தடுமாறுகின்றது. அணிகள் உடலினின்று கழன் றதையும் அறியவில்லை. இவளது வேட்கை தணியுமாறு இப் போது சேர்வாயாக! 46

839. இவள் மேனகையைப் போன்றவள்!

(செவிலி கூற்று)

தனதுமெய்க்கு மலரணை யானது
தழலிறைக்குந் தனச்சுமை யாலிடை
மினதுமெய்க்குந் துவளுமிம் மானந்த
மேனகைக்கும் வெகுமிச்ச நானுண்மை
சொனது மெய்க்கு மரன்பொறப்ப தாம்புயந்
தொழுந்தொழும்பன் குமாரெட்ட பாண்டியன்
மனதுமெய்க்கு முயிர்த்துணை வாபுகழ்
வாசவாவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

உண்மைத் தெய்வமான முருகப் பெருமானை வழிபடும் அடியா ராகிய குமார எட்ட பாண்டியது மனம் நிறைவு அடைவ தற்குக் காரணமான உயிரைப் போன்றவனுன உடன் பிறந் தவனே! புகழையுடைய இந்திரனே! வேங்கடேசுரனே!

என்மகளின் உடலுக்கு மலர்ப்படுக்கையானது வெப்பத்தைத் தருகின்றது. இப்பெண்ணின் இடை தனபாரத்தைச் சுமக்க இயலாமல் இளைத்துத் துவள்கின்றது. இவள் தெய்வப் பெண்ணான மேனகையைவிட அழகுடையவள். நான் சொல்லும் இஃது உண்மை

840. பொற்பாவையைப் பொற்கட்டிலில் சேர்வாய்!

(நற்ருய் இரங்கல்)

இட்டங்கட்டிய வாறே யல்லாதுவே
 றில்லைசிந்தை யிதெல்லாஞ் சுவாமிய
திட்டங்கட்டி யபரஞ்ச யாற்செய்த
 சித்ரமஞ்சத்தில் சேர்வாய் தினஞ்சட்ட
வட்டங்கட்டி யங்கக்குடிக் கின்றரா
 வணனை வென்றவன்பு வைத்தவன் தம்பிக்குப்
பட்டங்கட்டிய ராமா நவரச பாஷிதா
 வெங்க டேசுரெட் டேந்த்ரனே.

நாள்தோறும் தான் விரும்பியபடியே கள்ளினை வெறி உண்டாகும்படி அருந்தும் இராவணனை வென்று அவனுடைய தம்பியாகிய விபீடனுக்கு முடிசூட்டி வைத்த இராமனே! ஒன்பது சுவையும் தோன்றப் பேசுன்ற சொல் வன்மையுடையவனே! வேங்கடேசுரனே! மனம் விரும்பியபடில்லாது வேறு வழியில் செல்லவில்லை. இவையனைத்தும் என் தலைவனின் பாக்கியமாகும்; சிறந்த பொன்னால் செய்த கட்டிலின் மீது இவளுடன் சேர்வாயாக! 48

841. அரிதில் பிறந்தவள் எளிதில் காமவயமானுள்!

(நற்ருய் இரங்கல்)

பருதியானவ ரீராறு பேருங்கோ
 பாக்கினிமிஞ்சி வருவது போன்மதி
வருதியானதற் காற்றேனென் ருளையோ
 மலடிருந்துபெற் றேனிந்தப் பிள்ளையை
ஒருதியான மதுகுல தீபம்போ
 லுதித்து மோகத்துக் குள்ளாகி ஞளையோ
குருதியான மறவாத வாபுகழ்க்
 கொற்றவா வெங்க டேசுரெட் டேந்த்ரனே.

ஆசானை மறவாத தன்மை யுடையவனே! புகழ் உடைய வனே! வேங்கடேசுரனே! பன்னிரண்டு சூரியன்களும் ஒன்று கூடி வந்தாற்போலச் சந்திரன் உதயமாகியுள்ளான்; 'நான் இதனைப் பொறுக்க மாட்டேன்' என்று என் மகள் கூறினாள். இவளை நான் நெடுநாள் மகவு பெறாமல் இருந்து பின்னர்ப் பெற்றேன். இதை நீ கருதுவாயாக! எங்கள் குலத்துக்கு விளக்குப் போன்றவள் இன்று காம மயக்கத்துக்கு ஆளானாள். நான் என் செய்வேன்! 49

842. மார்பினைத் துளைத்தான் மன்மதன்!

(செவிலி கூறல்)

அம்பமாமுனி வாய்முலைக் கண்ணெச்சல்
　　லடைக்கண்ணுக வனங்கனெய் யச்சொர்ன
விம்பமாமுனி ருந்தப டிக்கிலே;
　　மேனிமா கலைக் யானிமி வளையா
கம்பமாமுனி தம்பெற வந்துதற்
　　காத்தவாவெகு நேர்த்திய தாழ்ந்தமிழ்க்
கும்பமாமுனி போல்வந் துதித்தவா
　　கொற்றவா வெங்க டேசுரெட் டேந்த்ரனே.

முற்காலத்தில் யானையானது முதலையினின்றும் விடுபட்டு இன்பம் அடைவதற்காகத் தோன்றிக் காப்பாற்றியவனே! மிகச் சிறந்த அகத்திய முனிவரைப் போலத் தோன்றியவனே! வெற்றியுடையவனே! வேங்கடேசுரனே! மன்மதன் சினத்துடன் அம்புகளை எய்து மாவை அரிக்கும் சல்லடை போலத் தனங்களைத் துளைத்தான். இவள் முன் தங்கச்சிலை போன்றிருந்தாள்; இப்போது அப்படியில்லை. இவள் சிறந்த கல்வியறிவை உடையவள்! ஐயோ! 50

34. இராமச்சந்திரக் கவிராயர் பாடல்கள்

843. ஈயாதவரது இகழ்ச்சி

வணக்கம்வருஞ் சிலநேரம் குமரகண்ட
　　வலிப்புவருஞ் சிலநேரம் வலியச் செய்யக்
கணக்குவருஞ் சிலநேரம் வேட்டைநாய்போல்
　　கடிக்கவருஞ் சிலநேரம் கயவர்க்கெல்லாம்

இணக்கவரும் படித்தமிழைப் பாடிப்பாடி
எத்தனைநா டிரிந்துதிரிந் துழல்வேனையா
குணக்கடலை யருட்கடலே யசுரரான
குரைகடலை வென்றபரங் குன்றுளானே.

நல்ல குணக் கடலாக உள்ளவனே! அருள் கடலாக இருப்பவனே! அசுரர்களாகிய ஒலிக்கும் கடலை வெற்றி கொண்ட திருப்பரம் குன்றத்தில் விளங்கும் முருகப் பெருமானே! கீழ் மக்களுக்கெல்லாம் சில நேரங்களில் வணங்குகின்ற இயல்பு உண்டாகும்; சில பொழுதுகளில் 'குமரகண்ட வலிப்புநோய்' உண்டாகும்; சில காலங்களில் பலவந்தமாக முடிக்கக் கூடிய வேட்டை நாய்போலத் தன்னிடம் வந்து இரந்தவரைக் கடிக்கும் இயல்பு ஏற்படும். ஐயா! அத்தகையவர்க்கு உள்ள இணக்கம் தோன்றுமாறு தமிழ்ப் பாடல்களைப்பாடி எவ்வளவு காலம் அலைந்து அலைந்து துன்பப்படுவேன்? 1

844. பெண்டிர் ஆடவர்மேல் ஆசை கொள்வாரோ!
(நற்றாய் இரங்கல்)

மாசற்றிடு திருமேனியின் மறுவுற்றது போல
மாரப்பயல் கணைதைத்திட வந்தெய்தன னையோ
காசத்தனை புண்ணானது துட்டத்தனை யளவாய்க்
கையத்தனை யானுன்மகள் மெய்யெத்தனை நோமோ
வாசற்படி கடவாதவள் மனதெப்படி யானாள்
மதனன்சிலு கறியாதவள் மயலெப்படி யானாள்
ஆசைப்படு வாரோபுரு டரின்மேன்மட வார்கள்
அருணாசல ராயாதமி ழறியும்பெரு மானே.

அருணாசலராயன் என்னும் பெயரையுடைய வள்ளலே! தமிழின் நலம் அறிந்தவனே! குற்றமற்ற உடலின் மேல் மறு தோன்றியது போல உடலில் அழுந்துமாறு மன்மதன் அன்புகளை எறிந்தான்! சிறிய நாணயத்தின் அளவாக இருந்தது பெரிய புண்ணாகி ஆகிப் பின்னர் உள்ளங்கையின் அளவாகுமானால், என் மகளின் தேகம் எவ்வளவு வருந்துமோ? வீட்டின் வாயிலைக் கடந்து செல்லாதவள் எப்படியோ மனம் வேறுபட்டாள். மன்மதன் போரை அறியாதவள் எவ்வாறு இங்ஙனம் வேட்கை அடைந்தாள்? பெண்டிர் ஆடவர் மீது ஆசை கொள்வாரோ? 2

845. பொதியமலைச் சாரலில் உள்ள பெரியம்மை மீது பாடியது

புல்லுக்கட்டும் விறகுஞ் சுமந்தபோர்
பூர்வகாலத்துப் புண்ய வசத்தினுல்
நெல்லுக்கட்டும் பணக்கட்டுங் கண்டபின்
நீலக்கல்லில் கடுக்கனும் போடுவார்
சொல்லுக்கட்டும் புலவ்ரைக் கண்டக்கால்
தூறிப்பாய்ந்து கதவை யடைத்தெதிர்
மல்லுக்கட்டும் மடையரைப் பாடவோ
மலையச்சாரலில் வாழ்பெரி யம்மையே.

பொதிய மலைச்சாரலில் வாழ்கின்ற பெரியம்மையே! புல்கட்டு விறகுக் கட்டு ஆகியவற்றை விற்றுப் பிழைத்தவர்கள் சென்ற பிறவியில் செய்த நல்வினைப் பயனுல் மிக்க நெல்லும் பொன்னும் அடைந்தபின், நீலக் கல்லால் செய்யப்பெற்ற காதணியினையும் அணிவார்கள்; சொற்களால் செய்யுள்களை இயற்றும் புலவர்களைக் கண்டபோது இகழ்ந்து கூறிக் கதவையும் அடைத்துக் கொள்வர்; அல்லது எதிர் நின்று போரிடவும் செய்வர். இத்தகையவரை நான் பாடவோ? 3

846. பழனிப் பெருமான் மீது பாடியது

(நற்ருய் இரங்கல்)

வெண்ணெய்க் கட்டியுஞ் சீனியு மூட்டலாம்
விக்கிக் கொள்வதற் கென்செய்ய லாமொரு
பெண்ணைக் கட்டிக் கொடுத்திட லாம்பிள்ளை
பெறுவதற்கு முடன்படு வார்களோ
பண்ணைக் கட்டிய மென்மொழி யாளுந்தம்
படுக்கை வீட்டில்வந் தாளே யவனைக்
கண்ணைக் கட்டி யணையாமல் ஏன்விட்டீர்
கழனி சூழும் பழனியில் வேலரே.

வயல்கள் சூழ்ந்த பழனியில் வீற்றிருக்கும் வேலவனே! ஒரு குழந்தையின் வாயில் வெண்ணெய்க் கட்டியையும் சருக்கரையையும் இடலாம். ஆனுல் அவை உள்ளே செல்லாத வண்ணம் விக்கிக் கொள்ளுமானுல் என்ன செய்வது? ஒரு

பெண்ணை ஒருவனுக்கு மணம் செய்து கொடுத்துவிடலாம்; ஆனால் பிள்ளை பெறுதலுக்கும் உடன்படுவார்களோ? இசை போன்ற இனிய சொல்லையுடைய என் பெண்ணும் உன் பள்ளியறைக்கு வந்தாளே! அவளைக் கண்ணைக் கட்டித் தழுவாமல் ஏன் விட்டுவிட்டீர்? 4

847. குருவப்ப பூபனின் கொடை

ஏதிலே வறியவர்க்கு மினியகவிப் புலவருக்கு
மிரங்கி யந்தப்
போதிலே தனங்கொடுக்குந் தஞ்சைநகர்க்
குருவப்பபூபனெற்குக்
கோதிலே கிடந்துழலும் பலரிடத்தில் சென்றுதமிழ்
கூறுவண்ணங்
காதிலே யொட்டிட்டுத் தாடையின்மோ தக்கடுக்கன்
றனிட்டானே.

மிக வறியவர்க்கும் இனிய கவியைப் பாடும் புலவர்க்கும் மனம் இரங்கி அவர்கள் வேண்டிய பொருள்களை அளிக்கும் தஞ்சைப் பகுதியில் வாழும் குருவப்பன் என்பவன், கீழ்மக்களிடத்தில் சென்று அவரைப் புகழ்ந்து பாடலைப் பாட இயலாதபடி செவியில் இரகசியம் சொல்லிக் கன்னத்தில் வந்து அடிக்குமாறு எனக்குக் காதணியைத் தந்தான். 5

848. திருநாகைக் காரோணர்மேல் பாடியது
(நற்றாய் இரங்கல்)

வம்பிறைக்கும் கடம்பிறைக்கும் பெரும்பிறைக்கும்
நிகராக வளர்த்த வொற்றைக்
கொம்பிறைக்குந் தாதையராங் கடனாகைக்
காரோணர் கொன்றை நல்கார்
அம்பிறைக்கும் விழிப்பாவை யாயர்குழல்
கொல்லனுலை யனலிற் காய்ந்த
செம்பிறைக்கும் வெண்பிறைக்குங் கரும்பிறைக்கு
மொருத்திதனித் தென்செய் வாளே.

மணம் வீசும் கடப்ப மாலையை அணிந்த முருகப் பெருமானுக்கும் பெரிய பிறைச்சந்திரனுக்கு நிகரான தந்தத்தை

யுடைய விநாயகப் பெருமானுக்கும் தந்தையான நாகைச் சிவபெருமான் என் மகளுக்கு தன் கொன்றை மாலையைத் தந்தாரில்லை; கண்ணீரைச் சொரியும் என் மகள் இடையரின் புல்லாங்குழலின் ஓசை கொல்லனின் உலைத்தீயில் காய்ச்சிய தால் உண்டான செந்நீருக்கும் வெண்மையான பிறைச் சந்திரனுக்கும் கரும்பினை வில்லாகக் கொண்ட மன்மத னுக்கும் எதிராகத் தனியளான ஒருத்தி என்ன செய்வாள்? 6

849. *திருமயிலை வேங்கடசாமி வள்ளள்*

மூங்கிலிலே யொளித்திருந்தான் முக்கண்சாமி
முதியகடற் போய்படுத்தான் முகுந்த சாமி
தாங்கமலப் பொகுட்டுறைந்தான் தலைநாற் சாமி
தடவரையி லுழன்றுநின்றான் தகப்பன் சாமி
வாங்கியுண்ண வழிகாத்தான் வயிற்றுச் சாமி
வரணருக்கிங் குதவுவரார் மற்றோர் சாமி
ஓங்கியசீர் மயிலையிற்பொன் னப்ப சாமி
உதவியவேங் கடசாமி யுசிதவேளே.

திருநெல்வேலி என்னும் தலத்தில் மூங்கில் மரத்தின் அடியில் சிவபெருமான் வெளிப்படாமல் ஒளிந்திருந்தார்; திருமால் பழைய பாற்கடலில் போய்ப்படுத்துக் கொண்டார்; நான்கு தலைகளையுடைய நான்முகன் தாமரையில் அமர்ந்தார்; தம் தந்தைக்கு உபதேசம் செய்த முருகப்பெருமான் மலைமீது உலாவலானார்; பெரிய வயிற்றையுடைய விநாயகப்பெருமான் நைவேத்தியத்தைப் பெற்று உண்பதற்காக வழிகளில் காக்கும் கடவுளாக இருந்தார். தமிழ் கற்ற புலவர்க்கு உதவ ஒரு தலைவர் உண்டு, அவர் யார் என்றால், மிக்க சிறப்பை யுடைய மயிலைப் பகுதியில் பொன்னப்பசாமி என்பார் பெற்றெடுத்த வேங்கடசாமி என்னும் வள்ளலாவார் 7

850. *திருப்பரங்குன்ற விநாயகர்*

வஞ்சகத்தி லொன்றானைத் துதிக்கைமிகத்
திரண்டானை வணங்கார்ருள்ளே
அஞ்சரண மூன்றானை மறைமொழிநால்
வாயானை யத்தனுகித்

துஞ்சவுணர்க் கஞ்சானைச் சென்னியணி
　　யாருனைத் துகளெழானைச்
செஞ்சொல்மறைக் கெட்டானைப் பரங்கிரிவாழ்
　　கற்பகத்தைச் சிந்தை செய்வாம்.

வஞ்சம் பொருந்திய மனத்தில் பொருந்தாதவனை, திரண்ட துதிக்கையுடையவனை, வணங்காதவர் நெஞ்சத்தில் தன் திருவடியைப் பதிய வைக்காதவனை, வேதத்தை உரைக்கும் தொங்குகின்ற வாயையுடையவனை, உயிர்களுக்கெல்லாம் தலைவனாய் அவுணர்களுக்கு அஞ்சாதவனை, தலையில் சூடிய நதியைப் பெற்றிருப்பவனை, குற்றம் இல்லாதவனை, செம்மையான வேதங்களுக்கு எட்டாதவனை, திருப்பரங் குன்றத்தில் வீற்றிருக்கும் கற்பக விநாயகனை வணங்குவோமாக! 8

(இதில் ஒன்று முதல் எட்டு எண்வரை வந்துள்ளதைக் காண்க.

551- அருணாசலர்மேல் பாடப்பட்ட பாடல்

(தலைவி யிரங்கல்)

திரிபங்கி (மூன்று வெண்பாக்கள்)

சலமேதோ சங்கந்தா பூணாரந் தாமே
கலைதாநற் புங்கவன்மால் காணுப்—புலவுடைய
சங்கரா கோணு கலாமதியக் கோடீர
சங்கரா சோணு சலா.

தேவர்களுள் மேலானவனான திருமாலும் காணுவதற்கு முடியாத புலால் மணத்தையுடைய கபாலத்தைக் கையில் உடையவனே! குறைந்து அழியாத பிறைச்சந்திரனை அணிந்த சடையை உடையவனே! இன்பத்தை அளிப்பவனே! தீ வடிவான மலையை யுடையவனே! நீ சினம் கொண்டதற்குக் காரணம் யாதோ? என் கையினின்று கழன்றுபோன வளையலைத் தருவாயாக! என் அணிகளைத் தருவாயாக! என் ஆடையைத் தருவாயாக!

விளக்கம் : அருணாசலர் உலாவந்தபோது அவரைக் காமுற்ற தலைவி ஒருத்தியின் கூற்று இது. அவரைக் கண்டு காமம் கொண்டதால் உடல் மெலியப்பெற்று அவளுடைய வளையல், அணி, ஆடை முதலியன அவளிடமிருந்துநீங்கின. அவர் அவளைச் சேர்ந்தால் அவை அவளுக்குக் கிடைக்கப் பெறும். திரிபங்கி ஒரு செய்யுளை மூன்றுவிதமாக(செய்யுளாக)ப்

படிப்பினும் பொருள் மாருது இருப்பது திரிபங்கி, இச்செய்யுளை இருக்கும் முறையிலே படித்தாலும், 'சங்கந்தா' எனத் தொடங்கிப் படித்தாலும், 'பூணரந்தா' எனத்தொடங்கிப் படித்தாலும் பொருள் மாருது மூன்று செய்யுள்களாக விளங்கு வதைக் காணலாம். 9

852. தில்லைக் கோவிந்தராசப் பெருமான் மீது பாடிய வண்டுவிடு தூது

சீரிலங்கு மாடகூட வீதிவீறு தில்லையான்
திருவிருக்கு மார்பனெங்க டிருமலைக்கு முன்புபோய்
நீரிருந்து மாலைகேளு மவன்மறுத் துரைக்கிலென்
னெஞ்சுசொல்லும் வார்த்தையாக நீங்கள் சொல்லும் வண்டுகாள்
வாரியொன்று பாயிரண்டு மாலைமூன்று நாலுவேய்
மதியமைந்து கங்குலாறு மாரனேழு வாடையெட்
டாரமொன்ப தன்றில்பத் தடங்கலும் மொறுக்குமால்
அத்தனைக் கெலாமிலக் கெனுவியொன்று காணுமே.

வண்டுகளே! புகழ் பொருந்திய மாடமும் கூடமும் பொருந்திய தில்லைப்பதியில் எம் இலக்குமி வீற்றிருக்கும் மார்பினையுடைய திருமாலினது மலையின் எதிர் போய்க் காத்திருந்து அவனது மாலையைக் கேளுங்கள்; அவன் அம்மாலையைத்தர மறுத்தால் என் மனம் தெரிவிக்கும் இச் செய்தியை அவனுக்குக் கூறுங்கள்; அது யாது என்ருல், கடல் ஒன்று; மலர்ப்படுக்கை இரண்டு; மாலைக் காலம் மூன்று; புல்லாங்குழல் நான்கு; மதி ஐந்து; இரவு ஆறு; மன்மதன் ஏழு; வாடைக்காற்று எட்டு; முத்தாய்ஆன மாலை ஒன்பது; அன்றில்பத்து. இவை எல்லாம் என்னைத் துன்பப்படுத்தும் அவ்வளவும் தாக்கக் குறியாவது என் உயிர் ஒன்ருகும். இது தக்கதா? 10

853. திருவானைக்கா சிவபெருமானின் உலா

ஓரானை வனத்தேதிரு வெண்ணுவ னிழற்கீழ்
உறையும்பெரு மான்வீதி யுலாவும்பவ னிக்கே
நேராகந டப்பேன்வளை பறிபோனது கேட்பேன்
நில்லென்றுத டுத்தால்வகை சொல்லென்று மறிப்பென்

போரானையை விட்டால்முலை யிரானையை விடுவேன்
பொழியம்பு தொடுத்தாலிரு விழியம்பு தொடுப்பேன்
தோராவழக் கிட்டால்வகை வாராவழக் கிடுவேன்
தொல்லைக்கணை கொண்டேவகை வெல்லப்பெறு வேனே.

ஒப்பில்லாத திருவனைக்கா என்னும் தலத்தில் வெண் நாவல் மரத்தின் அடியில் வீற்றிருக்கும் சிவபெருமான் தெருவில் வரும் உலாவிற்கு எதிராகச் செல்வேன்; என்னிடமிருந்து கவர்ந்த வளையலைத் திருப்பித் தருமாறு கேட்பேன்; அவர் என்னை நில் என்று தடுத்தால், நான் வளையலைப் பெறுவதற்கு வழியைக் கூறுக எனக் கேட்பேன்; என்னுடன் சண்டை செய்யத் தன் ஓர் யானையை அனுப்பினால், நான் என் தனங்களாகிய இரண்டு யானைகளைச் செலுத்துவேன்; அவர் அம்புகளைச் செலுத்தினால் நான் என் கண்களாகிய இரண்டு அம்புகளைத் தொடுப்பேன்; அவர் தோற்றுப் போகாத வண்ணம் வழக்காடினால், நான் ஒரு வகையாலும் முடிவுக்கு வரப் பெறாத வழக்குத் தொடுப்பேன். பழைமையான அன்பைக் கொண்டு நான் வெற்றி அடைவேன். 11

854. *அவரது மனக்கருத்து யாதோ !*

அடல்கொண்டெழு சூலப்படை யாரூர்ப்பெரு மானார்
ஐயம்பக ரென்றேயெம தகவாசலில் வந்தார்
கடுகும்படி சென்றேபலி கொண்டேயெதிர் நின்றேன்
கைவந்தன மென்றாரிது கைவந்தன மென்றேன்
மடவன்னம தென்றாரிது மடவன்னம தென்றேன்
வல்லோதன மென்றாரிது வல்லோதன மென்றேன்
கொடுவந்தன மென்றாரிது கொடுவந்தன மென்றேன்
கொள்ளார்பலி செல்லாரவர் கோட்பாட்டறி யேனே.

ஆற்றலுடன் கிளர்ந்து வரும் சூலப்படையையுடைய திருவாரூர்த் தியாகேசர், ஐயம் ஏற்கும் இயல்புடன் (அல்லது சந்தேகத்தைச் சொல் என்ற பாவனையுடன்) என் வீட்டு வாயிலுக்கு வந்தார்; நான் பிச்சைச் சோற்றுடன் விரைவாக அவருக்கு எதிரே சென்று நின்றேன்; அவர் நமக்குக் கிட்டியது (கையால் வணக்கம்) என்றார்; நான் அதற்கு "இது நான் கையில் கொண்டு வந்த உணவு" என்றேன். அவர்

"இளமையுடைய அன்னத்தைப் போன்றவளே" என்றார்; நான், "இது வளமுடைய வீட்டில் உள்ள சோறு" என்றேன்; அவர், "நின் தனமானது சூதாடும் கருவியோ?" என்று வினவினார். நான், "இது இரவில் இடும் பிச்சைச் சோறு" என்றேன். அவர் "அதைக் கொடு; உனக்கு வணக்கம்" என்றார்; நான், "கொண்டு வந்தேன்" என மொழிந்தேன். அவர் பிச்சைச் சோற்றை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. இங்கிருந்து செல்லவுமில்லை, அவரது மனத்தில் உள்ள கருத்து யாதோ? அறியேன். 12

855. *உறவு முறையை மாற்றிப் பாடியது!*

வீமனுக்கு மைந்தனார் வேதனாகும்;
வேதனுக்கு மைந்தனா ரீசனாகும்;
காமனுக்கு மைந்தனார் வீமன் தம்பி;
கந்தனுக்கு மாமனார் காமன்றானே;
மாமனுக்கு முன்றமையன் றந்தைகாலன்
வையகத்தி லிம்முறைமை வழங்கலாலே
ராமனுக்குச் சீதைதங்கை யாகவேண்டும்
ராவணனுக் குத்தகப்பன் ராமன்றானே.

வீமனுக்கு மைந்தன் நான்முகன்; (கருடனின் தலைவனாகிய திருமாலுக்கு மகன் நான்முகன்); நான்முகனுக்கு மகன் சிவபெருமான் (மூங்கிலில் தோன்றியவர் சிவபெருமான்); மன்மதனுக்கு மகன் வீமனது தம்பியான அருச்சுனன் (கற்பகச் சோலைக்குத் தலைவனான இந்திரனின் மகன் அருச்சுனன்); முருகப் பெருமானுக்கு மாமனார் மன்மதன் (முருகனின் மாமனார் இந்திரன்); மாமனுக்கு தமையனும் தந்தையுமாக இருப்பவன் இயமன் (குதிரைத் தலைவனான நகுலனுக்குத் தமையனான தருமனின் தந்தை இயமன்), இவ்வுலகத்தில் இம்முறைமை வழங்குவதால் இராவணனுக்குச் சீதை தங்கை முறையாகவேண்டும் (இரவின் தலைவனான சந்திரனுக்குத் திருப்பாற் கடலில் அச்சந்திரனுடன் பிறந்ததால் இலக்குமியான சீதை தங்கை யாதல் வேண்டும்) இராவணனுக்குத் தந்தை இராமனே (இரவின் நிறத்தை யுடைய மன்மதனுக்குத் தந்தை திருமாலின் அவதாரமான இராமனே ஆவான்.) 13

356. பாக்குவெட்டி பறந்து சென்றது!

(பாக்குவெட்டி காணுமற் போனபோது பாடியது)

விறகு தறிக்கக் கறிநறுக்க வெண்சோற் றுப்புக் கடகுவைக்கப்
பிறகு பிளவு கிடைத்த தென்ரு ஞலாருகப் பிளந்து கொள்ளப்
பறகு பறகென் றேசொறியப் பதமாயிந்த பாக்குவெட்டி
இறகு முளைத்துப் போவதுண்டோ வெடுத்தீராயிற் கொடுப்பீரே.

விறகைத் துண்டாக நறுக்கவும், காய்களை நறுக்கவும் சோற்றுக்கு உப்பில்லையானால் அடகு வைத்துப் பொருளைப் பெறவும், அதன் பின்னர்ப் பாக்குப் பிளவு கிடைக்குமானால் நாலாருக வெட்டிக் கொள்ளவும், உடலில் தினவு எடுக்கு மானல் 'பறக்கு பறக்கு' எனச் சொறிந்து கொள்ளவும் பயன் பட்டது பாக்கு வெட்டி. அது இறகு முளைத்துப் பறந்து போவதுண்டா? நீங்கள் எடுத்திருப்பீரானல் திரும்பக் கொடுத்து விடுங்கள். 14

357. விஞ உத்தரம்

(திருவேங்கட நாதன் மீது பாடியது)

இரவல னேயுனக் கில்லாத தென்ன விதயமென்ன
பரவுண வேது சுவையற்ற தென்னசொற் பான்மையென்ன
தரவுரை செய்திடவென்ரு னதற்கொன்றுஞ் சாற்றிலன்யான்
வரதிரு வேங்கட நாதாவென் றேன்பொன் வழங்கினனே.

புரவலன் "யாசிப்பவனே, உனக்கு இல்லாதது எது? (திரு); உன் மனம் எவ்வாறு இருக்கிறது (வேம்; அதாவது வேகின் றது); நின் உணவுக்கு வேறு வழி யாது? (கடன்); சுவையில் லாதது எது! (நா); நீ அடிக்கடி சொல்லும் சொல் யாது? (தா); இதற்குத் தக்கவாறு விடை கூறுக" என்று என்னைக் கேட் டான். அதற்கு நான் விடை யொன்றும் சொல்லவில்லை; ஆயினும் பல வரங்களைத் தரும் 'திருவேங்கட நாதா' எனச் சொன்னேன். எனவே (அந்தச் சொல் தன் விஞக்களுக் குரிய விடையாகும் என எண்ணிப் பொன்னைத் தந்தான்.

விளக்கம்: புரவலன் ஒருவன் பல விஞக்களை அடுத்துக் கேட்க அதற்கு விடையை இரவலன் சொல்லாமல் 'திரு வேங்கட நாதா' என்று இறைவனின் பெயரைச் சொன்ஞன். அத்தொடரே புரவலன் விஞவிய விஞக்களுக்கெல்லாம்

விடையாக இருந்ததால் மகிழ்ந்து பொன்னைத் தந்தான் என்பது கருத்து.

வினு உத்தரம்—வினுவும் விடையுமாகப் பொருள் அமைத்துப் பாடுவதாகும். 15

858. என் குற்றம் !

கல்லாத வொருவனைநான் கற்று யென்றேன்
காடெறியு மறவனைநா டாள்வா யென்றேன்
பொல்லாத வொருவனைநா னல்லா யென்றேன்
போர்முகத்தை யறியானைப்புலியே றென்றேன்
மல்லாரும் புயனென்றேன் சூம்பற் றேளை
வழங்காத கையனைநான் வள்ள லென்றேன்
இல்லாது சொன்னேனுக் கில்லை யென்றான்
யானுமென்தன் குற்றத்தா லேகின்றேனே.

நான் கல்லாத ஒரு செல்வனை நோக்கி 'கற்றவனே' என்றேன்; காட்டினை வெட்டும் குலத்தில் தோன்றிய செல்வனை 'நாட்டை ஆள்பவனே' என்றேன்; தீய குணம் பெற்றவனை 'நல்லவனே' என்றேன்; போர்க்களத்தை அறியாத ஒருவனை 'நீ போர் செய்வதில் புலி போன்றவன்' என்றேன்; மெலிந்த தோள்களையுடையவனை 'மல் போர்க்கு ஏற்ற தோள்களையுடையவனே' என்றேன்; பிறர்க்குப் பொருளைக் கொடாத ஒருவனை 'வள்ளல்' எனச் சொன்னேன்; இவ்வாறு பொய்யாக இல்லாததை உரைத்ததற்காக எனக்குக் கொடுக்கத் தன்னிடம் பொருள் இல்லை என்றான். நானும் என் குற்றத்தை உணர்ந்து பொருள் பெறுமல் செல்கின் றேன். 16

859. துன்பங்கள் எல்லாம் தொடர்ந்து வரும் !

ஆவீன மழைபொழிய இல்லம் வீழ
அகத்தடியாள் மெய்ந்நோவ வடிமை சாவ
மாவீரம் போகுதென்று விதைகொண் டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச்
சாவோலை கொண்டோருவ னெதிரே செல்லத்
தள்ளவொண்ணு விருந்துவரச் சர்ப்பந் தீண்டக்
கோவேந்த ருழுதுண்ட கடமை கேட்கக்
குருக்களோ தட்சணைகள் கொடுவென் றுரே.

பசுவானது கன்றை ஈன்றது; அதைப் பார்க்கப் போகும் நேரத்தில் மழை பெய்தது; அதனால் வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்தது; வீட்டில் உள்ள ஏவலாள் வேலை செய்ய முடியாமல் நோயில் வீழ்ந்தான்; நிலத்தில் வேலை செய்யும் ஆள் இறந்து போனான்; வயலில் மழை ஈரம் உலர்கின்றது என்று விதை விதைக்கக் கொண்டு போன பொதுவழியில் கடன்காரன் கடனைத் தருமாறு வழியை மறித்துக் கேட்டான்; அப்போது ஒருவன் சாவோலையை எடுத்துக் கொண்டு எதிரே வந்தான்; அதே சமயத்தில் வீட்டில் உள்ள ஒருவரைப் பாம்பு கடிக்க அவர் இறந்து போனார்; அரசன் நிலவரியைக் கேட்டான்; ஆசிரியரோ தட்சணை கேட்டபடி வந்தார். இங்ஙனம் துன்பங்கள் ஒன்றன் மேல் ஒன்றாகத் தொடர்ந்து வந்தன. 17

860. *நான்முகன் படைத்த இயல்பு !*

கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித்தானா
இல்லைத்தான் பொன்னைத்தா னெனக்குத்தான்
கொடுத்துத்தா னிரட்சித் தானா
அல்லைத்தான் சொல்லித்தா னாரைத்தா
னோவத்தா னையோவெங்கும்
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்
புவியிற்றான் பண்ணினானே.

தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகன் கல்லையும் மண்ணையும் சமைத்து சமைத்து உண்ணுமாறு செய்தானா? இல்லை; அன்றி வீட்டினையோ பொன்னையோ எனக்குத் தந்து நன்கு வாழுமாறு செய்தானா? இல்லை; யான் படும் துன்பத்தைச் சொல்லி எவரை நொந்து கொள்வது? ஐயோ! எல்லா இடங்களிலும் பல்லைக் காட்டி இரந்து வாழுமாறு அவன் இவ்வுலகத்தில் நம்மைப் படைத்துவிட்டான்! 18

861. *சங்கரன் பெற்ற புண்கள் !*

வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற் புண்ணும்
வாசலொரு முட்டுண்டதலையிற் புண்ணுஞ்
செஞ்சொல்லை நினைந்துருகு நெஞ்சிற் புண்ணுந்
திருமென்றே சங்கரன்பாற் சேர்ந்தே னப்பா

கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும் வேடன்
கொடுங்காலா லுதைத்தபுண்ணுங் கோபமாகப்
பஞ்சவரி லொருவன்வில்லா லடித்த புண்ணும்
பாரென்றேகாட்டி நின்றான் பரமன் றானே.

வஞ்சனை யுடையவரிடத்தில் சென்று அலைந்ததால் உண்டான காலில வலியும், ஒவ்வொரு வீட்டின் வாசலில் சென்று முட்டிக் கொண்டதால் ஏற்பட்ட தலைப்புண்ணும், நல்ல பாக்களைச் சுவைப்பவர் இல்லையே என நினைப்பதால் உண்டாகும் மன வருத்தமும் நீக்குவீராக என்று வேண்டிக் கொள்ள யான் சிவபெருமானிடம் சென்றேன். ஆனால் அப் பெருமான், பாண்டியன் பிரம்பால் அடித்ததால் உண்டான புண் சிறிதன்று என்று அதையும், வேடனை கண்ணப்பன் தன் செருப்பணிந்த காலால் மிதித்த போது உண்டான புண்ணையும், சினத்துடன் பாண்டவருள் ஒருவனான அருச்சுனன் வில்லால் அடித்த புண்ணையும் நீ பார்ப்பாயாக எனச் சொல்லி அவற்றை எனக்குக் காட்டினான். 19

862. மழவரங்கனை இகழ்ந்து பாடியது.

கள்ளிக்கேன் முள்வேலி கழுதைக்கேன்
கடிவாளங் கறுப்பில்லாத
உள்ளிக்கேன் பரிமளங்க ளுவர்நிலத்துக்
கேன்விதைக ளொடித்துப் போடும்
சுள்ளிக்கேன் கோடாலி துடைப்பத்திற்கேன்
கவசஞ் சும்மா போகும்
பள்ளிக்கே னதிவீர மழவரங்க
பூபனெனும் பட்டந் தானே.

கள்ளி என்னும் மரத்துக்கு எதற்காக முள்வேலி இட வேண்டும்? குதிரைக்கு இடவேண்டிய கடிவாளத்தைக் கழுதைக்கு எதற்காகப் பூட்ட வேண்டும்? வெள்ளை உள்ளிக்கு நறுமணப் பொருள்கள் ஏன் ஊட்டவேண்டும்? உவர் நிலத்தில் விதை விதைப்பதால் என்ன பயன் உண்டாகும்? கையால் எளிதில் ஒடித்துப் போடக் கூடிய கள்ளிக்கு ஏன் கோடரி? துடைப்பத்திற்கு மூடும் கவசம் எதற்காக? அவை போலப் பயனில்லாத பள்ளிக் குலத்தில் தோன்றிய அற்பனுக்கு 'அதிவீர மழவரங்க பூபன்' என்னும் பட்டம் எதற்காக? 20

863. *ஆரோதனின் மகன்மீது பாடிய பாடல்!*

(நற்ருய் இரங்கல்)

கயக்காவி நாறுங் குழம்பிற்பிர சண்டா
காரார் கொடைச்செங்கை ஆரோதன் மைந்தா
இயக்காநின் மார்பிற் செழும்புன்னை யந்தார்
இப்போது நீநல்கி லென்பேதை மார்பில்
சயக்காம வேளம் புதையாது முத்துத்
தாமஞ் சுடாசந்த னம்பூசி ஞலும்
செயக்காது வேயோ செவிக்கும் பொறுக்கும்
தீயென்ன மீளாது திங்கட்கொழுந்தே.

நீரில் மலரும் குவளை மாலையையும் மணம் மிக்க சந்தனத்தையும் அணிந்த வீரனே! மேகத்தைப் போன்ற கொடைத் தன்மையுடைய கையினனான ஆரோதன் என்பவனின் மகனே! கந்தர்வனைப் போன்றவனே! நின்மார்பில் உள்ள அழகிய புன்னைப் பூமாலையை நீ இப்போது அளித்தால் என் பெண்ணின் தனங்களில் மன்மதனின் கணை அழுந்தாது; அவள் அணிந்துள்ள முத்துமாலை பொரிந்து போகாது; சந்தனத்தைப் பூசினால் அதுவும் வருத்தாது; புல்லாங்குழல் ஓசையைக் காது கேட்க முடியும்; பிறைச்சந்திரன் தீயைப் போலத் திரும்பத் தோன்ருது. 21

864. *சிவந்தான் என்னும் வள்ளல் கொடுத்த கொடை*

சொன்னமன்ன மாடைதந்தான் வீதியில்வெற்
றிலைமடித்துச் சுருளுந்தந்தான்
கன்னவின்மோ திரந்தந்தான் சரப்பணிதந்
தானிரட்டைக் கடுக்கன் றந்தான்
செந்நெல்விளை யூர்தந்தான் பேர்தந்தான்
மல்லையில்வாழ் சிவந்தா னுங்கட்
கென்னதந்தா னென்றவர்கட் கெத்தனையுத்
தரந்தந்தா னியம்பத் தானே.

மாமல்லபுரத்தில் வாழும் 'சிவந்தான்' என்ற வள்ளல் 'உங்களுக்கு என்ன கொடுத்தான்' என்ற வினவியவர்க்கு, எத்தனையோ வகையான விடையைத் தரும்படியாகச் செய்தான்; அவ்வள்ளல் பொன்னையும் உணவையும் ஆடையையும்

ஆகியவற்றை அளித்தான்; தெருவில் வெற்றிலையை மடித்து எனக்குக் கொடுத்தான்; கல்லை இழைத்த மோதிரத்தைத் தந்தான்; தொங்கும் பதக்கம் அளித்தான்; இரட்டைக் கடுக்கனைக் கொடுத்தான்; நல்ல நெல் விளையும் வயல்களை நல்கினான்; பட்டமும் தந்தான். 22

865. *சீதாராம வள்ளல் மீது பாடிய பாடல்*
(நடு எழுத்தலங்காரம்)

அத்திரம்வே லாவலயமி ராசி யொன்றிற்
கமைந்தபெயர் மூன்றினிடை யக்கரத்தால்
மெத்தநடுக் குற்றுனைவந் தடைந்தே னிந்த
விதனமகற் றிடுமற்றை யெழுத்தோ ராறில்
பத்துடையா னைத்தடிந்து பெண்ணுய்ச் செய்து
பரிவினுகர் வோனிருதாள் பணிந்து போற்றும்
சித்தகனே தெளியசிங்கன் தவத்திற் றேன்றுஞ்
சீதாரா மப்ரபல தியாக வானே:

பகழி, கடல், ஒரு ராசிக்கு அமைந்த பெயராகிய கன்னி ஆகிய இந்த மூன்றின் நடுவில் உள்ள எழுத்துக்களால் ஆன 'கடனல்' மிகவும் கலக்கம் அடைந்து உன்னிடம் வந்து சேர்ந்தேன்; இந்தக் கவலையை ஒழித்துவிடு; மற்ற எழுத்துக்களினுல் ஆன சொற்களுள் ஒன்றான பழி காரணமாகப் பத்துத் தலைகளை உடைய இராவணனைக் கொன்று மற்றொன்ருகிய கல்லை அகலிகை எனும் பெண் வடிவமாக்கி, மூன்ரும் சொல்லான கனியைச் 'சவரி' என்பவள் தர, அதனை உண்ட இராமனது இரண்டு அடிகளையும் தொழும் மன்மதனைப் போன்றவனே! தெளிய சிங்கன் என்பவர்க்கு வரத்தால் தோன்றிய சீதாராமன் என்ற புகழ் பெற்ற கொடையாளியே!

விளக்கம்: பகழி, கடல், கன்னி-இம்மூன்று சொற்களில் உள்ள நடு எழுத்துகளைக் கூட்டினல் 'கடன்' என்ருகும். முதல் எழுத்து இறுதி எழுத்துக்களைச் சேர்த்தால் 'பகழி' 'பழி' ஆகும்; 'கடல்' 'கல்' ஆகும். 'கன்னி' 'கனி' ஆகும். இம்மூன்று சொற்களுள் முதலாவதான பழியால் இராமன் இராவணனைக் கொன்ருன்; இரண்டாவதாகிய 'கல்'லை அகலிகை என்ற பெண்ணுருவாக்கினுன்; மூன்ருவதான 'கனி'யைச் சவரி என்பவள் தர இராமன் உண்டான். 23

866 ஈயாதவரின் இகழ்ச்சி

கல்லா லயமாந் தேவருநாங் கழுதை கசடர் பொதிசுமக்குங்
கடாவோ வுழுது பயிரிடற்காங் கட்டம் பன்றிக் கிரை
யாகும்
புல்லே றீசர் வாகனமாம் பொதியுஞ் சுமக்கும் பிணமெனிலோ
பூசி முடித்து மறையோர்க்குப் பொருளை யீந்து புகழெய்தும்
மல்லார்குட்டிச் சுவரெனிலோ மாடுமுறைஞ்சு மறைவாகும்
மதியாத் துடைப்பந் தானெனிலோமாட கூடந்தனை விளக்கும்
அல்லாதுலுத்தன் தனக்கிணையா யாரை யுரைப்பேன் புவிமீதில்
அவனைக் குறித்துக் கூறுமிடத் தவனுக் கவனே சரிதானே.

கல்லானது ஆலயமாகக் கட்டவும் உதவும்; தெய்வமாகவும் ஆகும்; கழுதை கீழ் மக்களின் பொருள் சுமையைச் சுமக்கும்; எருமைக் கடாவோ உழவுத் தொழிலுக்குப் பயன்படும், மலமானது பன்றிக்கு உணவாகும் சிறிய எருதானது இறைவனுக்கு வாகனமாகும்; பாரமும் சுமக்கும். பிணமானது நறுமணம் பூசப்பெற்றுப் பூக்களால் அலங்காரம் செய்யப்பட்டு மந்திரம் ஓதுகின்றவர்களுக்குத் தட்சணையை பெறும்படி செய்து சிறப்பாகப் பேசப்படும்; குட்டிச்சுவரானது மாடுகள் உராய்ந்து கொள்வதற்கு ஏற்றபடி அமையும்; ஏதேனும் மறைந்து கொள்வதற்கும் அது இடம் தரும்; யாராலும் பொருட்படுத்தாத துடைப்பமோ மாடமாளிகையைப் பெருக்குவதற்குப் பயன்படும்; இவை பயன்படுவன. ஆதலால் ஏதும் பயன்படாத உலோபிக்கு நிகராக யாரைக் கூறலாம் என்ருல், அவனைப் பற்றிய உவமையைச் சொல்லுமிடத்து அவனுக்கு அவனே உவமையாவான். 24

867. திருவாரூர்ப் பெருமானின் உலா

வீரவெண்டை யப்ரதாபர் தியாகராசர் கமலைசூழ்
வீதிகண்டு பவனிகண்டு விந்தைகண்டு பந்தியாய்த்
தூரநின்ற பூவைகா ளடுத்துநின்ற கிள்ளைகாள்
துன்பமே யலாதுபாவி சுகமறிந்த தில்லையால்
மாரனம்பு பட்டகாய மாறுதில்லை யிரவெலாம்
மங்கைமார் தொடுத்தசண்டை மாறுதில்லை யென்
செய்வேன்
ஆரிருந்து முதவியில்லை யென்றனுசை யொழியுமோ
அதுவுமில்லை விதியைநொந்து மாவதில்லை காணுமே.

வீரச் சிலம்பை அணிந்த தியாகராசர் திருவாரூர்த் தெருவின் அழகைக் கண்டு, அவர் அவ்வீதியில் உலா வருவதைக் கண்டு, இந்த அதிசயங்களைக் கண்டு, பாவியான நான் துன்பத்தை அடைந்ததன்றி இன்பத்தைக் கண்டதில்லை; வரிசையாகத் தொலைவில் நின்ற நாகணவாய்ப் பறவைகளே! பக்கத்தே நின்ற கிளிகளே! மன்மதனின் அம்பு தைத்து உண்டான புண் ஆறவில்லை; இரவு முழுவதும் பெண்கள் நடத்திய போர் மாறவில்லை; நான் என்ன செய்வேன்? எனக்கு உறவினர் எவர் இருப்பினும் துன்பததைப் போக்க மாட்டார்; எனது ஆசையானது நீங்குமோ? அதுவுமில்லை. என் விதியை நொந்து கொள்வதாலும் பயன் ஒன்றும் இல்லை. 25

868. *முருகப் பெருமான் மீது சத்தபங்கி*

திமிரமருத புலாதிகளேதரு தேடரிதாய் மாறுஞ்
செனனமகாமால் வசமேமதமுறு சிறுமையின் மதியாலே
குமரசிகாமணி யேகனிவாயருள் கூடெனவே கூறுங்
குருபரகோலா கலனேவிதியொடு குறுகிய மிடிதீராய்
நமதுவிநாயக தேவசகோதர நாடொறுமே தேறும்
நவிமகள்சேர்வே டுவனே புதுமண நறுமலர் புனேமார்பா
அமார்பிரானருள் குஞ்சரிதோள் புண ராடவனே மீறும்
அரகரவேலா யுதனேமுதுமறை யறுமுக முருகோனே.

குமரனாகிய தேவரின் தலைமணியாக விளங்குபவனே! இரக்கத்துடன் அருளைப் பெற்று உய்வாயாக என்று உபதேசத்தைச் செய்யும் ஆசானே! ஆடம்பரமானவனே! நம் விநாயகப் பெருமானின் தம்பியே! நாள்தோறும் எல்லா வற்றையும் ஆராய்ந்தறிந்த மானின் மகளான வள்ளியைச் சேரும் வேடுவனே! புதிய மணத்தையுடைய இந்திரன் பெற்ற தெய்வயானையின் தோள்களைச் சேர்ந்த ஆடவனே! மேலான சிவபெருமானுக்கு உபதேசத்தைச் செய்தவனே! வேலையுடையவனே! பழைமையுடைய வேதங்களுக்குத் தலைவனான ஆறு முகங்களையுடைய முருகனே! இருள் நீங்கப் பெறாத ஐம்புலன்கள் முதலியவற்றால் காண இயலாததாகி மாறி மாறி வரும் பிறவி என்னும் பெரிய மயக்கத்தின் வயப் பட்டுச் சிற்றறிவால் உண்டான ஊழ்வினையினால் நேர்ந்த வறுமையைப் போக்கியருள்வாயாக.

விளக்கம்: ஒரு பாடலை ஏழுவகையாகப் பிரித்து ஏழு பாடல்களாகக் கொள்ளுமாறு பாடுதல் 'சத்தபங்கி' எனப்படும். இப்பாடலை ஏழுவகையாகப் பிரித்து அமைக்கும் முறையைக் கீழே காண்க.

சத்தபங்கியின் பிரிவு:
கட்டளைக் கலித்துறை

(1) திமிர மருத புலாதிக ளேதரு தேடரிதாய்
குமர சிகாமணி யேகணி வாயருள் கூடெனவே
நமது விநாயக தேவச கோதர நாடொறுமே
அமரர் பிரானருள் குஞ்சரி தோள்புண ராடவனே.

கொச்சகம்

(2) தேடரிதாய் மாறுஞ் சென்னமகா மால்வசமே
கூடெனவே கூறுங் குருபர கோலாகலனே
நாடொறுமே தேறும் நவிமகள்சேர் வேடுவனே
ஆடவனே மீறும் அரகரவே லாயுதனே.

கலி விருத்தம்

(3) மாறுஞ் செனன மகாமால்வசமே
கூறுங் குருபர கோலாகலனே
தேறும் நவிமகள் சேர்வேடுவனே
மீறும் அரகரவே லாயுதனே.

சிந்தடி வஞ்சி விருத்தம்

(4) மதமுறு சிறுமையின் மதியாலே
விதியொடு குறுகிய மிடிதீராய்
புதுமண நறுமலர் புனைமார்பா
முதுமறை யறுமுக முருகோனே

குறளடி வஞ்சி விருத்தம்

(5) சிறுமையின் மதியாலே
குறுகிய மிடிதீராய்

நறுமலர் புனேமார்பா
அறுமுக முருகோனே.

வெண்பா

(6) தேடரிதாய் மாறுஞ் செனனமகா மால்வசமே
நாடொறுமே தேறு நவிமகள்சேர்—வேடுவனே
ஆடவனே மீறு மரகரவே லாயுதனே
கூடெனவே கூறுங் குரு

இவற்றுடன் முதலில் அமைந்த ஒன்றையும் கூட்ட ஏழாதல் காண்க. 26

869. *முருகப் பெருமான் மீது பாடிய 'நவபங்கி'*

அரிமரு காகரு ணுலய னேதிட வாரணனே போதன்
அரியிமை யோர்சூழ்புனிதா புலவட ரயிலமர்பொற்கரனே.
கரிமுக னேயசகோ தரனே படிகா ரணனே நாதங்
கதியுற வேவா னவனே நலமிகு கயிலை யனற்குருவே
குரவலர் நீபம ணிப்புயனே வடி கூரமுதே யோதுங்
குருமணி சேர்மார் பின்னே யுலகருள் குயிலுதவுத்தமனே
மரகத மாமயில் வாகனனே கொடி வாரணனே கோதின்
மதியக மேவாழ் குமரா குலவிய மயிலைம லைக்குகனே.

திருமாலின் மருமகனே! கருணைக்கு இருப்பிட மானவனே! உறுதியான வேதத்தின் பொருளாக விளங்குபவனே! நான் முகன் திருமால் முதலிய தேவர்கள் சூழ்ந்து வழிபடுகின்ற தூயவனே! புலால் மணம் கமழும் கூரிய வேல் தாங்கும் கையையுடையவனே! யானை முகக் கடவுளின் அன்புத் தம்பியே! இம்மண்ணுலகத்திற்குக் காரணமான தலைவனே! மேன்மையுடைய தேவனே! நன்மையுடைய கயிலாய மலையின்கண் வீற்றிருக்கும் சிவபெருமானுக்குக் குருவே! குரவமலர்மாலையும் கடப்பமலர்மாலையும் அணிந்த தோள்களை யுடையவனே! வடித்த அறிவுக் கூர்மையுடைய அமுதமாக விளங்குபவனே! சிறப்பாகப் பேசப்படும் சிறந்த நிறத்தை யுடைய மணிமாலையை அணிந்த மார்பினனே! உலகத்தை அருளும் குயில் போன்ற குரலையுடைய உமையம்மை பெற்ற தூயவனே! மரகதமணி போன்ற பச்சை மயிலைவாகனமாகக் கொண்டவனே! சேவற் கொடியை யுடையவனே! குற்ற

மில்லாத அறிவில் தங்கும் குமரனே! சிறப்புப் பொருந்திய மலையில் வீற்றிருக்கும் பெருமானே!

விளக்கம்: ஒரு செய்யுள் ஒன்பது வகையாகப் பிரித்து ஒன்பது பாடலாக அமைப்பது 'நவபங்கி.' இச் செய்யுளை ஒன்பது வகையாகப் பிரித்து ஒன்பது செய்யுள்களாகக் கொள்வதைக் கீழே காண்க.

நவபங்கியின் பிரிவு:

சிந்தடிவஞ்சி விருத்தம்

(1) அரிமருகா கருணாலயனே
கரிமுகனே யசகோதரனே
குரவலர்நீப மணிப்புயனே
மரகதமாமயில் வாகனனே.

கலிவிருத்தம்

(2) புலவடரயிலமர் பொற்கரனே
நலமிகுகயிலை நற்குருவே
உலகருள்குயிலுத வுத்தமனே
குலவியமயிலை மலைக்குகனே.

கட்டளைக் கலித்துறை

(3) அரிமரு காகரு ணாலய னேதிட வாரணனே
கரிமுக னேய சகோதர னேபடி காரணனே
குரவலர் நீப மணிப்புய னேவடி கூரமுதே
மரகதமா மயில் வாகன னேகொடி வாரணனே.

கொச்சகம்

(4) ஆரணனே போத னரியிமையோர் சூழ்புனிதா
காரணனே நாதங் கதியுறவே வானவனே
கூரமுதே யோதுங் குருமணிசேர் மார்பினனே
வாரணனே கோதின் மதியகமே வாழ்குமரா.

சந்த விருத்தம்

(5) போதன் அரி யிமையோர்சூழ் புனிதா புலவடரயிலமர்
பொற்கரனே
நாதங்கதி யுறவே வானவனே நலமிகு கயிலைய னற்குருவே
ஓதுங் குருமணி சேர் மார்பினனே யுலகருள் குயிலுத
வுத்தமனே
வாரணனே கோதின் மதியக மேவாழ்குமரா.

கலி விருத்தம்

(6) போதன் அரியிமை யோர்சூழ் புனிதா
நாதங் கதியுற வேவா னவனே
ஓதுங் குருமணி சேர்மார் பினனே
கோதின் மதியக மேவாழ் குமரா.

குறளடி வஞ்சி விருத்தம்

(7) அயில்மர் பொற்கரனே
கயிலைய னற்குருவே
குயிலுத வுத்தமனே
மயிலமலைக் குகனே

(8) திடவா ரணனே
படிகா ரணனே
வடிகூ ரமுதே
கொடிவா ரணனே.

வெண்பா

(9) ஆரணனே போதன் அரியிமையோர் சூழ்புனிதா
கூரமுதே யோதுங் குருமணிசேர்—மார்பினனே
வாரணனே கோதின் மதியகமே வாழ்குமரா
காரணனே நாதங் கதி

குறிப்பு: இவற்றிற்கு உரை முதற் செய்யுளில் உரைத்தவாறே கொள்ள வேண்டும்.

35. எல்லீசு பாடல்

870. இராமச்சந்திர கவிராயர் மீது பாடியது.

(1) செந்தமிழ்ச் செல்வனு மோரா யிரந்தலைச் சேடனும்யாழ்
சுந்தரத் தோடிசை வல்லோனும் யாவருந் தோத்திரஞ்செய்
கந்தனைச் சொல்லுங் கவிராமச் சந்த்ரனைக் கண்டுவெட்கி
யந்தர வெற்பிழி பாதாளந் தேடி யடங்கினரே.

செந்தமிழுக்குத் தலைவராகிய அகத்தியரும், ஆயிரம் தலைகளை யுடைய ஆதிசேடனும், யாழை நன்கு வாசித்து இசையைப் பாடும் வல்லமை யுடைய நாரதனும், எல்லாரும் வணங்குகின்ற முருகப் பெருமானைப் பாடும் கவிஞர் இராமச்சந்திரனைக் கண்டு நாணம் கொண்டு முறையே மலையிலும் பாதாளத்திலும் வானுலகத்திலும் ஓடி ஒளித்துக் கொண்டார்கள். 27

முதற் பகுதி முற்றும்

செய்யுள் அகராதி

செய்யுள்	பக்கம்
அ	
அக்குவடம்புனே	278
அங்கம் வளர்க்க	48
அச்சுதனளிப்பனில	218
அச்சங்கபாணி	369
அச்சக்கஞ்ச	392
அஞ்சம்பினுலெய்து	318
அஞ்சலென்றகரதலமுங்	212
அடகெடுவாய்	237
அடல்கொண்டெ.மு	418
அடிசிற்கு	44
அடி.தங்கச்சி	399
அடிநந்திசேர்தலால்	117
அடிபட்டீர்கல்லாலும்	249
அடுத்துவருந்தொண்ட	221
அட்டாவதானமும்	255
அண்டத்தமரரு	275
அதிமதுரம்	174
அத்தன் கண்ணுக்கு	390
அத்திக்குதையன்	370
அத்திதனே	374
அத்திமுதல்	39
அத்திரம்வேலாவலய	425
அந்தங்கரும்பள்ளி	288
அந்தநாள் வந்திலே	194
அந்தராசலவன்	393
அந்திக்கார்வந்து	261
அந்திராமன	359
அந்திவெடி முல்லே	314
அப்பன்இரந்துண்ணி	139
அப்பா குமரக்கோட்	126
அப்பிலேதோய்த்	204
அப்பூருஞ் செஞ்சடை	130
அம்பலவாவ்ன்னெரு	264
அம்பாமாமுனிவாய்	411
அம்பிகைஅரன்	217
அம்பேந்துகையா	149
அரகதத்தை	399
அரகரதிருச்சிற்	118
அரகராசலங்	402
அராவுக்கே	406
அரசன்	82
அரமியஞ்சேர்	346
அரவங்கரந்ததோ	198
அரவணவன்இடத்திலே	216
அரிசிராவணத்தா	396
அரிமருகா	429
அரியதுகேட்கின்	32
அருந்தினுன்	147
அரும்பாக்கிய	284
அரும்பாலகாமுன	284
அரைத்த சந்தனம்	345
அரையில்	122
அலங்கல்அணிமார்ப	89
அலேயான்கவடு	321
அல்லேமாலே	407

செய்யுள்	பக்கம்
அல்லிமலர்ப் பன்னவை	225
அவிசெட்டிவாங்கு	302
அழகிசெக்க	380
அற்றுதலைபோக	15
அனங்கலக்க	338
அனங்கனைம்	400
அன்றுநீ செல்ல	191
அன்றையிலும்	85
அன்னவயல்சூழ்	168
அன்னைவயிற்றில்	40
அற்பீன்ற தாயென்	275

ஆ

செய்யுள்	பக்கம்
ஆகத்திலே யொரு	270
ஆசுகவியால் அகில	209
ஆடல்புரிந்தான்	121
ஆடாரோபின்னை	141
ஆடிக்குடந்தடையும்	108
ஆடும்கடைமணி	58
ஆடுந் தியாகரே	146
ஆடெரிபடர்ந்த	194
ஆட்டுக்கிசைந்தவ	172
ஆணிவலரையுறலால்	116
ஆண்டதனுலெனை	225
ஆண்டிகுயவா	147
ஆயனுக்குக்கண்மூன்று	163
ஆயன்	21
ஆய்முத்துப்பந்த	272
ஆரசந்திரணத்து	355
ஆராயுமுத்தமிழ்	179
ஆர்ஆர்தலைவணங்கா	77
ஆரிச்சந்தநயம்	368
ஆர்க்குங்குளிரு	297
ஆர்த்தசபை	27
ஆலங்கிடக்கு	260
ஆலங்குடியானை	155
ஆலெங்கேயங்கே	291
ஆலைப்பலாவாக்க	34
ஆவின பழைபொழிய	421
ஆழியானுழி	81
ஆழியான்பள்ளி	76
ஆழிவாய்ச்சத்தம்	198
ஆளுக்கேயழக	337
ஆறுபெருக்கற்றரு	195
ஆறும் பதினுறும்	141
ஆற்றங்கரையி	49
ஆனூர் இலையே	157
ஆனைகுதிரைதரு	162
ஆனையுரித்துமத	271

இ

செய்யுள்	பக்கம்
இக்கோடிவளைப்ப	352
இடுவோர்	197
இட்டங்கட்டிய	410
இட்டடிநோவ	94
இட்டமுட	38
இட்டுஇட்டுவாங்குதலால்	118
இத்தரமே	333
இந்தக்காவனங்	386
இந்தவீடை	265
இந்திரன்கலை	252
இந்திரற்செல்வன்	372
இந்துமுடிக்குஞ்	189
இந்தோதிலகநுதல்	119

செய்யுள்	பக்கம்
இந்நாள்...வினையே	98
இந்நாள்இது...செயலே	98
இப்பளப்பாறை	355
இம்பர்வானெல்லை	226
இம்மென்னுமுன்	133
இரவலனேயுனக்	420
இரவலாளரேபெருந்	71
இருதனங்கனிக்	401
இருந்தவளைப்போ	80
இருந்தாரைகேள்	178
இருந்துமுகம்திருத்தி	14
இருபந்தந்த	386
இருப்போமென்ருே	261
இரும் இருமென்று	44
இருளையிருள் விழுங்கி	101
இலகுபுகழ்ஆறை	105
இலக்கணக்கவிஞர்	21
இலக்கார	354
இல்எனுஞ்சொல்	227
இழையொன்றிரண்டு	61
இனியதுகேட்கின்	31
இன்றல்லோ...இறந்த	55
இன்றல்லோகம்ப..எழுந்த	55
இன்ருெக்க வேண்டி	273
இன்னம் கலிங்கத்	58
இன்னங் கலைமகள்	236

ஈ

ஈதலறம்	35
ஈயாதபுல்லர்	239

உ

உங்களிலே யாஞெருவ	192
உடுத்ததுவும்	121
உத்திரத்துக்கோர்	154
உபையராசி	390
உமையவளும் நீயும்	79
உம்பரை வாழ்வித்த	258
உருகியுடல்கருகி	96
உரைக்க	365
உலங்கொண்டமணி	315
உரையேனுன்பேரை	278
உலைக்குரியபண்டம்	85
உள்ளக்கவலையெலா	282
உள்ளங்கால்	165
உள்ளவழக்கிருக்க	28
உனக்கின்றியான்	285
உன்னக்காவடிப்	367
உன்னுயிரு மென்னுயிரு	265

ஊ

ஊரைச்சுடுமோ	291

எ

எங்கண் மடத்துக்கு	119
எடுத்தசனனங்க	267
எடுத்து	348
எட்டிகுளத்திலி	158
எட்டெழுத்தைக்	73
எட்டேகால்	16
எட்டொருமா எண்காணி	136
எண்ணுயிரத்தாண்டு	30
எண்ணீர்மை	300
எந்தவூரென்றீர்	43
எப்படியெப்படி	282

செய்யுள்	பக்கம்
எல்லப்பனம்மையப்ப	248
எவ்வுயிருங்காக்க	40
எழுத்தாண்	119
எனக்குடந்தை	338
என்சிவிகையென்	87
என்றுபெறுவென்	64
என்னிலங்கு	402
என்னவாவிது	404
என்னுடைய	206
என்னைக்கொடுத்தால்	140

ஏ

செய்யுள்	பக்கம்
ஏகாம்பர	381
ஏசி	23
ஏதிலேவறியவர்க்கு	414
ஏமிராவோரியென்பாள்	189
ஏய்ந்த	156
ஏராட்டும்பூந்தொங்க	290
ஏரானைக்காவிலுறை	89
ஏவைக்குங் கவிசிலே	286
ஏழானையடித்தபுலி	188
ஏழேழுசங்க	308
ஏறுகட்டிய கொட்டிலரங்	154

ஐ

செய்யுள்	பக்கம்
ஐம்பொருளும்	45
ஐயநின்சென்னி	215
ஐயர் என்று	41

ஒ

செய்யுள்	பக்கம்
ஒட்டாக வொட்டி	290
ஒருகொம்பு	17
ஒருபாதிமால்கொள	283
ஒருவர்க்கிடமா	264
ஒருவாணுதல்	302
ஒன்றிரண்டுமூன்று	120

ஓ

செய்யுள்	பக்கம்
ஓகாமாவீதோ	120
ஓங்கிய செந்தமிழ்	70
ஓங்கிய ராமா	339
ஓடும்சுழி	114
ஓடும் இருக்குமத	110
ஓட்டம்கடியதால்	113
ஓரானைவனத்தே	417
ஓரராவுண்	361
ஓர்தட்டிலே பொன்னு	238

க

செய்யுள்	பக்கம்
கஞ்சர	403
கஞ்சமுகையும்	150
கஞ்சிகுடியாளே	203
கடகரிக்கு	384
கடந்தூங்கு	300
கடம்பவனச்சொக்க	166
கடம்பற்கொண்டோ	164
கடல் கிழக்கு	74
கடியுண்டநெடு	49
கடுக்கை முடி	155
கட்டித்தழுவுதலால்	111
கட்டியடிக்கையால்	114
கணிகண்ணன்போவென்	52

செய்யுள்	பக்கம்
கனிகண்ணன்போக்	53
கண்டக்காற் கிட்டுங்	161
கண்டாயோபார்	78
கண்டேரோகாணம்	97
கண்டேரோபெண்காள்	144
கண்ணன்இடுங்கறி	164
கண்ணபுரங்கோயிற்	164
கண் நுழையாக்காட்	40
கத்துகடல்சூழ்	135
கந்தமலர்ப் பிரம	80
கந்தரப்புய	393
கம்பரக்கரை	389
கம்பத்தானைக்கடை	170
கம்பமத கடகளிற்	180
கம்மாள னங்கிக்	165
கயக்காவிநாறு	424
கயல்வாய்த்தகன்	223
கரஞ்சொன்னங்	283
கரண்டகண்ட	56
கராமடிய	326
கரிக்காய் பொரி	130
கரியதனையே	129
கரியாய்ப்பரியா	23
கரியொன்றுபொன்	178
கருக்கோட்டை	328
கருங்காலிக்கட்டை	30
கருங்குளவிசூறை	29
கருணையால்	19
கருத்தவா	364
கருந்தலை செந்தலை	188
கருப்பைக்குள்	39
கரைக்குவடக்கு	100
கலக்கடமா	332
கலக்கைவாளியை	356
கலங்கல் துறை	183
கலையால்முலைமுடி	105
கலைவாணிநீ	53
கல்லங்காடுதனில்	92
கல்லடிக்குமுளி	245
கல்லாதவொருவனை	426
கல்லாயமாந்தே	426
கல்லைத்தான் மண்ணை	422
கல்வளைக்குக்	370
கல்விகரை	378
கல்வியுடையீர்	37
கவளவளைக்குக்	372
கவியாகுமாதினை	289
கவுரிகமலா	219
கழியும்பிழைபொ	174
கள்ளிக்கேன்முள்வேலி	428
கற்றதுகைம்மண்	24
கற்றமின்	336
கனதனந்தன	385
கனத்துவரை	340
கனகனங்கம்	383
கன்றுதொட்டு	327
கன்னியுன்றன்	343
கன்னிக்கலசமுலை	90
கன்னபுரமாலே	166
கன்னன்வெங்க	377

கா

காக்கைக்கா	148
காசினியில் பிள்ளை	34

செய்யுள்	பக்கம்
காணக்கண்கூதே	14
காணுமல்வேணதெல்லாங்	12
காதமிருபத்து	91
சாப்பிட்டபிள்ளை	258
காம்புவனம்புக்க	300
காய்ந்து சிவந்தது	240
காரென்றுபேர்படை	188
கார்படைத்த	316
காலப்புயல்	100
காலனையம்	138
காலால் படியளக்குங்	166
காலைஞாயிறு	51
காலையரவிந்தங்	292
காலையிலும் வேலை	159
காலையிலொன்றுவர்	24
காவலன்	155
காவொன்று	309
காளத்திகண்ட	266
காளைமுகிற்குலம்	297
கால்நொந்தேன்	10
கான்தெண்டனி	274

கி

செய்யுள்	பக்கம்
கிட்டாது பெண்குடி	311
கிளையாளன்சேது	320

கு

செய்யுள்	பக்கம்
குடகர்குணகடலென்	81
குடக்கோடுவா	221
குட்டுநற்கோ பிள்ளை	246
குண்டைக்கொருத்தனை	287
குதியால்நமனை	272
குமிண்டியும்பண்ணை	92
குரங்கனலில்வி	180
குரங்கிக்காய்ந்திளந்	357
குருவடியை	343
குழற்கால ரவிந்தம்	200
குறுமுனிவன்	45
குறையுளாரெங்	82
குன்றும்குழியும்	208

கூ

செய்யுள்	பக்கம்
கூடல்புனவாயில்	160
கூதிக்கெட்டேழுங்	131
கூத்தாள்விழி	139
கூரம்பொறுத்த	298
கூரியவாளால்	13
கூழைப்பலாத்தழைக்க	14
கூவராயன்	205
கூற்றுவனைவில்மதனை	180
கூன்கலை	382

கெ

செய்யுள்	பக்கம்
கெஞ்சுமா	353

கொ

செய்யுள்	பக்கம்
கொக்குப்பறக்கும்	317
கொங்குதேர்வாழ்க்கை	47
கொங்குலவும்	146
கொங்கைகும்ப	376
கொடிக்கத்	359
கொடியதுகேட்கின்	31

செய்யுள்	பக்கம்
கொட்டமிடு	334
கொட்டைப்பாக்கும்	128
கொம்பிலேயேநினி	115
கொள்ளுகையால்	112
கொற்கையான்மாறன்	78
கொன்றைமலர்தரித்தான்	163

கோ

செய்யுள்	பக்கம்
கோக்கண்டுமன்னர்	64
கோரந்துக்கு	56
கோலெடுத்து	312
கோள்அரவேந்துல	232
கோளர் இருக்குமூர்	169

ச

செய்யுள்	பக்கம்
சங்கராவையகமும்	361
சங்கரற்கும்	152
சங்கதாதரளங்	391
சங்கறுப்பதெங்	48
சங்கநிதி	379
சங்குதீர்த்தம்	126
சடங்கலா	342
சடம்பழுக்கு	301
சட்டியிலேபாதியந்த	143
சண்டைப்பைக்குள்	39
சண்டாளிசூர்ப்ப	15
சதுரரங்கர்சங்கத்	161
சத்தம்பயிலும்	59
சத்தாதி	175
சந்தனத்தை	362
சந்தானமேக	329
சந்திரனுக்குட	254
சம்புதைக்கும்	368
சரராசசம்பு	296
சரந்துரா	405
சருக்கரை	350
சலமேதோசங்கத்நா	416
சற்றேபருத்தன	95

சா

செய்யுள்	பக்கம்
சாதியிலே	42
சாரங்கபாணியர	170

சி

செய்யுள்	பக்கம்
சித்திரமாமண்டபங்க	143
சித்திரமும்கைப்	12
சிந்தாமணி சங்கு	260
சிரம்பார்த்தான்	77
சிரப்பால்மணி	20
சிரித்துப்புரமெரித்	154
சிறுவன் அளைபயறு	124
சின்னஞ் சிறுபிள்ளை	244

சீ

செய்யுள்	பக்கம்
சீதமாரம்ப	397
சீதாரவிந்தபுயன்	204
சீமானுநாமகள்	201
சீரங்கத்தாரும்	153
சீராடையற்ற	234
சீரிலங்கு	417
சீர்கறுத்த முகில்	247

செய்யுள்	பக்கம்
சு	
சுண்ணும்புதிட்ட	286
சுந்தபால்கடலில்	131
சுரதந்தனில்	12
சுருக்கவிழ்ந்த	133
சுரும்பேய்க்கும்	299
சுற்றுங்கருங்குளவி	26
செ	
செகத்தாயெனவந்த	276
செகமதின்மிக்க	277
செங்கை வரிச்சிலை	322
செட்டிமக்கள்வாசல்	92
செஞ்சுடரின்மைந்த	213
செந்தமிழ்ச்செல்வ	432
செந்திற்குமரன்	96
செப்பத்திருன்னை	282
செம்மான்கரத்த	25
செய்யாத செய்த	169
செய்யுட்கிடைமறிக்கும்	115
செருத்தாக்கு	347
செருப்புக்கு வீரரை	129
செல்லப்பன்கச்சி	322
செல்வன்புதல்வன்	65
செல்லாரும்பொழில்	250
செல்லுக்கு	371
செற்றலரைவென்ற	132
சென்றலந்தார்	381
சென்னபுரிமேவி	322
சென்னிமுகம்	124

செய்யுள்	பக்கம்
சே	
சேதுபதி காத்த	306
சேமங்குருகையோ	50
சேய்கொண்டாரும்	222
சேய்மொழியோ	46
சேரலர்கோன்	18
சேராதவேடன்	289
சேராநாளெல்லா	318
சேற்றுக்கமலவய	87
சேனைதழையாக்கி	103
சொ	
சொலங்கக்	404
சொல்லாமலே	21
சொல்லுக்கினிய	257
சொல்லும்	280
சொன்னசந்தக்கவி	66
சொன்னமன்னமா	424
சோ	
சோ, கா, மா, ஏ, வா, தா,	129
சோதிச்சவரி	257
சோமன் புறப்பட	182
சோனையுங் காத்து	235
ஞா	
ஞாலத்தெவரும்	306
ஞானசபைகனக	125
ஞானவான்	42

செய்யுள்	பக்கம்
த	
தங்கள்குலதீப	380
தங்கள்	196
தடக்கடலிற்பள்ளி	131
தடக்கும்ப கிம்புரி	309
தடக்கயத்	365
தடக்கடக்கய	356
தடத்தத்தளி	371
தடங்கொண்டகல்	201
தடிக்கவில்லை	407
தண்டாங்கூர்	158
தண்டாமவ	27
தண்டமிழ்	375
தண்ணமுத	374
தண்ணீரும் காவிரி	16
தத்தித்தாது துதி	148
தந்தாப்பாது	385
தந்துகந்து	388
தந்தைபிறந்திற	151
தமிட்டரா	320
தரும்பலிக்கு	340
தரகலாதனங்	387
தரைகண்டமட்டும்	241
தளைஅவிழ்	82
தற்கோலிப்பூ	74
தனதனுக	383
தனதுமெய்க்கு	409
தனம்பொன்பணம்	317
தன்னுடன்கூடப்பிறந்த	69
தா	
தாண்டித்திரியு	269
தாண்டிஒருத்தி	145
தாண்டுபரி	378
தாதிதூ தோதீது	151
தாலமுற்றும்	379
தாயோடறுசுவை	35
தானவாரண	358
தி	
திகிரிவட்டக்குடை	67
திக்குள் எட்டுக்கயம்	72
திங்கள்	20
திங்கள்நுதலார்	146
திடக்குவட	354
திமிரமருத	427
திரண்டிமையோர்	176
திருகலகு	349
திருக்குடந்தை	127
திருநெடுமாலவதார	57
திருந்தலரி	346
திருந்தாடரவணி	164
திருந்துதமிழ்	223
திருமாலையம்பு	329
திருமால்வாகன	185
திருவிருக்கு	342
திரைக்கலைக்குத்	381
தினங்கொடுக்கும்	241
தினைவிளைத்தார்	81
தீ	
தீத்தானுன் கண்ணிலே	157
து	
துங்கவரைமார்	313
துங்காதராதல	256

செய்யுள்	பக்கம்
துடித்துத்துடித்து	148
துடியார்கரத்து	283
துணையானநாரி	270
துகிலொணிவீரம்	141
துப்பரையுமரகதத்தின்	249
துயிலையிலேயிடர்	257
துரையத்தந்தி	358
துளைபடு மாமர	255
தெ	
தெந்தனம்	351
தெருமுட்டப்பாலை	132
தெள்ளுதமி	375
தென்னவன்	59
தென்னவா மீனவா	104
தென்னெக்கும்	177
தே	
தேங்குபுகழாங்கூர்	206
தேட்டாளன்	240
தேட்டேதுமில்லை	281
தேருளைப்புரவி	88
தேரையார்செவ்	94
தேன்பொழிந்த	226
தொ	
தொடுக்கவத்	397
தோ	
தோய்ந்தான்	122

செய்யுள்	பக்கம்
ந	
நகத்துவா	363
நங்கைப்பயணநமக்கென்	265
நங்கை ஒருத்தியை	263
நச்சரவம்பூண்ட	133
நஞ்சிருக்குந் தோலுரிக்கு	108
நஞ்சுகுடிகொண்ட	157
நமக்கின்றுருவரம்	271
நம்பன்அடியவர்க்கு	13
நம்பரக்கரை	389
நல்லதொரு புதுமை	142
நல்லம்புலி	203
நல்லாளையிட	250
நற்றமிழ்வா	377
நற்றேரணவீதி	292
நா	
நாட்டில் சிறந்த	244
நாட்டுக்குள் ஆட்டுக்கு	145
நாணியென்பதை	224
நாணென்றால்	209
நாப்பிளக்கப்பொய்	214
நாராயணனை	159
நாராய் நாராய்	210
நானேயினியுனை	61
நி	
நிட்டுரமாக	22
நிட்டையிலே	222
நிணம்போதத்	286
நிருதராக	365

செய்யுள்	பக்கம்
நிலமாது	331
நிலமேழளந்த	288
நிலவாய்விளங்கு	110
நில்லாதபல்லு	84
நிலேதந்தார்	54
நில்லுநில்	43
நிழலருமைவெய்	34
நிறையவுளதோ	220
நின்றுபடியளக்கு	266

நீ

செய்யுள்	பக்கம்
நீகாவிதுரா	382
நீச்சாற் பெருந்திடு	182
நீரிலுளவானிறம்பச்சை	116
நீரெலாஞ்சேற்று	91
நீரோ பிறவா	123
நீளத்திரிந்துழன்	315
நீருவாய் நெற்றி	181

நூ

செய்யுள்	பக்கம்
நூலாநாலாயிர	132
நூல்எனிலோகோல்	25
நூற்றுப்பத்தாயிர	22

நெ

செய்யுள்	பக்கம்
நெருப்புக்கறுக்க	260
நெல்லேச்சொன்ன	292
நெற்படிவிளேகழனி	103

நே

செய்யுள்	பக்கம்
நேசனேக்காண	33
நேசித்துவந்த	239
நேற்றிராவந் தொருவன்	143
நேற்றிருந்த	364

நை

செய்யுள்	பக்கம்
நையும்படி	68

ப

செய்யுள்	பக்கம்
பகருங்கால்மேடம்	125
பங்கப்பழனத்து	63
பங்கசமேன்மேவி	231
பங்கயமு மேரிகளும்	312
படங்குமா	394
படுபருந்துஞ்சூர்	84
படைத்தாமவேற்கண்	308
பணியாரந்தோசை	232
பன்காணுந் தமிழ்	251
பண்டனேப் பண்டனே	255
பன்டோதரியமறை	276
பண்ணப்பம்பர	366
பண்புளருக்கோர்	160
பநிவீரசம்பு	205
பத்தாவுக்கேற்ற	15
பத்துக்கொண்டன	51
பரத்துவசத்து	334
பரப்போதஞாலம்	99
பருதியானவ	410
பருப்பதங்க	305
பலகையிடுமுள்ளே	117
பழியும் புகழும்	68
பழுத்தான் மரத்தி	293
பள்ளமாம் செய்யி	70
பறவாத தும்பி	178
பனிப்பகையோன்	97

செய்யுள்	பக்கம்
பா	
பாகப்பா	328
பாங்குயர் பளிங்கு	303
பாங்குயர்பெருந்திரு	175
பாடல்பெருனே	23
பாடுந் தமிழ்க்கு	274
பாட்டாளைதைவண்டு	200
பாணர்க்குச்	125
பாணன் மதுரை	86
பாணியிலே புள்ளிமான்	268
பாண்டியனைப்பேர்	86
பாண்டியன் மாலே	234
பாண்டியன் தாராளேன்	199
பாரத்தலைவிரிக்கும்	112
பாரளக்குந் தூது	165
பாரவிளநீர்சுமக்க	262
பாரார் சொல்லாரார்	311
பாரி பறித்த பறியும்	17
பாரூர் அறியப்பலிக்கு	172
பாரைச்சுமந்த	77
பாலேயிலாள்பின்னங்கால்	321
பாளைமணங் கமழுகின்ற	182
பானுகிரணம்	320
பி	
பிள்ளைவயதினில்	247
பீ	
பீலிக் குஞ்சர	409
பு	
புகார்மன்னன்	18
புத்தியின்பேர்க்	373
புடவிகடகு	336
புரசைவடமலையப்	256
புரந்தனேமாலே	202
புராதனமான	210
புல்லுக்கட்டும்	413
புலிக்காதி	334
புள்ளிருக்கும்	63
பூ	
பூசத்தந்தி	360
பூங்கமலன்கலசை	319
பூசுகந்தந்	398
பூணித்திலத்து	299
பூத்தூக்கி	377
பூநக்கி	138
பூமாதிருந்தென்	310
பூரிக்குஞ்சர	362
பூவில்	41
பூவேந்தர் முன்போல்	192
பூவலாரை	391
பெரியது கேட்கின்	32
பெரியவிடமே சேரும்	109
பெற்றுன்	237
பெருமாளும் நல்ல	134
பே	
பேயல்லவோவொரு	276
பேரரசர்தேவிமார்	85
பொ	
பொதியில்	190
பொய்யருக்கு	235

செய்யுள்	பக்கம்
பொரக்கலக்க	332
பொரவிசையஞ்	335
பொரடக்கயம்பிடி	298
பொருகோட்டு	307
பொருவதற்கு	350
பொருந்த	348
பொருவாசி	335
பொருப்புக்குஞ்	398
பொல்லாத மூர்க்கரு	242
பொன்போலுங்கள்ளி	193
பொன்மாரி	19
பொன்னஞ்சடை	156
பொன்னிலங்கை	344
பொன்னனைவாளர	186
பொன்னுகத்தார்	287
பொன்போலுங்கூடல்	278
பொன்னுர்மருமத்தன்	294
பொன்னேபொரு	281
பொன்னேமலைய	277

போ

செய்யுள்	பக்கம்
போசநீயோர்	292
போதத்தைமேவு	295
போதா சிவகுருநாதா	259
போந்த	36
போம் என	44
போல நிறம்	162
போற்றினும்போற்றுவர்	181

ம

செய்யுள்	பக்கம்
மங்கைஒருபங்கர்	76
மஞ்சலக்கணங்	408
மஞ்சுமஞ்சுங்கை	311
மட்டாருந் தென்கள	290
மட்டாரும் செங்கழு	71
மட்டார்குழல்	279
மட்டுப்படாக்கொங்கை	99
மண்ணென்ற மண்டல	273
மண்டலத்தில்	160
மதிமலிபுரிசை	47
மதியாதார்	25
மதுமேவு குவளையணி	319
மதுரமொழிநல்	10
மய்க்கிணையான	101
மய்வடிவக்	96
மருகிருக்கும்	180
மறந்தாகிலும்	245
மற்கொண்டதின்	93
மற்றெருப்பிலாக்	301
மன்னவனும் நீயோ	90
மன்னன் வெங்க	374
மன்னிரிலே பிறக்கு	111
மன்னுதிருவண்ணு	127

மா

செய்யுள்	பக்கம்
மாகத்தத்தும்புக	310
மாகமழைக்கரன்	294
மாகுன்று அனைய	71
மாக்கைக்கிரங்கும்	176
மாங்காட்டு	208
மாங்குயிலால்	56
மாசற்றிடு திருமேனியி	42
மாடு இல்லான்	33
மாடு தின்பான்	162
மாடேறு	259

செய்யுள்	பக்கம்
மாட்டுக்கோன்றங்கை	144
மாதங்கங்கோடி	330
மாதரணிமென்முலை	280
மாத மந்திர	387
மாதவா	401
மாதர்க்கிதங்கவி	199
மாதாபிதாவுமவன்	206
மாதாம்படியுண்டு	273
மாதானை	369
மாந்தையிலே	195
மாப்பைந்தார்க்கல்	104
மாமனுக்கு	403
மாயனூர் போற்றும்	136
மாயன் துயின்றதுவு	121
மாலைமணி	339
மாவாரிமுத்த	231
மாவுறங்கின	83
மானமேநண்ணு	149
மானவனுனந்த	60
மானிற்குமோவிந்த	60
மான்பிடித்திர்	305
மி	
மின்னமருங்கொடி	341
மு	
முக்கட்பரா	279
முக்கண்ணே	268
முக்காலுக்கே	137
முடிக்கு	370
முட்டத்துப்பன்றி	199
முத்திருக்கும்	106
முத்தெறியும் பெண்ணை	19
முந்தலையோன்	69
முந்நான்கில் ஒன்று	152
முலையுந்	198
முற்கரையப்பரை	243
முற்றுத காஞ்சியினு	150
முனசநங்கை	394
முன்ன நின்னன்னை	243
முன்னமொரு தமிழ்ப்	224
முன்னட்டுத்தவ	236
முன்னுளிருவர்க்கும்	228
முன்னை	271
முன்னே கடிவாளம்	140
முன்னே யிரண்டுமுலை	263
மூ	
மூங்கிலிலேயொளி	415
மூச்சுவிடு முன்னே	174
மூடர்முனே	207
மூப்பான்மழுவும்	137
மூவர்கோவையும்	36
மூவேந்துமற்று	242
மூவொன்பதென்	317
மெ	
மெச்சுபுகழ் வேங்கடவா	127
மெய்க்கேயணிய	269
மெய்யன் வெங்க	376
மெய்யாரம் புலிகான	304
மெய்யிலே யொருபாதி	248
மெலக்கணக்காப்	344

செய்யுள்	பக்கம்
மே	
மேலாடையின்றி	322
மேவிலுடனேவிடிய	266
மேழிபிடிக்கும்	93
மேற்குப் பவளமலை	75
மேற்பார்க்க	36
மை	
மைக்கார்க்குழற்	280
மைப்போதகமும்	310
மையூருங்கண்ணார்	197
மோ	
மோட்டெருமைவாவி	79
மோனைமுத்தமிழ்	66
யா	
யாக்கையெனும்	213
யாவருக்கும் ரஞ்சனை	113
வ	
வஞ்சகத்திலொன்றானை	415
வஞ்சகர்பால் நடந்தலை	422
வடக்குத்திசை	70
வடவைக்கனலை	229
வடிகொண்டசெந்	277
வட்டமதிபோலிருக்கும்	102
வணக்கம்வரும்	411
வண்டமிழைத்தேர்	38
வண்டாங்கிசைபயின்	295
வண்டிட்டகூந்தலும்	280
வண்டுகிண்டியதொங்க	253
வண்டுறைசோலை	303
வண்ணம்கரிய	135
வந்தனந்த	231
வந்துவார	396
வம்பிறைக்குங்	414
வரகரிசிச்சோறு	22
வருதுகட்டு	388
வருக்கைநறுங்கனி	50
வரைத்தூற்று	347
வல்லரியாயுற்றிட	109
வழக்குடையா	28
வழிமேல் விழிவைத்து	238
வளவனைநே	327
வள்ளலெனும் பெரிய	142
வள்ளிகொண்டான்	324
வனக்கொந்தளவஞ்சி	296
வா	
வாசக்காந்தன்	395
வாசமலர்மடந்தை	83
வாள்தானைத்தென்ன	83
வாணன்புகழ்க்கெல்லை	89
வாணன்பெயரெழுதா	86
வாணியன் பாடிட	173
வாதக்காலாம்தமக்கும்	153
வாதக்கோ	26
வாதமணர்	122
வாய்த்தவயிரபுர	190
வாரணங்கள்	123
வாரிக்களத்தடிக்கும்	107
வாரிட்டுவிம்மி	324
வாலி மடிந்ததுவு	168
வாலெங்கே நீண்ட	134
வாழிசோழவென்	191

செய்யுள்	பக்கம்
வாழும் இலங்கைக்கோ	228
வாழ்த்து திருநாகை	159
வாழ்நிலைசேர்	203
வாளமுளைதான்மழை	30
வான்குருவியின்கூடு	11
வான்பணிந்தால	269
வி	
விக்காவுக்கா	73
விடங்காட்டிக்	202
விண்ணுக்குமாமதி	285
விண்ணிரும்வற்றி	171
விண்ணுக்கடங்காமல்	120
விண்ணுக்குமண்ணு	245
விண்பட்டகொக்கென	65
விதுவையம்பதி	313
வியந்தநிசாசரனு	307
விரகிருவர்புகழ்	11
விரவல ராய்வாழ்	149
விரித்தான்சடை	280
விருத்தப்பா	351
வில்லம்பு சொல்லம்பு	101
வில்லா லடிக்க	175
வில்லை வளையாதே	196
விழுந்ததுளி	193
விள்ளப் பகுமையொன்	171
விற[illegible]	420
வி[illegible]த்து	323
[illegible]	
[illegible]	419
[illegible]	183
வீ[illegible]ரிஇன்[illegible]	233
வீரமுண்டோமதன்	96
வீரவண்டயப்பிரதாப	426
வீறுதரமே	352
வெ	
வெங்கண்சிவந்து	98
வெங்காயஞ் சுக்கானல்	262
வெஞ்சத்தமரந்	378
வெண்பா	29
வெண்ணெய்க்	413
வெண்ணெய் திருடி	158
வெம்புங்காலை	195
வெய்தாய்நறுவிதா	17
வெள்ளத்து அடங்காச்சின	62
வெள்ளாறதுவடக்கா	75
வெள்ளைக்கலையுடுத்து	106
வெள்ளை ஆனேறு	143
வெறிக்குங்கும	291
வெறும்புற்கையுமரி	219
வெற்றிபுனை	77
வென்றிவளவன்	68
வே	
வேண்டியபோது	105
வேம்பாகிலுமினிய	104
வேயின்ற முத்தர்தமை	207
வேல்கொடுத்தாய்	242
வேழமுடைத்து	38
வை	
வையைக் குறைவன்	18

அழகப்பா பல்கலைக்கழகம் வளர் தமிழ் நூலகம் காரைக்குடி.

வளர்தமிழ் நூலகம்
அழகப்பா பல்கலைக்கழகம்
Acession No.....1678..........